www.tamilarangam.net

# தந்தை செல்வா

## ஓர் அரசியல் வாழ்க்கைச் சரிதை

ரி. சபாரத்தினம்



குமரன் புத்தக இல்லம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தந்தை செல்வா

ஓர் அரசியல் வாழ்க்கைச் சரிதை

....... ..... ..... ........

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சாமுவேல் ஜேம்ஸ் வேலுப்பிள்ளை செல்வநாயகம்

*1898 - 1977*

....... ..... ..... ........

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தந்தை செல்வா

## ஓர் அரசியல் வாழ்க்கைச் சரிதை

இலங்கை வரலாற்றில் முக்கிய தமிழ்த் தலைவர்களில் ஒருவராக
விளங்கிய சாமுவேல் ஜேம்ஸ் வேலுப்பிள்ளை செல்வநாயகத்தின்
அரசியல் வாழ்க்கை பற்றிய வரலாறு

த. சபாரத்தினம்

குமரன் புத்தக இல்லம்
கொழும்பு - சென்னை
2006

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வெளியீட்டு எண் : 212

குமரன் புத்தக இல்லத்தினால் வெளியிடப்பட்டது

- 361,1/2 டாம் வீதி, கொழும்பு-12, தொ.பே. 2421388, மி. அஞ்சல் : kumbh@sltnet.lk

- 3 மெய்கை விநாயகர் தெரு, குமரன் காலனி, வடபழனி, சென்னை - 600 026

**தந்தை செல்வா: ஓர் அரசியல் வாழ்க்கைச் சரிதை**

**- த. சபாரத்தினம் எழுதியது**

பதிப்புரிமை © 2006 த. சபாரத்தினத்துக்கு

அட்டை வடிவமைப்பு : குமரன் புத்தக இல்லம்

*Published by* Kumaran Book House

- 361,1/2 Dam Street, Colombo - 12, Tel. - 2421388, E.mail : kumbh@sltnet.lk

- 3 Meigai Vinayagar Street, Kumaran Colony, Vadapalani, Chennai - 600 026

Thanthai Selva Arasiyal Valkaich Charithai

By T. Sabaratnam.

Copyright © 2006 by T. Sabaratnam

Printed in India

*Cover Designed by* : Kumaran Book House

ISBN 955 - 9429 - 89 - 2

All rights reserved. No part of this book may be reproduced, translated, stored in a retrieval system, or transmitted in any form or by means, electronic, mechanical, photocopying, recording or otherwise, without prior written permission from the Author or the Publisher.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வெளியீட்டு எண் : 212

குமரன் புத்தக இல்லத்தினால் வெளியிடப்பட்டது
- 361,1/2 டாம் வீதி, கொழும்பு-12, தொ.பே. 2421388, மி. அஞ்சல் : kumbh@sltnet.lk
- 3 மெய்கை விநாயகர் தெரு, குமரன் காலனி, வடபழனி, சென்னை - 600 026

தந்தை செல்வா: ஓர் அரசியல் வாழ்க்கைச் சரிதை
- த. சபாரத்தினம் எழுதியது

பதிப்புரிமை © 2006 த. சபாரத்தினத்துக்கு

அட்டை வடிவமைப்பு : குமரன் புத்தக இல்லம்

*Published by* Kumaran Book House
- 361,1/2 Dam Street, Colombo - 12, Tel. - 2421388, E.mail : kumbh@sltnet.lk
- 3 Meigai Vinayagar Street, Kumaran Colony, Vadapalani, Chennai - 600 026

Thanthai Selva Arasiyal Valkaich Charithai
By T. Sabaratnam.

Copyright © 2006 by T. Sabaratnam

Printed in India

*Cover Designed by* : Kumaran Book House

ISBN 955 - 9429 - 89 - 2

All rights reserved. No part of this book may be reproduced, translated, stored in a retrieval system, or transmitted in any form or by means, electronic, mechanical, photocopying, recording or otherwise, without prior written permission from the Author or the Publisher.

**சமர்ப்பணம்**

இலங்கைத் தமிழ் மக்களுக்கு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# என்னுரை

எனக்கும் தந்தை செல்வாவுக்கும் உள்ள தொடர்பு ஓர் அரசியல் தலைவருக்கும் ஒரு பத்திரிகையாளனுக்கும் உள்ள தொடர்பு மட்டுமே. தான் 'கவர்' பண்ணும் அரசியல்வாதியை நெருங்கி நின்று, அதே வேளை அவரின் அரசியலில் இணைந்து விடாமல் விலகி நின்று, அவதானிக்க வேண்டியது சிறந்த பத்திரிகையாளனின் கடமை. அந்தக் கடும் பரீட்சையில் பாசாகியிருப்பதாக பத்திரிகைத்துறையைச் சார்ந்தவர்கள் என்னைப் பாராட்டுவதுண்டு.

இந்நூல் தந்தை எஸ். ஜே. வி. செல்வநாயகத்துக்குத் துதிபாடும் நோக்குடன் எழுதப்பட்டதல்ல. தந்தைக்குப் புகழ் பாடும் தேவையும் இல்லை. அவர் ஒரு வரலாற்று நாயகர். வரலாற்றில் அவருக்குக் கிடைக்க வேண்டிய இட த்தை மதிப்பிட வேண்டிய தேவையும் இல்லை. வரலாற்றை அவர் எவ்வாறு பாதித்தார் என்பதை மதிப்பிடுவது ஆய்வாளர் செய்யவேண்டிய பணி.

ஒரு நல்ல பத்திரிகையாளனின் பணி ஆய்வில் ஈடுபடுவதல்ல. அதைச் செய்ய நிறையப் பேர் இருக்கிறார்கள். பத்திரிகையாளனின் பணி,தான் மிக அருகே நின்று பார்த்தவற்றைப் பதிவு செய்து வைப்பதே. பத்திரிகையாளனுக்குக் கிடைக்கும் அந்த அருமையான சந்தர்ப்பம் ஆய்வாளர்களுக்குக் கிடைப்பதில்லை.

நான் நெருங்கியும் அதே நேரத்தில் விலகியும் நின்று அவதானித்தவற்றையும் அறிந்தவற்றையும் இந்நூலில் பதிவு செய்துள்ளேன். தந்தை செல்வாவை, வரலாற்றை அவர் பாதித்த பாங்கை, தமிழ் பேசும் மக்கள் உணர வைக்கும் கடமை உணர்வுடன் இப்பணியைச் செய்துள்ளேன்.

தந்தையின் பிறந்த நூற்றாண்டான 31 மார்ச் 1997 முதல் 31 மார்ச் 1998 வரை தினகரனில் தொடராக வெளிவந்த கட்டுரைகளின் தொகுப்பே இந்நூல். இதைப் புத்தகமாக வெளியிட அனுமதி தந்த 'லேக் ஹவுஸ்' நிறுவனத்துக்கு என் நன்றி. இந்நூலை வெளியிட

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



விரும்பிய குமரன் பதிப்பகத்துக்கும் என் நன்றி. இந்நூலுக்கு முன்னுரை தந்த என் நண்பர் கார்த்திகேசு சிவத்தம்பி அவர்களுக்கும், பிழை திருத்தம் பார்த்த 'கலாபு??ஷணம்' வை.அநவரத விநாயக மூர்த்திக்கும், வேறு வழிகளில் உதவிய பலருக்கும் என் நன்றி.

இந் நூல் இன்றைய தேவைகளில் ஒன்று என்பதை உணர்ந்து இதைத் தொகுத்துத் தருமாறு என்னை வற்புறுத்திய குமரனுக்கு என் தனிப்பட்ட நன்றி.

கொழும்பு
15-08-2006

த. சபாரத்தினம்

# முன்னுரை

## சாமுவேல் ஜேம்ஸ் வேலுப்பிள்ளை செல்வநாயகம் -ஆளும் அரசியலும்-

### வரலாற்றுப் புரிதலுக்கு உதவும் சபாரத்தினத்தின் எழுத்து

1999 முதல் இரண்டு வருடங்களாக "தினகரன்" பத்திரிகையில் தொடர்ச்சியாக வெளிவந்த இக்கட்டுரைத் தொடர் இப்பொழுது நூலாக வெளிவருகின்றது. 20 ஆம் நூற்றாண்டில் இலங்கையின் அரசியற் செல்நெறியை தீர்மானித்த மிகச் சிலரான அரசியல் தலைவர்களுள் எஸ்.ஜே.வி. செல்வநாயகத்துக்கு மறுதலிக்க முடியாத ஓரிடமுண்டு. இவரது வரலாறு இலங்கையின் தமிழ் தேசியம் ஓர் அரசியற் சக்தியாக உருப்பெற்ற பின்புலத்தை, கட்டங்களை, அது எதிர்நோக்கிய சவால்களை, நெருக்கடிகளை எடுத்துக்காட்டுவதாக அமைகின்றதென்ற உண்மை, அரசறிவியல் அறிஞர்களால் ஏற்கெனவே குறிப்பிடப்பெற்றுள்ளது. ஏறத்தாழ 1950 களின் நடுக்கூறுவரை கணிசமான அளவு அரசியற் செல்வாக்குப் பெற்றிருந்த இலங்கை மாக்சிய அரசியல் மரபின் பிரதான நிறுவனங்களில் ஏற்பட்ட அக,புறச் சிதைவின் பின்னர் செல்வநாயகத்தின் அரசியல் எண்ணத் துணிவு ஓர் அசாதாரண வலுவைப் பெற்றது. இதனால் பொன்னம்பலம் இராமநாதன், ஜி.ஜி. பொன்னம்பலம் ஆகியோருடன் இணைத்துக்கொள்ளப்படாத தமிழரின் (அரசியல்) 'தந்தை' என்ற அடைமொழி இவர் பெயருடன் இணைக்கப்பெற்றது. இது யாழ்ப்பாணத்தினுள்ளே நிலவி வந்த (இப்பொழுதும் கூட முற்றிலும் இறந்துவிடாத) சைவமும், தமிழும் என்ற நிலைப்பாட்டுக்கு எதிரான ஒன்றாக அமைந்தது மாத்திரமல்லாமல் இந்த மொழிவழித் தேசியம் மதங்களைக் கடந்தும் முனைப்புற்றது எனலாம். இம்மொழிவழித் தேசியம் 'தமிழ் பேசும் மக்கள்' என்ற எண்ணக்கரு மூலம் முஸ்லிம்களையும் இணைக்க விரும்பியதெனினும் அவ்விணைவு சாத்தியப் படவில்லை. ஆனால், தமிழ் பேசும் மக்களென்ற இந்த எண்ணக்கரு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தமிழ் மேலாண்மைக்கான ஒரு கருவியே என்று கூறிய வடக்குக்-கிழக்கு முஸ்லிம்களும் அந்த நோக்கம் பற்றிய அவரது எண்ணத்துணிவில் நேர்மையை என்றுமே சந்தேகித்ததில்லை.

ஜி.ஜி.பொன்னம்பலத்தின் அரசியல் முடிவினை எதிர்த்து இலங்கையில் தமிழர் அரசியல் உரிமைக்கான இயக்கத்தைத் தொடங்கிய இவர் தலைமையின் கீழ் வழியுறுத்தப்பட்டுள்ள இரண்டு விடயங்கள், ஏறத்தாழ வரலாற்று நிர்ணய சக்திகளாக மாறுகின்றன:

1 இந்திய வம்சாவழியினரான மலையகத் தமிழ் மக்களின் பிரஜாவுரிமையை இலங்கையின் தமிழ் உரிமைப் போராட்டத்தின் ஓர் அங்கமாக பிரகடனப்படுத்தியமை.

2 இலங்கைத் தமிழரின் அரசியல் உரிமைக்கான தளத்தை ஒரு புவியியல் வரையறைக்குள் உட்கொண்டு வந்தமை (வடக்குக்- கிழக்கு).

இந்த புவியியல் வரையறை காரணமாக அரசியல் உரிமைக்கான உண்மையான தீர்வு ஆட்சியாப்பு நிலையில் சமஷ்டிக்கான சாத்தியப்பாடுகள் இல்லையென்றதும் அது தனிநாட்டுக் கோரிக்கைக்கு இடமளித்தது. இதிலுள்ள சுவாரஷ்யம் என்னவெனில் தமிழ் தேசியத்தின் நெருக்கடிநிலை கட்டமான 1947 - 75 கால கட்டத்தில் இவரிடத்தேயே பிரதான தமிழ் அரசியல் தலைமை இருந்தது. இவர் மறைவின் பின் வந்த திறந்த நிலைப் பொருளாதாரத்துக்கான மாறுகை இலங்கையின் இனக் குழுமப் போரை ஏறத்தாழ வரலாற்றுத் தேவையாக்கிற்று. (காலஞ்சென்ற நியூற்றன் குணசிங்கவைத் தவிர இவ் அம்சத்தை வேறொருவரும் விரிவாக ஆராயவில்லை என்று கூறலாம்).

எவ்வாறு நோக்கினாலும் செல்வநாயகம் அவர்கள் 20ஆம் நூற்றாண்டின் இலங்கைத் தமிழர்களின் அரசியற் சிந்தனைகளை உருவாக்கிய ஒரு முக்கிய சக்தியாகத் திகழுகிறார். அந்த அளவில் S.J.V.பற்றிய இந்த நூல் அரசியல் ஆய்வாளர்களின் அத்தியாவசிய வாசிப்புக்கு உரியதாகும்.

S.J.V.செல்வநாயகத்தின் அரசியல் வாழ்க்கை வரலாறு பற்றி வெளிவந்த ஆங்கில நூல் 'S.J.V. Chelvanayakam and the Crisis of Sri Lankan Tamil Nationalism 1947 - 1977:A Political Biography' என்பதாகும். அதனை செல்வநாயகத்தின் மருகரான காலஞ்சென்ற பேராசிரியர் ஏ.ஜே.வில்சன் எழுதியுள்ளார்.



இலங்கைத் தமிழர்களின் அரசியல் உரிமைப் போராட்டங்கள் பற்றிய நூல்களையும், ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் எழுதியுள்ளவர்கள் செல்வநாயகத்தின் அரசியல் ஆளுமையை மையமாகக் கொண்டு தமிழ்த் தேசிய வளர்ச்சியை இதுவரை ஆராயவில்லை எனலாம். அந்த அளவில் நண்பர் சபாரத்தினத்தின் இந்த நூல் இத்துறை மாணவர்களுக்கான முக்கிய ஆவணமாகின்றது. சபாரத்தினத்தின் இந்த நூல் அடிப்படையில் ஒரு பத்திரிகையாளரின் எடுத்துக்கூறலாகவே உள்ளது. செல்வநாயகம் அவர்களின் மறைவு பற்றிய செய்தி நிகழ்ச்சிகளை தொடக்கப்புள்ளியாகக் கொண்டு அவரது வாழ்க்கை வரலாற்றை சபாரத்தினம் பின்னோக்கிப் பார்க்கின்றார்.

அரசியற் பிரவேசம் வரை அவரது வாழ்க்கையை எடுத்துக் கூறும் பொழுது, அவரது குடும்பப் பின்புலம், கல்விப் பின்புலம், தொழில் தேர்வு ஆதியன முக்கியமாவது இயல்பே. அரசியற் கட்டம் வரை தனியொரு ஆளின் செயற்பாடுகளை பதிவு செய்யும் சபாரத்தினம் அரசியற் பிரவேசத்தின் பின்னர் அவரது வாழ்க்கை செல்நெறிப் பற்றிக் கூறும் பொழுது தனி ஆள் என்ற நிலையை விடுத்து அரசியல் நிகழ்ச்சிகள் பற்றியே கூறிக்கொண்டு செல்ல வேண்டியுள்ளது.

உண்மை என்னவென்றால் எஸ்.ஜே.வி. அவர்களின் அரசியற் பிரவேசத்தின் பின்னர் அவரது வாழ்க்கை முழுவதும் அரசியல் சார்ந்ததாகவே அமைகின்றது. அவர் ஈடுபட்டிருந்த அரசியல் அவரது வாழ்க்கை ஓட்டத்தினுள்ளே நிலை கொண்டு விடுகிறது. இத்தகைய இணைவு அசாதாரணமானது என்பது மாத்திரமல்லாமல் வரலாற்றில் ஒரு தனி ஆள் வகிக்கும் இடம்பற்றிய அடிப்படையான வரலாற்றுப் பிரச்சினைக்கான ஒரு விளக்கமாகவும் அமைகின்றது (The Role of The Individual in History).

இது அரசியற் சமூகவியலில் ஒரு முக்கியமான பிரச்சினையாகும். இந்த விடயம் பற்றி மாக்சியத்தில் நிறைய விவாதிக்கப்பட்டதுண்டு. ருஷ்ஷியப் புரட்சிக்கு சற்று முன்னரும் ஸ்டாலின் மறைவுக்குப் பின்னரும் இப்பிரச்சினை சற்று ஆழமாகவே நோக்கப்பட்டுள்ளது. அவ்விவாதத்தின் பொழுது மேற்கிளம்பிய பொதுவான சிந்தனை ஒருமைப்பாடு பின்வருமாறு அமையும் :

> குறிப்பிட்ட ஒரு வரலாற்று இயக்க ஓட்டத்தின் பொழுது, அவ்வியக்கம் திரள் நிலையான மக்களை தளமாகக் கொண்டமைவதனால் அதற்கு ஒரு தலைமைத்துவம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

(தனித்தலைமை அல்லது கூட்டுத்தலைமை) அத்தியாவசியத் தேவையாகிறது. அத்தலைமை நிலைக்கு வந்து அத்தலைமைப் பணியை ஏற்றுக்கொள்பவர் தன்னுடைய ஆளுமைக் கட்டமைவு நிலைகளிலும், தேவை உணர்வு நிலையிலும் அந்தப் பொது இயக்கத்தோடு இணையும் தன்மையாக அமைதல் வேண்டும். அவ்வாறு தலைமை நிலைக்கு வருபவர்களின் தனி ஆள் நிலையிலே காணப் பெறும் பண்புகள் கூட இயக்க ஓட்டத்துடன் இயைவுரும். இப்படிச் சொல்லும் பொழுது ஒரு குறிப்பிட்ட கால கட்டத்தில் ஒரு குறிப்பிட்ட சமூக அரசியல் இயக்கத்திலே தொழிற்படுபவர்கள் ஒருவருக்கொருவர் முரண்பட்ட தனி நிலைக் குணங்களைக் கொண்டவர்களாக இருக்கலாம் (ஜவஹர்லால் நேரு, வல்லபாய் பட்டேல், மகாத்மா காந்தி, நேதாஜி சுபாஸ் சந்திரபோஸ்). ஆனால், அந்த தனிப்பட்ட குண இயல்புகள் அரசியல் இயக்கத்தின் ஒட்டுமொத்தமான வளர்ச்சிக்கு முரணானவையாக இருக்காது. ஆளுமையின் இயல்பும் வரலாற்றின் போக்கும் ஒரு புள்ளியில் இணைகின்றது. ஒரு கட்டத்தில் அவ்வாறு இணைவது இன்னொரு கட்டத்தில் இயைபற்றுப் போகலாம். அப்பொழுது தலைமை நிலை வேறுபடுகின்றது. ஆயினும், விதிவிலக்கான சிலர் தமது ஆளுமையின் இயல்புகளையும், இயக்கத்தின் போக்கையும் தங்களுக்குள்ளே இணைத்துக் கொள்வர்.

திரு. செல்வநாயகத்தின் வரலாற்றைப் பின்னோக்கிப் பார்க்கும் பொழுது அவரது ஆளுமைப் பண்புகளும் கருத்து நிலைப் பாடுகளும் அச்சமூக அரசியல் இயக்கத்தில் மேற்செலவினைத் தீர்மானிக்கின்றன என்பது புலனாகின்றது.

செல்வநாயகம் அவர்கள் தான் மேற்கொண்ட அரசியல் நிலைப்பாட்டில் திரிகரணசுத்தியான கடப்பாட்டுப்பற்றுறுதி கொண்டிருந்தார் என்பது பின்னோக்கிப் பார்க்கும் பொழுது தெளிவாகின்றது.

சுதந்திர இலங்கையின் வரலாற்றில், இலங்கையின் தமிழ் மக்களது அரசியற் பிரச்சினை பெற்ற முழு பரிணமிப்புக்களையும் இவரது அரசியல் சார்ந்த வாழ்க்கை வரலாற்றினூடாக கண்டு கொள்ளலாம். 1947 - 1977 காலப்பகுதியில் இலங்கைத் தமிழர் அரசியற் பிரச்சினைப் பெற்ற அணி திரள்வுச் செல்நெறிகள்



யாவற்றையும் காணலாம். சபாரத்தினம் தந்துள்ள அத்தியாயப் பிரிவு இதனைக் காட்டுகின்றதெனினும் தெளிவுத் தேவைகளுக்காக அவற்றை நிரற்படுத்தி நோக்குவது அவசியமாகிறது.

1. சமஷ்டிக் கட்சி தோற்றுவிக்கப்படல்: நாடு முழுவதும் தமிழுக்கும் சம அந்தஸ்து வேண்டுமென்ற கோரிக்கையும், தோல்வியும், நிலச்சுவீகரிப்பின் மேல் பிரஜாவுரிமை மறுப்பும் வரத் தொடங்கியமையும்.

2. தனிச் சிங்களச் சட்டத்தின் வருகை ஏற்படுத்திய புதிய நிலமை : இணக்கச் சாத்தியப்பாட்டின்மை காரணமாக சத்தியாகிரகம் முதலான பாராளுமன்ற முறைமைக்கப் பாலான நடவடிக்கைகளில் வடக்கு- கிழக்கு ஈடுபடல்.

3. பாராளுமன்றநிலையில் அரசாங்கங்களுடன் ஒத்துழைப்பு/ இணைவு : சுதந்திரக் கட்சி இடதுசாரி இணைவு, அந்த இணைவின் இனவாதப்போக்கு.

4. சுதந்திரக்கட்சி இடதுசாரிகளின் இணைவு, அதிகாரம் பெறல்: புதிய குடியரசு பிரகடனமும், அதற்கான புதிய ஆட்சி யாப்பும் (1972),ஆட்சி நிலையில் தமிழ் புறக் கணிப்பும், நிர்வாக நிலையில் இன அடிப்படையிலான பாரபட்ச நடைமுறைகளும் (பல்கலைக்கழக அனுமதி), இளைஞர் செயற்பாட்டு ஊக்கமும்.

5. தனி நாட்டுப் பிரகடனம் (1975) : 1972 முதல் தமிழர் உரிமைக்கான அரசியற் போராட்டம் ஒருமுகப்படுத்தப் பட்டதாக அமைய வேண்டுமென்ற உணர்வு எல்லாத் தமிழ்க்கட்சிகளிடையும் ஏற்பட்டது. இதன் பயனாக தமிழர் ஐக்கிய முன்னணி (Tamil United Front T.U.F). தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணி (Tamil United Liberation Front- T.U.L.F).ஆகியது.

இந்தக் கூட்டணிகளின் நிலையிலேயே தனிநாட்டுப் பிரகடனம் வந்தது. இந்தக் கூட்டணித் தோற்றுவிப்பு நிலையில் அக்காலத்திலிருந்த தமிழ்க் கட்சிகளும் தலைவர்களும் ஒன்றிணைந்தனர். இந்த ஒன்றிணைவின் முக்கியத்துவம் யாதெனில் தமிழ்க் கட்சிகளிடையே ஏற்பட்ட புதிய உணர்கையானது ஏற்கெனவே செல்வநாயகமவர்களின் தலைமையின் கீழ் தமிழரசுக் கட்சி எடுத்துக் கூறி வந்த அச்சங்கள் உண்மையானவையாக ஆகியமை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யாகும். அரசியல் உணர்கை நிலையினை பொறுத்த வரையில் சமஷ்டிக் கட்சியின் தொடர்ச்சியான நிலைபாடே உண்மையாகி விட்ட நிலையிலும் இணைவு நிலையில் தலைமைப் பிரச்சினை எதுவும் ஏற்படாத வகையில் செல்வநாயகம் எல்லோரையும் அரவணைத்து நின்றார். இவரது இந்த நிலைப்பாடு அவரது அரசியல் மதிப்பை மிகப் பெரிதாக உயர்த்திற்று. தமிழ் காங்கிரசுடன் இணைந்து தொழிற்படுவதற்கு அவர் பின்நிற்கவில்லை.

இந்த வரலாறோட்டத்தை அவதானிக்கும் பொழுது செல்வ நாயகத்தின் நிலைப்பாடு அரசியல் தொலைநோக்கு டைய ஒன்றாகப் போற்றப்படுகின்றது.

செல்வநாயகம் அவர்களை "தந்தை செல்வா" என்று விழிக்கத் தொடங்கிய வருடம் சரியாக, எது என்பது தெரியவில்லை. இக் கூட்டணி நிலை தோன்றிய காலத்திலேயே இது ஏற்பட்டிருத்தல் வேண்டுமென்றே கருதுகின்றேன். இது பற்றி ஆராய்வது பயன்தரும் முயற்சியாக அமையும். இந்தக் கட்டத்தில் - அதாவது அரசியல் வாழ்க்கையினுடாக தமிழர் உரிமைக் கோரிக்கைகளின் வரலாற்றைப் பார்க்கின்ற பொழுது–அவரது ஆளுமை பற்றிய மிக முக்கியமான ஓர் உண்மை தெரிய வருகின்றது. அது பின்வருமாறு:

> செல்வநாயகம் அவர்கள் அடிப்படையில் அகிம்சை முறை யையே தனது அரசியல் ஆயுதமாகக் கொண்டவர். ஆயுதப் போராட்டம் அவர் சிந்தனைப் போக்கினுள் இடம் பெறாதிருந்த ஒன்று . ஆனால், 1959 முதல் ஏற்பட்ட அரசியல் நிலைமைகள் காரணமாக தமிழர் உரிமை பற்றிய தமது இலக்கு நோக்கிய பாதையில் இந்த இரண்டு நிலை களும் தவிர்க்கப்பட முடியாத அரசியல் நடைமுறைகளாக மாறுவதை அவர் எதிர் கொள்ள வேண்டியிருந்தது.

செல்வநாயகம் அவர்கள் சமஷ்டிகட்சிக்கு தலைமை தாங்கிய முறைமை மிக நுண்ணியதாக ஆராயப்பட வேண்டியதொன்றாகும்.

இலங்கையின் தமிழரசுக் கட்சி தோன்றிய அதே காலகட்டத்தி லேயே தமிழகத்தில் திராவிட இயக்கம் அண்ணாத்துரை அவர்களின் தலைமையில் தமிழரிடையே அரசியல் எழுச்சி ஒன்றினை ஏற்ப டுத்திக் கொண்டிருந்தது. செல்வநாயகம் அவர்கள் தமிழ் நிலை அர சியற் கோள் கொண்டு வந்த கிழக்கிழங்கை இளைஞர் குழாம் (செ.ராஜதுரை) ஒரு புறமாகவும் யாழ்ப்பாணத்துள் இருந்து மேற்கிளம்பிய அ.அமிர்தலிங்கம் இன்னொரு புறமாகவும், தமிழகத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் பயன்படுத்திய



சொல்லாடல் முறைமையைக் கையாண்டு வந்தனர். ஒரு கட்டத்தில் தமிழரசுக் கட்சியினர் தமிழகத் தலைவர்களை சந்திப்பதற்காக தமிழகம் சென்றார்கள். செல்வநாயகம் அவர்கள் பெரியார் ஈ.வே. ராவையும், அண்ணாத்துரையையும் சந்தித்தார். சமஷ்டிக் கட்சியின் தோற்ற நிலையில் இலங்கையின் தமிழர்களுக்கான ஆட்சியலகு தமிழகத்துடன் தொடர்புள்ளதாக இருக்க வேண்டும் என்ற ஒரு கருத்து நிலவிற்று என்றும் பின்னர் அது படிப்படியாக கைவிடப் பெற்றுள்ளதென்றும் அறிகின்றோம் (பார்க்க: தமிழரசுக் கட்சி வெள்ளி விழா மலர்). இலங்கையின் தமிழ் உரிமை போராட்டம் இலங்கையென்ற வரையறைக்கு அப்பாற் செல்வது பற்றி செல்வநாயகம் அவர்கள் திட்டவட்டமான கருத்துக்களை கொண்டிருந்தாரென அக்காலத்தில் அவரோடிணைந்து செயலாற்றிய காலஞ்சென்ற வி.தர்மலிங்கம் அவர்கள் எனக்கு கூறியுள்ளார். செல்வநாயகம் அவர்கள் கட்சியை நெறிப்படுத்திய முறைமையில் இலங்கை நிலைப்பட்ட அரசியல் தனித்துவம் எப்படி வலுவடைகிறது என்பது பற்றி ஆராய்தல் பயன்தரும்.

தமிழரசுக் கட்சிக்கான அரசியல் அணிதிரட்டுகையில் அவர் வடக்கு-கிழக்கை பிரிக்க முடியாத ஓர் அலகாக பார்ப்பதில் மிகுந்த கவனம் செலுத்தினார் என்ற உண்மையை அக்காலத்தில் அவருடன் நெருங்கி ஊடாடியவர்கள் கூறியுள்ளனர். இந்த உண்மையை இரண்டு நிலைகளில் நாங்கள் காணலாம். ஒன்று கிழக்கிலங்கையில் குறிப்பாக மட்டக்களப்பில் தமிழை மாத்திரம் பயின்று வந்த ஓர் இளைஞர் குழாத்தினை அவர்களின் திறன் கண்டு கட்சிக்குள் முக்கிய இடம் கொடுத்தமை. செ.ராஜதுரை, காசி ஆனந்தன் இவர்களுக்கு முன்னோடியாக விளங்கிய எஸ்.டி.சிவநாயகம் (திருமலை) ஆகியோர் முக்கியமாவர். யாழ்ப்பாணத்தில் அக்காலத்தில் தமிழ் மொழி வழி மாத்திரமே கொண்டு அரசியலுக்கு வந்த ஓர் இளைஞர் குழாம் இருக்கவில்லை. யாழ்ப்பாணத்தில் சட்டத்தரணிகளும், உதவி பெறும் பாடசாலைகளில் கற்பித்த ஆசிரியர்களும் முன்னின்றனர் (அ.அமிர்தலிங்கம், துரைரத்தினம்). முற்றிலும் தமிழ் வழி வருகின்ற தமிழ் அரசியற் நிலைப்பட்ட இளைஞர்கள் சற்று பின்னரே வருகின்றனர் (மாவை சேனாதிராஜா). ஆரம்ப நிலையில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் கொள்கை பரப்பு கூட்டங்களில் ராஜதுரை போன்றோருக்கு முக்கியமான இடமிருந்தது. தமிழரசுக் கட்சி அரசியற் பத்திரி கையான சுதந்திரனுக்கு சிவநாயகம் ஆசிரியராக்கப் பட்டார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சமஷ்டிக் கட்சியின் தொடக்க நாட்களில் அரசியல் தலைமையில் கிழக்கிழங்கையின் இராஜவ ரோதயம், ஏகாம்பரம் போன்றோர் முன்னிலைப் பட்டிருந்தனர்.

முஸ்லிம்களுடனும் செம்மையான ஓர் இயைவு நிலையையே அவர் வேண்டி நின்றார். ஆனால் பாராளுமன்ற அரசியல் காரணமாக, தமிழரசுக் கட்சி எம்.பி.க்களாக வந்த முஸ்லிம் பிரதிநிதிகள் பலரை கட்சி மாறவைத்தது. ஆயினும் செல்வநாயகம் அவர்கள் எவ்வித மனக்குரோதமுமின்றி தமிழர், முஸ்லிம் இணைவினை பார்த்தார் என்பதற்கு அஷ்ரப் போன்றவர்கள் தக்க சாட்சி வழங்கியுள்ளனர். இவ்விடயத்தில் காலஞ்சென்ற அஷ்ரப் அவர்களின் கவிதை நூல் ஓர் நல்ல உதாரணம் ஆகும்.

சபாரத்தினம் அவர்களுடைய இந்தக் கட்டுரைத் தொடர் செல்வநாயகம் அவர்களின் குணநலன்களை நன்கு வெளிக்கொணர்ந்துள்ளது. இந்த விடயம் செல்வநாயகம் அவர்களின் ஆள்நிலை குணவியல்புகள் அவரது அரசியல் நிலைப்பாட்டுக்கு எவ்வாறு உதவுகின்றன என்பதை நன்கு சித்திரிக்கின்றது எனலாம். அவற்றுள் பிரதானமாக எடுத்துக் கூறப்பட வேண்டுவது அவர் இலங்கைத் தமிழரிடையே, குறிப்பாக வடக்கு- கிழக்கு தமிழ் மக்களிடையே ஏற்படுத்திய சைவ-கிறிஸ்தவ வேறுபாடுகளுக்கப்பாலான தமிழ் பண்பாட்டு ஒருமை நிலைப்பாடாகும்.

புரட்டாஸ்தாந்து கிறிஸ்தவரான அவர் தனது மத நம்பிக்கையிலோ மத நிலைப்பட்ட தனது ஒழுகலாறுகளிலோ தான் ஒரு கிறிஸ்தவர் என்பதை சிறிதேனும் மறைக்காதவர். ஆனால், தமிழ் பண்பாடு என்ற நிலைப்பாடு வரும் பொழுது அவர் முற்று முழுதாக அதனுள்ளேயே காலூன்றி நின்றார். ஆடை அணிகள் முதல் இசை ரசனைவரை அவர் தமிழனாகவே இருந்தார். தமிழ் உளப்பாங்குக்குள்ளேயே இருந்தார்.

மத ஒழுகலாற்றைப் பொறுத்தவரையில் கிறிஸ்தவ தமிழர்கள், சைவத் தமிழர்களுக்கு, எந்நிலையிலும் குறைந்தவர்கள் அல்லர். உண்மையில் சைவத் தமிழர்களுக்கு இல்லாத ஒரு பெரு வாய்ப்பு கிறிஸ்தவ தமிழர்களுக்கு உண்டு. அதாவது கிறிஸ்தவ தமிழர்கள் கத்தோலிக்கராயினும் சரி புரட்டாஸ்தாந்திகளாயினும் சரி தமிழிலேயே தமது முழு வழிப்பாட்டையும் செய்வர். பூசைகள் தமிழிலேயே நடத்தப்படும். விவிலிய வாசிப்பு தமிழிலேயே வாசிக்கப்படும். 19ம் நூற்றாண்டில் தமிழகத்தில் கிறிஸ்தவர்கள் பலர் தமிழ்மொழியின் மேன்மையை அயராது எடுத்துக் கூறிவந்தனர். பெரும்பாலான சைவக் கோயில்களில் தேவார திருவாசகங்கள் கூட விளங்கும்படி பாடப்படுவதில்லை. சொல்லிய பாட்டின், பொருளுணராமலே பாராயணப்படுத்திக் கூறும் முறைமை மாணிக்கவாசகர் காலமுதலே காணப்படுகின்றது போல தெரிகிறது (பார்க்க சிவபுராணம் கடைசி வரிகள்). செல்வநாயகம் அவர்களின் வீட்டு மொழி தமிழே. இவருக்கு நாதஸ்வரத்தின் பால் பெருத்த விருப்பு இருந்தது. அவரது மரணப்படுக்கையின் பொழுது அவரது உணர்ச்சி நிலையைக் கண்டறிந்து கொள்ள விரும்பிய மருத்துவர்கள் ஒலிநாடாக்கள் மூலம் நாதஸ்வர இசையை பயன்படுத்தினராம். எந்த புலனுணர்வுமற்றிருந்த அந்த நிலையில் நாதஸ்வர ஒலி அவரிடத்தே ஒரு சிலிர்ப்புணர்வினை ஏற்படுத்திற்று என்று கூறுவர்.

சைவமும், தமிழும் என்பதனை இராமநாதன் காலம் முதல் ஒரு அரசியல் கொள்நெறியாக கொண்டிருந்த பிரதேசத்தில் இவர் தமிழின் எடுத்துக்காட்டாக கருதப்பட்டார். அக்காலத்தில் இவரது தலைமைக்கு எதிராக குரல் கொடுத்த சிலர் கிறிஸ்தவ, இந்து உறவிலும் பார்க்க, பௌத்த, இந்து உறவு முதன்மைப்பட வேண்டும் என்று கூறிக் கொண்டு வந்தது உண்மையே. ஆயினும் இன்று பின்னோக்கிப் பார்க்கும் பொழுது செல்வநாயகம் அவர்களின் தமிழ் நிலைப்பாடு பூரணமாக ஏற்றுக் கொள்ளப்பட்டதெனலாம். தமது கொள்கைப் பிடிப்பு காரண மாக தமக்குப் பெருவருமானம் தந்து கொண்டிருந்த நியாயதுரந்தரர் தொழிலை புறக்கணித்தார். இதனால் வீட்டில் போதாமை நிலவிற்று.

அரசியல் ஈடுபாட்டின் பின்னர் அதற்கு முன்னர் அவர் ஈட்டிய சொத்துக்களைப் படிப்படியாக விற்றார் என்பது தெரிய வருகிறது. இந்த விடயங்களில் அவரது மனைவியாருக்கிருந்த நியாயபூர்வமான கோபத்தை அவர் பூரணமாக விளங்கியிருந்தார். கட்சிக் கூட்டம் நடை பெற்ற ஒரு நாளன்று கூட்டம் முடிந்து எல்லோரும் சென்ற பின்னர் தான் வீட்டில் சமையல் நடைபெற முடியவில்லை என்பதையறிந்து தள்ளாத அந்த நிலையிலும் கிரீன்லண்ட்ஸ் ஹோட்டலுக்குச் சென்று ஒரு ''டிபன் கரியரில்'' குடும்பத்துக்கான மதிய உணவை அவர் வாங்கி வந்ததை தான் நேரிற் கண்டதாக மண்டூர் சி.மகேந்திரன் கூறுவார்.

திரு செல்வநாயகத்தின் கொள்கை நேர்மை பற்றிய ஒரு முக்கிய உண்மை, அவர் கொழும்பிற் சொந்தமாக ஒரு வீட்டை வைத்திருக்க விரும்பவில்லையென்பதாகும். தமது அரசியல் வாதிகளான பிரபல வழக்கறிஞர்கள் கொழும்பில் தமக்கென மாடமாளிகைகள் போன்ற வீடுகளை வைத்திருக்க இவர் ஓர்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வாடகை வீட்டிலேயே வசித்து வந்தாரென்பது அதிர்ச்சியைத் தரும் ஒரு உண்மையாகும். இந்த அதிர்ச்சியினூடே அந்த ஆளுமையின் நேர்மை சூரியப்பிரகாசம் செய்கிறது.

அவர் தன்னிடம் இருந்த சொத்துக்கள் முழுவதையும் கட்சிக் காரியங்களுக்காகவே செலவழித்தார் என்பது தெரிந்த உண்மையாகும். சுதந்திரன் அச்சகமும் அலுவலகமும் இவரது சொந்த உடைமையாகும். தன்னுடைய வருவாயினை சுதந்திரன் பத்திரிகை பிரசுரத்துக்காக செலவிட்ட அவர் அப்பத்திரிகை நட்டத்தில் ஓடியது காரணமாக அந்த நிலத்தை விற்க வேண்டியிருந்தது என்று கூறுவர்.

செல்வநாயகம் அவர்கள் தனிச் சொத்து முறைமையில் நம்பிக்கை கொண்டிருந்தவர். அக்காலத்தில் நிகழ்ந்த அரசுடைமையாக்கப் போக்கினை எதிர்த்தவர். தனியார் பாடசாலைகள் அரசுடைமையாக்கப் பெற்று முழுக் கல்வி முறைமையும் அரச நிலைப்பட்ட பொழுது, அச்செயலை அவர் எதிர்த்தார். அவ்வேளையில் இத்தகைய அரசுடமையாக்கம் தமிழ் மக்களை பாதிக்கும் என்று அவர் கூறியது அக்காலத்து தமிழ் இடதுசாரிகளால் ஏற்கப்படவில்லையெனினும் பின்னர் நடந்தவற்றைக் கண்டு மறுதலிக்க முடியாத அந்த உண்மையை ஏற்றுக் கொள்ள வேண்டியிருந்தது.

செல்வநாயகம் அவர்களின் ஆள் நிலை, அரசியல் நேர்மையை போற்றாத தென்னிலங்கை அரசியல்வாதிகள் எவருமில்லை எனலாம்.

1948- 85 இல் தமிழ் வட கிழக்கு பிரதேச பிரஜைகள் குழுவின் சார்பாக அப்பொழுது பிரதம மந்திரியாக இருந்த பிரேமதாஸா அவர்களைச் சந்தித்த பொழுது தான் திருச்செல்வம் உள்ளூர் மந்திரியாக இருந்த பொழுது துணையமைச்சராக இருந்த அனுபவத்தை நினைவுகூர்ந்து பேசியபொழுது செல்வநாயகம் அவர்கள் பற்றிய பேச்சும் வந்தது. அப்பொழுது அவர் சொன்னார் 'செல்வநாயகம் ஒரு பெரிய மகான். எந்த ஒரு பதவியுமோ அந்தஸ்த்துமோ அவருக்கு பெருமை தராது. அவர் அவற்றுக்கு அப்பாற்பட்டவர். அவருக்கு முன்னே எவருமே அவருக்கு இணையாக மாட்டார்'. அவர் அவ்வாறு கூறிய பொழுது அவர் குரலில் வியப்புடன் கலந்த ஒரு வணக்கத் தொனியை கேட்டேன்.

1970களில் பீட்டர் கெனமனுடன் தமிழர்களாகிய தோழர்கள் சிலர் உரையாடிக் கொண்டிருந்த பொழுது தமிழர் பிரச்சினைத் தீர்வு



பேச்சுவார்த்தைகளை ஏன் தமிழரசுக் கட்சியுடன் மாத்திரம் நடத்த வேண்டும் என்ற விடயம் பேசப்பட்ட பொழுது, சமஷ்டி கட்சித் தலைவர்கள் சிலர் பற்றிய எதிர்ப்புணர்வு எடுத்துக் கூறப்பெற்றப் பொழுது திரு. செல்வநாயகம் பற்றிய பேச்சு வந்ததும் கெனமன் துடிதுடிப்பான நெகிழ்ந்த குரலில் 'அவரது அரசியல் நேர்மை அப்பழுக்கற்றது. அவர் தமிழர் கோரிக்கைகளை பிரதிநிதித்துவப் படுத்தும் அளவுக்கு இன்னொருவரைக் கூற முடியுமா' என்றுக் கேட்டார்.

குமாரசூரியர், சிரிமா பண்டாரநாயக்கா மந்திரி சபையில் அமைச்சராக இருந்தவர். தன்னுடைய நண்பர்கள் குழாத்திலும் அரசியற் கூட்டங்களிலும் தமிழரசுக் கட்சியின் குறைபாடுகள் பற்றி வன்மையாக சாடியவார். ஒரு நாள் செல்வநாயகம் அவர்கள் உத்தியோகபூர்வத் தேவைக்காக அந்த அமைச்சுக்கு செல்லுகின்றார். திரு செல்வநாயகத்தை கண்ட குமாரசூரியர் அதன் பின் தனது ஆசனத்தில் இருக்காது நின்று கொண்டே வேண்டியவற்றைச் பேசி அவரைக் கூட்டிக் கொண்டு "லிப்ட்" வரை சென்று வழியனுப்பி வைத்தார் என்பதை அன்று மாலை அவரின் செயலாளர் ஒருவர் என்னிடத்துக் கூறினார். நாங்களும் சற்றுக் கிண்டலாக 'என்ன, எங்கள் முன் அவரை தாக்கிப் பேசுவீர்கள். அவரை கண்டதும் நீங்கள் உங்கள் ஆசனத்தில் இருக்கவே இல்லையாமே என்று கூறினோம். 'நாங்கள் அரசியலுக்குப் பேசுவது வேறு. நாங்கள் அவருக்குக் கொடுக்கும் மதிப்பு என்பது தமிழர்களுக்கு கொடுக்கும் மதிப்பு. அவருடைய நிலைப்பாட்டின் நேர்மை காரணமாகத்தான் எனக்குக் கூட அமைச்சரவையிலேயே இடம்' என்று அவர் கூறியது இப்பொழுது போல இருக்கிறது.

பகைவனும் போற்றும் நேர்மை, அந்த நேர்மையிலிருந்து சற்றும் நெகிழாத நிலை அவருடைய அரசியலுக்கு வலுவை ஊட்டிற்று. சிங்கள நிலை நின்று எழுதப்படும் இலங்கை வரலாற்றில் அவரது வகிபாகம் பற்றிய ஆய்வுகளுக்கு அதிக இடமிருக்க முடியாது. ஆனால், இலங்கையின் எதிர்கால அரசியலை நிர்ணயித்த 20ம் நூற்றாண்டு அரசியல் தலைவர்களுள் சாமுவேல் ஜேம்ஸ் வேலுப்பிள்ளை செல்வநாயகத்துக்கு நிரந்தரமான இடமுண்டு.

*கொழும்பு* **கார்த்திகேசு சிவத்தம்பி**
*3-08-2006*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உள்ளே....

என்னுரை ........................................ vi

முன்னுரை ........................................ viii

1 தந்தை போய்விட்டார் ........................................ 1

2 தந்தையின் ஆரம்ப வாழ்க்கை ........................................ 15

3 அரசியல் பிரவேசம் ........................................ 35

4 ஒற்றையாட்சியின் கேடுகள் ........................................ 60

5 வலுச் சேர்த்த சிங்களவர்கள் ........................................ 77

6 தமிழரசுக் கட்சி பிறந்தது ........................................ 99

7 காலிமுகச் சத்தியாக்கிரகம் ........................................ 135

8 ஒப்பந்தம் கிழிப்பு ........................................ 163

9 ஆட்சியில் பங்கு ........................................ 217

10 அடிமைச் சாசனம் ........................................ 257

11 ஆயுதப் புரட்சிக்கு அத்திவாரம் ........................................ 295

12 தனி நாட்டுத் தீர்மானம் ........................................ 326

13 தந்தையின் இறுதி நிலை ........................................ 343

புகைப்படங்கள் ........................................ 347

# 1

# தந்தை போய்விட்டார்

### மயங்கி விழுந்தார்

"தமிழ் பேசும் உலகிற்கு பேரிழப்பு" தந்தை செல்வாவின் மறைவை அறிவிக்க கொழும்பு தினகரன் பத்திரிகை கொடுத்த தலைப்பு இது.

தந்தை செல்வாவின் மறைவை ஆழ்ந்த துயரத்துடன் அதன் வாசகர்களுக்கு அறிவித்த தினகரன் உலகத் தமிழ்த் தலைவர்களையும் அப்பேரிழப்பு கவலையில் மூழ்கடித்துள்ளதாகத் தெரிவித்தது.

"தமிழ் பேசும் நல்லுலகின் வழிகாட்டி! ஈழம் வாழ் தமிழர் தன்மானத்துடன் வாழ்வதற்கான நல்ல வழியை வகுத்திட்ட பெரும் தலைவர்" என்றார் கலைஞர் மு.கருணாநிதி.

எம். ஜி. ஆர். சொன்னார்: "உலகத்தில் வாழ்கின்ற தமிழ் பேசும் மக்கள் அனைவருக்குமாகப் போராடிய மேதை" என்று.

எம். டி. குணசேன அன்ட் கம்பெனியால் பிரசுரிக்கப்பட்ட சன் என்ற ஆங்கிலப் பத்திரிகையும், அதன் சகோதர தமிழ் வெளியீடான தினபதியும் தந்தையின் மரணச் செய்தியைக் கொடுப்பதில் முந்திக் கொண்டன. 27ம் திகதி காலை சன் பத்திரிகை: 'செல்வநாயகம் இறந்து விட்டார்' என்று நாலு கலம் தலைப்பில் மரணச் செய்தியை கறுப்புப் பெட்டி கட்டி வெளியிட்டது. அச் செய்தியின் தமிழாக்கம் :-

> தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் எஸ். ஜே. வி. செல்வநாயகம் நேற்றிரவு காலமானார். 79 வயதுள்ள தமிழ்த் தலைவர் கடும் சுகவீனமுற்று யாழ்ப்பாண ஆஸ்பத்திரியில் கடந்த நாலு வாரங்களாகத் தங்கியிருந்தார். நேற்றிரவு 8.30 மணியளவில் அவருக்கு மாரடைப்பு ஏற்பட்டதாக டாக்டர்கள் கூறினர். செயற்கைச் சுவாசம் கொடுக்கப்பட்ட

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



போதிலும் ஒன்றரை மணித்தியாலங்களுக்குப் பின்பு அவர் மரணமானார்.

செல்வநாயகத்தின் நிலைமையைப் பற்றிக் கேள்விப்பட்டதும் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் ஆஸ்பத்திரிக்கு விரைந்தனர். வெளியே பெருந்தொகையான மக்கள் திரண்டனர். செல்வநாயகத்தின் மரணம் தொடர்பான செய்தி அறிவிக்கப்பட்டதும் சனக்கூட்டத்திலிருந்த சிலர் விசும்பி விசும்பி அழுதனர். செய்தி பரவியதும் யாழ், நகரம் சோகமயமானது. அண்மைக் காலத்தில் மிகவும் மதிக்கப்பட்ட இந்த தமிழ்த் தலைவருக்காக யாவருமே விம்மினர்.

28ம் திகதி எல்லாப் பத்திரிகைகளும் தந்தை செல்வாவின் மறைவைப் பற்றித் தலையங்கம் தீட்டின. அவரின் மறைவை பேரிழப்பாகவே காட்டின. தமிழ் மக்களுக்கு மட்டுமல்ல முழு இலங்கைக்குமே அது பேரிழப்பு என்பதைச் சுட்டிக் காட்டின.

எல்லாத் தலையங்கங்களிலும் என்னைக் கவர்ந்தது சன் எழுதிய தலையங்கம் தான். அதன் ஆரம்பப் பந்தியின் தமிழாக்கம்:

> சாமுவேல் ஜேம்ஸ் வேலுப்பிள்ளை செல்வநாயகம் இறந்து விட்டார். தமிழ் மக்கள் தமது தலைவரை இழந்து விட்டனர். அபூர்வமான, நேர்மையுள்ள, அரசியல்வாதியை இழந்த இலங்கை துக்கம் அனுஷ்டிக்கிறது.

அதன் இறுதிப் பந்தியின் தமிழாக்கம்:

> சாமுவேல் ஜேம்ஸ் செல்வநாயகம் ஒரு தனித்தன்மை வாய்ந்த மனிதர். அவர் அரசியலுக்காகப் பெரும் சொத்தை இழந்தவர். தலைசிறந்த வழக்கறிஞராக 1945ல் மாதம் 10,000 ரூபா சம்பாதித்தவர் அவர். மற்ற அரசியல்வாதிகளைப் போலல்லாது சொத்துச் சேர்க்காது இறந்தார். தங்களின் நன்மைக்காகப் போராடிய தலைவரை இழந்து விட்டமைக்காக தமிழர்கள் துக்கம் அனுஷ்டிக்கின்றனர். எவருக்கும் விட்டுக் கொடுக்காத ஒரு தலைமகனை இழந்து விட்டதற்காக இலங்கை ஆழ்ந்த துக்கத்தை அனுஷ்டிக்கிறது.

தந்தை செல்வாவின் மரணம் எதிர்பார்க்கப்பட்டது தான். 1977 மார்ச் 23 யாழ் குடாநாட்டில் தெல்லிப்பளையிலுள்ள அவரின் இல்லத்தில், காலையில் ஒரு கடிதத்தை வாசித்துக் கொண்டிருந்தவர், கதிரையிலிருந்து எழும்பும் போது விழுந்து விட்டார்.



விழுவது அவருக்கு அடிக்கடி நடக்கும் நிகழ்ச்சி. பார்க்கின்சன் நோய் அவரது குரலையும் தசைநார்களையும் அவ்வளவுக்கு வலுவிழக்கச் செய்து விட்டது.

"அடிக்கடி விழுகிறீர்களே ஏதாவது நடக்கக் கூடாதது நடக்காதா?" என்று ஒரு முறை கேட்டார் தந்தைக்கு யோகாசனப் பயிற்சியளித்த ஈ.சபாரத்தினம்.

"இதென்ன கேள்வி! குழந்தைப்பிள்ளை எத்தனையோ தடவைகள் விழுது. அதுக்கு ஏதாலும் நடக்குதா?"

"நீங்கள் குழந்தையல்ல."

"யார் சொன்னது நான் குழந்தையல்லை என்று" கேட்டுவிட்டுச் சிரிக்கிறார். நான் செத்துப் போவேன் என்று பயப்படுகிறியளே! என் அம்மா 86 வயது வரை இருந்தவ. நானும் அந்த வயது வரை இருப்பன்.

தான் விழுவதைப் பற்றி தந்தை செல்வா என்றுமே கவலைப்படுவதில்லை. ஆனால், மார்ச் 23 கதிரையிலிருந்து எழும் போது விழுந்தவர் விழுந்தவர்தான். அப்போது இழந்த நினைவை ஏப்பிரல் 26 இறக்கும் வரை முழுமையாகத் திரும்பப் பெறவில்லை. முப்பத்து நாலு நாட்களுக்கு தந்தைக்கு அறிவு பூரணமாகத் திரும்ப வில்லை. யாழ், பெரியாஸ்பத்திரியின் 16ம் வார்ட்டில் அந்த 34 நாட்களும் சாவுடன் போராடினார்.

### போராடப் பிறந்தவர்

கே. நடராசா அக்காலத்தில் பிரபல ஆங்கிலப் பத்திரிக்கையாளர். முதலில் டைம்ஸ் ஒப் சிலோனிலும் பின்பு டெயிலி நியூசிலும், இறுதியில் சண்டே ரைம்ஸ்ஸிலும் வேலை செய்தவர். அவர் எழுதினார் :-

> எஸ். ஜே. வி. செல்வநாயகம் போராடப் பிறந்தவர். அவரின் ஆரம்ப வாழ்க்கை ஒரே போராட்டம். அவரின் அரசியல் வாழ்க்கையும் போராட்டம்தான். இப்பொழுது யமனுடன் போராடிக் கொண்டிருக்கின்றார்.

தந்தை செல்வா அறிவிழந்த நிலையில் யாழ்ப்பாணப் பெரியாஸ் பத்திரியில் அனுமதிக்கப்பட்ட செய்தி யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல இலங்கை முழுவதும் பரவியது. யாழ்ப்பாணத்தில் மக்கள் கூட்டம் கூட்டமாக ஆஸ்பத்திரிக்கு வெளியே குழுமினர். தந்தை தன் உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கையில் யாழ். பெரியாஸ்பத்திரிக்கு வெளியே

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பொதுமக்கள் தம் உணர்ச்சியைக் கட்டுப்படுத்த முடியாது போராடிக் கொண்டிருந்தனர்.

அரசியல் தலைவர்கள் பலர் யாழ்ப்பாணம் போய்த் தந்தையைத் தரிசித்தனர். பிரதம மந்திரி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க, அவரின் அமைச்சரவையைச் சேர்ந்த அரைவாசிப்பேருக்கு மேற்பட்டோர், எதிர்க்கட்சித் தலைவர் ஜே.ஆர்,ஜெயவர்த்தன, தொண்டமான், செல்லச்சாமி மற்றும் எம். பீக்கள் பலரும் போனார்கள்.

அரசும் உடனடியாகச் செயலில் இறங்கியது. ஒரு ஹெலிகொப்டரையும் இரண்டு நரம்பியல் நிபுணர்களையும் தந்தையின் பணிக்கென பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க ஒழுங்கு செய்தார். தந்தை யாழ்ப்பாண பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டதைக் கேள்விப்பட்டதும் சுகாதார அமைச்சரை பிரதம மந்திரி கூப்பிட்டார். சிறந்த நரம்பியல் நிபுணர் யார் என விசாரித்தார். டாக்டர் ஷெல்டன் கப்ரால் என்பதை அறிந்ததும் அவரை உடனடியாக யாழ்ப்பாணம் அனுப்பிவைக்க ஒழுங்கு செய்தார். எயர் லங்கா விமானங்கள் இரத்மலானைக்கும் பலாலிக்குமிடையே அடிக்கடி பறந்தன. விசேஷ மருந்துகள் சிங்கப்பூரிலிருந்தும், லண்டனிலிருந்தும் வந்தன.

தந்தையின் சடலத்தை ஆஸ்பத்திரியிலிருந்து பொறுப்பெடுத்து தமிழர் விடுதலைக் கூட்டணியிடம் கையளிக்கும் போது தந்தையின் கடைசி மகன் சந்திரகாசன் சொன்னார்:

> உலகில் எந்தத் தலைவருக்கும் கிடைக்காத சிகிச்சை எனது தந்தைக்கு அளிக்கப்பட்டது. கடந்த 34 தினங்களில் இரவு பகலென்று பாராது சிறப்பான சேவையை வைத்தியர்களும் அவர்களின் உதவியாளர்களும் ஆற்றினர்.

தந்தைக்கு ஏன் இந்தத் தனிக் கவனிப்பு?

தந்தையின் மரணச் செய்தி தமிழ் பேசும் மக்கள் அனைவரையும் கதறி அழச் செய்தது ஏன்?

தந்தையின் இறப்பு இலங்கை வாழ் அத்தனை மக்களையும் கவலை கொள்ளச் செய்தது ஏன்?

தந்தையின் நேர்மை. தந்தையின் மனத்திடம். தந்தையின் தியாகம். தந்தையின் அரசியல் தீர்க்கதரிசனம். தமிழ் பேசும் மக்கள் தன்மானத்துடன் தலை நிமிர்ந்து மற்றவர்களுடன் சரிசமமாக வாழ்வதற்கு அவர் முன் வைத்த தீர்வுத் திட்டமான ஐக்கிய இலங்கையில் சமஷ்டி அமைப்புக்குள் தமிழர் தாயகத்துக்கு தன்னாட்சி. அதற்குள், ....... ..... ...... .......



முஸ்லிம் மக்களுக்கு அவர்களின் தனித்துவத்தைப் பேண உதவும் ஒழுங்கு.

தந்தையின் தீர்க்கதரிசனம் போல் அவரின் நேர்மையும் தனித்துவம் பெற்றது. மாதிரிக்கு இதோ ஒரு பருக்கை.

இறப்பதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்பு நடந்த சம்பவம். தந்தைக்குப் பணத் தட்டுப்பாடு. அதையறிந்த ஆதரவாளர் ஒருவர் பணம் கொண்டு போய்க் கொடுத்தார். வாங்க மறுத்துவிட்டார் தந்தை. வேறொரு தெரிந்தவரிடம் 7000 ரூபா கடனாக வட்டிக்கு வாங்கினார். தந்தை இறந்த பின்பு மகன் சந்திரகாசன் அக்கடனை அடைத்தார். இதைப் போன்ற எத்தனையோ சம்பவங்கள்.

தந்தை செல்வா மிகவும் அன்பான, பண்பான தந்தை. ஐந்து பிள்ளைகள். அருமை மகள் சுசீலாவதி மூத்தவர். மனோகரன், வசீகரன், ரவீந்திரன், சந்திரகாசன் ஆண்கள். மார்ச் 23ல் தந்தை விழுந்தபோது பிள்ளைகள் எவருமே தெல்லிப்பளை வீட்டில் இருக்கவில்லை. மனைவி மட்டும்தான் இருந்தார். "இரத்தினம், இரத்தினம் என்று அடிக்கடி கூப்பிடுவீங்களே! இப்பொழுது கூப்பிடுங்கோ" என்று அவர் கதறினார்.

டாக்டர் கப்ராலும் அவரைச் சேர்ந்தவர்களும் பிரதம மந்திரி ஸ்ரீமாவோ ஒழுங்கு செய்த விசேஷ விமானம் மூலம் பலாலிக்குப் பறந்து அங்கிருந்து யாழ்ப்பாணம் போய்ச் சேர்ந்தனர். தந்தையின் மூளைக்குச் செல்லும் இரத்தக் குழாயை இரத்தக் கட்டி ஒன்று அடைத்து விட்டதை அவர்கள் அவதானித்தனர். சத்திர சிகிச்சை அடுத்த நாள் 24ம் திகதி அதிகாலை 3 மணிக்கு ஆரம்பித்தது. இரண்டு மணித்தியாலங்கள் தொடர்ந்து நடந்தது. அன்று காலையே கொழும்பு திரும்பினார் டாக்டர் கப்ரால். அவருக்கு உதவிய டாக்டர் மண்டலேஸ்வரன் கொழும்பு திரும்பவில்லை. யாழ்ப்பாணத்திலேயே தங்கியிருந்தார், தந்தையின் நிலைமையைக் கவனிக்க. 26ம் திகதி மீண்டும் விசேஷ விமானம் மூலம் யாழ்ப்பாணம் போனார் டாக்டர் கப்ரால்.

"எப்படியிருக்கிறார் டாக்டர்?" தந்தை செல்வநாயகத்தின் மனைவி எமிலி கிரேஸ் டாக்டரைப் பார்த்துக் கேட்டார். அவரின் வீட்டுப் பெயர்தான் இரத்தினம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



"பயப்படத்தேவையில்லை. உடல் தேறி வருகிறது" என்று மண்டலேஸ்வரன் சொன்னார்.

**தமிழ் மக்கள் பிரார்த்தனை**

மார்ச் 31 தந்தையின் பிறந்த தினம். எழுபத்தொன்பதாவது பிறந்த நாள். யாழ்ப்பாணத்திலும், தமிழ் பேசும் மக்கள் வசிக்கும் மற்ற எல்லாப் பிராந்தியங்களிலும் தந்தை செல்வாவின் உடல்நிலை தேறக் கோரி வழிபாட்டுத் தலங்கள் யாவற்றிலும் விசேட பூசைகள், ஆராதனைகள், தொழுகைகள். சுவர்களில் பெரிய பெரிய சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன. துண்டுப் பிரசுரங்களும் வெளியிடப்பட்டன. அவை யாவும் தந்தை செல்வா சுகமடைய பிரார்த்தித்தல் வேண்டுதல் செய்தன.

ஏப்ரல் முதலாம் திகதி டாக்டர் கப்ரால் மூன்றாவது தடவையாக யாழ்ப்பாணம் போய்த் தந்தையைப் பரிசோதித்தார். இரத்தம் ஏற்றினால் தலைவரின் உடல் தேறுவது துரிதமாகும் என்ற அபிப்பிராயத்தை அவர் சொன்னார். எஸ். ஜே. வி. யின் இரத்தம் ஓ குரூப்பைச் சேர்ந்தது.

தந்தைக்கு இரத்தம் தேவை என்ற தகவல் தெரிய வந்ததும் வாலிபர்கள் படையெடுத்தனர் இரத்த வங்கிக்கு. நீண்ட கியூ.

"எல்லோரும் தேவையில்லை. ஓ பிரிவு இரத்தம் உள்ளவர்கள் மட்டும் நில்லுங்கள். மற்றவர்கள் போகலாம்" என்று நர்ஸ் ஒருவர் உரத்துக் கத்தினார்.

"எங்களுக்கு எங்கள் இரத்தம் எந்தக் குரூப் என்று தெரியாது."

"அப்படியானால் நில்லுங்கள் கியூவில்." முதலில் இரத்தத்தைக் குரூப் பண்ண வேண்டும்.

இரத்தம் ஏற்றிய பின் தந்தை தெம்பாகக் காணப்படுகிறார் என்று சொல்லிவிட்டு கொழும்பு திரும்பினார் டாக்டர் கப்ரால். ஏப்ரல் 2ல் சிங்கப்பூலிருந்து விசேஷ மருந்து வந்து சேர்ந்தது. நாசித் துவாரத்தினூடாக அம்மருந்து கொடுக்கப்பட்டது. தந்தையின் உடலில் சிறு சிறு அசைவுகள் ஏற்பட்டன. ஊசி போட்டதும் அவ்வசைவுகள் வலுவுற்றன.

ஏப்ரல் 3ம் திகதி சத்திர சிகிச்சையின் போது போடப்பட்ட எட்டு இழைகளில் மூன்று வெட்டப்பட்டன. இரண்டு நாட்களுக்குப் பின்பு எஞ்சிய ஐந்து இழைகளும் வெட்டப்பட்டன. ஐந்தாம் திகதி மீண்டும் அவருக்கு ஓ பிரிவு இரத்தம் கொடுக்கப்பட்டது. ஏப்ரல் 6ம் திகதி தந்தை தேறிவரும் செய்தியைத் தினகரன் வெளியிட்டது.



ஆறாம் திகதி காலையில் கொழும்பிலிருந்து அரசியல்வாதிகள் குழு ஒன்று வருத்தம் பார்க்கப் போனது. எதிர்க்கட்சித் தலைவர் ஜே. ஆர். ஜெயவர்த்தன, கல்குடா எம். பி., கே. டபிள்யு. தேவநாயகம், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் சௌமியமூர்த்தி தொண்டமான், இ. தொ. கா. செயலாளர் எம். எஸ். செல்லச்சாமி உட்படப் பலர் போனார்கள். சாவகச்சேரி முன்னாள் எம். பி, வி. என். நவரத்தினம், அவர்களைத் தன் காரில் ஏற்றி ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் சென்றார். குழாய்கள் பொருத்தப்பட்ட நிலையில் கிடந்த தந்தையைப் பார்த்ததும் ஜே. ஆர். உணர்ச்சி வசப்பட்டார். எஸ். ஜே. வியின் மனைவியை அழைத்து, நான் இரத்தம் கொடுக்கத் தயார் என்றார். பக்கத்தில் நின்ற வி. என். நவரத்தினம், நன்றி! எத்தனையோ இளைஞர்கள் முண்டியடித்துக் கொண்டு நிற்கிறார்கள் இரத்த தானம் செய்ய, என்றார். அன்று கோழிக்குஞ்சு சூப் தந்தைக்குக் கொடுக்கப்பட்டது. ஏழாம் திகதி இரவு ஒரு திடீர் திருப்பம். சுவாசிக்க முடியாது கஷ்டப்பட்டார் தந்தை. நேர்ஸ்கள் டாக்டர் மண்டலேஸ்வரனை அழைத்தனர். நெஞ்சை அடைத்த சளியை வெளியே எடுத்து ஆபத்தைப் போக்கினார் டாக்டர் மண்டலேஸ்வரன். ஒன்பதாம் திகதி தினகரன் பிரசுரித்த செய்தி இது:

> தந்தை செல்வாவின் உடல் நிலை தேறி வருகிறது என்று டாக்டர்கள் கூறினர். நாடித் துடிப்பும் இரத்த ஓட்டமும் சீரடைகின்றன என்று சொன்னார் டாக்டர் மண்டலேஸ்வரன். கடந்த சில நாட்களாகத் தொல்லை கொடுத்த சிறு நீரகமும் சிறப்பாக இயங்குகின்றது. ஏப்ரல் 10ல் அவரைப் படுக்கையில் தூக்கி உட்கார வைத்துத் திரவ உணவு கொடுக்க ஆரம்பித்தனர் டாக்டர்கள்..பதினொராம் திகதி அவரை உட்கார வைத்துக் கால்களை மடக்கியும் கைகளை நீட்டியும் உடலின் வெவ்வேறு பகுதிகளை அமர்த்தியும் பயிற்சி கொடுக்க ஆரம்பித்தனர். பதார்த்த உணவின் அளவும் அதிகரிக்கப்பட்டது. அடிக்கடி வந்த காய்ச்சல் முற்றாக நீங்கி விட்டது.

டாக்டர்களுக்கு ஒரே உற்சாகம். பதினாறாம் திகதி காலையில் டாக்டர் கப்ரால் டாக்டர் குணசேகரவையும் அழைத்து வந்தார். இருவரும் எஸ். ஜே. வியைப் பரிசோதித்தனர். எக்ஸ்ரே படம் பிடித்துப் பார்த்தனர். தலையில் இரத்தக் கட்டிகள் இருந்ததை அவதானித்தனர். அவற்றைச் சத்திர சிகிச்சை மூலம் அகற்ற முடிவாகியது.

காலை 11 மணிக்குச் சத்திர சிகிச்சைக் கூடத்துக்கு எஸ். ஜே. வி. கொண்டு போகப்பட்டார். ஒன்றரை மணித்தியாலங்களுக்கு அவரின் தலையின் பின் புறத்தில் அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டது. அந்த

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இரத்தக் கட்டிகள்தான் தந்தை மயக்கம் தெளிவதற்குத் தடையாக இருப்பதாக டாக்டர்கள் சொன்னார்கள். ஏப்ரல் 23ல் இன்னுமொரு பரிசோதனையையும் டாக்டர்கள் செய்தனர். காரைக்குறிச்சி அருணா சலத்தின் நாதஸ்வர இசை டேப்புக்களை போட்டனர். தந்தையின் கை விரல்கள் தாளம் போடுவது போன்று சிறிதளவு அசைந்தன. அடுத்த நாள் 24ம் திகதி மேலுமொரு முன்னேற்றம். நாதஸ்வர இசையை ரசிப்பது போன்ற முகபாவங்கள்.

தந்தை காரைக்குறிச்சியின் ரசிகர். காரைக்குறிச்சியின் கச்சேரிக் குப் போய் நிலத்தில் இருந்து தாளம் போட்டு ரசிப்பவர்.

நிமிர்த்தி இருத்தி வைத்தனர். கண் விழித்துப் பார்த்தார்.

இருபத்தைந்தாம் திகதி இரவு கடும் காய்ச்சல் கண்டது. இருபத் தாறு இரவு *8.30* மணிக்கு மாரடைப்பு. இரவு *10* மணிக்கு இறந்து விட்டார்.

எல்லா முயற்சிகளும் எல்லாவிதக் கவனிப்புக்களும் தோற்றுப் போயின. இரவு பகல் பாராது ஒரு மகன் தன் தந்தைக்காற்றும் சேவை யைவிடச் சிறப்பான சேவையை ஆற்றிய வைத்தியர்களும், அவர்க ளுக்கு உதவியவர்களும் உண்மையிலேயே இடிந்து போயினர்.

டாக்டர்களும் அழுதார்கள். அவர்களின் உதவியாளர்களும் விம்மி விம்மி அழுதனர். தமிழ் பேசும் மக்கள் அனைவருமே சேர்ந்து அழுதார்கள். கதறி அழுதார்கள்.

மகன் சந்திரகாசன் தந்தையின் பூதவுடலைக் கையேற்று தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களிடம் கையளித்தார். தன்னிலும் பார்க்க, தான் கட்டி எழுப்பிய கட்சியை, இயக்கத்தை, நேசித்தவர் தந்தை செல்வநாயகம்.

**இலட்சியங்களைப் போற்றுங்கள்**

*1975* பெப்ரவரி *6*ல் காங்கேசன்துறை உபதேர்தலில் வெற்றி யீட்டிய போது அவரைப் பாராட்டித் தீர்மானமொன்றை நிறைவேற்ற விரும்பினார்கள் இளைஞர்கள். அவர்களை அழைத்து தந்தை சொன்னார்:

> தனிப்பட்ட எவரையும் நீங்கள் போற்ற வேண்டாம். எமது கட்சியை, எமது இலட்சியங்களைப் போற்றுங்கள். புகழுங்கள். அவைதான் நிலையானவை. தனிப்பட்ட எவரும் நிலையானவர் என்று கூறமுடியாது.

....... ..... ..... .......



வழக்கம் போல ஆறுதலாக, தணிந்த குரலில், ஒவ்வொரு சொல்லாக அழுத்தி, உறுத்திச் சொன்னார். வழக்கம் போல் அவர் சொற்களில் உறுதி இருந்தது. ஆணித்தரம் இருந்தது. அவருக்கேயுரிய விடாப்பிடியும் ஆழமாகப் பதிந்திருந்தது.

1975 ஜனவரியில் நடந்த சம்பவம் இது. யாழ்ப்பாணத்தில் நாலாவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மகாநாடு நடந்து கொண்டிருந்தது. தமிழ் நாட்டிலிருந்து வந்து கலந்து கொண்டவர்களில் இரா. ஜனார்த்தனனும் ஒருவர். மகாநாட்டின் போது அவர் தந்தை செல்வாவை அவருடைய தெல்லிப்பளை வீட்டில் போய்ச் சந்தித்தார். சந்திப்பின் முடிவில் ஜனார்த்தனன் கேட்டார். "ஐயா! தங்களுக்கு வயதாகி விட்டது. உங்கள் சுயசரிதையை நீங்கள் எழுத வேண்டும்" என்று. பக்கத்தில் நின்ற உடுவில் எம். பி. தர்மலிங்கத்திடம் செல்வா சொன்னார்: "நீங்கள் வெளியிட்ட மலரில் ஒரு புத்தகத்தைக் கொண்டு வாருங்கள்."தமிழரசுக் கட்சியின் வெள்ளிவிழா மலரின் ஒரு பிரதியைக் கொண்டு வந்து கொடுத்தார் தர்மலிங்கம். தந்தை தனது கதிரையி லிருந்து எழுந்தார். மலரை இரண்டு கைகளிலும் பிடித்து, "இந்தாருங்கள், இது தான் என் சுயசரிதை" என்று சொன்னபடி மலரைக் கொடுத்தார். அந்தச் சுயசரிதையின் சில பிரதிகள்தான் இன்று உள்ளன. மற்றவை எரிந்துவிட்டன. தமிழ் மக்கள் உள்ளங்களிலிருந்து அவரும் அவர் தோற்றுவித்த தமிழரசுக் கட்சியும் மறையவில்லை.

ஏப்ரல் 27, யாழ்ப்பாண மணிக்கூட்டுக் கோபுரத்திலிருந்த கடி காரம் டாண், டாண், டாண் என பன்னிரண்டு தடவைகள் ஒலித்தது. மணிக்கூட்டுக் கோபுரத்தின் உச்சியிலும் ஒரு கறுப்புக் கொடி. யாழ்ப் பாணத்தில் மட்டுமல்ல, வடக்கிலும் கிழக்கிலுமுள்ள நகரங்களிலும், கிராமங்களிலும், குக்கிராமங்களிலும், வீடுகளிலும் கறுப்பு அல்லது வெள்ளைக் கொடிகள். ஒவ்வொரு தமிழ் பேசும் சீவனின் உள்ளத்திலும் சோகத்தின் படிவுகள்.

"தமிழ் பேசும் மக்கள் வதியும் பகுதிகளில் எல்லாம் இருள் படர்ந்து விட்டது" என்று எழுதினார் யாழ்ப்பாணத்திலிருந்து டெயிலி நியூஸ் சிறப்பு நிருபர்.

யாழ் குடாநாட்டு மக்கள் தங்கள் சோகத்துக்கு உருக்கொடுத்தனர். எங்கும் தோரணம், மாவிலை, வாழை, இறுதி ஊர்வலம் சென்ற பாதைகள் எல்லாம் அணி செய்தன.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**இறுதி யாத்திரை**

யாழ். பெரியாஸ்பத்திரியிலிருந்து பொறுப்பேற்ற பூதவுடலைத் தந்தை கட்டி எழுப்பிய தமிழர் விடுதலைக் கூட்டணியிடம் சந்திரகாசன் கையளித்தார். சிவசிதம்பரம், அமிர்தலிங்கம், தர்மலிங்கம், சம்பந்தன், ராஜதுரை, கே. பி. இரத்தினம், செல்லத்தம்பு, ஆலாலசுந்தரம், வி. என். நவரத்தினம், ஆனந்தசங்கரி, துரைரத்தினம் உட்படக் கூட்டணித் தலைவர்கள் தந்தையின் பூதவுடலைக் கையேற்று யாழ்ப்பாண மெயின் வீதியிலிருந்த தமது கட்சி அலுவலகத்துக்குக் கொண்டு போனார்கள். அங்கே கட்சி உறுப்பினர்களும், தொண்டர்களும் அஞ்சலி செய்தனர்.

மாலை ஆறு மணி. தந்தையின் பூதவுடல் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் பொது மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. சாரை சாரையாக மக்கள் யாழ் குடாநாட்டின் எல்லாப் பகுதிகளிலுமிருந்தும் வந்து குவிந்தனர். எங்கும் உணர்ச்சி வெள்ளம். "தந்தையே! எங்களைத் தவிக்க விட்டுட்டுப் போட்டாயே" நரைத்த தலை மாது ஒருவர் புலம்பினார். அவரைக் கைப்பிடியாய்க் கூட்டிச் சென்ற பேரப் பிள்ளையும் அழுது விட்டான்.

கியூ வளர்ந்து கொண்டு போனது. 28 காலையில் முக்கால் மைலுக்கு மேல் கியூ வளைந்து வளைந்து சென்றது. காலை 9.40 மணிக்கு கொழும்பிலிருந்து விசேட விமான மூலம் வந்த தலைவர்கள் வீரசிங்கம் மண்டபத்துக்கு வந்தனர். வெள்ளைச் சேலையணிந்த பிரதம மந்திரி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க, சபாநாயகர் ஸ்டான்லி திலகரத்தின, அமைச்சர்கள் மைத்திரிபால சேனநாயக்க, பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்க, பதியுத்தீன் மஹ்மூத், ரி. பி. இலங்கரத்தின, செல்லையா குமாரசூரியர், கே.பி. இரத்தினநாயக்க உட்படப் பலர் அஞ்சலி செலுத்தினர்.

29 மாலை 6 மணி வரை அணி அணியாகச் சென்று அஞ்சலி செலுத்தினர் மக்கள். ஆறு மணிக்குத் தந்தையின் பூதவுடலைக் கறுப்பு நிறச் சவவண்டியில் ஏற்றிய போது, முற்றவெளியில் குழுமி நின்ற ஐம்பதாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் கதறி அழுதனர்.

உருக்குத் தொப்பியணிந்த பொலிஸார் மோட்டார் சைக்கிள்களில் முன்னும், பின்னும் இரு பக்கங்களிலும் செல்ல நீண்ட, நெடிய 25 மைல் பாதை வழியே மோட்டார் பவனி ஊர்ந்து சென்றது.

தெருவின் இரு கரைகளிலும் மக்கள். மலர்கள் தூவினர் சிலர். கண்ணீர் உகுத்தனர் பலர். தமது குடும்பத்தவர் ஒருவரைப் பிரிந்து விட்ட உணர்வு எல்லோருக்கும். நான்கு மணித்தியாலங்களாக நீண்டு விட்ட



ஊர்வலம் தெல்லிப்பளை இல்லத்தை அடைந்த போது இரவு 10 மணி. அங்கே உணர்ச்சிக் காட்சிகள். "ஐயா! நாங்கள் உங்களை இனி மேல் எப்படி இங்கே வந்து பார்ப்பது". இரவு முழுவதும் உணர்ச்சிப் பிரவாகம்.

காலையில் மதச் சடங்குகள் தந்தை வழக்கமாகப் போகும் தெல்லிப்பளை தேவாலயத்தில். அந்தச் சின்னத் தேவாலயத்திற்குள் முண்டியடித்துக் கொண்டு குடும்பத்தினர், உறவினர், பிரமுகர்கள். தமிழிலும், ஆங்கிலத்திலும் தோத்திரப் பாடல்கள் பாடப்பட்டன. சி.எஸ். ஐ. மிஷனின் யாழ்ப்பாண பிஷப் வண. பிதா. எஸ். அம்பலவாணர் நல்லடக்க ஆராதனை நடத்தினார். யாழ்ப்பாண முன்னாள் பிஷப் ஜி. குலேந்திரன் உதவினார்.

தெல்லிப்பளைச் சந்தியிலிருந்து இறுதி ஊர்வலம் ஆரம்பிப்பதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்தன. யாழ்.குடாநாட்டின் பல பகுதிகளிலுமிருந்து சிறு சிறு ஊர்வலங்கள் அங்கு வந்து சங்கமித்தன. யாழ்.குடாநாட்டிற்கு வெளியேயிருந்தும் பல ஊர்வலங்கள் வந்தன.

பதினைந்து அடி உயர வெள்ளி இரதத்தை இழுத்து வந்து சந்தியில் நிறுத்தினார்கள். முப்பதாயிரம் ரூபாசெலவில் உருவாக்கப்பட்டது அது. தேவாலயத்திலிருந்து பூதவுடலை இளைஞர் பேரவையினர் பொறுப்பேற்றனர். மாவை சேனாதிராசா, உமா மகேஸ்வரன், பிரபாகரன், சிறீ சபாரத்தினம், ஈழவேந்தன், சித்தார்த்தன், கோவை மகேசன் உட்படப் பலர் பூதவுடலைத் தாங்கிச் சென்றனர். ஊர்வலம் புறப்பட்டது. தெருவின் குறுக்கே போன மின் கம்பிகளைத் தொண்டர்கள் கொக்கைத் தடியால் உயர்த்த, உயர்த்த முடியாத வற்றைக் கழற்றி வழி ஏற்படுத்திக் கொடுக்க, வழி நெடுகிலும் குழுமி நின்ற மக்கள் ஐயோ! ஐயோ! என்று கதறியழுதனர். வழி நெடுகிலும் உணர்ச்சிப் பிரவாகம். "விலகுங்கள், வழி விடுங்கள், இப்பவே லேற்"

ஊர்வலப் பாதை பதினொரு மைல்கள். பூவரசு மரம் ஒன்றின் கீழ் நின்ற வயோதிபர் அண்ணார்ந்து பார்த்தார். கிளைகளில் பையன்கள். கொப்பு வளைந்து வந்து கொண்டிருந்தது.

"முறிஞ்சு விழுந்து கை கால்களை முறிக்கப் போறியள்."

"பெரியவரே போட்டார். நாங்கள் விழுந்து முறிஞ்சாலென்ன".

யாழ் . துரையப்பா மைதானத்துக்கு முன்னாலுள்ள முக்கோண வடிவிலான பகுதியை மாலை 6 மணிக்கு அடைவதாகத் திட்டம். ஆறு மணிக்கு முன்பே அங்கு பிரமுகர்கள் கூடி விட்டனர். டாக்டர் என். எம். பெரேரா, ஆர். பிரேமதாசா, செல்லையா குமாரசூரியர், எம். எஸ். செல்லச்சாமி, இரா.நெடுஞ்செழியன், நாஞ்சில் மனோகரன் ஆகி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



யோரும் இன்னும் பலரும்.

இரவு பத்து மணிக்குத் தான் ஊர்வலம் வந்து சேர்ந்தது. இறுதி யாத்திரையைக் கவர் பண்ண (செய்தி எழுத) யாழ்ப்பாணம் போன தினகரன் அலுவலக எழுத்தாளர் பொன் பாலசுந்தரம் எழுதினார் இவ்வாறு:

> யாழ்ப்பாணம் இதுவரை கண்டிராத ஜனசமுத்திரம் திரண்டிருந்தது. கர்மவீரரை இறுதி வழியனுப்பி வைத்த காட்சி கல்நெஞ்சையும் கரையச் செய்து விட்டது. அஞ்சலி உரைகள் சுருக்கமாகத் தான் இருந்தன. தமிழ் பேசும் மக்களை ஒற்றுமைப்படுத்தியவர் தந்தை. சமாதானப் பாதையிலும், சத்தியாக்கிரகத்திலும் அசையா நம்பிக்கையுடையவர் தந்தை. தமிழ் மக்களின் விடிவுக்காகத் தன்னைத் தியாகம் செய்தவர் தந்தை

என்பவை தான்அவ்வுரைகளின் பொழிப்பு.

பிரதான எதிரிக் கட்சியாகவிருந்த யு. என். பி. யின் சார்பில் உரையாற்றிய ஆர். பிரேமதாசா சொன்னார்:

> மூதறிஞர் செல்வநாயகத்தைப் போன்றவர்கள் இவ்வுலகில் மிக அரிது. சிறந்த அரசியல்வாதியான இவர் உயர்ந்த குணமும், உன்னத பண்புகளும் உள்ளவர். இந்நாட்டில் வாழும் மற்ற மக்களின் உரிமைகளுக்குப் பாதகம் ஏற்படாத வகையில் தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்காகப் போராடியவர். எல்லோராலும் மதிக்கப்படும் மனித சமுதாயத்தை ஏற்படுத்துவதே நாம் அவருக்குச் செய்யக் கூடிய இறுதி அஞ்சலி.

டாக்டர் என். எம். பெரேரா சொன்னார்:

> அமரர் செல்வநாயகம் தனி மனிதனாக மட்டும் காட்சியளிக்கவில்லை. இச் சகாப்தத்தில் புதுயுகம் ஒன்றை உருவாக்க உழைத்த பெரியவர். அவர்தமிழ் இனத்துக்கு மட்டும் தலைவரல்லர். இலங்கை அரசியல் வானில் சுடர் விட்டுப் பிரகாசிக்கும் விளக்காக அவரை நான் மதிக்கின்றேன்.

மு. சிவசிதம்பரம் சொன்னார்:

> தந்தை செல்வா தமிழ் மக்களை ஒற்றுமைப்படுத்தியவர். வடக்கு, கிழக்கு, மலையகம்,தமிழர், முஸ்லிம் என்ற வித்தியாசம் இல்லாமல் எல்லோரையும் ஓர்அணியில் சேர்த்து வழிநடத்தியவர்.



குருணாகல் பிஷப் வண. பிதா லக்ஷ்மன் விக்கிரமசிங்க சொன்னார்:

> செல்வநாயகம் மனிதத்துவத்தின் ஓர் அங்கம். அவர் ஒரு சந்தர்ப்பவாதியோ, சூத்திரதாரியோ அல்லர். அவர் ஒரு சமாதானப் பிரியர். எல்லோரையும் சமத்துவமாக நடத்தினார். எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அவர் ஒரே மாதிரியாகவே நடந்து கொண்டார்.

பண்பு, அன்பு, நேர்மை, தமிழ் மக்கள் மீது ஆழ்ந்த பற்று என்பவை எஸ். ஜே. வி. யின் சிறப்பம்சங்கள் என்று கூறிய குமாரசூரியர் தந்தையின் பண்பை விளக்க ஒரு சம்பவத்தைக் கூறினார்.

> ஒரு நாள் அறிஞர் செல்வா என்னை எனது ஐந்தாவது மாடி அலுவலகத்தில் பார்க்க வந்தார். லிப்ட் பழுதடைந்திருந்ததால் ஒவ்வொரு படியாக ஏறி வந்து கொண்டிருந்தார். அதைக்கேள்விப்பட்டதும் நான் இறங்கிப் போய் அவரை வழியில் சந்தித்தேன். நீங்கள் டெலிபோன் செய்திருந்தால் நான் கீழே வந்திருப்பேனே என்றேன். அதற்கு அவர் சொன்ன பதில், உதவி கேட்பவன் தான் உதவி செய்பவனிடம் போகவேண்டும். நேரே வந்தால் உடனடியாக விடயம் முடிந்து விடும்.

பிரதம மந்திரி சிறிமாவோ பண்டாரநாயக்க அனுதாபச் செய்தியை அனுப்பி வைத்தார். அதில் அவர் சொன்னது:

> செல்வநாயகம் எப்பொழுதும் நியாயமாக நடந்து கொள்பவர். மற்றவர்களின் கருத்துக்களுக்கும் மதிப்பளிப்பவர். அரசாங்கத்துக்கெதிராக எதிர்க் கட்சியினர் கண்டனத் தீர்மானங்களைத் தயாரிக்கும்போது கடினமான வார்த்தைகளை உபயோகித்தால் அவற்றை நீக்கிவிடுமாறு கூறிவிடுவார்.

பீட்டர் கெனமன் தனது அனுதாபச் செய்தியில் சொன்னார்:

> அவர் பாராளுமன்றத்தில் பேசும்போது சத்தமே இருக்காது. அவர் சொல்பவற்றை மிகவும் மரியாதையுடன் கேட்போம். தேசிய சிறுபான்மையினரின் குரலாக அவர் மதிக்கப்பட்டார்.

இரவு பத்து மணி. மூன்று இலட்சத்துக்கும் அதிக மக்கள் அமைதியாக நின்று கொண்டிருந்தனர். வெள்ளி ரதம் ஊர்ந்து, ஊர்ந்து வந்து சேர்ந்தது. ரதத்திலிருந்து பாய்ந்து இறங்கினார் வடிவேற்கரசன். அமிர்தலிங்கம், மாவை சேனாதிராஜா, உமா மகேஸ்வரன் உட்படப் பலரும் பாய்ந்து போய் உதயசூரியன் கொடியால் போர்த்தப்பட்ட

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பேழையைத் தூக்கிச் சுமந்தனர். சந்தனக் கட்டை அடுக்கிய சிதையில் பேழையை வைத்ததும் பிஷப் அம்பலவாணர் சிதைக்குக் கொள்ளி வைத்தார்.

*ஐயா! ஐயா! ஐயா! ஒவென்ற அழுகைக் குரல்.*

*புகை கிளம்பியது.*

*தீச் சுவாலை துள்ளி எழுந்தது.*

"நீங்கள் இறக்கவில்லை ஐயா! எங்களுடன் வாழ்கிறீர்கள்."

எல்லா உள்ளங்களையும் உலுக்கியது அந்த அசரீரிக் குரல்.

2

# தந்தையின் ஆரம்ப வாழ்கை

**தமிழ் மக்களுக்காக**

தந்தை செல்வாவின் 99 வது பிறந்த தினம் 1997 மார்ச் 31ல் இலங்கையில் தமிழ் பேசும் மக்கள் வாழும் பிரதேசங்களிலெல்லாம் பரவலாகக் கொண்டாடப்பட்டது. யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரியில் நடத்தப்பட்ட விசேஷ வழிபாட்டிற்கு விசேஷ முக்கியத்துவம் உண்டு. தந்தை செல்வா ஐந்து ஆண்டுகள் கற்ற கல்லூரி சென். ஜோன்ஸ். வழிபாட்டின்போது அருளுரை வழங்கிய தென்னிந்தியத் திருச்சபையின் முன்னாள் யாழ்ப்பாண ஆயர் அதிவண. டி. ஜே. அம்பலவாணர் தந்தை செல்வாவின் சிதைக்குத் தீ மூட்டியவர். அவர் தன் அருளுரையில் தந்தை செல்வாவின் மூன்று முக்கிய குணாதிசயங்களைக் குறிப்பிட்டார்.

1. தமிழர் விடுதலைக்காக, இறுதி வரை ஊழலற்ற நேர்மையான அரசியல் வாழ்க்கையைக் கடைப்பிடித்தவர்.
2. தமிழ் மக்கள் அமைதியாக, சுதந்திரமாக வாழவேண்டும் என்ற நோக்கத்துக்காக வாழ்ந்தவர்.
3. ஒரு கிறிஸ்தவராக இருந்தும் தமிழ்க் கலாசாரத்தை விரும்பியவர்.

இந்த மூன்று அம்சங்களுமே தந்தையின் தனித் தன்மைகள். சாமுவேல் ஜேம்ஸ் வேலுப்பிள்ளை செல்வநாயகம் மலாயாவிலுள்ள (இப்போது மலேஷியா) இப்போ நகரில் 1898 மார்ச் 31ல் பிறந்தார். இப்போ நகருக்கு ஒரு சிறப்புண்டு. அதுதான் அந்த நகரின் சுத்தம்,

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தூய்மை. தந்தை இறந்த பின் பாராளுமன்றத்தில் வழக்கம் போல் அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது. அத் தீர்மானத்தின் போது முன்னாள் வர்த்தக அமைச்சர் லலித் அத்துலத்முதலி உரையாற்றினார். அவர் இப்போ நகரின் தூய்மையையும், செல்வநாயகத்தின் தூய்மை யான வாழ்க்கையையும் ஒப்பிட்டுப் பேசினார். அத்துலத்முதலி சொன்னார்:

> மலேஷியாவின் மிகவும் தூய்மையான நகரம் இப்போ. அங்கு பிறந்தவர் திரு. செல்வநாயகம். அவரின் வாழ்க்கையும் மிகவும் தூய்மையாக இருந்தது. எமது காலத்தில் வாழ்ந்த அரசியல்வாதிகளின் வாழ்க்கையில் அத்தகைய தூய்மையைக் காணமுடியாது.

இப்போது நடப்பது போலத்தான் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் இலங்கைத் தமிழர் பணம் பண்ணுவதற்கு வெவ்வேறு நாடுகளுக்குப் போனார்கள். மலேயா அப்போது பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் இருந்தது. அரசாங்க உத்தியோகம் பார்க்க அந்நாட்டுக்குப் போன வர்கள் அதிகம். தந்தையின் தந்தை, ஜேம்ஸ் விசுவநாதன் வேலுப் பிள்ளை, தொல்புரத்தைச் சேர்ந்த ஓர் ஆசிரியர். ஒப்பந்த வேலை செய்ய மலேயா போனார். தனது மனைவியையும் அழைத்துக் கொண்டுபோய் இப்போ நகரில் குடும்பம் நடத்தினார். மனைவியின் பெயர் 'ரியற் அன்னம்மா கணபதிப்பிள்ளை.,

இப்போவில் அவர்களின் மூத்த மகன் பிறந்தான். அந்தப் பையன் தான் செல்வநாயகம். 1900 ஆண்டில் அக்குடும்பம் தைப்பிங் சென்று குடியேறியது. அங்கு அவர்களுக்கு இரண்டு ஆண்களும், ஒரு பெண் ணும் பிறந்தனர். ஏர்னஸ்ட் பொன்னுத்துரை, எட்வேர்ட் ராஜசுந்தரம் என்பது ஆண் பிள்ளைகளின் பெயர்கள். அவர்களின் குடும்பம் கல்வி யில் அக்கறையுடையது. குறிப்பாகத் தந்தை செல்வாவின் தாயாரின் குடும்பம் கல்வியில் ஆர்வமுடையது. அக்குடும்பத்தைச் சேர்ந்த அரிய நாயகம், முதலியார் அப்பாத்துரை, வண. எஸ். கே. பொன்னையா ஆகியோர் மிகவும் செல்வாக்குள்ளவர்களாக இருந்தனர். அரியநா யகத்தின் மகன் ஆனந்தநாயகம் கொழும்பு சென். தோமஸ் கல்லூரியின் அதிபராகப் பின்பு பணி புரிந்தவர். எஸ், கே. பொன்னையா இலண்டன் பல்கலைக்கழகப் பட்டம் பெற்ற முதலாவது இலங்கையர். பின்பு இங்கிலாந்து திருச்சபையின் போதகராக இருந்தவர். சிலாபத்தின் கொரியா குடும்பத்தினரின் நண்பர். செல்வாக்கு மிக்க இலங்கக்கோன், பண்டாரநாயக்க குடும்பங்களினால் உயர்வாக மதிக்கப்பட்டவர். சுருக்கமாகச் சொன்னால் ஒரு பெரிய புள்ளி.



தமது பிள்ளைச் செல்வங்களும் படிக்க வேண்டும் என்று ஆசைப் பட்டனர் வேலுப்பிள்ளை தம்பதியினர். மலேயாவில் அக்காலத்தில் பாடசாலைகள் குறைவு. இருந்த சில பாடசாலைகளும் அரச குடும் பத்தினரையும், பெரும் பணக்காரரின் பிள்ளைகளையுமே அனும தித்தன. மலேயாவுக்குப் போன பலர் தமது பிள்ளைகளை யாழ்ப் பாணத்துக்கு அனுப்பிப் படிப்பித்தனர். வேலுப்பிள்ளை தம்பதி யினரும் அப்படியே செய்தனர். செல்வநாயகத்துக்கு நாலு வயதாகி யதும் அவரையும் இரண்டு சகோதரர்களையும், சகோதரியையும் தாயுடன் தன் கிராமமான தெல்லிப்பளைக்கு அனுப்பினார் வேலுப் பிள்ளை. மலேஷியாவிலிருந்து கப்பலில் அனுப்பினார். அவர்கள் கொழும்பிலிருந்து காங்கேசன்துறைக்கும் கப்பலிலேயே போனார்கள். அக் காலத்தில் ரயில் சேவை ஆரம்பிக்கப்படவில்லை.

**பெண் வேடம் பூண்டு....**

வேலுப்பிள்ளை குடும்பத்தினர் கிறிஸ்தவர்கள். புரட்டஸ்தாந்துக் கிறிஸ்தவர்கள். தென்னிந்திய திருச்சபையைச் சேர்ந்தவர்கள். தெல் லிப்பளையிலிருந்த அமெரிக்க மிசன் பாடசாலையில் பாலர் வகுப் பிலிருந்து 5ம் வகுப்பு வரை செல்வநாயகம் படித்தார். அப்பாடசாலை யூனியன் கல்லூரியாக பின்பு உயர்த்தப்பட்டது. தெல்லிப்பளை ஒரு கிராமம். தனது இளமையை அக்கிராமத்தில் கழித்ததால் தந்தை செல்வா தன்னை ஒரு கிராமத்தவன் என்றே அழைப்பார். அவ்வாறு கூறுவதில் பெருமையும் கொண்டார். யூனியன் கல்லூரி வாழ்க்கை அவரைத் தமிழ்க் கலைகளுக்கும், தமிழ்க் கலாசாரத்துக்கும் அறிமுகம் செய்து வைத்ததோடு அவற்றில் பற்றுக் கொள்ளவும் செய்தது.

செல்வநாயகத்துக்கு நாடகத்திலும் இசையிலும் அதிக பிடிப் புண்டு. பாடசாலை நாடகங்களில் பெண் வேடம் பூண்டு நடித்திருக்கி றார். தெல்லிப்பளையிலும், அயலூர்களிலும் நடந்த இந்துக் கோவில் திருவிழாக்களுக்குப் போகும் பழக்கத்தை அவர் உருவாக்கிக் கொண் டார். திருவிழா ஆரம்பிக்கு முன் நடக்கும் நாதஸ்வரக் கச்சேரிகளின் போது கலைஞர்களுக்கருகே போய் உட்கார்ந்து கொள்வார். வடக்கு வீதி தவில் சமாவின் போது முன் வரிசையில் போய் நின்று கொள்வார். இந்தப் பழக்கம் அவர் வாழ்க்கை முழுவதும் தொடர்ந்தது. அறுபதாம், எழுபதாம் ஆண்டுகளில் கொழும்பில் நடந்த வேல் விழாவுக்குக் காரைக்குறிச்சி அருணாசலம் வந்த சந்தர்ப்பங்களில் எல்லாம் வெள் ளவத்தை மாணிக்க விநாயகர் ஆலய மண்டபத்தில் போய் அமர்ந்து

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கச்சேரியை ரசித்தவர் அவர். காலும் கையும் தாளம் போடத் தவறுவதேயில்லை.

ஐந்தாம் வகுப்புக்குப் பின்பு அவர் யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரியில் சேர்ந்து சீனியர் கேம்பிரிட்ஜ் பரீட்சைக்குப் படித்தார். அங்கு அவர் ஐந்து ஆண்டுகள் கற்றார். சென். ஜோன்சும் தென் இந்தியத் திருச்சபையைச் சேர்ந்த பாடசாலை. அங்கு கற்ற காலத்தில் யாழ்ப்பாணத்தின் மீது அவருக்கு அளவற்ற பிடிப்பு ஏற்பட்டது.

நான் யாழ்ப்பாணத்தான் என்று அவர் எப்பொழுதும் பெருமையுடன் சொல்வார். கொழும்பில் கொள்ளுப்பிட்டியில் வாடகை வீட்டில் குடியிருந்த தந்தை தன்னை என்றுமே கொழும்பான் என்று நினைத்ததில்லை. கொழும்பான் என்று சொல்லிப் பெருமைப்பட்டதில்லை. கொழும்பில் வீடு வாங்கவில்லை. கொழும்பில் வீடு வாங்குவதை அவர் விரும்பவுமில்லை. அதற்கு தந்தை சொன்ன காரணம்: "கொழும்பில் வீடு வாங்கினால் பிள்ளைகள் தங்களை கொழும்பார் என்று எண்ணி விடுவார்கள். தங்களின் அடியை மறந்து விடுவார்கள்." கொழும்பான் என்று சொல்வதைத் தவிர்ப்பதற்காக யாழ்ப்பாணத்தான் என்று அவர் சொன்னாரே தவிர யாழ்ப்பாண வெறியோ, யாழ்ப்பாணத் தலைக்கனமோ அவருக்கு இருக்கவில்லை. இலங்கையின் எப்பாகத்தில் பிறந்தாலும் தமிழ் பேசும் மக்கள் அனைவரும் சகோதரர்கள் என்பது தந்தையின் அசையாத நம்பிக்கை.

சென். ஜோன்சில் படித்துக் கொண்டிருக்கையில் மாமனாரான எஸ். கே. பொன்னையாவின் பொறுப்பில் தந்தை செல்வா விடப்பட்டார். கல்வியில் தன் மருமகன் காட்டிய ஆர்வத்தை உணர்ந்து கொண்ட எஸ். கே. பொன்னையா செல்வாவை சென். தோமஸ் கல்லூரியில் சேர்த்தார். இப்போது கல்கிசையிலுள்ள சென். தோமஸ் கல்லூரி அப்பொழுது முகத்துவாரத்தில் இருந்தது. அது இங்கிலாந்து திருச்சபையைச் சேர்ந்த பாடசாலை. இங்கிலாந்து திருச்சபை இப்பொழுது இலங்கைத் திருச்சபை என்று அழைக்கப்படுகிறது. அப்பொழுது கொழும்பில் தென்னிந்திய திருச்சபைக்குரிய தேவாலயமோ பாடசாலையோ இல்லை. செல்வா கொழும்பில் இலங்கைத் திருச்சபையின் தேவாலயத்துக்கே போனார். ஆனால், தென்னிந்தியத் திருச்சபை கொழும்பில் ஒரு வழிபாட்டுத் தலத்தை அமைத்ததும் அங்கு சென்று வழிபடத் தொடங்கினார். பண்டாரநாயக்க குடும்பமும் பொன்னையா குடும்பமும் நட்புக் கொண்டவை. பொன்னையாவின் மேற்பார்வையில் வளர்ந்த செல்வா எஸ். டபிள்யு. ஆர். டி. யுடன் பரிச்சயமானார்.



நான் தினகரனில் பயிற்சியாளனாகச் சேர்ந்த சில மாதங்களுக்குப் பின்தான் பண்டா-செல்வா பேச்சுவார்த்தை நடந்தது. எனது சிரேஷ்ட பத்திரிகையாளரான செல்லப்பா நடராசா எஸ். ஜே. வியிடம் சிறப்புப் பேட்டி ஒன்றை எடுத்தார். 'செல்வா நினைவில் பண்டா' என்பது அதன் தலைப்பு. சென். தோமஸ் கால வாழ்க்கைக்கு அப்பேட்டி மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. அப்பேட்டியில் இடம் பெற்ற மூன்று கேள்விகளும், விடைகளும் வருமாறு:

கேள்வி : பண்டாரநாயக்க பற்றி உங்கள் மனதில் ஆழப் பதிந்த விடயம்?

செல்வா : பண்டாரநாயக்கவின் வாய் வீச்சு.அப்போதே நன்றாகப் பேசுவார். எல்லா பேச்சுப் போட்டிகளிலும், விவாதங்களிலும் பங்கு பற்றுவார்.

கேள்வி : நீங்கள் பண்டாரநாயக்கவுடன் நேரடியாக எந்தப் பேச்சுப் போட்டியிலும் மோதவில்லையா?

செல்வா : இல்லை. அப்பொழுதெல்லாம் எனக்குப் படிப்பைத் தவிர எதிலும் ஆர்வம் கிடையாது.படித்து முன்னுக்கு வரவேண்டும் என்பதே என் இலட்சியம். பண்டாவுக்கு அரசியலிலும், சமூக சீர்திருத்தத்திலும் ஆர்வம் இருந்தது.

கேள்வி : நீங்கள் பண்டாரநாயக்கவுடன் அரசியல் பேசியதுகிடையாதா?

செல்வா : இல்லை. எங்களுக்கிடையே நெருக்கமான உறவு எதுவும் இருக்க வில்லை.கண்டால் சிரிப்போம்,ஹலோ சொல்லுவோம்.அவ்வளவு தான்.

**காரியம் சாதித்தல்**

எதை எடுத்தாலும் அதில் அசையாத ஈடுபாடு காட்டுபவர் செல்வா. அவரின் காலத்தில் படித்தவர்களும், அவரின் ஆசிரியர்களும் செல்வநாயகத்தைப் பற்றிக் கூறியவை இவை:

> கெட்டிக்காரன். எதையும் பகுத்து அறியும் கூர்மையான புத்தியை உடையவர். கடினமாகப் படிப்பவர். கடின உழைப்பாளி. அப்பவும் இப்ப மாதிரி நோஞ்சான்தான் ஆழ்ந்து சிந்தித்து சுருக்கமாகப் பேசுபவர். நடைமுறைச் சாத்தியமான வழிகளைப் பின்பற்றுபவர். காரியம் சாதிக்கத் தெரிந்தவர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கடைசி இரண்டு பண்புகளுக்கும் ஓர் உதாரணம். தந்தை செல்வாவுக்கு யோகப் பயிற்சியளித்த ஈ. சபாரத்தினம் கூறியது: அரசாங்கத் துறையில் பணிபுரிந்த சபாரத்தினத்துக்குப் பதவி உயர்வு கிடைத்திருக்க வேண்டும். கிடைக்கவில்லை. தந்தை செல்வாவிடம் சொன்னார். சரி, நாளைக்கு என்னோடு வாருங்கள். அப்பொழுது எம். திருச்செல்வம் பதவி விலகி விட்டதால் ஆர். பிரேமதாசா உள்ளூராட்சி அமைச்சராக இருந்தார். கோட்டையிலுள்ள ஹேமாஸ் பில்டிங்கில் பிரேமதாசாவின் அலுவலகம். செல்வநாயகம் வருவதைக் கண்டதும் பிரேமதாசா எழுந்து விட்டார். செல்வநாயகம் விடயத்தைச் சொன்னார். பிரேமதாசா நிரந்தரச் செயலாளருக்கு டெலிபோன் செய்து சபாரத்தினத்தின் பதவி உயர்வு பற்றிச் சொன்னார்.

"சரி கடிதம் வரும். நீங்கள் போங்கள்" என்றார் பிரேமதாசா.

செல்வநாயகம் சொன்னார். "நான் இங்கே இருந்தால் உங்கள் வேலை தடைப்படும். நான் போய் வெயிட்டிங் ரூமில் இருக்கிறேன். கடிதம் வந்ததும் என் கையில் தந்து விடுங்கள்." பிரேமதாசாவின் பதிலுக்குக் காத்திராமல் வெயிட்டிங் ரூமுக்குப் போய் விட்டார். அங்கே போனதும் சபாரத்தினத்திடம் சொன்னார். "உவங்கள் உப்புடித்தான். நாங்கள் போனதும் எல்லாத்தையும் மறந்து போவான்கள். இருந்து கையிலை கடிதத்தை வாங்கிக் கொண்டு போக வேணும்". அரை மணித்தியாலத்தில் பதவி உயர்வுக் கடிதம் கிடைத்தது.

இருவரும் போய்க் காரில் ஏறினார்கள். சிவசிதம்பரத்தின் வீட்டுக்குக் காரைச் செலுத்தச் சொன்னார் செல்வநாயகம். கார் அங்கு போய் நின்றது. ஆட்களை அழைத்து "சிவசிதம்பரம் இருக்கிறாரா?" என்று கேட்டார் செல்வநாயகம். இருப்பதாகச் சொன்னார்கள். சபாரத்தினத்தை இறங்கச் சொன்னார்.

"சரி நீங்கள் போய் சிவசிதம்பரத்திடம் கடிதத்தைக் காட்டி நீங்கள் விரும்பிய இடத்துக்குப் போடச் செய்வியுங்கோ?"

"அப்ப நீங்கள்?

"தேவையில்லை. நான் உங்களைக் கொண்டு வந்து விட்ட செய்தி இம்மட்டும் போயிருக்கும். அது போதும்."

சபாரத்தினம் உள்ளே போனதும் சிவசிதம்பரம் கேட்டார்.

"பெரியவர் கொண்டு வந்து விட்டவரோ? "

"ஆம்."



**இளமைக் காலம்**

சென். தோமஸ் கல்லூரியில் ஒன்றரை ஆண்டுகள் கற்று இன்ரர் சயன்ஸ் பரீட்சையில் செல்வா சித்தி எய்தினார். தன்னுடைய தம்பிகளைப் படிப்பிப்பதற்காக யாழ்ப்பாணக் கல்லூரியில் 1917ல் ஆசிரியராகச் சேர்ந்தார். அங்கே சீனியர் கேம்பிரிஜ் வகுப்பில் கற்பிக்கும் போது இலண்டன் பல்கலைக்கழக பி.எஸ்.சி. விஞ்ஞானப்பட்டப் பரீட்சைக்கு வெளிவாரி மாணவனாகத் தோற்றி 1918-ம் ஆண்டில் சித்தி எய்தினார். மலேஷியாவில் தகப்பனார் சுகவீனமுற்றிருந்ததால் அவரைப் பார்க்கப் போனார். தகப்பனுடன் ஒரு மாதம் தங்கியிருந்து விட்டு திரும்பினார். அவர் திரும்பி வந்து சில வாரங்களில் தகப்பன் இறந்துவிட்டார். சிறு வயதிலிருந்தே தகப்பன் இல்லாமல் வாழ வேண்டிய நிலைக்கு செல்வா தள்ளப்பட்டார்.

கொழும்பு திரும்பியதும் சென். தோமஸ் கல்லூரியிலேயே அவருக்கு ஆசிரியர் வேலை கிடைத்தது. அப்போது அவருக்கு வயது 20. அவருக்கு நல்லாசிரியர் என்ற பெயர் நிலைத்திருந்ததாக சென். தோமஸில் நீண்ட காலத்துக்குப் பின்பு படித்தவர்கள் சொல்கிறார்கள். ஒரேயொரு சம்பவம் மட்டும் பதியப்பட்டுள்ளது. தந்தை செல்வாவின் இளைய சகோதரர் இராஜசுந்தரத்துக்கு கடும் சுகவீனம். அவரைப் பார்ப்பதற்குத் தெல்லிப்பளைக்குப் போக லீவு கேட்டார் எஸ். ஜே. வி. லீவு மறுக்கப்பட்டது. உடனே அவர் பதவியை இராஜினாமாச் செய்து விட்டு ஊருக்குப் போனார். சுகவீனமுற்றுள்ள என் இளைய சகோதரனைப் போய்ப் பார்க்க வேண்டியது என் கடமை. அதைப் போன்றே, பாடசாலை மாணவர்களுக்குப் பரீட்சை நெருங்கும் சமயம் படிப்பிப்பதும் முக்கிய கடமைதான். சுகவீனமுற்றிருந்த தம்பியைப் போய்ப் பார்ப்பது இவ்விரண்டு கடமைகளிலும் பிரதானமாக எனக்குத் தோன்றியது. அதனால், பதவியை இராஜினாமாச் செய்து விட்டுத் தம்பியைப் பார்க்கப் போனேன் என்று 1947-ல் பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவாகியதும் தினகரனுக்கு அளித்த பேட்டியொன்றில் எஸ். ஜே. வி. கூறியுள்ளார். இராஜசுந்தரம் தனது 15வது வயதில் இறந்தார்.

தம்பியின் மரணச்சடங்கு முடிந்து திரும்பியதும் கொழும்பு வெஸ்லிக் கல்லூரியில் ஆசிரியராகச் சேர்ந்தார். அவரிடம் அங்கு கற்ற சில மாணவர்களைச் சந்தித்திருக்கிறேன். அவரைப்பற்றி எல்லாருமே புகழ்ந்து பேசினார்கள். இச் சந்திப்புக்கள் என் இளமைப் பிராயத்தில் இடம் பெற்றதால் விரிவாக நான் அவர்களிடம் எதையும் கேட்கவில்லை. தந்தையின் கதையை எழுத வேண்டி வரும் என அக்காலத்தில்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நான் சிந்திக்கவுமில்லை. நான் சந்தித்த எஸ். ஜே. வி. யின் மாணவர்களில் டாக்டர். ஈ. டபிள்யு . அதிகாரம் ஒருவர். அவர் கல்விமான். தத்துவஞானி. ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழக உபவேந்தராக இருந்தவர். பல பௌத்த பாடசாலைகளை ஆரம்பித்தவர். இலங்கை பிரம்மஞான சங்கத்தின் தலைவராக இருந்தவர்.

**நல்லாசிரியர்**

தத்துவஞானி கிருஷ்ணமூர்த்தி இலங்கைக்கு விஜயம் செய்த சமயம் அவரைப் பேட்டி காண்பதற்கு எனக்குச் சந்தர்ப்பம் பெற்றுக் கொடுத்தவர். எல்லாவற்றுக்கும் மேலாக தமிழருக்கு நியாயம் வழங்கப்பட வேண்டும் என்று பேசியும், எழுதியும் வற்புறுத்தி வந்தவர். நான் எஸ். ஜே. வி. யின் மாணவன் என்று ஒருமுறை என்னிடம் பெருமையாகச் சொன்னார். அப்பொழுது அவரிடம் நல்லாசிரியர் எஸ். ஜே. வி. பற்றிய தகவல்களைப் பெற்றுக் கொள்ளத் தவறி விட்டேன்.

இதை நான் அண்மையில் பிரபல சிங்களப் பத்திரிகையாளர் குறுப்புவிடம் கூறினேன். அடுத்த நாள் சிறிய சிங்களப் பிரசுரம் ஒன்றை அவர் கொண்டு வந்து தந்தார். அந்நூலின் பெயர் 'அகின்சாவே உல் பற்ற' அதன் அர்த்தம் களங்கமின்மையின் கூற்று. டாக்டர். ஈ. டபிள்யு, அதிகாரத்தின் வாழ்க்கைச் சரிதை என்ற மாற்றுப் பெயரும் கொடுக்கப்பட்டுள்ளது. "சிலுமின"வார இதழில் பணி புரியும் தேனகம சிறிவர்த்தன என்ற பத்திரிகையாளரால் எழுதப்பட்டது.

அதிகாரத்தின் வெஸ்லி கல்லூரி வாழ்க்கையைப் பற்றி எழுதிய சிறிவர்த்தன இதைக் கூறுகிறார்:

> கேம்பிரிட்ஜ் சீனியர் வகுப்பில் அதிகாரம் ஒரு கவர்ச்சிமிக்க ஆசிரியரைச் சந்தித்தார். அவருடைய பெயர் எஸ். ஜே. வி. செல்வநாயகம். அவர் பின்பு ஒரு சிறந்த வழக்கறிஞராகவும், அதன் பின்பு தமிழரசுக் கட்சியின் தலைவராகவும் வந்தார். அதிகாரம் அந்த ஆசிரியரை மிகவும் விரும்பினார். அவர் மாணவர்களுடன் மிகவும் அன்பாகப் பழகினார். அவர் மிகவும் கெட்டிக்கார ஆசிரியர். கணிதமும், விஞ்ஞானமும் கற்பித்தார். அவர் எல்லா மாணவர்களையும் ஒரே மாதிரியாக நேசித்தார். சிங்கள, தமிழ், முஸ்லிம், பறங்கி மாணவர்களை ஒரே மாதிரியாக நடத்தினார். அவர் வகுப்பில் வகுப்பு வாதம் பேசுவதில்லை. வகுப்பு வாதம் பேசி மாணவர் மனதைக் கெடுக்கவில்லை. மாணவர்களுக்கிடையே நட்புறவையும், சகோதரத்துவத்தையும் வளர்ப்பதற்கு அவர் எடுத்த முயற்சிகள் அதிகாரத்தை வெகுவாகக் கவர்ந்தன. அதிகாரத்தின் திறனை செல்வநாயகம் ஆரம்பத்திலேயே இனம் கண்டு கொண்டார். கேம்பிரிஜ் சீனியர் பரீட்சையில் திறமைச் சித்தி அடைவதற்கு நீங்கள் கடினமாக உழைக்க வேண்டும். நீங்கள் காலை 7.30 மணிக்கு வந்தால் உங்களுக்குக் கணிதம் சொல்லித் தருவேன் என்று செல்வநாயகம் ஒரு நாள் சொன்னார். அன்று முதல் அதிகாரம் பாடசாலைக்கு காலையில் போனார். ஒருவருடத்துக்கு தினமும் ஒரு மணித்தியாலத்துக்கு மேல் அதிகாரத்துக்குச் செல்வநாயகம் கணிதம் படிப்பித்தார்.



கேம்பிரிஜ்ட் சீனியர் வகுப்பில் படித்துக் கொண்டிருந்த காலத்தில் அதிகாரம் ஒருநாள் தலை சீவிக்கொண்டிருந்தார். வழக்கமாக கன்ன உச்சி பிரிக்கும் அவர் அன்று நடு உச்சி பிரிக்கும் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தார். அதை அவதானித்த அவரின் இளைய சகோதரி தாயிடம் போனார். "அம்மா! வாருங்க. உங்களுடைய செல்ல மகன் தலை வாருவதைப் பாருங்க." சொற்ப நேரம் நின்று அவதானித்து விட்டு, "என்ன மகனே! இன்றைக்கு வேறு விதமாகத் தலை இழுக்கிறாய்? பெட்டைகள் தான் நடு உச்சி பிரிப்பார்கள்" என்று தாய் சொன்னார். அதிகாரத்துக்கு வெட்கம் வந்தது. ஒன்றுமே பேசவில்லை. கண்ணாடியைப் பார்த்தார். "பெட்டைகள் தான் இப்படித் தலை இழுப்பார்கள்" என்றார் தாய் மறுபடியும். இளைய சகோதரி கிளு, கிளு என்று சிரித்து விட்டார். தாயைக் கூட்டி வந்தது யார் என்பது அதிகாரத்துக்குப் புரிந்து விட்டது.

"அம்மா! நான் சொல்லுவேனே ! செல்வநாயகம் மாஸ்டரைப் பற்றி, அவர் நடு உச்சிதான் பிரிக்கிறார்." "அவர் பொம்பிளையா?"

"நீயும் ஒரு செல்வநாயகமாக மாறப் போகிறாயா?" என்று கேட்டார் தாய்.

அதிகாரம் பதில் சொல்லவில்லை. ஆனால் தனக்குள் சொல்லிக் கொண்டார். நான் அதிகாரமாகத் தான் இருப்பேன். செல்வநாயகமாக மாறமாட்டேன். ஆனால், நான் இனிமேல் நடு உச்சிதான் பிரிப்பேன் என்று. அதிகாரம் மட்டுமல்ல. அதிகாரத்தின் வகுப்பில் படித்த அதிகமான கெட்டிக்கார மாணவர்களும் செல்வநாயகத்தைப் போலத்தான் தலை வாரினார்கள்.

அது வெஸ்லி கல்லூரியில் பெரிய பகிடி.ஏன் "செல்வநாயகம் போல் தலை இழுக்கிறாய்? " என்று ஓர் ஆசிரியர் கேட்டார். "அப்படி இழுத்தால் என்ன?" என்று திருப்பிக் கேட்டார் அதிகாரம், சிரித்த படி. செல்வநாயகம் ஆசிரியரை எல்லா மாணவர்களும் விரும்பினார்கள். அவர் ஒரு நல்ல ஆசிரியர். முன் மாதிரியான ஆசிரியர். மாணவர்களை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நேசித்து வழி நடத்தியவர். அதிகாரத்தைப் போல் நடு உச்சி வகுத்த மற்றொரு மாணவர் ஜோசப். அவன் ஒரு முறை சொன்னான் :

> செல்வநாயகத்திடம் நிறைய நல்ல குணங்கள் உள்ளன. தலை வாருவதை மட்டும் நாங்கள் கடைப்பிடிக்கவில்லை. மற்ற எல்லாக் குணங்களையும் பின் பற்றி ஒழுக முயலுகிறோம்.

**அரசியல் நேர்மை**

தந்தை செல்வா ஒரு கிறிஸ்தவர். அரசியல் இலாபம் கருதி அவர் மதம் மாறவில்லை. தான் கிறிஸ்தவர் என்பதை மறக்கவுமில்லை. வித்தியலங்கார பல்கலைக்கழக சிங்கள- பௌத்த சங்கத்தின் முன்னாள் தலைவர் வண. ஹேவல் பொலரத்னசார, டெய்லி நியூஸ் பத்திரி கைக்குக் காரசாரமான கடிதம் ஒன்றை எழுதியிருந்தார். கிறிஸ்தவர் ஒருவர் எவ்வாறு தமிழர்களின் தலைவராக இருக்க முடியும் என்று அக்கடிதத்தில் அவர் கேட்டிருந்தார். அக்கடிதத்திற்கு செல்வா எழுதிய பதில் இது:

> எனது மதம் கிறிஸ்தவம் என்பதைச் சுட்டிக்காட்டினீர்கள். பெரும் பாலானோர் இந்துக்களாகவுள்ள தமிழர்களுக்கும் எனக்கும் அதிகம் தொடர்பில்லை என்பதை அதனால் காட்ட முயன்றீர்கள். என்னையோ அல்லது மற்றக் கிறிஸ்தவர்களையோ தலைவர் பதவிகளை ஏற்குமுன் மதம் மாறும்படி கேட்காதது தமிழ் இந்துக்களின் பெருமைக்குச் சான்று பகர்கிறது.

தந்தை செல்வா என்றுமே இந்துவாகத் தன்னைக் காட்டிக் கொள்ள முயற்சி எடுக்கவில்லை. ஒரு நல்ல சம்பவம். 1952 ம் ஆண்டு பொதுத் தேர்தல். மூன்று ஆண்டுகளுக்கு முன் ஆரம்பிக்கப்பட்ட தமிழரசுக் கட்சி போட்டியிட்ட முதலாவது பொதுத்தேர்தல் அது. நியமனப் பத்திரம் தாக்கல் செய்ய யாழ்ப்பாணக் கச்சேரிக்குப் போவ தற்கு முன்பு தமிழரசுக் கட்சி வேட்பாளர்கள் நல்லூர்க் கந்தசாமி கோவில் காலைப் பூசைக்குப் போனார்கள். எல்லாருடைய பெயர்களி லும் விஷேட அர்ச்சனைகள் செய்யப்பட்டன. செல்வநாயகத்தின் பெயரிலும் அர்ச்சனை நடந்தது. அர்ச்சனை முடிந்ததும் குருக்கள் வழக்கம் போல அர்ச்சனை செய்தோருக்கு காளாஞ்சி கொடுத்தார். செல்வநாயகம் அதைப் பெற்றுக் கொண்ட போது பத்திரிகைகளில் பிரசுரிப்பதற்காக அக்காட்சியைப் படம் எடுக்க வேண்டும் என்று சிலர் சொன்னார்கள். "படம் எடுக்க வேண்டுமானால் எடுங்கள். ஆனால்



பத்திரிகையில் போட வேண்டாம்" அப்படிச் செய்வது மக்களை ஏமாற்றுவதாக அமையும், அது வேண்டாம் என்று திடமாகச் சொல்லி விட்டார் எஸ். ஜே. வி.

1952 தேர்தலில் அவர் தோற்கடிக்கப்பட்டார். அதற்குக் காரணங்கள் வேறு. அவரின் கிறிஸ்தவ மதமல்ல. எண்பத்தெட்டுச் சதவீதம் இந்துக்களைக் கொண்ட காங்கேசன்துறைத் தொகுதி மக்கள் 1947 முதல் 1952 வரையும் அதன் பின்பு 1956 முதல் 1977 வரையும் தமது பிரதிநிதியாக அவரைத் தெரிவு செய்துள்ளனர். 1960ம் ஆண்டில் இரண்டு தேர்தல்கள் நடந்தன. அக்காலத்தில்தான் கோவில்களுக்குள் அரிசன மக்களை அனுமதிக்கும் போராட்டம் யாழ்ப்பாணத்தில் உச்ச கட்டத்தில் இருந்தது. மாவிட்டபுரம் கந்தசாமி கோவிலில் பெரிய போராட்டமே நடந்தது. சி. சுந்தரலிங்கம் கோவில் நிர்வாகத்துடன் சேர்ந்து கொண்டு கோவிலை அரிசன மக்களுக்குத் திறந்து விடுவதை எதிர்த்தார். மாவிட்டபுரம் காங்கேசன்துறைத் தொகுதிக்குள் இருக் கிறது. செல்வநாயகம் அத்தொகுதியின் எம். பி. யாக இருந்தும் அத்தகராறில் ஈடுபடவில்லை. அப்பிரச்சினையை இந்துக்களே தீர்க்க வேண்டும் என்று அடித்துச் சொல்லி விட்டார்.

1960 தேர்தல்களில் சுந்தரலிங்கம், அதைப் பயன்படுத்தி செல்வ நாயகத்துக்கு எதிராகப் பிரசாரம் செய்தார். வெள்ளி வேலையும், மரச்சிலுவையையும் கொண்டு போவார் சுந்தரலிங்கம். நாலைந்து பேர் கூடி நிற்பதைக் கண்டால் போதும், அவர்களிடம் போய் வேலா? சிலுவையா? எது வேண்டும் உங்களுக்கு? என்று கேட்டபடி வேலை யும், சிலுவையையும் காட்டுவார். இரண்டு தேர்தல்களிலும் மக்கள் எஸ். ஜே. வி. யையே தெரிவு செய்தனர்.

ஒரு கிறிஸ்தவரை இந்துக்கள் தங்கள் தலைவராக மட்டுமல்ல தந்தையாகவும் ஏற்றதேன்? இதை மிகவும் ஆழ்ந்து சிந்தித்த பின்பே தந்தை செல்வா வாழ்க்கைச் சரிதையை எழுத ஆரம்பித்தேன். வாழ்க்கை வரலாற்றில் வாழ்க்கைக் குறிப்பு, பிறந்த, வளர்ந்த, படித்த சூழல், குணாதிசயங்கள், அவர் வாழ்ந்த கால வரலாற்றின் போக்கு, அது அவர்மீது ஏற்படுத்திய பாதிப்பு, அப் பாதிப்பை அவர் எதிர் கொண்ட விதம், அதனால் வரலாற்றில் ஏற்பட்ட பாதிப்பு, அப் பாதிப்பின் விளைவுகள், ஆசிரியர் மதிப்பீடு முதலிய அம்சங்கள் இடம் பெறுதல் அவசியம். எல்லாரும் அவர்கள் பணியாற்றிய மக்களின் தந்தை ஆவதில்லை. செல்வநாயகம் அவரின் மக்களால் தந்தையாக ஏற்றுக் கொள்ளப்பட்டார். அதற்கு அவரின் சிறப்புக் குணங்கள்தான் காரணம். நேர்மை. பண விடயங்களில் அப்பழுக்கற்ற தன்மை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சிந்தித்து, பிரார்த்தித்து எடுத்த முடிவை கடைப்பிடிக்கும் இயல்பு.

தந்தையின் இப் பண்புகளை வெளிக் கொணரும் சம்பவங்களை சந்தர்ப்பம் வரும்போது கொடுத்துக்கொண்டே போவேன். இறப்ப தற்கு முன்பு தந்தை கடன் வாங்கிய சம்பவத்தை ஆரம்பத்தில் குறிப்பிட்டிருந்தேன். பண விடயங்களில் தந்தையின் நேர்மையைக் கோடிட்டுக் காட்டுவதற்காகத்தான் அச் சம்பவத்தைக் கொடுத்தேன். மாதம் 10,000 ரூபா சம்பாதித்த பெரும் வழக்கறிஞர் (அப்போது ஒரு சாப்பாடு 25 சதம், தினகரனின் விலை 5 சதம், வடை 5 சதம், பயிற்சி பெற்ற ஆசிரியரின் சம்பளம் 40 ரூபா, சி.சி.எஸ் அதிகாரியின் ஆரம்பச் சம்பளம் 340 ருபா). அரசியலில் இறங்கி கட்சியையும் கட்சிப் பத்திரிகை சுதந்திரனையும் நடத்தி பணமுடையால் கஷ்ட நிலைக்குத் தள்ளப் பட்டார். கட்சித் தொண்டர் ஒருவர் பணம் கொடுக்க முன்வந்தும் அதை ஏற்க மறுத்து விட்டுக் கடன் வாங்கினார். தானே அக்கடனை அடைக்கும் நோக்குடனேயே வட்டிக்குக் கடன் எடுத்தார். அதற்குள் காலன் அவரைக் கவர்ந்து விட்டதாலேயே மகன் சந்திரகாசனுக்கு அப் பொறுப்பு போனது. பிள்ளைகளிடம் கூட அவர் உதவிபெற விரும்ப வில்லை.

1972 ம் ஆண்டு அரசியல் சட்டத்துக்கு தமிழ் மக்களின் எதிர்ப்பைக் காட்டுவதற்காக காங்கேசன்துறை எம். பி. பதவியைத் தந்தை இராஜினாமாச் செய்தார். அதனால் எம். பிக்குரிய சலுகைகள் யாவும் பறிபோயின. அந்தக் காலத்தில் எதிர்பாராத வேறொரு சிக்கல்-அச்சம்பவத்தைக் கூறுவதற்கு முன் இதைக் கூறுவிரும்புகிறேன்.

தந்தையின் முப்பதாண்டு அரசியல் வாழ்க்கையின் போதும் அதற்கு முன்பும் பலர் அவரின் அந்தரங்க காரியதரிசிகளாக கடமை யாற்றியுள்ளனர். அவர்களில் தந்தைக்கு முழு விசுவாசமாக இருந்த வர்கள் இருவர். இந்நூலை எழுதும் போது அவர்கள் வாழ்ந்து கொண்டிருந்தமை எனக்கு உதவியாக அமைந்தது, அவர்களில் மூத்தவர் குமாரசாமி. மற்றவர் இராஜேந்திரம். குமாரசாமி பாராளுமன்றத்தில் சமகால மொழி பெயர்ப்பாளராகச் சேருவதற்காகவே தந்தையின் சேவையிலிருந்து விலகினார். பாராளுமன்ற சேவையில் சேருமாறு தூண்டியதே தந்தைதான். தன்னோடு சேர்ந்து உழைப்போர் அவர்களின் வாழ்க்கையில் முன்னேறுவதை விரும்பியவர் தந்தை. குமாரசாமிக்கு நல்ல சிபாரிசுக் கடிதம் ஒன்றைக் கொடுத்து அதை சபையின் உதவி இலிகிதரிடம் காண்பிக்குமாறு சொன்னார். அந்தப் பதவி இப்பொழுது உதவி பாராளுமன்ற செயலாளர் நாயகம் என்று அழைக்கப்படுகிறது. தமிழரசுக் கட்சித் தலைவரின் சிபாரிசுடன் வேலைக்கு எடுப்பார்களா ...



என்ற சந்தேகம் குமாரசாமிக்கு. தந்தையின் கடிதத்தை சபையின் உதவி இலிகிதர் சாம் விஜேசிங்கவிடம் கொடுத்தார். கடிதத்தைப் பார்த்ததும், திரு. செல்வநாயகத்தின் கீழ் வேலை செய்திருக்கிறீர். அதைவிட வேறு என்ன தகுதி தேவை?. நாளைக்கே வேலைக்கு வரலாம் என்றார் சாம் விஜயசிங்க. தந்தை 1972ல் எம்.பி. பதவியை இரஜினாமாச் செய்தபோது இராஜேந்திரம் அவரின் செயலாளராக இருந்தார்.

**தேனீர் ஊற்றி...**

கணவன் மனைவி பிரச்சினை இல்லாத குடும்பம் இல்லை. பெரும் தொகை பணம் சம்பாதித்து தேயிலைத் தோட்டங்களில் பங்குகள் வாங்கிய ஒரு பிரபல வழக்கறிஞர் அரசியலில் பிரவேசித்து, கட்சிக் கொள்கையைப் பரப்புவதற்காக சுதந்திரன் பத்திரிகையை நடத்தி, உள்ள பணத்தைக் கரைத்துக் கொண்டிருப்பதை எந்த மனைவி தான் சகித்துக்கொண்டிருப்பார்? தந்தையின் மனைவி சில சமயங்களில் எரிந்து விழத்தான் செய்தார். இராஜேந்திரத்தின் மீதும் ஒரு முறை எரிந்து விழுந்தார். அவர் கோபித்துக் கொண்டு வேலைக்கு வராது நின்ற சமயத்தில், தந்தை செல்வா அரசாங்க எழுதுவினைஞர் சங்கம் இருந்த 756, காலி வீதிக்குப் போய் தனக்கு செயலாளர் ஒருவரைப் பிடித்துத் தருமாறு கேட்டார். இராஜேந்திரத்தை சமாதானப்படுத்தி திருப்பி வேலைக்கு வரப்பண்ணும் வரையும் எழுதுவினைஞர் சங்க செயலாளர் பேரின்பநாயகம் பின்னேரங்களில் உதவிக்கொண்டிருந்தார். ஒரு நாள் பேரின்பநாயகம் வேலை செய்து கொண்டிருக்கும் போது சமையல றையில் சத்தம் கேட்டுக் கொண்டே இருந்தது. பேரின்பநாயகம் நிமிர்ந்து பார்த்த போது தேநீருடன் தந்தை வந்து கொண்டிருந்தார்.

"உதென்ன வேலை. எனக்கேன் இப்ப தேத்தண்ணி."

"குடியுங்க, குடிச்சிட்டு வேலை செய்யுங்கோ."

"நீங்கள் போய் தேத்தண்ணி போட்டுக் கொண்டு வரனுமே!"

"நான் போட்ட தேத்தண்ணியை நீங்கள் குடிக்கக் கூடாதா?" என்று கேட்டார் தந்தை.

அந்தக் காலத்தில் தந்தை தன் காரை திருத்துவதற்கு கராச்சுக்கு அனுப்பி விட்டார். பலர் தமது கார்களைக் கொடுக்க முன் வந்தனர். ஏற்க மறுத்து விட்டார். அடிக்கடி கால்பேசுக்கு உலாத்தப் போவது அவரின் வழக்கம். அதைத் தொடர முடிவு செய்தார். "பேரின்பநாயகம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வா.வோக்குக்குப் போவோம்."இரண்டு பேருமாகக் காலி ரோட்டைக் கடந்து பஸ் ஹோல்ட்டில் போய் நிற்பார்கள். அந்தக் காலத்தில் டபிள் டெக்கர் பஸ்கள் ஓடின. டபிள் டெக்கர் பஸ் வரும் வரை இருவரும் நிற்பார்கள். தந்தை முன்னால் ஏறுவார். பேரின்ப நாயகம் அவருக்குப் பின்னால் ஏறுவார். தந்தை தான் இரண்டு பேருக்கும் டிக்கட் வாங்குவார். சில நாட்களுக்குப் பின்பு நடந்த சம்பாஷணை :

"நீங்கள் பஸ்ஸிலை போறனியலே?"

"போனால் என்ன?"

"நீங்கள் ஒரு கட்சியின் தலைவர்."

"தலைவர் என்றால் என்ன?"

"ஆட்கள் ஒரு மாதிரிக் கதைப்பினம்."

" ஏன் பஸ்ஸிலை போனால் மதிப்புக் குறைவே?"

" அப்படித்தான்."

" அப்படியானால் பஸ்ஸிலை பயணம் செய்யும் எல்லாச் சனங்களும் மதிப்புக் குறைந்தவர்களா?"

தந்தையுடன் தர்க்கித்துக் கொள்ள முடியாது என்கிறார் பேரின்ப நாயகம். தந்தை எதையும் தர்க்க ரீதியாகத்தான் அணுகுவார். அதற்குக் காரணம் அவர் தனது வாழ்நாளில் மூன்றில் ஒரு பகுதியை வழக்கறி ஞராகக் கழித்தமையே.

### சட்டத் துறையில்

1918ம் ஆண்டில் விஞ்ஞானப் பட்டதாரியான எஸ். ஜே. வி. வெஸ்லி கல்லூரியில் ஆசிரியத் தொழில் புரிந்த காலத்தில் சட்டக் கல்லூரியில் சேர்ந்து அப்புக்காத்தாகப் பயின்று 1924ம் ஆண்டில் சட்டத் துறையில் புகுந்தார். இப்பொழுது வழக்கறிஞர் தொழில் புரியும் யாவரும் அட்டர்னி-அற்- லோ என்று அழைக்கப்படுகின்றனர். முன் பெல்லாம் அப்படியல்ல. அத்துவக்காத்து, புரக்கிராசி என்று இரு பிரிவு வழக்கறிஞர்கள் இருந்தனர். பட்டதாரியான எஸ். ஜே. வி . அப்புக் காத்தாக 1924ல் சுப்ரீம் கோட்டில் பதவிப் பிரமாணம் எடுத்தார். அப்பொழுது அவருக்கு 26 வயது, அவரின் ஒரேயொரு இலட்சியம் பிரபல வழக்கறிஞராகி சுப்ரீம் கோட்டு நீதியரசராவது. ஆனால், பிரபல்யம் அடைந்த மற்ற வழக்கறிஞர்கள் சென்ற கிரிமினல் சட்ட பாதையில் நடக்காது சிவில் சட்டத்துறையைத் தேர்ந்தெடுத்தார் தந்தை.



தந்தை செல்வா எதிலும் நேர்மையைக் கடைப் பிடிப்பவர். தந்தை செல்வாவின் நேர்மையை மெச்சி டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா 1974ம் ஆண்டில் பாராளுமன்றத்தில் ஆற்றிய உரை என் நினைவுக்கு வருகிறது. அப்பொழுது நான் தினகரனில் வேலை செய்து கொண்டிருந்தேன். பாராளுமன்ற நடவடிக்கையைக் "கவர்" செய்வ தற்காக பாராளுமன்றத்துக்குப் போவதுண்டு. 1972 அரசியல் சட்டத்தை ஆட்சேபித்து அதே ஆண்டு அக்டோபர் 3ம் திகதி தந்தை செல்வா தனது எம்.பி.பதவியை இராஜினாமாச் செய்தார். காங்கேசன்துறைத் தொகுதியில் உப தேர்தலை நடத்தி தமிழ் மக்கள் அரசியல் சட்டத்தை ஆதரிக்கிறார்களா அல்லது எதிர்க்கிறார்களா என்று அறிந்து கொள் ளுமாறு அரசுக்குச் சவால் விட்டார் தந்தை. ஆனால், அரசு தேர்தலைத் தள்ளிப் போட்டுக் கொண்டு போனது. தேர்தலை நடத்துமாறு தமிழர் விடுதலைக் கூட்டணியினர் ஆற்றிய உரைகளுக்குப் பதிலளிக்கும் போது கொல்வின், தந்தையின் நேர்மை பற்றியும் குறிப்பிட்டார். கொல்வின் சொன்னார்:

> திரு. செல்வநாயகம் நேர்மைக்குப் பெயர் பெற்றவர். தனது கட்சிக் காரருக்காக நீதிமன்றத்தில் தோன்ற முடியாது போனால் தான் பெற்றுக் கொண்ட முற்பணத்தைத் திருப்பிக் கொடுத்து விடுவார். அப்படிச் செய்யும் வழக்கறிஞர்கள் மிகச் சொற்பம்!

செல்லையா இராசதுரை சொன்ன இன்னொரு சம்பவத்தையும் இங்கே குறிப்பிட வேண்டும். "தமிழரசுக் கட்சி ஆரம்பிக்கப்பட்ட காலம். மலைநாட்டைச் சேர்ந்த பெரிய பணக்காரர் ஒருவர் தந்தையின் வீட்டுக்குப் போனார். தனது வழக்கொன்றில் ஆஜராகுமாறு கேட்டார். வழக்கைப்படித்துப் பார்த்து முடிவு சொல்லுவதாக தந்தை சொன்னார். இரண்டு வாரங்கள் கழித்து அப் பணக்காரர் வந்தார். தன்னால் தோன்ற முடியாது எனச்சொன்னார் தந்தை. எந்த தொகை பணமும் கொடுக்கத் தயாராக இருப்பதாக அப்பணக்காரர் சொன்னார். வழக்கை ஏற்க மறுத்துவிட்டார் தந்தை. பெரிய தொகை தருவதாகச் சொல்லுகிறாரே ஏன் ஏற்க மறுக்கிறீர்கள்? என்று இராசதுரை கேட்டார். அது பொய் வழக்கு என்றார் தந்தை".

1924 ல் அப்புக்காத்தாகச் சத்தியப் பிரமாணம் செய்து கொண்ட செல்வா அக்காலத்தில் புகழ் பெற்றிருந்த பிரான்சிஸ் டி. சொய்சாவின் சேம்பர்சில் சேர்ந்து தொழில் பழகினார். சிவில் துறையில் தொழில் செய்ய முடிவு செய்தமையால் கொழும்பு விண்ணப்ப நீதிமன்றத்தில் தோன்ற ஆரம்பித்தார். அந்தக் காலத்தில் கொழும்பில் நாட்டுக் கோட்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



டைச் செட்டியார் சமூகத்தினர் பணம் வட்டிக்குக் கொடுக்கும் தொழிலைச் செய்து வந்தனர். கடன் வாங்கியவர்கள் பணத்தைத் திருப்பிக் கொடுக்கத் தவறின் வழக்குத் தொடர வேண்டி வரும். அத்தகைய கொடுக்கல், வாங்கல் வழக்குகளில் தன் திறமையைச் செல்வா வளர்த்துக் கொண்டார். சிவில் துறையில் அந்தக் காலத்தில் சி. நாகலிங்கம், என். நடராஜா, வி. எல். சென், சீ. சுவான் ஆகியோர் பிரபல்யம் பெற்று விளங்கினர். இவர்கள் காணி வழக்குகளில் தான் அதிக கவனம் செலுத்தினர். கொடுக்கல், வாங்கல் சம்பந்தப்பட்ட விடயங்களில் தனக்கு அதிகம் போட்டியில்லை என்பதை உணர்ந்து கொண்ட செல்வா அத்துறையில் தனது திறமையை வளர்த்தார்.

அவர் பெற்றிருந்த கணித அறிவு அதற்கு உதவியது. செட்டிமார் கொண்டு வந்து கொடுக்கும் கணக்குப் புத்தகக் கட்டுக்களைப் பிரித்துப் படித்து அவற்றில் ஒழுங்குகளைக் கண்டு கொள்ளும் திறமை அவருக்கு இருந்தது. "இரவிரவாகக் கண் விழித்திருந்து கணக்குகளைப் பார்த்துக் கொண்டிருப்பர்" என்று அவரின் மனைவி ஒரு முறை எனக்குக் கூறினார்.

விண்ணப்ப நீதிமன்றத்தில் போதிய பயிற்சியும் அனுபவம் பெற்றதும் மாவட்ட நீதிமன்றத்துக்குப் போய் தொழில் நடத்தத் துவங்கினார். விண்ணப்ப நீதி மன்றத்தில் ஐந்து ஆண்டுகள் பயின்ற பின்பே மாவட்ட நீதி மன்றத்துக்குப் போனதாக அவரின் கீழ் பணி புரிந்தவர்கள் கூறினர். 1930ம் ஆண்டுகளில் செல்வநாயகத்தின் புகழ் பரவ ஆரம்பித்தது. அந்த தசாப்தத்தின் பிற்பகுதியில் அப்பீல் கோட்டில் தோன்றி வாதாடத் தொடங்கினார். 1947ல் மகாராணியின் வழக்கறிஞர் (கியு. ஸி.) ஆக்கப்பட்டார்.

செல்வநாயகம் சிறந்த பேச்சாளரல்ல. சொற்சிலம்பம் விளையாடுபவரல்ல. சாட்சிகளை வெருட்டி மூர்ச்சிக்கச் செய்பவருமல்ல. அத் தகுதிகளற்றவர் சட்டத் துறையில் உயர்ந்தது எப்படி? ஆங்கிலப் பத்திரிகை எழுத்தாளர் சி. எஸ். தர்மராஜா 1978ம் ஆண்டில் இந்த விடயங்களை ஆராய்ந்தார். தந்தையின் காலத்தில் புகழ் பெற்று விளங்கிய வழக்கறிஞர்கள், அவருக்கு மரியாதை கொடுத்த நீதிபதிகள், நீதியரசர்கள், நீதிமன்றத்தில் பல்வேறு துறைகளிலும் பணி புரிந்த வழக்கறிஞரல்லாதோர் ஆகியோரிடம் விசாரித்தார். கிடைத்த விடைகள். பிரச்சினைகளை கூர்மையாக, ஆழ்ந்து பகுத்தாய்வு செய்தல். சட்டக் கருத்துக்களைச் சரிவரப் புரிந்து கொள்ளல். கடின உழைப்பு. அர்ப்பண உணர்வு. சட்டப் பத்திரங்களைத் தயாரிக்கும் திறன். நேர்மை.



பிரபல வழக்கறிஞர் ஒருவர் சொன்னது இது :

> சட்டத் தொழிலில் அவர் வெற்றி பெற்றமைக்குக் காரணம் அவரின் கடின உழைப்பு, மிகஉயர்வான நேர்மை, கொள்கைகளைக் கடினமாகக் கடைப் பிடித்தமை. அவரிலும் எவ்வளவோ திறமை வாய்ந்தவர்களுக்கு எதிராகத் தோன்றி அவர் வெற்றி பெற்றதில் ஆச்சரியம் எதுவும் இல்லை.

எவ்வளவோ திறமை வாய்ந்தவர்கள் என்று அந்தப் பிரபல வழக்கறிஞர் குறிப்பிட்டது வாதத்திறமையை மட்டுமே. செல்வநாயகம் தனது வழக்குப் பத்திரங்களை மிகவும் சுருக்கமாகவும், கச்சிதமாகவும் தயாரிக்கும் பழக்கமுடையவர். தனது கட்சிக்காரரின் நிலைப்பாட்டைச் சுருக்கமாக எடுத்துக் கூறி, சம்பந்தப்பட்ட சட்டங்களின் விளக்கத்தை ஆதரிக்கும் வழக்குத் தீர்ப்புகளைத் தொகுத்தளிப்பார். நீதி மன்றத்திடம் நாம் நீதியைத்தான் கேட்கிறோம். நீதிமன்றம் நீதியைச் செய்ய உதவுவது தான் எமது தொழில். அதைத்தான் நாம் செய்ய வேண்டும் என்று செல்வநாயகம் அடிக்கடி சொல்லுவார்.

செல்வநாயகத்தின் ஆழமான சட்ட அறிவையும், வழிகாட்டல் திறனையும் நீதவான்கள் மதித்தனர். அவரின் வாதங்களை மிகவும் கவனமாகக் கேட்டனர். அவரின் தொகுப்புரையை ஒரு சொல் தவறாமல் எழுதிக் கொண்ட சந்தர்ப்பங்களும் உண்டு. ஒரு சம்பவம். செல்வநாயகம் சிரேஷ்ட வழக்கறிஞராக அமர்த்தப்பட்டிருந்தார். அவரின் ஜூனியர் வழக்கறிஞர் சமர்ப்பணத்தைத் தயாரித்துக் கோட்டில் தாக்கல் செய்திருந்தார். அவ் வழக்கு பிரதம நீதியரசர் சர், சிட்னி ஏபிரகாம்ஸ் முன் விசாரணைக்கு வந்தது. சமர்ப்பணத்தை வாசித்து விட்டு கோட்டுக்கு வந்த சர். சிட்னி செல்வநாயகத்தைப் பார்த்துக் கூறினார்:

> இச் சமர்ப்பணத்தை நீங்கள் தயாரிக்கவில்லை என்பது நிச்சயமாகத் தெரிகிறது. அது உங்களுடைய ஜூனியரின் வேலையாக இருக்க வேண்டும்.

செல்வநாயகம் எழுந்தார். அச்சமர்ப்பணத்துக்கு நான் முழுப் பொறுப்பையும் எடுக்கிறேன் என்று சொன்னார்.

**எனக்கும் காது...**

அந்தப் பதிலால் செல்வநாயகம் தனது ஜூனியரைக் கைவிடவுமில்லை. உண்மையை மறைத்துக் கோட்டுக்குப் பொய் சொல்லவும் இல்லை. செல்வநாயகம் எப்பொழுதும் தனது கட்சிக்காரர்களுக்கு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மதிப்பளிப்பவர். அவர்கள் தவறான விவரங்களைக் கொடுக்கும் போது கொதிக்கவும் மாட்டார். குதிக்கவும் மாட்டார். ஆறுதலாகப், பொறுமையாகக் கேள்விகளைக் கேட்டு உண்மையை வரவழைப்பார். ஒரு தடவை அவரிடம் சென்ற கட்சிக் காரர்களிடமிருந்து அவரின் ஜுனியர் வழக்கு விபரங்களைப் பெற்றுக் கொண்டிருந்த போது நடந்த சம்பவம் இது. ஜுனியர் எதையோ கேட்க, கட்சிக்காரர்வேறெதையோ சொல்லிக் கொண்டிருந்தார். பொறுமை இழந்த ஜுனியர்: உங்களுக்கென்ன செவிடா? என்று கத்தி விட்டார். அதைக் கேட்டு மிரண்ட கட்சிக்காரரிடம் செல்வநாயகம் போனார். தன் காதைச் சுட்டிக் காட்டி, எனக்கும் கொஞ்சம் காது கேட்பது குறைவு. உங்களுக்கும்' காது குறைவா என்று கேட்கிறார். எங்களைப் போல் முதுமை வந்தால்தான் பொறுமை வரும் என்று சொல்லிச் சமாளித்தார்".

தந்தை செல்வாவின் ஜுனியர்களாக இருந்தவர்கள் பலர் பின்பு பெரிய புள்ளிகளாகி விட்டனர். பிரதம நீதியரசர் பதவியை வகித்த நெவில் சமரக்கோன், எஸ். சர்வானந்தா, பிரபல வழக்கறிஞர்களாக விளங்கிய வி.நவரத்தினராசா, சி. ரெங்கநாதன், அரசியல் செல்வாக்கு மிகுந்த எஸ்மண்ட் விக்கிரமசிங்க, (பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தந்தை) ஆகியோர் அவர்களில் சிலர்.

தன்னிடம் ஆலோசனை பெறவரும் வழக்கறிஞர்களுக்கு, அவர்கள் மிகவும் இளையவர்களாக இருப்பினும் உரிய மரியாதை கொடுக்க செல்வநாயகம் தவறுவதில்லை. ஒருநாள் அவரின் சேம்பருக்கு வந்த வழக்கறிஞர், வழக்கம் போல சப்பாத்தை படியில் கழற்றி வைத்து விட்டு உள்ளே போனார். பலத்த மழை பெய்து முற்றத்தில் வெள்ளம். அந்த வழக்கறிஞர் ஆலோசனை முடிந்ததும் ஓடிப்போய் காரில் ஏறிக் கொண்டார். சப்பாத்தை எடுக்க அவர் மறந்து விட்டதை அவதானித்த செல்வநாயகம் அதை எடுத்துக் கொண்டு போய்க் காரில் கொடுத்தார்.

செல்வநாயகத்தின் சட்ட அறிவுக்கும் வழக்கை அணுகும் முறைக்கும் அப்பீல் கோட்டில் நடந்த இந்த விசாரணை நல்ல உதாரணம். கீழ்க்கோட்டில் செல்வாவின் வாதம் வென்று விட்டது. பாதிக்கப்பட்ட கட்சியினர் அப்பீல் செய்தனர். பிரபல வழக்கறிஞர் ஒருவரையும் அமர்த்தினர். கீழ்க்கோட்டுத் தீர்ப்பு தவறானது என்பதை நிரூபிக்கப் பல தீர்ப்புக்களை ஒன்றுக்குப் பின் ஒன்றாக அடுக்கிக் கொண்டு போனார் அந்த வழக்கறிஞர். அப்பீல் செய்தவரின் வழக்கறிஞர் அமர்ந்ததும் செல்வநாயகம் எழுந்தார். மேலும் இரண்டு தீர்ப்புக்களைக் கூறினார். இவையும் அப்பீல்காரருக்கு ஆதரவாகத்தான் உள்ளன. ஆனால் இவை விளக்கும் விதி வேறு. எமது வழக்கில்..... .....



சம்பந்தப்பட்ட விதிவேறு என்று சொல்லி எடுத்துரைக்கப்பட்ட தீர்ப்புக்களை அங்கு விசாரிக்கப்படும் வழக்கிலிருந்து வேறுபடுத்திக் காட்டினார். வழக்கைச் சரிவரப் புரிந்து கொள்ளாமல் ஆதாரங்களைக் காட்ட முனைவதிலுள்ள ஆபத்தை செல்வ நாயகம் சுட்டிக் காட்டத் தவறவில்லை.

செல்வநாயகம் தோன்றிய பல வழக்குகளில் சட்ட முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன. மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் நூறு ஆண்டுகளுக்கு மேல் நம்பிக்கைச் சொத்தாகவுள்ளது. அந் நம்பிக்கைச் சொத்தை உருவாக்கியது யார் என்பதும் அதை நிர்வகிப்பதற்காக யார் நியமிக்கப்பட்டுள்ளார் என்பதும் தெரியாது. ஆனால் சந்ததி சந்ததியாக கோவில் குருக்கள் குடும்பத்தினர் கோவிலை நிர்வகித்து வந்துள்ளனர். அதை ஆட்சேபித்து தம்பிப்பிள்ளை என்பவர் வழக்குத் தாக்கல் செய்தார். செல்வநாயகம் துரைசாமி குருக்கள் சார்பில் ஆஜராகினார். நம்பிக்கைச் சொத்தை உருவாக்கிய உறுதி கிடைக்காத சந்தர்ப்பங்களில் நீண்ட காலமாக நம்பிக்கைப் பொறுப்பாளராக இருந்து வந்த குருக்களே நம்பிக்கைப் பொறுப்பாளராக நியமிக்கப்படலாம் என்று அவர் வாதாடினார். அவ்வாதம் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இவ்வழக்கின் விளைவாக, நம்பிக்கைப் பொறுப்பாளர் நியமனம் பற்றிய பத்திரங்கள் கிடைக்கப் பெறாத சந்தர்ப்பங்களில் நடைமுறையில் இருந்த ஒழுங்கைத் தொடர இத்தீர்ப்பு வழிவகுக்கிறது.

வள்ளியம்மை ஆச்சி எதிர் அட்டர்னி ஜெனரல் என்ற வழக்கும் முக்கியமானது. வள்ளியம்மை ஆச்சி நாட்டுக் கோட்டைச் செட்டியார் வகுப்பைச் சேர்ந்தவர். அவருக்குக் கிடைத்த பொதுச் சொத்து (பிரிக்கப் படாத சொத்து)க்கு வருமான வரிப் பகுதியினர் பூதல் வரியை அறவிட்டனர். வள்ளியம்மை ஆச்சி இதை ஆட்சேபித்து வழக்குத் தொடர்ந்தார். செல்வநாயகம் அவரின் வழக்கறிஞர். பூதல்வரி ஓர் அந்நிய வழக்கத்தை அடிப்படையாகக் கொண்ட சட்டம். அது இந்து தர்மத்தை அடிப்படையாகக் கொண்ட பொதுச் சொத்துக்கு ஒவ்வாது என்று செல்வநாயகம் வாதிட்டார். அவ்வாதத்தை ஏற்றுக் கொண்ட நீதிமன்றம் பிரிக்கப்படாத சொத்துக்குப் பூதல்வரி விதிக்கக் கூடாது என்று தீர்ப்பளித்தது. அப்பீல் கோடும் பிரிவி கவுன்சிலும் அத்தீர்ப்பை ஏற்றுக் கொண்டன.

இன்னுமொரு முக்கியமான வழக்கு. ஷாபி மதப்பிரிவைச் சேர்ந்த பராயம் வராத ஒரு முஸ்லிம் பெண் ஹனபி மதப் பிரிவின் ஹனபி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சட்டத்தின் படி திருமணம் செய்தார். அப்பொழுது தன் தாய் மாமனை வாரி (பாதுகாவலர்)சாக நியமித்து அவரின் அனுமதியைப் பெற்றார். அப்பெண்ணின் தகப்பன் அதை ஆட்சேபித்து தன்னையே அப் பெண்ணின் பாதுகாவலராக நியமிக்கக் கோரி கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தார். அப்பெண்ணின் சார்பாக ஆஜரான செல்வநாயகம் இரண்டு வாதங்களை முன்வைத்தார். முதலாவது ஹனபி சட்டத்தின் கீழ் பருவம் எய்திய பெண் திருமண வயதை அடைகிறார் என்பது. எனவே, அவர் பாதுகாவலரை நியமிக்க வேண்டிய தேவையில்லை என்பது அதன்அர்த்தம். மற்றது முஸ்லிம் மதத்தின் ஒரு பிரிவிலிருந்து வேறொரு பிரிவுக்கு மாறுவது மதமாற்றமல்ல. இவ்விரு வாதங்க ளையும் மாவட்ட நீதிமன்றம் ஏற்றுக் கொண்டது. அப்பீலில் சுப்ரீம் கோட்டினாலும் பிரிவி கவுன்ஸிலாலும் அவ்வாதங்கள் ஊர்ஜிதப் படுத்தப்பட்டன. சட்டத் தொழிலில் தந்தை செல்வா முழுக்க வனத்தையும் செலுத்தினார். சுப்ரீம் கோட்டு நீதியரசராவதே தன் இலட்சியம் என்று தன் குடும்பத்தினருக்கும் நண்பர்களுக்கும் சொன்னார். அவர் விரும்பிய பாதையில் செல்ல அவரை விதி விடவில்லை.

# 3

# அரசியல் பிரவேசம்

### 1947 தேர்தல்

சட்டத் தொழிலில் முழுதாக மூழ்கியிருந்த எஸ். ஜே. வி. அரசியலில் புகுந்தது எப்படி? வழக்கறிஞர் செல்வா தந்தை செல்வா ஆனது எவ்வாறு? சுப்பிரீம் கோட்டு நீதியரசராவதைத்தன் இலட்சியமாகக் கொண்டிருந்த தந்தை செல்வநாயகம் அரசியல் தலைவரானது எப்படி? ஒருநாள் நான் தந்தை செல்வாவிடம் கேட்டேன், "நீங்கள் எப்படி அரசியலுக்கு வந்தீர்கள்?" என்று. சிவசுப்பிரமணியம்தான் என்னை இழுத்தவர் என்றார். சிவசுப்பிரமணியம் ஓர் வழக்கறிஞர். அரசியல் ஆர்வம் மிக்கவர். சிங்கள பேரினவாதம் தன்னைப் பலப்படுத்திக் கொண்டு வருவதை உணர்ந்து அதைச் சமாளிக்க வேண்டிய அவசியத்தை 1930ம் ஆண்டுகளிலேயே உணர்ந்த சிலரில் அவரும் ஒருவர். திறமை மிக்க தமிழர்களை ஒன்று திரட்டி அவர்களை ஓர் அரசியலமைப்பின் கீழ் கொண்டு வருவதில் அவர் ஆர்வம் காட்டினார். செல்வநாயகத்துடன் தினமும் காலையில் டெலிபோன் செய்து பேசுவேன். அவரை அரசியலுக்கு இழுத்ததில் எனக்கும் பங்குண்டு என்று அவர் சொன்னார். "செல்வநாயகத்திற்குள் அமிழ்ந்திருந்த இன உணர்வை நான் கிண்டி விட்டேன்". அவ்வளவுதான் என்றார் சிவசுப்பிரமணியம் ஐயா.

தந்தை செல்வாவின் முதல் அரசியல் பங்குபற்றல் 1936ல் இடம் பெற்றது. அந்த ஆண்டில் டாக்டர் எஸ். பொன்னையா என்பவரும் வல்லிபுரநாதன் என்பவரும் தமிழ்ப் பகுதிகளுக்குத் தனி அரசு கோரி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பிரிட்டனுக்கு விண்ணப்பம் ஒன்றை அனுப்பினர்'. டாக்டர் பொன்னையா இலங்கை பாதுகாப்புப் படையில் மேஜராகப் பணி புரிந்தவர். வல்லிபுரநாதன் வடமராட்சியைச் சேர்ந்த நொத்தாரிசு. இருவரும் தாங்கள் தயாரித்த விண்ணப்பத்தின் பிரதியை செல்வநாயகத்திடம் காட்டினர். அவர் அதைத் திருத்தி எழுதிக் கொடுத்தார். அதில் அவர் கையொப்பம் இடவில்லை.

அடுத்து, அவர் சட்ட நூலகத்தில் இருந்தபோது சில வழக்கறிஞர்கள் காலனித்துவ மந்திரிக்கு அனுப்புவதற்கான மகஜர் ஒன்றில் தமிழ் வழக்கறிஞர்களின் கையொப்பங்களை வாங்குவதை அவதானித்தார். அவர் அதை வாங்கி படித்துப் பார்த்துவிட்டு கையொப்பம் போட்டுக் கொடுத்தார்.

*1944* அக்டோபர் *27*ல் கொழும்பு சைவ மங்கையர் மண்டபத்தில் நடந்த அகில இலங்கை காங்கிரஸ் அங்குரார்ப்பணக் கூட்டத்தில் கலந்து கொண்டார். சோல்பரி கமிஷன் முன் ஜி. ஜி. பொன்னம்பலம் சாட்சியமளித்தபோது எஸ். ஜே. வி. அருகில் இருந்து உதவினார்.

*1947* தேர்தலில் எஸ். ஜே. வி. பிரதான பங்கு வகித்தார். அத்தேர்தலில் தமிழ் காங்கிரஸ் ஒன்பது வேட்பாளர்களை நிறுத்தியது. ஏழு பேர் யாழ். குடாநாட்டிலும், இரண்டு பேர் கிழக்கு மாகாணத்திலும் நிறுத்தப்பட்டனர். இவர்களில் ஏழு பேர் வெற்றி பெற்றனர். தமிழ்க் காங்கிரஸ் பிரசாரக் கூட்டங்களில் ஜி. ஜி. க்கு அடுத்த பிரதான பேச்சாளராக எஸ். ஜே. வி. கருதப்பட்டார். யாழ்ப்பாணக் கூட்டத்தில் அவர் பேசியது நினைவில் உள்ளது. அப்பொழுதும் மெல்லிய உடல்வாகுதான். மெதுவாக, ஆறுதலாக நிறுத்தி நிறுத்தித்தான் பேசுவார். சின்னச் சின்ன வசனங்கள். தெளிவான கருத்துக்கள். அவர் சொன்னதன் சாரம்:

> பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் இலங்கையை விட்டுப் போகப் போகிறார்கள். அரச அதிகாரம் பெரும்பான்மை சிங்கள இனத்தினருக்கு மாறுவதற்கு சோல்பரி அறிக்கை வழி வகுக்குகிறது. இதனால், அதிகம் பாதிக்கப்படப் போகிறவர்கள் தமிழர்கள்தான். எனவே. அரச அதிகாரத்தில் தமிழ் மக்களுக்குப் பங்கு வேண்டும். சோல்பரி அறிக்கை தமிழருக்கு உரிய பங்கை வழங்கத் தவறி விட்டது. தமிழர்களைச் சிங்களவர்களின் தயவில் விட்டு விட்டது. சிங்களத் தலைவர்களை நம்பலாம் என்கிறார்கள் மகாதேவாவும், நடேசனும் சர் வைத்திலிங்கம் துரைசாமியும் தியாகராசாவும். ஓர் இனம் மற்ற இனத்தின் நல்லெண்ணத்தில் தங்கியிருக்க முடியாது. அது ஆபத்தானது.

....... ..... ..... .....



*1947* தேர்தலில் போட்டியிட்ட காங்கிரஸ் வேட்பாளர்களைத் தெரிவு செய்யும் விடயத்திலும் எஸ் ஜே. வி. முக்கிய பங்கு வகித்தார். பருத்தித்துறையில் போட்டியிடுவதற்கு இராமலிங்கத்தை ஒழுங்கு படுத்தியது எஸ். ஜே. வி. தான். கோப்பாய் தொகுதியில் போட்டியிட கு.வன்னியசிங்கத்தை எஸ். ஜே. வி. தான் இணங்க வைத்தார். கோப்பாய் தொகுதிக்குப் போட்டியிட தம்பையா என்பவர் தெரிவு செய்யப்பட்டிருந்தார். புத்தூரில் நடந்த பிரசாரக் கூட்டத்துக்கு போன தம்பையா அங்கேயே மயக்கமுற்று இறந்தார். அந்த இடத்துக்கு யாரை நிறுத்துவது என்ற கேள்வி எழுந்த போது வன்னியசிங்கத்தின் பெயரை எஸ். ஜே. வி. சிபாரிசு செய்தார். வன்னியசிங்கம் அப்போதுதான் சட்டப் படிப்பை முடித்துக் கொண்டு எஸ். ஜே. வி. யின் ஜூனியராக வேலை பயின்று கொண்டிருந்தார். கோப்பாய்க்குப் போட்டியிடுமாறு எஸ். ஜே. வி. முதலில் கேட்ட போது வன்னியசிங்கம் மறுத்து விட்டார். எஸ். ஜே. வி. பலமுறை வன்னியசிங்கத்தின் வீட்டுக்குப் போய் வற்புறுத்தி இணங்க வைக்க வேண்டியிருந்தது. தேர்தலில் காங்கிரசிற்குப் பெருவெற்றி கிடைத்தது. யாழ். குடாநாட்டிலிருந்த ஏழு தேர்தல் தொகுதிகளில் ஆறில் தமிழ் காங்கிரசிற்கு வெற்றி கிட்டியது. வெற்றி பெற்ற வேட்பாளர்களின் விபரம் வருமாறு:- ஜி. ஜி. பொன்னம்பலம். (யாழ்ப்பாணம்) எஸ். ஜே. வி. செல்வநாயகம் (காங்கேசன்துறை)கு. வன்னியசிங்கம் (கோப்பாய்) ரி. ராமலிங்கம் (பருத்தித்துறை) கே. கனகரத்தினம் (வட்டுக்கோட்டை) வி. குமாரசாமி (சாவகச்சேரி) கிழக்கு மாகாணத்தில் திருகோணமலைத் தொகுதியில் எஸ். சிவபாலன் வெற்றி பெற்றார். யாழ். குடாநாட்டிலுள்ள ஊர்காவற்றுறைத் தொகுதியில் ஏ. எல். தம்பையா சுயேட்சையாகப் போட்டியிட்டு வெற்றி பெற்றார். மன்னாரில் சி. சிற்றம்பலமும் வவுனியாவில் சி. சுந்தரலிங்கமும் சுயேட்சையாகப் போட்டியிட்டு வெற்றி பெற்றனர்.

*1947* தேர்தல் ஆகஸ்ட் மாதம் முதல் செப்டம்பர் பிற்பகுதிவரை நடைபெற்றது. யாழ். குடாநாட்டு தேர்தல் முடிவுகள் *19* செப்டம்பர் *1947* இல் வெளியிடப்பட்டன. தனது தேர்தல் வெற்றி அறிவிக்கப்பட்டதும் எஸ். ஜே. வி. ஆற்றிய உரையின் முக்கிய பகுதி :

நான் அரசியலுக்கு வர முதலில் விரும்பவில்லை. தமிழ் மக்கள் பிரதிநிதிகளாக அரசாங்க சட்டசபையிலிருந்த சிலர் தமிழ் மக்களுக்குத் துரோகம் செய்து விட்டனர். அவ்வாறு துரோகம் செய்தவர்களை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அரசியலிலிருந்து அகற்றி தமிழ் மக்களின் நலன்களில் அக்கறையுள்ள தலைமைத்துவத்தை அளிப்பதற்காகவே அரசியலில் இறங்கினேன்.

> எல்லாத் தமிழ் மக்களின் நன்மைக்கும் உரிமைகளுக்கும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் செயலாற்றுகிறது. உயர் சாதியினருக்காகவும் தாழ்ந்த சாதியினருக்காகவும் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் உழைக்கிறது. வேளாளர் ஒழிக என்று சமசமாஜிகள் கோஷமிடுகின்றனர். வேளாளரின் வாழ்க்கைத் தரத்துக்கு தாழ்த்தப்பட்டோரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு பாடுபட தமிழ் காங்கிரஸ் உறுதி பூண்டுள்ளது.

**மூன்று 'த'க்கரி**

நாற்பதாம் ஐம்பதாம் ஆண்டுகளில் யாழ். குடாநாட்டில் இடது சாரி, இயக்கங்கள் ஓரளவு பலம் பெற்றிருந்தன. 1947 தேர்தல் காலத்தில் சமசமாஜிஸ்டுகளின் பலம் அதிகமாக இருந்தது. சமசமாஜக் கட்சி அத்தேர்தலில் போட்டியிட்டது. அதனால் தான் சமசமாஜிஸ்டுகள் பற்றி எஸ். ஜே. வி. தனது தேர்தல் வெற்றிப் பேச்சில் குறிப்பிட்டார்.

தேர்தல் வெற்றியைத் தொடர்ந்து எஸ். ஜே. வி.க்கு தெல்லிப்பளை யூனியன் கல்லூரியில் வரவேற்பு அளிக்கப்பட்டது. அவ்வரவேற்பிற்குப் பதிலளித்துப் பேசிய எஸ். ஜே. வி. தமிழ், தமிழர், தமிழர் தாயகம் ஆகிய மூன்றும் தமிழ் மக்களின் உயிர் என்றார். உயிர் மூச்சு என்ற மூன்றெழுத்துச் சொற்களைக் குறிப்பிட்ட செல்வா தமிழும் மூன்றெழுத்தே என்றார். அத்துடன் தமிழ், தமிழர், தமிழர் தாயகம், ஆகிய மூன்றும் பிணைந்துள்ளன என்றார். தமிழும் தமிழர் தாயகமும் இன்றித் தமிழர் வாழ முடியாது என்றும் சொன்னார்.

தேர்தலையடுத்துத் தமிழ்க் காங்கிரஸ் உறுப்பினருக்கு யாழ்ப் பாணத்தில் மாபெரும் வரவேற்பு ஒன்று அளிக்கப்பட்டது. அதில் எஸ். ஜே. வி. அழுத்தம் திருத்தமாகச் சொன்னது இது. "ஒற்றையாட்சியில் தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்காவிட்டால், பிரிந்து செல்லும் உரிமை யுடன் கூடிய இணைப்பாட்சி முறையைத் தமிழ் மக்கள் கோரவேண்டி வரும்".

தமிழ் காங்கிரஸ் காலத்திலிருந்தே ஒற்றையாட்சி முறையை ஒரு சாபக் கேடாகவே தந்தை செல்வா பார்த்தார். சமஷ்டி ஆட்சி அமைப்பே தமிழர்களுக்கு விமோசனம் கொடுக்கும் என்றும் சொன்னார். அதற்குச் சிங்களவர் இணங்கா விடின் பிரிந்து செல்லும் உரிமையுடன் கூடிய இணைப்பாட்சி முறையைத் தமிழ் மக்கள் கோரவேண்டி வரும் என்றும் கூறி வந்தார்.



சமஷ்டி ஆட்சி முறையின் கீழ் தம்மைத் தாமே ஆளும் உரிமை வடகிழக்கில் வாழும் தமிழர்களுக்கு உண்டு என்பதை தமிழரசுக் கட்சியை ஆரம்பித்த 1949 டிசம்பர் 18லேயே தந்தை செல்வா தெளி வாகக் கூறினார். அன்று அவர் சொன்னது:

> இலங்கையைச் சிங்கள நாடு என்று கூறுகிறார்கள். இலங்கையைச் சிங்கள வருக்கே உரிய நாடாக்க முயலுகிறார்கள். சிங்களத் தேசிய இனமும் தமிழ்த் தேசிய இனமும் வாழ்ந்த நாடு இலங்கை. சிங்களவர்களும் தமிழர்களும் வெவ்வேறு பிரதேசங்களில் வாழ்ந்தனர். இலங்கையின் நீண்ட வரலாற்றில் சிறு சிறு காலங்களில் தமிழ் பிரதேசத்தை சிங்கள மன்னர்களும் சிங்கள பிரதேசத்தை தமிழ் மன்னர்களும் ஆண்டிருக் கிறார்கள். ஆனால் இச் சிறு காலப் பகுதி ஆட்சி சிங்களவரின் இறமை யையோ தமிழரின் இறைமையையோ பாதிக்கவில்லை. தமிழ் பகுதிகளில் பெரும்பாலானவை சுதந்திரமான ஆட்சியையே கொண்டிருந்தன. 1833ல் பிரிட்டிஷ் ஆட்சியாளர் இலங்கை முழுவதையும் ஒரே நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரும்வரை தமிழ் பிரதேசங்கள் சுதந்திரமாகவே இயங்கின.

இலங்கை இரு தேசிய இனங்கள் வெவ்வேறு பிரதேசங்களில் பூரண இறைமையுடன் வாழ்ந்த நாடு என்பதை தந்தை செல்வா தனது உரைகளில் திரும்பத் திரும்ப வலியுறுத்தி வந்தார்.

1972 மே 22ல் புதிய அரசியல் திட்டம் பிரகடனம் செய்யப்பட் டதை ஆட்சேபித்து வண்ணார்பண்ணை நாவலர் ஆச்சிரமத்தில் நடத் தப்பட்ட பொதுக் கூட்டத்தில் தந்தை ஆற்றிய உரையின் பகுதி இது :

> வரலாற்று ரீதியாகப் பார்க்கும்போது சிங்களவர்களும் தமிழர்களும் வெவ்வேறு தேசிய இனங்களாக வெவ்வேறு பிரதேசங்களில் வாழ்ந்தனர். சிங்கள அரசர்கள் தமிழ் பிரதேசங்களை ஆண்ட சிறு காலப் பிரிவுகளும் உண்டு. அதைப் போன்றே சிங்களப் பிரதேசங்கள்மீது தமிழர் செல்வாக்குப் பெற்றிருந்த காலப் பகுதிகளும் உண்டு. அடிப்படையில் இரண்டு சமூகத்தினரும் வெவ்வேறு தேசிய இனங்களாகவே வாழ்ந்தனர். போர்த்துக்கேயரும் ஒல்லாந்தரும் இரண்டு இனங்களினதும் தனித்துவத்தை ஏற்றுக்கொண்டு இரண்டு பிரதேசங்களையும் வெவ்வேறாகவே நிர்வகித்தனர். பிரிட்டிஷ்காரர்தான் இலங்கை முழுவதற்கும் ஒரே நிர்வாகத்தை அமைத்தனர்.

1975 பெப்ரவரி 6ல் நடந்த காங்கேசன்துறை உப தேர்தலில் வெற்றிபெற்ற தந்தை தனது உரையில் சொன்னது இது:

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இந்நாட்டின் நீண்ட வரலாற்றில் சிங்களவர்களும் தமிழர்களும் இறைமையுள்ள தனித்தனி தேசிய இனங்களாக வாழ்ந்துள்ளனர். அந்நியர்கள் தான் அவர்களை ஒரே நிர்வாகத்தின்கீழ் கொண்டு வந்தனர். பதினாறாம் நூற்றாண்டின் முற்பகுதியில் பேர்த்துக்கேயர் இலங்கைக்கு வந்தபோது கொழும்புக்கருகேயுள்ள ஸ்ரீ ஜயவர்த்தனபுரத்தைத் தலைநகராகக் கொண்ட கோட்டே இராச்சியமும் நல்லூரைத் தலைநகராகக் கொண்ட யாழ்ப்பாண இராச்சியமும் மலைநாட்டில் உடரட்ட இராச்சியமும் (பின்பு கண்டி இராச்சியம்) இருந்தன.

**இறைமை இழந்த கதை**

தந்தை தன் உரைகள் மூலம் மூன்று அடிப்படைக் கருத்துக்களை வலியுறுத்தினார். அவை:

1 தமிழ் மக்கள் ஒரு தேசிய இனம். அவர்கள் ஆதிகாலத்திலிருந்தே இலங்கையில் வாழ்கிறார்கள்.

2 தமிழர் தமக்கென மரபு வழித் தாயகத்தைக் கொண்டிருந்தனர். அது இலங்கையின் வட-கிழக்குப் பிரதேசம்.

3 தமிழ் மக்கள் தம்மைத் தாமே ஆளும் சுயநிர்ணய உரிமையை உடையவர்கள்.

பிரித்தானியர் இலங்கைக்கு சுதந்திரம் கொடுத்தபோது அவர்கள் தமிழருக்கு அவர்களிடமிருந்து போர்த்துக்கேயர் பறித்த இறைமையை ஒப்படைத்திருக்க வேண்டும். இலங்கை வரலாற்றை ஆழ்ந்து ஆராய்ந்ததன் பின்பே தந்தை இக்கருத்துக்களை மக்கள் முன் வைத்தார்.

இற்றைக்கு ஓர் இலட்சம் ஆண்டுகளுக்கு முன்பே இலங்கையில் மனித குடியேற்றங்கள் இருந்ததற்கு தொல்லியல் ஆய்வுகள் சான்று பகர்வதாக பேராசிரியர் ஷிரான் தெரனியகலை கூறுகிறார். இலங்கையின் ஆதிக் குடியேற்றவாசிகளைப்பற்றி அறிந்து கொள்வதற்காக அநுராதபுரத்தில் நடத்தப்பட்ட அகழ்வாராய்ச்சியின் விளைவாக இடைக் கற்கால அல்லது குறுணிக்கற்கால மக்கள் இங்கு வாழ்ந்ததற்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளன. அத்துடன் பசுந்துன் கோறளையிலுள்ள பா-ஹெயின் குகையில் கண்டெடுக்கப்பட்ட தலை ஓடு இற்றைக்கு 37,000 ஆண்டுகள் முதல் 40,000 ஆண்டுகள் பழமை வாய்ந்தது என்பது அமெரிக்க கோர்னல் பல்கலைக் கழகத்தில் நடத்தப்பட்ட நவீன தொல்லியல் காலக் கணிப்பு மூலம் - கார்பன் காலக் கணிப்பு முறை - நிர்ணயிக்கப்பட்டுள்ளது. சபரகமுவா மாகாணத்தில் உள்ள குருவிற்ற என்னும் இடத்திலிருக்கும் பற்றதோம்ப-லேன (குகை) வில் கண்டு பிடிக்கப்பட்ட பெண்ணின் (நிமாலி என்று பெயரிட்டுள்ளனர்) எலும்பு 27,000 ஆண்டு பழமையானது. பந்துல கிராமத்தில் 125,000 ஆண்டுகள் பழமை வாய்ந்த கல்லாயுதங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அம்பாந்தோட்டை பிரதேசத்தில் பல்லேமலல கிராமத்தில் 2000ம் ஆண்டைச் சேர்ந்த மனிதக் குடியிருப்பொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அது கற்காலத்துக்கும் இரும்புக் காலத்துக்கும் இடைப்பட்ட காலத்தைச் சேர்ந்தது என்று தொல்லியலாளர்கள் கூறுகின்றனர்.



இலங்கையில் வாழ்ந்த ஆதிகால மனிதன் பற்றிய விவரங்கள் இதுவரை அறியப்படவில்லை. வரலாற்றுக் காலத்துக்கு பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே மனிதன் இலங்கையில் வாழ்ந்தமை இலங்கையின் வரலாற்றின் ஆரம்பம் பற்றி நாம் கொண்டிருந்த கருத்துக்களை மாற்ற வேண்டிய தேவையை ஏற்படுத்திவிட்டது என்று 2000ம் ஆண்டின் இறுதியில் நடந்த ஆய்வரங்கொன்றில் தெரனியகல கூறினார். எழுதப்பட்ட வரலாற்றுக்கு முந்தியகாலத்தில் இலங்கையில் மக்கள் குடியேற்றம் இருந்திருக்கிறது. அவர்கள் இயக்கர், நாகர் ஆகிய இனங்களைச் சேர்ந்தவர்கள் என்று ஆய்வாளர்கள் சிலர் கூறுகிறார்கள். அவர்கள் தமிழர் என்று வாதாடுவோருமுண்டு. அவர்கள் சிங்களவரல்ல என்பது மட்டும் நிச்சயம். சிங்கள இனம் விஜயனின் வருகையுடன் தோன்றியதாக மகாவம்சம் கூறுகிறது. புத்தர் நிர்வாணம் அடைந்த கி.மு. 504ம் ஆண்டு வைகாசி மாத பௌர்ணமி தினத்தன்று விஜயன் இலங்கையின் மேற்குக் கரையில் வந்திறங்கியதாக அந்நூல் சொல்லுகிறது.

இற்றைக்கு 5000 ஆண்டுகளுக்கு முந்திய இந்திய காப்பியமான இராமாயணம் இலங்கையை இராவணன் ஆண்டதாகவும் அவன் இந்து சமயத்தவன் என்றும் கூறுகிறது. சிங்கள நூல்களான தீபவம்சமும் மகாவம்சமும் விஜயனின் வருகையுடன் இலங்கையில் மனிதக் குடியேற்றம் ஆரம்பித்ததாகக் கூறுகின்றன. அதே வேளை, விஜயன் இற்றைக்கு 2500 ஆண்டுகளுக்கு (கிறிஸ்துவுக்கு முன் 543ல்) முன்பு வந்தபோது இயக்கர்கள் புத்தளம் பிரதேசத்தை ஆட்சி புரிந்ததாகவும் கூறுகிறது. இயக்கரையும் நாகரையும் மனிதர்களல்ல என்று காட்டுவதற்கும் விஜயனும் அவனுடன் வந்த 700 தோழர்களும்தான் மனிதர்கள் என்று காட்டுவதற்கும் பாளி மொழியில் புத்தபிக்குகளால் எழுதப்பட்ட தீபவம்சமும் மகாவம்சமும் முயலுகின்றன.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தீபவம்சம் இற்றைக்கு 1600 (கிறிஸ்துவுக்குப் பின் நாலாம் நூற்றாண்டில்) ஆண்டுகளுக்கு முன் எழுதப்பட்டது. கவிதை உருவில், புத்த பிக்கு ஒருவரால் இயற்றப்பட்ட தீபவம்சம் இலங்கைத் தீவை ஆண்ட அரச குடும்பங்களின் கதையைக் கூறுகின்றது. இதுதான் இலங்கைத் தீவு. சிஹல என்று அது அழைக்கப்படுகிறது. இத் தீவின் தோற்றத்தை நான் கூறுகிறேன். அதைக் கேளுங்கள் என்று ஆரம்பித்து இலங்கையின் கதையை தீபவம்சம் விளம்புகிறது. மகாவம்சம் அதற்கு இரண்டு நூற்றாண்டுகளுக்குப் பின்பு (கிறிஸ்துவுக்கு பின் ஆறாம் நூற்றாண்டில்) தொகுக்கப்பட்டது. அதை ஆக்கிய மகாநாம தேரர் பௌத்த மதத்தின் மகிமையையும் அதைப் பாதுகாத்தவர்களையும் தமிழர்களைத் தோற்கடித்து சிங்கள ஆட்சியை நிறுவியவர்களையும் போற்று வதைத் தன் பணியாக ஏற்றுக் கொண்டார். அப் பணிக்கு வலுவளிப்பதற்காக இரண்டு தொகுதி கட்டுக்கதைகளை மகாநாம தேரர் உருவாக்கினார்.

அவற்றில் முதலாவது, இலங்கை சிங்களவரின் நாடு என்று காட்டுவதற்காக உருவாக்கப்பட்டது. இரண்டாவது, இலங்கை பௌத்த நாடு என்று காட்டுவதற்காக உருவாக்கப்பட்டது.

இலங்கை சிங்களவரின் நாடு என்று காட்டுவதற்காக உருவாக்கப்பட்ட கதைகள் விஜயனின் கதையில் பின்னப்பட்டுள்ளன. விஜயன் சிங்கள இனத்தை தோற்றுவித்தான் என்றும் அவனின் வருகையுடன் இலங்கையில் மனிதக் குடியேற்றம் ஆரம்பித்தது என்றும் தீபவம்சம் கூறுகிறது. அந்நூலின் படி, வங்காள தேசத்தில், அழகிய இந்திய இளவரசி சுப்பதேவிக்கும் 'அவரைக் கடத்திய சிம்' என்ற சிங்கத்துக்கும் சிங்கபாகு என்பவன் பிறந்தான். அவனின் மகன் விஜயன். அவனின் துர்நடத்தை காரணமாக அவனையும் அவனின் தோழர்கள் 700 பேரையும் சிங்கபாகு நாடு கடத்தினான். அவர்களை தோணிகளில் ஏற்றி அனுப்பினான். அவர்கள் இலங்கையின் மேற்குக் கரையில், தம்பன்ன என்னும் இடத்தில் கி.மு. 543ம் ஆண்டில் கரை சேர்ந்தனர். அவர்கள் இலங்கையின் முதலாவது மனிதக் குடியேற்றத்தை ஏற்படுத்தினர்.

**விஜயனின் கதை**

விஜயன் வந்திறங்கிய புத்தளப் பிரதேசத்திலுள்ள தம்பன்னவை குவேனி என்ற இயக்க இனஇளவரசி ஆட்சிபுரிந்தாள். அவளின் ஆட்கள் விஜயனின் தோழர்களைப் பிடித்துக் குகைக்குள் அடைத்து விட்டனர். விஜயன் போரிட்டு அவர்களை மீட்டான். பின்பு



குவேனியைத் திருமணம் செய்தான். அவர்களுக்கு இரண்டு குழந்தைகள் பிறந்தனர். ஒன்று ஆண். மற்றது பெண். குவேனியையும் குழந்தைகளையும் விஜயன் காட்டுக்குள் விரட்டிவிட்டு பாண்டி நாட்டு அரச குமாரியை திருமணம் செய்தான். அவனின் தோழர்களும் பாண்டி நாட்டுப் பெண்களை மணந்தனர். குவேனியின் பிள்ளைகள் இருவரும் ஒருவரை ஒருவர் மணந்து பிள்ளைகள் பெற்றனர். அவர்களின் வாரிசுகளே இலங்கையில் வாழும் வேடர் என்பது தீபவம்சம் கூறும் கதை.

மணப்பெண்களுடன் 1000 குடும்பங்களையும் பாண்டி மன்னன் அனுப்பி வைத்தான். அவர்கள் பல்வேறு தொழில்கள் தெரிந்தவர்கள். பாண்டி நாட்டு இளவரசி மூலம் விஜயன் சிங்கள இனத்தையும் சிங்கள அரச பரம்பரையையும் தோற்றுவித்தான். அவன் 38 ஆண்டுகள் ஆட்சி புரிந்தான் என்றும் தீபவம்சம் கூறுகிறது. விஜயனின் வருகை பற்றி தீபவம்சம் கூறும் கதையை மகாவம்சம் அப்படியே ஏற்றுக்கொண்டு மெருகு கொடுக்கிறது.

விஜயனின் கதை மூன்று கருத்துக்களை சிங்கள மக்களின் மனதில் பதித்துள்ளது.

1 விஜயன் சிங்கள இனத்தைத் தோற்றுவித்தான்.

2 விஜயன் ஆரிய இனத்தவனாகையால் சிங்களவர் ஆரிய இனத்தவர் என்ற கருத்து.

3 விஜயன் முதலாவது குடியேற்றத்தைத் தோற்றுவித்தமையால் சிங்களவரே இலங்கையில் முதலில் குடியேறியவர்கள் என்ற எண்ணம்.

விஜயனின் கதையுடன் பௌத்த மதம் பற்றிய வேறு கதைகளையும் மகாநாம தேரர் இணைத்துள்ளார். அவற்றில் முதலாவது, பௌத்த மதத்தைத் தோற்றுவித்த கௌதம புத்தரின் இலங்கை விஜயம் பற்றியது. புத்தர் பெருமான் இலங்கைக்கு மூன்று தடவைகள் விஜயம் செய்ததாக மகாவம்சம் கூறுகிறது. சிவனொளிபாத மலைக்கும் மஹியங்கனைக்கும் நயினாதீவுக்கும் அவர் விஜயம் செய்தார் என்றும் புத்தரின் காலடி பதிந்த நாடு என்பதாலும் புத்தரால் ஆசீர்வதிக்கப்பட்ட பூமி என்பதாலும் இலங்கையில் பௌத்தம் நிலைக்கும் என அவர் கூறியுள்ளதாலும் இலங்கை ஒரு பௌத்த நாடு என்ற கருத்தை மகாவம்சம் விதைத்துள்ளது. சிங்களவரின் பௌத்த தீவிரவாதத்தின் அஸ்திவாரம் அதுதான். மகாவம்சத்தின் கூற்றுக்கு எவ்வித வரலாற்று ஆதாரமும் இல்லை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மற்றக் கதை விஜயன் இலங்கைக்கு வந்த தினம் சம்பந்தப் பட்டது. விஜயன் கி.மு 543 மே மாதம் பௌர்ணமி தினத்தன்று, புத்தர் பரிநிர்வாணம் அடைந்த அதே தினத்தில் இலங்கைக்கு வந்ததாக மகாவம்சம் கூறுகிறது. பௌத்தத்தைப் பாதுகாப்பதற்காக சிங்கள இனம் தோற்றுவிக்கப்பட்டது என்ற கருத்தை ஏற்படுத்தியது இக் கதை தான். பௌத்த தீவிரவாதம் இக்கதை மூலம் வளர்க்கப்படுகிறது.

மகாநாம தேரரின் கவனம் விஜயனின் வருகையில் இருக்க வில்லை. துட்டகாமினி மன்னன் கதையில் இருந்தது. அநுராதபுரத்தி லிருந்து தமிழரை சிங்களவர் விரட்டிய சம்பவத்தில் மகா நாமவின் கவனம் குவிந்திருந்தது. சிங்களவர்- தமிழர் போரில் அவரின் முழுக் கவனமும் இருந்தது. அநுராதபுரத்தை ஆண்ட எல்லாளன் என்ற தமிழ் மன்னனை துட்டகாமினி என்ற சிங்கள இளவரசன் வென்று அநுராதபுர இராச்சியத்தை மீண்டும் சிங்களவர் கைக்கு மாற்றிய கதையை வீரகா வியமாகச் சித்திரிப்பதில் மகாநாம கவனம் செலுத்தினார்.

விஜயனின் கதையும் துட்டகாமினியின் வரலாறும் சிங்கள மக்களின் உள்ளங்களில் ஆழமாகப் பதிந்துவிட்டன. இரண்டும் சிங்கள-தமிழ் உறவைப் பெரிதும் பாதித்துள்ளன. இந்த இரண்டும் சிங்கள இனவாதத்துக்கும் மதவாதத்துக்கும் வித்திட்டன. அநுராதபுரம் விஜய னின் வருகைக்கு 500 ஆண்டுகளுக்கு முன்பே (இற்றைக்கு 3000 ஆண் டுகளுக்கு முன்பு) ஒரு நகரமாக உருவெடுத்துள்ளமை தொல்பொருள் அகழ்வாராய்ச்சிகள் காட்டுகின்றன. விஜயனின் வருகைக்கு 300 ஆண்டு களுக்கு முன்பு அது 15 சதுர ஹெக்டயர் பரப்பளவுடையதாக இருந்ததாக தெரனியகலை கூறுகிறார்.

அநுராதபுர இராச்சியத்துக்கு வித்திட்டவர்கள் சிங்களவரல்ல என்பதை இவ்வாராய்ச்சிகள் காட்டுகின்றன. அநுராதபுர இராச்சியத் தின் ஆரம்ப காலத்திலிருந்தே, கி.மு. மூன்றாம் நூற்றாண்டிலிருந்தே, அதைக் கைப்பற்றுவதில் தமிழர்கள் ஆர்வம் காட்டினர். கி.மு. இரண்டாம் நூற்றாண்டில் இரண்டு தமிழ் மன்னர்களான சேன. குத்திக்க, அநுராதபுரத்தை கி. மு. 177 கைப்பற்றி 22 வருடங்கள் ஆட்சி புரிந்தனர். அதே நூற்றாண்டில் எல்லாளன் அநுராதபுரத்தை 44 ஆண்டுகள் ஆட்சி புரிந்தான். கி. மு. 161ல் துட்டகெமுனு எல்லாளனைத் தோற்கடித்து அநுராதபுரத்தை தன் ஆட்சியின் கீழ் கொண்டு வந்தான்.

கி.மு. 137ல் துட்டகெமுனு இறந்ததும் மீண்டும் தமிழர்களின் தாக்குதல்களுக்கு அநுராதபுர இராச்சியம் ஆளானது. அரசியல் உறுதியின்மையால் அநுராதபுர இராச்சியம் பாதிக்கப்பட்டது. அதன் விளைவாக சிற்றரசுகள் தோன்றின. திறை செலுத்துவதன் மூலம்



அவை அநுராதபுர இராச்சியத்தின் மேலாண்மையை ஏற்றுக் கொண்டனவேயன்றி நடைமுறையில் சுதந்திரமாக இயங்கின.

இக் காரணங்களின் அடிப்படையில் சிங்கள வரலாற்றாசிரியர் கே. எம். டி. சில்வா தந்த முடிவு இது :

> இலங்கை அதன் பதிவு செய்யப்பட்ட வரலாற்றின் ஆரம்ப கால முதல் பல்லின சமுதாயமாக இருந்தது. திராவிடர்களின் செல்வாக்கு குறிப்பிடத் தக்க அளவு இருந்தது. ஐந்தாம், ஆறாம் நூற்றாண்டுகளில் இலங்கையின் வடக்கு, கிழக்கு பகுதிகளில் தமிழ் குடியிருப்புக்கள் அமைக்கப்பட்டன. அவர்கள் சிறு சிறு குடியேற்றங்களாக குறுநில மன்னர்களின் கீழ் வாழ்ந்தனர். தங்கள் இனம், மதம், மொழி ஆகியவற்றையிட்டு அவர்கள் மிகவும் பெருமை கொண்டிருந்தனர். சில காலங்களில் அவர்கள் அநுராதபுர மன்னர்களுக்குத் திறை செலுத்தினர். சில காலப் பகுதிகளில் திறை செலுத்தவில்லை.
>
> சோழ இராச்சியம் பலம் பெற்று விளங்கிய 10ம், 11ம், 12ம், நூற்றாண்டுகளில் அநுராதபுர இராச்சியம் அழிக்கப்பட்டது. சிங்கள மன்னர்கள் பொலனறுவையை தமது தலைநகராக்கினர். பதின்மூன்றாம் நூற்றாண்டில் கம்பளை, குருநாகல், யாப்பகூவ, கோட்டே ஆகிய பகுதிகளுக்குத் தமது தலைநகரை மாற்றிக் கொண்டனர். அதாவது, தமிழரின் அழுத்தம் காரணமாக சிங்களவர்கள் தெற்கு நோக்கி தமது தலைநகரங்களை நகர்த்தினர்.

**யாழ்ப்பாண இராச்சியம்**

பதின்மூன்றாம் நூற்றாண்டில் சோழ இராச்சியம் பலவீன முற்றது. பாண்டிய இராச்சியம் பலம் பெற்றது. அப்பொழுது இலங்கை யின் வட பகுதியை மெகத என்ற சிங்கள மன்னன் ஆண்டு வந்தான். சோழ இராச்சியத்தின் சிற்றரசனாகவே அவன் ஆட்சி புரிந்தான். அக்காலத்தில் மலேயாவில் இருந்து சந்திரபானு என்ற மன்னன் இலங்கை மீது படை எடுத்தான். தம்பதெனியாவைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்த இரண்டாம் பராக்கிரமபாகு சந்திரபானுவைத் தோற்கடித்தான். சந்திரபானு யாழ்ப்பாணம் போய் தன்னை யாழ்ப்பாண மன்னனாக்கிக் கொண்டான். சிங்கள மன்னர் இரண்டாம் பராக்கிரம பாகுவுக்கு உதவுவதற்காக பாண்டிய மன்னன் படையொன்றை அனுப்பி சந்திரபானுவைத் தோற்கடித்தான். ஆனால், யாழ்ப்பாணத்தின் ஆட்சிப் பொறுப்பைச் சிங்களவரிடம் ஒப்படைக்க பாண்டிய மன்னன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



விரும்பவில்லை. பாண்டியர்களின் சிற்றரசனாக யாழ்ப்பாணத்தை ஆளுவதற்குச் சந்திரபானுவுக்கு அங்கீகாரமளித்தனர். யாழ்ப்பாணத்தில் இருந்து கொண்டு சிங்கள இராச்சியத்துக்கெதிராக சந்திர பானு படையெடுத்தான். இரண்டாம் பராக்கிரமபாகு பாண்டிய மன்னனின் உதவியை நாடினான். பாண்டியனின்படை சந்திர பானுவைத் தோற்கடித்தது. யுத்தத்தில் சந்திரபானு இறந்து விட்டான். சந்திரபானுவின் மகன் யாழ்ப்பாண அரசனாக்கப்பட்டான். அவனும் சிங்கள இராச்சியத்தின் மீது படையெடுத்தான். பாண்டியர்கள் வேறொரு படையை அனுப்பி அவனைத் தோற்கடித்தனர்.

யாழ்ப்பாணத்தை சிங்கள இராச்சியத்திடம் ஒப்படைக்க விரும்பாத பாண்டிய மன்னன் தனது படைத் தளபதி ஆரியச்சக்கரவர்த்தியை யாழ்ப்பாண மன்னனாக்கினான். முஸ்லிம்களின் ஊடுருவலினால் பாண்டிய இராச்சியம் வலுவிழந்ததும் ஆரியச்சக்கரவர்த்தி சுதந்திரமாக இயங்கி யாழ்ப்பாண இராச்சியத்தை அமைத்தான். பொலன்னறுவை அரசின் வீழ்ச்சியைத் தொடர்ந்து கி. பி. 13 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் வடபகுதியில் சிங்கை நகரை மையமாக வைத்து ஆரியச் சக்கர வர்த்திகளின் தலைமையில் தோன்றிய யாழ்ப்பாணத்து அரசு ஈற்றில் போர் முனையில் போர்த்துக்கேயரால் 1619 இல்வீழ்ச்சியுறும் வரை ஒரு செல்வாக்குள்ள அரசாகத் திகழ்ந்தது.

இவ்வரசை கி. பி. 1450-1467 ஆகிய காலப்பகுதியைக் கொண்ட 17 வருடங்கள் மாத்திரம் கோட்டை அரசு ஆட்சி செய்தது. இச்சந்தர்ப்பத்தினைத் தவிர ஏனைய காலப்பகுதியில் இவ்வரசு சுதந்திரமாக இயங்கியதோடு கி. பி. 14ம் நூற்றாண்டில் இலங்கையின் மிகப் பலம் வாய்ந்த அரசாகவும் காணப்பட்டதைக் கூறும் கே. எம். டி. சில்வா, இக்கால கட்டத்தில் மேற்கே புத்தளம் பகுதிவரை பரந்து இலங்கை முழுவதையும் தமக்குக் கீழ் கொண்டு வருவதற்குரிய வாய்ப்பினை இது பெற்றிருந்தாகக் கூறுகிறார். தென்னிந்தியாவில் விஜயநகரப் பேரரசின் தலையீடு யாழ்ப்பாண இராச்சியம் இலங்கை முழுவதையும் தன் ஆட்சியின் கீழ் வாய்ப்பை இழந்தமைக்குக் காரணமாக அமைந்ததாக கே.எம்.டி சில்வா கூறியுள்ளார். இலங்கையின் தென் பகுதிக்கு தன் செல்வாக்கைப் பரப்பும் முயற்சியைக் கைவிட்டு தென்னிந்திய தலையீட்டைச் சமாளிக்கும் நிலைக்கு யாழ்ப்பாண இராச்சியம் தள்ளப்பட்டதாக கே.எம்.டி சில்வா கூறுகிறார்.

கி. பி. 14ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் யாழ்ப்பாண அரசின் மேலாண்மை தென்னிலங்கை அரசுகளின் மீது கிட்டத்தட்ட 15



ஆண்டுகளுக்கு இருந்தது போலவே கோட்டை அரசின் மேலாண்மை கி. பி. 16ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் 17 வருடங்கள் யாழ்ப்பாண இராச்சியத்தின் மீது இருந்தது. பதினாறாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் யாழ்ப்பாண இராச்சியத்தியத்தின் கட்டுப்பாடு புத்தளம் வரை இருந்தது. யாழ்ப்பாண இராச்சியம் 1353ல் நடத்திய படை யெடுப்பின் மூலம் வன்னியிலுள்ள நாலு கோரளைகளை தன் ஆட்சியின் கீழ் கொண்டு வந்தது. அடுத்த இரண்டு தசாப்தங்களில் மாத்தளை மாவட்டம் வரை தமிழ்ப் படைகள் முன்னேறின. கடற்படை பாணந் துறைக்குத் தெற்கே வரை போனது. அப்பொழுது இலங்கை முழுவதிலும் தமது மேலாண்மையை நிலை நாட்டக் கூடிய நிலையில் யாழ்ப்பாண இராச்சியம் இருந்தது. ஆனால், பாக்கு நீரிணையைக் கடந்து தமது அதிகாரத்தை நிலை நாட்ட முயன்ற விஜயநகர சாம்ராச்சியத்தின் முன்னேற்றத்தைக் கட்டுப் படுத்தவேண்டிய நிலைமை தோன்றியதால் யாழ்ப்பாண இராச்சியம் இலங்கை முழுவதையும் தன் மேலாண்மையின் கீழ் கொண்டு வரும் சந்தர்ப்பத்தை இழந்தது.

யாழ்ப்பாண இராச்சியத்தினிடமிருந்து வந்த ஆபத்து 14ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தணிந்துவிட்ட போதிலும் அது மீண்டும் தலை தூக்கக் கூடும் என்று சிங்கள மன்னர்கள் பயந்தனர். அதனால் சிங்கள அரசின் தலைநகரை மத்திய பகுதியிலிருந்து மேற்குக் கரைக்கு, கொழும்புக்கு அருகேயுள்ள கோட்டைக்கு, மாற்றினர். கோட்டை இராச்சியம் தோன்றியது அவ்வாறு தான். கோட்டை இராச்சியம் அதன் உச்சக்கட்டத்தை ஆறாம் பராக்கிரமபாகுவின்காலத்தில் அடைந்தது. 1411 இல் ஆட்சிக் கட்டில் ஏறிய ஆறாம் பராக்கிரமபாகு 55 வருடங்கள் ஆட்சி புரிந்தார். அவர் வன்னியில் ஆண்ட சிற்றரசர்களை வென்றதோடு யாழ்ப்பாணத்தையும் கைப்பற்றினார். தனது சுவீகார மகனான சப்புமல் குமாரய என்ற தமிழரின் (செம்பகப் பெருமாள்) தலைமையில் யாழ்ப்பாணத்துக்கு படை அனுப்பினார். ஆறாம் பராக்கிரமபாகு 1466 இல் இறந்ததும் அவரின் பேரன் மன்னரானார். சப்புமல் குமாரய கோட்டைக்குத் திரும்பி ஆட்சியைக் கைப்பற்றி ஆறாம் புவனேகபாகுஎன்ற பெயரில் ஆட்சி புரிந்தார்.

அரச பதவிக்கு நடந்த இந்தப் போரின் போது யாழ்ப்பாண இராச்சியமும் வன்னி குறுநில மன்னர்களும் தமது சுதந்திரத்தை மீண்டும் நிலை நாட்டினர். வன்னி குறுநில மன்னர்களைப் பற்றிய சிறு குறிப்பு ஒன்றையும் கே. எம் . டி. சில்வா கொடுத்துள்ளார். அது இதுதான்: "வன்னி குறுநில மன்னர்களை ஐந்து தொகுதியினராக வகைப்படுத்தலாம். யாழ்ப்பாண பட்டினத்தைச் சேர்ந்தோர், திருக்கோணமலைப்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பிரதேசத்தினர், மட்டக்களப்பைச் சேர்ந்த முக்குவ மன்னர்கள், புத்தளப் பகுதியினர், வட்ட மன்னர்கள், சிங்களவன்னியைச் சேர்ந்தோர்." (ஐந்து தொகுதியினர் என்று குறிப்பிட்ட போதிலும் ஆறு தொகுதியினரைக் கொடுத்துள்ளார்).

நல்லூரைத் தலைநகராகக் கொண்ட யாழ்ப்பாண இராச்சியம் ஆறாம் புவனேகபாகுவின் மரணத்தின் பின்பு தனது சுதந்திரத்தைத் திரும்பப் பெற்றது. புதிய அரசனான பரராசசேகரன் மாதோட்டை வரை ஆட்சி செய்தான். வன்னி குறுநில மன்னர்களில் சிலர் யாழ்ப்பாண மன்னனுக்குத் திறை செலுத்தினர். வன்னி குறுநில அரசுகள் யல காடு வரையும் பாணம வரையும் பரந்திருந்தது. பரராசசேகரனுக்குப் பின் முதலாம் சங்கிலி, புவிராஜ பண்டாரம், பெரிய பிள்ளை, எதிர்மன்ன சிங்கம், இரண்டாம் சங்கிலி ஆகியோர் யாழ்ப்பாண இராச்சியத்தை ஆண்டனர். 1619ம் ஆண்டில் போர்த்துக்கேயர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றித் தமது ஆட்சியின் கீழ் கொண்டு வந்தனர். சுதந்திரமாக இருந்த யாழ்ப்பாண இராச்சியம் போர்த்துக்கேயர் வசம் போனது. போர்த்துக்கேயரின் பின் ஒல்லாந்தரும் அடுத்து பிரித்தானியரும் இலங் கையை ஆண்டனர். இவ்வரலாற்றுக் குறிப்புகள் உணர்த்தும் சில உண்மைகள்:

- ★ இலங்கையில் சிங்களவரா தமிழரா முதலில் குடியேறினர் என்று திடமாகக் கூற முடியாது.
- ★ சிங்களவர்களும், தமிழர்களும் சில பகுதிகளில் சேர்ந்து வாழ்ந்தாலும் தனித்தனிப் பிரதேசங்களில் செறிந்து வாழ்ந்தனர்.
- ★ ஈராயிரத்துக்கும் மேற்பட்ட ஆண்டு வரலாற்றில் சொற்ப காலப் பகுதியிலேயே இலங்கை ஒரு மன்னனின் குடையின் கீழ் இருந்திருக்கிறது.
- ★ அப்பொழுதும் சம்பந்தப்பட்ட மன்னர்கள் திறை வாங்கு வதன் மூலம் தமது மேலாண்மையை நிலை நாட்டினரேயல் லாமல் எல்லா மக்களையும் தமது நேரடி ஆட்சியின் கீழ் கொண்டுவர முயலவில்லை.
- ★ பிரித்தானியரின் ஆட்சிக்கு முன்பு அதிகாரங்கள் முழுவதும் ஒரு மத்திய அமைப்பில் குவிக்கப்படவில்லை.



இந்த ஐந்து கருத்துக்களையும் தந்தை செல்வா இலங்கை வரலாறு சம்பந்தமான தன் ஆழ்ந்த அறிவின் அடிப்படையில் உய்த்துணர்ந்து கொண்டார். அதே வேளை சர்ச்சைக்குரிய வரலாற்றுத் தகவல்களின் அடிப்படையில் குடும்பியைப் பிடித்துச் சண்டை போடுவதை தந்தை செல்வா விரும்பவில்லை. அவர் அதை ஊக்குவிக்கவுமில்லை. அது வீண்வேலை என்று தந்தை சொல்லி விடுவார். இந்நிலைப்பாட்டை தமிழரசுக் கட்சியின் அங்குரார்ப்பணக் கூட்டத்தில்- 1949 டிசம்பர் 18ல்-தந்தை முதலில் கூறினார். ஐரோப்பியர் 16ம் நூற்றாண்டில் இலங்கைக்கு வந்த போது இங்குநிலவிய நிலைமையைக் கருத்தில் கொண்டால் போதுமானது என்று சட்டத் துறையில் புகழ்பெற்றிருந்த தந்தை சொன்னார்.

போர்த்துக்கேயர் 1505ல் வந்தபோது இலங்கையில் வசித்த மக்கள் பல நூற்றாண்டுகளாகச் சிங்களம் பேசும் இனம், தமிழ் பேசும் இனம் என இரு தேசிய இனங்களாகப் பிரிந்து வாழ்ந்து வந்ததாகவும் அந்நிய ஆட்சி முடிவுக்கு வந்தபோதுஅந்த நிலைமையே திரும்பியிருக்க வேண்டும் என்றும் தந்தை வாதிட்டார். சிங்கள இனத்தின் தோற்றத்தை சர்ச்சையாக்குவது தேவையற்றது என்றும் தந்தை கூறினார். சிங்கள மக்கள் இலங்கையில் வாழும் தேசிய இனம். இலங்கையின் பெரும்பான்மை இனம்.சிங்கள மொழி, பௌத்தம், அவர்களின் கலாசாரம், வழக்காறு, சட்டம் முதலியவை அவர்களின் அடையாளங்கள். அதைப் போன்றே தமிழரும் தமிழ் மொழியையும் இந்து மதத்தையும் பிரத்தியேக கலாசாரத்தையும் வழக்காறுகளையும் தமது அடையாளங்களாகக் கொண்டிருந்தனர். சிங்களவர் தங்களை ஆரிய இனத்தவர் எனக் கூறுவதையும் பிரச்சினையாக்கத் தேவை யில்லை. திராவிட இனத்தவரான தமிழர்களிலிருந்து தங்களை வேறுபடுத்திக் காட்ட- தமிழரிலும்தாங்கள் மேலானவர்கள் என்று சொல்ல- சிங்களவர் இக் கருத்தைக் கூறலாம்.

சிங்களவர் தங்களை ஆரியர் என்று அடையாளப் படுத்துவதை திராவிட இனத்தவரான தமிழர் ஆதிகாலத்திலிருந்தே இலங்கையில் வாழ்ந்தமைக்குச் சான்றாக ஏற்றுக் கொள்வதே சிறந்தது என்று தந்தை வாதிடுவதுண்டு. ஆதிகாலம் முதல் இலங்கை பல இன மக்கள் வாழும் நாடு என்பதை இது வலுப்படுத்துகிறது என்றும் அவர் ஒருமுறை சுட்டிக் காட்டினார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**பிரித்தானியர் ஆட்சியில்**

தந்தை செல்வா வரலாறு படைத்தவர். இலங்கை வரலாற்றின் போக்கை சரிவரப் புரிந்து கொண்டமையினாலேயே அவரால் வரலாறு படைக்க முடிந்தது. அந்நியர் வந்தபோது இருந்த நிலைமையும் அதன்பின் ஏற்பட்ட மாற்றங்களுமே எமக்கு முக்கியமானவை என்று தந்தை கூறினார்

1505ல் போர்த்துக்கேயர் இலங்கைக்கு வர்த்தகர்களாக வந்த சமயம் கோட்டே இராச்சியத்தின் மன்னராக ஒன்பதாவது தர்ம பராக் கிரமபாகு ஆட்சி புரிந்தார். யாழ்ப்பாண இராச்சியத்தைப் போரில் வெற்றி கொண்ட ஆறாவது பராக்கிரமபாகு 1466ம் ஆண்டில் இறந் ததையடுத்து வாரிசு சண்டைகளால் கோட்டே இராச்சியமும் பல மிழந்து விட்டது. கோட்டே இராச்சியத்தின் ஆட்சி அவ்விராச்சியத்தின் எல்லைக்கு வெளியே செல்லவில்லை. எனினும் அவர்கள் சக்கரவர்த்தி என்ற பட்டத்தைக் கைவிடவில்லை. அதைப் பற்றி வரலாற்றாசிரியர் பேராசிரியர் கே. எம். டி. சில்வா இலங்கை வரலாற்றில் இவ்வாறு எழுதுகிறார். "ஆறாம் பராக்கிரமபாகுவின் வாரிசுகள் தங்களை இலங் கையின் சக்கரவர்த்திகள் என்று கூறிக் கொண்ட போதிலும் நடை முறையில் அவர்களின் ஆட்சி கோட்டை இராச்சியத்தின் எல்லைக்கு வெளியே செல்லவில்லை. கோட்டை இராச்சியத்துக்குள்ளேயே அவர்களின் அதிகாரத்துக்கு எதிராகக் கிளர்ச்சிகள் எழுந்தன".

நல்லூரைத் தலைநகராகக் கொண்ட யாழ்ப்பாண இராச்சியம் ஆறாம் பராக்கிரமபாகு இறந்ததும் தனது சுதந்திரத்தை மீள நிலை நாட்டிக் கொண்டது. புதிய மன்னரான பரராஜசேகரன் (1472-1519) யாழ் குடாநாட்டை ஆட்சி புரிந்ததோடு சில வன்னி குறுநில மன்னர்களின் கீழ்ப் படிவையும் பெற்றார். ஆறாம் புவனேகபாகு 1466ம் ஆண்டில் இறந்ததும் கோட்டே இராச்சியத்தில் வாரிசுச் சண்டைகள் தொடங் கின. ஆறாம் விஜயபாகு (1513-21) காலத்தில் நடந்த சண்டை கோட்டே இராச்சியத்துக்கே முடிவு கட்டியது. ஆறாம் விஜயபாகு இரண்டு பேரைத் திருமணம் செய்தவர். மூத்த மகாராணிக்கு மூன்று ஆண் மக்கள். இளைய மகாராணிக்கு ஒரு மகன். இளைய மகாராணியின் மகனை அரசனாக்கினார் மன்னர். கண்டி மன்னரின் உதவியைப் பெற்ற மூத்த மகாராணியின் மக்கள் 1521ல் தமது தந்தையைக் கொன்று கோட்டே இராச்சியத்தைப் பங்கிட்டுக் கொண்டனர். இப் பங்கீட்டு ஒழுங்கின் கீழ் கோட்டை மன்னரான ஏழாம் புவனேகபாகு சீத்தாவாக்கையைப் பெற்ற தனது தம்பி மாயாதுன்னைக்கு பயந்து போர்த்துக்கேயரின் உதவியைப் பெற்று அவர்களின் கைப்பொம்மை ஆனார்.



அப்பொழுது முதலாம் சங்கிலி மன்னன் யாழ்ப்பாண இராச்சி யத்தை சுதந்திரமாக ஆண்டதோடு யாழ்ப்பாண இராச்சியத்தின் எல்லை களை விஸ்தரித்தான். கோட்டையைத் தமது செல்வாக்குக்குள் போர்த்துக்கேயர் கொண்டு வந்த போது யாழ்ப்பாண இராச்சியம் பலம் வாய்ந்த சுதந்திர இராச்சியமாக இருந்தது. யாழ்ப்பாண இராச்சியத் துக்குள் தமது செல்வாக்கைப் பரப்பும் வேலையை 1540ம் ஆண்டுகளில் தான் போர்த்துக்கேயர் ஆரம்பித்தனர். 1544ம் ஆண்டில் கிறிஸ்தவ மிஷனரிகள் மன்னாருக்கும், யாழ்ப்பாணத்துக்கும்போய்த் தமது மதப்பி ரசாரத்தை ஆரம்பித்தனர். இந்து மதத்தவனான சங்கிலி மன்னர் ரோமன் கத்தோலிக்க மதத்தைத் தழுவியவர்களைக் கொலை செய்தான். அதற் குப் பழிவாங்குவதற்காக1560ல் போர்த்துக்கேயர் படை மன்னாருக்கு அனுப்பப்பட்டது. அப்படை தோற்றுப் பின்வாங்கியது. மறுபடியும் 1591ல் போர்த்துக்கேயர் தமது படையை அனுப்பினர். அப்படை மன்னரைக் கொன்று புவிராஜபண்டாரத்தை மன்னராக்கியது. அவருக்குப் பின்பு பெரிய பிள்ளை, எதிர்மனசிங்கம், இரண்டாவது சங்கிலி ஆகியோர் ஆட்சி புரிந்தனர். 1619ம் ஆண்டில் யாழ்ப்பாண இராச்சியத்தைப் போர்த்துக்கேயர் தமது நேரடி ஆட்சியின் கீழ் கொண்டு வந்தனர்.

மேலேயுள்ள வரலாற்றுக் குறிப்பு தந்தை செல்வாவின் வர லாற்று மதிப்பீட்டை உறுதி செய்கின்றது. போர்த்துக்கேயர் இலங்கைக் குப் பதினாறாம் நூற்றாண்டின் முற்பகுதியில் வந்தபோது சிங்கள தேசிய இனம் தென்பகுதியிலும், தமிழ் தேசிய இனம் வட-கிழக்குப் பகுதியிலும் வாழ்ந்தன. அத்துடன் அப்போதிருந்த சிங்கள இராச்சி யமான கோட்டே இராச்சியம் வட-கிழக்கில் ஆட்சி புரியவோ மேலா திக்கம் செலுத்தவோ இல்லை. கோட்டே இராச்சியம் போர்த்துக் கேயரின் உதவியை நாடிப் பெற்று அவர்கள் வசம் போனது . யாழ்ப் பாண இராச்சியத்தைப் போர்த்துக்கேயர் போரிட்டுத் தலைநகர் நல்லூரை அழித்து சங்கிலி மன்னனைக் கொலை செய்து தமது செல்வாக் குக்குள் கொண்டு வந்தனர்.

போர்த்துக்கேயரும் அவர்களை விரட்டி விட்டு இலங்கையின் கரையோரப் பகுதிகளை 1640முதல் 1798 வரை ஆண்ட ஒல்லாந்தரும் தாம் கைப்பற்றிய பகுதிகளின் தனித்துவத்தைப் பாதுகாத்தனர். ஒவ் வொரு பகுதியிலும் நிலவிய உள்ளூர்ச் சட்டங்களையும், அவை தெளிவானவையாக இருப்பின் ஏற்று நடைமுறைப் படுத்தினர். அதன் விளைவாக யாழ்ப்பாணத்தில் தேசவழமைச் சட்டமும், மட்டக்களப் பில் முக்குவர் சட்டமும் பின்பற்றப்பட்டன. கரையோரச் சிங்களப்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பிரதேசங்களிலிருந்த சட்ட வழக்குகள் தெளிவற்றவையாக இருந்தமையினால் உரோமன் - டச்சு சட்டம் அமுல் செய்யப்பட்டது.

1798ல் பிரித்தானிய கிழக்கிந்திய கம்பெனியினர் இலங்கையின் கரையோரப் பகுதிகளைக் கைப்பற்றினர். 1802ம் ஆண்டில் இலங்கை குடியேற்ற நாடாக்கப்பட்டு பிரித்தானிய அரசின் நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்பட்டது. பிரிட்டனின் முதலாவது கவர்னராக பிரட்ரிக் நோத் நியமிக்கப் பட்டார். ஆசியாவிலும், தூரகிழக்கு ஆசியாவிலும் தனது செல்வாக்கை அதிகரிக்க உதவும் ஒரு கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த நிலையமாகப் பிரிட்டன் இலங்கையை நோக்கியது. அதற்கு இலங்கை முழுவதையும் தன் ஆட்சியின் கீழ் கொண்டு வருவதும் நாட்டைப் பிரிட்டிஷ் மயமாக்குவதும் அத்தியாவசிய மானவையாகக் கொள்ளப்பட்டன. இந்த நோக்கை அமுல் செய்யும் பணி கவர்னர் நோத் காலத்திலிருந்தே ஆரம்பமாகியது. நீதி நிர்வாகம், கல்விமுறை, நிர்வாகம், ஆகியவற்றைப் பிரிட்டிஷ் மயமாக்குவதில் நோர்த் கவனம் செலுத்தினார். நோத்தின் காலத்திலேயே சுப்ரீம் கோடும் உயர் நீதி மன்றமும் அமைக்கப்பட்டு ஆங்கில மொழி நீதிமன்ற மொழியாக்கப்பட்டது. பிரித்தானிய நீதிமன்ற நடைமுறைகள் புகுத்தப்பட்டன.

போர்த்துக்கேயரும், ஒல்லாந்தரும் உள்ளூர் நிர்வாக அமைப்பைப் பயன்படுத்திய போக்கிலிருந்து விலகி சிவில் சேவை ஒன்று அமைக்கப்பட்டது. இளம் பிரித்தானியர் அச் சேவையில் சேர்க்கப்பட்டனர். குறுகிய பயிற்சியின் பின் அவர்கள் பல்வேறு பகுதிகளுக்கும் கலக்டர்களாகநியமிக்கப்பட்டனர். கொழும்பிலுள்ள நிர்வாகத்தின் பிரதிநிதிகளாக அவர்கள் கருதப்பட்டனர். கொழும்புக்குப் பதில் சொல்லும், கொழும்பின் உத்தரவுகளுக்கும் கீழ்ப் பணியும் வழக்கு இதனால் உருவாக்கப்பட்டது. இந்த நிர்வாகங்களுக்கு உதவுவதற்காக இலிகிதர் சேவை ஆரம்பிக்கப்பட்டது.

பறங்கியர்களே அப்பதவிகளுக்கு அதிகமாக நியமிக்கப் பட்டனர். பிரதேச வழக்குகளுக்கும், செல்வாக்குகளுக்கும் கட்டுப்படாத இவர்கள் எதற்கும் கொழும்பை எதிர்பார்க்கும் கலாசாரத்தை நாட்டில் உருவாக்கினர். கலக்டர்களுக்கு நிர்வாக அதிகாரத்துடன் பொலிஸ் அதிகாரமும் நீதி நிர்வாகமும் ஒப்படைக்கப்பட்டன. சேகரிக்கப்படும் நிதி, செய்யப்படும் செலவு ஆகியவற்றின் கணக்குகள் கொழும்பின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டன.

கண்டி இராச்சியம் 1815ல் கைப்பற்றப் பட்டதன் பின்பு இலங்கையை ஒரே நாடாகக் கருதும் பிரிட்டிஷ் போக்கு மேலும் தீவிரமடைந்தது. அதற்கு மூன்று காரணங்கள்:



★ கிறிஸ்தவ மதத்தைப் பரப்புவதில் காட்டப்பட்ட ஆர்வம்.

★ ஆங்கிலக் கல்வி.

★ பெருந்தோட்டப் பயிர்ச் செய்கை.

பிரித்தானியர் இலங்கையில் மட்டுமல்ல. அவர்கள் ஆண்ட சூரியன் மறையாத சாம்ராச்சியம் முழுவதும் இந்த ஆங்கிலேய மயமாக்கலையும் ஒரே நிர்வாக அமைப்புக்குள் கொண்டு வரும் நடைமுறையையும் பின் பற்றினர். அதற்கு முக்கிய காரணம்: "தமது பிரிட்டிஷ் தீவுகளைஒரே நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரும் போக்கை அவர்கள் கடைப்பிடித்தமை.

ஸ்கொத்லாந்தையும் வேல்ஸ்சையும் அயர்லாந்தையும். ஒரே நாடாக இணைப்பதில் கவனம் செலுத்திய அவர்கள் தாம் கைப்பற்றிய நாடுகளையும் ஒரே நாடாக்குவதில் கவனம் செலுத்தியதில் ஆச்சரியமில்லை. இந்தியாவில், பர்மாவில், மலேசியாவில் மற்றும் மேற்கிந்தியத் தீவுகள் முதலியவற்றிலும் உள்ளூர் வேறுபாடுகளுக்கு உரிய மதிப்பளிக்காமல் ஒரே தன்மைப்படுத்தும் போக்கைக் கடைப்பிடித்தனர்".

**ஒற்றையாட்சி தோன்றியது**

இலங்கையில் அதிகாரம் முழுவதும் கொழும்பிலுள்ள ஆட்சியாளரிடம் குவிக்கப் பட்டன. இந்த அதிகாரக் குவிப்பின் முக்கிய மைல் கல் 1833. 1958 மே இறுதிப் பகுதியில் தந்தை செல்வாவை தினகரனுக்காகப் பேட்டி கண்டேன். சமஷ்டி அமைப்பை ஏன் முன்வைத்தீர்கள் என்று கேட்டேன்? சில தினங்களுக்கு முன் நடந்த கலவரத்தின் போது எனக்கு ஏதாவது நடந்ததா என்று விசாரித்தார். இரண்டு நாட்கள் லேக் ஹவுஸில் தங்கியிருந்ததால் தப்பித்துக் கொண்டேன் என்றேன். சிங்கள மக்கள் நல்லவர்கள். அவர்கள் தானே உன்னை அடிவாங்காமல் காப்பாற்றி வைத்திருந்தார்கள் என்றார். சொற்ப நேரம் ஆழ்ந்து சிந்தித்தார். அடிபடாமல் ஒற்றுமையாக வாழ்வோம் என்று சொல்லுகிறேன். அதைச் சொன்னதால்தான் எங்கடை மக்களுக்கு அடிக்கிறார்கள் என்றார்.

1956 ஜூன் காலிமுக சத்தியாக்கிரகத்தின் போது முதல் அடி. 1958 மே இரண்டாம் அடி. தம்பி! நான் இதுவரை சொன்னதை எழுதாதை. இது ஒவ் த ரெக்கோர்ட் என்றார். நான் அப்பொழுது பத்திரிகைத்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தொழிலுக்குப் புதுசு. ஆனால் இந்த அடிப்படை விஷயங்கள் தெரியும். 1959 முற்பகுதியில் நடந்த ஒரு விடயத்தையும் நான் இங்கே குறிப்பிட வேண்டும்.

தமிழரசுக் கட்சித் தலைவர் செல்வநாயகத்துடன் 1957ல் தான் செய்து கொண்ட பண்டாரநாயக்கா- செல்வநாயகம் ஒப்பந்தத்தைக் கிழித்தெறிந்தது தவறு என்பதை பிரதம மந்திரி பண்டாரநாயக்கா உணர்ந்திருந்த காலம். தமிழரசுக் கட்சியுடன் அவர் மீண்டும் பேச்சை ஆரம்பித்தார். அந்தக் காலத்தில் இன்றைய ஜனாதிபதி காரியாலயம் பாராளுமன்றமாக இருந்தது. பேரையாற்றுப் பக்கத்தில் ஒரு சிறிய அறையுண்டு. அதுதான் ரிப்போட்டர்களின் அறை. அதிலுள்ள கதவைத் திறந்து கொண்டு சபை மண்டபத்தின் எதிர்க்கட்சிப் பக்கத்தில் அமைந்துள்ள பிரஸ் பொக்சுக்குப் போகலாம். எதிர்க் கட்சி எம். பீக்களுக்குப் பக்கத்தில் ரிப்போட்டர்ஸ் அமருவார்கள். நான் பிரஸ் பொக்சில் இருந்த போது வேறொரு ரிப்போட்டர் சபா கோல் என்றார். லேக் ஹவுசுக்கென தனி டெலிபோன் ரிப்போட்டர்ஸ் அறையில் இருந்தது. முன்னாள் தினகரன் ஆசிரியர் ஆர். சிவகுருநாதன் அப்பொழுது தினகரன் செய்தி ஆசிரியர். அன்று காலை தமிழரசுக் கட்சி பிரதம மந்திரி எஸ்.டபிள்யு.ஆர். டி. பண்டாரநாயக்கவுடன் பேச்சுவார்த்தை நடத்தியதாகக் கேள்விப்பட்டதாகவும் அதைப் பற்றிய விபரங்களைக் கேட்டுக் கூறுமாறும் சொன்னார்.

அந்தக் காலத்தில் இப்போது போல பாதுகாப்புக் கெடுபிடி கிடையாது. பாராளுமன்ற பியோன்கள்தான் வாசலில் நிற்பார்கள். என்னைக் கண்டதும் புன்முறுவல் பூப்பார்கள். வருட ஆரம்பத்தில் நான் கொடுக்கும் டயறிக்குரிய பதில் மரியாதை. வழியில் சந்தித்த நண்பர் ஒருவரிடம் தமிழரசுக் கட்சித் தலைவர்களைக் கண்டீரா? என்று கேட்டேன். கன்ரீனுக்கு இப்பதான் போனார்கள். அங்கே போனேன். வன்னியசிங்கம் நின்றார். அவர் கோப்பாய் எம். பி. அவரை எனக்கு முன்பே தெரியும்.

'பிரதம மந்திரியுடன் பேசினீர்களா?'

'ஆம்.'

'என்ன பேசினீர்கள்?'

'பத்திரிகைகளுக்கு எதையும் கூறுவதில்லை என்று முடிவு செய்துள்ளோம். அதனால் எதையும் கூற முடியாது.'

சந்திப்பில் யார் யார் கலந்து கொண்டார்கள் எவ்வளவு நேரம் நடந்தது' எங்கே நடந்தது? என்பது போன்ற தகவல்களைக் கேட்டுப் பெற்றுக் கொண்டேன். பத்திரிகைத் துறையினர் இத்தகைய விவரங்க



ளைக் கொண்ட செய்திகளை எலும்புக் கூடு என்பார்கள். சதையைச் சேர்த்துக் கட்டினால் தான் செய்தி சுவாரசியமாக இருக்கும். வன்னியசிங்கத்திடம் இருந்து சதை கிடைக்காது என்பதைத் தெரிந்து கொண்டதும் முதலாம் மாடியிலுள்ள எம். பீ. க்களின் லொபிக்குப் போனேன். அங்கே ஒன்று அல்லது இரண்டு பொலிஸ்காரர் நிற்பார்கள். ஆட்கள் குவிந்து நின்றால் கொஞ்சம் தள்ளி நில்லுங்கள் என்பார்கள். அங்கே போய் பேச்சுவார்த்தையில் கலந்து கொண்ட அமைச்சர்கள் யாராவது வருகிறார்களா? என்று பார்த்துக் கொண்டு நின்றேன். நிதியமைச்சர் ஸ்டான்லி டி சொய்சா வந்தார். அவரிடம் போய் பேச்சுவார்த்தை பற்றி மெதுவாகக் கேட்டேன். "குதிரையின் வாயிலிருந்தே பெற்றுக் கொள்ளும்" என்று சொல்லியபடி என்னைக் கையில் பிடித்து இழுத்துக் கொண்டு போய் பிரதம மந்திரி பண்டாரநாயக்கா முன் நிறுத்தினார். நான் அங்கு போன விடயத்தை ஸ்டான்லி டி சொய்சாவே சொன்னார். பண்டாரநாயக்கா என்னைப் பற்றிக் கேட்கத் தொடங்கினார். நான் ஒரு பட்டதாரி என்றதும் சரி! பேனை இருக்கிறதா? பேப்பர் கொண்டு வந்தியா? என்று கேட்டார். நான் இரண்டையும் எடுத்ததும் சரி! நான் சொல்லுகிறேன். எழுது என்று சொல்லி விட்டு டிக்டேட் பண்ணினார். அதன் மொழிபெயர்ப்பு அடுத்த நாள் தினகரனில் வந்தது. "தமிழரசுக் கட்சியின் வேண்டுகோளுக்கிணங்க பிரதமர் அவர்களைச் சந்தித்ததாகவும், சிங்கள மொழிச் சட்டம் தமிழ் மக்களுக்கு ஏற்படுத்திய சில பாதிப்புக்கள் விவாதிக்கப்பட்டதாகவும், தமிழரசுக் கட்சித் தலைவர்கள் கூறிய விடயங்களைக் கவனத்துக்கு எடுப்பதாக பிரதமர் கூறியதாகவும்" செய்தி கூறியது.

அன்று நண்பகல் செல்வநாயகம் என்னைக் கண்டதும் என்னிடம் வந்தார். அந்தச் செய்தியை எழுதுவதற்கு முன் எங்களையும் கேட்டிருக்கலாமே என்றார். கேட்டேன் என்றேன். யாரை? வன்னியசிங்கத்தை. அவர் சொல்ல மறுத்து விட்டார். செல்வநாயகம் வன்னியசிங்கம் பக்கம் திரும்பினார். நீங்கள் சொல்லியிருக்க வேண்டும். சொல்லி விட்டு ஓவ்-த-ரெக்கோர்ட் ஆக வைத்துக்கொள்ளுங்கள். எழுத வேண்டாம் என்று சொன்னால் எழுத மாட்டார்கள் என்றார். நான் இந்தச் சம்பவத்தை பத்திரிகைத் துறை பற்றிய வகுப்புகள் நடத்தும் போது நான் சொல்வது உண்டு.

தந்தை செல்வா பத்திரிகையாளர்களுடன் மிகவும் தாராளமாகப் பழகுவார். 1958 மே பிற்பகுதியில் நடந்த பேட்டியின் போதும் ஒளிவு மறைவின்றிப் பேசினார். சரி இதை நீங்கள் எழுதலாம் என்று சொல்லி விட்டு சமஷ்டித் தீர்வைத் தான் தேர்ந்தெடுத்ததற்கான காரணத்தைக்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கூறினார். இரண்டு சகோதரிகள். அவர்களின் தந்தைக்கு ஒரு பெரிய வளவு இருந்தது. இரண்டு பக்கத்தில் இரண்டு வீடுகளைக் கட்டுவித்தார். ஆளுக்கொரு வீட்டைக் கொடுத்தார். பலா காய்த்தாலும் அவர்களுக்குள் சண்டை. மா காய்த்தாலும் சண்டை. புளியமரத்தாலும் சண்டை. தகப்பனிடம் போய் தமக்கை கூடிய பகுதியை எடுப்பதாக இளைய மகள் புகார் செய்வார். தகப்பன் என்ன செய்தார் தெரியுமா? காணியை அளந்து, பிரித்து எல்லை போட்டுக் கொடுத்திருக்கிறார். ஒரு காணியிலிருந்து மற்றதுக்குப் போவதற்கு நடுவில் ஒரு கடப்பு. அதன் பிறகு சண்டையில்லை. சந்தோஷமாக இருக்கிறார்கள். நான் கோருவது இந்தியாவிலிருந்து பாகிஸ்தானைப் பிரித்ததைப் போன்று பாகப் பிரிவினையல்ல. ஐக்கிய அமெரிக்காவில், கனடாவில், சுவிட்சர்லாந்தில் உள்ளதைப் போன்ற நாங்கள் எங்களின் அலுவல்களைக் கவனிக்கிறோம். நீங்கள் உங்கள் அலுவல்களைக் கவனியுங்கள். சில பொது விடயங்களில் சேர்ந்து செயல்படுவோம் என்ற ஒழுங்கையே என்று எனக்கு விளக்கினார்.

**1833ல் வந்தது**

இலங்கையில் ஒற்றையாட்சியை பிரிட்டிஷ் ஆட்சியாளர்களே ஏற்படுத்தினர் என்பதைத் தந்தை செல்வா சுட்டிக் காட்டினார். *1833*ம் ஆண்டுக்கு முன்பு இலங்கை ஒரே நிர்வாகத்தின் கீழ் இயங்கவில்லை என்பதைச் சொன்னார். துட்டுகெமுனு காலத்திலும் ஆறாம் பராக்கிரமபாகு காலத்திலும் இலங்கையில் ஒற்றை ஆட்சி நிலவியதாகச் சிலர் சொல்கிறார்கள். அது தவறு? என்றார். ஆங்கில மொழியில் "சவரினிற்றி", "சுசரினிற்றி" என்ற இரண்டு வார்த்தைகள் உள்ளன. முதலாவது சொல்லின் அர்த்தம் இறைமை. மற்றது மேலாதிக்கம். இரண்டும் வெவ்வேறு கருத்துக்கள். இலங்கை வரலாறு முழுவதிலும் வெவ்வேறு பகுதிகளை வெவ்வேறு சிற்றரசர்கள் ஆண்டனர். ஆண்டுக்கொருதடவை அவர்கள் பேரரசருக்குத் திறை செலுத்தினார்கள். திறை செலுத்த மறுத்து சுதந்திரமாக இயங்குபவர்களுக்கெதிராக மட்டுமே பேரரசன் படையெடுத்து அவர்களைப் பணிய வைப்பார்.

ஆறாம் பராக்கிரம பாகுவும் அதையேதான் செய்தான். சுதந்திரமாக இயங்கிய யாழ்ப்பாண அரசைப் பணிய வைக்க தனது வளர்ப்பு மகன் சப்புமல் குமாரயாவின் தலைமையில் படை அனுப்பினான். சப்புமல் குமாரயா வெற்றி பெற்றதும் அவனை யாழ்ப்பாண இராச்சியத்தின் மன்னனாக முடி சூட்டினான். யாழ்ப்பாண இராச்சியத்தை கோட்டே அரசுடன் இணைக்கவில்லை. ஆறாம் பராக்கிரமபாகு இறந்ததும் சப்புமல் குமாரயா கோட்டைக்குத் திரும்பினான். யாழ்ப்பாண இராச்சியம் தனது சுதந்திரத்தை நிலை நாட்டிக் கொண்டது.



பழைய வரலாறு எமக்குத் தேவையில்லை என்பதை அந்தப் பேட்டியின் போது தந்தை செல்வா சுட்டிக் காட்டினார். போர்த்துக்கேயர் "*1505*ம் ஆண்டில் இலங்கைக்கு வந்த போது வடக்கே யாழ்ப்பாண இராச்சியமும் கிழக்கே வன்னியர்களினது ஆட்சியும் நிலவின. அவர்களை வென்று போர்த்துக்கேயர் தமது ஆட்சியை அமைத்தார். போர்த்துக்கேயரிடமிருந்து அவ்வாட்சி உரிமை ஒல்லாந்தருக்கும் பின்பு பிரிட்டிஷாருக்கும் போனது. பிரிட்டிஷார் இலங்கையை விட்டு வெளியேறிய போது ஆட்சியை அவற்றிற்கு உரியவர்களிடம் ஒப்படைத்து விட்டுப் போயிருக்க வேண்டும். இதில் இரண்டு பகுதியினர் தவறிழைத்து விட்டனர்". என்றார் செல்வநாயகம் எனது பேட்டியின் போது.

யார் அவர்கள் என்று கேட்டேன். பிரிட்டிஷாரும் எங்கடை ஆட்களும் என்றார். நீங்களும் தான் என்றேன். ஓம் என்றார்.

*1798*ஆம் ஆண்டில் பிரிட்டிஷ் கிழக்கிந்திய கம்பெனி இலங்கையைக் கைப்பற்றிய போது தமிழ்ப் பகுதிகளும் சிங்களப் பகுதிகளும் வெவ்வேறாக தான் நிர்வகிக்கப்பட்டு வந்தன. இலங்கையின் வட-கீழ் பகுதி தமிழ்ப் பிரதேசமாகவும் தென்பகுதி சிங்களப் பிரதேசமாகவும் இருந்தன. நடுவே கண்டி இராச்சியமும் சுதந்திரமாக இயங்கிக் கொண்டிருந்தது. *1815*ம் ஆண்டு கண்டியைப் பிரித்தானியர் கைப்பற்றியதும் இலங்கை முழுவதும் பிரித்தானிய ஆட்சியின் கீழ் வந்தது. *1802*ம் ஆண்டில் இலங்கை குடியேற்ற நாடாக்கப் பட்டதும் பிரித்தானிய மன்னர் இலங்கையின் மன்னரானார். தனது பிரதிநிதியாகக் கவர்னர் ஒருவரை நியமித்தார். இலங்கையின் பல்வேறு பகுதிகளுக்கும் கலக்டர்கள் நியமிக்கப்பட்டனர். அவர்கள் கவர்னரின் பிரதிநிதிகளாகக் கடமை புரிந்து கவர்னரின் பணிப்புரைகளை நிறைவேற்றினர். பின்னர் கலக்டர் என்ற பெயருக்குப் பதிலாக அரசாங்க அதிபர் என்ற பெயர் அவ்வதிகாரிகளுக்கு வழங்கப்பட்டது. *1802*ம் ஆண்டில் துவக்கப்பட்ட இலங்கை சிவில் சேவையைச் சேர்ந்தவர்கள் அவர்கள். எனினும் அவர்கள் தாங்கள் கடமையாற்றிய பிரதேசங்களில் நிலவிய நடைமுறைகளைப் பின் பற்றினர்.

ஆனால், *1833*ம் ஆண்டு அமுல் செய்யப்பட்ட கோல்புருக் சீர்திருத்தங்கள் இந்த வேறுபாடுகள் யாவற்றையும் நீக்கி இலங்கை முழுவதும் ஒரே நிர்வாக அமைப்பின் கீழ் கொண்டு வந்தது. *1815*ம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஆண்டு கண்டி இராச்சியம் கைப்பற்றப்பட்டதன் பின்பு 1818ல் கண்டிப் புரட்சி நடைபெற்றது. அத்தகைய புரட்சி மீண்டும் தோன்றாமல் தடுப்பதே கோல்புரூக் கமிஷனின் பிரதானமான நோக்கம். இலங்கை முழுவதையும் ஒரே நிர்வாகத்தின் கீழ் கொண்டு வருவதன் மூலம் அதைச் செய்ய விரும்பினர். அத்துடன் கண்டிப் பகுதிகள் தனி அலகாக இருப்பதைத் தவிர்ப்பதற்காக இலங்கை ஐந்து நிர்வாகப் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு அவை ஒவ்வொன்றும் மாகாணம் எனப் பெயரிடப் பட்டது. அவ்வாறு பிரிக்கும் போது கண்டி இராச்சியத்தின் பெரும் பகுதி கரையோரப் பகுதிகளுடன் இணைக்கப்பட்டது. மத்திய மாகாணம் மட்டும்தான் கண்டியர்களுக்கு ஒதுக்கப்பட்டது. அதைச் சுற்றியுள்ள பிரதேசங்கள் கரையோரப் பகுதிகளுடன் சேர்க்கப்பட்டன. இதனால் கண்டி மக்கள் பலவீனப்படுத்தப்பட்டனர். தந்தை செல்வ நாயகம் இந்த விடயத்தை வலியுறுத்தி தனது பேட்டியின் போது சொன்னார்.

1833ம் ஆண்டுக்கு முன்பு இலங்கையில் ஒற்றையாட்சி முறை இருக்கவே இல்லை. 1833ல் தான் இலங்கை முழுவதும் ஒரே நிர்வா கத்தின் கீழ் கொண்டு வரப்பட்டது. பிரித்தானியரின் நோக்கம் கண்டி யரைப் பலவீனப் படுத்திப் பணிய வைப்பது. இலங்கையை ஐந்து மாகாணங்களாக பிரித்தானியர் பிரித்த போது கண்டிய இராச்சியத்தின் வன்னிப் பகுதியை வடமாகாணத்துடன் இணைத்தனர்.

1839ல் உருவாக்கப்பட்ட மாகாணங்கள் இவைதான். வட மாகாணம், கிழக்கு மாகாணம், மேல் மாகாணம், தென் மாகாணம், மத்திய மாகாணம். அதன் பின் நான்கு தடவைகள் மாகாண எல்லைகள் மாற்றியமைக்கப்பட்டுள்ளன. 1845ல் வடமாகாணத்தின் ஒரு பகுதியும் மேல் மாகாணத்தின் ஒரு பகுதியும் இணைக்கப் பட்டு வடமேல் மாகாணம் உருவாக்கப் பட்டது. 1873ல் வடமாகாணத்திலிருந்து சிங்களப் பகுதிகள் பிரிக்கப் பட்டு வடமத்திய மாகாணம் தோற்று விக்கப்பட்டது. 1886ல் கிழக்கு மாகாணம், தென் மாகாணம், மத்திய மாகாணத்தின் பகுதிகளைக் கொண்ட ஊவா மாகாணம் உருவாக்கப் பட்டது. 1889ல் தென் மாகாணம், மேல் மாகாணம் ஆகியவற்றின் சில பகுதிகள் பிரித்தெடுக்கப்பட்டு சப்ரகமுவ மாகாணம் உருவாக்கப் பட்டது. 1889ல் ஏற்படுத்தப்பட்ட நிர்வாக அமைப்புத் தான் இன்று வரை தொடருகிறது. இந்த மாகாண எல்லை மாற்றங்கள் தமிழ் மக்களை நேரடியாகப் பாதிக்கவில்லை. அதனால்தான் போலும் சட்ட சபைகளில் அங்கம் வகித்த தமிழர் பிரதிநிதிகள் மாகாண எல்லை



மாற்றங்களுக்கு எத்தகைய எதிர்ப்பையும் காட்டவில்லை. அதே சமயம், கோல்புரூக் சீர்திருத்தம் துவக்கி வைத்த வகுப்பு பிரதிநிதித்துவ முறை தமிழருக்குச் சாதகமாக அமைந்தது. அந்தச் சலுகையை நிலை நிறுத்துவதில் கவனம் செலுத்தியதால் தமிழ் இனத்துக்கு ஏற்படுத்தக் கூடிய உண்மையான, நிரந்தர பாதுகாப்பைப் பற்றிச் சிந்திக்கத் தவறி விட்டனர்.

நீங்களும் ஆரம்பத்தில் அதே தவறைத்தானே விட்டீர்கள்? என்றேன். ஒரே வார்த்தையில் ஆம் என்றார். தந்தை செல்வா தன் தவறுகளை நேரடியாக ஒப்புக் கொள்ளும் இயல்பை உடையவர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

4

# ஒற்றையாட்சியின் கேடுகள்

### விளைவித்த கேடுகள்

ஒற்றையாட்சி முறை தமிழர்களுக்கு விளைவித்த கேடுகளை தந்தை செல்வா மிகவும் தெளிவாக உணர்ந்து அக்கேடுகளிலிருந்து விடுபட உதவவல்ல மாற்று முறையாக சமஷ்டிஆட்சி முறையை முன்வைத்தார். ஒற்றையாட்சி முறை தமிழ் மக்களை பல வழிகளில் பாதித்து வருகிறது. ஒற்றையாட்சி முறை இந்த வழிகளில் தமிழ் மக்களைப் பாதிக்கிறது.

- ★ அதிகாரப் பறிப்பு
- ★ நிலப் பறிப்பு
- ★ பிரஜாவுரிமை பறிப்பு
- ★ தமிழ் மொழிக்கு உரிமை மறுப்பு
- ★ பௌத்த மதத்துக்கு முதலிடம்
- ★ தமிழர்களின் உடைமை, உயிர் பாதுகாப்பின்மை
- ★ அரச பயங்கரவாதம்

இவற்றில் அதிகாரப் பறிப்பு காலத்தால் முந்தியது.

1802ம் ஆண்டில் இலங்கை பிரித்தானிய குடியேற்ற நாடாக்கப்பட்டதும் கவர்னருக்கு உதவுவதற்காக ஆலோசனை சபை ஒன்று உருவாக்கப்பட்டது. பிரித்தானியர்களை உறுப்பினராகக் கொண்டிருந்த அவ்வாலோசனை சபையால் எவ்வித பலனும் ஏற்பட வில்லை. 1833 இலங்கை வரலாற்றில் ஒரு முக்கிய மைல்கல். அந்த



ஆண்டில் கோல்புருக் கமிஷனின் சிபாரிசுக்கிணங்க கண்டிப் பிரதேசம் கடற்கரைப் பிரதேசத்துடன் இணைக்கப்பட்டு இலங்கை முழுவதும் ஒரே நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்பட்டது. இவ்வாறுதான் இலங்கையில் ஒற்றையாட்சி ஆரம்பித்தது.

கோல்புருக் கமிஷனின் சிபார்சின் அடிப்படையில் ஆறு அதிகாரி களைக் கொண்ட நிர்வாக சபையும் 16 உறுப்பினர்களைக் கொண்ட சட்ட சபையும் உருவாக்கப்பட்டன. சட்ட சபை உறுப்பினர்களாக நிர்வாக சபை உறுப்பினர்களோடு வேறு நாலு அதிகாரிகள் நியமிக்கப் பட்டனர். எஞ்சிய ஆறு பேரும் அதிகாரிகளல்லாதோர். மூன்று ஐரோப் பியர்களும் ஒரு சிங்களவரும் ஒரு தமிழரும் ஒரு பறங்கியரும் அதி காரிகளல்லாத உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டனர். சிங்கள பிரதிநி தியாக நியமிக்கப்பட்டவர் ஜே. பி. பண்டிதரத்ன. அவர் ஒரு கீழ் நாட்டுச் சிங்களவர். தமிழ்ப் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டவர் ஏ. குமாரசாமி. அவர் யாழ்ப்பாணத் தமிழர். தமிழர் வரலாற்றைப் பாதித்த காரணிகளில் இந்த நியமனம் மிகவும் முக்கியமானது. தாங்களும் பெரும்பான்மைச் சமூகத்தினர் என்ற தவறான மனப்பாங்கை இந்நிய மனம் தமிழரிடையே ஏற்படுத்தியது. தமிழரும், சிங்களவரும் இலங் கையின் பெரும்பான்மைச் சமூகத்தினர் என்ற பாங்கிலேயே தமிழர் அடுத்த நூற்றாண்டு காலத்துக்கு மேல் நடந்து கொண்டனர்.

தமிழரும் சிங்களவரும் சமம் என்ற மனப்பாங்கையும் அது தோற்றுவித்தது. இந்தச் சமத்துவம் இலங்கைவாழ் மக்கள் யாவரும் சமவுரிமையுடையவர் என்ற அடிப்படையைக் கொண்டிருக்கவில்லை. சட்ட மன்றத்தில் சிங்களவர் பிரதிநிதிகளும் தமிழர் பிரதிநிதிகளும் சம எண்ணிக்கையினராகஇருக்க வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப் படையில் உருவாகியது. சனத்தொகையில் குறைந்த எண்ணிக்கையின ரான தமிழர் தாங்களும் சிறுபான்மைச் சமூகத்தவரே என்ற உண்மை உணரப்பட்ட பின்பும் தமிழ்த் தலைவர்கள் அதே சமத்துவ மனப்பான் மையினாலேயே ஆட்டிப் படைக்கப்பட்டனர். ஒரேயொரு மாற்றம் தான் ஏற்பட்டது. சட்டமன்றில் சிங்களப் பிரதிநிதிகளும் தமிழ்ப் பிரதி நிதிகளும் சம எண்ணிக்கையினராக இருக்க வேண்டும் என்று கோரிய தமிழ்த் தலைவர்கள் சிங்களப் பிரதிநிதிகளும் சிறுபான்மை இனங்களின் பிரதிநிதிகளும் ஒத்த எண்ணிக்கையினராக இருக்க வேண்டும் என்று கோர ஆரம்பித்தனர். எண்ணிக்கையில் அதிகமான சிங்கள மக்களின் பலம் அதிகரிக்கும் என்பதும் சிங்கள மக்களின் ஆதிக்கத்திலிருந்து தமிழ் மக்களுக்கு நடைமுறைச் சாத்தியமான பாதுகாப்பு பெறப்பட வேண்டும் என்பதும் உணர்வு பூர்வமாக தமிழ்த் தலைவர்களிடையே ஏற்பட வில்லை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



1833ம் ஆண்டுக்குப் பின்பு இலங்கையில் கல்வி, சமூக, மத, வர்த்தகத் துறைகளில் மாற்றங்கள் ஏற்பட்டன. தமிழ்ப் பிரதிநிதி பதவி குமாரசாமியின் குடும்பத்தினரிடம் இருந்ததைப் போன்று சிங்களப் பிரதிநிதித்துவமும் ஜே. பி. ஒபயசேகராவின் குடும்பத்தினரிடையே இருந்தது. ஒபயசேகரா குடும்பத்தினர் கொவிகம சாதியைச் சேர்ந்த புரட்டஸ்தாந்து கிறிஸ்தவர்கள். 1878ல் சிங்களப் பிரதிநிதி ஜேம்ஸ் அல்விஸ் இறந்த போது கொவிகம வகுப்பைச் சேர்ந்த வில்லியம் குணதிலக அந்நியமனத்தைப் பெற முயன்றார். அவர் சாதாரண குடும்பத்தைச் சேர்ந்தவர். அதனால் அவருக்கு நியமனம் வழங்கப்படவில்லை. கொவிகம சாதியைச் சேர்ந்த நிலப்பிரபுவான ஜே. பி. ஒபயசேகராவுக்கு நியமனம் வழங்கப்பட்டது.

1881ல் சிங்கள பிரதிநிதிப் பதவி காலியான போது கொவிகம சாதியைச் சேராதவர்கள் போட்டியிட முனைந்தனர். அதன் விளைவாக சிங்கள அரசியலில் வேளாண்மை செய்யும் உயர் சாதியினரான கொவிகம சாதியினருக்கும் ஏனைய சாதியினருக்குமிடையே பலத்த போட்டி ஏற்பட்டது. 1882ம் ஆண்டில் கரவா (கரையார்) சாதியைச் சேர்ந்த சி. எச். டி. சொய்சாவின் முயற்சியினால் இலங்கை விவசாய சங்கம் தோற்றுவிக்கப்பட்டது. 1888ல் சிங்களப் பிரதிநிதிப் பதவி வெற்றிடமானதும் அவ்விடத்தைக் கைப்பற்றும் நோக்குடன் இலங்கை விவசாய சங்கம் இலங்கைத் தேசிய சங்கமாக மாற்றியமைக்கப்பட்டது. இலங்கைத் தேசிய சங்கம் அரசியல் சீர்திருத்தம் கோரி பிரசாரம் செய்ததன் விளைவாக 1889ல் சட்ட சபை உறுப்பினரின் தொகை இரண்டால் அதிகரிக்கப்பட்டது. அவற்றில் ஓர் இடம் கண்டியருக்கும் மற்றது முஸ்லிமுக்கும் கொடுக்கப்பட்டது.

இதற்குத் தமிழர்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். சிங்களப் பிரதிநிதிகளின் தொகை இரண்டாக உயர்த்தப்பட்டதைப் போல் தமிழரின் எண்ணிக்கையும் இரண்டாக்கப்பட வேண்டுமெனக் கோரினர். அக்கோரிக்கை வெற்றி பெறவில்லை. ஆனால், அதைப் பற்றித் தமிழ்த் தலைவர்கள் அதிகம் அலட்டிக் கொள்ளவில்லை. அதற்குக் காரணம் பொன்னம்பலம் சகோதரர்களான இராமநாதன், குமாரசாமி, அருணாசலம் ஆகியோர் தமிழர்களுக்கு மட்டுமல்ல சிங்கள பௌத்தர்களுக்கும் தலைவர்களாகத் திகழ்ந்தனர். சிங்களப் பிரதிநிதிகள் கிறிஸ்தவர்கள். மேற்கத்தைய வாழ்க்கை முறையைக் கடைப்பிடித்தவர்கள். பொன்னம்பலம் சகோதரர்கள் இந்துக்கள். கீழைத் தேய வாழ்க்கை முறையைக் கைவிடாதவர்கள். எனவே, தமிழர்களுக்காக மட்டுமல்ல. சிங்கள பௌத்தர்களுக்காகவும் வாதாடினர். வெசாக் விடுமுறை...



பௌத்த விகாரைகள் சட்டம். ஆகியவற்றில் பௌத்தர்களின் கருத்தை எடுத்துக் கூறியவர் இராமநாதன். ஆனந்தக் கல்லூரி ஸ்தாபகர்களில் அவரும் ஒருவர். ஆனந்தக் கல்லூரிக் கூட்டத்தில் சிங்களவரைப் பார்த்து "நீங்கள் சிங்களத்தைப் பேசாவிட்டால் யார் அதைப் பேசுவார்கள்" என்று கேட்டவர். இலங்கைக்கு அரசியல் சீர்திருத்தம் தேவை என்ற பிரச்சினையைக் கிளப்பியவர் அருணாசலம். ஏழாவது எட்வர்ட் மன்னனின் 1902ம் ஆண்டு முடிசூட்டு விழாவைப் பயன்படுத்தி மன்னருக்கு ஒரு வேண்டுதல் அனுப்புவதற்கு தனது ஆங்கில நண்பர் த. ஒப்சேவர் ஆசிரியர் பேர்குசன் மூலம் நடவடிக்கை எடுத்தவர் அவர்.

தமிழர்கள் சிறுபான்மை இனத்தவர் என்பதையும் சிறுபான்மை இனத்தவர் தமது உரிமைகளைப் பாதுகாப்பதற்கு உரிய ஒழுங்குகளைச் செய்ய வேண்டும் என்பதையும் தமிழ்த் தலைவர்கள் உணரத் தவறியமைக்கு இன்னுமொரு நிகழ்ச்சி முக்கிய காரணமாக அமைகிறது. 1912ம் ஆண்டில் இலங்கைச் சட்ட சபையின் உறுப்பினர் நியமனம் விடயத்தில் முக்கிய மாற்றம் ஒன்று செய்யப்பட்டது. உறுப்பினர் தொகை 21 ஆக உயர்த்தப்பட்டது. அவர்களில் 11 பேர் அதிகாரிகள். மிகுதி 10 பேர் அதிகாரிகளல்லாதவர்கள். அப்பத்து உறுப்பினர்களில் ஆறு பேர் கவர்னரால் நியமிக்கப்பட்டனர். கரையோரச் சிங்களவர் 2 பேர், கண்டிச் சிங்களவர் ஒருவர், தமிழர் 2 பேர், முஸ்லிம் ஒருவர். தேர்தல் மூலம் நான்கு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர். அந்த நான்கு தேர்தல் தொகுதிகளும் வருமாறு : ஐரோப்பியர் நகரம், ஐரோப்பியர் கிராமம், பறங்கியர், படித்த இலங்கையர். இந்த ஒழுங்கைப் பார்த்ததும் இலங்கைத் தமிழர்கள் தமது அதிருப்தியை வெளியிட்டனர். சிங்களவருக்கு இரண்டு பிரதிநிதிகள். தமிழருக்கு இரண்டா என்று கேட்டுக் கொதித்தனர். ஆனால், படித்த இலங்கையர் தொகுதியில் போட்டியிட்ட பொன்னம்பலம் இராமநாதன் வெற்றிபெற்றதால், சட்டசபையில் சிங்களவரின் பிரதிநிதிகளினதும் தமிழர்களின் பிரதிநிதிகளினதும் நிலை சமமாகியது. இரண்டு இனத்தவர்களுக்கும் மூன்று மூன்று பிரதிநிதிகள் கிடைத்துவிட்டன.

அப்பொழுது சேர். பொன்னம்பலம் இராமநாதன் இளைப்பாறிவிட்டு யாழ்ப்பாணத்திலும் தமிழ் நாட்டிலும் கல்வித் தொண்டு புரிந்து கொண்டிருந்தார். படித்த இலங்கையர் தொகுதிக்கு நியமனப் பத்திரம் கோரப்பட்ட போது கொடைக்கானலிலுள்ள தனது வீட்டில் அவர் ஓய்வு பெற்றுக்கொண்டிருந்தார். அத்தொகுதிக்குப் போட்டியிடப் போவதாக டாக்டர் மார்கஸ் பெர்னான்டோ அறிவித்தார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



டாக்டராகப் படித்துவிட்டு தென்னைச் செய்கையில் ஈடுபட்டிருந்த பெர்னான்டோ கரவா (கரையார்) சாதியைச் சேர்ந்தவர். அவர் வெற்றி பெறுவதை உயர்ந்த சாதியான கொவிகம (வேளாளர்) சாதித் தலைவர்கள் விரும்பவில்லை. தமது சாதிக்கு ஈடான வேளாளர் சாதியைச் சேர்ந்த இராமநாதன் வெற்றி பெறுவதை அவர்கள் விரும்பினர். ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் தந்தையான ஹெக்டர் ஜெயவர்த்தன கோடைக் கானலுக்குப் போய் இராமநாதனை இணங்க வைத்து நியமன பத்திரத்தில் கையொப்பம் வாங்கிக் கொண்டு வந்தார். இராமநாதனுக்கு வெற்றி கிடைத்தது. அதனால் தமிழருக்கும் மூன்று பிரதிநிதிகள் கிடைத்து விட்டனர். தமிழ் தலைவர்களுக்கு அதில் பரம திருப்தி.

அதன் பின்பு இராமநாதனும் அவரின் தம்பி அருணாசலமும் தங்களை இலங்கையரின் தலைவர்களாக மாற்றிக் கொண்டனர். இதன் விளைவாக 1915 கலகத்தின் போது பிரிட்டிஷ் ஆட்சியாளர்களால் சிறை வைக்கப்பட்ட சிங்களத் தலைவர்களுக்காக வாதாடுவதற்காக இராமநாதன் லண்டனுக்குப் போனார். முஸ்லிம் வர்த்தகர்களுக்கு எதிராக சிங்கள வர்த்தகர்களால் தூண்டிவிடப்பட்ட கலகத்தை தங்கள் ஆட்சிக்கு எதிரான சதியாகக் கணித்த பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் இராணுவத்தை உபயோகித்து கலகத்தை அடக்கியதோடு சிங்களத் தலைவர்களைச் சிறையிலிட்டனர். லண்டனுக்குப் போய் பிரிட்டிஷ் அமைச்சர்களைச் சந்தித்து சிங்களத் தலைவர்களை விடுதலை செய்வித்ததுடன் கலகத்தை கவர்னரும் அவரின் அதிகாரிகளும் கையாண்ட விதத்தைப் பற்றி விசாரிக்க விசாரணைக் கமிஷன் ஒன்றை நியமிக்க வேண்டும் என்றும் இராமநாதன் வாதாடினார். அவர் திரும்பியபோது சிங்களத் தலைவர்கள் அவரை அலங்கார ஊர்தியில் வைத்து கொழும்பு துறைமுகத்திலிருந்து வார்ட் பிளேசிலிருந்த அவரின் வீடான "சுகஸ்தான்"வரை ஊர்வலமாக இழுத்து வந்தனர். 1916ம் ஆண்டில் நடந்த தேர்தலில் இராமநாதனை மறுபடியும் தெரிவு செய்து சிங்களவர்கள் தமது நன்றிக் கடனைச் செலுத்தினர். அதன்பின்பு இராமநாதன் தன்னை இலங்கையரின் தலைவராக எண்ணி நடக்கலானார். சிறுபான்மைச் சமூகங்களான முஸ்லிம்கள், இந்தியத் தமிழர் ஆகியோரின் நலன்களில் அவர் அக்கறை காட்டவில்லை. மலையகத் தமிழர்களை கூலிகள் என்றும் இழிவாகவும் அவர் பேசினார்.



**இலங்கை தேசிய சங்கம்**

அவரின் தம்பி அருணாசலம் இந்தியத் தமிழர்களின் நலன்களில் ஓரளவு அக்கறை காட்டிய போதிலும் அவரின் கவனம் இலங்கையின் அரசியல் சீர்திருத்தத்திலேயே இருந்தது. 1915ம் ஆண்டுக் கலகம் ஏற்படுத்திய தாக்கமும் 1917ல் இந்திய அரசியல் சீர்திருத்தம் சம்பந்தமாக பிரிட்டிஷ் அரசாங்கம் வெளியிட்ட "மொன்ரெகியு" - கிளம்போர்ட் அறிக்கையும் "இலங்கைத் தலைவர்களை அரசியல் சீர்திருத்தம்பற்றிச் சிந்திக்கத் தூண்டின. லேக் ஹவுஸ் ஸ்தாபகர் டி. ஆர். விஜேவர்த்தன, எமது அரசியல் தேவைகள் என்ற பொருளில் உரையாற்றும்படி அருணாசலத்தைக் கேட்டார். 1917 ஏப்ரல் 2ல் உரையாற்றிய அருணாசலம் இலங்கை சுயாட்சியை நோக்கி முன்னேற வேண்டும் என்று வாதாடினார். அவர் தன் உரையை இவ்வாறு முடித்தார்:

> சுயமரியாதையுள்ள மற்றவர்கள் தமது நாட்டிலும் அதற்கு வெளியிலும் சுயாட்சியுள்ளவர்களாக, பலமுடையோராக, மதிக்கப்படுபவர்களாகத் திகழ்வதைப் போன்றே நாமும் எமது நாட்டிலும் அதற்கு வெளியேயும் வாழ வேண்டும் என்றுதான் கேட்கிறோம். அந்த இலட்சியத்தை நாம் அடைவதற்கு உதவும் அரசியல் சீர்திருத்த முன்னேற்றம் எமக்குக் கிடைக்க வேண்டும் என்று கோருகின்றோம். இலங்கை பிச்சை கேட்கும் ஒரு வறிய நாடல்ல எமது பாரம்பரிய சொத்தைத்தான் கோருகிறோம்.

அவ்வுரையையடுத்து இலங்கை சீர்திருத்தக் கழகம் உருவாக்கப்பட்டது. அருணாசலம் அதன் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். அப்பொழுது, இலங்கை சீர்திருத்தக் கழகத்துடன் சேர்த்து இலங்கையில் நாலு சங்கங்கள் இயங்கின. மற்றவை: இலங்கை தேசிய சங்கம், சிலாபம் சங்கம், யாழ்ப்பாண சங்கம். இந்த நாலு அமைப்புக்களையும் இணைத்து இந்திய தேசிய காங்கிரசை யொத்த இலங்கை தேசிய காங்கிரசை உருவாக்கும் முயற்சியில் அருணாசலம் ஈடுபட்டார். அருணாசலம் இந்திய சுதந்திரப் போராட்டத்தாலும் ஏகாதிபத்திய ஆட்சி முறைக்கு சர்வதேச அரங்கில் முகிழ்த்த எதிர்ப்பலையாலும் உந்தப்பட்டவர். அருணாசலம் துவக்கிய இலங்கை சீர்திருத்தக் கழகத்தினால் பிரச்சினை இல்லை. அதன் ஆரம்ப 19 உறுப்பினர்களில் அருணாசலமும் ஒருவர். சட்ட நூல்நிலையத்தில் 1916ல் கூடியவழக்கறிஞர்களால் அது ஆரம்பிக்கப்பட்டது. இலங்கையின் அரசியல் சீர்திருத்தத்தில் அது கவனம் செலுத்தியது. இலங்கை தேசிய சங்கத்தாலும் பிரச்சினையில்லை. சிங்களத் தலைவர்களான ஜேம்ஸ் பீரிஸ்,

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எவ்.ஆர்.சேனநாயக்கா ஆகியோரால் அது ஆரம்பிக்கப்பட்டது. சட்ட சபையின் அதிகாரங்களை அதிகரித்தல், அதிகாரிகளல்லாதோரின் பெரும்பான்மையைப் பெறல், இனரீதி பிரதிநித்துவத்தை நீக்குதல் ஆகிய விடயங்களில் அது கவனம் செலுத்தியது. சிலாபம் சங்கமும் சிங்களவர்களுடைய அமைப்பு. அதாலும் பிரச்சினையில்லை. யாழ்ப்பாணச் சங்கம்தான் பிரச்சினைக்குரிய சங்கமாக இருந்தது. அதை சரிக்கட்டும் பொறுப்பு அருணாசலத்திடம் விடப்பட்டது. யாழ்ப்பாணச் சங்கத்தை பிரச்சினைக்குரிய அமைப்பாகக் கருதியமைக்கு இன ரீதியான பிரதிநித்துவம் பற்றி அச் சங்கம் எடுத்த நிலைப்பாடுதான் காரணம். சில மாதங்களுக்கு முன்பு தான் அச் சங்கம் பிரிட்டிஷ் குடியேற்ற நாடுகளின் மந்திரிக்கு ஒரு விண்ணப்பத்தை அனுப்பி வைத்திருந்தது. அதில் வற்புறுத்தப்பட்ட இரண்டு விடயங்கள்:

★ இன ரீதியான பிரதிநிதித்துவம் அகற்றப்படலாகாது.

★ அதிகாரிகளல்லாத உறுப்பினர்களின் தொகையில்சிங்கள வர்களுக்கும் சிறுபான்மையினருக்குமிடையே சமபலம் இருக்க வேண்டும்.

இலங்கை தேசிய காங்கிரசை ஆரம்பிப்பதற்கான முதலாவது ஆலோசனைக் கூட்டம் 1917 டிசம்பர் 15ல் நடைபெற்றது. அதில் 144 பேர் கலந்து கொண்டனர். அவர்களில் 17 பேர் தமிழர். யாழ்ப்பாணச் சங்கம் இரண்டு பிரதிநிதிகளை மட்டும் அனுப்பியிருந்தது. அவர்கள் பிரிட்டிஷ் குடியேற்ற நாடுகளின் மந்திரிக்கு அனுப்பிய விண்ணப்பத்தில் வலியுறுத்திய இரண்டு விடயங்களையும் வற்புறுத்தினர். இலங்கை தேசிய சங்கப் பிரதிநிதிகள் அவற்றை எதிர்த்தனர். இன ரீதியான பிரதிநிதித்துவம் நீக்கப்பட்டு தொகுதிவாரி பிரதிநிதித்துவம் அறிமுகம் செய்யப்பட வேண்டும் என்றும் அதிகாரிகளல்லா தோரின் தொகையை அதிகரிக்க வேண்டும் என்றும் அதில் எந்த வகை இன ரீதியான விகிதாசாரமும் புகுத்தப்படலாகாது என்றும் அவர்கள் வற்புறுத்தினர்.

இத் தகராறைத் தீர்த்து வைப்பதற்காக இலங்கை தேசிய சங்கத் தலைவர் ஜேம்ஜ் பீரிஸ், இலங்கை சீர்திருத்தக் கழகத் தலைவர் ஈ. ஜே. சமரவிக்கிரம, யாழ்ப்பாணச் சங்கத் தலைவர் ஏ. சபாபதி ஆகியோருக் கிடையே சந்திப்பொன்றை அருணாசலம் ஒழுங்கு செய்தார். அதில் எவ் வித இணக்கமும் ஏற்படவில்லை. அதையடுத்து தமிழர்கள் தொகுதி முறையை ஏற்றுக்கொண்டு அவர்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிக் கும் வழிமுறைகளை அருணாசலம் ஆராய்ந்தார். அப்பொழுது மேல்



மாகாணத்தில் தமிழருக்கு ஒரு தொகுதியை ஒதுக்க சிங்களத் தலை வர்கள் இணங்கினர். அம்முடிவை 1918 டிசம்பர் 8ம் திகதி அருணாசலத்துக்கு எழுதிய கடிதத்தில் பீரிசும் சமரவிக்கிரமாவும் தெரிவித்தனர்.அவர்களின் வாக்குறுதியைத் தெரிவிக்கும் பந்தி இது: மேல் மாகாணத்தில் தமிழருக்கு ஒரு தொகுதியை ஒதுக்குவதற்கு எமது ஆதரவைத் தருவோம் என்று வாக்குறுதியளிக்கிறோம்.

அன்றைய தினமே அருணாசலம் அச்செய்தியை சபாபதிக்கு அறிவித்தார். மேல் மாகாணத்தில் தமிழருக்கு ஒரு தொகுதி ஒதுக்கப்படும் என்ற உறுதி மொழியின் பேரில் யாழ்ப்பாணச் சங்கம் தன் இன ரீதி பிரதிநிதிநித்துவக் கொள்கையைக் கைவிட்டு 1919 டிசம்பர் 11ம் திகதி நடந்த இலங்கை தேசிய காங்கிரஸ் கூட்டத்தில் கலந்து கொண்டது. அருணாசலம் அதன் தலைவராகத் தெரிவு செய்யப் பட்டார். இலங்கை தேசிய காங்கிரசின் தந்தை என்று அவரை பத்திரி கைகள் புகழ்ந்தன.

### தமிழீழக் கோரிக்கை

1921ம் ஆண்டில் சட்டசபை திருத்தியமைக்கப்பட்டது. அதன் உறுப்பினர் தொகை 37 ஆக உயர்த்தப்பட்டது. அவர்களில் 14 பேர் அதிகாரிகள், 23 பேர் அதிகாரிகளல்லாதோர். அதிகாரிகளல்லாதோரில் 11 பேர் தொகுதிவாரியாகத் தெரிவு செய்யப்பட்டனர், 8 பேர் விசேஷ தொகுதிகளால் தெரிவு செய்யப்பட்டனர், 4 பேர் நியமன உறுப்பினர். தொகுதிவாரியான 11 தொகுதிகளில் கொழும்பு நகர தொகுதியும் ஒன்று. முன்பு அளிக்கப்பட்ட வாக்குறுதிக்கமைய அத் தொகுதி தமிழருக்கு ஒதுக்கப்பட வேண்டும் என்றும் அதைத் தனக்குக் கொடுக்கும்படியும் அருணாசலம் கேட்டார்.

இலங்கை தேசிய காங்கிரஸ் அவரின் கோரிக்கையை நிராகரித்தது. அத் தொகுதிக்கு இலங்கை தேசிய காங்கிரஸ் அதன் தலைவர் பீரிசை நியமித்தது. முந்திய வாக்குறுதியை அருணாசலம் நினைவுபடுத்தினார். நீங்கள்தானே அவ்வாக்குறுதியைக் கொடுத்தீர்கள் என்று சொன்னார்.அதற்குக் கிடைத்த பதில்: "இலங்கை சீர்திருத்த சங்கத் தலைவராக இருந்தபோது நான் கொடுத்த வாக்குறுதி இலங்கை தேசிய காங்கிரஸ் தலைவராகவுள்ள என்னைக் கட்டுப்படுத்தாது". அருணாசலம் மனமுடைந்து போனார். சிங்களத் தலைவர்கள் மீது வைத்திருந்த நம்பிக்கையை இழந்தார். இலங்கை தேசிய காங்கிரசி லிருந்து இராஜினாமாச் செய்தார். யாழ்ப்பாணம் போனார். இலங்கை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தமிழ் சங்கம் என்ற பெயரில் புதிய அமைப்பு ஒன்றை உருவாக்கினார். அச்சங்கத்தின் அங்குரார்ப்பண உரையில் தமிழ் ஈழம் என்ற சொற்றொடரை முதன்முதலாக உபயோகித்தார். அவரின் உரையில் இடம்பெற்ற பந்தி இது:

> அரசியல் தேவையின் விளைவாக இச்சங்கம் உருவாக்கப்படுகிறது. இதை உருவாக்குவதற்கு அரசியல் மட்டும் காரணமல்ல. தமிழ் ஈழம் என நாங்கள் பெருமையுடன் கூறும் இலட்சியத்தை அடைவதற்கு உழைப்பதே இச்சங்கத்தை உருவாக்கியதன் நோக்கம்.

இராமநாதனும் அருணாசலமும் 1921 தேர்தலில் போட்டியிட வில்லை. ஆனால், கவர்னர் இராமநாதனை நியமன உறுப்பினர்களில் ஒருவராக நியமித்தார். தன் தமிழ் ஈழ இயக்கத்தைக் கொண்டு நடத்த அருணாசலம் அதிக காலம் வாழவில்லை. 1924ல் அவர் இறந்தார். 1922 ஏப்பிரல் முதலாம் திகதி இலங்கையிலுள்ள சிறுபான்மை சமூகத்தினர் கூட்டாக பிரிட்டிஷ் அரசின் குடியேற்ற அலுவலகத்துக்கு விண்ணப்பம் ஒன்றைச் சமர்ப்பித்தனர். அதில் 1921 சீர்திருத்தம் தமிழருக்கு அநீதி விளைவித்ததாகக் கூறினர். அச்சீர்திருத்தத்தின்படி சிங்களவருக்கு 13 ஆசனங்களும் தமிழருக்கு 3 ஆசனங்களும் கிடைத்ததைச் சுட்டிக் காட்டினர்.

1924ல் சட்டசபை மேலும் விரிவாக்கப்பட்டது. அதிகாரிகளல்லா தோர் தொகை 37 ஆக உயர்த்தப்பட்டதோடு அவர்களில் ஒருவரை உபதலைவராக தெரிவு செய்யும் வசதி அதன் மூலம் வழங்கப்பட்டது. பீரிஸ் உபதலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். அச்சீர்திருத்தத்தின் படி நடத்தப்பட்ட தேர்தலில் இராமநாதன் போட்டியிட்டு வெற்றி பெற்றார். தங்களுக்கு அதிகாரம் எதுவுமில்லை என்பதை விரைவில் உணர்ந்த அதிகாரிகளல்லாதோர்புதிய சீர்திருத்தம் ஒன்றைக் கோரினர். அக் கோரிக்கையை ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட டொனமூர் கமிஷன் 1927 நவம்பர் முதல் 1928 ஜனவரி வரை இலங்கையில் விசா ரணை நடத்தியது. இன அடிப்படை பிரதிநிதித்துவம், வாக்குரிமை, சுயாட்சி ஆகிய விடயங்கள் ஆராயப்பட்டன. அப்பொழுது, இலங்கை தேசிய காங்கிரஸ் தொகுதிவாரி பிரதிநிதித்துவம், சர்வஜன வாக்குரிமை, சுயாட்சி ஆகியவற்றைக் கோரியது. முஸ்லிம்கள், மலேயர், இந்தியர், பறங்கியர் பிரதிநிதிகள் தங்கள் சமூகங்களுக்கு விசேஷ பிரதிநிதித்துவம் வழங்கப்படவேண்டும் என வற்புறுத்தினர்.

தமிழர் சார்பில் சாட்சியமளித்த இராமநாதனும் யாழ்ப்பாணச் சங்கமும் இன அடிப்படை பிரதிநிதித்துவத்துக்காக வாதாடினர். 1924ல் கொடுக்கப்பட்ட தமிழருக்கு ஒன்று; சிங்களவருக்கு இரண்டு என்ற விகிதாசாரம் தொடரவேண்டும் என இராமநாதன் வாதாடினார்.



தமிழர்களும் ஏனைய சிறுபான்மை சமூகத்தினரும் பிரிட்டிஷ் ஆட்சி மாதிரியை ஏற்று ஒற்றையாட்சி முறைக்குள் அதிகாரப் பங்கை கோரிக்கொண்டிருக்கையில் கண்டியச் சிங்களவர் ஒற்றையாட்சி முறைக்கு மாற்றாக சமஷ்டி முறையை வற்புறுத்தினர். அந்தச் சந்தர்ப் பத்தை தமிழ்த் தலைவர்கள் தவற விட்டனர். தங்களை தனி இனமாக அங்கீகரித்து தங்களுடைய உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டும் என்று கண்டி சிங்களவர்கள் 1920ம் ஆண்டு முதல் வற்புறுத்தி வந்தனர். 1924 சீர்திருத்தத்தின் கீழ் நடத்தப்பட்ட தேர்தலில் கண்டிப் பிரதே சத்திலுள்ள ஏழு தொகுதிகளிலும் கண்டியரே போட்டியிட வேண்டும் என்று இலங்கை தேசிய காங்கிரசிடம் கண்டியர் கோரினர். ஆனால் அங்கு கீழ்நாட்டுச் சிங்களவர்கள் போட்டியிட்டு நாலு தொகுதிகளைக் கைப்பற்றினர். இதனால், கீழ்நாட்டுச் சிங்களவர்மீது நம்பிக்கையிழந்த கண்டியர் சமஷ்டி ஆட்சி முறை மூலமே தமது உரிமைகளைப் பாது காக்க முடியும் என்பதை உணர்ந்தனர்.

1924 நவம்பரில் கண்டி நகர சபை மண்டபத்தில் கூடி கண்டி தேசிய சபையை நிறுவிய கண்டியர்கள் டொனமூர் கமிஷன் முன் சமஷ்டி கோரிக்கையை முன்வைத்தனர். கண்டியரின் கோரிக்கைக்கு களம் அமைத்துக் கொடுத்தது 1926ம் ஆண்டில் எஸ். டபிள்யூ. ஆர்.டி பண்டாரநாயக்கா யாழ்ப்பாணத்தில் அரசியல் சீர்திருத்தம் பற்றி ஆற்றிய உரைதான்.

யாழ்ப்பாண வாலிபர் காங்கிரசின் அழைப்பின் பேரில் உரையாற்றிய பண்டாரநாயக்கா பல இன மக்கள் வாழும் இலங்கைக்கு சமஷ்டி ஆட்சி முறையே சிறந்தது என்று அடித்துக் கூறினார். அவர் சொன்னது:"ஆயிரம் ஆட்சேபனைகள் தெரிவிக்கப்படலாம். அவற்றைப் பரிசிலித்து அகற்றிவிட்டால் சமஷ்டி அமைப்பே (இலங்கைக்கு) ஏற்ற ஒரேயொரு தீர்வு". ஐக்கிய அமெரிக்கா, கனடா, அவுஸ்திரேலியா, தென் ஆபிரிக்கா, சுவிற்சர்லாந்து ஆகிய ஐந்து நாடுகளில் சமஷ்டி முறை திறம்பட இயங்குவதையும் அவர் சுட்டிக் காட்டினார்.

கண்டிய தேசிய சபை டொனமூர் கமிஷன் முன் விரிவான சமஷ்டி தீர்வுத் திட்டம் ஒன்றை சமர்ப்பித்தது. அதன்படி கண்டி அரசு, தமிழ் அரசு. கீழ்நாட்டுச் சிங்கள அரசு என்ற மூன்று அரசுகளை இலங்கை கொண்டிருக்கும். கண்டி அரசு வட மத்திய மாகாணம், வட மேல் மாகாணம், மத்திய மாகாணம், ஊவா மாகாணம், சப்ரகமுவா மாகாணம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஆகியவற்றைக் கொண்டிருக்கும். தமிழ் அரசு வடக்கு கிழக்கு மாகாணங்களைக் கொண்டிருக்கும், கீழ் நாட்டுச் சிங்கள அரசு மேல் மாகாணத்தையும் தென் மாகாணத்தையும் கொண்டிருக்கும். இந்த மூன்று அரசுகளிலும் சட்ட சபையும் நிர்வாக சபையும் இருக்கும். மூன்று பிராந்திய அரசுகளுக்கும் நிதி வசூலிப்பு, சட்டமியற்றல், வரிவிதிப்பு, கல்வி, விவசாயம், பிராந்திய நிர்வாகம், காணி, வைத்திய சேவை, கீழ்மட்ட நீதி நிர்வாகம் ஆகிய அதிகாரங்களிருக்கும். எஞ்சிய அதிகாரங்கள் மத்திய சமஷ்டி அரசிடமிருக்கும்.

டொனமூர் கமிஷன் இலங்கை தேசிய காங்கிரசின் சர்வசன வாக்குரிமை, தொகுதி பிரதிநிதித்துவம் ஆகிய கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டது. சுயாட்சிக் கோரிக்கையை ஏற்கவில்லை. அதை நிராகரிப்பதற்கு சிறுபான்மையினரின் இன ரீதியான கோரிக்கையைப் பயன்படுத்தியது. சுயாட்சி வழங்கினால் பெரும்பான்மைச் சமூகம் சிறுபான்மையினரை அடக்கி ஒடுக்கிவிடும் என்று கமிஷன் தன் அறிக்கையில் கூறியது. சிறுபான்மையினருக்கு இரண்டு வகை பாதுகாப்புக்களை அது வழங்கியது. கவர்னரின் அதிகாரங்களை அதிகரித்தமையும் பிரதம செயலாளர், நிதிச் செயலாளர், நீதிச் செயலாளர் ஆகிய மூன்று அதிகாரிகளையும் உருவாக்கியமையும் அப்பாதுகாப்புக்களில் முதலாவது. மற்றது, குழு ஆட்சி முறையும் அரச சேவைக் கமிஷன்நீதிச் சேவைக் கமிஷன் ஆகியவை. ஆட்சியில் இலங்கையருக்கு ஓரளவு பங்கை அளிக்க முடிவு செய்த டொனமூர் கமிஷன் 61 உறுப்பினர்களைக் கொண்ட அரசாங்க சபையை சிபாரிசு செய்தது. உறுப்பினர்களில் 50 பேர் தொகுதி அடிப்படையில் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட வேண்டும் என்றும் எட்டுப்பேர் கவர்னரால் நியமிக்கப்பட வேண்டும் என்றும் டொனமூர் கமிஷன் சிபாரிசு செய்தது. மற்ற மூவரும் அதிகாரிகள்.

**யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ்**

அரசாங்க சபைக்கான தேர்தல் 1931 ஜூன் மாதத்தில் நடத்தப்பட்டது. டொனமூர் கமிஷனின்சிபாரிசை தமிழர்கள் பொதுவாக எதிர்த்தபோதிலும் பழமைவாதிகளான தமிழ்த் தலைவர்கள் தேர்தலில் போட்டியிடத் தயாரானார்கள். இராமநாதன் தேர்தலுக்கு முன்பே இறந்துவிட்டார். அதனால் பழமைவாதிகள் பலம் குன்றியிருந்தனர்.

அந்தக் காலத்தில் யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ் துடிப்புடன் இயங்கியது. பழமைவாத தலைவர்களின் போக்கில் அதிருப்தியடைந்த படித்த வாலிபர்களால் அது 1924ல் ஆரம்பிக்கப்பட்டது. தேசிய கலா சாரம், பொருளாதார சுபீட்சம், சமூக ஒற்றுமை, பூரண சுயாட்சி ஆகிய நாலு கொள்கைகளின் அடிப்படையில் ஆரம்பிக்கப்பட்ட யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ் தேர்தலைப் பகிஷ்கரிக்க முடிவு செய்தது. முதலில் அறிக்கை விட்டனர். எவருமே அலட்டிக்கொள்ளவில்லை.



வாலிபர் குழுக்கள் வேட்பாளர்களின் வீடுகளுக்குப் போனார்கள். ஊர்காவற்றுறையிலுள்ள வைத்திலிங்கம் துரைசாமியின் வீடு அவற்றில் ஒன்று. தயவாகச் சொன்னார்கள்: பெரியவரே! பூரண சுதந்திரம் வேண்டி நிற்கிறோம். உந்த அரைகுறை, அதிகாரமற்ற அரசாங்க சபைக்குப் போட்டியிட வேண்டாம். துரைசாமி புத்திசாலி. வாலிபரின் முடிவைப் பாராட்டினார். தான் போட்டியிலிருந்து விலகியதற்கான காரணங்களை விளக்கி அறிக்கை வெளியிட்டார். மற்றவர்களும் விலகிக் கொண்டனர். யாழ்ப்பாண வாலிபர்களை தென் இலங்கை இடதுசாரிகள் பாராட்டினர். தத்துவார்த்த ரீதியில் யாழ்ப்பாண வாலிபர்களுக்கு மாபெரும் வெற்றி. நிதர்சன நிலைமை? தேர்தல் முடிவைப் பாருங்கள்: தெரிவானோரில் 38 பேர் சிங்களவர். 5 பேர் தமிழர். 2 பேர் ஐரோப்பியர். ஒரு முஸ்லிம். யாழ் குடாவுக்கான 4 இடங்களும் காலியாக இருந்தன. எட்டு நியமன உறுப்பினரையும் கவர்னர் நியமித்தார். நாலு ஐரோப்பியர். இரண்டு பறங்கியர். ஒரு இந்தியர். ஒரு மலே. அரசாங்க சபையின் முதலாவது கூட்டம் 1931 ஜூன்7ல் நடந்தது. இரண்டாவது கூட்டத்தில் உறுப்பினர்களை ஏழு குழுக்களாகப் பிரித்தனர். அக்குழுக்கள் தமது தலைவர்களைத் தெரிவு செய்தன. அவர்களைக் கொண்டதுதான் மந்திரி சபை. மந்திரி சபை உறுப்பினர் இவர்கள்தான்: டி. பி. ஜயதிலக, டி. எஸ். சேனநாயக்கா, ரி. பி. பானபோக்கே (கண்டியர்), சி. பத்துவந்துடாவ (கண்டியர்), சி. டபிள்யு. டபிள்யு. கன்னங்கர, பெரி சுந்தரம் (இந்தியர்), மாக்கான் மாக்கார் (முஸ்லிம்).

இரண்டு மந்திரிப் பதவி மூலம் கண்டியர் கிளர்ச்சி அடக்கப்பட்டு விட்டது. இந்தியருக்கும்முஸ்லிமுக்கும் மந்திரி பதவி கொடுத்ததன் மூலம் சிங்களத் தலைவர்கள் சிறுபான்மையினரை அணைத்துக்கொண்டு போகிறார்கள் என்ற நற்சான்றிதழை சிங்களவர்கள் பெற்றுக் கொண்டனர். பாதிக்கப்பட்டவர்கள் இலங்கைத் தமிழர்களே. பழைய தமிழ்த் தலைவர்கள் முணுமுணுக்கத் தொடங்கினர். வாலிபர்களில் சிலரும் தமது தவறை ஏற்றனர். உபதேர்தலை வைக்குமாறு தமிழ் தலைவர்கள் கவர்னரைக் கேட்டனர். அவர் மறுத்துவிட்டார். டொனமூர் திட்டத்தை தமிழர்கள் நிராகரித்த காட்டம் அவருக்கு.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அத்துடன், தமிழர்கள் பூரண சுதந்திரம் கேட்கிறார்கள். சிங்களவர் குறைந்த சுதந்திரத்தை ஏற்று அதைச் செயற்படுத்துகிறார்கள் என்ற திருப்தியும் கவர்னருக்கு. அதுமட்டுமல்ல. 1929ல் மகாத்மா காந்தி இலங்கைக்கு வந்த போது அவரை தலைமேல் தூக்கிக் கொண்டு திரிந்தது தமிழர்கள்தான்.

பிரிட்டிஷ் ஆட்சியை இலங்கையில் தொடருவதற்கு இனிமேல் தமிழரை நம்பிப் பயனில்லை; சிங்களவரை அணைத்துக் கொண்டு போனால் போதும் என்ற முடிவுக்கு பிரித்தானியர் வந்தனர். அதனால் மன்றாடி உபதேர்தலை வைக்குமாறு கேட்கும் நிலைக்கு யாழ்ப்பாணத் தமிழர்கள் வந்தனர். 1933 ஜனவரி 2ல் யாழ்ப்பாணத்தில் மகாநாடு நடத்தி உபதேர்தல் நடத்தும்படி கோரி தீர்மானம் நிறைவேற்றிய பின்புதான் உபதேர்தலை நடத்த கவர்னர் இணங்கினார். உபதேர்தல் 1934 ஜுலை யில் நடத்தப்பட்டது. அதில் வெற்றிபெற்றோரின் பெயர்கள்: சேர். அருணாசலம் மகாதேவா- யாழ்ப்பாணம். சுப்பையா நடேசன்- காங்கேசன்துறை. ஜி. பொன்னம்பலம்-பருத்தித்துறை நெவின்ஸ் செல்லத்துரை- ஊர்காவற்றுறை அத்தேர்தலுடன் தமிழ் மக்களின் தலைமைத்துவம் ஜி. ஜி. பொன்னம்பலத்துக்குக் கைமாறியது.

கேம்பிரிஜ் பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானமும் சட்டமும் கற்று இலங்கை திரும்பிய பொன்னம்பலம் சட்டத் துறையிலும் அரசியலிலும் ஈடுபட்டார். அவர் முதலில் கொழும்பில் சீர்திருத்தக் கழகத்திலும் (ரிபோர்ம் லீக்) அடுத்து யாழ்ப்பாணச் சங்கத்திலும் 1920ல் இராமநாதன் ஆரம்பித்த அகில இலங்கை தமிழ் லீக்கிலும் சேர்ந்து பணியாற்றினார். விரைவாக அவர் தமிழ் லீக்கின் தலைமைப் பதவியைக் கைப்பற்றினார்.

அதே காலத்தில் சிங்கள அரசியல் வானில் பண்டாரநாயக்கா தோன்றினார்.

யாழ்ப்பாணச் சங்கமும் தமிழ் லீக்கும் சட்ட மன்றங்களில் தமிழருக்கு அதிக பிரதிநிதித்துவத்தைப் பெறும் கொள்கையையே கடைப்பிடித்து வந்தன. அந்த இரு சங்கங்களினதும் தலைமைத்துவத்தைக் கைப்பற்றிய ஜி. ஜி. அதே கொள்கையையே கடைப்பிடித்தார். அது அவரின் பிதிர்வழிச் சொத்து.1934ல் ஜி. ஜி. அரசாங்க சபைக்குச் செல்வதற்கு முன்பே சிங்களத் தலைவர்கள் தாங்கள் பெற்ற அதிகாரங்களை வலுப்படுத்துவதுபற்றி கவர்னருடன் பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருந்தனர். மந்திரி சபையின் அதிகாரங்கள் அதிகரிக்கப்பட வேண்டும் எனவும் குழு முறைமையை நீக்கவேண்டும் எனவும் அமைச்சர்களை நியமிக்கும் அதிகாரம் பிரதம அமைச்சருக்கு இருக்க வேண்டும் எனவும் அவர்கள் கோரினர்.



1933ல் கொழும்பில் கூடிய சிறுபான்மைச் சமூகங்களின் பிரதிநிதிகள் அக்கோரிக்கையை எதிர்ப்பதெனவும் தங்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்கும்படி கோருவதெனவும் முடிவு செய்தனர். சிறுபான்மைச் சமூகங்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்க வேண்டும் என்பதே தமிழரசுக்கட்சி சமஷ்டி கோரிக்கையை முன்வைக்கும் வரை தமிழ் மக்களின் கோரிக்கை யாக இருந்தது. இந்தச் சூழ லில்தான் பொன்னம்பலம் 1934 ஜுலை 17ல் சட்ட மன்றத்துக்குள் பிரவேசித்தார். இந்த மனப்பாங்கைத்தான் அவர் தன் அரசியல் முதிசமாகப் பெற்றார். அவருக்கு முன்பு வாழ்ந்த தமிழ்த் தலைவர்கள் அவருக்குக் கொடுத்த சொத்து அது. அவர் தனக்குக் கொடுக்கப்பட்ட பணியைத் திறம்படச் செய்தார். அந்த மனப்பாங்கிலிருந்து விடுபட்டு நடைமுறைச் சாத்தியமான மாற்று வழியைக் கண்டு கொள்ளத் தவறியதுதான் அவர் செய்த பெரும் தவறு.

### சிங்கள மந்திரி சபை

இரண்டாவது அரசாங்க சபைக்கான தேர்தல் 1936 ஜனவரியில் நடந்தது. இன அடிப்படையில் அந்த தேர்தலின் முடிவு வருமாறு:

| | |
|---|---|
| சிங்களவர் | 39 |
| இலங்கைத் தமிழர் | 08 |
| இந்தியத் தமிழர் | 2 |
| ஐரோப்பியர் | 1 |

முஸ்லிம்கள் எவருமே தெரிவு செய்யப்படவில்லை. கவர்னர் நியமித்த 8 உறுப்பினர்களில் 4 பேர் ஐரோப்பியர், ஒருவர் பறங்கியர், ஒருவர் முஸ்லிம், ஒருவர் மலே, ஒருவர் இந்திய வர்த்தகர்.

அரசாங்க சபையின் முதலாவது கூட்டத்தில் உறுப்பினர்கள் ஏழு குழுக்களாகப் பிரிக்கப்பட்டனர். ஒவ்வொரு குழுவும் இரகசிய வாக்கெடுப்பின் மூலம் தலைவரைத் தெரிவு செய்தது. எல்லா அமைச்சர்களும் சிங்களவர். அதனால் அந்த மந்திரி சபை சிங்கள மந்திரி சபை என அழைக்கப்பட்டது. டி.எஸ்.சேனநாயக்கா திட்டமிட்டு அதைச் செய்ததாகக் கூறப்படுகிறது. சிங்களத் தலைவர்கள்மீது தமிழர்கள் ஏற்கெனவே கொண்டிருந்த அவநம்பிக்கையை அது வலுவடையச் செய்தது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



1921ல் தொகுதிவாரி தேர்தல் முறை அறிமுகம் செய்யப்பட்ட திலிருந்து சட்ட சபையைப் படிப்படியாகத் தமது கட்டுப்பாட்டில் கொண்டுவந்த சிங்களத் தலைவர்கள் சிங்கள மந்திரி சபை மூலம் தமது ஆட்சி அதிகாரத்தை வலுப்படுத்திக் கொண்டனர். அதை மேலும் உறுதியாக்கும் பல நடவடிக்கைகளை சிங்கள மந்திரி சபை எடுத்தது.

1939 முதல் 1945 வரையும் இரண்டாவது உலக யுத்தம் நடந்தது. அந்த யுத்தம் முடிந்ததும் இலங்கைக்கு டொமினியன் அந்தஸ்து வழங்க வேண்டும் என்று கோரும் பிரேரணையை அரசாங்க சபை 1942 மார்ச் மாதத்தில் நிறைவேற்றியது. அக் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட பிரிட்டிஷ் அரசாங்கம் இலங்கைக்கு அதன் உள்நாட்டு விவகாரங்களில் பூரண சுயாட்சி வழங்குவதாக 1943 மே29ம் திகதி அறிவித்தது. இந்த அடிப்படையில் இலங்கைக்கான இடைக்கால அரசியலமைப்புச் சட்டத்தைத் தயாரிக்குமாறு மந்திரிசபை கேட்கப்பட்டது. இலங்கை பல்கலைக்கழக உபவேந்தர் சர். ஐவர் ஜெனிங்ஸ் அவர்களின் உதவி யுடன் நகல் அரசியலமைப்புச் சட்டமொன்றை டி. எஸ். சேனநாயக்கா தயாரித்தார். அது பிரிட்டிஷ் அமைச்சரவை அரசாங்க ஆட்சி முறையை மாதிரியாகக் கொண்டது. இலங்கை அரசாங்கத்தை சிங்களவரின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதற்கான சகல வழிமுறைகளையும் அது கொண்டிருந்தது.

சிறுபான்மையினரின் பயத்தைப் போக்குவதற்காக இரண்டு வகை பாதுகாப்புக்கள் அதில் சேர்க்கப்பட்டிருந்தன. அவை:

- ★ பிரதிநிதித்துவ பாதுகாப்பு.
- ★ அரசியலமைப்புச் சட்டப் பாதுகாப்பு.

பிரதிநிதித்துவ பாதுகாப்புக்கான ஒழுங்குகள்-75,000 பேருக்கு ஒரு தொகுதி. 1000 சதுர மைலுக்கு ஒரு தொகுதி சிறுபான்மையினரின் நலன்களைப் பாதுகாப்பதற்காக பல அங்கத்தவர் தொகுதிநியமன அங்கத்தவர்கள் வடக்கு கிழக்கு மாகாணங்கள் கூடிய நிலப்பரப்பைக் கொண்டிருந்தமையால் அவற்றிற்கு மேலதிக தொகுதிகள் கிடைத்தன.

அரசியலமைப்புச் சட்டப் பாதுகாப்பு நான்கு வகைகளில் வழங் கப்பட்டன. அரசியலமைப்புச் சட்டத்தின் 29வது பிரிவு. அது மற்ற மதத் தினருக்கோ இனத்தினருக்கோ விதிக்காத எக்கட்டுப்பாட்டையும் ஒரு மதத்தினருக்கோ இனத்தவருக்கோ விதிக்கலாகாது என்று கூறுகிறது. அரசியலமைப்புச் சட்டத்தைத் திருத்துவதற்கு மூன்றிலிரண்டு பெரும் பான்மை விதிக்கப்பட்டமை. கவர்னருக்கு வழங்கப்பட்ட அதிகாரங் கள். அரசாங்க சேவை, நீதிச் சேவைக் கமிஷன்கள்.



இலங்கையின் சுயாட்சிக் கோரிக்கையை ஆராய்வதற்காக பிரிட்டிஷ் அரசாங்கம் சோல்பரி கமிஷனை நியமித்தது. அது 1944 செப்டம்பர் இலங்கைக்கு வந்தது. 1945 ஜனவரி முதல் விசாரணை நடத்தியது.

அக்கமிஷன்முன் தமிழரின் கோரிக்கையை ஒற்றுமையாக முன் வைப்பதற்காக 1944 அக்டோபர் 27ல் வெள்ளவத்தை சைவ மங்கையர் கழக மண்டபத்தில் ஒரு கூட்டம் நடத்தப்பட்டது. தமிழரின் தனிக் குரலாக ஒலிப்பதற்காக ஜி. ஜி. பொன்னம்பலத்தின் தலைமையில் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

சோல்பரி கமிஷன் முன் ஜி. ஜி. பொன்னம்பலம் சாட்சிய மளித்தார். அவருக்கு செல்வநாயகம் உதவினார். பொன்னம்பலத்தின் வாதத்தின் சாராம்சம் இது:"இலங்கை ஓரின மக்கள் வாழும் நாடல்ல. பல இன மக்கள் வாழும் நாடு. எனவே, இலங்கைக்கு பிரிட்டனில் உள்ளதைப் போன்ற பாராளுமன்ற சனநாயக முறை ஒத்துவராது. பல இன மக்கள் வாழும் நாடுகளில் பாராளுமன்ற சனநாயக முறை பெரும் பான்மை இன மக்கள் சிறுபான்மை இன மக்களை அடக்கி ஆளுவதற்கு வழி வகுக்கும். பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த ஆட்சியாளர்கள் சிறுபான்மை இன மக்களின் நலன்களில் கவனம் செலுத்த மாட் டார்கள். எனவே இலங்கையில் வாழும் சிறுபான்மை மக்களுக்குப் பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும். சமபல பிரதிநிதித்துவ முறை மூலம் அப்பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும்". அதன்பின்பு ஐம்ப துக்கைம்பது கோரிக்கையை ஜி. ஜி. பொன்னம்பலம் முன்வைத்தார். சிறுபான்மையினருக்குப் பாதுகாப்பு வேண்டும் என்ற கோரிக்கையை சோல்பரி கமிஷனர்கள் ஏற்றுக்கொண்டனர். ஆனால் சமபல பிர திநிதித்துவம் என்ற தீர்வை அவர்கள் நிராகரித்தனர். சோல்பரி கமிஷனின் அறிக்கை 1945 ஜூலை 11ல் பிரிட்டிஷ் அரசாங்கத்திடம் கையளிக்கப்பட்டது. அவ்வறிக்கைக்கு எதிராகப் பிரசாரம் செய்வதற் காக ஜி. ஜி. லண்டனுக்குப் போனார். அச் சமயம் சோல்பரி கமிஷன் அறிக்கையை வரவேற்கும் தீர்மானம் ஒன்றை டி. எஸ். சேனநாயக்கா அரசாங்க சபையில் பிரேரித்தார். 1945 நவம்பர் 8ம் 9ம் திகதிகளில் அப் பிரேரணை மீதான விவாதம் நடந்தது.

சோல்பரி கமிஷன் ஆலோசனைகளை ஏற்றுக் கொள்ளும் தீர்மானத்தை அரசாங்க சபையில் முன்மொழிந்து பேசிய டி.எஸ்.சேனநாயக்கா உதிர்த்த பொன் மொழிகள் இவை:

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எமது நோக்கங்களின் நேர்மையை எந்த நியாயமான மனிதனும் சந்தேகிக்க மாட்டான். சிறுபான்மையினருக்கு அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய திலும் பார்க்க அதிக பங்கு கிடைக்கக் கூடிய திட்டம் ஒன்றைத் தயாரித் தோம். அவர்களுக்குப் பாதகம் விளைவிக்கும் சட்டங்கள் இயற்ற முடியாத ஒழுங்குகளைச் செய்துள்ளோம். கவர்னர் ஜெனரல் பக்கச் சார்பற்ற வகையில் நடப்பார் என்று சிறுபான்மையினர் கருதுவதால் அவரிடம் முக்கிய அதிகாரங்களைக் கொடுத்தோம். தமக்குப் பாதுகாப்பளிப்பதற்குத் தேவை எனச் சிறுபான்மையினர் கோரிய சுதந்திரமான அரசாங்க சேவைக் கமிஷனையும் கொடுக்க முடிவு செய்துள்ளோம்.

விவாத முடிவில் 51 உறுப்பினர்கள் ஆதரவாகவும் 3 பேர் எதிரா கவும் வாக்களித்தனர். ஆதரித்து வாக்களித்தவர்களில் 5 பேர் தமிழர், 3 பேர் முஸ்லிம்கள், 4 பேர் ஐரோப்பியர்கள், ஒருவர் பறங்கியர். எதிர்த்து வாக்களித்தவர்களில் ஒருவர் சிங்களவர், இரண்டு பேர் இந்தியத் தமிழர். ஆதரித்து வாக்களித்த ஐந்து இலங்கைத் தமிழர்களில் திருக்கோ ணமலை, மட்டக்களப்பு பிரதிநிதி வி. நல்லையா, காங்கேசன்துறை பிரதிநிதி எஸ். நடேசன், யாழ்ப்பாண பிரதிநிதி ஏ. மகாதேவாஆகியோர் தீர்மானத்தை ஆதரித்துப் பேசினர். அவர்களின் உரைகளின் பொழிப்பு:

சிங்களத் தலைவர்களில் நம்பிக்கை வைக்க தமிழர்கள் தயாராக வுள்ளனர்.

சமபல பிரதிநிதித்துவத்துக்காகப் போராட ஜி. ஜி. லண்டன் போயிருந்த சமயம் சிறுபான்மைச் சமூகத்தினர் சோல்பரி கமிஷன் அறிக்கையை ஆதரித்து வாக்களித்ததால் சமபல கோரிக்கை செத்து மடிந்தது.

# 5

# வலுச் சேர்த்த சிங்களவர்கள்

**கல் ஓயா திட்டம்**

சோல்பரி திட்டத்தை முன்மொழிந்து பேசியபோது இலங்கையின் தந்தை டி. எஸ். சேனநாயக்கா சிறுபான்மையினருக்கு அவர்களுக்குக் கிடைக்க வேண்டியதிலும் பார்க்க அதிக பங்கு கிடைக்கக் கூடிய திட்டம் ஒன்றைத் தயாரித்திருப்பதாகச் சொன்னார். அவர் தயாரித்த திட்டம் சிங்களவரின் வலுப்படுத்துவதற்கான திட்டம் என்பது அவர் பிரதம மந்திரி பதவி ஏற்ற சில மாதங்களிலேயே தெளி வாகியது. சிங்களத் தலைவர்கள் மீது தமிழர்கள் வைத்த நம்பிக்கை பயனற்றது என்பதும் இலங்கை சுதந்திரம் அடைந்த சில மாதங்களில் புலனாகியது.

1948 பெப்ரவரி 4ம் திகதி இலங்கைக்குச் சுதந்திரம் கிடைத்தது. அதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்பே-அரசாங்க சபையில் விவசாய அமைச்சராகப் பதவி வகித்த காலத்திலேயே டி. எஸ். சேனநாயக்கா சிங்களவர்களை வலுப்படுத்துவதற்கும் தமிழர்களைப் பலவீனப் படுத்துவதற்கும் தேவையான நடவடிக்கையை எடுக்கத் தொடங்கி விட்டார். அவர் எடுத்த முதலாவது நடவடிக்கை நிலப் பறிப்பு. தமிழர் தாயகத்தில் சிங்களவர்களைக் குடியேற்றுவதன் மூலம் தமிழரின் நிலத்தைப் பறிக்கும் பணியை டி. எஸ். சேனநாயக்கா ஆரம்பித்தார்.

அத்துடன், தமிழரின் தொகையைக் குறைத்து தமிழரைப் பல வீனப் படுத்துவதற்கான ஆரம்ப முயற்சிகளும் டி. எஸ்.அரசாங்க சபை காலத்திலேயே ஆரம்பிக்கப்பட்டன.

குடியேற்றப் பிரச்சினையின் உண்மையான தாக்கத்தை தந்தை செல்வா எடுத்துக் காட்டும் வரை தமிழ் பேசும் மக்கள் உணரவில்லை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அதற்கான காரணங்கள்: "தமிழ்ப் பிரதேசத்திலும் சில குடியேற்றங்கள் துவக்கப்பட்டமையும் ஆரம்பிக்கப்பட்ட குடியேற்றங்கள் மிகவும் சிறிய அளவினதாக இருந்தமையும். அதனால், குடியேற்றப் பிரச்சினை சோல்பரி கமிஷன் முன் வைக்கப்படவில்லை. அப்போது தமிழ் மக்களுக்கு இருந்த மற்ற இரண்டு பிரச்சினைகளையும் தமிழ் காங் கிரஸ், சோல்பரி கமிஷன் முன் வைத்தது. அதிகாரப் பறிப்பு பிரச்சினை பற்றி ஜி. ஜி. கமிஷன் முன் சாட்சியமளித்தார். பிரஜாவுரிமை பற்றி தமிழ் காங்கிரஸின் இணைச் செயலாளராக இருந்த ஜி. ஆர். மோத்தா சாட்சியமளித்தார்.

நிலம் பறிக்கும் பிரச்சினையின் ஆரம்பம் நேர்மையானது. நியாய மானதும் கூட. 1927 மார்ச்சில் நடந்த இரண்டாவது விவசாய மகாநாட்டில் கவர்னர் சர் கியு கிளிபோர்ட் ஓர்கட்டுரையை வாசித்தார். இலங்கையின் காணிப் பிரச்சினை பற்றிய சில சிந்தனைகள் என்பது அவர் வாசித்த கட்டுரையின் தலைப்பு. காணிப் பிரச்சினை இலங்கை மக்களின் உணர்வுடன் தொடர்புடையது எனவும் எனவே அரசு மிகவும் கவனமாக நடந்து கொள்ளுதல் வேண்டும் என்றும் அவர் தன் கட்டு ரையில் குறிப்பிட்டார். அதே ஆண்டில் சட்ட சபை, காணிக் கமிஷன் ஒன்றை நியமித்தது. காணியில்லாப் பிரச்சினையை ஆராய்ந்த காணிக் கமிஷன் வட மத்திய மாகாணம், கிழக்கு மாகாணம், வட மாகாணத் தினதும் ஊவா மாகாணத்தினதும் சில பகுதிகள் ஆகியவற்றிலுள்ள முடிக்குரிய காணிகளில் அரசின் உதவியுடன் குடியேற்றங்கள் ஆரம் பிக்கப்படலாம் எனச் சிபாரிசு செய்தது. மன்னார், முல்லைத்தீவு, அநுராதபுரம், திருக்கோணமலை, யாழ்ப்பாணம், குருநாகல் மாவட்டங் களில் குத்தகைக்குக் கொடுக்கப்படும் காணிகளின் அளவு மட்டுப் படுத்தப்பட வேண்டும் எனவும்அக் கமிஷன் சிபாரிசு செய்தது.

அந்த அறிக்கையை ஆராய்ந்த விவசாய நிர்வாகக் குழு விவசாயி களையும் நடுத்தர வர்க்கத்தினரையும் குடியமர்த்துவதற்கு குடியேற்றத் திட்டங்களை ஆரம்பிக்க முடிவு செய்தது. அரசாங்க சபையின் விவசாய நிர்வாகக் குழுவுக்கு டி. எஸ். சேனநாயக்கா தலைவராக இருந்தார். திட்டமிட்ட முறையில் குடியேற்றத் திட்டங்களை ஆரம்பிப்பதற்காக 1933 இல் காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தை அவர் அரசாங்க சபையில் கொண்டு வந்து நிறைவேற்றினார். அக் கட்டளைச் சட்டத் தின்படி அரச காணியை மூன்று காரணங்களுக்காகக் கொடுக்கலாம். கிராமத்தை அபிவிருத்தி செய்வதற்காக, அரசாங்கத்தின் தேவைக்காக, குடியேற்றத் திட்டங்களுக்காக அரச காணியைக் கொடுக்கலாம்.



குடியேற்றத் திட்டங்களுக்கான காணி தற்காலிக நன்கொடை யாகவும் நேரடி நன்கொடையாகவும் வழங்கப்படலாம். தற்காலிக நன்கொடையாகக் கொடுக்கப்படும் காணி அது கொடுக்கப்படும் காரணத்துக்காக உபயோகிக்கப்படின் நிரந்தர நன்கொடை யாக்கப்படலாம். தனது குடியேற்றத் திட்டத்தை விளக்குவதற்காக "விவசாயமும் நாட்டுப் பற்றும்" என்ற பெயரில் சிறு நூல் ஒன்றை டி. எஸ். சேனநாயக்க எழுதினார். விவசாயத்தில் அக்கறை காட்டுமாறு நாட்டு மக்களை அவர் தூண்டினார்.

மின்னேரியா குடியேற்றத் திட்டம் தான் முதலில் ஆரம்பிக் கப்பட்டது. சிங்களவர் அங்கு குடியேற்றப்பட்டனர். அடுத்து வட மாகாணத்திலுள்ள கிளிநொச்சியில் தமிழருக்கென ஒரு குடியேற்றத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. பின்பு, பொலன்னறுவையிலும் அநுராதபுரத்திலும் குடியேற்றத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. ஆரம்பத்தில் குடியேற்றத் திட்டங்கள் நல்ல நோக்குடனேயே ஆரம்பிக்கப்பட்டன. காணியற்றோருக்குக் காணி கொடுத்து விவசாய உற்பத்தியை அதிகரிப்பதே அவற்றின் நோக்கமாக இருந்தது. அதனால் குடியேற்றத் திட்டங்களை தமிழ்த் தலைவர்கள் வரவேற்றனர். இலங்கையை விவசாயத் துறையில் சுபீட்சப் பாதையில் இட்டுச் செல்லும் திட்டம் என்று அவர்கள் நினைத்தனர்.

இலங்கையின் முதலாவது பிரதம மந்திரி டி. எஸ். சேனநாயக்கா அதற்கு வகுப்புவாத உள்ளீடு கொடுத்தார். தமிழ் மக்களைப் பலவீனப் படுத்திப் பாராளுமன்றத்தில் அவர்களின் பிரதிநிதித்துவத்தைக் குறைக்கும் தன் நோக்கத்தை அடைவதற்கு குடியேற்றத் திட்டத்தை ஓர் ஆயுதமாக அவர் மாற்றினார். கல் ஓயா திட்டத்தின் மூலம் அம்பாறை பிரதேசத்திலும் கந்தளாய் திட்டத்தின் மூலம் திருகோணமலைப் பிர தேசத்திலும் தமிழரின் பலத்தைக் குறைக்க அவர் திட்டமிட்டு நடவ டிக்கை எடுத்தார்.

டி. எஸ். சேனநாயக்காவின் "மண் பறிக்கும் இந்த முயற்சிகள் மண் காக்கும் சிந்தனையைத் தமிழ் மக்களிடையே தோற்றுவித்தது". அதன் விளைவாக தமிழர் தாயகம். தமிழர் மரபு வழித் தாயகம் என்ற கருத்துக்கள் தமிழ் மக்களிடையே தோன்றின. 1949ல் கல் ஓயா திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. கல்ஓயாவின் பழைய பெயர் "பட்டிப்பளை ஆறு" அப் பகுதியில் தமிழ் மக்களும் முஸ்லிம்களும் வாழ்ந்தனர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**பெயர் மாற்றம்**

இலங்கை 1948ல் சுதந்திரம் அடைந்ததும் டி. எஸ். சேனநாயக்கா தன் நிரந்தரச் செயலாளர் சர் கந்தையா வைத்தியநாதன், நீர்ப்பாசனப் பணிப்பாளர் ரி. அழகரத்தினம், நில அளவைப் பணிப்பாளர் நாயகம் டாக்டர் எஸ். புரோக்கியர் ஆகியோரை ஒரு கூட்டத்திற்கு அழைத்தார். கிழக்கு மாகாணத்திலுள்ள பட்டிப்பளை ஆறை பாரிய நீர்ப்பாசனத் திட்டமாக்கப் போவதாக அவர் அறிவித்தார். அதற்கான சாத்தியக் கூறுகளை ஆராயும் பணி அழகரத்தினத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

பட்டிப்பளை ஆறு பதுளை மாவட்டத்திலுள்ள மடுல்சீமா மலைத் தொடரில் ஊற்றெடுத்து பள்ளத்தாக்கு வழியே 56 மைல்கள் உருண் டோடி வங்காள விரிகுடா கடலில் கலக்கிறது. அதன் கரையில் புராதன தமிழ்க் கிராமமான பட்டிப்பளை இருந்தது. கி.மு. மூன்றாம் நூற்றாண்டுக்கு முன்பிருந்தே செழிப்புடன் விளங்கிய கிராமம் அது. கலிங்க மாகன் என்னும் மன்னன் கி.பி 1215ல் இப்பிரதேசத்தை ஆண்ட தாகவும் அப்பொழுது பாரிய விவசாயப் பிரதேசமாக அது விளங்கிய தாகவும் வரலாறு கூறுகிறது. அப்பகுதியில் நெல் விவசாயத்தை ஊக்குவிக்கும் முகமாக பிரித்தானியர் 1881ல் நீர்ப்பாசனத் திட்ட மொன்றை ஆரம்பித்தனர். இறக்காமம், கொண்டவெட்டுவான், அம்பாறைக் குளங்களைப் புனரமைத்து நெல் வேளாண்மையை அவர்கள் ஊக்குவித்தனர்.

அழகரத்தினம் தலைமையில் சென்ற குழுவினர் சம்மாந் துறைக்குப் போய் அங்கிருந்து மாட்டு வண்டிலில் சென்று பட்டிப்பளை ஆற்றின் மேல் பகுதியிலுள்ள அம்பாறை, இங்கினியாகலை ஆகிய இடங்களில் ஆய்வுகளை மேற்கொண்டனர். பட்டிப்பளை ஆறை இங்கினியாகலை யில் மறித்துக் கட்டி நீர்த்தேக்கம் ஒன்றை உருவாக்கி நீர்ப்பாசனத் திட்டத்தை ஆரம்பிக்கலாம் என்று அழகரத்தினம் குழு சிபாரிசு செய்தது.

1948ம் ஆண்டு டி.எஸ். சேனநாயக்கா அரசாங்கத்தினால் இயற்றப் பட்ட 51ஆவது இலக்க கல்ஓயா அபிவிருத்தி சபைச் சட்டத்தின் கீழ் பட்டிப்பளையாற்றின் அபிவிருத்திக்கென விசேஷ சபை உருவாக் கப்பட்டது. அதற்கு கல்ஓயா அபிவிருத்திச் சபை எனப் பெயர் சூட்டப் பட்டது. அதன்மூலம் பட்டிப்பளையாறு கல் ஓயாவாக மாற்றப்பட்டது. தமிழ்க் கிராமங்களுக்குச் சிங்களப் பெயர் சூட்டும் முயற்சி கல்ஓயாவில் ஆரம்பிக்கப்பட்டது. கல்ஓயா அபிவிருத்தி வேலை 1949ம் ஆகஸ்ட் 28ல் இங்கினியாகலையில் பிரதம மந்திரி டி. எஸ். சேனநாயக்காவினால்



ஆரம்பிக்கப்பட்டது. கல்ஓயா ஆறை இங்கினியாகலையில் மறித்து அணை யொன்றைக் கட்டுவதன் மூலம் நீர்த்தேக்கம் ஒன்று அமைக்கப் பட்டது. அதற்கு சேனநாயக்கா சமுத்திரம் என்று பெயரிட்டனர்.

கல்ஓயா திட்டம் 120,000 ஏக்கர் நிலப்பரப்பை உள்ளடக்கியது. அது 40 குடியேற்றத் திட்டங்களாகப் பகுக்கப்பட்டு ஒவ்வொரு திட்டத் திலும் 150 குடும்பங்கள் குடியேற்றப்பட்டன. ஒவ்வொரு குடும்பத்துக்கும் மூன்று ஏக்கர் நெல் வயலும் இரண்டு ஏக்கர் மேட்டு நிலமும் வழங்கப்பட்டன. ஒவ்வொரு குடும்பத்துக்கும் குடியிருக்க வீடும் கட்டிக் கொடுக்கப்பட்டது. கல்ஓயா திட்டத்தின் முதலாவது கட்டத்தில் 20,000 சிங்களவர் குடிமயர்த்தப்பட்டனர். ஆறு குடியேற்றத் திட்டங்கள் தமிழருக்கென ஒதுக்கப்பட்டு அவற்றில் தமிழர்கள் குடியமர்த்தப்பட்டனர். 1956 ஜூன் 5ல் நடந்த கலகத்தின் போது சிங்களக் காடையர்கள் தமிழர்களை கல்ஓயாவிலிருந்து விரட்டினர். கலகம் ஓய்ந்தபின் தமது காணிகளுக்குத் திரும்பியவர்கள் 1958ல் நடந்த கலகத்தின் போது விரட்டப்பட்டனர். மீண்டும் திரும்பிய ஒரு சிலரும் 1990ல் விரட்டப்பட்டனர். பொத்துவிலுக்கருகேயுள்ள லகுகலவில் வாழ்ந்த 343 தமிழ்க் குடும்பங்களும் சிங்களவரால் விரட்டப்பட்டனர். இன்று அவர்கள் காரைதீவு, விநாயகபுரம், ஆலையடி வேம்பு ஆகிய தமிழ்க் கிராமங்களில் அகதிகளாக வாழ்கிறார்கள். தமிழருக்கென ஒதுக்கப்பட்ட ஆறு குடியிருப்புக்களிலுமுள்ள 1200 ஏக்கர் வயல் களிலும் சிங்களவர்கள் செய்கை பண்ணுகின்றனர்.

பட்டிப்பளை ஆறின் பெயர் மாற்றத்தை எதிர்த்து தமிழரசுக் கட்சி- அது ஆரம்பிக்கப்பட்டு சில மாதங்கள் தான் ஆகியிருந்தன- பெரிய இயக்கமொன்றை ஆரம்பித்தது. கல்முனை, சம்மாந்துறை பிரதேசத் திலுள்ள எல்லாத் தமிழ்க் கிராமங்களும் அந்த எதிர்ப்பு இயக்கத்துக்கு ஆதரவு கொடுத்தன. அப்பொழுது அப்பகுதிகள் யாவும் மட்டக்களப்பு மாவட்டத்திற்குள்ளேயே இருந்தன. கல்லோயாத் திட்டம் ஆரம்பிப் பதற்கு முன்பு தொட்டம், தமனை, உகனை, படாகோடை என்ற கிராமங்களில் தமிழர்களும், சிறிய தொகை சிங்களவர்களும் வாழ்ந்தனர். அம்பாறை, கொண்டவட்டுவான், வாய்ப்பத்தான் சேனை ஆகிய பகுதிகளில் தமிழர்களும் சிங்களவரும் முஸ்லிம்களும் வாழ்ந்தனர். றக்கலை, சேனாக்காடு ஆகிய பகுதிகளில் ஆதிவாசிகளான வேடுவர்களும், இங்கினியாகலை காட்டுப் பகுதியில் வனக்குற வர்களும் வசித்தனர்.

கல் ஓயா திட்டத்தின் கீழ் தமிழர்கள் பயனடைவார்கள் என்றும் வானம் பார்த்த அவர்களின் வயல்களுக்கு பாசன வசதி கிடைக்கும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எனவும் முதலில் சொல்லப்பட்டது. வெள்ளத்தாலும் வரட்சியாலும் மாறிமாறித் தாக்கப்பட்ட தமிழ் விவசாயிகள் கல் ஓயா திட்டத்தினால் தம் வாழ்வு மலரும் என்று எதிர்பார்த்தனர். ஆனால், 1950ல் முதலாவது குடியேற்றம் ஆரம்பிக்கப்பட்டபோது வெளி மாவட்டங்களிலிருந்து கொண்டு வரப்பட்ட 300 சிங்களக் குடும்பங்கள் குடியேற்றப்பட்டனர். தம் பாரம்பரிய பூமியில் வாழ்ந்த தமிழ் மக்கள் உடுத்த புடவையுடன் வெளியேற்றப்பட்டனர். அவர்களுக்கு மாற்றுத் தங்குமிட வசதிகூட அளிக்கப்படவில்லை. இதை ஆட்சேபித்து வடக்கு, கிழக்கு மாகாணங்கள் முழுவதும் ஆர்ப்பாட்டங்களும் ஊர்வலங்களும் நடத்தப் பட்டன. 1950ம் ஆண்டில் சிங்களக் குடியேற்றம் ஒரு பெரும் பிரச்சினை யாக வளர ஆரம்பித்துவிட்டது. கல்ஓயாத் திட்டம் தீவிரமாக அமுல் நடத்தப்பட்டது. 1951 பெப்ரவரி 4 ம் திகதி இலங்கை சுதந்திரத்தின் மூன்றாவது ஆண்டு விழா கொண்டாடப்படுவதை யொட்டி பிரதமர் டி. எஸ். சேனநாயக்கா நாட்டு மக்களுக்கு வானொலி மூலம் செய்தி யொன்றை விடுத்தார். அச் செய்தியிலுள்ள பகுதி இது:

> காணி அபிவிருத்தி நடவடிக்கைகளும் குடியேற்றமும் முன் எப்போ துமில்லாத வேகத்தில் நடைபெறுகின்றன. நன்றாக அபிவிருத்தி செய்யப் பட்டு பாசன வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளன. காணிகளில் முன்பு எப்பொழுதுமே குடியேற்றப்படாத எண்ணிக்கைகளில் விவசாயிகளைக் குடியேற்றுகின்றோம்.

**நாளை கந்தளாய்**

சிங்கள மக்களைக் குடியேற்றுவதைத்தான் இவ்வளவு பெருமிதத் துடன் டி. எஸ். சேனநாயக்கா கூறினார். 1951 ஏப்பிரலில் திருகோண மலையில் நடத்தப்பட்ட தமிழரசுக் கட்சிகளின் முதலாவது தேசிய மகாநாட்டில் தந்தை செல்வா இப்படிச் சொன்னார்: "இன்று கல்ஓயா, நாளை கந்தளாய், அதன் பின்பு பதவியா, வவுனியா, மன்னார் என்று தொடரும் என்று". ஒரு சிறுபான்மைச் சமூகத்துக்குள்ள பாதுகாப்பு அதன் சனத்தொகையும் நிலமுமே என்றும் அந்த இரண்டையும் சிங்கள அரசுகள் தாக்க ஆரம்பித்திருப்பதாகவும் தந்தை எச்சரித்தார். சுவர் இருந்தால்தான் சித்திரம் எழுதலாம் என்ற கோஷத்தையும் அவர் மக்கள் முன் வைத்தார். அம் மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் வாசகம்:



> தமிழ் பேசும் மக்கள் பரம்பரை பரம்பரையாக வசித்து வரும் பிரதேசங் களுக்கு அவர்கள் பிரிக்க முடியாத உரிமையுடையவர்களாதலால், இலங் கைத் தமிழரசுக் கட்சியின் இம் முதலாவது மாநாடு, கல் ஓயா நீர்த் தேக்கத்துக்குட்பட்ட காணியிலும், அத்தகைய வேறு நிலப் பரப்புகளிலும் சிங்கள மக்களை மட்டுமே குடியேற்றுவதான அரசாங்கத்தின் வேண்டு மென்றே திட்டமிடப்பட்ட கொள்கையையும், நடவடிக்கையையும் மேற் கூறப்பட்ட இந்த அடிப்படை உரிமையை மீறும் தன்மையது எனவும் இலங்கையில் தமிழ் பேசும் இனத்தின் நிலைபேறான வாழ்வையே நிர்மூலம் செய்வதான திட்டமிடப்பட்ட ஒரு தாக்குதல் எனவும் கண்டிக்கிறது.

தமிழ் பேசும் மக்களின் தாயகத்தின் பறிப்பு முயற்சி ஆரம்பிக்கப் பட்டு விட்டது. இலங்கையில் இனப்பிரச்சினைக்கு டி. எஸ். சேனநாயக்க அத்திவாரம் இட்டு விட்டார். மட்டக்களப்பு மாவட் டத்தின் செழிப்பான விவசாய நிலத்தைப் பறிப்பதுடன் அவரின் ஆசை தீரவில்லை. திருகோணமலை மாகாணம் முழுவதையும் தமிழர்களிட மிருந்து பறித்தெடுக்கும் பெரு முயற்சிக்கான அத்திவாரத்தையும் அவர் போட்டார். கந்தளாய் குடியேற்றத்துடன் அது ஆரம்பிக்கப்பட்டது.

கந்தளாய் குடியேற்றத் திட்டம் 1948ம் ஆண்டு ஆரம்பிக்கப் பட்டது. கந்தளாய் குளம் ஆரம்பத்தில் தம்பலகாமம், கிண்ணியா, பகுதி களிலுள்ள விவசாயிகளுக்குப் பாசனமளித்தது. குளம் பெரிதாக்கப் பட்டு மேலதிக நீரை உபயோகித்து சிங்களக் குடியேற்றம் ஆரம்பிக்கப் பட்டது. 1900ம் ஆண்டுகளில் அப் பகுதியில் ஒரே ஒரு கிராம சேவகர் பிரிவுதான் இருந்தது. இப்போது 23 கிராமசேவகர் பிரிவுகள் உள்ளன. 1981ல் திருகோணமலை மாவட்டத்தில் 86,000 சிங்களவர்கள் வாழ்ந் தனர். அவர்களில் 40,000 பேர் கந்தளாய் குடியேற்றத் திட்டத்தில் வசிக்கிறார்கள். அல்லை திட்டம் 1950ம் ஆண்டுகளின் முற்பகுதியில் ஆரம்பிக்கப்பட்டது. மகாவலி கங்கையின் கிளையான வெருகல் ஆறுக்குக் குறுக்கே அணை கட்டி அத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இப்பகுதி முன்பு கொட்டியார் எனவும் கொட்டியாபுரம் எனவும் அழைக்கப்பட்டன.

சிங்கள மக்களும் தமிழ் மக்களும் அங்கு வாழ்ந்தனர். அங்கு முன்பு ஒரேயோரு உதவி அரசாங்க அதிபர் பிரிவு தான் இருந்தது. கொட்டியார் உதவி அரசாங்க பிரிவு என அது அழைக்கப்பட்டது. இன்று அங்கு மூன்று உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் உள்ளன. மூதூர், சேருவல, வெருகல், அரசாங்க அதிபர் பிரிவுகள் என அவை அழைக்கப்படுகின்றன.

....... ....... .......

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சேருவல உதவி அரசாங்க அதிபர் பிரிவு 1960ம் ஆண்டுகளிலும் வெருகல் உதவி அரசாங்க அதிபர் பிரிவு 1980ம் ஆண்டுகளிலும் உருவாக்கப்பட்டன. புராதன தமிழ்க் கிராமங்கள் இருந்த இப் பகுதியில் பல புதிய சிங்களக் கிராமங்கள் முளைத்துள்ளன. புலஸ்திகம, கங்காயபட்டுண ஆகியவை உதாரணங்கள். அத்துடன் பல தமிழ்க் கிராமப் பெயர்கள் சிங்களப் பெயர்களாக்கப்பட்டுள்ளன. அரிப்பு சேருநுவரவாகவும், கல்லாறு சோமபுரவாகவும், நீலப்பளை நிலப் பொலவாகவும் பூநகர் மகிந்தபுர வாகவும் திருமங்கவை தெஹிவத் தையாகவும் மாற்றப்பட்டுள்ளன. சேருவலை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் வாழும் 20,187 பேரில் 11,665 பேர் சிங்களவர். அவர்கள் வெளியிலிருந்து கொண்டுவந்து குடியேற்றப்பட்டவர்கள்.

### பிரஜாவுரிமை பறிப்பு

நிலத்தைப் பறிக்கும் முயற்சியோடு சேர்ந்து தமிழ் மக்களின் எண்ணிக்கையைக் குறைத்து அவர்களின் பிரதிநிதித்துவத்தைக் குறைக்கும் முயற்சியையும் தமிழ்த் தலைவர்களை பதவி கொடுத்து வாங்கி தமிழ் மக்களின் எதிர்ப்பை பலவீனப்படுத்தும் நடவடிக்கையையும் தேசபிதா டி.எஸ். சேனநாயக்கா ஆரம்பித்தார். பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்தே இந்தியர்கள் இலங்கைக்கு வர ஆரம்பித்தனர். வர்த்தகம், அரசாங்க சேவை, கூலி வேலை, பெருந் தோட்டத் தொழில் ஆகிய பல துறைகளிலும் வேலை செய்வதற்கு அவர்கள் வந்தனர். போன நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து இந்தியர்களுக்கெதிரான உணர்வு சிங்களத் தலைவர்களிடையே தோன்றியது. ஏ. ஈ. குணசிங்கவும், டி. எஸ். சேனநாயக்கவும் இந்த எதிர்ப்புக்குத் தலைமை வகித்தனர். இலங்கையின் தொழிற்சங்க இயக்கத்தின் தந்தை என்று கூறப்படும் ஏ. ஈ. குணசிங்க இலங்கைத் தொழிலாளர் சங்கத்தை ஆரம்பித்தவர். கொழும்பு துறைமுகத்தில் மலையாளிகள் வேலை செய்தார்கள். அவர்களை நாடு கடத்த வேண்டும் என்ற இயக்கத்தை குணசிங்கா ஆரம்பித்தார். பின்பு இந்தியர்களின் கடைகளைப்பகிஷ்கரிக்க வேண்டும் என்ற இயக்கத்தை ஆரம்பித்தார்.

டி.எஸ். சேனநாயக்கா 1946ல் ஐக்கிய தேசியக் கட்சியை ஆரம்பித்து அதன் முதலாவது தலைவராக இருந்தவர். இந்திய வம்சாவளியினருக்கு பிரஜாவுரிமை வழங்கும் விடயத்தில் தனது எதிர்ப்பை 1926 முதல் தெரிவித்து வந்தவர் அவர். 1910ம் ஆண்டில்



இலங்கையில் படித்தவர்களுக்கும் சொத்துரிமை உடையவர்களுக்கும் வாக்குரிமை அளிக்கப்பட்டது. 1920ம் ஆண்டுகளின் பிற்பகுதியில் சர்வஜன வாக்குரிமைபற்றிய பேச்சு எழுந்தது. அப்பொழுது, இலங்கையில் வசிக்கும் இந்தியர்களுக்கும் வாக்குரிமை அளிக்கப்பட வேண்டுமா என்ற கேள்வி எழுப்பப்பட்டது. 1926ல் இந்தியத் தொழிலாளர் சம்பந்தமான மசோதா ஒன்று அரசாங்க சபையில் விவாதிக்கப்பட்டது. அம் மசோதா மீது டி. எஸ். பேசினார். இந்தியருக்கு வாக்குரிமை அளிக்கப்படுவதைத் தான் எதிர்ப்பதாக அவர் சொன்னார். இந்தியத் தொழிலாளர்கள் உள்ளூர் மக்களின் உணவையும் நிலத்தையும் திருடுகின்றனர் என்று சொன்னார் அவர். இந்தியத் தொழிலாளர்கள் இலங்கையில் நீண்ட காலம் வசித்திருந்தாலும் அவர்களை நிரந்தர வாசிகளாகக் கொள்ளக் கூடாது என்று டி. எஸ். வாதிட்டார். அவர்கள் இலங்கையில் வசித்தாலும் இந்தியக் குடியுரிமையை வைத்திருக்கின்றனர். அவர்களின் நன்மையில் இந்திய அரசு தொடர்ந்து அக்கறை காட்டி வருகிறது. எனவே. அவர்களுக்கு இலங்கை வாக்குரிமையைக் கொடுக்கக் கூடாது என்று அவர் சொன்னார்.

இந்தியர்களுக்கு வாக்குரிமை அளிக்கப்படலாகாது என்ற காரணத்துக்காக சர்வஜன வாக்குரிமையையே எதிர்த்தவர் டி. எஸ்; டொனமூர் கமிஷன் சிபாரிசுகளை அரசாங்க சபை விவாதித்த போது டி. எஸ். சேனநாயக்கா இவ்வாறு சொன்னார்:

> இலங்கைக் குடிகளல்லாதவர்களுக்கும் பிரஜாவுரிமை வழங்கப் பட வேண்டும் என்று டொனமூர் கமிஷன் செய்துள்ள சிபாரிசு மற்றச் சிபாரிசுகளிலும் பார்க்கக் கவலையைக் கொடுப்பதாகவுள்ளது. இங்கு வந்த தனது மக்களுடனுள்ள தொடர்புகளை அறுத்துக் கொள்ள இந்திய அரசு தயாராகவில்லை. அவர்கள் இந்தியர்கள் என்ற ரீதியில் அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கின்றது. நான் கூற விரும்புவது இதுதான். இந்தியக் குடியேற்றக்காரர்கள் தொடர்ந்து இந்தியப் பிரஜைகளாக இருக்கின்றனர். இந்திய அரசின் பாதுகாப்பைத் தொடர்ந்து பெறுகின்றனர். வேறொரு நாட்டின் சலுகைகளை அனுபவித்துக் கொண்டு இலங்கையின் அரசாங்கத்தை நிர்ணயிக்கும் உரிமையைக் கோருவது அளவுக்கு அதிகமாகக் கேட்பதாக அமைகிறது.

டி. எஸ். சேனநாயக்கா வேறொரு வாதத்தையும் முன் வைத்தார். இந்தியத் தமிழர்கள் யாவருக்கும் பிரஜாவுரிமை வழங்கினால் கண்டியத் தொகுதிகள் பல இந்தியத் தமிழர்களையே தெரிவு செய்யும். அதனால்,

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கண்டிய சிங்களவரின் பிரஜாவுரிமை பறிக்கப்பட்டுவிடும். டி. எஸ். சேனநாயக்காவினதும் ஏ. ஈ. குணசிங்காவினதும் எதிர்ப்புக்களுக்குப் பிரிட்டிஷ் அரசு விட்டுக் கொடுத்தது. அதன் விளைவாக இலங்கையர் என்ற பதத்துக்கு புது வரைவிலக்கணம் கொடுக்கப்பட்டது. இலங்கையில் வசிப்பவரும் இலங்கையை ஆரம்பவதிவிட மாகக் கொண்டவரும் என்பதே அந்த வரைவிலக்கணம்.

இந்த வரைவிலக்கணத்தின்படி இந்தியர் ஒருவர் இலங்கையை வதிவிடமாகக் கொண்டிருப்பதோடு ஆரம்பத்திலிருந்தே இலங்கையை வதிவிடமாகக் கொண்டிருத்தல் வேண்டும். அதாவது, இலங்கையில் பிறந்து இலங்கையைத் தனது வதிவிடமாகக் கொண்டிருப்பவருக்கே இலங்கைப் பிரஜாவுரிமை வழங்கப்படும். இந்தச் சமரச ஒழுங்கின்படி 225, 000 இந்தியர்களுக்குப் பிரஜாவுரிமை வழங்கப்பட்டது. இது 1931ல் நிலவிய நிலைமை. இது இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் முன்னோடியான இலங்கை-இந்திய காங்கிரஸ் 1939ம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்டதற்கு முந்திய நிலைமை.

1936ல் நடந்த அரசாங்க சபைத் தேர்தலில் இந்திய எதிர்ப்புக் கோஷத்தின் மூலம் வெற்றி பெற்ற குணசிங்க 1939ல் அரசாங்க சபையில் ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றினார். பதினையாயிரம் இந்தியர்களை நாடு கடத்துவதற்குக் கோரியது அத் தீர்மானம். அதே ஆண்டில் இன்னுமொரு தீர்மானத்தை டி. எஸ். கொண்டு வந்தார். 1934 ஏப்ரல் முதலாம் திகதி பத்து வருட சேவையை முடிக்காத அரசாங்க ஊழியர் யாவரும் வேலை நீக்கம்செய்யப்பட வேண்டும் என்று அத்தீர்மானம் கோரியது. ஜி. ஜி. உட்பட தமிழ்ப் பிரதிநிதிகள் யாவரும் இந்த இரு தீர்மானங்களையும் எதிர்த்தனர்.

இத் தீர்மானங்கள் இலங்கையில் வாழ்ந்த இந்தியர்களை உலுக்கி விட்டது. அப்பொழுது இலங்கையில் பல இந்தியர் சங்கங்கள் இருந்தன. அவை எல்லாம் ஒன்று சேர்ந்து கூட்டம் போட்டன, அரசாங்க சபையின் நாடு கடத்தும் தீர்மானத்தைக் கண்டித்தன. இந்திய தேசிய காங்கிரஸுக்கும் காந்திஜிக்கும் நிலைமையை எடுத்துக் கூற வைத்திலிங்கத்தையும் பெரேராவையும் கொண்ட தூது கோஷ்டியை அனுப்பி வைத்தன.

காந்திஜி, ஜவஹர்லால் நேருவைக் கொழும்புக்கு அனுப்பி வைத்தார். 1939 ஜூன் 18 கொழும்பு வந்த நேருஜி. டி. எஸ். சுடன் பேசிப் பார்த்தார். இலங்கையில் பலர் வேலையற்றிருப்பதாகவும் வெளியார் அவர்களின் வேலைகளைத் திருட அனுமதித்தால் புரட்சி செய்வார்கள் என்றும் டி. எஸ். சொன்னார். பேச்சு வார்த்தை பயனளிக்காததால்



இந்தியர் ஓர் உறுதியான சங்கத்தை உருவாக்க வேண்டும் என்று நேருஜி ஆலோசனை வழங்கினார். அந்த அமைப்புக் கூட்டத்துக்கும் தலைமை தாங்கினார்.

நேருஜியின் முயற்சியால் 1939 ஜூலை 25 அதிகாலையில் இலங்கை இந்திய காங்கிரஸ் பிறந்தது. இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் என்ற பெயர் அவ்வியக்கத்துக்கு 1954 இல் கொடுக்கப்பட்டது. நேருஜி திரும்பிப் போனதும் இந்தியர்களை நாடு கடத்தும் இலங்கையின் நடவடிக்கையைக் கண்டித்து இந்திய தேசிய காங்கிரஸ் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியது. அத்துடன், தொழிலாளர்கள் இலங்கைக்குப் போவதை இந்தியா தடை செய்தது. இத்தடையின் விளைவாக இந்தியத் தொழிலாளர்கள் இரு நாடுகளுக்குமிடையே சுதந்திரமாகப் பயணம் செய்ய முடியாத நிலை தோன்றியது. இதனால், ஆறு இலட்சம் இந்தியர்கள் இலங்கையில் நிரந்தரமாகத் தங்கியிருக்க வேண்டிய நிலை தோன்றியது.

இந்த எதிர்பாராத விளைவையிட்டு இலங்கை அரசு அதிர்ச்சியடைந்தது. புதிதாகத் தோன்றிய இந்த நிலையைப்பற்றி பேசுவதற்காக டி. எஸ். சேனநாயக்கா தலைமையில் இலங்கைத் தூதுக் கோஷ்டி ஒன்று புது டில்லி சென்றது. அத்தூதுக் கோஷ்டியில் உள்ளூராட்சி அமைச்சராக இருந்த எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்காவும் அங்கம் வகித்தார். இலங்கை இந்தியக் காங்கிரசும் இந்திய வம்சாவளியினரின் கருத்தை இந்திய அரசுக்கு தெரிவிப்பதற்காக மூன்று உறுப்பினரைக் கொண்ட கோஷ்டியொன்றை அனுப்பியது. பெரி சுந்தரம் தலைமையில் தேசாயும் மோத்தாவும் சென்றனர்.

இந்திய வைஸ்ரோயுடன் நடத்திய பேச்சின் போது இலங்கையிலுள்ள இந்திய வம்சாவளியினர் யாவரும் இந்தியப் பிரஜைகளே என்றும் அதனால் இந்தியா அவர்கள் எல்லோரையும் திருப்பி அழைக்க வேண்டும் எனவும் டி. எஸ். வாதாடினார். அந்த நிலைப்பாட்டை ஏற்க இந்திய அரசாங்கம் மறுத்தது. இந்திய வம்சாவளியினர் இலங்கையில் குடியேறி விட்டமையினால் இவர்கள் இலங்கைப் பிரஜைகளாகி விட்டனர் என்று இந்தியா பதிலளித்தது. இலங்கையில் ஏழு இலட்சம் இந்தியர்கள் வசிப்பதாகவும் அவர்களில் இரண்டு இலட்சம் பேரை ஏற்க இலங்கை தயாராக இருப்பதாகவும் எஞ்சியோரை இந்தியா ஏற்றுக் கொள்ள வேண்டும் எனவும் பண்டாரநாயக்கா வாதாடினார். அதற்கும் இணங்க இந்திய அதிகாரிகள் மறுத்தனர்.

இந்திய அதிகாரிகளைச் சந்தித்த பெரி சுந்தரம் இந்திய வம்சாவளியினர் நீண்ட காலம் இலங்கையில் வசித்து வருவதனால்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வசிப்புரிமை காரணமாக இலங்கையராகிவிட்டனர் என்பதைச் சுட்டிக் காட்டினார். இந்திய அதிகாரிகள் அந்த நிலைப்பாட்டை ஏற்றுக் கொண்டனர். இந்திய வம்சாவளியினர் அனைவரையும் இந்தியாவுக்குத் திருப்பி அனுப்ப வேண்டும் என்ற நிலைப் பாட்டையே டி. எஸ். கொண்டிருந்தார்.

**தமிழ் காங்கிரஸ் பிரதிநிதி**

1947 ஆகஸ்ட் 15ல் இந்தியா சுதந்திரம் பெற்றது. தமிழ் மக்கள் இந்திய சுதந்திரத்தை உணர்ச்சியுடன் கொண்டாடினர். வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியிலும் இந்திய சுதந்திர விழா கொண்டாடப் பட்டது. எஸ். ஜே. வி. ஐ விசேஷ விருந்தினராக அழைத்திருந்தனர். இவ்விழா நடந்தபோது இலங்கையின் முதலாவது பாராளுமன்றத் தேர்தலுக்கான பிரசாரம் சூடேறிக் கொண்டிருந்தது. அந்த விழாவை எஸ். ஜே. வி. தான் போட்டியிட்ட தமிழ் காங்கிரசிற்குப் பிரசாரம் செய்யும் மேடையாக உபயோகிக்கவில்லை. இந்திய சுதந்திரப் போராட்ட வரலாற்றையும் மகாத்மா காந்தியையும் பற்றியே பேசினார். மனித சுதந்திரத்தையும் அகிம்சையையும் வலியுறுத்திக் கூறினார்.

மனித சுதந்திரமும் அகிம்சையும் எஸ். ஜே. வி. யின் அடிப்படை நம்பிக்கைகள். அவற்றில் அவர் அசையா நம்பிக்கை வைத்திருந்தார். 1947 முதலாவது பாராளுமன்றத் தேர்தலின் போது எனக்கு 14 வயது. ஆனால், அரசியல் ஆர்வம் அதிகம். அதிலும் ஜி. ஜி. என்றால் உயிர். காரணம் தமிழில் ஏற்பட்ட பற்றுத் தான். எனது ஊர் யாழ்ப்பாணத் தொகுதியின் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள அரியாலை. சட்ட சபையில் அங்கம் வகித்த கனகரத்தினம் என் ஊரைச் சேர்ந்தவர். 1932ம் ஆண்டில் அகில இலங்கை தமிழ் மகாநாடு நடந்தது. அதில் சட்ட சபையில் இரண்டு சிங்களப் பிரதிநிதிகளுக்கு ஒரு தமிழ் பிரதிநிதி இருக்க வேண்டும் என்று தமிழ் தலைவர்கள் பேசினர். மூன்று சிங்களவர்களுக்கு இரண்டு தமிழ்ப் பிரதிநிதிகள் வேண்டும் என்று வாதாடியவர் கனகரத்தினம். அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் தலைவர் ஜி. ஜி. பொன்னம்பலம் தனது இரண்டாவது தேர்தல் கூட்டத்தை அரியாலையில் நடத்தினார். அக் கூட்டத்தில் ஜி. ஜி. ஆற்றிய உரையின் சாரம் இதுதான்:

மகாதேவா தமிழ் இனத்துக்கு துரோகம் செய்துவிட்டார். சோல்பரி அரசியல் திட்டம் தமிழ் மக்களுக்குத் தீமையையே விளைவிக்கும். அத்தகைய அரசியலமைப்பை ஆதரித்து மகாதேவா வாக்களித்தார்...... ................................



அவரின் முடிவைத் தமிழ் மக்கள் நிராகரிக்கின்றனர் என்பதை பிரிட்டிஷ் அரசுக்கும் உலகுக்கும் காட்ட வேண்டும். எனவே, நீங்கள் திரண்டு வந்து எனக்கு வாக்களித்து மகாதேவாவி்ன் துரோகத்தை அம்பலப் படுத்த வேண்டும்.

உடனே சிலர் கோஷம் எழுப்பினர். தமிழர் தலைவனுக்கு எங்கள் வாக்கு!துரோகி மகாதேவாவைத் தூக்கி எறிவோம். இந்தக் கோஷக் கோஷ்டியில் நானும் ஒருவன். ஜி. ஜி. யின் ஆட்கள் உணர்ச்சியூட்டும் சுலோக அட்டையொன்றையும் அச்சிட்டு விநியோகித்தார். அதன் வாசகம் இது: தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா அந்த அட்டைகளைப் புனலாகச் சுருட்டி சர்க்கஸ் கோமாளியின் தொப்பி போல் அணிந்துகொண்டு தெருத் தெருவாகச் சிறுவர்கள் ஊர்வலம் போனார்கள். ஜி. ஜி. யின் அரசியல் தோற்று விட்டதால் தமிழ் இனத்தின் வரலாற்றுக்கு அவரின் பங்கைக் குறைத்து மதிப்பிடுபவர்களும் இருக்கிறார்கள். தமிழ் மக்களை உணர்ச்சிவயப் படுத்தியமை. தமிழ் மக்களிடையே இன உணர்வை ஊட்டியமை. ஆகியவை ஜி. ஜி. யின் பங்களிப்பு. வரலாற்றில் எதுவுமே திடீர் நிகழ்ச்சியாக இருப்பதில்லை. ஒன்றிலிருந்து மற்றது தொடர்கிறது. 1947 தேர்தலில் வாக்களிப்பு ஆகஸ்ட் 22 முதல் செப்டெம்பர் 20 வரை நீடித்தது. இறுதி தேர்தல் முடிவுகள் செப்டம்பர் 22 இல் வெளிவந்தன. கட்சி நிலவரம் இதுதான்.

| | |
|---|---|
| யூ. என். பி. | 42 |
| எல். எஸ். எஸ். பி. | 10 |
| தமிழ் காங்கிரஸ் | 07 |
| இலங்கை இந்திய காங்கிரஸ் | 06 |
| பி. எல். பி. | 05 |
| கம்யூனிஸ்ட்கட்சி | 03 |
| தொழில் கட்சி | 01 |
| சுயேட்சை | 21 |
| மொத்தம் | 95 |

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இன அடிப்படையில் பார்த்தால்,

| | |
|---|---|
| சிங்களவர் | 68 |
| இலங்கைத் தமிழர் | 13 |
| இந்தியத் தமிழர் | 07 |
| முஸ்லிம்கள் | 06 |
| பறங்கியர் | 01 |

இந்தத் தேர்தலில் 95 தொகுதிகளில் சிங்களவருக்கு 68ம் சிறுபான்மையினருக்கு 27ம் கிடைத்தன. அன்றிருந்த சனத் தொகை விகிதாசாரத்தின் அடிப்படையில் பார்த்தால் சிங்களவருக்குக் கிடைக்க வேண்டிய தொகையிலும் அதிகமாகவே கிடைத்துள்ளது. சிறுபான்மையினருக்கு அதிக அளவு பங்கு கிடைக்க வழி செய்திருப்பதாகக் கூறியது தவறானது என்பதை தேர்தல் முடிவு காட்டி விட்டது. 1947 தேர்தல் இந்திய வாக்காளரின் பலத்தை தெளிவாகக் காட்டுகிறது. இலங்கை-இந்திய காங்கிரஸ் மத்திய மாகாணத்தின் மொத்த 15 தொகுதிகளில் ஐந்தைக் கைப்பற்றியது. போல்ஸ்விக் லெனினிஸ்ட் கட்சியான இடதுசாரிக் கட்சி ஒரு தொகுதியை வெல்வதற்கு உதவியது. சப்ரகமூவா மாகாணத்தில் மொத்தம் 10 தொகுதிகளில் லங்கா சமசமாஜக் கட்சி நாலு தொகுதிகளில் வெற்றி பெற உதவியது. மேல் மாகாணத்திலும் இடதுசாரிகள் கொழும்பில் வெற்றி பெறுவதற்கு உதவியது.

இந்திய வாக்காளர்களின் பலத்தை டி. எஸ். சேனநாயக்கா மிகவும் தெளிவாக உணர்ந்து கொண்டார். ஆனால், அவர் முன்பு செய்தது போல இந்திய வாக்கால் ஏற்படக் கூடிய ஆபத்தைப் பற்றிச் சத்தம் போடவில்லை. உலகில், குறிப்பாக மேற்குலகில், கம்யூனிஸ எதிர்ப்புணர்வு வலுத்திருந்தது. அதை அவர் பயன்படுத்தினார்.

1947 பாராளுமன்றத் தேர்தலில் யூ. என். பி. க்கு 42 தொகுதிகளில் வெற்றி கிட்டியது. செப்டம்பர் 23 ஆம் திகதி கவர்னர் சர், ஹென்றி மொன்க் மேசன் மூர். யூ. என். பி. யின் தலைவர் டி. எஸ். சேனநாயக்காவை அழைத்து மந்திரி சபையை அமைக்கும்படி கோரினார். அடுத்த நாளான செப்டம்பர் 24ல் சேனநாயக்கா கண்டி தலதா மாளிகைக்குப் போய் வெள்ளை மலர்களை வைத்து வழிபட்டு விட்டு நாட்டு மக்களுக்கு சிங்களத்திலும், ஆங்கிலத்திலும் உரையாற்றினார். அந்த உரை தமிழிலும் மொழி பெயர்க்கப்பட்டது. தனது மந்திரி சபையில் இரண்டு யாழ்ப்பாணத் தமிழர்களை அவர் சேர்த்துக்



கொண்டார். வவுனியா பிரதிநிதி சி. சுந்தரலிங்கம் வர்த்தக அமைச்சராக நியமிக்கப்பட்டார். மன்னார் பிரதிநிதி சி. சிற்றம்பலம் தபால், தந்தி தொடர்புகள் மந்திரியாக்கப்பட்டார். இரண்டு பேரும் சுயேட்சையாகப் போட்டியிட்டவர்கள். சிற்றம்பலம் தமிழ்க் காங்கிரஸின் ஆதரவுடன் போட்டியிட்டவர். மலே சமூகத்தைச் சேர்ந்த டி. பி. ஜாயாவை தொழில், சமூக சேவைகள் அமைச்சராக நியமித்தார். சிறுபான்மைச் சமூகங்களுக்கு நியாயமாக நடந்து கொள்ள வேண்டிய நிலை டி. எஸ்.சுக்கு அன்றிருந்தது. காரணம் தமிழ்க் காங்கிரஸின் வெற்றியை சோல்பரி அரசியல் திட்டத்துக்கு தமிழ் மக்கள் காட்டிய எதிர்ப்பாக ஜி. ஜி.காட்டியமைதான். தேர்தல் முடிவுகள் வெளியானதும் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் ஜி. ஜி. பொன்னம்பலம் கீழ்க் காணும் தந்தியை குடியேற்ற நாட்டு மந்திரிக்கு அனுப்பி வைத்தார். 1947 செப்டம்பர் 20ல் அனுப்பப்பட்ட அத் தந்தியின் வாசகம்:

> சென்ற பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சித் தமிழ் அபேட்சகருள் ஒருவராவது தெரிவு செய்யப்படாததிலிருந்தும் 1945 ஆம் ஆண்டு வெள்ளை அறிக்கையை ஆதரித்த பழைய அரசாங்க சபை அங்கத்தவர்களுள் ஒருவர் தவிர ஏனையோர் தோற்கடிக்கப்பட்டதிலிருந்தும் இலங்கைத் தமிழ் மக்கள் சோல்பரி அரசியல் திட்டத்தை நிராகரித்து விட்டார்கள் என்பது தெளிவு. இலங்கையிலுள்ள சமூகங்கள் எல்லாவற்றுக்கும் சம உரிமை அளிக்கும் சுதந்திர அரசியற்திட்ட மொன்றை, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கோருகிறது. இலங்கை மக்கள் எல்லோராலும் ஏற்றுக் கொள்ளக் கூடிய அரசியல் திட்டத்தை வகுப்பதற்கு அரசியல் நிர்ணய சபை ஒன்று வேண்டும். இப்பொழுது இருப்பதைப் போன்ற சட்டசபை மந்திரி சபைகளுடன் கூடிய ஒற்றையாட்சி அரசாங்கத்தைத் தமிழர்கள் ஒரு போதும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். தகுந்த மாற்றுமுறை இல்லாதபடியால், நாங்கள் தமிழ் மக்களுக்குச் சுயநிர்ணய உரிமை கோருகின்றோம்.

இந்தத் தந்தி டி. எஸ். ஐ. ஆத்திரமடைய வைத்தது. தேர்தலுக்குச் சில மாதங்களுக்கு முன்பு சிறுபான்மையினரின் பாதுகாப்புப் பற்றிப் பேசுவதற்காக டி. எஸ். லண்டனுக்கு அழைக்கப்பட்டிருந்தார். அதே சமயத்தில் ஜி. ஜி. யும் லண்டன் போகவிருந்தார். தான் லண்டனில் நிற்கும் போது ஜி. ஜி. அங்கே வரக்கூடாது என்று டி. எஸ். கவர்னருக்குத் திட்டவட்டமாகச் சொல்லிவிட்டார். அதனால், டி. எஸ். கொழும்பு திரும்பிய பின் ஜி. ஜி. லண்டனுக்குப் போவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**பதவி வலை**

தமிழ் காங்கிரஸின் எதிர்ப்பைப் பலவீனப்படுத்துவதே டி. எஸ். சின் அப்போதைய தேவையாகவும் தந்திரமாகவும் இருந்தது. ஜி.ஜி.யின் வலது கையாகவிருந்த எஸ். ஜே. வியை மந்திரியாக்குவதை விட வேறு சிறந்த வழி இருக்க முடியுமா? அந்த முயற்சியை டி. எஸ். எடுக்காமல் விடவில்லை. டி. எஸ். இன் மிக நெருங்கிய நண்பர் டி. ஏ. பி. விஜேரத்ன தமிழ்க் காங்கிரஸின் உப தலைவராக இருந்த எஸ். ஜே.விக்கு கடிதம் ஒன்றை அனுப்பினார். புதிய அரசாங்கத்தை அமைப்பதற்கு ஒத்துழைப்புத் தருமாறு விஜேரத்ன கோரினார். ஒரு கல்லால் இரண்டு மாங்காய்கள். சோல்பரி திட்டத்தை எதிர்த்த யாழ். குடாநாட்டுப் பிரதிநிதியே புதிய அரசியலமைப்பை அமுல் செய்ய உதவுகிறார் என்று பிரிட்டனுக்கும் உலகுக்கும் காட்ட நல்ல ஆயுதம் செல்வநாயகம். அதே நேரத்தில் ஜி. ஜி. யினதும் தமிழ்க் காங்கிரஸினதும் முதுகெலும்பை உடைத்த தாகியும் விட்டது. அந்த வலையில் செல்வநாயகம் விழவில்லை. ஜி. ஜி. யுடன் நங்கூரம் போல் நின்றார். கோப்பாய் பிரதிநிதி கு. வன்னியசிங்கமும் டாக்டர் ஈ. எம். வி. நாகநாதனும் எஸ். ஜே. வி. யுடன் பக்க பலமாக நின்றனர். செல்வநாயகம் கிடைக்காததால் சுந்தரலிங்கத்தையும் சிற்றம்பலத்தையும் சேர்த்துக் கொண்டு தன் மந்திரி சபையில் தமிழர்களும் இருக்கிறார்கள் என்று காட்டிப் பிரிட்டிஷாரை சந்தோசப்படுத்தி விட்டார் டி. எஸ்.

தேர்தலின் போது இடதுசாரிக் கட்சிகள் வாக்காளர்களுக்கு ஓர் வாக்குறுதியைக் கொடுத்தன. மந்திரி சபையில் சேரப்போவதில்லை என்பதே அது. டி. எஸ். பிரதமரானதன் பின்பு அவரின் அரசாங்கத்தைத் தோற்கடித்து இடதுசாரி அரசாங்கம் ஒன்றை அமைப்பது பற்றிச் சிலர் பேசிக் கொண்டனர். எச். சிறி நிசங்க என்ற பிரபல வழக்கறிஞரின் வீட்டில் அப்பேச்சுக்கள் நடந்தன. சிறி நிசங்கவின் வீட்டின் பெயர் ஜமுனை. தேர்தலில் வெற்றி பெற்று எம். பி. யான சிறி நிசங்கவின் வீட்டில் நடந்த அப் பேச்சுக்கள் "ஜமுனா பேச்சுக்கள்" என்று அழைக்கப்பட்டன. அப் பேச்சுக்களில் தமிழ்க் காங்கிரஸ் கலந்து கொண்டது. அக் கூட்டத்துக்கு ஜி. ஜி. பொன்னம்பலம் தலைமை வகித்தார். சமசமாஜக் கட்சி, போல்ஸ்விக் லெனினிஸ்ட் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, இ.தொ.கா ஆகிய கட்சிகளின் உறுப்பினரும் சில சுயேட்சை எம். பீ.க்களும் பங்கு பற்றின. கவர்னர் ஜெனரலின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தைத் தோற்கடித்து இடதுசாரிஅரசாங்கம் ஒன்றை அமைப்பதுதான் திட்டம். அது நல்ல யோசனை தான். அத்தகைய மாற்று அரசாங்கத்தை பொதுக் கொள்கைத் திட்டத்தின் அடிப்படையில் தான் அமைக்க வேண்டும் என்றார் டாக்டர் என். எம். பெரேரா. அவ் விடயத்திலும் உடன்பாடு காணப்பட்டது. பொது வேலைத் திட்டத்தைத் தயாரிப்பதில் தான் சிக்கல் தோன்றியது. கொள்கை முரண்பாடுகள்தான் காரணம். யமுனா மகாநாடு முயற்சி வெற்றி பெற்றிருந்தால் இலங்கையின் வரலாறே வேறு விதமாக அமைந்திருக்கும் என்று கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் அம் மகாநாட்டில் கலந்து கொண்ட பீற்றர் கெனமன் பின்பு எழுதினார். தப்ப விட்ட சந்தர்ப்பத்துக்கு யமுனா சந்திப்பு நல்ல உதாரணம்.



1947 பாராளுமன்றத் தேர்தலில் தெரிவான எம். பீக்கள் நாட்டின் வெவ்வேறு இனங்களை அவற்றின் சனத்தொகைக்கேற்ப பிரதிநிதித்துவம் செய்தமையும், மந்திரி சபையில் சிறுபான்மையினரும் சேர்க்கப் பட்டமையும் பிரிட்டிஷாரைத் திருப்திப் படுத்தின. சிறுபான்மை மக்களைப் பொறுத்தவரை யு. என். பி. தலைவர்கள் நியாயமாக நடந்து கொள்வர் என்ற நம்பிக்கையை பிரிட்டிஷ் ஆட்சியாளர் பெற்றனர். அந்த நம்பிக்கையின் அடிப்படையில், சோல்பரி அரசியல் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள பாதுகாப்புக்களுடன், இலங்கைக்கு 1948 பெப்ரவரி 4ல் சுதந்திரம் வழங்கப்பட்டது.

சுதந்திர விழா நடந்து முடிந்த சூட்டோடு சிறுபான்மையினரைப் பலவீனப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அவற்றின் முதலாவது 1948ம் ஆண்டின் இலங்கைப் பிரஜாவுரிமைச் சட்டம். 1947 தேர்தலில் வெற்றி பெற்றதும் இந்திய வம்சாவளியினரின் பிரஜாவுரிமையைப் பறிப்பதற்கு அவர் முடிவு செய்தார். இரண்டு விடயங்கள் அவருக்கு வசதியாக அமைந்தன. இலங்கைப் பிரஜைகள் யார் என்பது சோல்பரி அரசியல் திட்டத்தில் வரையறை செய்யப் படாதமை அவற்றில் முதலாவது. இந்திய வம்சாவளியினர் இடதுசாரிகளுடன் சேர்ந்து வாக்களித்தமை இரண்டாவது. இவற்றில் முதலாவதை டி. எஸ். திட்டமிட்டே செய்தார். இலங்கைப் பிரஜை யார் என்பதை வரையறுக்கும் பேச்சு எழுந்தபோது அது சுதந்திர இலங்கையின் பொறுப்பு என்று டி.எஸ். சொன்னார். பிரிட்டிஷார் அதற்கு இணங்கினர். பதவிக்கு வந்ததும் இலங்கைக்குத் தோன்றியுள்ள கம்யூனிஸ் ஆபத்தைப் பற்றியும் கம்யூனிஸத்திலிருந்து இலங்கையைக் காப்பாற்ற வேண்டிய அவசியம் பற்றியும் டி. எஸ். பேச ஆரம்பித்தார். அன்றைய கம்யூனிஸ எதிர்ப்பு சர்வதேசச் சூழலில் அவரின் பேச்சு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அமெரிக்காவையும் பிரிட்டனையும் கவர்ந்தது. இந்திய வம்சா வளியினரால் கம்யூனிஸ ஆபத்துப் பெருகுவதாகவும் காட்டினார்.

அக்காலத்தில் இலங்கை - இந்திய காங்கிரஸ் தலைமைப் பீடத்தை அப்துல் அஸீசும் அவரின் சார்பானவர்களும் கைப்பற்றியிருந்தமை டி. எஸ். இன் பிரசாரத்துக்கு வசதியாக அமைந்தது. அஸீஸ் சோசலிசவாதி சர்வதேச சோஷலிச இயக்கங்களுடன் நெருங்கிய தொடர்பு வைத்திருந்தார்.

இலங்கைப் பிரஜாவுரிமைச் சட்டம் 1948 ஆகஸ்ட் 20ம் திகதி நிறைவேற்றப்பட்டது. இந்திய வம்சாவளியினரின் பிரஜாவுரிமையைப் பறிப்பதற்குத் தேவையான விதிகள் அச் சட்டத்தில் சேர்க்கப்பட்டன. அச் சட்டத்தின் 4வது பிரிவில் இரண்டு அங்கங்கள் உள்ளன. முதலாவது அங்கம் இலங்கையில் பிறந்தோர் சம்பந்தப் பட்டது. அதன்படி 1948 நவம்பர் 15ந்துக்கு முன் இலங்கையில் பிறந்தோர் (அ) அவர்களின் தந்தை இலங்கையில் பிறந்திருப்பின் அல்லது (ஆ) தந்தையின் தகப்பன் அல்லது தந்தையின் பாட்டன் இலங்கையில் பிறந்திருப்பின் இலங் கையின் வம்சாவளிப் பிரஜை அந்தஸ்தைப் பெறுவார். இரண்டாவது அங்கம் இலங்கைக்கு வெளியே பிறந்தோர் சம்பந்தப்பட்டது. அந்த அங்கத்தின்படி ஒருவர் இலங்கைக்கு வெளியே பிறந்திருப்பின் (அ) அவரின் தந்தையும் பாட்டனும்இலங்கையில் பிறந்திருப்பின் அல்லது (ஆ) அவரின் தந்தை வழிப் பாட்டனும் பூட்டனும் இலங்கையில் பிறந்திருப்பின் இலங்கைப் பிரஜையாவார். பிரஜாவுரிமைச் சட்டத்தின் 5வது பிரிவின்படி 1948 நவம்பர் 15ம் திகதியிலோ அதற்குப் பின்போ இலங்கையில் பிறப்பவரின் தந்தை அவர் பிறக்கும் போது இலங்கை வம்சாவளிப் பிரஜையாக இருந்திருப்பின் இலங்கை வம்சாவளிப் பிரஜையாவார்.

சிங்களவர், இலங்கைத் தமிழர், இலங்கை முஸ்லிம்கள் ஆகி யோர் இலங்கை வம்சாவளி பிரஜைகள் ஆனார்கள். ஆனால், இந்தியத் தமிழர்களும், இந்திய முஸ்லிம்களும் பிரஜாவுரிமையை நிரூபிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

இலங்கை பிரஜாவுரிமை மசோதாவை பாராளுமன்றத்தில் சமர்ப் பித்துப் பேசிய பிரதம மந்திரி டி. எஸ். சேனநாயக்கா தமது பிரஜைகளை நிர்ணயிக்கும் உரிமை ஒவ்வொரு நாட்டுக்கும் உண்டென்றும் பிரிட்டி ஷாரால் இலங்கைக்குக் கொண்டு வரப்பட்ட இந்தியர்கள் இலங் கையின் நன்மையில் அக்கறை காட்டவில்லையென்றும் உழைப் பதற்கான தற்காலிக இடமாகவே கொண்டனர் என்றும் சொன்னார். மசோதாவை எதிர்த்து இலங்கை-இந்தியக் காங்கிரஸ், தமிழ்க் காங்



கிரஸ், லங்கா சமசமாஜக்கட்சி, பொல்சுவிக் லெனினிஸ்ட் கட்சி உறுப் பினர்களும் சில சுயேட்சைகளும் வாக்களித்தனர். ஜி. ஜி. உணர்ச்சி வசப்பட்டு நீண்ட உரையை நிகழ்த்தினார். உங்கள் பாட்டனோ, பூட்டனோ இலங்கையில் பிறந்தார் என பத்திரங்களுடன் அத்தாட்சிப் படுத்த முடியுமா? என்று டி. எஸ். சேனநாயக்காவைக் கேட்டார். இந்தியத் தமிழ் மக்களுக்கு அநீதி விளைவிக்கும் இம் மசோதாவை நாம் ஏற்க மாட்டோம் எனக் கூறினார். தொழிலாளர் வர்க்கத்தைப் பலவீனப் படுத்தும் முயற்சி என்று சொல்லி இடது சாரிகள் எதிர்த்தனர்.

**பலவீனப்படுத்தல்**

இலங்கை வாழ் தமிழ் இனத்தைப் பலவீனப்படுத்தி அடிமைப் படுத்துவதற்கான அத்திவாரம் என்று சொல்லி தனது எதிர்ப்பைக் காட்டினார் எஸ். ஜே. வி. அவர் டி. எஸ். சின் திட்டத்தை நன்கு புரிந்து கொண்டார் . இலங்கை வாழ் தமிழ் இனத்தின் பலத்தை அரைவாசி யாக்குகிறீர்கள் என்று யு, என். பி. தலைமைப் பீடத்திடம் சொன்னார். இங்கே ஒரு விடயத்தைத் தெளிவாக்க வேண்டும். இந்தியத் தமிழ் மக்களின் பிரஜாவுரிமையை 1948 ஆகஷ்ட் 20 இல் இயற்றப்பட்ட இலங்கைப் பிரஜாவுரிமைச் சட்டம்தான் பறித்தது. அந்தச் சட்டம் இயற்றப்படுவதை அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் ஏழு எம். பீ. க்களும் ஒன்றாக நின்று எதிர்த்தார்கள். இலங்கை பிரஜாவுரிமைச் சட்டம் தொடர்பாக அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸில் மோதலோ பிளவோ ஏற்படவில்லை. இலங்கைப் பிரஜாவுரிமை மசோதாவை எதிர்த்துப் பேசம்போது டி. எஸ். ஐ. ஒரு வகுப்புவாத வெறியர் என்று பொன்னம்பலம் ஏசினார். அம் மசோதா நிறைவேற்றப் பட்ட தினத்தை இலங்கையின் கறுப்பு நாள் என்றும் வர்ணித்தார். இலங்கையில் வாழ்ந்த தமிழ் மக்கள் யாவரும் இலங்கைப் பிரஜாவுரிமைச் சட்டத்தை கடுமையாக எதிர்த்தார்கள். அவ்விடயத்தில் பொன்னம்பலமும் செல்வ நாயகமும் தொண்டமானும் அஸீசும் ஓரணியில் நின்றார்கள்.

இலங்கைப் பிரஜாவுரிமைச் சட்டம் இந்தியாவை ஆத்திரம் கொள்ளச் செய்தது. இந்தியப் பிரதமராகிவிட்ட நேருஜி பிரஜாவுரிமைச் சட்டத்தைக் கண்டித்தார். கண்டன அறிக்கையொன்றை இந்திய அரசு வெளியிட்டது. அப்பொழுது பிரதம மந்திரி டி. எஸ். சேனநாயக்கா ஒரு முக்கிய உண்மையை உணர்ந்தார். பிரஜாவுரிமைச் சட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்த சுந்திரலிங்கத்தினாலும் சிற்றம்பலத்தினாலும் தமிழர் அணி பலவீன முறவில்லை என்பதே அது. தமிழ்க் காங்கிரஸைக்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கைக்குள் போட்டு விட்டால் தமிழரின் எதிர்ப்பணியை உடைத்து விடலாம் என்பதை உணர்ந்தார்.

ஜி. ஜி. யிடம் தூது போனவர் டி. எஸ். இன் நம்பிக்கைக்குப் பாத்திரமான சர். ஒலிவர் குணதிலகா, மிகவும் தந்திரசாலி என்று பெயர் பெற்றவர். அவரின் தந்திரத்தைப் பற்றி நிறைய கதைகளுண்டு. சிறுபான்மை இனங்களின் பிரச்சினையுடன் தொடர்புடையது இது. சோல்பரி கமிஷனர்கள் விவசாயப் பகுதிகளுக்குச் சென்று விவசாயிகளைச் சந்தித்துப் பேச ஒழுங்கு செய்து கொடுத்தார் அவர். வயல்களில் விவசாயிகள் உடையில் படித்தவர்களை நிறுத்தி வைத்தார். அவர்களுடன் பேசிய சோல்பரி கமிஷனர்கள் சாதாரண விவசாயிகளுக்கு இவ்வளவு அறிவா என்று வியந்தனர். சிறுபான்மையினர் விடயத்தில் தாராளமாக நடப்பதாகக் காட்டிக் கொள்ளும்படி டி. எஸ். ஸைத் தூண்டியவரும் சர். ஒலிவர் தான். பேசும் போது கொன்னை தட்டும் சர் ஒலிவர் ஜி. ஜி. யைச் சந்தித்தார். எதிர்க்கட்சியில் இருந்து என்னத்தைக் காணப் போகிறீர்கள். அரசுடன் சேர்ந்து தமிழ் மக்களுக்கு நன்மை செய்யுங்கள் என்று கூறி ஆசை காட்டினார். இரண்டு மந்திரி பதவிகளைக் கொடுப்பதாகச் சொன்னார். ஒரு பதவி உடனடியாகவும், மற்றது தான் பிரிட்டனின் ஹைகமிஷனராக நியமனம் பெற்றதும் கொடுக்கப்படும் என்றும் சொன்னார்.

கட்சித் தலைமைப் பீடத்துடன் கலந்தாலோசித்து விட்டு மறுமொழி கூறுவதாக ஜி. ஜி. பதிலளித்தார். அப்பொழுது டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன், தமிழ்க் காங்கிரஸ் செயலாளராக இருந்தார். டி. எஸ். சேனநாயக்காவின் அரசாங்கத்தில் சேருவதா இல்லையா என்பதைத் தீர்மானிப்பதற்காக டிசம்பர் ஆரம்பத்தில் கட்சியின் பாராளுமன்றக் குழு கூட்டத்தை நாகநாதன் கூட்டினார்.

மந்திரி சபையில் சேர அழைப்பு வந்திருப்பதாகவும் அது பற்றி ஆலோசிக்கவே செயல் குழு கூட்டப்பட்டிருப்பதாகவும் ஜி. ஜி. அறிவித்தார். உறுப்பினர்களின் கருத்துக்களைக் கோரினார். சாவகச்சேரி எம். பி. யாக வி. குமாரசாமி அப்போது இருந்தார். மந்திரி சபையில் சேருவதே சிறந்தது என்று அவர் வாதாடினார். நாகநாதன் அதைக் கடுமையாக எதிர்த்தார். டி. எஸ்.ஸை வகுப்பு வாதி என்று சில நாட்களுக்கு முன்பு தானே ஏசினீர்கள். அவரின் மந்திரி சபையில் எந்த முகத்தோடு போய்ச் சேருவீர்கள் என்று அவர் ஜி. ஜி. யைக் கேட்டார். எதிர்க் கட்சியில் இருந்து உணர்ச்சிகரமாகப் பேச முடியுமே தவிர தமிழ் மக்களுக்கோ தமிழ்ப் பகுதிகளுக்கோ எவ்வித நன்மையையும் செய்ய முடியாது என்று பதிலளித்தார் ஜி.ஜி;டி.எஸ். அரசாங்கத்துடன்



ஒத்துழைக்கும்படி கொழும்பு வாழ் தமிழர்கள் வற்புறுத்துவதையும் அவர் சுட்டிக் காட்டினார்.

அரசாங்கத்தில் சேருவதை செல்வநாயகமும் வன்னியசிங்கமும் எதிர்த்தனர். நாகநாதனைப் போல் அவர்கள் உணர்ச்சி வசப்பட வில்லை. தமிழ் மக்களை மேலும் பலவீனப்படுத்துவதற்காகவே டி. எஸ். தமிழ்க் காங்கிரஸின் ஆதரவை நாடுவதாகச் சொன்னார்கள். டி. எஸ். சின் வலையில் விழுந்து விட வேண்டாம் என்று எச்சரித்தனர். நீண்ட விவாதத்தின் பின்பு ஒரு சமரசத் தீர்மானத்தை செயற்குழு ஒருமனதாக நிறைவேற்றியது. அத் தீர்மானம் இது தான்: "எமது இரண்டு அரசியல் கோரிக்கைகளும் அதாவது, சிறுபான்மையினருக்கு கூடிய பிரதிநிதித்துவம் கிடைக்கச் செய்தல், பிரஜாவுரிமை விடயத்தில் மலையகத் தமிழருக்கு நியாயம் வழங்கத்தக்க வகையில் பிரஜாவுரிமைச் சட்டத்தில் திருத்தங்கள் கொண்டு வரப்படல் ஆகிய கோரிக்கைகள், சேனநாயக்கா அரசாங்கத்தால் ஏற்கப்படின் யு. என். பி. அரசாங்கத்துடன் கூட்டரசாங்கம் ஒன்றை அமைக்கத் தமிழ்க் காங்கிரஸ் பாராளுமன்றக் குழு அனுமதிக்கும்".

பாராளுமன்றக் குழு தீர்மானத்தை சேர். ஒலிவருக்கு ஜி. ஜி. அனுப்பி வைத்தார். உடனே சர். ஒலிவர் ஜி. ஜி. யைப் போய்ச் சந்தித்தார். பாராளுமன்றக் குழுத் தீர்மானத்துக்குத் தான் கட்டுப்பட்டிருப்பதை ஜி. ஜி. சொன்னார். சர் ஒலிவர் சிரித்தார். அந்தத் திருத்தங்களைச் செய்வதில் கஷ்டம் எதுவும் இருக்காது என்று சொன்னார். முதலில் சேருங்கள். அப்போது நீங்கள் விரும்பும் திருத்தங் களைச் செய்வது இலகுவாகி விடும் என்றார். சர். ஒலிவர் சொன்னதை ஜி. ஜி. விழுங்கி விட்டார்.

தனக்கு கைத்தொழில், கைத்தொழில் அபிவிருத்தி கடற்றொழில் அமைச்சைக் கோரிப் பெற்றார். கே. கனகரத்தினம், ரி. இராமலிங்கம், வி. குமாரசாமி ஆகியோர் ஜி. ஜி. யுடன் அரசாங்கத்தில் இணைந்தனர். கனகரத்தினத்துக்கு உதவி மந்திரி பதவி கொடுக்கப்பட்டது. செல்வநாயகம், வன்னியசிங்கம், சிவபாலன் ஆகியோர் அரசாங்கக் கட்சியில் சேரவில்லை. அப்போது செனட்டராக இருந்த நாகநாதனும் செல்வநாயகம் குழுவில் சேர்ந்தார். ஜி. ஜி. மந்திரி சபையில் 1948 டிசம்பர் பிற்பகுதியில் சேர்ந்தார். அன்று தொடக்கம் தமிழ் காங்கிரஸ் ஜி. ஜி. குழு எனவும், செல்வநாயகம் குழு எனவும் இரண்டாகப் பிளந்தது. இரண்டு குழுக்களும் வெவ்வேறு செயற்குழுக் கூட்டங்களை நடத்தின. ஒருவரையொருவர் கட்சி நீக்கம் செய்தனர். இரண்டு பிரிவினரும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வெவ்வேறு பொதுக் கூட்டங்களை நடத்தினர். 1949 ஜனவரி இரண்டாம் வாரத்தில் செல்வநாயகத்தின் கொள்ளுப்பிட்டி வீட்டில் நடந்த செயற் குழுக் கூட்டம் மிகவும் முக்கியமானது. அக் கூட்டத்தில் செல்வநாயகம் தமிழ்மக்களுக்கான மாற்று அரசியல் திட்டமொன்றைச் சமர்ப்பித்தார்.

6

# தமிழரசுக் கட்சி பிறந்தது

**சமஷ்டித் திட்டம்**

தமிழ் மக்களுக்கான மாற்று அரசியல் திட்டமொன்றை 1949 ஜனவரி இரண்டாம் வாரத்தில் கொள்ளுப்பிட்டியிலுள்ள தன் வீட்டில் நடந்த செல்வநாயகம் குழு கூட்டத்தில் செல்வநாயகம் சமர்ப்பித்தார். அக் கூட்டத்தில் செல்வநாயகம் ஆற்றிய உரையின் சுருக்கம் இது:

எமது கட்சியான அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் சோல்பரி அரசியல் திட்டத்தை எதிர்த்து வருகிறது. 1947 தேர்தலில் பெரும்பாலான தமிழ் மக்கள் சோல்பரி அரசியல் திட்டத்தை எதிர்ப்பதற்கான ஆணையை எமக்கு வழங்கியுள்ளனர். அந்த ஆணையை மீறி மக்கள் நிராகரித்த அதே சோல்பரி அரசியல் அமைப்பை இயங்கச் செய்வதற்கு எமக்கு எவ்வித அதிகாரமும் இல்லை. சோல்பரி அரசியல் திட்டத்தைத் தொடர்ந்து எதிர்ப்பதே நாம் செய்ய வேண்டிய பணி. எமது கடமை அதுவே.

சோல்பரி திட்டத்தைத் தொடர்ந்து எதிர்த்துக் கொண்டிருக்கையில் அதற்கு என்ன மாற்று என்பதையும் நாம் சிந்திக்க வேண்டும். பல நாடுகளின் அரசியல் அமைப்புக்களை நாங்கள் படித்தோம். ஓரின மக்கள் வாழும் நாடுகளுக்கு ஒற்றையாட்சி பொருத்தமானது. ஆனால், ஒன்றுக்கு மேற்பட்ட இனங்கள் வாழும் நாடுகளுக்கு அது பொருந்தாது. அதிக சனத்தொகையுள்ள இனம் தனது மக்கள் தொகையை வைத்துக் குறைந்த சனத்தொகையுள்ள இனத்தை அல்லது இனங்களை அடக்கி ஆள்வதற்கே அது உதவும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இலங்கையில் பிரதானமாக இரண்டு இன மக்கள் வாழ்கிறார்கள். சிங்களவர் பெரும்பான்மை இனத்தவர். இலங்கையின் சனத் தொகையில் மூன்றில் இரண்டு பங்கினருக்கு மேற்பட்டோர் சிங்களவர். மற்ற இனம் தமிழ் இனம். அவர்களின் சனத்தொகை மூன்றில் ஒரு பங்கிலும் குறைவானது. எனவே, ஒற்றையாட்சி முறை சிங்களவர் தமது சனத்தொகைப் பலத்தை உபயோகித்து தமிழ் இனத்தை அடக்கி ஆள்வதற்கு வசதியளிக்கும். ஒன்றுக்கு மேற்பட்ட இனங்கள் வாழும் நாடுகளில் ஒவ்வொரு இனமும் தாம் பெரும்பான்மையாக வாழும் இடங்களில் தம்மைத் தாமே ஆட்சி புரிய அனுமதிக்கப்படுகின்றனர். ஆனால், அவ்வரசுகள் சுதந்திர, தனியரசுகளாக இயங்குவதில்லை. சமஷ்டி அமைப்பாக இயங்குகின்றன. அத்தகைய சமஷ்டி அமைப்புத் தான் இலங்கைக்குப் பொருத்தமானது.

செல்வநாயகத்தை அடுத்து வன்னியசிங்கம் பேசினார். அவர் கனடா, சுவிட்சர்லாந்து அரசியல் திட்டங்களைக் குறிப்பிட்டு அத்தகைய ஒழுங்கு முறையே இலங்கைக்குப் பொருத்தமானதுஎன்று கூறினார். தமிழர் பிரச்சினைக்கு சமஷ்டி அமைப்பே சிறந்த தீர்வாக அமையும் என்றுஅவர் வாதிட்டார். சமஷ்டித் தீர்வை தமிழ் மக்களிடையே அறிமுகம் செய்வதற்காக தமிழ்ப் பிரதேசம் முழுவதும் பிரசாரக் கூட்டங்களை நடத்துவதென்று அந்த ஜனவரி இரண்டாம் வாரக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

செல்வநாயகம் பிரிவினர் சமஷ்டி தீர்வை அறிமுகம் செய்யும் முதலாவது கூட்டத்தை மாவிட்டபுரம் கந்தசாமி கோவிலுக்கருகில் 1949 பெப்ரவரி 13ல் நடத்தினர். அன்று விசேஷ மத்தியானப் பூசை நடத்தப்பட்டது. கோவில் பிரதான குருக்கள் செல்வநாயகத்தை ஆசீர்வதித்து கூட்டத்துக்குத் தலைமை தாங்குமாறு கேட்டுக் கொண்டார். முதலாவது பேச்சாளராக நாகநாதன் அழைக்கப்பட்டார். அவர் பழைய கதையை விவரமாகவிளக்கினார். பிரித்தானியர் புகுத்திய ஒற்றையாட்சி முறையைத் தமிழ்த் தலைவர்கள் எத்தகைய எதிர்ப்பும் காட்டாது ஏற்றுக் கொண்டமை, அந்த ஒற்றையாட்சி முறைக்குள் சிறுபான்மையினருக்குக் கூடிய பிரதிநிதித்துவம் பெறுவதற்கு முயன்று தோல்வி கண்டமை, இறுதியில் தமிழரைப் பலவீனப்படுத்த எல்லா விதமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளும் டி. எஸ். சின் நல்லெண்ணத்தை நாடி அவரின் மந்திரி சபையில் இணைந்து கொண்டமை ஆகிய விவரங்களைச் சொன்னார்.

இரண்டாவதாகப் பேசிய வன்னியசிங்கம் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண உதவும் மாற்று அரசியல் அமைப்பு



ஒன்று உண்டு என்று சொன்னார். மிகவும் கவனமாக சிந்தித்த பின்பு தான் இந்த முடிவுக்கு வந்தோம். பல இன, பல மத, பல மொழி பேசும் மக்கள் வாழும் நாடுகளுக்குப் பொருத்தமான அரசியலமைப்புத் திட்டம் ஒன்று உள்ளது. அமெரிக்கா, கனடா, சோவியத் யூனியன், அவுஸ்திரேலியா, இந்தியா, உட்படப் பல நாடுகளில் அத் திட்டம் நடைமுறையிலுள்ளது. அதுதான் சமஷ்டித் திட்டம். அத்திட்டத்தின் கீழ் தமிழ்ப் பகுதிகளில் வாழும் தமிழ் மக்கள் தனி அரசாக இயங்கி தம்மைத்தாமேஆட்சி புரிவார்கள். சிங்களப் பகுதிகளில் வாழும் சிங்கள மக்கள் தனியரசாகத் தம்மை ஆட்சிபுரிவார்கள். இந்த இரண்டு அரசுகளும் மத்தியிலுள்ள ஓர் அரசின் அங்கங்களாக அமையும். மத்திய அரசு அல்லது கூட்டரசு இரண்டு அரசுகளுக்கும் பொதுவான சில அதிகாரங்களைக் கொண்டிருக்கும் என்று விளக்கினார்.

அக் கூட்டத்தின் கவர்ச்சிப் பேச்சாளராக அமிர்தலிங்கம் பயன்படுத்தப்பட்டார். தமிழனின் தொன்மை, தமிழ் இலக்கியத்தின் பழமை, சோழரின் படையெடுப்புக்கள், இமயத்தில் கொடி பொறித்தமை என்று உணர்ச்சியைக் கிளறி விட்டு அந்தப் பெருமையைப் பாதுகாக்க, பேண, சமஷ்டி அமைப்பு மட்டும்தான் உதவும் என்று கூறி முடித்தார் அவர்.

இரண்டாவது பொதுக் கூட்டம் 14 மார்ச் 1949ல் ஆவரங்காலில் நடந்தது. அக்கூட்டம் ஆரம்பிப்பதற்கு முன்னர் உயர் அரசாங்க பதவி வகித்த ஒரு பெரியவர் ஒரு வானில் 20 பேர் வரை கூட்டிக் கொண்டு கூட்டம் நடந்த இடத்துக்கு போனார். அவர்களை முன் வரிசையில் இருத்தி விட்டு தூரப் போய் தன் காருக்குள் அமர்ந்து கொண்டார். கூட்டம் தொடங்கி வன்னியசிங்கம் பேச ஆரம்பித்ததும் ஒருவரொருவராக எழுந்து கேள்விகளைக் கேட்டனர். கேள்விகளை எழுதித் தாருங்கள். பதில் கூறுகிறேன் என்றார் வன்னியசிங்கம். ஆனால், அந்தக் கோஷ்டியினர் அதைக் காதில் வாங்கிக் கொள்ளவில்லை. தொடர்ந்து கேள்விகளைக் கேட்டவண்ணம் இருந்தனர். கூட்டத்தைக் குழப்புவதற்கென்றே வெளியிலிருந்து ஆட்கள் கொண்டு வந்திருப்பதை உணர்ந்ததும் ஆவரங்கால் மக்கள் ஒன்று திரண்டனர். சில வெளியூர்க் காடையர்கள் எங்கள் ஊருக்குள் வந்து நாங்கள் ஒழுங்கு செய்த கூட்டத்தைக் குழப்பவா? என்று ஆவரங்கால் மக்கள் தங்களுக்குள் குசுகுசுத்தனர். விளைவு, கைகளும், கால்களும் பேச ஆரம்பித்ததும் காடையர் கூட்டம் கார் நிறுத்தப் பட்டிருந்த திசையை நோக்கிப் பாய்ந்து ஓடினர். நிலைமை மாறுவதை அவதானித்த பின் அந்தக் கார்க்காரக் கனவான் அந்த இடத்தில் காத்திருக்க முட்டாளா என்ன?

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அடுத்து நடந்த கூட்டங்கள் சுமுகமாக முடியவில்லை. கல்லெறி, பறைமேளம் அடித்தல், பாம்பு விடுதல் இப்படிப் பல குழப்ப வேலைகள். இந்த எதிர்ப்பைக் கண்டு செல்வநாயகம் பயப்படவில்லை. கலங்கவும் இல்லை. ஆனால், அவரின் ஆதரவாளர்கள் பலர் மனம் உடைந்து போனார்கள். 1949 நடுப்பகுதியில் யாழ்ப்பாண நகர மண்டபத்தில் நடந்த கூட்டமொன்றில் நேர்மை உள்ளவர்களுக்கு அரசியலில் இடமுண்டா? என்று வாலிபர் ஒருவர் கேட்டார். அதற்கு செல்வநாயகம் அளித்த பதில்: "நேர்மையானவர்களுக்கு அரசியலில் இடமில்லை என்ற கருத்தை என்னால் ஏற்றுக் கொள்ள முடியாது. நேர்மையான வர்களுக்கு நிச்சயமாக அரசியலில் இடமுண்டு. தார்மீக உணர்வை ஒவ்வொருவரும் வளர்த்துக் கொள்ள வேண்டும்".

சமஷ்டி அரசியல் அமைப்பு முறையை ஆதரித்துப் பிரசாரம் செய்த அதே வேளை செல்வநாயகம் வீட்டில் வியாழன் இரவு தோறும் சமஷ்டி பற்றிய ஆய்வுகள் நடந்தன. சமஷ்டி அமைப்பு மற்ற நாடுகளில் இயங்கும் முறையை ஆராய்ந்தனர். அது இலங்கைக்கு எவ்வாறு பொருந்தும் என்று பார்த்தனர்.

**சொந்தப் பகைமை**

ஜி. ஜி. க்கு செல்வநாயகம் மீது கொள்கையடிப்படையில் மட்டுமன்றி சொந்த ரீதியிலும் பகைமை தோன்றலாயிற்று. முடி சூடா மன்னன் என்ற பட்டத்தைப் பெற்றுப் பெரும் செல்வாக்குடன் திகழ்ந்து வந்த ஜி. ஜி. க்கு செல்வநாயகம் ஓர் எதிரியாகவே தென்பட்டார். செல்வநாயகத்துக்கும் அவரின் கொள்கைக்கும் எதிராகப் பல கதைகள் அவிழ்த்து விடப்பட்டன. அவற்றில் இரண்டு:

1. தனக்கு மந்தரி பதவி கிடைக்காத பொறாமையினால்தான் செல்வநாயகம் எதிர்ப்பியக்கத்தை ஆரம்பித்துள்ளார் என்பது.

2. சமஷ்டி ஆட்சி கிடைத்தால் ஆனையிறவிற்கு வடக்கே ரயில் ஓடாது என்பது.

1949 ஆகஸ்டில் இந்திய, பாகிஸ்தானிய (வதிவோர்) பிரஜாவுரிமை மசோதாவை பிரதம மந்திரி டி. எஸ். சேன்நாயக்கா பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார். பிரஜாவுரிமையை இழந்த இந்திய, பாகிஸ்தானிய, வம்சாவளியினர் இலங்கைப் பிரஜாவுரிமையைப் பெறுவதற்கு அம் மசோதா வழி செய்தது. அம் மசோதாவின்படி பிரஜாவுரிமையைத்



திரும்பப் பெறுவதற்கு திருமணமான வரானால் 1939 ஜனவரி முதலாம் திகதி முதல் 7 வருடம் தொடர்ந்து இலங்கையில் வசித்திருக்க வேண்டும். திருமணமாகாதவராயின் 10 வருடங்கள் தொடர்ந்து வசித்திருத்தல் வேண்டும். இம் மசோதாவைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்த டி.எஸ். தமிழ் மக்கள் தமது இழந்த பிரஜாவுரிமையைத் திரும்பப் பெற உதவுவதற்காக இம் மசோதா கொண்டு வரப்பட்டதாகச் சொன்னார்.

தமிழ் மக்கள் தமது பிரஜாவுரிமையை மீண்டும் பெறுவதற்கு இந்த மசோதா உதவுவதால் தமிழ் காங்கிரஸ் அதை ஆதரித்து வாக்களிக்கும் என ஜி.ஜி. வாதிட்டார். மன்னாரில் நடத்திய ஒரு பொதுக் கூட்டத்திலும் அவர் இதையே சொன்னார். தமிழ் மக்கள் தமது இழந்த உரிமையைத் திரும்பப் பெறுவதற்கு செல்வநாயகம் தடையாக இருப்பதாகவும் சொன்னார். புதிய மசோதாவை எதிர்க்க வேண்டுமென்று பொது மக்கள் கூறினால் தான் மந்திரி சபையிலிருந்து விலகப் போவதாகவும் சொன்னார். நான் எதிர்த்து வாக்களிக்க வேண்டுமென்று ஆணையிடுகிறீர்களா? என்று கூட்டத்தினரைப் பார்த்து அவர் கேட்டார். அரசாங்கத்துடன் சேர்ந்து வாக்களியுங்கள் ஐயா என்று பதில் வந்தது. ஜி.ஜி.யின் கையாட்கள் அந்தப் பதிலைக் கொடுத்தனர்.

பாராளுமன்றத்தில் அம் மசோதா விவாதிக்கப்பட்டபோது செல்வநாயகம் அதை எதிர்த்துப் பேசினார். மனிதாபிமானமற்ற மசோதா என்று வர்ணித்தார். பிரஜாவுரிமையை இழந்தவர்கள் பிரஜாவுரிமை பெறுவதற்கு உதவுவதற்குப் பதிலாக பல தடைகளை மசோதா ஏற்படுத்தியிருப்பதாக அவர் கூறினார். ஐந்து ஆண்டுகள் வசிப்போருக்கு பிரஜாவுரிமை கொடுப்பது தான் உலக வழக்கு, இலங்கை அரசாங்கம் ஏழு வருடங்களையும் பத்து வருடங்களையும் விதித்த தோடு பெற முடியாத பத்திரங்களைச் சமர்ப்பிக்கும் படியும் கோரியுள்ளது. பல தோட்டத் தொழிலாளர்கள் தங்கள் வசிப்பிடங்களை அடிக்கடி மாற்றியுள்ளனர். அதனால் தொடர்ச்சியாக இலங்கையில் வசித்ததை நிரூபிக்க முடியாத நிலையில் அவர்கள் உள்ளனர் என்று செல்வநாயகம் வாதிட்டார்.

1949 ஆகஸ்ட் 5ம் திகதி இந்திய, பாகிஸ்தானிய, (வதிவோர்) பிரஜாவுரிமை மசோதா வாக்கெடுப்புக்கு விடப் பட்டபோது ஜி. ஜி,கனகரத்தினம், இராமலிங்கம், ஆகியோர் மசோதாவை ஆதரித்து வாக்களித்தனர்.

செல்வநாயகம், வன்னியசிங்கம், சிவபாலன் ஆகியோர் மசோதாவை எதிர்த்து வாக்களித்தனர். அதையடுத்து ஜி. ஜி. தமிழ் காங்கிரஸ்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



செல்வநாயகத்தையும் அவரின் குழுவினரையும் கட்சியிலிருந்து வெளியேற்றியது. அதையிட்டு செல்வநாயகம் மிகவும் மனம் வருந்தினார். ஜி. ஜி. மந்திரி சபையில் சேர்ந்த நேரத்திலும் அவர் மிகவும் மனம் வருந்தினார். அரசியலைமுற்றாகத் துறப்பது பற்றியும் அவர் தீவிரமாகச் சிந்தித்தார். தமிழ் மக்களின் அரசியல் தலைமைப் பீடம் தவறான வழியில்செல்லும் போது தான் அரசியலைத் துறப்பது தங்களை நம்பிய தமிழ் மக்களை நட்டாற்றில் விடுவது போலாகிவிடும் என்று எண்ணினார். அந்த எண்ணம்தான் அவரை அரசியலில் தொடர்ந்து இருக்கச் செய்தது.

**தீர்க்க தரிசனம்**

1948 டிசம்பர் 10 ஆம் திகதி இலங்கைப் பிரஜாவுரிமைச் சட்டத்தில் பேசும் போது தந்தை செல்வா தீர்க்க தரிசனமான கூற்று ஒன்றையும் சொன்னார்.

> இன்று இந்தியத் தமிழ் மக்களுக்கு அநீதி இழைக்கப் படுகிறது. நாளை மொழிப் பிரச்சினை வரும் போது இலங்கைத் தமிழ் மக்களுக்கும் இதே கதி நேரிடும். எனவே, இன்றே நாமெல்லாம் ஒன்று சேர்ந்து இவ்வநீதியை எதிர்க்க வேண்டும் ( பாராளுமன்ற நடவடிக்கை 10-12-1948).

தமிழ் இனத்துக்கு ஏற்படக் கூடிய பேராபத்தைத் தீர்க்க தரிசனமாக உணர்ந்த எஸ். ஜே. வி. தமிழ் மொழிக்கு ஏற்படக்கூடிய ஆபத்தையும், உய்த்துணர்ந்தார்.

இலங்கைக்குச் சுதந்திரம் கிட்டுவதற்கு எட்டு மாதங்களுக்கு முன்பே, அதாவது 1947 ஜுலை முதலாம் திகதியே தமிழ் மொழிக்கெதிராக சிங்களத் தலைவர்கள் சூழ்ச்சி செய்ய ஆரம்பித்து விட்டனர் என்பதைச் சொன்னார். யாழ்ப்பாணத்தில் நடந்த தமிழ் மகாநாடு ஒன்றில் அவர் விடுத்த எச்சரிக்கை இது:

> தமிழ் மொழி அழிக்கப்படும் ஆபத்து தோன்றியுள்ளது. சிங்களத்தை இந் நாட்டின் உத்தியோக மொழியாக்குவதற்கும் தமிழர் மொழியை வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்குள் மட்டுப்படுத்தி பிரதேச மொழியாகத் தரம் குறைப்பதற்கும் சிங்களத் தலைவர்கள் சூழ்ச்சி செய்கிறார்கள்.

1949 ஆகஸ்ட் நடுப்பகுதியில் தமிழ் காங்கிரஸ் செயற் குழு எஸ். ஜே. வி. யையும் அவரின் ஆதரவாளர்களையும் கட்சியிலிருந்து வெளியேற்றியதும் தமிழ் காங்கிரஸ் பூரணமாகப் பிளவுபட்டது. தமிழ்



காங்கிரஸ் (ஜி. ஜி.) கட்சி எனவும் தமிழ் காங்கிரஸ் (எஸ். ஜே. வி.) கட்சி எனவும் இரண்டு போட்டிப் பிரிவுகளாக இயங்கின. எஸ். ஜே. வி. பிரிவினர் தமது பிரசார இயக்கத்தைத் தீவிரப் படுத்தினர். 1949 அக்டோபர் 8ம் திகதியன்று எஸ். ஜே. வி. பிரிவினர் திருக்கோணமலையில் சக்தி நிலைய ஆதரவில் பொதுக் கூட்டமொன்றை நடத்தினர். இராஜவரோதயம், இராமநாதன், விஜயநாதன் ஆகியோர் எஸ். ஜே. வி. பிரிவில் சேர்ந்தனர். நவம்பர் மாதத்தில் மட்டக்களப்பில் கூட்டம் நடத்தப்பட்டது. ஆர். பி. கதிர்காமர் தலைமை தாங்கினார். தம்பிமுத்து, சாகுல் ஹமீது, செல்லையா இராஜதுரை, சித்தாண்டி நாகலிங்கம், சிவஞானம் ஆசிரியர், கனகசபை ஆகியோர் பங்கு பற்றினர். யாழ்ப்பாணத்திலும் பல கூட்டங்கள் நடத்தப்பட்டன.

இத்தகைய கூட்டங்கள் தமிழ்க் காங்கிரஸின் இரு பிரிவுகளுக்கு மிடையே போட்டியை வலுவடையச் செய்தன. இந்தப் போக்கு எஸ். ஜே. விக்குப் பிடிக்கவில்லை. தனிக் கட்சியொன்றை ஆரம்பிக்க அவர் முடிவு செய்தார். 1948 டிசம்பர் 18ம் திகதி கொழும்பு மருதானையிலுள்ள அரசாங்க இலிகிதர் சேவைச் சங்க மண்டபத்தில் புதிய கட்சியின் அமைப்புக் கூட்டம் நடந்தது. அக் கூட்டம் இலங்கையின் வரலாற்றைப் பாதித்தது. அக் கூட்டத்தின் தாக்கத்தை 50 ஆண்டுகளுக்குப் பின்பும் நாம் அனுபவித்துக் கொண்டிருக்கின்றோம்.

மருதானைக் கூட்டம் போதிய ஆயத்தங்களுக்குப் பின்புதான் கூட்டப்பட்டது. தமிழ் மக்கள்வாழ்ந்த பல பகுதிகளுக்கும் செல்வநாயகமும் வன்னியசிங்கமும் நாகநாதனும் மற்றவர்களும் போய் சமஷ்டி ஆட்சி முறையை தமிழர் உரிமைகளைப் பெறுவதற்கான மாற்று யோசனையாக மக்கள் முன் வைத்தார்கள். அத்தகைய ஒரு கூட்டம் பருத்தித்துறை பிரதேசத்திலுள்ள புலோலியில் 1949 ஏப்ரல் 26ம் திகதி நடந்தது. அக் கூட்டத்தில் சமஷ்டி ஆட்சி முறையைப் பற்றி எஸ். ஜே. வி. பேசினார். அப்பொழுது கூட்டத்திலிருந்த ஒருவர் கூச்சல் போட்டார், சமஷ்டி வந்தால் சாப்பாடு கிடையாமல் போகும் என்று. யார் சொன்னது? என்று கேட்டார் எஸ். ஜே. வி.

தமிழ்ப் பகுதிகளில் போதிய வளம் உண்டு. உதாரணமாக இரணைமடுக் குளத்தின் அணையை உயர்த்துவதால் இன்னும் 10,000 ஏக்கர் வயல்களுக்கு நீர்ப்பாசனம் செய்யலாம். அரசாங்கம் அதைச் செய்யாது என்று சொன்னார். பண்ணாகம் மெய்கண்டான் பாடசாலை மண்டபத்தில் 1949 மே 20 இல் கூட்டப்பட்ட மகாநாட்டில் சமஷ்டி அரசியலமைப்புப் பற்றி ஆராயப்பட்டது. அம் மகாநாட்டில் பேசும் போது சேனநாயக்கா அரசாங்கத்தில் சேருவதற்கான ஒழுங்குகளை ஜி. ஜி. திட்டமிட்டு படிப்படியாகச் செய்தார் என்று எஸ். ஜே. வி. சொன்னார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கற்கள் அவரின் கூற்றை வரவேற்றன. சில தினங்களுக்குப் பின் கோப்பாயில் நடந்த கூட்டத்தில் சமஷ்டி ஆட்சி முறை மூலமே தமிழ் மக்களின் உரிமைகளைப் பெற முடியும் என்று எஸ். ஜே. வி. வாதிட்டார். கிடைத்த பதில் கற்கள்.

அடுத்த மாதமான ஜூன் 20ம் திகதி மாலையில் சாவகச்சேரியில் செல்வநாயகம் கூட்டம் ஒன்றை நடத்தினார். செல்வநாயகம் பேச ஆரம்பித்ததும் நாலு பேர் பறை மேளத்தை அடித்தனர். பொலிஸார் வருவதைக் கண்டதும் ஓடிப் போய் விட்டனர். தனது பேச்சின் போது செல்வநாயகம் சொன்னார். "தமிழ் இனத்தின் ஒற்றுமை என்ற அடிப்ப டையிலேயே தமிழ் காங்கிரஸ் உருவாக்கப்பட்டது. இலங்கையில் வாழும் தமிழ் மக்கள் யாவரும் அந்த இனத்தைச் சேர்ந்தவர்கள். தமிழ் மக்களை இந்தியத் தமிழர் எனவும், இலங்கைத் தமிழர் எனவும் பிரிக்க முடியாது. இந்தியத் தமிழருக்கு எதிராக அரசாங்கம் சட்டத்தை இயற் றிய போது இலங்கைத் தமிழர்களும்தான் பாதிக்கப்பட்டனர். ஜி. ஜி. பொன்னம்பலமும் அவரின் நண்பர்களும் இந்தியர்களுக்கு எதிராக வாக்களித்த போது நானும் எனது நண்பர்களும் அரசியலிலிருந்து வெளியேறுவது பற்றி யோசித்தோம். ஆனால் ஆழமாக யோசித்துப் பார்த்த போது அவ்வாறு செய்வது கோழைத்தனம் என்பதை உணர்ந் தோம். மக்களிடம் போய் நடந்த விடயங்களை விளக்குவதே சிறந்தது என்பதை உணர்ந்தோம். அதையே நாம் இப்பொழுது செய்கின்றோம்".

**ஆரம்பக் கூட்டம்**

மருதானைக் கூட்டம் பற்றி டாக்டர் ஈ. எம். வி. நாகநாதனும், கு. வன்னியசிங்கமும் கையெழுத்திட்டுப் பத்திரிகை விளம்பரம் கொடுத் தார்கள்.

காலை 9.30 மணிக்குக் கூட்டம் ஆரம்பமானது. கூட்டத்துக்கு நிறைய ஆட்கள் வந்திருந்தனர். டாக்டர் திருவிளங்கம் வரவேற்புரை நிகழ்த்தினார். தமிழ் காங்கிரஸில் ஏற்பட்டுள்ள சிறு பிளவை விளக்கி இரண்டு போட்டிக் குழுக்களாக இயங்குவதால் தமிழ் மக்களுக்கு ஏற்படும் இழுக்கைச் சுட்டிக் காட்டினார். தமிழ் மக்களின் நன்மைக்கு உழைக்க முன் வந்துள்ள நாங்கள் தமிழ் மக்களுக்கே கெட்ட பெயரை ஏற்படுத்துவது நல்லதல்ல என்று திருவிளங்கம் சொன்னார். நாங்கள் புதிய கட்சியொன்றை ஆரம்பித்து எமது புதிய கொள்கை களை மக்கள் முன் வைக்க முடிவு செய்துள்ளோம் என்றார். கூட்டத்தின் தலைவராக செல்வநாயகம் ஒரு மனதாகத் தெரிவு செய்யப்பட்டார். எஸ். ஜே. வி.



தனது தலைமை உரையை இவ்வாறு ஆரம்பித்தார். வரவேற்புக் குழுத் தலைவருக்கும் இலங்கையின் பல பகுதிகளிலிருந்து இங்கு வந்து குழுமியிருக்கும் பிரதிநிதிகளுக்கும் எனது அன்பான வணக்கம்!"

தன்னைத் தலைவராகத் தெரிவு செய்தமைக்கு நன்றி கூறிய எஸ். ஜே. வி.தன் மீது சுமத்தப்பட்ட பெரும் பணியினைக் கொண்டு நடத்து வதற்குத் தனக்குப் போதுமான வன்மை இருக்குமோ என்று ஐயுறுவ தாகக் கூறினார். தனக்குக் கொடுக்கப்பட்ட பணியினை நிறைவேற்றத் தான் கடமைப்பட்டிருப் பதாகச் சொன்னார். என்னைத் தலைவராகத் தெரிவு செய்ததில் நல்ல நியாயம் ஒன்று மாத்திரம் இருக்கிறது. அது இலங்கையில் வாழுகின்ற தமிழ் பேசும் மக்கள் அடைந்திருக்கும் பரிதாப நிலையினையும் அவர்கள் அதினின்று நீங்கி விடுதலை பெறுவ தற்காக ஒரு இயக்கம் அவசியம் என்பதனையும் நீங்கள் உணரும் அளவுக்கு யானும் உணர்கிறேன் என்பதேயாகும் என்றார்.

அடுத்து அவர் கூறியது மிகவும் முக்கியமானது. இலங்கையில் வாழுகின்ற தமிழ் பேசும் மக்கள் விடுதலை பெறுவதற்காக உழைக்கும் ஒரு ஸ்தாபனத்தை அமைக்க வேண்டும் என்னும் தனி நோக்கத்துடன் நாங்கள் எல்லோரும் இன்று கூடியிருக்கின்றோம். இப்போதிருக்கும் நிலைமையில் நாம் விடுதலை பெறுவதற்கு ஒரு சுதந்திரத் தமிழரசை நிறுவுவது இன்றியமையாதது என்பது எமது திட்டமான நம்பிக்கையா கும். பழைய காலச் சரித்திரத்தைத் தெளிவாக, நன்றாக ஆராய்ந்து பார்த்தால், தமிழ் பேசும் மக்கள் இந்த நாட்டிலே இப்போது இப்படி யான நிலைமைகளுக்கிடையே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்ப தைக் கூர்ந்து நோக்கினால், இது தான் ஒரேயொரு வழி. வேறு எந்த விதமான பரிகாரமும் கிடையாது என்பது நன்கு விளங்கும்.

அதன் பின் அவர் ஐரோப்பியர் 16ம் நூற்றாண்டில் இலங்கைக்கு வந்த போது இங்கு நிலவிய நிலைமையை ஆராய்ந்தார். போர்த் துக்கேயர் வந்த போது இலங்கையில் வசித்த மக்கள் பல நூற்றாண்டு களாகச் சிங்களம் பேசும் இனம், தமிழ் பேசும் இனம், என இரு தேசிய இனங்களாகப் பிரிந்து வாழ்ந்து வந்ததைச் சுட்டிக் காட்டினார். சில காலப் பகுதிகளில் தமிழர்களைச் சிங்கள அரசர்களும் சிங்களவரின் சில பிரிவினரைத் தமிழ் அரசர்களும் ஆண்டுள்ள போதிலும் இரு தேசிய இனங்களும் தத்தமது தனித்துவத்தைப் பேணிப் பாதுகாத்து வந்ததாகக் கூறினார். பிரித்தானியர் 1815ம் ஆண்டில் கண்டி இராச்சியத்தைக் கைப்பற்றிய பின்பு கண்டி மக்களின் எதிர்ப்புணர்வை மழுங்கடிக்கச் செய்யும் விதத்தில் நாடு முழுவதையும் ஒரே நிர்வாகத்தின் கீழ் கொண்டு வந்தனர். பிரிட்டனில் நடைமுறையிலிருந்த ஒற்றையாட்சி முறையை அமுல் செய்தனர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அடுத்து சிறுபான்மை இனத்தவர்கள் ஒற்றையாட்சி அரசியலமைப்பை ஏற்றுக் கொண்டு சிறுபான்மையினருக்குக் கூடுதலான பிரதிநிதித்துவத்தைக் கோரிய வரலாற்றை அவர் சுட்டிக்காட்டினார். சிறுபான்மையினருக்குக் கூடுதலான பிரதிநிதித்துவத்தைக் கொடுப்பதை சிங்களவர் எதிர்த்ததைக் குறிப்பிட்ட எஸ். ஜே. வி. சிறுபான்மையினருக்குக் கூடுதலான பிரதிநிதித்துவம் அளிப்பதன் மூலமும் அதிகாரம் முழுவதையும் தம் கையிலேயே வைத்திருக்கக் கூடிய ஒற்றையாட்சி அமைப்பினை நிலைபெறச் செய்யலாம் என்பது அவர்களுக்குத் (சிங்களவர்களுக்கு) தென்படவில்லை என்று குறிப்பிட்டார். சிங்கள மக்களிடமே அரசியல் அதிகாரம் செல்லும் என்பதை உணர்ந்த பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் தமிழ் மக்களின் நலனைக் கருத்தில் கொள்ளாமல் சிங்களவர்களைத் திருப்திப்படுத்த முயன்றமையை எடுத்துரைத்த எஸ். ஜே. வி. தமிழ் காங்கிரஸின் தோற்றம், வளர்ச்சி, அது அரசாங்கத்தில் சேர்ந்தமை, அதனால் ஏற்பட்ட விளைவுகள் ஆகிய விடயங்களை விளக்கினார்.

1948ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் தமது நம்பிக்கைக்குப் பாத்திரமாகவிருந்த தலைவர் சரணடைந்ததும், தமிழ் காங்கிரஸில் பிளவு ஏற்பட்டபோது, தமிழ் பேசும் மக்கள் திக்கற்றவர்களாய் தவிக்கலாயினர். அரசியல் வாழ்விலே தமது நிலையை இட்டு திருப்தி கொள்ளாதவர்களாய் இருந்த போதிலும், இந் நிலையை மாற்ற வழி காணாதவர்களாய் திகைத்தனர். தமிழ் பேசும் மக்களுக்கென ஒரு சுதந்திர அரசினை நிறுவுவதன் மூலம், இப் பிரச்சினையைத் தீர்க்கலாம் என்ற புது எண்ணம் மக்களின் மனதைப் பெரிதும் கவரவில்லை. இப்படியான இயக்கத்துக்கு நாட்டிலே எவ்வளவு ஆதரவு இருக்குமென அவர்கள் திடமாக அறிந்து கொள்ளவில்லை. ஆனால், அவர்களிடையே இவ்விதமாக இப் பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ளலாம் என்று நம்பிய வீரர்களும் தீர்க்கதரிசிகளும் இருந்தார்கள். இந்த வீரர்கள் இடைவிடாது தமது நம்பிக்கையூட்டும் கொள்கைப் பிரச்சாரம் செய்து கொண்டு வந்தபடியால், இன்று தமிழ்பேசும் மக்கள் எல்லோருக்குமே சுதந்திரத் தமிழ் அரசு ஒன்றினை நிறுவ வேண்டும் என்னும் கொள்கையில் நம்பிக்கை ஏற்பட்டிருக்கின்றது என்றும் சொன்னார்.

சுதந்திரத் தமிழ் அரசு ஒன்றினை அமைக்கும் எண்ணத்தை நடைமுறையில் கொண்டு வரவேண்டிய அவசியத்தை எஸ். ஜே. வி. வலியுறுத்தினார். அதற்குக் கட்டுப்பாடு மிக்க அரசியல் கட்சியொன்று ஆரம்பிக்கப்பட வேண்டிய தேவையைச் சுட்டிக் காட்டினார். இலங்கை சுதந்திரம் பெற்ற இரண்டு ஆண்டுகளுக்குள் பிரஜாவுரிமை விடயத்திலும் தேசியக்கொடி விடயத்திலும் குடியேற்றத் திட்ட விடயத்திலும் தமிழ் பேசும் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளைப் பட்டியலிட்டுக் காட்டினார்.



அடுத்து, பல இன மொழி மக்கள் வாழும் நாடுகளில் சமஷ்டி ஆட்சி முறை மூலம் ஒவ்வொரு தேசிய இனத்தினதும் உரிமைகள் பாதுகாக்கப்பட்டிருப்பதைச் சுட்டிக் காட்டினார். சமஷ்டி அமைப்பினால் சிறிய மொழிவாரி இனங்கள் பெரிய மொழிவாரி இனங்களால் விழுங்கப்படாமல் தங்களைப் பாதுகாத்துக் கொள்கின்றன. கனடாவில், சுவிட்சர்லாந்தில், ரஷ்யாவில் அத்தகைய மொழிவாரி மாகாண அமைப்பு இருப்பதைச் சுட்டிக் காட்டினார். இந்தியாவும், மொழிவாரி மாநிலங்களை அமைத்திருப்பதை உதாரணமாகக் காட்டினார். "யாம் கோருவதும் இதுதான். ஒரு சுயாட்சித் தமிழ் மாகாணமும் ஒரு சுயாட்சிச் சிங்கள மாகாணமும் அமைத்து, இரண்டுக்கும் பொதுவானதோர் மத்திய அரசாங்கமுள்ள சமஷ்டி அரசு இலங்கையில் ஏற்பட வேண்டும். தமிழ் பேசும் தேசிய இனம் பெரிய தேசிய இனத்தால் அழியாதிருக்க வேண்டுமேயானால் இவ்வித சமஷ்டி ஏற்படுவது அவசியமாகிறது" என்றார்.

தமிழ் பேசும் பிரதேசங்களை இலகுவாகப் பிரித்து விடலாம் எனவும் இடையிடையே இருமொழிகளையும் பேசும் மக்கள் கலந்து வாழும் பிரதேசங்கள் இருப்பதைக் காட்டி அவ்வாறு பிரிப்பதைத் தடுக்கலாகாது எனவும் எஸ். ஜே. வி. வாதிட்டார். சமஷ்டி அரசியலால் ஒருவரும் நஷ்டமடையப் போவதில்லை. நிச்சயமாக சிங்கள மக்கள் நஷ்டமடைய மாட்டார்கள். ஏனென்றால், இது பெரும்பான்மையோருடைய பிரதிநிதித்துவத்தைக் குறைத்து, சிறுபான்மையினருக்குக் கூடுதலான பிரதிநிதித்துவம் அளிக்கும் திட்டத்தைப் போன்றதன்று. ஆதலால் சமஷ்டி அரசியல் எல்லோரும் விரும்ப வேண்டிய ஓர் இலட்சியமாகும் என்றார் அவர்.

சுயாட்சித் தமிழரசை நிறுவ வேண்டுமெனத் தான் கோருவதற்கான காரணங்களையும் எடுத்துரைத்தார். அவற்றில் முக்கியமானது: "தமிழ் மக்கள் தாம் இலங்கையின் சமமான பிரஜைகள்என்ற உணர்வை - மனோபாவத்தை பெறுவது. மற்றது, தமிழ் பேசும் பிரதேசங்களை மற்றப் பகுதிகளுக்கு இணையாக அபிவிருத்தி செய்வது".

தனது நோக்கத்தை இந்த வார்த்தைகளின் மூலம் தெளிவாக விளக்கினார் தந்தை. "எங்களுடைய ஒரேயொரு நோக்கம், ஐக்கிய இலங்கைச் சமஷ்டியின் அங்கமாக, ஒரு சுதந்திர அரசை நிறுவுவதன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மூலம் தமிழ் பேசும் மக்களின் விடுதலையைப் பெறுவதேயாகும்." தமிழரசுக் கட்சி அமைக்கப் பட்டதும் சிங்களத் தலைவர்கள் அது தமிழ் நாடு ஒன்றை அமைப்பதை நோக்கமாகக் கொண்டிருப்பதாகப் பிரச் சாரம் செய்தனர். சமஷ்டி என்ற பதத்துக்கு பிரிவினை என்ற அர்த்தத் தைக் கொடுத்தனர். அதனால் தந்தை செல்வாவே தனது இறுதிக் காலத்தில் பிரிவினை கோர வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார்.

தந்தை செல்வா தனது உரையில் தமிழ் பேசும் மக்களுக்கு மூன்றே மூன்று வழிகள் இருக்கின்றன எனச் சொன்னார். அவையாவன : "ஒற்றையாட்சி முறையை ஏற்றுப் பெரும்பான்மை இனத்துக்குச் சரணாகதி அடைவது. இரண்டாவது, மொழிவாரியாகப் பிரிக்கப்பட்ட பூரண சுதந்திர அரசை அமைப்பது". அந்த இரண்டு வழிகளையும் நிராகரித்த தந்தை செல்வா மூன்றாவது மத்திய வழியைத் தெரிந் தெடுத்தார். அதுதான், சமஷ்டி இலங்கையில் மொழிவாரி தமிழ் அரசையும் சிங்கள அரசையும் உருவாக்குதல். தலைமையுரை முடிந்த தும் தந்தை செல்வாவே புதிய கட்சியை அமைப்பதற்கான பிரேரணை யை முன் மொழிந்தார். அப் பிரேரணையின் வாசகம் இது தான் :

> இலங்கை தமிழ் பேசும் மக்களின் விடுதலைக்காக உழைக்கும் தொண் டர்கள் 1949ம் ஆண்டு டிசம்பர் மாதம் 18ம் திகதி மருதானை அரசாங்க இலிகிதர் சேவைச் சங்கக் கட்டிடத்தில் கூடிய இக்கூட்டம் நியாயமற்றதும், பல மொழி பேசும் மக்களைக் கொண்ட நாட்டிற்கு ஏற்காததுமான. இன்றைய ஒற்றையாட்சி அமைப்பின் கீழ் இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்கள் மேன் மேலும் கீழான நிலைமைக்குத் தாழ்த்தப் படுவதை உணர்ந்து, தமிழ் பேசும் மக்கள் சுதந்திரமும், சுயமரியாதையும் உள்ள பிரஜைகளாக வருங்காலத்தில் வாழ்வதற்கும் பாதகமான சட்டங்கள் ஆக்குவதையும், நிர்வாக நடவடிக்கைகள் அனைத்தையும் மேற்கொண் டிருக்கும் இன்றைய அரசாங்கத்தின் கொள்கையின் நோக்கத்தையும் ஆபத்தையும் அறிந்து, நாட்டின் ஒற்றுமைக்குப் பாதகமற்ற முறையில் இந்த அடிப்படைப் பிரச்சினைகளை நீதியாகவும் சனநாயக ரீதியாகவும் தீர்ப்பதற்கு ஒரே வழி ஐக்கிய இலங்கைச் சமஷ்டியின் ஓர் அங்கமாக இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களுக்கு ஒரு சுயாட்சி அரசை நிறுவுவதே என்பதைத் தெளிவாகக் கண்டு, இலங்கை தமிழ் அரசுக் கட்சியை அமைத்து, இந் நாட்டுத் தமிழ் பேசும் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் "சுயாட்சி" என்ற இலக்கை அடைவதற்கு உழைக்க உறுதி பூண்ட, தமிழ் பேசும் மக்களின் தேசிய நிறுவனமாக இயங்குவதென்று தீர்மானித்திருக்கிறது.



கூடியிருந்த பிரதிநிதிகள் அத்தனை பேரும் கை தட்டி தமது பேராதரவைத் தெரிவித்தனர். தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப் பட்டது. கட்சியை நிறுவும் தீர்மானம் நிறைவேறியதும் அதன் அமைப்பு விதிகள், பொருளாதாரக் கொள்கை, சமுதாயக் கொள்கை ஆகியவை பற்றிய முடிவுகளும் எடுக்கப்பட்டன.

உரையின் முடிவில் தந்தை செல்வா மூன்று முக்கிய விடயங்களைச் சுட்டிக் காட்டினார். அவை : 1 முஸ்லிம் பிரச்சினை 2 தீண்டாமை ஒழிப்பு 3 மலை நாட்டுத் தமிழர் பிரச்சினை.

கிழக்கு மாகாண முஸ்லிம்கள் பற்றி தந்தை செல்வா சொன்னது இது:

> கிழக்கு மாகாணத் தமிழர்கள் இத் திட்டத்தை ஆதரிக்கும் அளவுக்கு, அங்குள்ள முஸ்லிம் மக்களும் இதை வரவேற்கின்றனர். கிழக்கு மாகாணம் முழுவதையும் தமிழ் அரசின் பகுதியாக்க வேண்டுமென்றால், தமிழ் பேசும் இரு சாதியத்தாரும் ஒன்று சேர வேண்டும். ஆனால், எங்களுடைய இயக்கம் முஸ்லிம்கள் வசிக்கும் பகுதிகள் தமிழ்ப் பிரதேசத்துடன் இணைந்திருக்க வேண்டுமா அல்லது சிங்களம் பேசும் பிரதேசத்துடன் இணைந்திருக்க வேண்டுமாஎன்பதைத் தீர்மானிப்பதற்கு முஸ்லிம்க ளுக்கே பூரண சுதந்திரம் இருக்க வேண்டும் என்ற அடிப்படையிலேயே நடைபெற்று வருகின்றது. அவர்களுக்கு என்ன வேண்டும் என்பதை அவர்களே தீர்மானிக்க வேண்டும்.

**தீண்டாமை ஒழிப்புப் பற்றித் தந்தை கூறியது:**

> யாம் வெற்றி பெறுவதற்கு அருகதையுள்ளவர்களாக வேண்டுமானால், எமது சமூகத்திலிருக்கும் குறைகளைக் களைந்து, அதைத் தூய்மை பெறச் செய்ய வேண்டும். தமிழ் மக்களிடையே தாழ்த்தப்பட்ட வகுப்பினர் இருக்கின்றனர். அவர்கள் தாங்கள் மற்றவர்களால் ஒடுக்கப்படுவதாகக் கருதுகின்றனர். யாம் ஒருவருக்குக் கொடுமை செய்தால், தர்ம நீதிப்படி எமக்கும் பிறரொருவர் அதையே செய்வர். தமிழ் மக்கள் அரசியல் சுதந்திரம் பெறவேண்டுமேயானால் தம் சமுதாயத்திலே உரிமையற்ற வர்களாய் இருக்கும் மக்களுக்கு அவ்வுரிமைகளை வழங்க வேண்டும்.

**மலையகத் தமிழர்கள் பற்றி அவர் கூறியது:**

> மலை நாட்டில் வாழும் தமிழ்த் தொழிலாளர்களுடைய நிலைமையானது இங்கு கூறிய தாழ்த்தப் பட்டோருடைய நிலையிலும் பார்க்கக் கேவலமாய்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இருக்கிறது. அவர்கள் அரசியலில் தீண்டாதவர்களாய் விட்டார்கள். அவர்களுக்குப்பிரஜாவுரிமை இல்லாதிருப்பது மாத்திரமன்றி, தமக்கென ஒரு நாடுமற்ற அகதிகளாகவுமிருக்கிறார்கள். ஏனைய தமிழ் பேசும் மக்கள் இவர்களுக்கு வந்திருக்கும் இன்னலைத் தங்களுக்கு வந்ததாகவே கருதுதல் வேண்டும். அவர்கள் உதவிக்கு எதிர்பார்ப்பது இந்தியாவையல்ல. சுதந்திரம் விரும்பும் இலங்கை வாழ் மக்களிடமிருந்தே அவ்வுதவி வருதல் வேண்டும். இவ்விரண்டு விஷயங்களும் நீங்கள் ஆரம்பிக்க வந்திருக்கும் இக் கட்சியின் அடிப்படைக் கொள்கைகளில் இடம் பெறுதல் வேண்டும்.

தந்தையின் விருப்பத்திற்கிணங்க தீண்டாமை ஒழிப்பையும் மலையக மக்கள் தாம் இழந்த பிரஜாவுரிமையைத் திரும்பப் பெறுவதற்கு உழைப்பதெனவும் கூறும் தீர்மானங்களை மகாநாடு ஏற்றுக் கொண்டது. அடுத்து, கட்சியின் பொருளாதாரக் கொள்கை மீது காரசாரமான விவாதம் நடந்தது. பொருளாதாரக் கொள்கை எவ்வாறு அமைய வேண்டும் என்ற விடயத்தில் இளைஞர்களுக்கும் முதியோர்களுக் குமிடையே கருத்து மோதல் ஏற்பட்டது. சோஷலிசத்தை அடிப்படை யாகக் கொண்ட கொள்கையை இளைஞர்கள் ஆதரித்தனர். முதியோர் அதைப் பலமாக எதிர்த்தனர். இரு பகுதியினருக்கு மிடையே ஓர் உடன் பாட்டைக் காண முடியவில்லை. தலைவர் என்ற முறையில் தந்தை செல்வா வாக்கெடுப்புக்கு விட்டார். இரண்டு பக்கங்களுக்கும் சம எண்ணிக்கை வாக்குக்கள் கிடைத்தன. தலைவர் தன் வாக்கை இளைஞர் பக்கம் அளித்தார். தந்தை செல்வாவின் முடிவை வாலிபர்கள் கை தட்டி வரவேற்றனர். பொருளாதாரக் கொள்கை பற்றிய தீர்மானம் இது. சாதி, சமயம், இனம், ஆண், பெண், என்ற அடிப்படையில் வேற்றுமை பாராட்டாது கல்வி, தொழில் முதலிய துறைகளில் சம சந்தர்ப்பம ளிக்கும் சோஷலிஸ்ட் பொருளாதார முறையினை ஏற்படுத்துதல். இத் தீர்மானம் சில எதிர்பாராத விளைவுகளை ஏற்படுத்தத்தான் செய்தது. அந்தக் காலத்தில் சோஷலிச மோகம் இளம் சமுகத்தினரிடையே நிலவியது. முதியோரில் பலர் சோஷலிசத்தை வன்மையாக எதிர்த்தனர். தீண்டாமையின் பிடி வலுவுற்றிருந்த காலம் அது. தீண்டாமையை ஒழிப்பதும் கட்சியின் அடிப்படைக் கொள்கையாக்கப் பட்டதையும் பல முதியவர்கள் விரும்பவில்லை. அதனால், தந்தை செல்வாவை ஆரம்பத்தில் ஆதரித்த பலர் மெதுவாகக் கழன்று விட்டனர்.



**தீவிர பிரச்சாரம்**

புதிய கட்சி உடனடியாகவே பிரசாரத்தில் ஈடுபட்டது. டிசம்பர் 22ம் திகதி தமிழரசுக் கட்சியின் முதலாவது பொதுக் கூட்டம் யாழ்ப்பாண முற்றவெளியில் நடத்தப்பட்டது. தந்தை செல்வநாயகம் தலைமை வகித்தார். அகில இலங்கை தமிழரசுக் கட்சி ஆரம்பிக்கப்பட்ட சூழ்நிலையை விளக்கி உரையாற்றினார். அவர் சொன்னார். "தமிழ்த் தலைவர்கள் இதுகாலவரை ஸ்திரமற்ற எதிர்மறைக் கொள்கையையே பின் பற்றி வந்தனர். குறைந்த விகிதாசாரத்தையுடைய சிறுபான்மை மக்களுக்கு கூடிய விகிதாசாரப் பிரதிநிதித்துவம் வழங்கப் படவேண்டும் என்று கோரினார். நாங்கள் சிங்களவராகப் பிறந்திருந்தால் அக்கோரிக்கைக்கு இணங்கியிருப்போமா? நான் நிச்சயமாக இணங்கியிருக்க மாட்டேன். தமிழர்கள் இந்த நாட்டில் பெரும் பான்மையினராக இருந்து சிங்களவர் சிறுபான்மையினராக இருந்து சிங்களவர் எமது தலைவர்கள் கோரிய ஐம்பதுக்கைம்பதைக் கோரியிருந்தால் நாங்கள் அதற்கு இணங்கியிருப் போமா? நிச்சயமாக இணங்கியிருக்க மாட்டோம். ஐம்பதுக்கைம்பது நியாயமான கோரிக்கையுமல்ல. நடைமுறைப்படுத்தத்தக்க கோரிக் கையுமல்ல.அப்போதைய தமிழ்த் தலைவர்கள் நடைமுறைக்கொத்த மாற்றுத் திட்டத்தை முன்வைத்திருந்தார்களானால் பிரிட்டிஷ் அரசு அதை ஆதரவுடன் பரிசீலித் திருக்கும் என்றார் தந்தை". அப்போது ஒரு மூலையிலிருந்து "நீங்கள் அப்போது முட்டையா எண்ணிக் கொண்டிருந்தீர்கள்"? என்ற குரல் கேட்டது. அதே மூலையிலிருந்து கோழி கொக்கரிப்பது போன்ற ஒலி கிளப்பப்பட்டது. டிசம்பர் முடிவில் மட்டக்களப்பில் தமிழரசுக் கட்சியின் இரண்டாவது பொதுக் கூட்டம் நடைபெற்றது. ஆர். பி. கதிர்காமர் தலைமை வகித்தார். அக் கூட்டத் தில் யு. என். பி. யைத் தாக்கிப் பேசிய எஸ். ஜே. வி சொன்னார்:

ஐந்து லட்சம் மக்கள் வாழும் யாழ். குடாநாட்டைத் தாக்குவது கடினம் என்பது யு. என். பி. க்குத் தெரியும். எனவே, பலம் குறைந்த தமிழர்களைத் தெரிந்தெடுத்துத் தாக்க ஆரம்பித்துள்ளது. யு. என். பி. முதலில் ரப்பர் தேயிலைத் தோட்டங்களில் வாழும் தமிழ் மக்களைத் தாக்கியது. இப்பொழுது, கிழக்கு மாகாணங்களில் பரவியுள்ள தமிழ்க் கிராமங்களைத் தாக்கியுள்ளது

....... ....... .......

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## ஆர்ப்பாட்ட அரசியல்

கல்ஓயா திட்டம் அப்பொழுது அமுல் செய்யப்பட்டுக் கொண்டிருந்தது. சேனநாயக்க சமுத்திரத்தின் அணை கட்டப்பட்டு நீர்ப்பாசனக் கால்வாய்கள் அமைக்கப்பட்டுக் கொண்டிருந்தன. அப் பகுதியில் குடியேற்றுவதற்கு சிங்களவர் தெரிவு செய்யும் வேலை ஆரம்பித்திருந்தது. புதிதாக அமைக்கப் பட்ட தமிழரசுக் கட்சித் தொண்டர்கள் ஆர்ப்பாட்ட அரசியலில் பாய்வதற்கு மகா தேசாதிபதி சோல்பரி பிரபுவின் யாழ்ப்பாண விஜயம் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்தது. சோல்பரி கமிஷனின் தலைவரான சோல்பரி பிரபு இலங்கையின் மகாதேசாதிபதியாக (கவர்னர் ஜெனரல்) நியமிக்கப் பட்டார். மகாதேசாதிபதி என்ற முறையிலேயே அவர் 1950 ஜனவரி பிற்பகுதியில் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தார். சோல்பரி பிரபு கவர்னர் ஜெனரலாக நியமிக்கப்பட்டதைப் பற்றி அக்காலத்தில் நிலவிய கிசு கிசு இது. சர். ஐவர் ஜென்னிங்ஸ் தயாரித்த அரசியல் சட்டத்தை ஏற்றுக் கொண்டால் கவர்னர் - ஜெனரல் பதவிக்கு அவரின் பெயர் சிபாரிசு செய்யப்படும் என்று சொல்லப்பட்டதாம். யார் அத்தகைய கைங்கரியத்தைச் செய்திருப்பார் என்று நினைக்கிறீர்கள்? சர். ஒலிவர் தான். டி. எஸ். இன் கையாளாகத் தொழிற்பட்டவர் சர். ஒலிவர் குணதிலக. இரண்டு பகுதியினரும் ஒப்பந்தத்தைக் கௌரவித்தனர்.

சோல்பரி பிரபுவின் யாழ்ப்பாண விஜயத்தைப் பகிஷ்கரிக்குமாறு கோரும் துண்டுப் பிரசுரத்தை தமிழரசுக் கட்சி விநியோகித்தது. தமிழினத்தின் வைரியை வரவேற்காதீர் என்பதே அத் துண்டுப் பிரசுரத்தின் தலைப்பு. பகிஷ்கரிப்பைத் தூண்டும் பொதுக் கூட்டம் ஒன்றை ஜனவரி 22ல் யாழ்ப்பாண நகர மண்டபத்தில் நடத்த தமிழரசுக் கட்சியினர் ஒழுங்கு செய்திருந்தனர். மண்டபத்துக்கான கட்டணத்தைச் செலுத்தி பற்றுச் சீட்டும் பெற்றனர். கூட்டத்தன்று நகர மண்டபத்துக்குப் போய்ப் பார்த்தால்? கதவில் இரண்டு பூட்டுக்கள் தொங்கின. கதவுக்கு முன்னால் பொலிஸார் அணிவகுத்து நின்றனர். அங்கே திரண்டு விட்ட மக்கள் இரட்டைப் பூட்டுக்களையும் பொலிஸா ரையும் வேடிக்கை பார்த்த வண்ணம் நின்றிருந்தனர். திடீரென சில வாலிபர்கள் கூட்டத்துக்குள் புகுந்தனர். துண்டுப் பிரசுரம் ஒன்றை விநியோகித்தனர். மணிக்கூட்டுக் கோபுரத்துக்குப் பக்கத்திலுள்ள கராஜில் கூட்டம் நடக்கும் என்று துண்டுப் பிரசுரம் கூறியது. தென்னம் காணி நடுவே ஒரு மேசை. அதில் ஏற உதவுவதற்காக ஒரு மரக்கதிரை.



எஸ். ஜே. வி. அப்பொழுது நடுவயதினர். பாக்கின்சன் நோய்க்கு அப்பொழுது அவர் ஆளாகியிருக்கவில்லை. சில இளைஞர்கள் அவரை அலாக்காகத் தூக்கி மேடை மீது நிறுத்தினார்கள். அப்போது எஸ்.ஜே.வி. சொன்னார்:

> சோல்பரி பிரபு மீது எமக்கு கோபம் எதுவுமில்லை. அவர் அறிமுகம் செய்த ஒற்றையாட்சி முறையைத் தான் நாம் எதிர்க்கின்றோம். கண்டிக்கிறோம். ஓரின மக்கள் அல்லது ஒரு மொழி பேசும் மக்கள் வாழும் நாட்டுக்கு ஒற்றையாட்சி முறை பொருத்தமானது. இந் நாட்டில் பல இன மக்கள் வாழ்கிறார்கள். பல மொழி பேசும் மக்கள் வசிக்கிறார்கள். பல மதங்க ளைப் பின்பற்றுவோர் உள்ளனர் என்பதை சோல்பரி பிரபு உணரவில்லை. அதை அவருக்குச் சுட்டிக் காட்டத்தான் இந்தப் பகிஷ்கரிப்பு.

ஆனால், அந்தப் பகிஷ்கரிப்பு வெற்றி பெறவில்லை. பிரமாண்ட மான வரவேற்பொன்றை அமைச்சர் ஜி. ஜி. பொன்னம்பலம் நடத்திக் காட்டினார். தமிழ் மக்களிடையே தனக்கிருந்த செல்வாக்கைக் காட்டு வதற்கு ஏற்ற நல்ல சந்தர்ப்பமாக அவர் சோல்பரி பிரபுவின் விஜயத்தை உபயோகித்தார்.

## திருமலை மகாநாடு

1950ஐ கட்சி வளர்ச்சி ஆண்டு என்று தந்தை செல்வா பிரகடனம் செய்தார். நகரங்களிலும், கிராமங்களிலும் கட்சிக் கிளைகளை அமைப் பதில் கவனம் செலுத்தப்பட்டது. மட்டக்களப்பு (அப்பொழுது அம் பாறை மாவட்டம் இருக்க வில்லை) திருகோணமலை, வவுனியா, மன்னார், (கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்கள் அப்போதில்லை) யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் மூலை முடுக்குகள் எல்லாம் கட்சிப் பிரச்சாரக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. 1951 தமிழரசுக் கட்சியின் வரலாற்றில் மிகவும் முக்கியமான ஆண்டு. அவ்வருடம் ஏப்ரல்13, 14, 15, ஆம் திகதிகளில் திருகோணமலையில் கட்சியின் முதலாவது மகா நாடு நடைபெற்றது. மேலும் ஓராண்டுக்கு தந்தை செல்வா தலை வராகத் தெரிவு செய்யப்பட்டார். தலைவர் பதவியைக் கட்சியின் இளைமைப் பராயம் காரணமாக ஏற்றுக் கொண்ட போதும் தலைவர் பதவி அடிக்கடி மாற்றப்பட வேண்டும் என்ற தன் விருப்பத்தைத் தந்தை தெரிவித்தார். அதற்கு அவர் சொன்ன காரணம்:

திரும்பவும் திரும்பவும் ஒருவரையே தலைமைப் பதவியில் வைப்பது எங்கள் இயக்கத்துக்கு இணங்காதது. இன்றும் எங்கள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஊழியர்களுக்குள் தலைமைப் பொறுப்பை எடுத்து நடத்துவதற்குத் தகுதியுள்ள பெரியார் பலர் உள்ளனர். முதலாவது மகாநாட்டை நடத்துவதற்குத் திருகோணமலையைத் தெரிந்தெடுத்ததேன் ? பல காரணங்களைத் தந்தை செல்வா கொடுத்தார். அவை: சரித்திரச் சிறப்பு மிகுந்த நகரம். தமிழ் இனம் பல நூற்றாண்டுகளாகச் செழிப்பாக வாழ்ந்த பிரதேசம். தமிழ் பேசும் இலங்கையினர் வாழும் பிரதேசங்களின் மத்தியில் இருப்பது. திருகோணமலையும் கிழக்கு மாகாணமும் சிங்கள குடியேற்ற ஆபத்தை எதிர்நோக்கியிருப்பது. திருகோணமலை மக்களின் விடுதலை வேட்கை". திருகோணமலை தமிழ் பேசும் மக்களின் விடுதலை அவாவைப் பற்றி தந்தை சொன்ன வார்த்தைகள்:

> திருகோணமலையிலிருக்கும் தமிழ் பேசும் மக்களே எங்கள் முன்னோரின் மகிமையைக் காப்பாற்றுவதற்குத் தகுதியுள்ளவர்கள் என்பதைப் பெருமையுடன் கூறுகின்றேன். தமிழ் இனத்தைக் காப்பாற்றுவதற்கு, இங்கிருக்கும் ஆர்வத்தை நான் மெச்சுகின்றேன். திருகோணமலை வாலிபரின் வீரத்திற்கும் தியாகத்துக்கும் நான் வணக்கம் செலுத்துகின்றேன். இலங்கை வாழ்தமிழ் பேசும் மக்கள் அரசியலில் பூரண உரிமை பெற்று வாழ்வதற்கு இருக்கும் ஒரேயொருவழியாகிய, தமிழரசு கோரும் இயக்கம் இலங்கையின் எப்பகுதியிலும் வேரூன்றியிருப்பதிலும் பார்க்க ஆழமாகவும், ஸ்திரமாகவும் மூலவேரும், பக்கவேரும் விட்டெறிந்து நிலையாக இத்திருகோணமலையில் தான் நிலைத் திருக்கிறது. ஆகவே, இம் மகாநாடு இங்கே நடப்பது தகும்.

அப் பேருரையில் தமிழ்த் தலைவர்கள் விட்ட தவறைச் சுட்டிக் காட்டிய தந்தை செல்வா இதைச் சொன்னார்:

> இற்றைக்கு முப்பது வருடங்களுக்கு முன் இக் கேள்வி எழும்பியிருந்தால் (தமிழரசுக் கோரிக்கை) ஆங்கிலேயர் இந்நாட்டை விட்டுப் போகின்ற காலத்திலேயே சுயாட்சியுள்ள தமிழ் நாடு இலங்கையில் உருவாகியிருக்கும் என்பதை மக்களில் பலர் இன்று ஒப்புக் கொள்கிறார்கள். ....................: எச்சரிக்கைகளைக் கவனியாது, பல தமிழ்ப் பிரதிநிதிகளும் முஸ்லிம் பிரதிநிதிகளும் மலைநாட்டுத் தமிழர்களின் உரிமைகளைப் பறித்த, சிங்கள அரசாங்கத்தின் கொடிய சட்டத்தை ஆதரித்து வாக்களித்தார்கள். நாம் கூறிய தீர்க்கதரிசன வாக்குகள் போல இன்று கல்ஓயாவின் கீழ் கல்முனைப் பகுதியில் முஸ்லிம், தமிழ் மக்களுக்கு அடி விழுகிறது. இதையும் தந்தை செல்வா சொன்னார். கல்முனைப் பிரதேசத்தில் அரசாங்கம் தன் பணத்தையும் பலத்தையும் ஆதிக்கத்தையும் உபயோகித்துச் சிங்கள மக்களைக் குடியேற்றுகிறது. தற்சமயம் முஸ்லிம் தொகுதியிலிருக்கும் கல்முனைத் தொகுதி சீக்கிரத்தில் முஸ்லிம் தொகுதியல்லாது சிங்களத் தொகுதியாக மாறிப் போகும் என்று முஸ்லிம் பிரதிநிதிகளே பயப்படுகிறார்கள்.



இலங்கைத் தமிழ் மக்களின் மீட்சிக்கு இரண்டு வழிகளே உள்ளன என்பதைச் சுட்டிக் காட்டிய எஸ். ஜே. வி. நாட்டை இரண்டாகப் பிளக்கும் பிரிவினையை நிராகரித்தார். இது கடும் மருந்து. இதை நான் கேட்கவில்லை என்றார். அடுத்தது, சமஷ்டி அமைப்பில் தமிழ் பேசும் பிரதேசம் மாகாண சுயாட்சி கொண்டு வாழ்வது. இதையே நாம் நாடியுள்ளோம் எனத் தந்தை சொன்னார். சமஷ்டி ஆட்சி நடக்கும் முறைகளைப் பற்றியும் விளக்கினார். தமிழ் மாகாண அரசாங்கத்துக்கு தன் உள்நாட்டு விஷயங்களில் முழு ஆதிக்கம் இருக்கும். சுய ஆட்சி மாகாணங்களை இணைப்பதற்கு ஒரு மத்திய அரசாங்கம் இருக்கும். பொதுவாய், மத்திய அரசாங்கத்தின் ஆதிக்கத்தின் கீழ் அமைக்கப்படும் விஷயங்களாவன, பாதுகாப்பு, போக்குவரத்து, அந்நிய தேச விவகாரங்கள், நாணயம் முதலியவை. சுய ஆட்சி மாகாணங்களுக்குரியவை. விவசாயம், நீர்ப்பாசனம், குளங்கள், சுகாதாரம், கல்வி ஆகியன. இவ்வமைப்பின் படி வடக்கு - கிழக்கு மாகாணங்களில் கட்டும் குளங்கள், கல் ஓயாத் திட்டம், அங்கு நடக்கும் குடியேற்றத் திட்டம் முதலியவை தமிழ் அரசினால் நடத்தப்படும். அப்போது யாரை அங்கே குடியேற்றுவோமென்று சொல்லிக் காட்டத் தேவையில்லை. அல்லது தமிழ் மாகாணங்களில் அரசாங்க பாஷை என்னவாயிருக்கும் என்பதற்கு யார் மனதிலும் ஐயத்திற்கிடமில்லை.

சுருக்கமாகச் சொன்னால் எஸ். ஜே. வி. செல்வநாயகம் தன் தலைமை உரையில் மூன்று முக்கிய விடயங்களை வலியுறுத்தினார். அவையாவன:

1. தமிழ் பேசும் மக்கள் சுதந்திரமாக வாழும் உரிமையுடைய ஒரு தேசிய இனம்.
2. தமிழ் பேசும் மக்கள் தம் வரலாற்றுப் பெருமையுடன் சுதந்திரமாக வாழ்வதற்கு அவர்கள் பாரம்பரியமாக வாழும் பிரதேசத்தில் தமிழரசு அமைக்கப் பட வேண்டும்.
3. அத் தமிழரசு சமஷ்டி அமைப்பின் அங்கமாக இருக்க வேண்டும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தமிழ் மக்களுக்குச் சுதந்திரமாக வாழும் உரிமை உண்டு என்று வலியுறுத்திய போது அக்கோரிக்கை சுய நிர்ணய கோட்பாடுக் கமைவாகவுள்ளது என்பதைச் சுட்டிக் காட்டுகிறார். அதைப் போன்றே மற்றொரு அடிப்படைக் கோட்பாட்டின் பாரம்பரிய வாழிடத்தையும் வலியுறுத்துகிறார். அத்துடன் சுதந்திரத்தைப் போராடிப் பெறுதல் வேண்டும் என்கிறார். எஸ். ஜே. வி. யின் வார்த்தைகள் இவை :

> சுதந்திரம் வேறொருவர் கொடுக்க, தாம் பெற்றுக் கொள்ளும் பொருளல்ல. அது சுக்குமல்ல. மிளகுமல்ல. மக்களின் வீரத்தாலும் தியாகத்தாலும் விடாமுயற்சியாலும் மக்கள் அடையும் ஓர் உன்னத நிலைதான் சுதந்திரம். உலக சரித்திரத்தை எடுத்துப் பார்த்தால், சுதந்திரப் போராட்டம் நடத்திய எல்லாவினமும் பலவீனமான இனமாகவே இருந்தன என்பது புலப்படும்.

விடுதலைப் போருக்கு இரண்டு அம்சங்கள் ஒன்றாக அமைதல் வேண்டும் என்றும் தன் திருமலை மகாநாட்டு தலைமைப் பேருரையில் தந்தை சொன்னார். அவையாவன :

1. விடுதலை வேட்கையும் விடுதலைக்காகச் செய்யும் முயற்சியும்.
2. சந்தர்ப்பம்.

தனது சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த தலைமைப் பேருரையை தந்தை இவ்வாறு முடித்தார்:

இன்று இங்கே கூடியிருக்கும் இப் பெருந்திரள் எம்மினம் புத்து யிர் கொண்டு எழும்புகின்றதென்பதற்கு அறிகுறி. சிங்கள அரசாங்கம் கிழக்கு மாகாணத்தைக் கவருவதற்கு. இத்திரள் எம் இனத்தின் எதிர்ப் பைக் காட்டுகிறது.

### திருமலைத் தீர்மானம்

திருமலை மகாநாட்டில் ஏழு தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன. முதலாவது தீர்மானம் தமிழ் பேசும் மக்கள் ஒரு தேசிய இனமெனக் கணிக்கப் பெறுவதற்கு மறுக்கவொண்ணா உரித்தை எடுத்துரைப்பதோடு, அரசியல் சுயாதீனம் பெறுவதற்கு அவர்களுக் குள்ள உரிமையையும், சிங்களவர்களுடன் சமஷ்டியமைப்பு முறையில் இணைவதற்கு அவர்களுக்குள்ள விருப்பையும் பிரகடனப்படுத்தியது. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அத் தீர்மானத்தை முழுமையாக தரு கிறேன்:



> பரிபூரண அரசியல் சுதந்திரத்தை அனுபவிப்பதற்கு ஒவ்வோர் இனத்திற்கும் பிரிக்க வொண்ணாத உரிமை உண்டென்பதாலும், அவ்வுரிமையின்றி அவ்வினத்தின் ஆன்மீக, கலாசார, தார்மீகப் பொலிவு சீரழிந்து விடு மென்பதாலும் இலங்கைத் தமிழ் பேசும் மக்கள் ஒரு தேசிய இனமென்று கணிப்பதற்கான ஒவ்வோர் அடிப்படைத் தகுதிகளிலும் (அதாவது, முதலாவதாக குறைந்த பட்சம் சிங்கள மக்களையொத்த அளவுக்காவது புராதனமானதும் புகழ் செறிந்ததுமாக இத் தீவில் தனியொரு வரலாற் றாலும், இரண்டாவதாக, ஒப்பற்றவோர் இலக்கியப் பாரம்பரியத்துடனும், இக்காலத் தேவைகள் அனைத்துக்குமே போதுமானதாகத் தமிழ் மொழியை இலங்கச் செய்யும் நவீன வளர்ச்சியுடனும் விளங்குவது தான் சிங்களவர் களின் மொழியினின்றும் முற்றாக வேறுபட்ட தனியொரு மொழிவாரி மக்கள் என்ற உண்மையாலும் இறுதியாக இத்தீவின் மூன்றிலொரு பாகத்தை மேவிச் செறிந்துள்ளதான குறிப்பிடத்தக்க நிச்சயமான நிலப் பரப்பில் வசிக்கும் மக்கள் அவர்கள் என்ற காரணத்தாலும் சிங்களவர்க ளினின்றும் வேறுபட்ட ஒரு தனியினமாக அவர்கள் விளங்குகின்றார்கள் என்பதாலும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் இம் முதலாவது தேசிய மகாநாடு இலங்கைத் தமிழ் பேசும் இனத்துக்கென பிரிக்க முடியாத அவர்களின் அரசியல் சுயாதீன உரிமையைக் கோருவதுடன், அடிப்படை யானதும், மறுக்கவொண்ணாததுமான சுயநிர்ணய கோட்பாட்டிற்கியைய மொழிவாரி அரசுகளின் எல்லைகளை நிர்ணயிப்பதற்கான ஒரு பொதுசன வாக்கெடுப்பை நடாத்துமாறு கேட்டுக் கொள்கிறது.
>
> மேலும் பல நாடுகளில் உதாரணமாகக் கனடா, இந்தியக் குடியரசு, சுவிட்சர்லாந்து, சோவியத் யூனியன், போன்ற நாடுகளில் ஒரு சமஷ்டி அமைப்பு அரசினை நிறுவியதன் மூலமே பல்லினமுடைய பன்மொழி பேசும் அந் நாடுகளின் பல்வேறு சிக்கலான பிரச்சினைகள் வெற்றிகரமாகத் தீர்க்கப்பட்டுள்ளன என்பதாலும், அந் நாடுகளில் தேசிய வாழ்வின் எல்லாத் துறைகளிலும் இச் சமஷ்டி அமைப்பு அரசு உண்மையான ஐக்கியத்தையும், சமாதானத்தையும், முன்னேற்றத்தையும் உறுதி செய்துள் ளது என்பதாலும், இலங்கைத் தமிழ்க் கட்சியின் இம் முதலாவது தேசிய மகாநாடு இவ்விரண்டு இனங்களுக்கும் பொதுவான தாயகமாகிய இந்நாட்டில், இவ் வினங்களுக்கிடையே பன்னூற்றாண்டு காலமாக நிலவிய நெருங்கிய உறவின் அறிவு பூர்வமானதும், இயல்பானதுமான முற்றுப் பேறாகவும், சிங்கள மக்களுடன் தேசிய நல்லெண்ணத்தையும், நெருங்கிய ஒத்துழைப்பையும் மேம்படுத்திப் பேணும் நோக்குடனும், இலங்கைச் சமஷ்டி அமைப்புக்குள் சுயாதீனமான ஒருதமிழ் அரசினை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அமைப்பதே செயற்பாலது எனவும், செம்மையானது எனவும், தமிழ் பேசும் மக்களுக்கு விதந்துரைக்கின்றது.

இரண்டாவது தீர்மானம் - சோல்பரி அரசியலமைப்பை நிராகரிக்கிறது. அந்த அரசியலமைப்பு ஒற்றையாட்சி முறையை அடிப் படையாகக் கொண்டது. ஒற்றையாட்சி முறை தனியொரு இனம் வாழும் நாட்டிற்கு ஏற்றது. பல இன மக்கள் வாழும் இலங்கை போன்ற நாட்டுக்கு ஏற்காதது. ஒற்றையாட்சி அமைப்பின் கீழ் சனத்தொகை கூடிய சிங்கள இனத்தின் தயவில் சனத்தொகை குறைந்த தமிழினம் தங்கியிருக்க நேரிடும். இரண்டாவது தீர்மானத்தின் பிற்பகுதி இது:

> அத்துடன், இலங்கையில் தமிழ் இனம் அங்ஙனம் தொடர்ந்து சிங்கள இனத்தின் மீது தங்கியிருப்பது - காலப் போக்கில் அவர்களின் அரசியல் அடிமைத் தனத்திலும், இன அழிவிலும் முடியும் என்பதால் இலங்கை சமஷ்டிக் கூட்டாட்சி அமைப்பு ஒன்றின் கீழ் ஒரு சுயாதீன மொழிவாரித் தமிழ் அரசை நிறுவுவதன் மூலம் தமது சுதந்திரத்தைக் கோருமாறும் அச் சுதந்திரத்தை ஈட்டுவதற்குத் தளராது உழைக்குமாறும் இம்மாநாடு, இத் தீவகத்திலுள்ள தமிழ் பேசும் மக்களை அவர்களின் இனத்தினுடைய பெயராலும், அவர்களதும், அவர்களது குழந்தைகளினதும் தன்மானத்தின் பெயராலும் அழைக்கிறது.

மூன்றாவது தீர்மானம் இந்தியத் தமிழர்களின் பிரஜாவுரிமை பற்றியது. பிரஜாவுரிமையையும் வாக்குரிமையையும் பறித்ததன் மூலம் இலங்கை அரசாங்கம் இந்தியத் தமிழர்களையும் அவர்களின் சந்ததியி னரையும் இழிவு படுத்தியுள்ளதென்றும், அந்த அவமானத்தையும் அவமதிப்பையும், அகற்று வதற்கு ஆணித்தரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் எனவும் அத் தீர்மானம் கூறியது.

நாலாவது தீர்மானம் மிகவும் முக்கியமானது. தமிழ் மொழிக்கு ஏற்படப் போகும் பேராபத்தை எதிர்வு கூறுகிறது அது. அத் தீர்மானத் தின் வாசகம் இது:

> இலங்கை தமிழரசுக் கட்சியின் இம் முதலாவது மாநாடு, இன்றைய அரசியலமைப்பின் கீழ் இலங்கையில் தமிழ் மொழியின் அந்தஸ்தினை எதிர்நோக்கியிருக்கும் பேராபத்திற்கு எல்லாத் தமிழ் பேசும் மக்களினதும் கவனத்தை ஈர்க்கிறது. செல்வாக்குள்ள சிங்கள அரசியல், கலாசார அமைப்புக்குள் சிங்களம் மட்டுமே இந்நாட்டின் உத்தியோக மொழியாக இருக்க வேண்டுமெனப் பிரகடனப் படுத்தியுள்ள அதே வேளையில் இலங்கை அரசாங்கம் வெளித் தோற்றத்தில் பாரபட்சமின்றி நடப்பதாகப் பாசாங்கு செய்தாலும், திட்டமிடப்பட்ட நிர்வாக நடவடிக்கை மூலம் பெரும்பான்மையான அரசாங்க வெளியீடுகளிலும், உத்தியோகபூர்வமான படிவங்களிலும் வேண்டுமென்றே தமிழைப் புறக்கணித்துள்ளது. இன் றைய விரோதமான அரசியலமைப்புப் பின்னணியில் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் மட்டுமே தமிழ் மொழியை உத்தியோக மொழியாக்குவ தும், நாட்டின் ஏனைய பாகங்களில் சிங்களத்தை உத்தியோ கமொழி யாக்குவதுமான அரசாங்கத்தின் அறிவிக்கப்பட்ட கொள்கையானது - இறுதியில் இத் தீவிலுள்ள தமிழ் பேசும் மக்களின் கலாசார அடிமைத் தனத்தில் முடிவடையும் என்பதுடன், காலப் போக்கில் இத் தீவின் தொடர்ந்து சுருங்கி வரும் ஓர் இடப்பரப்பினுள் தமிழ் மொழி ஓர் இரண்டாந்தர மொழியாக ஒதுக்கப் படுவதற்கே வழிவகுக்கும் என இம் மகாநாடு நம்புகிறது. எனவே இலங்கை தமிழரசுக் கட்சியின் இம் முதலாவது தேசிய மகாநாடு, இலங்கை சமஷ்டி அமைப்புக்குள் சுயாதீன மான, மொழிவாரியான ஒரு தமிழரசைக் காலதாமதமின்றி நிறு வினாலன்றி, இத் தீவில் தமிழ் பேசும் மக்களுக்கோ, அவர்களது மொழிக் கோ அல்லது கலாசாரத்திற்கோ கௌரவமான எதிர்காலமொன்றை உறுதி செய்ய முடியாது என்பதை உணரும்படி தமிழ் பேசம் மக்களை அழைக்கிறது.



அரசாங்கத்தின் காணி அபிவிருத்திக் கொள்கையும், குடியேற்றத் திட்டக் கொள்கையும் இலங்கையிலுள்ள தமிழ் பேசும் மக்களின் நிலை பேறான வாழ்வுக்கே ஓர் அச்சுறுத்தலாக அமைவதை ஐந்தாவது தீர்மானம் விரித்துரைக்கிறது. அதன் வாசகம்:

> தமிழ் பேசும் மக்கள் பரம்பரை பரம்பரையாக வசித்து வரும் பிரதேசங்க ளுக்கு அவர்கள் பிரிக்க முடியாத உரிமையுடையவர்களாதலால், இலங் கைத் தமிழரசுக் கட்சியின் இம் முதலாவது மாநாடு. கல்லோயா நீர்த்தேக் கத்துக்குட்பட்ட காணியிலும், அத்தகைய வேறு நிலப் பரப்புகளிலும் தனிச் சிங்கள மக்களை மட்டுமே குடியேற்றுவதான அரசாங்கத்தின் வேண்டு மென்றே திட்டமிடப்பட்ட கொள்கையையும், நடவடிக்கையையும் மேற்கூறப்பட்ட இந்த அடிப்படை உரிமையை மீறும் தன்மையது எனவும் இலங்கையில் தமிழ் பேசும் இனத்தின் நிலை பேறான வாழ்வையே நிர்மூலம் செய்வதான திட்டமிடப்பட்ட ஒரு தாக்குதல் எனவும் கண்டிக்கிறது. இன்றைய அரசியலமைப்புத் திட்டத்தின் கீழும், தவிர்க்க முடியாத அழிவு இலங்கையிலுள்ள தமிழ் பேசும் மக்களை எதிர் நோக்கியிருக்கிறது என்பதை உணர்ந்து, இம் முதலாவது தேசிய மகாநாடு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கொடியின் கீழ் அணிதிரளுமாறும், இலங்கையில் ஒரு சமஷ்டி முறை அரசியலமைப்பினைக் காலதாமதமின்றி நிறுவுவதன் மூலம் இத்தீவில் உள்ளவர்களுக்கும் அவர்களின் சந்ததியினருக்குமென சுதந்திரத்தையும், சுயமரியாதையையும் வென்றெடுக்குமாறும் இலங்கையிலுள்ள எல்லாத் தமிழ் பேசும் மக்களையும் அழைக்கிறது.

ஆறாவது தீர்மானம் இலங்கையின் தேசியக் கொடி பற்றியது. ஏழாவது தீர்மானம், தமிழரசு நிறுவப்படும் பகுதிகளில் வாழும் முஸ்லிம்கள், சிங்களவர் ஆகியோரின் தனித்துவமும் உரிமைகளும் மதிக்கப்படுவதற்கான உத்தர வாதத்தை அளிப்பதோடு அதற்குத் தேவையான ஒழுங்குகளையும் செய்கின்றது. உறுதி மொழி இது தான்:

மக்களில் ஏதேனும் ஒரு பிரிவினருக்கு, மற்றவர்களைக் காட்டிலும் மேலான மாகாண ரீதியான அல்லது பொருளாதார ரீதியான அனுகூலம் அல்லது வாய்ப்பு எதுவும் கிடைக்காதவாறு, சுயாதீனமான மொழிவாரித் தமிழ் அரசின் அரசியலமைப்புத் திட்டத்தில் (எப்பிரிவினரினதும்) ஆதிக்கமின்மை என்ற கோட்பாட்டைத் தமிழ் மக்கள் போற்றிப் பேணுவர் என்ற உறுதிமொழியை இத்தால் அறிவிக்கிறது.

அந்த உறுதி மொழியைச் செயல்படுத்தும் வகையில் சில இலட்சியங்கள் அரசியலமைப்புச் சட்டத்தில் சேர்க்கப்படும் என்றும் அத்தீர்மானம் கூறியது. அந்த இலட்சியங்கள்:

1. சுவிற்சர்ந்தில் உள்ளதைப் போன்ற "சுயாட்சி" (கன்ரன்) அமைப்புக்களை அமைத்து முஸ்லிம்களினதும், சிங்களவர்களினதும் தனித்துவத்தைப் பேணுதல்.
2. மதச் சார்பற்ற அரசு என்ற அடிப்படையை ஏற்றுக் கொள்ளல்.
3. ஜனநாயக நெறிகளைச் சேர்த்துக் கொள்ளுதல்.

தமிழரசுக் கட்சியையும் எஸ். ஜே. வி. யையும் பொறுத்த வரையில் திருமலை மகாநாடு மிகவும் முக்கியமானது. இலங்கைத் தமிழ் மக்களின் அரசியல் நோக்கிலும் போக்கிலும் புதிய திருப்பத்தை அம் மகாநாடு ஏற்படுத்தியது. மத்திய அரசியலில் கூடிய பிரதிநிதித்துவம் பெறுவது பற்றியும் அதிக பங்கைப் பெறுவது பற்றியுமே சிந்தித்து வந்த தமிழ் மக்களின் சிந்தனையில் புதிய மாற்றம் ஏற்பட்டது.



நடைமுறைப் படுத்த முடியாத, நடைமுறைக்கு ஒவ்வாத தீர்வுகளைப் பெறும் முயற்சிகளைக் கைவிட்டு நடைமுறைப்படுத்தக் கூடிய தீர்வுத் திட்டம் ஒன்று மக்கள் முன் முதன் முறையாக வைக்கப்பட்டது. திம்புக் கோட்பாடுகளுக்கும் தமது பிரச்சினைக்கு இறுதித் தீர்வாக தமிழ் மக்கள் வலியுறுத்தும் தத்துவங்களுக்கும் அடித்தளம் அமைத்தது

தேசிய இனம்

தமிழர் தாயகம்

சுயாட்சி

சுயநிர்ணய உரிமை

ஆகிய கோட்பாடுகளை வகுத்தது திருமலை தீர்மானங்கள்தான்.

**சமஷ்டிச் சர்ச்சை**

செல்வநாயகத்தின் அரசியல் உயர்ச்சிக்கு வழி வகுத்தது இந்தச் சமஷ்டித் தீர்வுத் திட்டம் தான். இப் புதிய தீர்வை கடுமையாக எதிர்த்து பழைய போக்கையே இறுகப் பற்றிக் கொண்டிருந்தமையே ஜி.ஜி.பொன்னம்பலத்தின் செல்வாக்குச் சரிந்தமைக்குக் காரணம். 1950 ஆகஸ்ட் 20 இல் கொக்குவில் இந்துக் கல்லூரியில் ஒரு பொதுக் கூட்டம் நடந்தது. அக் கூட்டத்தில் பேசிய கடற்றொழிலபிவிருத்தி, கைத்தொழில் அமைச்சர் ஜி. ஜி. பொன்னம்பலம் எஸ். ஜே. வி. க்.குச் சவால் விடுத்தார். சமஷ்டி ஆட்சி முறை பற்றி விவாதத்துக்'கு வருவாரா? எஸ். ஜே. வி. யிடம் பத்திரிகையாளர்கள் கேட்டார்கள். ஜி. ஜி. யின் பொது மேடை விவாத அழைப்பை ஏற்பீர்களா? எஸ். ஜே. வி. மெதுவாக, இழுத்து இழுத்துச் சொன்னார். உந்த விவாதத்தாலை ஒரு பயனும் ஏற்படாது. உதெல்லாம் பொது மக்களிடையே செல்வாக்குப் பெற போடுகின்ற குண்டுகள். ஆனால். அது அரசியல் கொள்கை பற்றிய விவாதமாக இருப்பதால் ஏற்றுக் கொள்கிறேன். நான் ஏற்றுக் கொள்கிறேன் என்று பேப்பரிலை போடுங்க அதன் பின்பு சவால் பேச்சே எழவில்லை. சமஷ்டி ஆட்சி முறையைத் தாக்குவதற்கு இரண்டு வாதங்களை ஜி. ஜி. மக்கள் முன் வைத்தார்.

1. வடக்கு, கிழக்கு மாகாணங்களைக் கொண்ட தமிழரசு பொருளாதார ரீதியில் சாத்திய மற்றது.
2. எஸ். ஜே. வி. யின் தமிழரசு யோசனை பிரிவினையில் கொண்டு போய் விடும்.

........ ........ ........

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அந்த இரண்டு வாதங்களையும் மறுத்துரைத்தார் எஸ். ஜே. வி. தன் காலில் நிற்கும் பொருளாதார பலம் தான் கோரும் தமிழரசுக்கு உண்டு என்றார். பிரிவினையைத் தடுப்பதற்கேசமஷ்டி ஆட்சி முறையைப் பல நாடுகள் ஏற்றுள்ளன எனவும் சமஷ்டி ஆட்சி முறை பிரிவினைக்கு வழி வகுத்தமைக்கு வரலாற்றிலேயே உதாரணம் எதுவும் இல்லை எனவும் கூறினார். ஜி. ஜி.- எஸ். ஜே. வி. பிரச்சாரப் போர் முடிவடைந்து கொண்டிருக்கையில் சிங்கள அரசியலில் திடீர் திருப்பமொன்று ஏற்பட்டது.

திருமலை மகாநாடு நடந்து சரியாக மூன்று மாதங்களில் (1951 ஜுலை 12) எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா மந்திரி சபையிலிருந்தும் யு. என். பி யிலிருந்தும் வெளியேறினார். இந்தப் பதவி துறப்பு இலங்கை அரசியலை வெகுவாகப் பாதித்தது.

பிரதம மந்திரி டி. எஸ். சேனநாயக்கா 1951 அக்டோபர் முற்பகுதியில் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தார். சேனநாயக்காவின் விஜயத்தைப் பகிஷ்கரிக்கக் கோரி தமிழரசுக் கட்சியினர் நடத்திய கூட்டமும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டமும் வெற்றியளிக்க வில்லை. சில கறுப்புக் கொடிகளைக் கட்டவும் சில சுலோக அட்டைகளை வைக்கவுமே அவர்களால் முடிந்தது. பொது மக்களிடையே எதிர்ப்புணர்வை ஏற்படுத்த அவர்களால் முடியவில்லை. ஜி. ஜி. தன் செல்வாக்கைப் பயன் படுத்தி பிரமாண்டமான வரவேற்பு ஒன்றை ஒழுங்கு செய்தார். பெரிய சிகரம் கட்டி, வாழை, மாவிலை, தோரணம் கட்டி மேள தாளத்துடன் வரவேற்புக் கொடுக்கப்பட்டது.

அந்த வரவேற்புக்குப் பதிலளித்து பேசிய பிரதம மந்திரி சமஷ்டிக் கோரிக்கையைப் பிரிவினைக் கோரிக்கை என்று குறிப்பிட்டார். ஒன்றுபட்டால் அனைவருக்கும் வாழ்வு. ஒற்றுமை நீங்கின் யாவருக்கும் தாழ்வு. எனவே, நாம் ஒன்றுபட்டு வாழ்வோம் என்று முழங்கினார் டி. எஸ். தட்டோ தட்டென்று கை தட்டி அக் கூற்றை வரவேற்றார்கள் அங்கு குழுமியிருந்த தமிழ்க் குடி மக்கள்.

தமிழரசுக் கோரிக்கையை பிரிவினைக் கோரிக்கையாக சிங்கள மக்களுக்குப் போதித்த முதலாவது தலைவர் டி. எஸ். அவர்கள் தான். டட்லி சேனநாயக்காவும், ஜே. ஆர். ஜெயவர்த்தனாவும் அப்பிரச்சாரத்தைத் தொடர்ந்து நடத்தினர். அதன் தாக்கம் இன்றும் சிங்கள மக்களிடையே காணப்படுகின்றது.

அது மட்டுமல்ல, டி. எஸ். சேனநாயக்க எதிர்ப்புக் கூட்டத்தில் வடக்கு, கிழக்கு மாகாணங்களை தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய தாயகமாக தந்தை செல்வா விவரித்தார். அப் பிரதேசங்களில் சிங்கள



மக்கள் குடியேற்றப்படுவதைக் கண்டித்தார். அப் பேச்சுக்குச் சிங்களத் தலைவர்கள் தப்பான அர்த்தத்தைக் கற்பித்தனர். வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்குச் சுயாட்சி கிடைத்ததும் அங்கு வாழும் சிங்கள மக்கள் வெளியேற்றப்பட வேண்டும் என்று தந்தை செல்வா சொன்னதாகச் சிங்களப் பகுதிகளில் திரித்துக் கூறப்பட்டது. தமிழரசுக் கட்சியின் உண்மையான நிலைப்பாட்டை விளக்கி 1950 அக்டோபர் 4ம் திகதி தந்தை செல்வா அறிக்கை ஒன்றை விடுத்தார். அதில் தந்தை சொன்னது இது:

> "தமிழ் பேசும் பகுதிகளில் சிங்களம் பேசும் மக்களை திட்டமிட்டு அரசு குடியேற்றுவதையே நாங்கள் எதிர்க்கிறோம்".

1950ம் ஆண்டில் சிங்களக் குடியேற்றம் ஒரு பெரும் பிரச்சினையாக வளர ஆரம்பித்து விட்டது. கல் ஓயாத் திட்டம் தீவிரமாக அமுல் நடத்தப்பட்ட காலகட்டம் அது. மலை நாட்டுத் தமிழ் மக்களின் பிரஜாவுரிமை பறிப்பதன் மூலமும் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தின் மூலமும் தமிழ் பேசும் மக்களின் பலத்தைக் குறைப்பதற்கான முயற்சிகளில் டி.எஸ். ஈடுபட்டிருந்த சமயம் அவருக்கு எதிரான உணர்வு அவர் உருவாக்கிய யு. என். பி. க்குள் வளர்ந்து கொண்டிருந்தது. அதே சமயம் நாட்டிலும் டி.எஸ். சேனநாயக்காவினதும் யு. என்.பி. யினதும் ஆட்சி முறைக்கு எதிரான உணர்வு வலுத்துக் கொண்டிருந்தது. இலங்கையின் சுதந்திரம் பூரணப் படுத்தப்படவில்லை என்ற உணர்வே அது. வெள்ளையன் நடத்திய ஆட்சியை கறுப்பு வெள்ளையர்கள் நடத்துகின்றனர் என்ற உணர்வு சிங்கள மக்களிடையே வளர்ந்து கொண்டிருந்தது. சிங்கள மொழி, பௌத்த மதம், சிங்கள மொழிக் கல்வி, ஆயுள்வேத வைத்திய முறை, சிங்கள கலாச்சாரம் ஆகியவற்றுக்கு முதலிடம் கொடுக்கவேண்டும் என்ற உணர்வே அது.

இதனால் தமிழ் பேசும் மக்களுக்கு வரக்கூடிய ஆபத்தை எஸ். ஜே. வி. உணர்ந்தார். அந்த ஆபத்தைத் தடுப்பது எப்படி? அரசியல் ரீதியான நடவடிக்கை எதையும் எடுப்பதற்கான சந்தர்ப்பம் எதுவுமிருக்கவில்லை. ஜி. ஜி. யின் செல்வாக்கு மிகுந்திருந்தது. தமிழரசுக் கட்சிக்கு மக்களிடையே போதிய செல்வாக்கு வளரவில்லை. தமிழரசுக் கட்சிக்கு ஒரேயொரு வழி தான் தென்பட்டது. தமது சமஷ்டிக் கொள்கைக்கு சிங்கள மக்களிடையே வரவேற்பு உண்டா என்பதைச் சோதித்துப் பார்ப்பதே அது.

1951 மார்ச் 14ல் செனட் சபையில் டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் பிரேரணை ஒன்றைச் சமர்ப்பித்தார். மொழி அடிப்படையில் உருவாக்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கப்படும் இரண்டு அரசுகளைக் கொண்ட சமஷ்டி அமைப்பொன்றை இலங்கையில் உருவாக்குவது பற்றி ஆராய்வதற்காக அரசியல் நிர்ணய சபை ஒன்றை அமைக்க வேண்டும் என்று அப் பிரேரணை கூறியது. பிரேரணை தோல்வி கண்ட போதிலும் தனது நிலைப்பாட்டை எடுத்துக் கூறுவதற்கு அப்பிரேரணை மீதான விவாதம் தமிழரசுக் கட்சிக்கு நல்ல சந்தர்ப்பம் ஒன்றை ஏற்படுத்திக் கொடுத்தது.

தமிழரசுக் கட்சியின் கருத்துக்களைப் பிரபல்யமடையச் செய்வதற்கு 1951 இறுதிப் பகுதியில்எஸ். ஜே. வி. க்கு மற்றொரு சந்தர்ப்பம் கிடைத்தது. ஜி. எஸ். என் கொடக்கன் பிள்ளையின் வழக்குத் தான் அது. அவருடைய பெயர் தேர்தல் இடாப்பிலிருந்து நீக்கப்பட்டதை ஆட்சேபித்து தேர்தல் இடாப்பு பதிவதிகாரி மதனாய்க்காவுக்கு எதிராக அவர் வழக்குத் தொடுத்தார். கேகாலை மாவட்ட நீதிபதி என். சிவஞான சுந்தரத்தினால் அவ்வழக்கு விசாரிக்கப்பட்டது. 1948ம் ஆண்டின் இலங்கை பிரஜாவுரிமைச் சட்டமும்1949ம் ஆண்டின் இந்திய, பாகிஸ்தானிய (வதிவோர்) பிரஜாவுரிமைச் சட்டமும் செல்லுபடியாகாது எனவும் 1946ம் ஆண்டின் இலங்கை (பாராளுமன்றத் தேர்தல்கள்) கட்டளைச் சட்டமே செல்லுபடியாகும் எனவும் சிவஞானசுந்தரம் தனது தீர்ப்பில் கூறினார். அத்தீர்ப்பை எதிர்த்து அட்டோர்னி ஜெனரல் சர் அலன்ரோஸ் சுப்ரீம் கோட்டுக்கு அப்பீல் செய்தார். அப்பீல் விசாரணையின் போது அரச சார்பில் அலன் ரோஸ் ஆஜரானார். கொடக்கன் பிள்ளையின் சார்பில் தந்தை செல்வா வாதாடினார். எஸ். நடேசன் அவருக்கு உதவினார். சிவஞானசுந்தரத்தின் தீர்ப்பு சட்டத் தவறைக் கொண்டிருப்பதாக அலன் ரோஸ் வாதாடினார்.

**நீதிமன்றில் நம்பிக்கை இழப்பு**

தந்தை செல்வா இரண்டு வாதங்களை முன் வைத்தார். முதலாவது வாதம் இது: இலங்கை பிரஜாவுரிமைச் சட்டம் வெளிப்படைக்கு இலங்கை தனது பிரஜைகள் யார் என்பதை நிர்ணயிப்பதைத் தன் நோக்கமாகக் கொண்டிருக்கின்ற போதிலும் வேறு உள்நோக்கத்தைக் கொண்டிருக்கிறது. இந்தியத் தமிழர்களின் பிரஜாவுரிமையைப் பறிப்பதே அது. இந்த உள் நோக்கத்தை நிருபிப்பதற்கு மூன்று சத்தியக் கடதாசிகளை அவர் தாக்கல் செய்தார். முதலாவது சத்தியக் கடதாசி பெரி சுந்தரத்தினது. முதலாவது, பாராளுமன்றத்தில் அவர் பாராளுமன்றத்தினால் தெரிவு செய்யப்பட்ட செனட்டராக இருந்தார். அரசாங்க சபை காலத்தில் அமைச்சரவை உறுப்பினராகவும் இருந்தவர். இலங்கை



இந்தியக் காங்கிரஸ் எம். பி. க்களாக இருந்த சௌமியமூர்த்தி தொண்டமான், எஸ். எம். சுப்பையா ஆகியோர் மற்ற சத்தியக் கடதாசிகளைக் கொடுத்தனர். அச்சத்தியக் கடதாசிகளில் இலங்கை பிரஜாவுரிமைச் சட்டம் இயற்றப்படுவதற்கு முன்பு குடியுரிமை பெற்றிருந்த இந்தியத் தமிழர்களின் தொகை இலங்கை இந்தியக் காங்கிரசுக்கிருந்த பாராளுமன்றப் பிரதிநிதித்துவம் ஆகிய தகவல்கள் அடங்கியிருந்தன.

தந்தை செல்வாவின் இரண்டாவது வாதம் இது: 1949ம் ஆண்டின் இலங்கை (பாராளுமன்றத் தேர்தல்கள்) திருத்தச் சட்டத்தின் 3 (1) (ஆ) பிரிவை 1948ம் ஆண்டின் இலங்கை பிரஜாவுரிமைச் சட்டத்துடன் சேர்த்து வாசித்தால் அது சோல்பரி அரசியல் சட்டத்தின் 29வது பிரிவை மீறுவதாக அமைகிறது என்பது. இந்தஅரசியல் சட்டப் பிரிவு சிறுபான்மை மக்களின் உரிமைகளை பாதுகாப்பதற்காக சேர்க்கப்பட்டது. அவ் வழக்கை மூன்று நீதியரசர்கள் விசாரித்தனர். நீதியரசர்கள் ஈ. ஜி. பி. ஜயதிலக (சிங்களவர்) எம். எவ். எஸ். புள்ளே (இலங்கைத் தமிழர்) வி. எல். சென். கிளயர் சுவான் (பறங்கியர்) ஆகியோரே அவர்கள். இலங்கை பிரஜாவுரிமைச் சட்டமும் இந்தியப் பாகிஸ்தானிய (வதிவோர்) பிரஜாவுரிமைச் சட்டமும் செல்லுபடியானவை என்று மூன்று நீதியரசர்களும் ஒரு மனதாகத் தீர்ப்பளித்தனர். அவர்கள் தமது தீர்ப்பில் ஒரு சட்டத்தின் வெளி நோக்கத்தையே நீதிமன்றம் கணக்கிலெடுக்கும் எனவும் உள் நோக்கத்தைக் கணக்கில் கொள்ளாது எனவும் கூறினார். ஒரு சட்டம் முறையாக, அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு அமைவாக இயற்றப்பட்டுள்ளதா என்பதை மட்டுமே நீதிமன்றம் கணக்கில் கொள்ளுமென்றும் அதைச் செயற்படுத்தும் போது ஏற்படுத்தும் விளைவுகளை நீதிமன்றம் கவனத்தில் கொள்ளாதென்றும் அவர்கள் தீர்ப்பளித்தனர். அத்துடன் முக்கியமான வழக்குகளில், அரசியல் நிர்வாகத்திற்குப் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய தீர்ப்புக்களை அளிக்க நீதிமன்றம் தயங்கும் என்ற கருத்தும் தீர்ப்பில் உட்கிடையாகக் காணப் படுகின்றது.

சோல்பரி அரசியலமைப்புச் சட்டத்தின் 29ம் பிரிவு கொடுக்கும் பாதுகாப்பை தமிழ் மக்களுக்குக் கொடுக்க நீதிமன்றம் தயங்குகிறது என்ற உண்மையை கொடக்கன் பிள்ளை வழக்குத் தீர்ப்பு தெளிவாகக் காட்டியது.

1952ல் நாட்டின் அரசியல் நிலைமைகளில் பெரு மாற்றம் ஏற்பட்டது. பிரதமர் டி. எஸ். சேனநாயக்கா வழக்கம் போல 1952 மார்ச் 21ம் திகதி காலிமுகத் திடலில் குதிரைச் சவாரி செய்து கொண்டிருந்தார். அவருக்குப் பக்கத்தில் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் சர். ரிச்சார்ட்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அலுவிகாரையும் குதிரையில் சென்று கொண்டிருந்தார். டி. எஸ். இன் குதிரை திடீரென வேகமாக ஓட ஆரம்பித்தது. டி. எஸ். உருண்டு விழுந்தார். நிலத்தில் இரண்டு தடவை குத்துக்கரணம் போட்டு ஒரு பக்கமாகச் சாய்ந்து கிடந்தார். விழுந்த போது போன நினைவு திரும்ப வேயில்லை. சோல்பரி பிரபு டி. எஸ். இன் மகன் டட்லி சேனநாயக் காவை பிரதமராக நியமித்தார். நீண்டகாலமாக நீரிழிவு நோயாளியாக இருந்த டி. எஸ். தனக்குப் பின் டட்லியைப் பிரதமராக்கும்படி சோல்பரி பிரபுவுக்கு ஏற்கெனவே சொல்லி வைத்திருந்ததாகக் கதை உலவியது. தன்னைப் பிரதமராக்காமல் டட்லியைப் பிரதமராக்கியதில் சர். ஜோன் கொத்தலாவலைக்குப் பெரும் கோபம். அதுவும் டட்லியை ஆதரித்த ஜி. ஜி., சர். ஒலிவர் ஆகியோர் மீது கடும் கோபம். பிரிமியர் ஸ்டெக்ஸ் (பிரதமர் குதிரைப் பந்தயம்) என்ற சிறுநூலை அவர் எழுதி வெளியிட்ட தாகவும் பேச்சடிபட்டது. தான் எழுதவில்லை என்று சர். ஜோன் மறுத்து விட்ட போதும் அவரின் வேலைதான் அது என்று பல அரசியல் வாதிகள் கூறினர்.

தந்தை திடீரென இறந்ததால் ஏற்பட்ட அனுதாப அலையைத் தனக்குச் சாதகமாக்கும் நோக்குடன் தேர்தலை நடத்த முடிவு செய்தார் டட்லி. தேர்தலில் போட்டியிட தமிழரசுக் கட்சி முடிவு செய்தது. ஏழு தொகுதிகளில் வேட்பாளர்களை உத்தியோக பூர்வமாக நிறுத்தினர். மட்டக்களப்புத் தொகுதியில் ஆர். பி. கதிர்காமரும் கல்குடா தொகுதி யில் சிவஞானமும் கட்சி அனுதாபிகளாக நிறுத்தப்பட்டனர்.

தனது தேர்தல் பிரச்சாரத்தின் போது டட்லி அரசை ஆதரிக்கும் தனது போக்கிற்கு ஜி. ஜி. ஆதரவு கேட்டார். யாழ்ப்பாணத்தில் ஏப்பிரல் 16ல் நடத்தப்பட்ட கூட்டத்தில் நாங்கள் சிங்கள மக்களுடன் ஒத்துழைக்க வேண்டுமா அல்லது பகைவர்களாக வாழ வேண்டுமா? என்ற கேள் வியை ஜி. ஜி. கிளப்பினார். டட்லி சேனநாயக்கா அரசுடன் ஒத்து ழைப்பதே சிறந்தது என்று அறிவித்தார்.

தமிழரசுக் கட்சியினர் ஏப்ரல் 18ல் யாழ்ப்பாணத்தில் தேர்தல் பிரச்சாரத்தை ஆரம்பித்தனர். கூட்டத்துக்குத் தலைமை வகித்த எஸ். ஜே. வி. சொன்னார். "இத் தேர்தலை சர்வஜன வாக்குரிமைக்கு மாற் றாக நாம் கொள்ளலாம். தமிழ் மக்கள் தாம் நிறுத்தியுள்ள எல்லா வேட் பாளர்களையும் தேர்ந்தனுப்பினால் தமிழ் மக்கள் தம் விடுதலை வேட்கையை விளம்பரப்படுத்திவிட்டனர் என்பதை சிங்கள மக்களும் உலகமும் உணர்ந்து விடும்"! என்று. கொழும்பில் நடந்த கூட்ட மொன்றில் வவுனியா எல்லையில் சிங்களக் குடும்பங்கள் குடியமர்த்தப் படுகின்றன. என்று தமிழரசுக் கட்சியின் இளம் பேச்சாளரான அமிர்த



லிங்கம் சொன்னார். பொய்! பொய்! என்று கத்தினர் கூட்டத்தில் இருந்த சிலர். பொய் இல்லை, மெய் என்று கத்தினர் மற்றவர்கள். மோதலைத் தவிர்க்க தந்தை செல்வா தலையிட நேரிட்டது.

யாழ்ப்பாணம் முஸ்லிம் வட்டாரத்திலும் தமிழரசுக் கட்சி ஒரு கூட்டத்தை நடத்தியது. அப்போது வன்னியசிங்கம் முகமது அலி ஜின்னா பாகிஸ்தான் கோர வேண்டிய நிற்பந்தத்திற்குள்ளானதை விவரித்தார். இலங்கையிலும் அத்தகைய நிலை தோன்றக் கூடும். தமிழ் பேசும் மக்களின் நியாயமான கோரிக்கைகளுக்குப் பெரும்பான்மை சமூகத்தினர் செவிசாய்க்கா விட்டால் பிரிவினை கோரும் நிலைமை தோன்றத்தான் செய்யும் என்றார் அவர்.தந்தை செல்வாவையும் தமிழரசுக் கட்சியையும் ஜி. ஜி. கடுமையாக விமர்சித்தார். கட்சியின் பெயசரைத் தமிழரசுக் கட்சி என்று வைத்திருக்கிறார்கள். அது சமஷ்டி அரசின் ஓர் அங்கமாக இருக்கும் என்கிறார்கள். தமிழரசு என்றால் தனியரசு. அது எப்படி சமஷ்டியின்அங்கமாக இருக்கும்? என்று கேலி செய்தார்.

காங்கேசன்துறைத் தொகுதியில் நடேசன் அரசியல் வாதங்களை அதிகம் கிளப்பவில்லை. தான் சர் பொன்னம்பலம் இராமநாதனின் மருமகன் என்பதையும் பரமேஸ்வராக் கல்லூரி அதிபர் என்பதையும் நினைவு படுத்திப் பிரச்சாரம் செய்தார் நடேசன். நடேசனுக்கு வெற்றி கிடைத்தது. தந்தை செல்வா தோல்வி கண்டார். கோப்பாயில் வன்னிய சிங்கமும் திருமலையில் இராஜவரோதயமும் மட்டுமே வெற்றி பெற்றனர். தமிழரசுக் கட்சிக்குக் கிடைத்த மொத்த வாக்குகள் 45, 331. மட்டக்களப்பில் கதிர்காமரும் கல்குடாவில் சிவஞானமும் வென்றனர். அடுத்த நாளே யு. என். பி. க்குத் தாவினர் கதிர்காமர். கொஞ்ச நாட்கள் பொறுத்துப் பாய்ந்தார் சிவஞானம். தமிழரசுக் கட்சி தொலைந்து விட்டது என்றார்கள். தமிழரசுக் கட்சியினரையும் சோர்வு தழுவியது.

சுதந்திர இலங்கையின் முதலாவது பாராளுமன்றத்தின் பதவிக் காலம் 1948 பெப்ரவரி முதல் 1952 மார்ச் வரை. "தமிழ் பேசும் மக்களின் வரலாற்றைப் பொறுத்த வரை முதலாவது பாராளுமன்ற காலம் மிகவும் முக்கியமானது.

தமிழ் மக்களின் சுயாட்சிக் கோரிக்கை முன் வைக்கப் பட்டது இக் காலப் பகுதியில் தான். முதலாவது பாராளுமன்ற காலத்தில் தந்தை செல்வா மிகவும் தெளிவாக எடுத்துரைத்த விடயங்கள் இவை: தமிழ் மக்கள் ஒரு தேசிய இனம். தேசிய இனத்துக்குத் தேவையான மொழி, பாரம்பரிய தாயகம், ஆகியவை அவர்களுக்குண்டு. தமிழ் தேசிய இனத்தில் தமிழ் மொழி பேசும் எல்லா மக்களும் அடங்குவர் என்பதை அவர் தெளிவாகக் கூறினார்".

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**தேசிய இனம்**

1952 ஆகஸ்ட் 24ல் யாழ்ப்பாணக் கல்லூரியில் ஆற்றிய உரையில் தந்தை செல்வா சொன்னது இது:

> 1915ம் ஆண்டில் சென். தோமஸ் கல்லூரியில் நான் படிக்கப் போன போது சிங்கள மக்கள் ஓர் இனமாக வாழவில்லை. ஆனால், இன்று அவர்கள் ஒரு தேசிய இனமாக வளர்ந்து விட்டனர். வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழும் நாங்களும் மனித சமுதாயத்தின் அதியுயர்ந்த வளர்ச்சிக் கட்டமான தேசிய இன அந்தஸ்தை அடையவேண்டும்.

அன்று தமிழ் மக்கள் தம்மை ஒரு தேசிய இனமாகக் கருதியதில்லை. யாழ்ப்பாணத்தான். மட்டக்களப்பான். வன்னி நாட்டான். மலை நாட்டான். கொழும்புத் தமிழன். கிறிஸ்தவத் தமிழன். என்றுதான் தமிழ் மக்கள் தம்மைப் பார்த்தார்கள். குழு நோக்கே உயர்ந்து நின்றது. தமிழ் மக்கள் யாவரையும் ஒற்றுமைப் படுத்த, தமிழன் என்ற உணர்வை ஊட்டி, தமிழ் தேசியத்தை உருவாக்குவதை தந்தை செல்வா தன் தலையாய பணியாகக் கொண்டார்.

இலங்கையின் இரண்டாவது பாராளுமன்றக் காலத்தில் அந்த இலட்சியத்தை அவரால் அடைய முடிந்தது. 1952 மே முதல் 1956 ஏப்ரல் வரையுள்ள அந்தக் காலப் பகுதியில் சிங்கள மக்கள் மத்தியில்உருவான சூழல் அதற்கு உதவியது. 1953 ஆகஸ்ட் ஹர்த்தாலின் பங்கு மிகவும் முக்கியமானது. யு. என். பி. அரசாங்கம் மிகவும் ஸ்திரமான அரசாங்கம் என்ற எண்ணத்தை மக்கள் மனதிலிருந்து அகற்றியது அந்த ஹர்த்தால் தான். அக்டோபர் 3ம் திகதி டட்லி சேனநாயக்கா பிரதமர் பதவியி லிருந்து இராஜினாமாச் செய்தார். சர், ஜோன். கொத்தலாவலை பிரதம மந்திரியாக்கப்பட்டார். டட்லியின் மந்திரி சபையில் பதவி வகித்த வர்களை மந்திரிகளாக நியமித்தார். ஆனால், ஒரு வாரத்தில் இரண்டு அமைச்சர்களை பதவி நீக்கம் செய்தார். அவர்களில் ஒருவர் ஜி.ஜி. பொன்னம்பலம். டி. எஸ். சேனநாயக்கா இறந்த பின் டட்லியைப் பிரதமராக்குவதற்கு உழைத்தவர்களில் ஜி. ஜி. முக்கியமானவர். அதற்குப் பழி தீர்த்து விட்டார் சர். ஜோன். ஆனால், சர் ஜோன் ஒன்றைக் கவனத்தில் கொள்ளவில்லை. ஜி. ஜி. யின் கையைப் பலவீனப் படுத்தினால் எஸ். ஜே. வி. யின் கை ஓங்கும் என்பதே அது.

1952 தேர்தல் முடிவாலும் 1953 மே 18 தேர்தல் வழக்குத் தீர்ப்பாலும் மிகவும் பாதிக்கப்பட்டிருந்த தந்தை செல்வாவிற்கு ஜி. ஜி.யின் பதவி



நீக்கம் ஒரு ரொனிக்காக அமைந்தது. 1952 தேர்தலில் காங்கேசன்துறைத் தொகுதியில் எஸ். நடேசன் வெற்றி பெற்றார். அத் தேர்தலை ஆட் சேபித்து எஸ். ஜே.வி.தேர்தல் வழக்கொன்றைத் தாக்கல் செய்தார். அவ்வழக்கு நீதியரசர் சுவான் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது. ஆனால். நீதியரசர் சுவான் வழக்கை விசாரிக்க விரும்பவில்லை. அதனால், நீதியரசர் கே. டி. டீ. சில்வா முன்னிலையில் விசாரணைக்கு விடப்பட்டது. 1954 ஏப்ரல் 21 முதல் ஜுன் 25 வரை விசாரணை தொடர்ந்தது. செல்வநாயகம் நீண்ட நேரம் விசாரிக்கப்பட்டார். தான் ஒரு கிறிஸ்தவர் என்றும் காங்கேசன்துறை வாக்காளர்களில் பெரும்பான்மை யோர் இந்துக்கள் என்றும் சொன்னார்.

| | | |
|---|---|---|
| வழக்கறிஞரின் கேள்வி | : | நீர் கிறிஸ்தவர் என்பதனால் உமது அரசியல் வாழ்க்கை பாதிக்கப்பட்டதா? |
| எஸ். ஜே. வி. | : | இல்லை. நான் கிறிஸ்தவன் என்று தெரிந்து கொண்டு தான் 1947ல் என்னைத் தெரிந் தெடுத் தனர். |
| வழக்கறிஞர் | : | 1947 தேர்தலில் போட்டியிட நீங்கள் தயக்கம் காட்டினீர்களா? |
| எஸ். ஜே. வி. | : | நான் வழக்கமாகக் கொஞ்சம் வெட்கப்படுப வன். அதனால்தான் தயக்கம் காட்டினேன். |
| வழக்கறிஞர் | : | நீங்கள் புரட்சியில் நம்பிக்கை உள்ளவரா? |
| எஸ். ஜே. வி. | : | இல்லை. அரசியல் சட்ட முறைப்படி நடப்ப தில் நம்பிக்கை உள்ளவன். |
| வழக்கறிஞர் | : | அரசியல் சட்டத்தை எதிர்த்து பிரச்சாரம் செய் கிறீர்களே? |
| எஸ். ஜே. வி. | : | சோல்பரி அரசியல் சட்டம் குறைபாடுகளைக் கொண்டது. அதனால்தான் அரசியல் சட்டத் தை திருத்த வேண்டு மென்று சொல்லுகின்றேன். தான் சில கொள்கைகளை அடைஅரசியல் நடத்து வதாக எஸ். ஜே. வி.சொன்னார். |
| வழக்கறிஞர் | : | உங்களை அமைச்சராக்க முயற்சி செய்யப் பட்டதா? |

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எஸ். ஜே. வி : 1947 தேர்தல் முடிந்ததும் டி.எஸ் சேனநாயக்க மந்திரி சபையில் என்னைச் சேர்க்க எனது நண்பர் எச்.வி.பெரேரா(பிரபல வழக்கறிஞர்) முயற்சி எடுத்தார். நான் இணங்கவில்லை. தமிழ் காங்கிரஸ் அரசாங்கத்தில் சேரும்போது தன்னையும் மந்திரி பதவியை ஏற்கும் படி கேட்டதாகவும் தான் இணங்கவில்லை எனவும் சொன்னார்.

வழக்கறிஞர் : ஏன்?

எஸ். ஜே. வி. : அரசில் சேர்ந்தால் என் கொள்கையை விட்டுக் கொடுக்க வேண்டி வரும். அதற்கு நான் தயாரில்லை. எஸ். ஜே. வி.க்கு மந்திரி பதவி வழங்கப் படாததன் காரணமாகவே அவர் ஜி. ஜி. பதவியை ஏற்பதை எதிர்த்ததாக வழக்கறிஞர் கூற முற்பட்டார்.எஸ்.ஜே.வி.அதைவன்மையாக எதிர்த்ததோடுகொள்கைதான்தனக்கு முக்கிய மானதுஎன்று சொன்னார்.

விசாரணையின் போது தமிழ் அரசு என்ற சொற்றொடர் பற்றியும் எஸ். ஜே. வி. யிடம் கேட்கப்பட்டது. தமிழ் அரசு என்பது தனி நாட்டைக் குறிக்காது என்று சொன்னார். நீதியரசர் டீ. சில்வா வழக்கைத் தள்ளுபடி செய்தார். வழக்குச் செலவு தொகையாக 40,000 ரூபா கட்டும் படி தீர்ப்பளிக்கப்பட்டது. அந்தக் காலத்தில் 40,000 ரூபா பெரிய தொகை. இன்றைய கணக்குப் படி 4 மில்லியன் ரூபாவுக்குச் சமன்.

இத் தீர்ப்பும் ஜி. ஜி. பொன்னம்பலத்தின் தேர்தலுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் அளிக்கப்பட்ட தீர்ப்பும் நீதி நிர்வாகத்தின் மீது எஸ். ஜே.வி. கொண்டிருந்த நம்பிக்கையைப் பாதித்தது. நீதிமன்றத்தின் மூலம் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு நிவாரணம் பெற முடியாது என்ற முடிவுக்குத் தமிழரசுக் கட்சித் தலைவர்கள் வந்தனர். 1952 தேர்தலில் கிடைத்த தோல்வியும் தேர்தல் வழக்கில் கிடைத்த தீர்ப்பும் எஸ். ஜே. வி. யினதும் தமிழரசுக் கட்சியினதும் இலட்சிய வேட்கையைத் தூண்டினவேயல்லாமல் தணிக்கவில்லை.

**தமிழர் ஐக்கியம்**

தமிழ் பேசும் மக்களை ஐக்கியப்படுத்த முடியும் என்றும், தமிழ் தேசிய உணர்வைத் தூண்டி விட முடியும் என்றும் எஸ்.ஜே.வி. திடமாக



நம்பினார். எங்கள் கருத்தை மக்கள் ஏற்பர். எங்கள் கருத்துக்களை மக்களுக்கு எடுத்துரைப்பது எம் பணி. எமது வேலைகளை நாம் தீவிரப்படுத்துவதில் எம் வெற்றி தங்கியுள்ளது என்று எஸ். ஜே. வி. ஒவ்வொரு பொதுச் சபைக் கூட்டத்திலும் தவறாது கூறுவார்.

மக்களைக் கவருவதற்கு அவர் இரண்டு உத்திகளைக் கையாண்டார். முதலாவது மக்களுக்கு தமது கருத்துக்களை எடுத்துரைத்து அவர்களைத் தம் பக்கம் கவருவது. இதைப் பொதுக் கூட்டங்கள் மூலம் செய்தார். அத்துடன் கிராமம் கிராமமாகச் சென்று அங்குள்ளவர்களைச் சந்தித்து கட்சிக் கிளைகளைத் துவக்கினார். மற்றது ஆர்ப்பாட்ட அரசியல். பொதுக் கூட்டங்கள் மூலமும் பிரசாரத்தாலும் மக்களின் மனங்களைக் கவர முடியும். ஆர்ப்பாட்டம் அதிலிருந்து ஒரு படி உயர்ந்தது. மக்களை நேரடியாக ஈடுபடுத்துவது. தமிழரசுக் கட்சியின் முதலாவது ஆர்ப்பாட்டம் பற்றி ஏற்கெனவே குறிப்பிட்டுள்ளேன். சோல்பரி பிரபுவின் யாழ்ப்பாண விஜயத்தை எதிர்த்து நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டம் அது. வெற்றியளித்ததாகக் கூற முடியாது. அடுத்தது, பிரதமர் டி. எஸ். சேனநாயக்காவின் யாழ்ப்பாண விஜயத்தின் போது நடத்தியது. டி. எஸ். சேனநாயக்காவின் விஜயத்தின் போது ஜி. ஜி. பிரமாண்டமான வரவேற்பையும் பொதுக் கூட்டத்தையும் நடத்திக் காட்டினார். இந்த விடயங்களில் ஜி. ஜி. யை எவருமே மிஞ்ச முடியாது. தமிழரசுக் கட்சியின் மூன்றாவது ஆர்ப்பாட்டம் கிழக்கில், "பட்டிப் பளையைக் கல் ஓயாவாக மாற்றாதே" என்று கோஷித்த ஆர்ப்பாட்டம் அது.

நான்காவது ஆர்ப்பாட்டம் 1954ல் பிரதமர் சர். ஜோன் கொத்தலாவலையின் யாழ்ப்பாண விஜயத்தின் போது நடைபெற்றது. சர். ஜோனின் விஜயத்தைப் பகிஷ்கரிப்பதற்கு மூன்று காரணங்களை தமிழரசுக் கட்சி முன் வைத்தது. 1954ம் ஆண்டு எலிசபெத் மகாராணி இலங்கைக்கு விஜயம் செய்தார். அப்பொழுது பாராளுமன்ற, செனற் சபை உறுப்பினர்களைக் கொண்ட கூட்ட மொன்றில் உரையாற்றினார். அதற்கு நன்றி தெரிவித்துப் பேசிய சபை முதல்வர் ஜே. ஆர். ஜெயவர்த்தன சிங்களத்திலும் ஆங்கிலத்திலுமே பேசினார். தமிழ் மொழி புறக்கணிக்கப்பட்டு விட்டது. இரண்டாவது காரணம்: இந்தியத் தமிழர் சம்பந்தப்பட்டது. அப்போது, "கள்ளக் குடியேற்றக்காரர்" என்று சொல்லிப் பொலிஸார் கண்டபடி இந்தியர்களைக் கைது செய்த காலம். கைது செய்யப்படுவோர் தாங்கள் கள்ளக் குடியேற்றக்காரர்களில்லை என்று நிரூபிக்கும் வகையில் சிறையில் அடைக்கத் தக்க விதத்தில் குடிவரவு, குடியகல்வு சட்டத்தைத் திருத்தப் போவதாக சர். ஜோன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பயமுறுத்தினார். மூன்றாவது காரணம் நேரு - கொத்தலாவலை ஒப்பந்தம் சம்பந்தமானது. அவ்வொப்பந்தம் இரண்டு பிரிவுகளைக் கொண்டது. முதலாவது பிரிவின்படி கள்ளக் குடியேற்றத்தைத் தடுக்கும் நோக்கத்துடன் இலங்கையில் வாழும் இந்தியர்களைப் பதிவு செய்ய இணக்கம் காணப்பட்டது. அப்பட்டியலில் பெயர் இல்லாதவர்கள் தாங்கள் கள்ளக் குடியேற்றக்காரர்களல்ல என்று நிரூபிக்க வேண்டும். அடுத்து பிரஜாவுரிமை சம்பந்தமானது. பிரஜாவுரிமை கோரி விண்ணப்பங்கள் இரண்டு வருடங்களுக்குள் பரிசீலனை செய்து முடிக்க இலங்கை அரசு இணங்கியது. இலங்கைப் பிரஜைகளாகப் பதிவு செய்யப்படுவோரின் பெயர்கள் தனியான தேர்தல் இடாப்பில் சேர்க்கப்படும். அவர்கள் நாலு எம். பீ. க்களைத் தெரிவு செய்யலாம். இந்த ஒப்பந்தத்தை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் வரவேற்றது. ஆனால், தமிழரசுக் கட்சி எதிர்த்தது. தமிழ் பிரஜைகளை வேறு தேர்தல் இடாப்பில் பதிவது அவர்களை வேறுபடுத்தும் முயற்சி என எஸ். ஜே. வி. கண்டித்தார்.

யு. என். பி. ஆதரவாளர்களும் அரச ஊழியர்களும் யாழ்ப்பாண முனிசிப்பல் சபை மைதானத்தில் பிரமாண்டமான வரவேற்புக்கு ஒழுங்கு செய்திருந்தனர். அங்கு குழுமியிருந்த பெருந்தொகையான மக்களைக் கண்டதும் சர். ஜோனுக்கு ஒரே மகிழ்ச்சி. அரசாங்க அதிபரைக் கட்டித் தழுவினார். அடுத்து சர். ஜோன் இரண்டு கைகளையும் கூப்பியபடி பொது மக்கள் பக்கம் திரும்பினார். கூட்டத்திற்குள் நின்றிருந்த தமிழரசு வாலிபர் மன்றத் தலைவர் அப்பாபிள்ளை அமிர்தலிங்கமும் வேறு பல வாலிபர்களும் கறுப்புக் கொடிகளை உயர்த்தியபடி பிரதமர் அவர்களே திரும்பிப் போங்கள் என்று கோஷமிட்டனர்.

பொலிஸார் பாய்ந்தனர். குண்டாந்தடிப் பிரயோகம். அமிர்தலிங்கத்தின் தோளில் பலத்த அடி. சர். ஜோன் ஆடிப் போனார். யாழ்ப்பாணத்தின் யு, என். பி. ஆதரவாளர்களும் ஆடிப் போனார்கள். ஆட்டம் கண்ட இந்த நிலையில் தான் சர். ஜோன் கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடந்த கூட்டத்துக்குப் போனார். அங்கு வரவேற்புரை நிகழ்த்திய ஹன்டி பேரின்பநாயகம் யு. என். பி. யின் மொழிக் கொள்கையை வெளிப்படையாக அறிவிக்குமாறு விநயமாக வேண்டினார். ஹன்டி பேரின்பநாயகம் அப்படிக் கேட்டதற்குக் காரணம் இருந்தது. சிங்கள மொழியை மட்டும் உத்தியோக மொழியாக்க வேண்டுமென்ற குரல் கேட்க ஆரம்பித்து விட்டது.

....... ..... ..... .......

# 7

# காலிமுகச் சத்தியாக்கிரகம்

### முறித்த வாக்குறுதி

கொக்குவில் இந்துக் கல்லூரியில் கொடுக்கப்பட்ட வரவேற்பின் போது யு. என். பி யின் மொழிக் கொள்கையை வெளிப்படையாக அறிவிக்குமாறு பிரதம மந்திரி ஜோன் கொத்தலாவலையிடம் ஹண்டி பேரின்பநாயகம் விநயமாக கேட்டதற்குக் காரணம் இருந்தது. சிங்கள மொழியை மட்டும் உத்தியோக மொழியாக்க வேண்டுமென்ற குரல் உரத்து ஒலிக்க ஆரம்பித்துவிட்டது.

1954 ஏப்ரல் மாதத்தில் அகில இலங்கை பௌத்த காங்கிரஸினால் நியமிக்கப்பட்ட சிங்கள கமிஷன் முன் சாட்சியமளித்த பலர் சிங்கள மொழியை உத்தியோக மொழியாக்க வேண்டும் என்று வலியுறுத்தினர். சிங்களக் கமிஷன் நியமிக்கும் முயற்சி 1951ல் எடுக்கப்பட்டது. பிரதம மந்திரி டி. எஸ். சேனநாயக்கா அதற்கு இணங்க மறுத்து விட்டார்; அதனால் உத்தியோகப் பற்றற்ற கமிஷனை பௌத்த காங்கிரஸ் 1954ல் நியமித்தது. 1955ம் ஆண்டு முழுதும் இலங்கையின் பல பாகங்களுக்கும் சென்று கமிட்டி விசாரணைநடத்தியது. முடிவில் 1956 பெப்ரவரி 4ம் திகதி அதாவது, இலங்கையின் எட்டாவது சுதந்திர தினத்தன்று 124 பக்க அறிக்கை ஒன்றை ஆங்கிலத்தில் வெளியிட்டது.

"பௌத்தத்துக்கு இழைத்த துரோகம்" என்பது அந்த அறிக்கையின் தலைப்பு. கிறிஸ்தவர்களின் மதமாற்ற நடவடிக்கைகள், சிங்கள மொழிக்கு உரிய இடம் அளிக்கப்படாதமை, தமிழ் மக்களின் செல்வாக்குடைமை ஆகிய விடயங்களைச் சிங்களவர்களின் குறைகளாக அக் கமிஷன் இனம் கண்டது. கமிஷன் தலைவர் இளைப்பாறிய பிரதம

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நீதியரசர் ஆதர் விஜயவர்தனா, அறிக்கையின் இறுதியில் இணைக் கப்பட்ட குறிப்பில் சிங்களம் மட்டும் உத்தியோக மொழியாக்கப்பட வேண்டும் எனக் குறிப்பிட்டிருந்தார். உருவாகிக்கொண்டிருந்த இச் சூழலில்தான் ஹண்டி பேரின்பநாயகம் யு.என்.பி.யின் மொழிக் கொள்கை பற்றி கேட்டார்.

சிங்களத்துக்கும் தமிழுக்கும் சமத்துவமளிக்கும் யு. என். பி.யின் கொள்கை தொடரும் என்று சேர். ஜோன் வாக்குறுதியளித்தார். அத்துடன், இரண்டு மொழிகளுக்கும் அரசியலமைப்புச் சட்ட அங்கீ காரமளிப்பதற்கான முயற்சி விரைவில் எடுக்கப்படும் என்றும் அவர் சொன்னார். சேர். ஜோனின் அக்கூற்று சிங்கள அரசியலில் ஒரு புதிய அத்தியாயத்தை துவக்கி வைத்தது.

தமிழரின் உரிமைகளைப் பறித்து அவர்களை அடக்கி ஒடுக்குவதில் யார் கெட்டிக்காரர் என்ற போட்டியை சிங்கள அரசியல் கட்சிகளிடையே தோற்றுவித்தது. அப்போட்டி அரசியல் இன்றும் தொடர்கிறது. சிங்களத்துக்கும் தமிழுக்கும் சமத்துவம் என்ற சர். ஜோனின் கூற்றை பண்டாரநாயக்கா கண்டித்தார். செல்வாக்கற்றிருந்த சிங்கள தீவிரவாதக் குழுக்கள் எல்லாம் தலைகளை நிமிர்த்தி கொக் கரித்தன. யு.என். பி.க்குள் இருந்த சிங்கள தீவிரவாதிகள் அவரின் சமத்துவக் கூற்றை வாபஸ் பெறும்படி சர். ஜோனை வற்புறுத்தினர். அவர் அந்த வற்புறுத்தலுக்கு அடிபணிந்தார்.

எல். எஸ். எஸ். பி. மட்டும் சமத்துவக் கொள்கையை கைவிட வில்லை. சிங்களத்துக்கும் தமிழுக்கும் அரச அந்தஸ்து வழங்கத்தக்க வகையிலும் நாடு முழுவதும் சமத்துவம் அளிக்கத்தக்க வகையிலும் அரசியலமைப்புத் திருத்தப்பட வேண்டும் என்று கோரும் தீர்மானம் ஒன்றை எல். எஸ். எஸ். பி தலைவர் டாக்டர் என். எம். பெரேரா 1955ல் பராளுமன்றத்தில் கொண்டு வந்தார்.

அத்தீர்மானம் விவாதிக்கப்பட்டபோது சேர். ஜோன் எதுவித மான உறுதியான கருத்தையும் கூறவில்லை. பண்டாரநாயக்கா தனது முந்திய மொழிச் சமத்துவக் கொள்கையிலிருந்துமெதுவாக நழுவினார். சிங்களத்துக்கும் தமிழுக்கும் சமத்துவம் அளிக்க வேண்டும் என்று தான் முன்பு கூறியபோது சிங்களத்துக்கும் தமிழுக்குமிடையே தோன்றக் கூடிய போட்டி பற்றித் தான் சிந்திக்கவில்லை என்று அவர் சொன்னார். 1955 டிசம்பரில் நடந்த வருடாந்த மகாநாட்டில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சிங்களத்தை உத்தியோக மொழியாக்கும் தீர்மானத்தை நிறைவேற்றியது. தனது கட்சி பதவிக்கு வந்ததும் சிங்களத்தை



உத்தியோக மொழியாக்கும் சட்டத்தை இயற்றும் என்று பண்டார நாயக்கா உறுதியளித்தார். அதேசமயம் தமிழுக்கு நியாயமான உபயோக அந்தஸ்து வழங்கப்படும் என்று சொன்னார்.

சுதந்திரக் கட்சி நிறைவேற்றிய மொழிக்கொள்கை இரண்டு அம்சங்களை உள்ளடக்கியிருந்தது. முதலாவது : சிங்களம் மட்டும் அரச கரும மொழியாக விருக்கும். இரண்டாவது : தமிழ் மொழிக்கு நியாய மான அளவு உபயோகம். நியாயமான அளவு உபயோகம் என்பதற்கு பண்டாரநாயக்கா கொடுத்த விளக்கம்.

> பாராளுமன்றத்தில் சிங்களத்துக்கும் தமிழுக்கும் சம அந்தஸ்து. விவாதங்களும் சட்டம் இயற்றுதலும் இரு மொழிகளில். நாட்டின் நிர்வாகம் சிங்களத்தில். ஆனால், வடக்கு - கிழக்கு மாகாணங்களில் நிர்வாகம் தமிழில். நீதிமன்றங்களும் தமிழில் கருமமாற்றும்.

கல்வி மொழி சிங்களவருக்குச் சிங்களம். தமிழருக்குத் தமிழ்.

இத் தீர்மானத்தை எதிர்த்து சுதந்திரக் கட்சியிலிருந்து தமிழர்கள் வெளியேறினர்.

யு. என். பி. 1956 பெப்ரவரியில் மொழிக் கொள்கை தீர்மானத்தை நிறைவேற்றியது. சிங்களம் அரச கரும மொழியாக வேண்டும் என்று மட்டுமே அத் தீர்மானம் கூறியது. சிங்களக் கமிஷனின் நோக்கம் சிங்கள மக்களிடையே இன, மத, மொழி, உணர்வுகளைத் தூண்டுவதே. அதில் சிங்களக் கமிஷன் வெற்றியும் பெற்றது. இலங்கை சுதந்திரமடைந்து ஏழு ஆண்டுகள் ஆகியும் கறுப்பு வெள்ளையர் ஆட்சிதான் நடந்து கொண்டிருந்தது. அந்நிய ஆட்சியின் கீழ் கவனிக்கப்படாதிருந்த பௌத்த சங்கம், சிங்கள ஆசிரியர்கள், ஆயுள்வேத வைத்தியர்கள், விவசாயிகள், தொழிலாளர்கள் ஆகிய ஐந்து பிரிவினரும் தமக்கு அங்கீகாரமும் முன்னேற்றமும் வேண்டி நின்றனர். இந்த ஐந்து பிரி வினருக்கும் தூண்டுதல் அளித்தது சிங்களக் கமிஷனின் விசாரணையும் அறிக்கையுமே.

இதுவரை அமுங்கியிருந்த சில சக்திகள் வெளியே வருவதை எஸ், டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்க உணர்ந்தார். அந்த சக்திகளின் உணர்வுகளைப் பிரதிபலிப்பவராகத் தன்னை அவர் மாற்றிக் கொண் டார். இதைச் செய்வதற்கு பண்டாரநாயக்க தன் மதம், உடை, வாழ்க்கை முறை, ஆகியவற்றை அர்ப்பணித்தார். தான் பிறந்த கிறிஸ்தவ மதத்தைக் கைவிட்டு பௌத்தரானார். தனது நிலப்பிரபுத்துவ வாழ்க்கை முறை யைக் கைவிட்டு எளிய வாழ்க்கையை ஏற்றுக் கொண்டார். தேசிய உடையை அணியத் தொடங்கினார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பண்டாரநாயக்காவைப் போன்றே சிங்கள கமிஷன் அவிழ்த்து விட்ட உணர்வுகள் சிங்கள மக்களைப் பாதிக்கப்போகிறது என்பதை செல்வநாயகமும் உணர்ந்தார். சிங்கள மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்த தந்தை அச் சிங்கள உணர்வுகள் தமிழ் மக்களைப் பலவீனப் படுத்தாமல் பார்ப்பதில் கவனம் செலுத்தினார். 1955 ஜனவரி மாதத்தில் யாழ்ப்பாணத்தில் நடந்த பொதுக் கூட்டமொன்றில் எஸ்.ஜே.வி. சொன்னவை இவை:

> சிங்களத் தலைவர்கள் தமிழ் மக்களின் உரிமைகளையும் உணர்வுகளையும் மதிப்பார்கள் என்று நம்பி நாம் ஏமாந்து போனோம். தமிழ் மக்களின் நிலை மோசமாகிக் கொண்டு வருவதை தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் உணருகிறார்கள்.

1955ம் ஆண்டில் வடக்கிலும், கிழக்கிலும் பல கூட்டங்களில் தமிழ் மக்களையும் தமிழ் மொழியையும் எதிர்நோக்கும் பேராபத்தை விளக்கினார் தந்தை.

அந்த நேரத்தில்தான் அவரை பாக்கின்சன் நோய் தாக்கியது. 1955 ஏப்ரல் திருமலை மகாநாட்டுக்கு முன்பு அவர் கடும் சுகவீன முற்றிருந்தார். அரசியலிலிருந்து விலகுமாறு அவர் மீது அவரின் குடும்பத்தினர் வற்புறுத்தினர். தந்தை அதற்கு இணங்கவில்லை. தமிழ் மக்களின் நிலை மோசமாகிக் கொண்டு வரும் சமயத்தில் விட்டுவிட்டு ஓடச் சொல்கிறீர்களா? என்று தந்தை கூறியதாக அவரின் குடும்பத்தினர் ஒருவர் கூறினார். பண்டாரநாயக்காவைப் போல் மக்களின் உணர்வை உணர்ந்து கொண்ட எஸ். ஜே. வி. தமிழ் மக்களால் ஏற்றுக் கொள்ளப் படுவதற்குத் தன் மதத்தையோ உடையையோ மாற்றவில்லை. அவர் அங்கிலிக்கன் கிறிஸ்தவர். தென்னிந்திய திருச்சபை உறுப்பினர்.

கொழும்புக்கு வந்ததும் இலங்கைத் திருச்சபையின் தேவால யத்துக்கு தவறாமல் பூஜைக்குப் போவார். அதற்குக் காரணம், அப் போது கொழும்பில் தென்னிந்திய திருச்சபையின் தேவாலயம் இல்லை. தென்னிந்திய திருச்சபையின் தேவாலயம் கொழும்பில் கட்டப் பட்டதும் அங்கு போக ஆரம்பித்தார்.

தந்தை செல்வா தேசிய உடையில் பற்றுள்ளவர். அரசியலுக்காக அவர் தேசிய உடையைத் தெரிவு செய்யவில்லை. 1927ல் அவர் திருமணம் செய்த போது தலைப்பா கட்டி, பட்டு வேட்டி உடுத்து, வெள்ளைஷர்வானி கோட்டுப் போட்டுக் கம்பீரமாகக் காட்சியளித்தார். அதேசமயம் வழக்கமாக காற்சட்டையும் கோட்டும் அணிந்தார்.



ஞாயிறு தினகரனுக்கு 1958ம் ஆண்டில் அளித்த பேட்டியொன்றில் தனது நிலைப்பாட்டைத்தந்தை செல்வா தெளிவாகச் சொன்னார்:

> என்னை தமிழ் மக்கள் தலைவனாக ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று நான் என்றுமே சொன்னதில்லை. சொல்லவும் மாட்டேன். நான் முன்வைத் துள்ள தீர்வை தமிழ் மக்கள் ஏற்க வேண்டும் என்றே கூறி வந்துள்ளேன். சாகும் வரை கூறுவேன். தமிழ் மக்கள் தன்மானத்துடன் வாழ்வதற்கு அத் தீர்வு வழிவகுக்கும் என்பது என் உறுதியான நம்பிக்கை.

1956 ஏப்ரல் தேர்தலில் தமிழரசுக் கட்சி சமஷ்டி கோரிக்கையின் அடிப்படையிலேயே போட்டியிட்டது. வடக்கு - கிழக்கு மாகா ணங்களில் மொத்தம் 24 தொகுதிகளில் தமிழரசுக் கட்சி போட்டியிட்டு பத்துத் தொகுதிகளில் வெற்றி பெற்றது.

**சமஷ்டிக்கு ஆணை**

1952ம் ஆண்டு தேர்தலில் 45,331 வாக்குகளைப் பெற்று இரண்டு தொகுதிகளில் மட்டும் வெற்றியீட்டிய தமிழரசுக் கட்சி 1956ல் 142,036 வாக்குகளைப் பெற்று பத்துத் தொகுதிகளில் வெற்றியீட்டியது. தமிழ் மக்கள் தந்தை செல்வாவின் சமஷ்டி தீர்வுக்குத் தங்கள் ஆணையைக் கொடுத்தனர். தமிழரசுக் கட்சி வெற்றி பெற்ற தொகுதிகளும் வெற்றி பெற்ற வேட்பாளர்களின் பெயர்களும் வருமாறு: வட-மாகாணம் எஸ், ஜே. வி. செல்வநாயகம் காங்கேசன்துறை; வி. ஏ. அழகக்கோன் மன்னார்; ஏ.அமிர்தலிங்கம் வட்டுக்கோட்டை; வி. ஏ. கந்தையர் ஊர்காவற்றுறை வி. என். நவரத்தினம் சாவகச்சேரி; சி. வன்னியசிங்கம் கோப்பாய்;கிழக்கு மாகாணம் முதலியார் எம். எஸ். காரியப்பர் கல் முனை; எம். எம்., முஸ்தபர் பொத்துவில்; சி. இராசதுரை மட்டக்களப்பு என்.ஆர். இராஜவரோதயம் திருகோணமலை; வட-மாகாணத்தில் தமிழரசுக் கட்சிக்கு வெற்றி கிட்டாத தொகுதிகளும் அவற்றில் வெற்றி பெற்றோரும். ஜி. ஜி. பொன்னம்பலம் - யாழ்ப்பாணம்; பி.கந்தையா - பருத்தித்துறை; சி.சுந்தரலிங்கம் - வவுனியா; கிழக்கு மாகாணத்தில் தமிழரசுக் கட்சிக்குக் கிடைக்காத தொகுதிகள். எஸ்.யு.எதிர்மன்னசிங்கம் - பட்டிருப்பு; மாக்கான் மாக்கார் - கல்குடா; ஏம். ஈ. எச். முகம்மது அலி - மூதூர்.

1956 தேர்தலில் வடக்கையும் - கிழக்கையும் தமிழரையும் - முஸ்லிம்களையும் இணைப்பதில் தமிழரசுக் கட்சி வெற்றி பெற்றது. 1956 பொதுத் தேர்தலின் இன்னுமொரு அம்சத்தையும் குறிப்பிட

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வேண்டும். இடதுசாரிக் கட்சிகள், குறிப்பாக சமசமாஜ, கம்யூனிஸ்ட் கட்சிகள் சிங்களமும் தமிழும் என்ற சமத்துவக் கொள்கையைத் தொடர்ந்து கடைப்பிடித்தன. வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கு வெளியேயுள்ள தமிழ் வாக்காளர்கள் இடதுசாரிக் கட்சிகளுக்கே வாக்களித்தனர். அக்கட்சிகளின் வேட்பாளர்கள் இல்லாத விடத்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, பிலிப் குணவர்த்தனவின் கட்சி ஆகிய கட்சிகள் கூட்டுச் சேர்ந்து உருவாக்கிய மக்கள் ஐக்கிய முன்னணி (எம். ஈ. பி.) க்கே வாக்களித்தனர்.

1956ல் பாராளுமன்ற உறுப்பினர் தொகை 101. தேர்தல் மூலம் 95 பேர். நியமன உறுப்பினர் 6 பேர். எம். ஈ. பி. 51, யு. என். பி. 8, தமிழரசு 10, சமசமாஜக் கட்சி 14, கம்யூனிஸ்ட் கட்சி 03, தமிழ் காங்கிரஸ் 01, மிகுதி சுயேட்சைகள்.

1956 ஏப்ரல் 12ல் பிரதம மந்திரியாகச் சத்தியப் பிரமாணம் செய்து கொண்ட பண்டாரநாயக்கா தனது மந்திரி சபையில் ஒரு தமிழரைக் கூடச் சேர்த்துக் கொள்ள முடியவில்லை. எந்தத் தமிழரும் அவரின் சிங்கள கோஷத்தை ஏற்கத் தயாராக இருக்கவில்லை. சிறுபான்மைச் சமூகத்தினர் ஒருவரை மந்திரி சபையில் சேர்க்க விரும்பிய பண்டாரநாயக்கா கடுகண்ணாவையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வேட்பாளராகப் போட்டியிட்டு வெற்றி பெற்ற சிங்கள மரைக்கார் என்று அழைக்கப்பட்ட சி. ஏ. எஸ். மரிக்காரைத் தபால், தந்தித் தொடர்புகள் அமைச்சராக்கினார்.

பண்டாரநாயக்காவின் அடுத்த பிரச்சினை மொழிப் பிரச்சினை பற்றிய தேர்தல் வாக்குறுதியை அமுல் செய்வது. கவர்னர் ஜெனரல் சர். ஒலிவர் குணதிலகா பாராளுமன்றத்தில் ஆற்றிய கொள்கை உரையில் தனது அரசாங்கம் சிங்களம் மட்டும் சட்டத்தை ஆக்குவதற்கு முன்னுரிமை வழங்கும் என அறிவித்தார். அதற்கமைய மே மாதம் முதல் வாரத்தில் பண்டாரநாயக்கா சட்டவரைஞரை அழைத்தார். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் பிரதியைக் கொடுத்துஅதன் அடிப்படையில் மொழிச் சட்ட வரைவைத் தயாரிக்குமாறு சொன்னார். சிங்கள மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யும் அதே வேளை தமிழ் மக்களின் அபிலாஷைகளையும் கருத்தில் கொள்ள வேண்டுமென பண்டாரநாயக்கா சொன்னார். அதாவது. சிங்களம் மட்டும் சட்டத்தை இயற்றும் அதே வேளை தமிழின் நியாயமான அளவு உபயோகிப்பதற்கும் வழிவகுக்க வேண்டும் என்று சொன்னார். அத்துடன் ஆங்கிலத்திலிருந்து சிங்களத்துக்கு மாறுவதற்கான காலத்தை பாராளுமன்றம் தீர்மானிப்பதற்கு அனுமதிக்க வேண்டும் எனவும் இலங்கையில் வாழும் எல்லா மக்களும்



அரசாங்கத்துடன் தம் தாய் மொழியில் தொடர்பு கொள்வதற்கு வசதி செய்ய வேண்டும் எனவும் பண்டாரநாயக்கா தெரிவித்தார்.

தமிழுக்கும் இடமளிக்கும் செய்தி எப்படியோ வெளியே கசிந்து விட்டது. உடனே பாஷா பெரமுனவின் தலைவர்களில் ஒருவரான பேராசிரியர் எவ். ஆர். ஜெயசூரிய பாராளுமன்றத்தின் படிகளில் சாகும் வரை உண்ணாவிரதம் இருந்தார். சிங்களம் மட்டுமே உத்தியோக மொழியாக்கப்படுதல் வேண்டும் என்றும், தமிழுக்கு எவ்வித வசதியும் செய்யப்படலாகாது எனவும் அவர் வலியுறுத்தினார். சிங்கள தீவிரவாதிகளின் தயவில் பதவிக்கு வந்த பண்டாரநாயக்கா தன் தாராள்மைக் கொள்கையைக் கைவிட்டு சிங்கள தீவிர வாதத்துக்கு விட்டுக் கொடுக்க வேண்டி நேரிட்டது. அதன் விளைவாக 1956 ஜூன் 5ல் பாராளுமன்றத்தில் அவர் சமர்ப்பித்த சிங்களம் மட்டும் மொழி மசோதாவின் இரண்டாவது பிரிவு இவ்வாறு கூறியது:

> சிங்கள மொழி இலங்கையின் ஒரேயொரு உத்தியோக மொழியாக இருக்கும். அதே வேளையில் சிங்களத்தை உடனடியாக அமுல் செய்ய முடியாத சந்தர்ப்பங்களில் ஆங்கிலத்தை 1960 டிசம்பர் 31 வரையும் தொடர்ந்து உபயோகிக்க மொழிச் சட்டத்தை அமுல் செய்யும் அமைச்சருக்கு அதிகார மளிக்கப்பட்டது.

### அகிம்சைக்கு அடி

மொழிச் சட்டத்துக்கான முன்னறிவித்தல் கொடுக்கப்பட்டதும் தமிழரசுக் கட்சியின் செயற்குழு யாழ்ப்பாணத்தில் கூடியது. தமிழ் மக்களின் எதிர்ப்பைக் காட்டுவதற்காக ஜூன் ஐந்தை தமிழ் மக்கள் தமிழ் மொழிக்கு உரிமை கோரி பிரார்த்தனை செய்யும் தினமாகவும் தமது தாய் மொழிக்கு இழைக்கப்படும் அநியாயத்தை அகிம்சை வழியில் எதிர்க்கும் வைபவமாகவும் அனுஷ்டிப்ப தென்று முடிவு செய்யப்பட்டது. அத்தீர்மானத்துக்கு அமைய வடக்கிலும்-கிழக்கிலுமுள்ள கச்சேரிகளுக்கு முன் சத்தியாக்கிரகமிருப்பதெனவும் பாராளுமன்றக் கட்டடத்தின் படிகளில் சத்தியாக்கிரகம் செய்வது எனவும் முடிவு எடுக்கப்பட்டது.

அம் முடிவை பிரதம மந்திரி பண்டாரநாயக்காவுக்கு கடிதம் மூலம் செல்வநாயகம் அறிவித்தார். அக் கடிதத்தின் வாசகம்: எமது கட்சியின் (தமிழரசுக் கட்சி) பாராளுமன்ற உறுப்பினர்கள், 200 சத்தியாக்கிரகிகளுக்கு தலைமை வகித்து, சிங்களம் மட்டும் சட்டத்துக்குத் தமிழ் மக்களின் எதிர்ப்பைக் காட்டுவதற்காக ஜூன் 5ம் திகதி சனப்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பிரதிநிதிகள் சபையின் மேற்கு வாசல் படிகளில் முழுநாளும் உண்ணா விரதம் இருப்பர்.

அக் கடிதம் பண்டாரநாயக்காவைக் குழப்பி விட்டது. தனது சிரேஷ்ட அமைச்சர்களைக் கலந்தாலோசித்தார். அவர்கள் கொடுத்த யோசனையின் பேரில் செல்வநாயகத்துக்குப் பதில் கடிதம் ஒன்றை அனுப்பினார். அரசாங்கத்தின் முடிவை எதிர்க்க ஏதாவது முயற்சி எடுப் பின் அதை அடக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று பண்டார நாயக்காவின் கடிதம் கூறியது.

அக் கடிதம் செல்வநாயகத்தின் கொள்ளுப்பிட்டி வீட்டில் ஆராயப்பட்டது. டாக்டர் நாகநாதன் தன் வழக்கமான பாஷையில் சொன்னார்: "உதுக்கெல்லாம் பயப்படுகிறதா? செய்வதைச் செய்யட்டும். நாங்கள் எமது முடிவை மாற்றக் கூடாது. அக் கருத்தைத் தந்தை செல்வா ஆதரித்தார். எதிர்ப்புக் காட்டுதல் சனநாயக உரிமை. நாங்கள் சமாதானமாகச் சத்தியாக்கிரகம்தானே இருக்கப் போகின் றோம் என்றார்" அவர். அக் கூட்ட முடிவில் பத்திரிகைகளுக்கு அறிக்கை யொன்று அனுப்பப்பட்டது. அதில் அடக்குமுறை நடவடிக்கைகள் தமிழ் மக்களின் சுதந்திர வேட்கையை வளர்க்குமேயொழிய மழுங்கடிக் காது என்று அறிவிக்கப்பட்டது.

பண்டாரநாயக்காவின் பயமுறுத்தலுக்கு தமிழரசுக் கட்சியினர் அஞ்சவில்லை. வடக்கிலிருந்தும், கிழக்கிலிருந்தும் சத்தியாக்கிர கிகளை கொழும்புக்கு அழைத்தனர். யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு, மன்னார். ஆகிய இடங்களிலிருந்து சத்தியாக்கிரகிகள் ஜுன் 4ம் திகதி கொழும்புக்கு வந்தனர். பம்பலப்பிட்டியிலுள்ள பிள்ளையார் கோவிலில் அவர்கள் இரவு தங்கினர். ஜுன் 5 காலை. வெளியூரிலிருந்து வந்த சத்தியாக்கிரகிகளுடன் கொழும்பைச் சேர்ந்த வர்களும் கலந்துகொண்டனர். வி. நவரத்தினம் அவர்களை அதிகா லையில் சந்தித்துச் சத்தியாக்கிரகத்தின்போது எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்று சொன்னார். ஊர்காவற்றுறையில் போட்டியிட்டு எம். பி. யானவர் நவரத்தினம். தமிழரசுக் கட்சியின் ஆரம்பகால உறுப்பினர் களில் ஒருவர். தமிழரசுக் கட்சியின் மூளை என்று வர்ணிக்கப்பட்டவர். பின்பு, தமிழரசுக் கட்சியிலிருந்து பிரிந்து சென்று தமிழர் சுயாட்சிக் கழகத்தைத் துவக்கி பிரிவினைக் கொள்கையைப் பரப்பியவர். பின்பு கனடாவில் வாழ்ந்து இறந்தார்.

பொழுது புலர்ந்ததும் அறப்போர் அரியரத்தினம் முன்னால் தமிழரசு கட்சிக் கொடியைப் பிடித்துச் செல்ல மற்றவர்கள் வரிசையாகப் போய் காலி முகத்திடலில் கால்பேஸ் ஹோட்டல் பக்கமாக நின்றனர்.



அங்கு குழுமியிருந்த நூறுக்கு மேற்பட்ட தமிழர்கள் சத்தியாக்கிரகி களை வரவேற்றனர்.

சத்தியாக்கிரகத்தைச் சந்திக்க அரசும் தயாராகியது. இரவோடிர வாக பாராளுமன்றத்தைச் சுற்றி முள் வேலிகள் அமைக்கப்பட்டன. அதற்குப் பின்னால் துப்பாக்கி தூக்கிய பொலிஸாரின் மனித வேலி. கலக பொலிஸாரும் இரும்புத் தொப்பி. தடுக்கும் கேடயம். குண் டாந்தடி சகிதம் தயாராக இருந்தனர்.

இந்த ஆயுதங்கள் சட்ட முறைக்கு உட்பட்டவை. சத்தியாக்கி ரகிகள் எதிர்பார்த்தவை. ஆனால் சத்தியாக்கிரகிகள் சற்றும் எதிர்பாராத வேறு கூட்டமும் அங்கு நின்றது. காடையர் கூட்டம். அவர்களுக்கு வழிகாட்ட, தலைவர்களை அடையாளம் காட்ட எம். பீ. க்கள் இருவர்.

தந்தை செல்வா போய் சத்தியாக்கிரகிகளுடன் சேர்ந்து கொண் டார். எல்லாளன் துட்டகைமுனு யுத்தம் என்று கோஷம் எழுப்பினர் காடையர். சத்தியாக்கிரகத்தின் நோக்கத்தை விளக்கி தமிழரசுக் கட்சி யினர் சிங்களத்தில் பிரசுரித்த துண்டுப் பிரசுரத்தை விநியோகிக்க ஆரம் பித்தனர் தமிழரசுத் தொண்டர்கள். அவர்களைப் பிடித்து இழுத்து உதைக்கத் தொடங்கினர் காடையர். அவர்களில் சிலர் சிங்கக் கொடியை வைத்திருந்தனர்.

தமிழ் மக்கள் மீதான தாக்குதல் வரலாறு ஆரம்பித்தது. காடையர் படை 500க்கு மேல் அதிகரித்துவிட்டது. சத்தியாக்கிரகிகள்- ஆகக் கூடியது ஐநூறு பேர் இருக்கும் பசும்புற்றரையில் சப்பாணி கட்டி உட்கார்ந்து பிரார்த்தனை செய்தனர்.

வன்னியசிங்கம் தேவாரம் பாடினார். 'நாமார்க்கும் குடியல் லோம் நமனை அஞ்சோம்.

பளார்.

அவரின் முதுகில் பலமான அடி.

அந்தக் காட்சியை முன்னாள் சாவகச்சேரி பாராளுமன்ற உறுப் பினர் வி. என். நவரத்தினம் சொல்லோவியமாக்கியுள்ளார்: "தலைவர் வன்னியசிங்கம் முதுகிலே ஓர் பலமான அடி விழுந்தது. அமைதி யோடு. ஓர் உண்மையான தவசி தவம் புரிகையில் எவ்வாறிருப்பானோ அவ்வாறே தவசி போல் இறைவன் புகழ்பாடும் தேவாரப் பதிகங் களைப் பாடிக் கொண்டிருந்தார்".

நவரத்தினத்துக்கும் அடி விழுந்தது. மூங்கில் தடியால் பலமாகப் போட்ட அடி. மூங்கில் தடிகொண்டு என் உடலின் பழு என்ற உறுப்பில் தாக்கினர். மயக்கமுற்றேன். நான் அங்கிருந்து இரத்தினம் மருத்து

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டேன். அடிபட்ட இடம் கண்டியதால் அங்கு இரு தினங்கள் தங்கினேன்.

மயங்குவதற்கு முன் அவர் பார்த்த மூன்று காட்சிகள்:

முதலாவது: குண்டர்கள் தூஷணத்தில் திட்டினார்கள். தாங்கள் பேசுகின்ற பாஷை எங்களுக்கு விளங்காது எனக் கருதிய காரணத்தினாலோ என்னவோ அதைச் செயலிற் காண்பித்தனர். தாங்கள் அணிந்திருந்த கீழாடையை அலாக்காக தூக்கி காலிகளுக்கே உரித்தான சிரிப்புடன் எமக்குக் காட்டினர்.

இரண்டாவது: தந்தை செல்வாவின் 14 வயது மூத்த மகன் மனோகரனை தந்தையின் கண்முன்னாலேயே மிருகத்தனமாகத் தாக்கினர். இம்மியும் மனமிடியாமல் தந்தை செல்வா இக்காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

மூன்றாவது: நீரிழிவு நோயாளி நாகநாதன் கோல் பேஸ் ஹோட்டலுக்குப் போகிறார் சிறுநீர் கழிக்க. ஏழு, எட்டுக் குண்டர்கள் அவரைப் பின்தொடர்ந்து சென்று தாக்கினர். அவர் எதிர்த்துத் தாக்கினார். கைகளாலும். கால்களாலும் வேகமாகக் கொடுத்தார். தப்பினோம் பிழைத்தோமென்று தலைதெறிக்க அவர்கள் ஓடினர். அப்பொழுது தமிழனின் வீரம் பொங்கி எழுந்ததைத் தான் கண்டதாக நவரத்தினம் கூறுகிறார்.

அமைதி காத்தவர்களுக்கு அடித்தனர். திருப்பிக் கொடுத்ததும் ஓடினர். காலிமுகத்திடல் சத்தியாக்கிரகம் ஈழத் தமிழினத்தின் முதற் போராட்டம். அது அறவழிப் போர். நாகநாதன், சு. நடராசா, வி. ஏ. கந்தையா, என். ஆர். இராஜவரோதயம், அ. அமிர்தலிங்கம், செ. இராசதுரை உட்பட எல்லாத் தொண்டர்களும் தாக்கப்பட்டனர்.

அமிர்தலிங்கத்திற்கு விசேஷ கவனிப்பு. அவரின் நெற்றி பிளந்தது. குருதி கொப்பளித்தது. அவர் அணிந்திருந்த ஆடைகள் சிகப்பாகின. யாரோ ஒருவர் தான் உடுத்திருந்த வேஷ்டியைக் கிழித்து காயத்தின்மேல் கட்டுப் போட்டார். அந்தக் கோலத்தில் பாராளுமன்றத்துக்குப் போனார் அமிர்தலிங்கம்.

அவரைப் பார்த்ததும் பிரதமர் பண்டாரநாயக்கா கத்தினார்: போரில் பட்ட விழுப்புண் என்று.

**முதலாவது கலகம்**

கொழும்பில் தமிழ் மக்கள் தாக்கப்பட்டனர். காலிமுகத் திடலிலிருந்து ஊர்வலமாக அறப்போர் அரியரத்தினத்தின் தலைமையில் கொழும்பு கோட்டை ரயில் நிலையத்துக்குப் போன மட்டக்களப்புத் தொண்டர்களை காடையர் கூட்டம் பின் தொடர்ந்து தாக்கியது. தெருக்களில் போன தமிழர்கள் தாக்கப்பட்டனர்.



கல் ஓயா பகுதியில் தமிழருக்கெதிரான முதலாவது கலகம் கட்டவிழ்த்து விடப்பட்டது கல் ஓயா அதிகார சபையின் தலைவர் அப்பொழுது ஒரு தமிழர். அவரின் வீட்டையும் மற்ற தமிழ் ஊழியர்களினது வீடுகளையும் சிங்களக் காடையர்கள் சூழ்ந்து கொண்டு தாக்கினார்கள்.

கலகத்தின் விளைவுகளை மதிப்பிடுவதற்காகவும், பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு ஆறுதல் கூறுவதற்காகவும் தந்தை செல்வா, வன்னியசிங்கம், இராஜதுரை ஆகிய தமிழரசு எம். பீ.க்கள் மட்டக்களப்பு, பட்டிருப்பு, கல்முனை ஆகிய தொகுதிகளுக்குப் போனார்கள். கலக அழிவுகளைப் பார்த்துவிட்டுத் திரும்பிய செல்வநாயகம் அறிக்கையொன்றை வெளியிட்டார்.

அவ்வறிக்கையில் அவர் கூறியவற்றிலிருந்து சில பகுதிகள்: “கிழக்கிலங்கையின் பல்வேறு பகுதிகளில் சம்பவங்கள் நடந்தன. ஆனால், கல் ஓயாவில் நிலைமை மோசமாக இருந்தது. கல் ஓயாத் திட்டத்தில் பணிபுரிந்த தமிழ் ஊழியர்களின் வீடுகளை சிங்களக் காடையர்கள் சுற்றி வளைத்துக் கொண்டனர். செய்வதறியாது திகைத்த தமிழ்க் குடும்பங்கள் காட்டுக்குள் ஓடின. அவர்களில் சிலர் இன்னமும் திரும்பவில்லை. திரும்பி வந்தவர்களை அரசாங்க ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் மட்டக்களப்பு எம். பி. தங்க வைத்துப் பராமரித்தார். ஆண்களும், பெண்களும், குழந்தைகளுமாக மொத்தம் 400க்குமேற்பட்டோர் தமது இல்லங்களையும் சொத்துக்களையும் இழந்தனர். தமிழர்கள் தாக்கப்படுவதை அரச படைகள் பார்த்துக் கொண்டிருந்தன.”

காலிமுகச் சத்தியாக்கிரகத்தின் பின் அடுத்த திட்டம் என்ன என்ற கேள்வி பல நாட்களாக அடிபட்டது. தமிழரசுக் கட்சியின் செயற்குழு கூடியது. திருமலையிற் பெரியதொரு மாநாட்டை நடத்துவதென்றும் அம்மாநாட்டில் ஓர் இணையரசைக் கோருவதென்றும் மாநாட்டுக்குக் கால் நடையாகவே செல்வ தென்றும் செயற்குழு தீர்மானித்தது.

இலங்கையின் பல பாகங்களிலிருந்து 1956 ஆகஸ்ட் 16இல் கால் நடை யாத்திரைகள் ஆரம்பமாயின. அவற்றுள் மூன்று முக்கியமானவை. அறப்போர் முன்னணித் தலைவர் அரியநாயகம் தலைமையில் திருக்கோவில் பகுதியிலிருந்து ஒரு யாத்திரை ஆரம்பித்தது. இரண்டாவது: அழகக்கோன் தலைமையில் மன்னாரிலிருந்து வெளிப்பட்டது. மூன்றாவது: காங்கேசன்துறையிலிருந்து செல்வநாயகம் தலைமையில்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



புறப்பட்டது. யாத்திரைகளுக்கு முன்னால் ஒலிபெருக்கி பூட்டிய கார் சென்றது. திருமலைக்குச் செல்வோம் என்ற பாடல் அதிலிருந்து ஒலித்தது. இளமுருகனார் இயற்றி வைரமுத்து பாடிய பாடல் அது. ஒலிபெருக்கி வாகனத்துக்குப் பின்னால் சுலோக அட்டைகள் தாங்கிய தொண்டர்கள். அதன் பின்னால் தலைவர்களும் ஆதரவாளர்களும் சென்றனர். வழிநெடுகிலும் மக்களின் வரவேற்பு யாத்திரிகர்களுக்கு அதிக உற்சாகத்தை அளித்தது.

தமிழ் வாலிபர்களின் உணர்வலையைத் தூண்டிவிட்ட திருமலை மகாநாட்டில் தலைமையுரையாற்றிய எஸ்.ஜே.வி செல்வநாயகம் அப்போது தமிழர்கள் எதிர்நோக்கிய நான்கு பிரச்சினைகளையும் விளக்கினார். அவை: 1. பிரஜாவுரிமைப் பிரச்சினை 2. சிங்களக் குடியேற்றம் 3. தேசியக் கொடி 4.மொழிப் பிரச்சினை

இவற்றில் முதலாவதான பிரஜாவுரிமை மறுப்பு இலங்கைவாழ் தமிழ் மக்களின் எண்ணிக்கையைக் குறைத்து அவர்களைப் பலவீனப் படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டது என்பதை எஸ்.ஜே.வி. விளக்கினார். அடுத்தது சிங்களக் குடியேற்றத்தின் மூலம் தாயகத்தைப் பறிப்பது. மூன்றாவது தேசியக் கொடியில் ஒரு மஞ்சள் கோட்டைப் போட்டு தமிழ் இனத்தை ஒதுக்குவது. நான்காவது, தமிழர்களின் மொழியை அழித்து தமிழினத்தைச் சிறுமைப்படுத்தி அழிப்பது. தமிழர் சிறுமைப்படுத்தப்படுவதைத் தவிர்ப்பதற்காக திருமலை மகாநாட்டில் 4 அம்ச கோரிக்கை ஒன்று முன்வைக்கப்பட்டது. அக்கோரிக்கைகள் அடங்கிய திருமலைத் தீர்மானம் இது:

> இலங்கையில் தொடர்ந்து ஆட்சிபுரியும் அரசுகள் நிறைவேற்றிய பாரபட்சமான சட்டங்களும் மேற்கொண்ட நிர்வாக நடவடிக்கைகளும் சுதந்திரத்தின் அடிப்படைக் கருத்துணர்வுகளையும் நாகரிகமடைந்த அரசுகளின் அடிப்படைக் கோட்பாடுகளையும் முற்றாக மீறுபவையாக உள்ளதுடன் நாட்டில் நிலவும் ஒற்றையாட்சிப் பாராளுமன்ற அரசுமுறை சனநாயக உரிமைகளை நிலை நிறுத்துவதற்கு மாறாகத் தமிழ்பேசும் மக்களைத் திட்டமிட்டு அழித்தொழிக்கும்சட்டபூர்வமான கருவியாக அமைந்துள்ளதாக ஈழம்வாழ் தமிழ் பேசும் மக்களின் சார்பில் 1956ம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 19ம் நாள் திருமலையில் கூடிய இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தேசிய மகாநாடு பிரகடனம் செய்கிறது.

அப்பிரகடனத்துக்கு அமைவாக அம்மகாநாடு பின்வரும் தீர்மானங்களை நிறைவேற்றியது.



1. மொழிவழி அமைந்த தன்னாதிக்கத் தமிழரசு அல்லது அரசுகளைக் கொண்ட இலங்கைக் கூட்டாட்சி ஒன்றியம் நிறுவப்படவேண்டும்.
2. தமிழ்மொழி அதன் பழைய நிலைக்கு உயர்த்தப்பட்டுச் சிங்களத்துக்கு இணையாக சம உரிமையோடு ஆட்சி மொழியாக்கப்பட வேண்டும்.
3. மலையகத் தமிழர் இழந்த குடியுரிமை, வாக்குரிமைகளை மீண்டும் பெறும் வகையில் இன்று நடைமுறையிலுள்ள குடியுரிமைச் சட்டங்கள் நீக்கப்பட வேண்டும்.
4. தமிழரின் மரபுவழித் தாயகத்தில் சிங்கள மக்களைக் குடியேற்றும் திட்டம் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

1957 ஆகஸ்ட் 20க்கு முன் இந் நாட்டின் பிரதம அமைச்சரும் அரசும் கூட்டாட்சி ஒன்றியத்தை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளத் தவறுமிடத்துக் கட்சி காந்திய முறையில் நேரடி நடவடிக்கையில் இறங்குமெனவும் அம்மகாநாடு வலியுறுத்தியது. சாத்வீகப் போராட்டத்துக்குத் தொண்டர்களைத் திரட்டும் பணியில் தமிழரசுக் கட்சி உடனடியாக இறங்கியது. காலிமுகப் போராட்டமும் திருமலை யாத்திரையும் 1956ம் ஆண்டில் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் பலமுள்ள கட்சியாக தமிழரசுக் கட்சியை வளர்ந்துவிட்டன.

### சிங்கள ஸ்ரீ போராட்டம்

1957ஆகஸ்டுக்கு முன்பு தமிழர்களை, குறிப்பாக வாலிபர்களை, கொதித்தெழவைத்த நடவடிக்கையொன்றை பண்டாரநாயக்கா அரசாங்கம் எடுத்தது. தமிழ் வாலிபர்களை நேரடி நடவடிக்கையில் ஈடுபடுத்திய அந்த நடவடிக்கைதான் தமிழ் மக்களின் முதலாவது சட்ட மறுப்புப் போராட்டம். அப்பொழுது போக்குவரத்து அமைச்சராக இருந்த மைத்திரிபால சேனநாயக்க மோட்டார் வண்டிகளின் இலக்கத் தகடுகளில் ஆங்கில எழுத்துகளுக்குப் பதிலாக சிங்கள ஸ்ரீ என்ற எழுத்தை உபயோகிக்க வேண்டும் என்று உத்தரவிட்டார். 1956 டிசம்பரில் பிறப்பிக்கப்பட்ட இந்த உத்தரவை சாவகச்சேரி எம். பி.வி. என். நவரத்தினம் பாராளுமன்றத்தில் கண்டித்தார். தமிழரசுக் கட்சியும் உத்தியோக பூர்வமாகத், தனது எதிர்ப்பை போக்குவரத்து அமைச்சருக்

www.tamilarangam.net



கும் அரசாங்கத்துக்கும் கடித மூலம் தெரிவித்தது. அரசாங்கம் ஆட்சேபணையைக் கவனத்தில் கொள்ளவில்லை.

1957 ஜனவரி முதலாம் திகதி யாழ்ப்பாணத்துக்கு இலக்கத் தகடுகளில் சிங்கள ஸ்ரீ எழுத்துப் பொறிக்கப்பட்ட பஸ்கள் அனுப்பி வைக்கப்பட்டன. அமிர்தலிங்கம் தலைமையில் சென்ற இளைஞர் கோஷ்டியொன்று சிங்கள ஸ்ரீ எழுத்தைத் தார் பூசி அழித்தது. இந் நடவடிக்கை அமிர்தலிங்கத்தினால் திட்டமிடப்படாமல் எடுக்கப்பட்டது. தமிழரசுக் கட்சியின் செயற்குழுவின் அனுமதியை அவர் பெறவில்லை.

தமிழரசுக் கட்சியின் செயற்குழு ஜனவரியில் யாழ்ப்பாணத்தில் கூடியது. அப்போது சிங்கள ஸ்ரீ அழிப்புச் சம்பவம் பற்றி ஆராயப்பட்டது. சிங்கள ஸ்ரீ அழிப்பை ஓர் இயக்கமாக நடத்துவதென்ற முடிவை செயற்குழு எடுத்தது. ஆனால், சிங்கள ஸ்ரீ எழுத்தை தார்பூசி அழித்தமை, அதன் விளைவுகளைத் தீர ஆலோசிக்காமல் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்று தந்தை செல்வா பல தடவைகள் கூறியுள்ளார்.

வாலிபரின் உணர்வுகளுக்கு தந்தை மதிப்பளிப்பவர். அதனால் தான் சிங்கள ஸ்ரீ இயக்கத்தைத் தொடர அவர் சம்மதித்தார்.

1957 ஜனவரி முதலாம் திகதியன்று தந்தை பிரதம மந்திரி பண்டாரநாயக்காவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பினார். அக் கடிதத்துடன் திருமலைத் தீர்மானத்தின் பிரதி ஒன்றையும் அனுப்பினார். தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குப் பேச்சு வார்த்தை மூலம் தீர்வு காண நடவடிக்கை எடுக்குமாறு பண்டாரநாயக்காவை அக் கடிதத்தில் அவர் கேட்டார். சிங்கள ஸ்ரீ போராட்டத்துக்கும் அவ்வாண்டின் பிற்பகுதியில் நடைபெறவுள்ள சாத்வீகப் போராட்டத்துக்கும் தொண்டர்களைத் திரட்,டும் இயக்கத்தைத் தமிழரசு கட்சி தீவிரப்படுத்தியது.

ஜனவரி 10ல் யாழ்ப்பாணத்தில் பொதுக் கூட்டம் ஒன்று நடந்தது. அக் கூட்டத்தில் உரையாற்றும் போது தந்தை வலியுறுத்திய விடயங்கள் இவை: "போராட்டமின்றி சுதந்திரம் பெற முடியாது. சுதந்திரத்திற்குப் பெரிய விலை கொடுக்க நேரிடும். அதற்கு மக்கள் தயாராக வேண்டும். எம்மில் ஒரு பகுதியினரை அடக்கி ஆண்டு கொண்டு சுதந்திரப் போராட்டத்தை நடத்த முடியாது. இரண்டாம் தரப் பிரஜையாக இருப்பதை விட இறப்பது மேல்.

ஜனவரி 17இல் கீழ்க் காணும் அறிக்கையைத் தந்தை வெளியிட்டார்.

"ஜனவரி 19இல் சிங்கள ஸ்ரீ எதிர்ப்புப் போராட்டத்தைத் துவங்க எமது கட்சி முடிவு செய்துள்ளது. கோபத்துடனோ பழிவாங்கும் நோக்குடனோ நாம் இந்தப் போராட்டத்தை ஆரம்பிக்கவில்லை என்பதைப் பிரதம மந்திரிக்குக் கூற விரும்புகின்றேன். அரசாங்கத்துக்கும் தமிழ் பேசும் மக்களுக்கும் இடையேயுள்ள இத் தகராற்றில் பல அரசியல் விடயங்கள் உள்ளன. இந்த விடயங்களை 1957 புத்தாண்டு தினத்தன்று பிரதமருக்கு எழுதிய கடிதத்தில் எடுத்துரைத்துள்ளேன். அக் கடிதத்துடன் திருமலைத் தீர்மானத்தின் பிரதியையும் இணைத்துள்ளேன். அத் தகராறுகளுக்கு பேச்சுவார்த்தை மூலமாகத் தீர்வு காண நடவடிக்கை எடுக்குமாறும் கோரியுள்ளேன். இப்போது நாம் அறிவித்துள்ள இயக்கம் அரசின் மொழிக் கொள்கையுடன் சம்பந்தப்பட்டது. குறிப்பாக எமது இலக்கத் தகடுகளில் சிங்கள ஸ்ரீ எழுத்தைத் திணிப்பது சம்பந்தப்பட்டது.



ஜனவரி 19இல் தமிழரசுக் கட்சி சிங்கள ஸ்ரீ இலக்கத்தை அழிக்கும் இயக்கத்தை யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய நகரங்களில் துவங்கியது. முதல் நாள் போராட்டத்தில் தமிழ் காங்கிரசும் சேர்ந்து கொண்டது. அன்று, யாழ்ப்பாணத்தில் நடந்த ஊர்வலத்தில் பொன்னம்பலமும் மற்றும் தமிழ் காங்கிரஸ் உறுப்பினர்களும் கலந்துகொண்டனர். தமிழ் ஸ்ரீ பொறித்த கார்களில் அனைவரும் ஊர்வலமாகச் சென்றனர். அரசாங்கம் அப் போராட்டத்தைக் கண்டு கொள்ளாதது போன்று நடந்து கொண்டது. சட்ட மறுப்புப் போராட்டத்தின் வெற்றி அரசாங்கத்தின் கவனத்தை ஈர்ப்பதிலும் அரசாங்கத்தை நடவடிக்கை எடுக்கச் செய்வதிலும் தங்கியுள்ளது.

ஒரு நாளைய ஊர்வலத்தை அரசாங்கம் கவனிக்காது விடவே தமிழரசுக் கட்சியினர் தமது போராட்டத்தை மேலெடுத்துச் செல்ல முடிவு செய்தனர். இலக்கத் தகடுகளில் உள்ள ஆங்கில எழுத்துகளுக்குப் பதிலாக தமிழ் எழுத்துகளை நிரந்தரமாக உபயோகிப்பதே இரண்டாம் கட்டம். அதையும் அரசாங்கம் உதாசீனம் செய்தது. இதனால் போராட்டம் மேலும் விஸ்தரிக்கப்பட்டது. தெருக்களில் தொண்டர்கள் குழுமி நின்றனர். மையும் பிரசுமாக வழியில் வரும் மோட்டார் வாகனங்களை வழிமறித்து நிறுத்தி இலக்கத் தகடுகளில் உள்ள ஆங்கில எழுத்துகளுக்குப் பதில் தமிழ் எழுத்துகளைப் பொறித்தனர். அப்பொழுதும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்காது நிலைமையைக் கவனித்தது.

சிங்கள ஸ்ரீ எதிர்ப்புப் போராட்டம் மக்களின் உணர்வுகளைத் தூண்டி, பிரதேச வேறுபாடுகளையும் மீறி, மக்களை ஒற்றுமைப் படுத்துவதை உணர்ந்து கொண்ட தமிழரசுக் கட்சியினர்1957 பெப்ரவரி 4 சுதந்திர தினத்தை துக்க தினமாக அனுஷ்டிக்க முடிவு செய்தனர். துக்க தினத்தை அனுஷ்டிக்கும் முகமாக கடைகளை மூடி கறுப்புக் கொடி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



களைப் பறக்கவிடும்படி தமிழரசுக் கட்சி வேண்டுகோள் விடுத்தது. சுதந்திர தினத்தன்று சட்டமறுப்பு நடவடிக்கையில் ஈடுபட வேண்டும் என்று தமிழ் காங்கிரஸ் முடிவு செய்தது. தமிழ் காங்கிரஸின் சட்ட மறுப்பு நடவடிக்கைக்குக் காரணம் இது தான். சுதந்திர தினமாக பெப்ரவரி 4 விடுமுறை தினம். விடுமுறை தினத்தில் கடைகளை மூடுவதுதான் சட்டப்படி செய்ய வேண்டியது. எனவே, கடையை அடைக்க வேண்டும் எனக் கூறுவதில் அர்த்தமில்லை. விடுமுறை தினத்தில் கடையைத் திறந்து வைப்பது தான் எதிர்ப்பைக் காட்டுவதற்கான சிறந்த வழி. அது தான் சட்டத்தை மீறும் செயலாக அமையும்.

தமிழரசின் வேண்டுகோளின்படி கடையை அடைப்பதா? தமிழ் காங்கிரஸின் கோரிக்கைக்கு அமைய கடையைத் திறப்பதா? கடைக் காரருக்கு அது பெரிய தலையிடியாக மாறி விட்டது. பெப்ரவரி 4 அதிகாலையில் தமிழரசுத் தொண்டர்களும் தமிழ் காங்கிரஸ் தொண்டர்களும் யாழ்ப்பாண பெரிய கடைக்குக் குழுக்களாகச் சென்றனர். ஜி. ஜி. அதிகாலை 4 மணிக்கு தனது ஆதரவாளர்களையும் திரட்டிக் கொண்டு போய் கடைக்கு முன் நின்று கடைகளைத் திறக்கச் செய்தனர். டாக்டர் நாகநாதனும் தமிழரசுத் தொண்டர்களும் காலை 6 மணிக்குப் பெரிய கடைக்குப் போய் கடைகளைத் திறக்க வேண்டாம் என்று கடைக் காரர்களிடம் சொன்னார்கள். ஜி. ஜி. யின் வேண்டுகோளுங்கிணங்க சில கடைகள் திறக்கப்பட்டன. நாகநாதனின் கோரிக்கைக்கிணங்க அவை மறுபடியும் மூடப்பட்டன.

காலை 9.20 மணிக்கு ஒரேயொரு கடை மட்டுமே திறந்திருந்தது. அக் கடைக்கு முன்னால் ஜி. ஜி. நின்று கொண்டிருந்தார். சற்றுத் தள்ளி நாகநாதனும் தமிழரசு வாலிபர்களும் கூட்டமாக நின்றனர். கல் வீச்சு துவங்கியது. அப்பொழுது யாழ்ப்பாண உதவி பொலிஸ் சுப்ரீண்டனாக ஜெபநேசன் பணி புரிந்தார். அவர்விடுத்த வேண்டுகோளை அடுத்து இரண்டு பகுதியினரும் கலைந்து சென்றனர். ஒப்சேவர் பத்திரிகை அந்தப் போராட்டத்துக்கு கடை அடைப்பு, திறப்பு போராட்டம் என்ற தலைப்பு போட்டது.

இன்று போலவே அன்றும் திருகோணமலை மரக்கறிக் கடை சிங்கள வர்த்தகரின் ஆதிக்கத்திலிருந்தது. மரக்கறிச் சந்தைக்கு அருகே மணிக்கூண்டுக் கோபுரம் உண்டு. அதன் மீது கறுப்புக் கொடி ஒன்றை கட்ட நடராசன் என்ற வாலிபர் ஏறினார். மறைந்து நின்ற ஒருவன் அவ் வாலிபனைச் சுட்டு வீழ்த்தினான்.



**பேச்சுக்கு அழைப்பு**

சிங்கள ஸ்ரீ எதிர்ப்பு இயக்கமும் கடை அடைப்புப் போராட்டமும் தமிழ் பேசும் மக்களிடையே புத்துணர்ச்சியை உண்டாக்கின. ஜனவரி முதலாம் திகதி எழுதிய கடிதத்தில் அரசுக்கும் தமிழ் பேசும் மக்களுக்கும் இடையேயுள்ள தகராறுகளை பேச்சுவார்த்தை மூலம் தீர்க்க நடவடிக்கை எடுக்கும்படி பண்டாரநாயக்காவைச் செல்வநாயகம் கோரியிருந்தார். தமிழ் மக்களின் உணர்ச்சிகளைப் புரிந்து கொண்ட பண்டாரநாயக்கா நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக் கைகளை எடுக்க ஆரம்பித்தார். 1957 ஏப்ரல் 26இல் தமிழ் மொழியின் நியாயமான உபயோகத்துக்கான மசோதாவை பாராளுமன்றத்தில் அவர் சமர்ப்பித்தார். அத்துடன், அரசியல் சட்டத்தில் திருத்தம் செய் வதற்கு பாராளுமன்றத் தெரிவுக் குழுவொன்றை நியமிக்க முன் வந்தார். சமஷ்டி அமைப்பை ஏற்படுத்துவது பற்றியும் ஆலோசிப்பீர்களா? என்று கேட்டார் தந்தை. பண்டார நாயக்கா அதற்கு இணங்கினார்.

தமிழ் பேசும் மக்களின் உணர்ச்சி வேகத்தைக் காட்டும் மூன்று சம்பவங்கள் அடுத்து இடம் பெற்றன. சிறுபான்மைத் தமிழர் மகா சபையின் அழைப்பை ஏற்று யாழ்ப்பாணம் போனார், உதவி அமைச்சர் எம். பி. டி. சொய்சா, யாழ். ரயில் நிலையத்தில் இறங்கிய அவர் தன் காருக்குள் ஏறியதும் தமிழரசுத் தொண்டர்கள் அவரின் கார் முன் படுத்தனர். அடுத்த ரயிலில் அவர் கொழும்புக்குத் திரும்பினார். கல்வியமைச்சர் டபிள்யு. தகநாயக்காவும், தபால் மந்திரி சி. ஏ. எஸ். மரிக்காரும் கிழக்கு மாகாணம் போனார்கள். அங்கு அவர்களுக்குக் கறுப்புக் கொடி காட்டப்பட்டது. நிதி மந்திரி ஸ்டான்லி. டீ. சொய் சாவின் தலைமையில் ஆறு அமைச்சர்களைக் கொண்ட குழு மன்னார் சென்றது. அங்கும் கறுப்புக் கொடிகள் அவர்களை வரவேற்றன.

மன்னாரிலிருந்து திரும்பிய ஸ்டான்லி டி. சொய்சா பண்டார நயாக்காவிடம் நிலைமையை விளக்கினார். இப்படியே விட்டால் நிலைமை மோசமாகும் எனச் சொன்னார். மே மாத நடுப்பகுதியில் நெருக்கடி நிலைமை தோன்றியது. மே 13இல் மட்டக்களப்பில் நடந்த பொதுக் கூட்டமொன்றில் தமிழ் மக்களை வெறும் வாய்ச்சொல் வீரர்களாக சிங்கள மக்கள் கணிப்பதாகவும் அந் நிலைமையை மாற்றி செயல் வீரர் களாக மதிக்கச் செய்ய வேண்டும் எனத் தந்தை சொன்னார். தமிழ் பேசும் மக்களுக்கு அக் கூட்டத்தில் தந்தை இட்ட மூன்று கட்டளைகள்:

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



1. தமிழ் மக்களின் கோரிக்கைகள் நியாயமானவை என்பதில் நம்பிக்கை வையுங்கள்.
2. ஒவ்வொரு தமிழனும் போராட்டத்தில் தீவிர பங்கு ஏற்க வேண்டும்.
3. போராட்டத்தில் இணையுங்கள். எந்தத் தியாகத்துக்கும் தயாராகுங்கள்.

நெருக்கடியை மோசமாக்குவதில் பத்திரிகைகளும், வழக்கம் போல தங்கள் பங்கைச் செய்தன. தென்னிந்தியாவிலிருந்து ஆதரவு வருகிறது என்பது அதிலொன்று. தந்தை அதை மறுத்தார். சத்தியாக்கிரக இயக்கம் நாட்டுத் துரோகம் என்பது மற்றது. தந்தையின் பதில் இது. வழக்கறிஞன் என்ற முறையில் எமது கட்சி திட்டமிட்டுள்ள சத்தியாக்கிரகமோ சட்ட மறுப்போ அரசுக்கெதிரான செயலல்ல. எனவே, அது நாட்டுத் துரோகச் செயல் அல்ல. அத்துடன் தந்தை நிறுத்தவில்லை. சமஷ்டியின் அடிப்படைத் தத்துவத்தை இவ்வாறு விளக்கினார். எமது சமஷ்டிக் கோரிக்கை விஞ்ஞான, தர்க்க ரீதியான அடிப்படையில் அமைந்தது. வெவ்வேறு மொழிகளையும் கலாசாரத்தையும் உடைய இரு இனங்கள் சனநாயக அடிப்படையில் சமத்துவமாக வாழ வழிவகுக்கும் ஒரேயொரு அரசியல் ஒழுங்கு சமஷ்டி ஆட்சி முறையே. தமிழரசுக் கட்சி கிராமம் கிராமமாகச் சென்று தொண்டர்களைத் திரட்டத் தொடங்கியது. எமது இலக்கான 20,000 தொண்டர்களைப் பெறும் நிலைக்கு வந்து விட்டோம், என்றார் தந்தை.

ஜூன் முதலாம் திகதி பண்டாரநாயக்கா வானொலியில் உரையாற்றினார். தமிழரசுக் கட்சியுடன்தான் பேசத் தயாராக இருப்பதாகச் சொன்னார். சிங்களம் மட்டும் சட்டத்தைப் பாதிக்காத வகையில் நியாயமான அளவு தமிழ் மொழி உபயோகம், பிரதேச சபைகள் ஆகியவற்றின் அடிப்படையில் தான் பேசத் தயாராக இருப்பதாகச் சொன்னார். அடுத்த நாளே (ஜூன் 2) தந்தை பதிலளித்தார்.

தந்தையின் அந்த அறிக்கை வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. அதனால் அதனுடைய மொழிபெயர்ப்பைத் தருகிறேன்.

> எமக்கும் அரசாங்கத்துக்கும் இடையேயுள்ள தகராறுகள் பற்றி பிரதம மந்திரியுடன் தமிழரசுக் கட்சியினரான நாம் பேசத் தயாராகவில்லை என்ற தப்பபிப்பிராயம் சில வட்டாரங்களில் நிலவுகிறது. 1956இல் நடந்த எமது மகாநாட்டில் எமது குறைகளை நான்கு அம்சக் கோரிக்கைகளாக்கி அரசாங்கத்துக்கு அனுப்பி வைத்து அதை ஆராய ஓராண்டு அவகாசமும் கொடுத்தோம். அத்துடன் புதுவருட தினத்தன்று (01-01-57) எமது நிலைப்பாட்டை விளக்கி கடிதம் எழுதினேன். தகராறுகளுக்குரிய விடயங்களைப் பேசித் தீர்க்க பிரதம மந்திரி நடவடிக்கை எடுப்பார் என்று எதிர்பார்ப்பதாகக் குறிப்பிட்டிருந்தேன். தகராறுகளைத் தீர்க்கும் விடயத்தில் பேச்சுவார்த்தைக்கும், சுமரசத் தீர்வுக்கும் முதலிடம் அளிக்க வேண்டும் என்பதில் நான் நம்பிக்கையுள்ளவன். இக் கருத்தை நீங்கள் ஏற்பீர்கள் என எதிர்பார்க்கிறேன்.



அதைத் தொடர்ந்து இரு தரப்பினரினதும் நண்டர்களான வழக்கறிஞர் எஸ். நவரத்தினராசா, அரசியல்வாதியான பதியுத்தீன் மஹ்மூத் ஆகியோர் இரு பகுதியினரையும் பேசவைப்பதற்கான முயற்சிகளை எடுத்தனர். பண்டாரநாயக்காவுக்கும் செல்வ நாயகத்துக்குமிடையிலான முதலாவது சுற்றுப் பேச்சு பண்டாரநாயக்காவின் ஹொரகொல்லை வீட்டில் நடந்தது.

செல்வநாயகத்தின் காருக்குப் போய் பண்டாரநாயக்கா அவரை வரவேற்றார். பண்டாரநாயக்காவின் கைகளை இறுகப் பற்றிய தந்தை செல்வா: ஆழ்ந்து யோசித்த பின்புதான் உங்களைச் சந்திக்க நான் இங்கு வந்தேன். இப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நீங்கள் ஏதாவது செய்ய வேண்டும். இதற்கு நாங்கள் தீர்வு காணாவிட்டால் நாட்டுக்குப் பேரழிவு ஏற்படும் என்று சொன்னார். நானும் அப்படித்தான் நினைக்கிறேன் என்று பண்டாரநாயக்கா பதிலளித்தார்.

பேச்சை பண்டாரநாயக்காதான் ஆரம்பித்தார். சிங்களம் மட்டும் சட்டத்தைப் பற்றிக் கவலைப்படாதீர்கள். அதை அமுல் செய்யப் பல ஆண்டுகள் பிடிக்கும். எனக்கு சிங்களம் வாசிக்கவும் தெரியாது, எழுதவும் தெரியாது. நான் சிங்களத்தில் எழுதவும் வாசிக்கவும் கற்ற பின்புதான் அதை அமுல் செய்வேன். நான் வேகமாகக் கற்க மாட்டேன் என்பது உங்களுக்குத் தெரியும்தானே என்றார் அவர்.

செல்வநாயகம் அவரின் பகிடியைக் கேட்டு சிரிக்கவில்லை. தங்கள் அர்ப்பணிப்பின் ஆழத்தை அவர் அளக்கிறார் என்பது தந்தைக்கு விளங்கி விட்டது. அவர் இறுக்கமாகப் பதிலளித்தார். இது கற்கும் வேகத்துடன் சம்பந்தப்பட்ட விடயமல்ல. தமிழ் மக்களின் உரிமையோடு தொடர்புடைய விடயம். சிங்களம் மட்டும் சட்டம் தமிழர்களை அவர்களின் சொந்த நாட்டில் அந்நியராக்கி விட்டது. அதைத்தான் தமிழ் மக்கள் வெறுக்கிறார்கள் என்று சொன்னார். பண்டாரநாயக்கா அக் கருத்தை ஏற்றுக் கொண்டார். தமிழ் மக்கள் தங்களை இந்நாட்டு மக்கள் என்று எண்ணச் செய்வதற்கு ஏற்ற ஒழுங்கை அரசாங்கம் செய்ய

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வேண்டும். தங்களைத் தாங்களே ஆளக் கூடிய சமஷ்டி அமைப்பின் மூலமே அதைச் செய்ய முடியும் என்று தந்தை செல்வா கூறினார்.

**தீர்வுக்கு அத்திவாரம்**

1926ல் பண்டாரநாயக்கா முன்வைத்த சமஷ்டித் தீர்வை வி. நவரத்தினம் நினைவூட்டினார். இன்று தான் தேர்தலில் மக்கள் அளித்த ஆணைக்குக் கட்டுப்பட்டிருப்பதாக பண்டாரநாயக்கா பதிலளித்தார். அந்த ஆணைக்குக் கீழ்ப்படிந்து தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணத் தயாராக இருப்பதாக பண்டாரநாயக்கா கூறினார். பண்டார நாயக்காவின் நிலைப்பாட்டை ஏற்றுக்கொண்ட தந்தை செல்வா தமிழ் மக்கள் தாம் வாழும் பிரதேசத்தில் தம்மைத் தாமே ஆள வழி செய்யும் சமஷ்டி ஆட்சி முறையே தனது அடிப்படைக் கோரிக்கை என்றும் அக் கோரிக்கைக்குப் பாதகம் ஏற்படுத்தாத வேறு ஒழுங்குமுறையைப் பரிசீலிக்கத் தான் தயாராக இருப்பதாகவும் கூறினார்.

தமது நிலைப்பாடுகளை விட்டுக் கொடுக்காது அந்நிலைப் பாடுகளுக்குப் பாதகம் ஏற்படாத ஒழுங்கொன்றைத் தேட இரு பகுதி யினரும் இணங்கினர். அத்தகைய ஒழுங்கொன்றைக் காண்பதற்கான வழியை வன்னியசிங்கமும் நாகநாதனும் சுட்டிக் காட்டினர். நிர்வாகச் சீர்திருத்தம் பற்றிய சொக்ஸி அறிக்கை சிபாரிசு செய்த அதிகாரப் பரவலாக்கம்தான் அந்த வழி. உள்ளூராட்சி அமைச்சராக இருந்தபோது பண்டாரநாயக்கா அந்த அறிக்கையில் சத்தியாக்கிரகத்தை கைவிடு வதாக தமிழரசுக் கட்சி அறிவித்தது.

பகுதி (ஆ) வில் பிரதேச சபை சம்பந்தமாக ஏற்பட்ட இணக்கத் தின் விவரம் கொடுக்கப்பட்டுள்ளது. வட மாகாணத்தில் ஒரு பிரதேச சபையும் கிழக்கு மாகாணத்தில் இரண்டு அல்லது அதனிலும் கூடிய பிரதேச சபைகளும் அமைக்கப்படும். மாகாண எல்லைக்கு அப்பாலும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட சபைகள் இணைய அனுமதிக் கப்படும். பிரதேச சபை உறுப்பினரை மக்கள் தெரிவு செய்வர். பிரதேச சபைகளுக்கான அதிகாரங்களை அரசாங்கம் பகிர்ந்தளிக்கும். விவ சாயம், கூட்டுறவு, காணி, காணி அபிவிருத்தி, குடியேற்றத் திட்டம், கல்வி, சுகாதாரம், கைத்தொழில், கடற்றொழில், வீடமைப்பு, சமூக சேவை, மின்சாரம், நீர் விநியோகம், தெருக்கள் ஆகிய அதிகாரங்கள் பிரதேச சபைக்கு அளிக்கப்பட வேண்டும் என்று முடிவு செய்யப் பட்டது. பிரதேச சபைக்கு மத்திய அரசாங்கம் நிதி ஒதுக்கீடு செய்யும்.



**ஒப்பந்தம்**

பண்டாரநாயக்கா - செல்வநாயகம் ஒப்பந்தத்தின் உத்தியோக பூர்வமான தமிழாக்கம் இது:

பகுதி (அ) நாட்டில் நெருக்கடியை ஏற்படுத்தி வந்த கருத்து வேற்றுமைகளைத் தீர்க்கும் முயற்சியாக, இலங்கைத் தமிழரசுக் கட்சிப் பிரதிநிதிகள் பிரதமரோடு தொடர்பான பேச்சு வார்த்தைகளை நடத் தினார்கள். உரையாடலின் தொடக்கத்திலேயே தமிழரசுக் கட்சியின் சில கோரிக்கைகளைப் பிரதமர் ஏற்பது சாத்தியமற்றதென்பது தெளிவா கியது. சமஷ்டி அரசமைப்பையோ, பிரதேச சுயாட்சியையோ ஏற்படுத்துவது பற்றிப் பேசவோ, அல்லது உத்தியோக மொழிச் சட்டத்தை அழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவோ அரசாங்கத்தின் நிலையில் தன்னால் இயலாது என்று பிரதமர் கூறினார். இலங்கைத் தமிழரசுக்கட்சி தனது அடிப்படைக் கொள்கைகள், நோக்கங்கள் எவற்றையும் கைவிடாத வகையில் ஓர் இடைக்கால ஒழுங்குக்கு வர இயலுமா என்பதை ஆராயும் கேள்வி பின் எழுந்தது.

அரசாங்கத்தின் பிரதேச சபைகள் மசோதாவை ஆராய்ந்து. அதன் கீழ் இலங்கைத் தமிழரசுக்கட்சி கருத்திற் கொண்டிருக்கும் சில விடயங் களை நியாயமாக உள்ளடக்கக் கூடியதாக ஏற்பாடுகள் செய்ய இயலுமா என்று பார்க்குமாறு பிரதமர் ஆலோசனை கூறினார். அங்கு ஏற்பட்ட உடன்படிக்கை ஓர் தனியான பத்திரத்தில் தரப்படுகிறது.

மொழி விடயத்தில் இலங்கை தமிழரசுக்கட்சி சம அந்தஸ்துக் கோரிக்கையை வலியுறுத்தியது. ஆனால் இவ்விடயத்தில் பிரதமரின் நிலையை உத்தேசித்து இடைக்கால ஏற்பாடாக ஓர் உடன்படிக்கைக்கு வந்தனர். தமிழ் ஒரு தேசிய மொழியாக அங்கீகரிக்கப்படுவதும், வடக்குக் கிழக்கு மாகாணங்களின் நிர்வாக அலுவல்கள் தமிழில் நடைபெறுவதும், முக்கியமானவை என்று அவர்கள் சுட்டிக்காட்டினர். தான் முன் குறிப்பிட்டது போல உத்தியோகமொழிச் சட்டத்தை அழிக்கக் கூடிய எந்த நடவடிக்கையும் எடுப்பது சாத்தியமற்றதென்று பிரதமர் கூறினார். கருத்துப் பரிமாறலின் பின், இயற்ற உத்தேசிக் கப்படும் சட்டத்தில் இலங்கையின் தேசிய சிறுபான்மையோரின் மொழியாகத் தமிழை அங்கீகரிக்க வேண்டுமென்றும், உத்தியோக மொழியின் நிலையைப் பாதிக்காத வகையில் வடக்குக் கிழக்கு மாகாணங்களின் நிர்வாக மொழியாகத் தமிழே இருக்கும் வகையில் பிரதமரின் நாலு அம்சத் திட்டத்தில் ஏற்பாடு இருக்க வேண்டு மென்றும், வடக்குக் கிழக்கு மாகாணங்களில் வசிக்கும் தமிழ்

www.tamilarangam.net



பேசுவோரல்லாத சிறுபான்மையோருக்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டுமென்றும் இரு தரப்பினரும் ஒப்புக் கொண்டனர்.

இந்திய வம்சாவழியினருக்கும் இலங்கைக் குடியுரிமை வழங்குவது பற்றியும் குடியுரிமைச் சட்டம் பற்றியும் தமது கருத்துக்களை இலங்கைத் தமிழரசுக் கட்சிப் பிரதிநிதிகள் பிரதமருக்கு எடுத்து விளக்கி, விரைவில் இப்பிரச்சினை தீர்க்கப்பட வேண்டுமென்று வற்புறுத்தினர். இப்பிரச்சினை விரைவில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படுமென்று பிரதமர் அறிவித்தார். இம் முடிவுகளின் காரணமாகத் தமது உத்தேச சத்தியாக்கிரக நடவடிக்கையைக் கைவிடுவதாகத் தமிழரசுக் கட்சி அறிவித்தது.

பகுதி - ஆ :

1 பிரதேச சபைகளின் எல்லைகள்- சட்டத்திலேயே அட்டவணையாகச் சேர்க்கப்பட்டு வரையறுக்கப்பட வேண்டும்.

2 வடமாகாணம் ஒரு பிரதேச சபையாகவும்- கிழக்கு மாகாணம் இரண்டு அல்லது கூடிய பிரதேச சபையாகவும் அமையும்.

3 மாகாண எல்லைகளையும் தாண்டி இரண்டு அல்லது மேற்பட்ட பிரதேச சபைகள் இணைவதற்குச் சட்டத்தில் விதி இடம் பெறும். பாராளுமன்றத்தின் அங்கீகாரத்துக்கு அமைவாக, ஒரு பிரதேச தன்னைப் பிரித்துக் கொள்ளவும் இடம் இருக்கும். இரண்டு அல்லது மேற்பட்ட பிரதேச சபைகளுக்குப் பொதுவான குறிப்பிட்ட நோக்கங்களுக்கு, அவை சேர்ந்து செயல்படச் சட்டத்தில் இடம் உண்டு.

4 பிரதேசசபை உறுப்பினர் நேரடியாகத் தெரிவு செய்யப்படுவர். அதற்கான தொகுதிகளை வகுப்பதற்குத் தொகுதி நிர்ணயக்குழுவோ, குழுக்களோ அமைப்பதற்கு ஏற்பாடு செய்யப்படும். பிரதேசசபையின் எல்லைக்குள் அமைந்த மாவட்டங்களின் பாராளுமன்ற உறுப்பினர்- பிரதேச சபைத் தலைவராவதற்குத் தகுதி பெறுவது பற்றி ஆலோசிக்கப்படும். அரசாங்க அதிபர்கள் பிரதேச ஆணையாளர்களாக நியமிக்கப்படுவது ஆலோசிக்கப்படும். பெரிய பட்டினங்கள், கேந்திர நகரங்கள், மாநகர சபைகள் ஆகியவற்றை மேற்பார்வை செய்யும் அதிகாரங்கள் ஆராயப்படும்.



5. அதிகாரங்கள் பாராளுமன்றத்தினால் வழங்கப்பெற்று சட்டத்தில் வரையறுக்கப்பட வேண்டும். விவசாயம், கூட்டுறவு, காணியும் அபிவிருத்தியும், குடியேற்றம், கல்வி, சுகாதாரம், கைத்தொழில், மீன்பிடித்துறை, வீடமைப்பு சமூகசேவை, மின்சாரம், தண்ணீர்த் திட்டங்கள், நெடுஞ்சாலைகள் ஆகியவை உள்ளடங்கக் குறிப்பிட்ட விடயங்கள் பிரதேச சபைகளின் அதிகாரத்திற்குட்பட்டிருக்க வேண்டுமென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

6 குடியேற்றத் திட்டங்களைப் பொறுத்த வரை தமது அதிகார எல்லைக்குட்பட்ட காணிகள் வழங்கப்பட வேண்டிய குடியேற்றவாசிகளைத் தெரிவு செய்வதும் பிரதேச சபைகளின் அதிகாரத்துக்குட்பட்டதாக இருக்கும் என்று ஒப்புக் கொள்ளப்பட்டது. இப்போது கல் ஓயா அபிவிருத்திச் சபையினால் நிர்வகிக்கப்படும் பிரதேசத்தின் நிலை ஆராயப்பட வேண்டும்.

7 சட்ட மூலத்தில் பிரதேச சபைகளையொட்டி உள்ளூராட்சி அமைச்சருக்கு அளிக்கப்பட்ட அதிகாரங்களை மாற்றித் தேவையான இடத்தில் பாராளுமன்றத்திடம் ஒப்படைக்கும்பொருட்டு அவ்விதிகள் திருத்தப்படும்.

8 பிரதேச சபைகளுக்கு மத்திய அரசாங்கம் மொத்தமாக நிதி வழங்கும். அத்தொகை கணக்கிடப்பட வேண்டிய கொள்கைகள் பின் ஆராயப்படும். பிரதேச சபைகளுக்கு வரிவிதிக்கவும் கடன் வாங்கவும் அதிகாரம் இருக்கும்

## எதிர்ப்பு

ஒப்பந்தத்தை அங்கீகரிப்பதற்காக தமிழரசுக் கட்சியின் செயற்குழு கொழும்பில் கூடியது. அக் கூட்டத்தில் அமிர்தலிங்கமும் இராசதுரையும் ஒப்பந்தத்தை எதிர்த்தனர். எதைக் கேட்டீர்கள்? எதைப் பெற்றீர்கள்? என்று அவர்கள் கேட்டனர். தமிழ் வாலிபர்களின் குரல் பலமாக ஒலித்தது முதல் தடவையல்ல. அவர்களின் சக்தி முதல் முறையாக யாழ்ப்பாணக் காங்கிரஸின் 1931 அரசாங்க சபை தேர்தல் பகிஷ்கரிப்பின் போது பலமாக வெளியாகியது. ஆனால் அந்த இயக்கம் தோல்வியடைந்தமையை அவ்வியக்கத்தின் காரண கர்த்தாவான கண்டிபேரின்ப நாயகமே பின்பு ஏற்றுக்கொண்டார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



1953 ஆகஸ்ட் ஹர்த்தாலும் யாழ்ப்பாண வாலிபர்களின் சக்தியை வெளிக்கொணர்ந்தது. டட்லி செனநாயக்கா அரசாங்கம் அரிசி விலையை உயர்த்தியதை எதிர்த்து ஆகஸ்ட் 12இல் லங்கா சமசமாஜக் கட்சியும் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியும் ஒன்றிணைந்து அந்த ஹர்த்தாலை நடத்தின. வடக்கிலும்-கிழக்கிலும் இடதுசாரி சக்திகளுடன் இணைந்து ஹர்த்தாலை நடத்தும்பொறுப்பை இலங்கைத் தமிழரசுக் கட்சி ஏற்றது. வடக்கில் , குறிப்பாக யாழ் குடாநாட்டில் ஹர்த்தால் வெற்றிகரமாக நடந்தது. வாலிபர் சமூகம் தமிழரசு - இடதுசாரிக்கூட்டின் பின்னால் அணி திரண்டது. அதுவும் ஒரு குறுகியகால நடவடிக்கையே. வடமாகாண வாலிபர்களின் சக்தி 1956 ஜூன் 5 சிங்களம் மட்டும் சட்டத்தின் பின்பே படிப்படியாக உசுப்பி விடப்பட்டது. அன்றைய ஹர்த்தாலும் திருமலை யாத்திரையும் தமிழ் வாலிபர்களின் மொழியுணர்வைத் தட்டிக் கிளப்பியது.

கொழும்பு செயற்குழுக் கூட்டத்தில் தந்தை செல்வாதான் கொஞ்சம் கொஞ்சமாகப் பெறும் தந்திரத்தை எடுத்துரைத்தார். சமஷ்டி ஆட்சியமைப்புக்கான அடிப்படையை இவ்வொப்பந்தத்தின்மூலம் உருவாக்கியுள்ளோம் என்று தன் நிலைப்பாட்டைத் தந்தை செல்வா விளக்கினார். அத்துடன், ஒப்பந்தத்தின்மூலம் அடைய முயலப்பட்ட இலக்குகளை தந்தை செல்வா இவ்வாறு சுருக்கிக் கூறினார்.

1. தமிழர் தாயகம் வடககும்- கிழக்கும் என்பதை ஏற்கச் செய்தல்.
2. தமிழர் தாயகத்தில் சிங்களக் குடியேற்றத்தை தடுத்தல்.
3. தமிழ் மொழியை தேசிய மொழியாக்குதல்.
4. வடக்கிலும் - கிழக்கிலும் தமிழில் நிர்வாகத்தை ஏற்படுத்துதல்.
5. இலங்கையின் தேசிய சிறுபான்மையினரின் மொழியாக தமிழை அங்கீகரிக்கச் செய்தல்.
6. பிரஜாவுரிமைப் பிரச்சினையை மீளாய்வு செய்யச் செய்தல்.
7. சுயநிர்ணய உரிமை பிரதேசங்களை இணைக்கும் உரிமை மூலம் உள்ளே கொண்டு வரப்பட்டது.



8. பண்டாரநாயக்கா- செல்வநாயகம் ஒப்பந்தத்தின் சாதனையையும் முக்கிய அம்சங்களையும் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ், பேராசிரியர் ஏ. ஜே. வில்சன் ஆகியோர் விரிவாக ஆராய்ந்துள்ளனர்.

பீரிஸின் மதிப்பீடு இது:

- ★ கொண்ட கொள்கையை விட்டுக் கொடுக்காது சமரசத் தீர்வு ஒன்றைக் காண முற்பட்டமை அதன் சிறப்பம்சம்.
- ★ ஒப்பந்தத்தின் முதலாவது பகுதி தீர்வுக்கான தத்துவங்களைக் கொண்டுள்ளது. இரண்டாவது பகுதி அந்தத் தத்துவங்களை நடைமுறைப்படுத்துவதற்கான ஒழுங்குகளைச் செய்கின்றது. நாட்டின் வடக்கு, கிழக்குப் பகுதிகளின் நிர்வாக மொழியாகத் தமிழ் ஏற்றுக் கொள்ளப் பட்டுள்ளது.
- ★ பிரஜாவுரிமை விடயம் கவனமாகப் பரிசீலிக்கப்படும் என்று ஒப்பந்தம் கூறுகிறது.
- ★ குடியேற்றத் திட்டங்களில் உள்ளூரிலுள்ள காணியற்ற மக்களுக்கு முதலிடமும் பிராந்தியத்திலுள்ள காணியற்ற மக்களுக்கு இரண்டாம் இடமும் கொடுக்கப்படவேண்டும் என்ற விதி சேர்க்கப்பட்டுள்ளது.
- ★ சமஷ்டி அமைப்புக்குத் தேவையான அடித்தளம் இடப் பட்டுள்ளது.
- ★ இலங்கையின் இனப் பிரச்சினையின் தீர்வுக்குத் தேவையான தத்துவங்களை பண்டாரநாயக்கா - செல்வநாயகம் ஒப்பந்தம் உள்ளடக்கியிருப்பதாகப் பீரிஸ் கூறுகிறார். பேராசிரியர் ஜெயரத்தினம் வில்சன் ஒருபடி மேலே சென்று தேசிய இனம் ஒன்றைக் கட்டி எழுப்புவதற்கான மூன்று முக்கிய கொள்கைகளை பண்டாரநாயக்கா - செல்வநாயகம் ஒப்பந்தம் உள்ளடக்கி யிருந்ததாகக் கூறுகிறார். அக் கொள்கைகள்:
- ★ வடக்கு - கிழக்கு மாகாணங்கள் தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய தாயகம் என்பதனை ஏற்றுக் கொள்ளல்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



★ தமிழை இலங்கை வாழ் சிறுபான்மை மக்களின் மொழியாக ஏற்றுக் கொள்ளல்.

★ வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கான சுயாட்சி.

**வாலிபர்களின் அழுத்தம்**

தந்தை செல்வாவின் விளக்கத்துடன் அமிர்தலிங்கமும் ராஜதுரையும் அடங்கி விட்டனர். ஆனால், மற்ற வாலிபர்கள் திருப்திப்படவில்லை, 1957 ஜுலை 28ல் மட்டக்களப்பில் நடந்த தமிழரசுக் கட்சியின் ஐந்தாவது தேசிய மகாநாட்டில் தங்கள் அதிருப்தியை அவர்கள் தெரிவித்தனர். 1957 மகாநாட்டிலிருந்து தலைவர்கள் மீது அழுத்தம் பிரயோகிக்கும் செயல் முறையை வாலிபர்கள் கையாண்டார்கள். அதனால் வாலிபர்களின் எதிர்ப்பைச் சமாளிக்க வேண்டிய நிலைக்குஅப்பொழுது கட்சித் தலைமையை வகித்துவந்த வன்னியசிங்கம் தள்ளப்பட்டார். அவர் தன் தலைமையுரையில் பண்டா- செல்வா பேச்சுக்கள் நடந்த சூழ்நிலையை விவரித்தபின்பு இவ்வாறு சொன்னார்: இந்த உடன்பாட்டைப் பலர் வரவேற்கிறார்கள். ஆனால் அதில் அதிருப்தி தெரிவித்தவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். வெளியில் எவ்விதம் அபிப்பிராய பேதம் இருக்கிறதோ அதே அபிப்பிராயபேதம் ஓரளவு கட்சியிலும் பிரதிபலிக்கிறதைக் காண்கிறோம்.

ஒப்பந்தத்தை எதிர்த்த வாலிபர்களைத் திருப்திப்படுத்துவதற்காக தாங்கள் கட்சியின் கொள்கையைச் சிறிதளவும் விட்டுக்கொடுக்கவில்லை என்று வன்னியசிங்கம் சொன்னார். மொழி விஷயத்திலென்றாலென்ன, சமஷ்டிக் கொள்கையிலென்றாலென்ன, குடியுரிமைப் பிரச்சினையிலென்றாலென்ன நாங்கள் எவ்விதமேனும், எங்கள் கொள்கையைச் சிறிதளவேனும் விட்டுக் கொடுக்கவில்லையென்பது உடன்பாட்டில் தெளிவுபடுத்தப்பட்டிருக்கிறது. அத்துடன் அவர் நிறுத்தவில்லை. தமிழரசுக் கட்சி தனது கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்குத் தொடர்ந்து கிளர்ச்சி செய்வதையோ போராடுவதையே ஒப்பந்தம் தடுக்கவில்லை என்றுகூறி வாலிபர்களைச் சாந்தப்படுத்த முயன்றார்.

ஆகஸ்ட் 20இல் தாங்கள் ஆரம்பிக்கவிருந்த சத்தியாக்கிரகத்தை நிறுத்தி வைப்பதற்கு மட்டுமே இணங்கியுள்ளதாக அவர் சொன்னார். அடுத்து எங்கள் அடிப்படைக் கொள்கைகளைத் தாரை வார்த்துக் கொடுத்து விட்டீர்களே என்ற வாலிபர்களின் கோஷத்துக்கு வன்னியசிங்கம் பதிலளித்தார். எங்கள் அடிப்படைக் கொள்கை எதனையும் நாங்கள் தாரைவார்த்து விடவில்லை என்றும் பண்டா - செல்வா ஒப்பந்தத்தை முதற்படி எனவும் சமஷ்டி அமைப்புக்கான அடித்தளம் என்றும் வன்னியசிங்கம் வர்ணித்தார்.



ஜி. ஜி. பொன்னம்பலம் இந்த வாலிபர்களின் அதிருப்தியை தன் அரசியல் இலாபத்துக்காகப் பயன்படுத்தினார். 1957 இறுதியில் யாழ்ப்பாணத்தில் நடத்திய ஒப்பந்த எதிர்ப்புக் கூட்டத்தில், தமிழுக்கு சம அந்தஸ்து கேட்டார்கள். வடக்கிலும் கிழக்கிலும் நிர்வாக மொழியாக இருப்பதற்கு ஒப்புக் கொண்டு விட்டனர். தமிழரசு கேட்டார்கள். பிரதேச சபைகளுடன் திருப்தியடைந்து விட்டனர். மலையைக் கேட்டனர். எலியைத்தான் பிடிக்க முடிந்தது என்றார் பொன்னம்பலம். அவருக்கு தந்தை செல்வா அளித்த பதில்:

> நாங்கள் எமது இலட்சியத்தைக் கைவிடவில்லை. நீண்ட பயணம் போறவர்கள் வழியில் தங்கி தங்கிச் செல்வது வழக்கம். அதுதான் புத்திசாலித்தனமானது. ஒரேயடியாக முயன்றால் இலட்சியத்தை அடைய முடியாது போனாலும் போகலாம் போகாமலும் விடலாம். அதனால்தான் வழியில் தங்கிப் போக முடிவு செய்துள்ளோம். நாம் எமது இலட்சியத்தைக் கைவிடவில்லை. தமிழ் மக்களுக்குள்ளே கிளர்ந்த எதிர்ப்பைச் சமாளிப்பதற்காக, இது ஓர் இடைக்கால ஒழுங்கு மட்டுமே.

என்று அதிருப்தியாளர்களை அழைத்து தந்தை செல்வா சொன்னார்.

சிங்களத் தீவிரவாதிகளும் சிங்கள சந்தர்ப்பவாத அரசியல்வாதிகளும் இந்தத் துரும்பை பற்றிக் கொண்டனர். சிங்களத் தீவிரவாதம் தலைவிரித்தாடுவதற்கு அந்தத் துரும்பு உதவியது. பண்டா- செல்வா ஒப்பந்தத்தை இடைக்கால ஒழுங்கு என்று தமிழரசுக் கட்சி கூறுகிறது. அது உண்மையில் தமிழ் மக்கள் தனி நாட்டை அமைப்பதற்கான முதற்படி என்ற வகையில் சிங்கள தீவிரவாத சக்திகள் தமது எதிர்ப்புப் பிரச்சாரத்தை ஆரம்பித்தன.

1956ல் படுதோல்வி கண்ட யு. என். பி. குறிப்பாக ஜே. ஆர். ஜெயவர்த்தன குழு மீண்டும் தலைதூக்குவதற்கு இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தியது. பொஸ்ற் ஸ்ரெப் (முதற் படி) என்ற தலைப்பில் ஒரு துண்டுப் பிரசுரத்தை அச்சிட்டு அவர்கள் விநியோகித்தனர். அப்பிரசுரத்தில் வடக்கு-கிழக்கு மாகாணங்களிலுள்ள பல்லாயிரக் கணக்கான ஏக்கர் காணிகளை தமிழருக்குப் பண்டாரநாயக்கா விற்று விட்டார் என்று குற்றம் சாட்டினர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஒப்பந்த எதிர்ப்புப் பிரச்சாரம் தீவிரம் அடைவதைக் கண்டதும் தந்தை செல்வா கவலை யடைந்தார். பண்டாரநாயக்காவைச் சந்தித்து ஒப்பந்தத்தை அமுல் செய்யுமாறு கோரினார். பண்டாரநாயக்கா தனது நிலைமையைச் சுட்டிக் காட்டி பொறுமையுடன் இருக்குமாறு கேட்டார். அதே நேரத்தில் பொது நிர்வாக அமைச்சு சிங்களம் மட்டும் சட்டத்தை அமுல் செய்வதைத் தீவிரப்படுத்தியது. இதையிட்டு தமிழ் அரசாங்க அதிகாரிகள் கவலை கொண்டனர். தமிழரசுக் கட்சியை உருப்படியான நடவடிக்கை எடுக்குமாறு வற்புறுத்தினர். 1958 மார்ச் 1-2 திகதிகளில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வருடாந்த மகாநாடு களனி யில் நடந்தது. அந்த மகாநாட்டிலும் ஒப்பந்தத்தை ஆதரித்துப் பண்டார நாயக்கா உரையாற்றினார். தமிழரசுக் கட்சித் தலைவர்கள் என்னுடன் நடத்திய பேச்சுக்களின்போது கௌரவமான தீர்வு ஒன்று காணப்பட்டது என்று அவர் சொன்னார்.

அந்தக் கௌரவமான தீர்வை ஆயுதமாக உபயோகித்து மீண்டும் பதவிக்கு வர யு. என். பி. திட்டமிட்டது. இதற்கிடையில் டட்லி சேனநாயக்காவும் மீண்டும் அரசியலுக்கு வந்துவிட்டார். பிரதேச சபைகள் என்ற போர்வையில் இலங்கையை இன ரீதியில் துண்டாடும் பண்டாரநாயக்கா - செல்வநாயகம் ஒப்பந்தத்திலிருந்து, எனது உயிரைக் கொடுத்தாலும், நாட்டைக் காக்கத் தயாராகவுள்ளேன் என்று அவர் அறிக்கை விடுத்தார். இந்த அறிக்கையை உபயோகித்து ஜெய வர்த்தனா சிங்கள உணர்வைத் தூண்டிவிட்டார்.

# 8

# ஒப்பந்தம் கிழிப்பு

### கண்டி யாத்திரை

பண்டாரநாயக்கா - செல்வநாயகம் ஒப்பந்தம் அமுல் செய்யப் படுவதைத் தடுப்பதற்காக கண்டி தலதா மாளிகாவையில் வழிபாடு நடத்துவதாகக் கூறி கண்டி யாத்திரையை ஒழுங்கு செய்தார் ஜெய வர்த்தன. கொழும்பிலிருந்து யாத்திரை புறப்பட்டது. டட்லியும், ஜே. ஆரும் ஊர்வலத்தின் முன்னால் சென்றனர். பாலத்துறைச் சந்தியை ஊர்வலம் அடைந்ததும் கற்கள் எறியப்பட்டன. களனிப் பாலத்தை அடைந்ததும் கல்வீச்சு தீவிரமடைந்தது. ஊர்வலத்தில் போனவர்களும் திரும்பித் தாக்கினார்கள். கம்பஹா தொகுதியில் உள்ள இம்புல்கொடைச் சந்தியை அடைந்ததும் கம்பஹா எம். பி. எஸ். டி. பண்டாரநாயக்காவும் அவரின் ஆதரவாளர்களும் றோட்டுக்குக் குறுக் கே படுத்து ஊர்வலம் மேலே போவதைத் தடுத்தனர்.

ஊர்வலத்தைக் கைவிட்ட ஜே.ஆரும் ஆதரவாளர்களும் யு.என்.பி. ஆதரவாளர் ஒருவரின் வீட்டில் இரவைக் கழித்தனர். அவ் வீட்டுக்குள்ளும் கற்கள் வீசப்பட்டன. யு. என். பி. தலைவர்களில் சிலர் கார்களில் ஊர்வலமாகப் போய் தலதா மாளிகாவையில் வழிபட்டனர். கண்டி யாத்திரை தோல்வியில் முடிந்தாலும் சிங்கள மக்களின் உணர்வை அது தூண்டிவிட்டது.

கண்டி யாத்திரை நடைபெற்ற அதே நாட்களில் போக்குவரத்து அமைச்சு ஓர் அறிக்கையை வெளியிட்டது. சிங்கள ஸ்ரீ இலக்கத் தகடு பொறித்த பஸ்களை வடக்கு-கிழக்கு மாகாணங்களுக்கு அனுப்பப் போவதாக அவ்வறிக்கை கூறியது. தமிழரசுக் கட்சியின் செயற்குழு மார்ச் 16ல் கொழும்பு சரஸ்வதி மண்டபத்தில் கூடி எதிர்ப்புப் போராட்டத்தை மறுபடியும் ஆரம்பிப்பதென முடிவு செய்தது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மார்ச் மாதம் 29ம் திகதி யாழ்ப்பாணத்திலும் மட்டக்களப்பிலும் மற்றும் தமிழ்ப் பகுதிகளிலும் சிங்கள ஸ்ரீ எதிர்ப்பு இயக்கம் ஆரம் பிக்கப்பட்டது. யாழ்ப்பாணத்தில் அமிர்தலிங்கம் தலைமையில் சிங்கள ஸ்ரீ எழுத்தின்மீது தாரைப்பூசி அதன்மீது தமிழ் ஸ்ரீயை எழுதினர். மட்டக் களப்பில் தந்தை செல்வா அப்பணியைச் செய்தார். தலைவர்கள் கைசெய்யப்பட்டு அவர்களுக்கு எதிராக வழக்குகள் தாக்கல் செய்யப் பட்டன. தந்தைக்கு எதிரான வழக்கு மட்டக்களப்பு மாஜிஸ்திரேற் கோட்டில் எடுக்கப்பட்டது. சார்ஜண்ட் தம்பிஜயா சாட்சிய மளித்தார். தந்தை செல்வா சாட்சியமளிக்க மறுத்து விட்டார். தந்தைக்கு 10 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. அபராதத் தொகையைக் கட்ட அவர் மறுத்ததனால் ஒரு வார சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. சிறைத் தண்டனையை அவர் அனுபவித்தார். ஒரு வாரத்தில் அவர் விடுதலை செய்யப்பட்ட போது அவருக்குப் பிரமாண்டமான வரவேற்பு அளிக்கப் பட்டது.

சிங்கள ஸ்ரீ வழக்கு விசாரிக்கப்படுவதற்கு முன்பே சரித்திரப் பிரசித்தி பெற்ற பண்டாரநாயக்கா - செல்வநாயகம் ஒப்பந்தம் கிழித் தெறியப் பட்டுவிட்டது. கண்டி யாத்திரை தோல்வியுற்ற பின் யு. என். பி. ஆதரவாளர்களும் சிங்களத் தீவிரவாதிகளும் சும்மா இருக்கவில்லை. புத்த பிக்குகளையும் பௌத்த பெரமுனையினரையும் தூண்டி விட்டனர். 1958 ஏப்ரல் 8 முதல் நாளே இரகசியப் பொலிஸார் பிரதமரை எச்சரித்து விட்டனர். பிரதமரின் ரொஸ்மிட் பிளேஸ் வீட்டுக்கு முன்னால் பௌத்த பிக்குகள் சத்தியாக்கிரகம் செய்யவுள்ளனர் என்பதே அந்த எச்சரிக்கை. பாதுகாப்பு ஒழுங்குகளைத் தீவிரப்படுத்துமாறு பிரதமர் உத்தரவிட்டார். வீட்டு வாசலுக்கு சற்றுத் தூரத்தில் முள்ளுக்கம்பி வேலி போடப் பட்டது.

காலை 9 மணி பௌத்த பிக்குகள் ஊர்வலமாக வந்தனர். அவர்களுக்கு சுதந்திரக் கட்சிப் பிக்குகளே தலைமை தாங்கினர். கம்பி வேலிக்கு முன்னால் போய் உட்கார்ந்தனர். பௌத்த பிக்குகள் வருவ தற்கு முன்பே அமைச்சர்களும் கட்சி ஆதரவாளர்களும் ரொஸ்மிட் பிளேஸ் வீட்டுக்குள் நிறைந்து விட்டனர். என்ன செய்வது? என்று தனது அமைச்சர்களை அழைத்துக் கேட்டார் பிரதமர். அவர்களுக்கும் என்ன செய்வதென்று தெரியவில்லை. அமைச்சர் ஏ. பி. ஜெயசூரியா சொன்னார்: சேர்! நீங்கள் வெளியே போய் அவர்களைக் கும்பிட்டு நிலைமையைச் சமாளியுங்கள். ஒப்பந்தத்தைக் கைவிடுமாறு அவர்கள் சொன்னால் என்ன செய்வது என்ற கேள்வி எழுந்தது. பௌத்த பிக்குகள் சொல்வதைச் செய்யுமாறு அமைச்சர்கள் வற்புறுத்தினர்.



பண்டாரநாயக்கா போய் பிக்குகளைக் கும்பிட்டார். என்ன செய்யச் சொல்கிறீர்கள் என்று கேட்டார். ஒப்பந்தத்தைக் கை விடுங்கள் என்றனர் பிக்குகள். அவ்வாறே செய்ய இணங்கினார் பிரதமர். ஒப்பந்தப் பத்திரத்தைக் கொண்டு வந்து எங்கள் முன்னாலேயே கிழித்தெறியுங்கள் என்றார் ஒரு பிக்கு. பண்டாரநாயக்கா திரும்பிப் போய் ஒப்பந்தப் பத்திரத்தை எடுத்து வந்து அதைத் துண்டு துண்டாகக் கிழித்து பிக்கு களை நோக்கி வீசினார். சாது, சாது, சாது. பிக்குகள் அதன் பின் எழுந்து சென்றனர். இரண்டரை மாதங்களாக நடத்திய பேச்சுக்கள் மூலம் செய்யப்பட்ட ஒப்பந்தத்தை அரை மணித்தியாலயத்தில் கிழித்தெறியச் செய்துவிட்ட திருப்தி அவர்களின் முகங்களில்.

ஒப்பந்தம் கிழித்தெறியப்பட்டதைக் கேள்விப்பட்டதும் தந்தை செல்வா மிகவும் வேதனைப்பட்டார். பண்டாரநாயக்காவும் வேதனைப் பட்டதாக டாக்டர் பதியுதீன் மஹ்முத் பின்பு என்னிடம் சொன்னார். அடுத்த நாள் அதிகாலையில் தந்தை செல்வாவும் நாகநாதனும் பண்டார நாயக்காவைப் போய்ப் பார்த்தனர். அவர் மிகவும் கவலையுடன் காணப்பட்டார். தன்னுடைய நிலையை உணர்ந்து கொள்ளும்படி பண்டாரநாயக்கா செல்வாவைக் கேட்டார்.

ஏப்ரல் 10ம் திகதி தமிழரசுக் கட்சியின் செயற்குழுவின் அவசரக் கூட்டம் நடத்தப்பட்டது. அதில், ஒப்பந்தம் கிழிக்கப்பட்டதன் விளைவு களை ஆராய்வதற்கு வவுனியாவில் மே மாதம் 5ம் திகதி கட்சியின் ஆறாவது தேசிய மகாநாட்டைக் கூட்டுவது என முடிவு செய்யப் பட்டது. அம்மகாநாட்டின் தலைவராக திருமலை எம். பி. என். ஆர். இராஜவரோதயம் தெரிவு செய்யப்பட்டார். அவர் தனது தலைமை யுரையில், “தமிழ் பேசும் மக்களை இன்று ஒருவித சஞ்சலம் பிடித்தி ருக்கின்றது. நாட்டில் நடைபெற்று வரும் சிற்சில சம்பவங்களைக் குறித்து அவர்கள் கவலை கொண்டுள்ளார்கள். இன்றைய அரசாங்கம் தங்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதாக இல்லை என்ற உணர்ச்சி அவர் தம் உள்ளத்தில் அலை மோதுகிறது. நாட்டில் கட்டவிழ்த்து விடப் பட்டிருக்கும் நாட்டாமுட்டித் தனத்தையும் காடையர்களின் திட்ட மிட்ட ஆர்ப்பாட்டத்தையும்தான் குறிப்பிடுகிறேன்” என்றார்.

தமிழருக்குப் பாதுகாப்பு இல்லை என்பதையே அவர் வலியுறுத் திக் கூறினார். அதேவேளை, ஆயுதப் போராட்ட யோசனையை நிராகரித்தார். இப்பொழுதே அழுத்தந் திருத்தமாக ஒன்று கூற விரும்பு கின்றேன். சாத்வீகம், சத்தியாக்கிரகம் என்பனவெல்லாம் எங்களைப் பொறுத்தவரை வெறும் கட்சிக் கொள்கைகள் மட்டுமல்ல, அவை எங்களுடைய ஆத்மார்த்தமான நம்பிக்கைகளாகும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஒப்பந்தம் கிழிக்கப்பட்டதன் விளைவுகளையும், அடுத்து எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கையையும் கொடுக்கும் வவுனியாத் தீர்மானம் இது: ஒப்பந்தம் கையெழுத்தான ஆறு மாதங்களுக்குள் அதிலுள்ள விடயங்களை நடைமுறைப் படுத்துவதாகப் பிரதமர் உறுதியளித்தார். ஒப்பந்தத்தின் உள்ளடக்கங்களுக்கு முரணாகவும் நட்புரிமைக்குக் குந்தகமாகவும் நடந்து கொண்ட பிரதம அமைச்சர் ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவதைத் தாமதப் படுத்தி, இறுதியில் அதனை ஒரு தலைப்பட்சமாக முறித்தும் விட்டார். ஒப்பந்தம் கிழித் தெறியப்பட்ட கண்ணியமற்ற செயல் - கிழித்தெறியப்படக் காரண மாய் அமைந்த சூழல்- காடைத்தனமும் பயங்கரவாதமும் தூண்டி விடப்பட்டமை- என்பவை வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டிய வையாகும்.

இதனால் சிங்களவர் பெரும்பான்மையாக வாழும் பிரதேசங் களில் உள்ள தமிழரின் உயிர்களுக்கும் உடைமைகளுக்கும் ஆபத்தான நிலை உருவானதையும் நாம் உணர்ந்து கொண்டோம். பொலநறு வையிற் கட்டவிழ்த்து விடப்பட்ட காடைத்தனம் காரணமாக, மட்டக்க ளப்பு மாவட்டத்திலுள்ள தமிழ் பேசும் மக்கள் நெடுஞ்சாலை வழியா கவோ, புகை வண்டி மூலமாகவோ இம்மகாநாட்டுக்கு வரமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

பல்வேறு பகுதிகளிலும் பரந்து வாழும்தமிழர்களும், அங்கு பயணஞ் செய்வோரும் ஆயுதந் தாங்கிய காடையர்களால் துன்புறுத்தப் படுகின்றனர். தமிழரின் வணிக நிலையங்களை ஒன்றி யொதுங்கில் (பகிஷ்காரம்) செய்யவும் மறியல் செய்யவும் தூண்டும் வன்முறை இயக்கங்கள் நாடெங்கும் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன. அமைதி யாக வாழும் மக்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டிய காவற்று றையினர் தமிழருக்குத் தீங்கிழைத்தல், பயமுறுத்தல், அவர்களுடைய வீடுகளுக்குள்ளும், கடைகளுக்குள்ளும் அத்துமீறிப் புகுதல் போன் றவற்றில் ஈடுபடும் பயங்கரவாதிகளுக்குப் பாதுகாப்பு அளிக்கின்றனர்.

நாகரிகம் அடைந்த சமுதாயங்களிலும் அரசுகளிலும் மக்களுக்கு வழங்கப் படும் சாதாரண பாதுகாப்பைக் கூடச் சிறுபான்மையினரான தமிழருக்கு வழங்க அரசு முன்வரவில்லை. இந்த அரசு தமிழருக்குப் பாதுகாப்பு வழங்க முன்வரவில்லை என்பதையோ அல்லது அதன் செயலாற்றும் சக்தியற்ற நிலையையோதான் காட்டுகின்றது. தமிழ் பேசும் மக்களுக்கு ஏற்பட்ட அனுபவங்கள்- அரசுடன் ஒப்பந்தம்



செய்வதாலோ, பாராளுமன்ற நடவடிக்கைகளில் தொடர்ந்து பங்கு கொள்வதாலோ, அரசியலமைப்புத் தெரிவுக் குழுவில் அங்கம் வகிப்பதாலோ எவ்வித பயனும் விளையப் போவதில்லை என்ற முடிவுக்கு அவர்களை இட்டுச் சென்றுள்ளது. எனவே, திருமலைத் தீர்மானத்திற் குறிப்பிட்ட படி, விடுதலைபெற அகிம்சை வழியிற் போராடுவதைத் தவிர வேறு வழியில்லை என்ற தீர்க்கமான முடிவுக்குத் தமிழ் பேசும் மக்கள் வந்துள்ளனர்.

எனவே,

1 ஈழம் வாழ் தமிழ் பேசும் மக்கள், என்றும் தமது விடுதலை - சுயகௌரவம் - பாதுகாப்பு ஆகியவற்றைப் பெற்று நிலை நிறுத்தும் பொருட்டு, இம்சை கலவாத சட்ட மறுப்புப் போராட்டத்தை ஆரம்பிப்பது என்று 1958 மே 25ம் நாள் வவுனியாவில் நடைபெறும் தேசிய மகாநாட்டிற் குழுமி யுள்ள தமிழ் பேசும் மக்கள் தீர்மானிக்கின்றனர்.

2 திருவாளர்கள் சா. ஜே. வே. செல்வநாயகம், கு. வன்னிய சிங்கம், அ. அமிர்தலிங்கம், செ. இராசதுரை, தலைவர் (திரு. ந. இராஜவரோதயம்) ஆகியோரைக் கொண்ட நடவடிக்கைக் குழுவை நியமிப்பதென்றும், போராட்ட இயக்கங்களை நெறிப்படுத்தவும் நடத்தவும் அவர்களுக் குப் பூரண அதிகாரம் வழங்குவதென்றும், வேண்டும் போது தமக்குப் பதிலானவர்களை நியமிக்கும் அதிகாரத்தை அவர்களுக்கு அளிப்ப தென்றும் இம் மகா நாடு தீர்மானிக்கிறது.

3 1958, ஆகஸ்ட் 20ம் நாளுக்கு முன்பாக நேரடி நடவடிக்கை ஆரம்பிக்கப்படவேண்டுமென இம்மகாநாடு பணிக்கிறது.

4 சமூக ஏற்றத்தாழ்வுகளையும் அநீதிகளையும் அகற்றி - பிளவு பட்டு நிற்கும் தமிழ் மக்களை ஒன்று திரட்டல் - என்ற கட்சியின் அடிப்படை இலட்சியங் களுக்கேற்ப - எமது மக்களில் ஒரு பகுதியினரைச் சிறப்புரிமையற்ற வர்களாக ஒதுக்கி வைத்திருப்பதை அகற்றி, அவர்களுக் கும் சம உரிமை வழங்க மக்களைத் தூண்டும் போராட்டத் தை நடத்துவதென்றும் அதற்கான தெரிவுக் குழுவுக்கு மக்கள் அனைவரையும் பூரண ஒத்துழைப்பு நல்குமாறு

.......  .....  ......

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வேண்டுவதென்றும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாடு தீர்மானிக்கிறது.

**கொழும்பு எரிந்தது**

1958ல் நான் கொழும்பு கண் ஆஸ்பத்திரிக்கு கிட்ட உள்ள பவுண்டன் ஹவுஸ் லேனில் சிவராமலிங்கம் என்ற நண்பரின் வீட்டில் வசித்தேன். எனது சிரேஸ்ட பத்திரிகையாளர் செல்லப்பா நடராசாவும் அங்கு வசித்தார். மே மாதத்தில் எனது நைற் டியுட்டி. நடராசா பகலில் வேலை செய்தார். பகலில் வீட்டில் நிற்பவர்கள் சமையல் செய்வோம். பகல் வேலை செய்வோர் மத்தியானம் வந்து சாப்பிடுவார்கள். பகல் சாப்பிட வந்த நடாவும் நானும் ஹைட்பார்க் மூலைக்குப் போய் பஸ் எடுத்தோம்.

அவிசாவளையிலிருந்து புறக்கோட்டைக்குப் போகும் பஸ் அது. பஸ்ஸிற்குள் ஏறினால்...காடையர் கூட்டம். கைகளில் பொல்லு, கத்திகள். நாங்கள் தமிழில்தான் பேசிக் கொண்டு ஏறினோம். முறைத்துப் பார்த்தார்கள். வழக்கமாகவே நடாவின் முகத்தில் புன் சிரிப்புத் தவழும். காடையரின் முறைப்பைப் பார்த்ததும் நடாவின் முகம் மேலும் மலர்ந்தது. அந்தப் புதிரை இன்னும் என்னால் விடுவிக்க முடியவில்லை. நடாவின் புன் சிரிப்பு விரிந்ததற்கு பயம் காரணமா? அல்லது அலட்சியம் காரணமா?

அது தான் நாங்கள் சந்தித்த முதற் கலகம். ஆனால் அது தமிழர் களைப் பொறுத்தவரை இரண்டாவது கலகம். முதலாவது கலகம் 1956ல் காலிமுக சத்தியாக்கிரகத்தைத் தொடர்ந்து நடந்தது. நேராகப் போய் முன் ஆசனத்தில் உட்கார்ந்தோம். காடையர்கள் பின்னால், வழியில் பஸ் நிற்கவில்லை. லேக்ஹவுஸை நெருங்கியதும் திடீரென எழும்பி மணியை அடித்தோம். டிரைவர் பிரேக் பிடித்தார். பாய்ந்து இறங்கி லேக் ஹவுஸிற்குள் புகுந்து விட்டோம். அந்தக் காடையரை ஏமாற்றி விட்ட நினைப்பு எங்களுக்கு. பின்பு தான் தெரிந்தது. அவர்களுக்கு நாங்கள் சின்ன இரை. பெரிய இரையைத் தேடி அவர்கள் புறக்கோட் டைக்குப் போகிறார்கள் என்பது.

லேக்ஹவுசின் பாதுகாப்புக்குள் போன பின்பு தான் தெரிந்தது புறக்கோட்டையில் நடந்த வெறியாட்டம். தமிழரைத் தேடித் தேடித் தாக்கினார்கள். தமிழர் கடைகள் தீயிடப்பட்டன. பல அலுவலகங் களுக்கும் அந்த வெறியாட்டம் பரவியது. சிற்றூழியர் தமது தமிழ் மேலதிகாரிகளைத் தாக்கினர். ஓட ஓட விரட்டி அடித்தனர். அன்று



பிற்பகல் கொழும்பின் பல பகுதிகளில் சொக்கப்பனை எரியும் காட்சி. லேக் ஹவுஸிலிருந்து பார்த்த போது வடிவாகத் தெரிந்தது.

இரவு சாப்பாட்டுக்காக நானும் நடாவும் கன்ரீனுக்குப் போனோம். காஷியர் ஒரு சிங்களப் பெண். எங்களை மலர்ந்த முகத்துடன் வரவேற்றார். கலகம் முடியும் வரை லேக் ஹவுசுக்குள்ளேயே இருங்கள். இங்கே ஆபத்தில்லை. அன்றிரவு அங்கேயே கழித்தோம்.

"எங்களுக்குக் கிடைத்த பாதுகாப்பு பெருந்தொகையான தமிழ் மக்களுக்குக் கிடைக்கவில்லை". வீடுகளுக்குள் புகுந்து காடையர் தாக்கினர். பெருந்தொகையான சந்தர்ப்பங்களில் சிங்கள அயலவர் தமிழர்களைக் காப்பாற்றினர். அக்காலத்தில் இலங்கை வானொலியில் கொடிகட்டிப் பறந்த சுந்தரலிங்கம் பாமன்கடையில் சொந்த வீட்டில் வசித்தவர். அவரின் வீட்டைக் காடையர் சூழ்ந்து கொண்டனர். அவரின் சிங்கள நண்பர்கள் சுந்தரலிங்கத்தையும் அவரின் குடும்பத்தினரையும் காடையர்களிடமிருந்து மீட்டுக் கொண்டு போய் சரஸ்வதி மண்ட பத்தில் ஆரம்பிக்கப்பட்ட அகதி முகாமில் சேர்த்தனர்.

கொழும்பில் மட்டும் பல அகதி முகாம்கள் முளைத்தன. உடுத்த உடையுடன் முகாம்களுக்கு வந்து சேர்ந்தோர் பலர். அடுத்த நாள் பின்னேரம் நாங்கள் வீட்டுக்குப் போனோம். எங்கள் வீட்டுக்கு அருகே இருந்த தமிழ்க் கடையொன்று எரிக்கப்பட்டிருந்தது. மூன்றாம் நாள் பிற்பகல் கப்பித்தாவத்தை கோவிலுக்குப் போனேன். அக் கோவிலும் அருகேயுள்ள தொண்டர் வித்தியாலயமும் அகதிமுகாம்களாக்கப்பட் டிருந்தன.

அங்கு போய்ப் பார்த்ததும் எனக்கு ஓர் உண்மை புலப்பட்டது. "தமிழன் தமக்குள் யாழ்ப்பாணத்தான், மட்டக்களப்பான், வன்னி நாட்டான், தோட்டக்காட்டான், என்ற வித்தியாசங்களைப் பாராட்டு கிறார்கள். சிங்களக் காடையருக்கு எல்லாரும் தமிழர்தான். எல்லாத் தமிழருக்கும் சமத்துவ ரிற்மன்ந்". தொண்டர் வித்தியாலயத்தில் தங்கியிருந்த அகதிகளில் பெரும்பாலானோர் இந்தியத் தமிழர்கள். தமிழரசுக் கட்சியினர் நடத்தும் சத்தியாக்கிரகத்துடனும் சட்ட மறுப்புப் போராட்டங்களுடனும் சொற்பமும் தொடர்பில்லாதவர்கள். அவர்கள் தாக்கப்பட்டது தமிழன் என்பதற்காக.

நாலாம் நாள் சரஸ்வதி மண்டபத்திலிருந்த அகதி முகாமுக்குப் போனோம். அங்கு நாங்கள் கேட்ட இரண்டு கதைகள் எங்கள் உள்ளங் களில் வடுவாகப் பதிந்தன. முதலாவது கதை பாணந்துறை ஐயர் எரிப்பு சம்பந்தமானது. கொழும்பில் ஆரம்பித்த கலகம் பிற்பகல் பாணந் துறைக்குப் பரவியது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

பாணந்துறை பிள்ளையார் கோவிலுக்கு அருகேயுள்ள சந்தியில் காடையர் குழுமினர். கோவில் பக்கம் ஓடினார்கள். குருக்கள் பயந்து போனார். ஓடிப் போய் கட்டிலுக்குக் கீழே பதுங்கினார். அவரைத் தலை மயிரிலும் கைகளிலும் பிடித்து சந்திக்குக் கொற கொற வென்று இழுத்து வந்த காடையர் அருகிலிருந்த பெற்றோல் நிலையத்திலிருந்து எடுத்து வந்த பெற்றோலால் குருக்களுக்கு அபிஷேகம் செய்தனர். பின்பு ஒருவன் தீக்குச்சியைக் கிழித்து குருக்களை தீபம் ஏற்றினான். குப்பென கிளம்பிய தீச் சுவாலையை ரசித்துக் கும்மாளம் போட்டது கும்பல். குருக்கள் சொக்கப்பனையானர். காடையர்கள் கூட்டம் மகிழ்ச்சிக் கோஷம் போட்டது. "பறைத் தமிழருக்கு சரியான பாடம்" என்ற மந்திரத்தை ஓதியது. குருக்கள் புழு போல் சுருண்டு கருகி சாம்பரானார்.

அடுத்த சம்பவம் உருகிய தார்ப் பீப்பாய்க்குள் குழந்தையைப் போட்டது பற்றியது.

தெகிவளையிலிருந்த தமிழ் வீடு ஒன்றைக் காடையர் எரித்தனர். அப்பொழுது சிறு எரி காயங்களுடன் தப்பிய பெண்ணை நாங்கள் பேட்டி கண்டோம். தான் அனுபவித்த அவலங்களை அவர் கூறினார். எங்கள் வீட்டின் முன்னால் சிங்களக் காடையர் கூட்டம் குவிந்து விட்டது. நாங்கள் பின்னாலிருந்த சமையல் அறைக்குள் பதுங்கினோம். காடையர் சிலர் அங்கு வந்தனர். மண்ணெண்ணை ஊற்றி தீ வைத்தனர். நாங்கள் பின் மதிலை நோக்கி ஓடினோம். என் கணவரைப் பிடித்து குத்தி கொலை செய்தனர். அவரைக் காப்பாற்ற முயன்ற போது என் சட்டையில் தீ பிடித்தது. பிள்ளைகளையும் இழுத்துக் கொண்டு அடுத்த காணிக்குள் பாய்ந்தேன் என்றார் அவர். "கொதித்துக் கொண்டிருந்த தார் பீப்பாக்களுக்குள் தமிழ்க் குழந்தைகளைச் சிங்களக் காடையர் வீசியதை" தான் கண்டதாக அப்பெண் கூறினார்.

தமிழரசுக் கட்சியின் வவுனியா மாநாடு மே 25ம் திகதி நடந்தது. அம் மாநாட்டுக்கு ரயிலில் சென்றவர்களைத் தாக்குவது ஆரம்பத் திட்டம். பதவியா செயற்குழு அத் தாக்குதலுக்குத் திட்டமிட்டது. பதவியாவில் தமிழர் குடியேற்றப்படுவதைத் தடுப்பதற்காக உருவாக்கப்பட்டது அச் செயற்குழு. பதவியாவில் வசித்த சிங்களவரைத் திரட்டிக் கொண்டு பொலநறுவை ரயில் நிலையத்துக்கு செயற்குழுவினர் சென்றனர். பொழுது சாய்ந்து கொண்டிருந்த வேளை. அறிமுகமில்லாத பலர் ரயில் நிலையத்துக்கு வெளியே குழுமுவதை ஸ்டேசன் மாஸ்டர் கவனித்தார். காதைக் கூர்மையாக்கிக் கொண்டார். மட்டக்களப்பு ரயிலைத் தாக்குவது பற்றி அவர்கள் தங்களுக்குள் குசு குசுப்பது அவரின் காதுகளில் விழுந்தது. வெலிக்கந்தை ஸ்டேசன் மாஸ்டருக்கு



விஷயத்தைச் சொன்னார். தமிழ்ப் பயணிகளை உங்கேயே இறக்கி விடுங்கள் என்றார். வெலிகந்தை பொலநறுவைக்கு முந்திய ரயில் நிலையம். நள்ளிரவு நேரத்தில் மட்டக்களப்பு ரயில் பொலநறுவை ஸ்டேசனில் கிரிச்சிட்டு நின்றதும் காடையர்கள் ரயில் பெட்டிகளுக்குள் பாய்ந்தனர். ரயில் பெட்டிகளின் கண்ணாடிகளை அடித்து நொறுக்கினர். ஒரேயொரு தமிழன் அகப்பட்டான். ஓர் ஆசனத்துக்குக் கீழே பதுங்கிக் கொண்டிருந்தான் அவன்.

"நீ தெமிழா?"

"நான் தமிழன் இல்லை!"

அவரின் பதில் அவரைக் காட்டிக் கொடுத்து விட்டது. அடி. உதை. மயங்கிய நிலையில் அந்தத் தமிழனைக் காப்பாற்றி ஆஸ்பத்திரிக்கு ஸ்டேசன் மாஸ்ரர் அனுப்பி வைத்தார். அடுத்த நாள் பொலநறுவையில் வசித்த, வேலை பார்த்த, வர்த்தகம் செய்த தமிழர்கள் தாக்கப்பட்டனர். மே 27ம் திகதி வட மத்திய மாகாணத்தில் ஒரு வதந்தி பரவியது. வவுனியாவிலிருந்து தமிழ் இராணுவம் அநுராதபுரத்தை நோக்கி வருகின்றது என்பதே அது. அங்கிருந்து பொலநறுவைக்குப் போய் அந் நகரையும் அழிக்கப் போகிறது என்ற கதை அடுத்துப் பரவியது. அநுராதபுரம் முதல் பொலநறுவை வரையுள்ள பிரதேசத்தில் வாழ்ந்த தமிழர்கள் தாக்கப்பட்டனர்.

தமிழ் முஸ்லிம் தலைவர்களின் தூதுக் குழுவொன்று பிரதமர் பண்டாரநாயக்காவைச் சந்தித்தது. நிலைமை மோசமாகி விட்டதாகவும் அவசரகாலச் சட்டத்தைப் பிரகடனம் செய்யுமாறும் அக்குழு பிரதமரைக் கோரியது. "அவ்வளவு தூரம் மோசமாகி விட்டதா?" என்று பிரதமர் கேட்டார். "நீங்கள் நிலைமையைப் பெரிது படுத்திக் கூறுகிறீர்கள்?"

அடுத்த நாள் அவர் வானொலி மூலம் நாட்டு மக்களுக்கு உரையாற்றினார். அப்பொழுது, நுவரெலியா முன்னாள் மேயர் டி. ஏ. செனிவிரத்தின மட்டக்களப்பில் சுட்டுக் கொல்லப்பட்டது பற்றியும் குறிப்பிட்டார். அதனால் நிலைமை மேலும் மோசமாகியது. அடுத்த நாள் கலகம் மலை நாட்டுக்கும் பரவத் தொடங்கியது.

தமிழ், முஸ்லிம் தலைவர்கள் கவர்னர் ஜெனரல் சேர். ஒலிவர் குணதிலகவுடன் தொடர்புகொண்டு அவசரகாலச் சட்டத்தைப் பிரகடனம் செய்யும்படி கோரினார்கள். பண்டாவிடம் சொல்லி விட்டேன் என்றார் சேர். ஒலிவர். அரசியல் சட்டப்படி கவர்னர் ஜெனரல்தான் படைத் தளபதி. அவசர காலச் சட்டத்தைப் பிரகடனம் செய்தால் அதிகாரம் போய் விடும். சர். ஒலிவரில் பிரதமர் பண்டாரநாயக்காவுக்கு

www.tamilarangam.net



நம்பிக்கையில்லை. அவர் தன் அரசாங்கத்தைக் கவிழ்த்து விடுவாரோ என்ற சந்தேகம்.

அவசர காலச் சட்டம் பிரகடனம் செய்யப்பட்டதும் சேர். ஒலிவரும் பல நாடகங்களை ஆடித்தான் முடித்தார். பத்திரிகை ஆசிரியர் களை அவர் இராணி மாளிகைக்கு அழைத்தார். அவரின் மேசையில் ஐந்து டெலிபோன்கள் இருந்தன. மேசைக்கு முன்னால் போடப் பட்டிருந்த ஆசனங்களில் பத்திரிகை ஆசிரியர்கள் போய் அமர்ந்தனர். ஒன்றன் பின் ஒன்றாக மூன்று டெலிபோன்கள் அலறின. சர். ஒலிவர் ஒரு டெலிபோனைக் கையில் தூக்குகிறார். வட்? கலகமா? கடையை எரிக்கிறார்களா? சூட்...சூட்.சூட். இரண்டாவது டெலிபோன் அலறு கிறது. முதலாவது டெலிபோனை ஒரு கையில் பிடித்தபடி மறுகையால் அதைத் தூக்கி மற்றக் காதில் வைக்கிறார். தயதாட்சண்யம் காட்டா தீர்கள். சூட். .. சூட்.. சூட் .. அங்கே போன பத்திரிகை ஆசிரியர்களில் ஒருவர் தார்சி வித்தாச்சி. ஒப்சேவர் பத்திரிகை ஆசிரியர். அவர் அலுவலகத்துக்குத் திரும்பி வந்ததும் சர். ஒலிவர் ஆடிய நாடகத்தைச் நடித்துக் காட்டிச் சிரித்தார். நல்ல வேளை மூன்றாவது டெலிபோன் அடிக்க வில்லை. அதுவும் அலறியிருந்தால், இரண்டு டெலிபோன் களை ஒரு கையில் பிடித்துக் கொண்டு மற்றக் கையால் அதைத் தூக்கி சூட்.. சூட் ' என்று கத்தியிருப்பார் என்றார் வித்தாச்சி. இன்னுமொரு தகவலையும் சொன்னார். அடுத்த அறையிலிருந்து சர் ஒலிவரின் உதவியாள் டெலிபோன் செய்திருப்பார்!

"இன்னும் சில நிமிடங்களில் கலகத்தை அடக்கி விடுவேன் பயப்படாதீர்கள்"! அடுத்த நாள் தலைப்புச் செய்தி அது தான். கண்ட இடத்தில் கலகம் செய்வோரை சுட்டுத் தள்ளும்படி கவர்னர் ஜெனரல் உத்தரவு. சில இடங்களில் இராணுவமும் பொலிசாரும் மிகவும் கடுமையாக நடந்து கொண்டனர். தமிழ் இராணுவம் வவுனியா மூலம் அநுராதபுரத்தை அழிக்க வருவதாகப் பரப்பப்பட்ட வதந்தியைப் பதவியா சிங்களவர் நம்பினர். தமிழ் இராணுவத்தைத் தடுத்து நிறுத்த டிராக்டர்களில் துவக்குகள் சகிதம் வவுனியா நோக்கிப் புறப்பட்டனர். அவர்கள் மீது இராணுவம் துப்பாக்கிப் பிரயோகம் செய்தது. இறந்த வர்களின் பிரேதங்களை இராணுவ டிராக்கில் போட்டுக் கொண்டு அநுராதபுரம் எங்கும் பவனி வந்தனர். கிளர்ச்சி செய்வோருக்கு இது தான் கதி என எச்சரிக்கை செய்யும் வகையில் நடந்து கொண்டனர்.

கலகம் அடங்கியது. அகதி முகாம்களில் தங்கியிருந்தோர் தம் சொந்த ஊர்களுக்குப் போக விரும்பினர். அவர்களுக்கு விசேஷ கப்பல்கள் ஒழுங்கு செய்து கொடுக்கப்பட்டன. தமது தாயகம் வடக்கிலும் - கிழக்கிலும் அமைந்திருப்பதை தமிழ் மக்கள் அனுபவ ரீதியாக உணர வைக்கப்பட்டனர்.



கலகத்தின் போது சிங்களவர் தமிழருக்குப் போதித்த பாடங்கள் :

- ★ எல்லாத் தமிழரும் தமிழ் இனத்தைச் சேர்ந்தவர்கள்
- ★ தமிழர் தாயகம் வடக்கும் - கிழக்கும்

**தடுப்புக் காவல்**

ஜூன் 3ம் திகதி அரசாங்க பாராளுமன்றக் குழுக் கூட்டம் நடந்தது. சட்ட விரோத சக்திகள் யாவற்றையும் கட்டுப்படுத்தி விட்டதாகவும் அமைதியை நிலை நாட்டுவதற்கு எல்லா எம். பி.க்களும் உதவ வேண்டும் என்றும் பிரதம மந்திரி பண்டாரநாயக்கா அறிவித்தார். எம்.பி.க்கள் கை தட்டி பிரதம மந்திரிக்குப் பாராட்டுத் தெரிவித்தனர். அடுத்து தமிழரசுக் கட்சியைத் தடை செய்திருப்பதாக பண்டாரநாயக்கா அறிவித்தார். அதையும் கை தட்டி எம். பி.க்கள் வரவேற்றனர். தமிழரசுக் கட்சி எம். பி.க்களைக் கைது செய்ய வேண்டும் என்று கம்பஹா எம். பி.'எஸ். டி. பண்டாரநாயக்காவின் தலைமையில் பல எம். பி. க்கள் கோரிக்கை விடுத்தனர்.

"தமிழரசுக் கட்சியைத் தடை செய்யும் நீங்கள், அடுத்த நடவடிக்கையை எடுத்து தமிழரசுக் கட்சி எம். பி.க்களைத் கைது செய்ய வேண்டும்" என்றார் எஸ். டி.,பிரதமர் பதிலளித்தார்: "அரசாங்கத்திற்கு எதிரான நடவடிக்கைக்கு தமிழரசுக் கட்சி மட்டும் காரணமல்ல. வேறு சில சக்திகளும் அரசுக்கு எதிராகச் செயற்பட்டுள்ளன." அச்சக்திகள் பற்றிய விவரங்களைக் கூறுமாறு எம்.பிக்கள் கேட்டனர்.

பிரதமர்: "பாராளுமன்றக் குழுவுக்குக் கூறக் கூடிய விடயங்கள் அல்ல அவை."

பாணி இலங்கக்கோன்: "தமிழரசுக் கட்சித் தலைவர்களை ஏன் கைது செய்தீர்கள் என்பதை நானும் அறிய விரும்புகின்றேன். அரசாங் கம் மிகவும் பலவீனமானது என்று நாடு முழுவதும் கூறுகிறார்கள். எங்களால் ஆள முடியாவிட்டால் நாங்கள் வெளியேற வேண்டும். தமிழர் எங்களுக்கெதிராக வேலை செய்கிறார்கள். எங்களைப் பதவியி லிருந்து கவிழ்க்க முயல்கிறார்கள். வெளிநாட்டு உதவியுடன் எங்க ளைத் தோற்கடிக்க முயலுகிறார்கள். இறுதியில் எங்களை அழித்து விடுவார்கள். தமிழர்களுக்கு இறுதியாகச் சொல்லி விடுங்கள். சிங்களம் மட்டும் சட்டத்தை ஏற்றுக் கொண்டு இங்கே இருங்கள். இல்லா

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



விட்டால் வெளியேறி விடுங்கள் என்று சொல்லுங்கள். சிங்களவர்களை நகைப்புக்குரியவர்களாக்குகிறார்கள்."

அக் கூற்றுக்கு பிரதமர் அளித்த பதில் : தமிழரசுக் கட்சியினர் அரசாங்கத்தைத் திட்டமிட்டுக் கவிழ்த்து விட்டு, புறம்பான நிர்வாகத்தை வடக்கிலும், கிழக்கிலும் அமைக்க முயலுகிறார்கள். நான் அதை முறியடித்து விட்டேன். அவர்களின் முயற்சி தோற்கடிக்கப்பட்டு விட்டது. எனது இராணுவம் இப்பொழுது வடக்கிலும், கிழக்கிலும் உள்ளது. இந்த இரண்டு மாகாணங்களிலும் இராணுவ ஆட்சி நடக்கிறது. இராணுவ கவர்னர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்களை இராணுவக் கவர்னர்கள் என்று தான் கூறுகிறேன். புறம்பான நிர்வாகத்தை அமைக்கும் முயற்சி மீண்டும் மேற்கொள்ளப்படாதவாறு இராணுவத்தின் உதவியுடன் பார்த்துக் கொள்வேன்.

அகதிகளை வடக்குக்கும், கிழக்குக்கும் அனுப்பியதன் மூலம் சமஷ்டிக் கோரிக்கைக்கு அரசாங்கம் இணங்கி விட்டதாக பல எம். பி. க்கள் குற்றஞ் சாட்டினர். வெகு விரைவில் வடக்கும்-கிழக்கும் தனி இராச்சியங்களாகி விடும் என்று மக்கள் பரவலாக நம்புகிறார்கள்" என்றார் ஒரு எம். பி.

அதை நான் கடைசிவரை அனுமதியேன் என்றார் பிரதமர்.

பழனசூரிய என்ற எம். பி. சொன்னார்: தமிழர்கள் நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் பரந்து தங்களைப் பலப்படுத்துகின்றனர். இதையெல்லாம் அரசாங்கம் சும்மா பார்த்துக் கொண்டிருக்கப் போகிறதா?

லக்ஷ்மன் ராஜபக்ஷ: அவர்களை அழித்து விடுங்கள்.

யார் அப்படிச் சொன்னது என்று பிரதமர் கோபமாகக் கேட்டார்.

ராஜபக்ஷதான் அதைச் சொன்னவர் என்பதை அறிவித்தவுடன், உண்மையாகத்தான் சொல்லுகிறீரா? என்று கேட்டார். அம்பாந்தோட்டை எம். பி. யான ராஜபக்ஷவின் மனைவி தமிழ்ப் பெண்.

ஜூன் 4ம் திகதி தந்தை செல்வா கலகத்தின் போது நடந்த சம்பவங்களைப் பற்றிய விரிவான அறிக்கையொன்றைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார். கலகத்தைப் பற்றிய அன்றைய விவாதம் இரவு 10 மணிக்கு முடிவடைந்தது. தமிழரசுக் கட்சி எம். பிக்கள் வீடு திரும்பினர். தந்தை செல்வாவும் டாக்டர் நாகநாதனும் வி. ஏ. கந்தையாவும் அவர்களின் வீடுகளில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டனர். வி. என். நவரத்தினம், இராஜவரோதயம், வன்னிய சிங்கம், அமிர்தலிங்கம், ராஜதுரை, ஆகியோர் கால்பேஸ் ஹோட்டலில் இரண்டாவது மாடியில் தடுத்து வைக்கப்பட்டனர். யாழ்ப்பாணத்திலும் மட்டக்களப்பிலும் தமிழரசுக் கட்சித் தொண்டர்கள் கைது செய்யப்பட்டனர். சுதந்திரன்



காரியாலயம் சீல் வைக்கப்பட்டது. ஜாதிக விமுக்திப் பெரமுனையையும் அரசு தடை செய்தது. அதன் தலைவர் கே. எம். பி. ராஜரத்தின தடுப்புக் காவலில் வைக்கப்பட்டார். வவுனியா மகாநாடு முடிவு செய்திருந்ததைப் போல ஆகஸ்ட 20ல் சத்தியாக்கிரகத்தை ஆரம்பிக்க முடியவில்லை.

**தமிழ் மொழி உபயோகச் சட்டம்**

தந்தை செல்வாவின் வீட்டுக்கு முன்னால் பொலிஸ் காவல் போடப்பட்டது. வெளியார் எவருடனும் தொடர்பு கொள்ள அவரை அனுமதிக்கவில்லை. அதே நிலைதான் டாக்டர் நாகநாதனுக்கும், வி.ஏ.கந்தையாவுக்கும். அவர்களின் வீடுகளில் அடக்கி வைக்கப்பட்டனர். வி. என். நவரத்தினம், இராஜவரோதயம், வன்னியசிங்கம், அமிர்தலிங்கம், இராஜதுரை ஆகியோர் முதலில் கால்பேஸ் ஹோட்டல் இரண்டாவது மாடியில் வைக்கப்பட்டனர், பின்பு, ஸ்டென்மோர் கிறசென்டிலுள்ள ஒரு வீட்டில் காவலில் வைக்கப்பட்டனர்.

கொழும்பின் பல பகுதிகளிலும் அவசர அவசரமாக ஆரம்பிக்கப்பட்ட அகதி முகாம்களில் இருந்த தமிழ் மக்கள் கப்பல்கள் மூலம் யாழ்ப்பாணத்துக்கும், மட்டக்களப்பிற்கும் போய்ச் சேர்ந்ததும் அங்குள்ள வாலிபர்கள் கொதித்தனர். பாணந்துறை பிள்ளையார் கோவில் குருக்கள் பெற்றோல் ஊற்றி உயிருடன் எரிக்கப் பட்ட தகவல் அவர்களை உணர்ச்சி வசப்படுத்தியது. சிங்களக் குடும்பங்கள் அங்கும் இங்கும் தாக்கப்பட்டன. இதைக் கேள்விப்பட்டதும் தந்தை மிகவும் கவலையடைந்தார். சிங்கள மக்கள் தாக்கப் படுவதை வன்மையாகக் கண்டித்து அறிக்கையொன்றை விடுத்தார்.

அது, இன்றைய கடினமான சூழ்நிலையில் தமிழ் மக்கள் அமைதியாக இருந்து சமாதானத்தைக் காக்க வேண்டும் என்று கூறியது. சிங்கள மக்கள் தாக்கப்பட்டால் தான் தமிழரசு கட்சியிலிருந்து விலகப் போவதாகவும் பயமுறுத்தினார். தங்கள் பகுதிகளில் வாழும் சிங்களக் குடும்பங்களைப் பாதுகாக்கும் பொறுப்பு அந்தந்தப் பகுதி தமிழரசுக் கட்சிக் கிளையைச் சார்ந்தது எனவும் அறிவித்தார்.

அதேவேளை, புத்த பிக்குகளின் வற்புறுத்தலின் பேரில் ஒப்பந்தத்தைக் கிழித்து எறிந்ததையிட்டு கவலை கொண்ட பண்டாரநாயக்கா அதிலுள்ள அம்சங்களை ஒவ்வொன்றாக நடைமுறைப்படுத்த முடிவு செய்தார். இந்த முடிவுக்கமைய ஒப்பந்தத்தில் தமிழ் மொழியின் உபயோகம் பற்றிக் குறிப்பிட்டிருந்தவற்றை அமுல் செய்யும் நோக்குடன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தமிழ் மொழி உபயோகச் சட்டத்தை இயற்றுவதற்கு பண்டாரநாயக்க நடவடிக்கை எடுத்தார்.

1958 ஜூலை மூன்றாம் வாரத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் பட்ட அம்மசோதாவை ஆகஸ்ட் 5ஆம் திகதி விவாதத்திற்கு எடுக்க முடிவு செய்யப்பட்டது. தமிழரசுக் கட்சிப் பிரதிநிதிகளை வீட்டுக் காவலில் வைத்து விட்டு தமிழ் மொழி உபயோக மசோதாவை பாராளுமன்றத்தில் விவாதிப்பதை எதிர்க்கட்சித் தலைவரான என். எம். பெரேரா எதிர்த்தார். டாக்டர் பெரேரா லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவர்.

தமிழரசுக் கட்சி எம்.பி.க்களை பொலிஸ் பாதுகாப்புடன் பாராளு மன்றத்திற்குக் கொண்டுவரத் தான் தயாராக இருப்பதாக பிரதம மந்திரி சொன்னார். அவரின் முடிவுக்கமைய தமிழரசுக் கட்சி எம். பி. க்களை பொலிஸார் தந்தையின் வீட்டுக்குக் கொண்டு போனார்கள். பொலிஸ் பாதுகாப்புடன் பாராளுமன்றத்திற்குப் போவதா இல்லையா என்பதைப் பாராளுமன்றப் பிரதிநிதிகள் விவாதித்தனர். பொலிஸ் காவலில் பாராளு மன்றத்திற்குப் போய் விவாதத்தில் கலந்து கொள்வது தமிழ் இனத்துக்கு இழுக்கு என்பதை தந்தை ஆணித்தரமாக அடித்துச் சொன்னார். அதை மற்றவர்களும் ஏற்றுக் கொண்டனர். பாராளுமன்றத் திற்குப் போவ தில்லை என்ற முடிவு செய்யப்பட்டது. அதன்படி தமிழரசுக் கட்சி தமிழ் மொழி உபயோக சட்ட மசோதா விவாதத்தில் கலந்து கொள்ள வில்லை.

ஆகஸ்ட் 5ம் திகதி பிற்பகல் 2 மணிக்கு விவாதம் ஆரம்பித்த போது எதிர்க்கட்சித் தலைவர் டாக்டர் என். எம். பெரேரா அறிக்கையொன்றை விடுத்து விட்டுச் சபையிலிருந்து வெளிநடப்புச் செய்தார். இடது சாரிக் கட்சி உறுப்பினர் யாவரும் அவருடன் சேர்ந்து வெளியேறினர். தமிழ் மொழி உபயோகச் சட்டத்தினால் பாதிக்கப்படும் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் கலந்துகொள்ளாத பாராளுமன்றக் கூட்டத்தில் மசோ தாவை விவாதிப்பதோ நிறைவேற்றுவதோ முறையற்றது. அதனால், தாங்கள் வெளிநடப்புச் செய்வதாக டாக்டர் பெரேராவின் அறிக்கை கூறியது.

யு. என். பி. பிரதிநிதிகளும் விவாதத்தில் கலந்து கொள்ள வில்லை. அதற்கு வேறு காரணம். தமிழ் மொழி உபயோகத்தை எதிர்ப்பதனால் தாங்கள் வெளியேறுவதாக யு. என். பி.,எம். பி.க்கள் சொன்னார்கள்.

செப்டம்பர் 4ம் திகதி காலை நான் லேக் ஹவுசுக்குப் போனபோது தமிழரசுக் கட்சித் தலைவர்கள் விடுதலை செய்யப்படவிருப்பதாக



தெரிய வந்தது. டெய்லி நியுஸ், தினமின செய்தியாளர்களுடனும் படப்பிடிப்பாளருடனும் ஸ்டன்மோர் கிறெசன்ட் வீட்டுக்குப் போ னேன். நாங்கள் போகும் போது வி. என். நவரத்தினம் வாசலில் நின்று கொண்டிருந்தார்.

"உதென்ன தாடி?" என்று கேட்டேன் தினமும் முகச் சவரப் பழக்கமுடையவர் வி. என். நவரத்தினம். சிரித்தார்.

பின்பு அவர் கொடுத்த விளக்கம் இது. "நாங்கள் எதையும் வெளியே ஆட்களை அனுப்பி வாங்க முடியாது. எங்களைக் காவல் காத்த பொலிஸார் அவ்வளவு கண்டிப்பாக இருந்தனர். சவர பிளேட் வாங்கித் தருமாறு கேட்டேன். அதற்கும் மறுத்து விட்டனர். இந்த பிளேட் போராட்டம் நடந்து கொண்டிருக்கையில் என் முகத்தில் அரையங்குலத்திற்கு மேல் மயிர் வளர்ந்து விட்டது. முகம் எங்கும் கடிக்கத் தொடங்கி விட்டது. முகத்தை அடிக்கடி சொறிவதில் ஒருவித சுகம் கண்டேன். சரி, வளர்ந்து விட்டதே அதையேன் வெட்டுவான் என்று விட்டு விட்டேன். உதை வெட்டித் துலையுங்கோ என்று என்ர மனுஷி தான் அடிக்கடி சொல்லுகிறார். மற்றவர்கள் வெட்டாதே வடிவாயிருக்கு என்கிறார்கள். நீர் என்ன சொல்கிறீர் வடிவாயிருக்குத் தானே?" நவரத்தினம் ஒரு வழக்குரைஞர்.

"உங்கட கேள்விக்குள்ளேயே பதில் இருக்கிறதே. நான் என்ன பதிலைச் சொல்லுறது?" என்றேன். கடைசிவரை நவரத்தினம் தாடியை வெட்ட வில்லை. நவரத்தினத்தின் சிரிப்பில் நான் மயங்கி விட வில்லை. உங்களுக்கு நல்ல செய்தியுடன் வந்திருக்கிறோம் என்றேன். என்ன?" விடுதலை விடுதலை உங்களுக்கெல்லாம் இன்று விடுதலை" என்றேன்.

"அப்படியா?" என்ற நவரத்தினம் வழக்கமான குறும்புடன் ??என் மனுஷி விரும்புவாரோ தெரியாது" என்றபடி தாடியைத் தடவினார். நவரத்தினத்தின் இந்தக் குறும்பு அவருக்கு நிறைய நண்பர்களைப் பெற்றுக் கொடுத்தது. பத்திரிகையாளர்கள் எல்லாருமே அவரின் நண்பர்கள். மற்றக் கட்சி எம். பி. க்களிடையேயும் நவாவுக்கு நல்ல செல்வாக்கு.

எங்களை அழைத்துக் கொண்டு உள்ளே போனார். சாப்பாட்டு மேசையில் அமிர்தலிங்கம், இராஜதுரை, நல்லையா, வன்னியசிங்கம், இராஜவரோதயம் ஆகியோர் இருந்தனர்.

"அவர்களைக் கண்டதும் நல்ல செய்தியோடு நண்பர்கள் வந்திருக்கிறார்கள்" என்றார் நவா. "எங்களை விடுதலை செய்யப் போகிறார்களாம். உண்மையா?" என்றார் அமிர்தலிங்கம். "விடுதலை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



உத்தரவு பின்னால் வருகிறது. நாங்கள் முன்னால் வந்து விட்டோம்" என்றேன் பத்திரிகைக்காரர்களுக்குள்ள மிடுக்குடன், இராஜவரோதயம் சொன்னார். "அது ஆறுதலாக வரட்டும். இப்ப உங்களுக்குக் கோப்பியா? தேத் தண்ணியா?" எனக்கு கோப்பியில் தான் பிடிப்பு. மற்ற மூன்று பேரும் சிங்களவர்கள் என்ற படியால் தேத்தண்ணி என்றேன். அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட சமையல்காரன் எப்படி என்று கேட்டேன். ராஜதுரை பதிலளித்தார். ??நல்லவன். முசுப்பாத்திக்காரன், அமிர் அண்ணனைச் சுற்றிக் கொண்டே இருப்பான்." அமிர்தலிங்கம் சிகரெட் பிடிப்பதில்லை. ஆனால், அவருக்குள்ள கோட்டாவைத் தவறாமல் வாங்கி சமையல்காரனுக்குக் கொடுத்து விடுவார். ஒரு முன்னாள் பொலிஸ்காரன் வேலை வாய்ப்புத் திணைக்களத்தின் மூலம் அவர்களுக்கு சமையல்காரனாக நியமிக்கப்பட்டான். "சரி சமையல் எப்படி?" என்று திருப்பிக் கேட்டேன். "அதை விட்டுத் தொலையப்பா" என்றார் ராஜதுரை. "அவனின் சமையல் கொஞ்சம் அப்பிடி இப்படித்தான் ஆனால், நவா நல்ல குழம்பு வைத்துக் கொடுப்பாராம். அதை வைத்துக் கொண்டு எல்லாரும் ஒரு பிடி பிடித்து விடுவார்களாம்." இந்தத் தகவலை ராஜவரோதயம் கொடுத்தார். விடுதலையானதும் எல்லாரும் தந்தை செல்வாவின் வீட்டுக்கு நேரே போனார்கள். அடுத்த நாள் தத்தமது தொகுதிகளுக்குத் திரும்பினர். அவர்களுக்குப் பெருவரவேற்புக்கள்.

தமிழரசுக் கட்சியினர் தடுப்புக் காவலில் இருந்த காலத்தில் பண்டாரநாயக்காவின் அரசாங்கத்துக்கு எதிரான நடவடிக்கைகளை எதிர்க் கட்சிகள் தீவிரப்படுத்தின. இடதுசாரிக் கட்சியினர் பல வேலை நிறுத்தங்களை நடத்தினர். அதே சமயம் ஆளும் கட்சியான மக்கள் ஐக்கிய முன்னணியிலும் பிளவுகள் தோன்றத் தொடங்கின. குறிப்பாக, இடது சாரி - வலது சாரி மோதல்கள் வலுத்தன. ஒரு பக்கத்தில் பிலிப் குணவர்த்தனா வில்லியம் டி சில்வா குழு, மறுபக்கத்தில் சி. பி. டி. சில்வா - விமலா விஜயவர்த்தனா கோஷ்டி.

**தீண்டாமைப் போராட்டம்**

தடுப்புக் காவலின் பின் தமிழரசுக் கட்சியின் செயற்குழு நவம்பர் 2ல் கூடியது. அக் கூட்டத்தில் தமிழரசுக் கட்சியின் சாத்வீக போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதென்றும் அதே நேரத்தில் தீண்டாமை ஒழிப்பதைத் தீவிரப் படுத்துவதன் மூலம் மக்களின் ஆதரவைத் திரட்டுவதென்றும் முடிவு செய்யப்பட்டது. தமிழரசுக் கட்சி



ஆரம்பத்திலிருந்தே தீண்டாமை ஒழிப்பில் கவனம் செலுத்தி வந்துள்ளது. தமிழ் சமூகத்தினர் தங்களில் ஒரு பகுதியினரை அடிமைப்படுத்திக் கொண்டு தங்களைச் சமமாக நடத்தும்படி மற்றவர்களிடம் கேட்பது தவறு என்பதை தந்தை செல்வா ஆரம்பத்திலிருந்தே வற்புறுத்தி வந்தார்.

1957 ஜுலையில் நடந்த மட்டக்களப்பு மகாநாடு தொடக்கம் தீண்டாமைப் போராட்டத்தை தமிழ் மக்களின் விடிவுக்கான போராட்டத்தின் ஓர் அம்சமாக தமிழரசுக் கட்சி ஏற்று நடத்தி வந்துள்ளது. மட்டக்களப்பில் நிறைவேற்றிய இரண்டாவது தீர்மானம் தீண்டாமையைப் பற்றியது. அத் தீர்மானத்தின் வாசகம்: தமிழ் பேசும் மக்களில் ஒரு பகுதியினரிடையே இன்றளவும் நிலவி வரும் சமூக ஏற்றத் தாழ்வுகளையும் அநீதிகளையும் குறிப்பாகத் தீண்டாமையை ஒழிப்பதற்கு அகிம்சை நெறி வழுவாது சத்தியாக்கிரக வழியைக் கைக்கொண்டு அதற்கென ஓர் இயக்கத்தை ஆரம்பித்து உடனடி நடவடிக்கை எடுப்பதன் மூலம் வருங்காலச் சந்ததியினர் மத்தியில் ஒற்றுமையை ஏற்படுத்தி ஓர் புதிய சமுதாயத்தை உருவாக்க வரும்படி தமது பூரண சுதந்திரத்திற்காகவும், சுயமரியாதைக்'காகவும் போராடுகின்ற தமிழ் பேசும் மக்களுக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் இத்தேசிய சிறப்பு மாநாடு வேண்டுகோள் விடுக்கிறது. இவ்வேண்டுகோளை ஏற்று இலங்கைத் தமிழ் பேசும் இனம் இதை நடைமுறையிற் கொண்டுவரத் தயாரில்லை என்றால் தமது அடிப்படை இலட்சியமான இலங்கை சமஷ்டி அரசியலமைப்பின் கீழ் மொழிவாரியான ஒரு சுதந்திரத் தமிழ் அரசை அல்லது அரசுகளை அமைத்து நிரந்தரமாகத் தமது விடுதலையையும் கலாசார விடுதலையையும் ஒரு போதும் அடைய முடியாது என இம் மாநாடு உறுதியாக நம்புகிறது.

1958 மே 25ல் வவுனியாவில் நடந்த மாநாட்டிலும் தீண்டாமை ஒழிப்புக்கு முக்கியத்துவமளிக்கப்பட்டது. வவுனியா தீர்மானத்தின் நான்காவது அம்சமாக அது சேர்க்கப்பட்டது. அதன் வாசகம்: சமூக ஏற்றத் தாழ்வுகளையும், அநீதிகளையும் அகற்றி, பிளவு பட்டு நிற்கும் தமிழ் மக்களை ஒன்று திரட்டல் என்ற கட்சியின் அடிப்படை இலட்சியங்களுக்கேற்ப எமது மக்களின் ஒரு பகுதியினரை சிறப்புரிமையற்றவர்களாக வைத்திருப்பதை அகற்றி அவர்களுக்கும் சம உரிமை வழங்க மக்களைத் தூண்டும் போராட்டத்தை நடத்துவதென்றும் அதற்கான தெரிவுக்குழுவுக்கு மக்கள் அனைவரையும் பூரண ஒத்துழைப்பு நல்குமாறு வேண்டுவதென்றும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாடு தீர்மானிக்கிறது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வவுனியா மாநாடு தீண்டாமை ஒழிப்பைத் தீவிரப் படுத்து
முகமாக தேனீர்க்கடைப் பிரவேச இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது.
நவம்பர் மாத நடுப் பகுதியில் யாழ்ப்பாணத்திலுள்ள தேனீர்க்கடைச்
சொந்தக்காரர்களின் மகாநாடு ஒன்று நடத்தப்பட்டது. அம் மகா
நாட்டில் பேசிய தந்தை தேனீர்க் கடைகளிலும். சாப்பாட்டுக்கடை
களிலும் சாதிபேதம் பாராட்டுவதைக் கைவிடுமாறு உருக்கமாக
வேண்டினார். அவ்வேண்டுகோளை ஏற்று தேனீர்க் கடைகளையும்
சாப்பாட்டுக் கடைகளையும் எல்லோருக்கும் திறந்து விட முடிவு
செய்யப்பட்டது.

தமிழரசுக் கட்சியினர் தீண்டாமை பிரச்சாரத்தில் ஈடுபட்டிருக்கை
யில் நெற்காணிச் சட்டத்தை விவசாய அமைச்சர் பிலிப் குணவர்த்தன
கொண்டு வந்தார். அதைத் தொடர்ந்து ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி
யிலுள்ள வலது சாரிகளின் வற்புறுத்தலின் பேரில் பிலிப் குணவர்த்த
னவும் கைத்தொழில் அமைச்சர் வில்லியம் டி சில்வாவும் பதவி நீக்கம்
செய்யப்பட்டனர். 1959ம் ஆண்டின் முற்பகுதி முழுவதும் அரசாங்
கத்தில் ஏற்பட்ட நெருக்கடியின் மீதே கவனம்குவிந்திருந்தது. அரசாங்
கத்திலிருந்து இடதுசாரியினர் நீக்கப்பட்டதன் பின்பு வலதுசாரிகளுக்குப்
பின்னால் நின்று செயலாற்றிய களனி விகாரை பிரதமகுரு புத்தரக்கித்த
தேரோ தனது செல்வாக்கை அதிகரித்தார்.

அரசாங்கத்திற்குள் வெடித்த நெருக்கடிகளையும் இடதுசாரிக்
கட்சிகளின் வேலை நிறுத்தங்களையும் சமாளிப்பதில் தன் முழுக்
கவனத்தையும் செலுத்திக் கொண்டிருந்த பிரதமர் பண்டாரநாயக்கா
தமிழரசுக் கட்சியுடன் சில குறிப்பிட்ட பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்
பதற்காக பேச்சுவார்த்தையை மீண்டும் ஆரம்பித்தார். செப்டம்பர் 17இல்
வன்னியசிங்கம் காலமானார். அம்மரணம் தந்தையைக் கலக்கி விட்டது.

செப்டம்பர் 25ல் பண்டாரநாயக்கா சுடப்பட்டார். அந்தக் கொலை
யும் தந்தையை வெகுவாக உலுக்கி விட்டது. தமிழர் பிரச்சினைக்குத்
தீர்வுகாண உதவக் கூடியவர் எனத் தந்தை நம்பிய சிங்களத் தலைவர்
மறைந்து விட்டார். அதுவும் தீவிரவாதப் பிடியிலிருந்து விலகி வந்து
கொண்டிருந்தபோது.

**பண்டாரநாயக்கா கொலை**

செப்டம்பர் 25 பண்டாரநாயக்காவின் ரொஸ்மிட் பிளேஸ்
வீட்டுக்கு அவரைப் பார்க்க வழக்கம் போல மக்கள் சென்றனர்.
அவர்களுடன் சேர்ந்து சோமராம என்ற பிக்குவும் போனார். பண்டார



நாயக்காவை அவர் பார்க்கச் சென்ற போது குனிந்து வணங்கினார்
மஞ்சள் அங்கிக்குள் மறைத்திருந்த கைத்துப்பாக்கி வெளியே வந்தது.
பட்.. பட் ஐயோ அம்மே! என்றபடி திரும்பி வீட்டுக்குள் ஓடினார்
பண்டாரநாயக்கா. சோமராம விடவில்லை. துரத்திச் சுட்டார். வெடிச்
சத்தத்தைக் கேட்டு வெளியே ஓடி வந்த சிறிமா கணவனைத் தாங்கிப்
பிடித்தார். வெளியே ஓட முயன்ற சோமராமாவை காவல் நின்ற
பொலிஸ்காரர் சுட்டார். சோமராம நிலத்தில் விழுந்தார். தொடையி
லிருந்து இரத்தம் பீறிட்டுப் பாய்ந்தது.

பெரியாஸ்பத்திரிக்குக் கொண்டு போன பின்பும் பண்டார
நாயக்கா சுயநினைவு இழக்கவில்லை. "மஞ்சள் உடையில் இருந்த
ஒருவன் என்னைச் சுட்டான் என்றார். பௌத்த பிக்கு தன்னைச் சுட்ட
தாக அவர் கூறவில்லை. தமிழன் ஒருவன் தான் பௌத்த பிக்கு
உடையில் பண்டாரநாயக்காவைச் சுட்டிருக்க வேண்டும் என்ற வதந்தி
பரவ ஆரம்பித்தது".

அன்று வெள்ளிக்கிழமை. அந்தக் காலத்தில் பாராளுமன்றம்
வெள்ளிக் கிழமைகளில் காலை 10 மணிக்குக் கூடுவது வழக்கம்.
செவ்வாய் முதல் வெள்ளி வரை பாராளுமன்றம் கூடுவது மரபு.
ஒவ்வொரு மாதத்தின் முதலாம், மூன்றாம் வாரங்களில் செவ்வாய்
முதல் வியாழன் வரை பிற்பகல் 2 மணிக்கு கூடும். அக்காலத்தில் நான்
தினகரனுக்காக பாராளுமன்றத்தைக் கவர் பண்ணிக் கொண்டிருந்தேன்.
காலை 10 மணிக்குப் பாராளுமன்றத்திற்குப் போனபோது பண்டாரநா
யக்கா சுடப்பட்ட விடயத்தை நண்பர்கள் சொன்னார்கள். செய்தியாசி
ரியர் சிவகுருநாதனுக்கு டெலிபோன் செய்தேன். ராய்ட்டர் டெலிபி
ரிண்டரில் அப்பொழுதுதான் செய்தி வந்ததாகச் சொன்னார். பிளாஸ்,
பிளாஸ், பிளாஸ்.

பிரதம மந்திரி சுடப்பட்டார். இலங்கை பிரதம மந்திரி சொலொ
மன் வெஸ்ட் ரிட்ச்வே டயஸ் பண்டாரநாயக்கா இனம் தெரியாத
ஒருவனால் அவர் வீட்டில் வைத்துச் சுடப்பட்டார்.

இரத்தம் தோய்ந்த உடையுடன் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு
போகப்பட்ட பிரதம மந்திரிக்கு சத்திர சிகிச்சை நடக்கிறது. இதுதான்
ராய்ட்டரின் பிளாஸ் செய்தி. சிவா அச் செய்தியை டெலிபோனில்
வாசித்துக் காட்டினார். பாராளுமன்றத்திற்குள் என்ன நடக்கிறது
என்பதை அவதானியும் என்பது சிவாவின் அறிவுறுத்தல். பிரஸ் பொக்
ஸுக்குப் போனேன். சபாநாயகர் எச். எஸ். இஸ்மாயில் வரவில்லை.
அமைச்சர்களின் ஆசனங்களில் தகநாயக்கா, சி. பி. டி. சில்வா, விமலா
விஜயவர்த்தன இருந்தனர். தந்தை எதிர்க்கட்சி ஆசனத்தில் அமர்ந்து

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



டாக்டர் என். எம். பெரேராவுடனும், டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வாவுடனும் பேசிக் கொண்டிருந்தது என் மனத் திரையில் அப்படியே இருக்கிறது. 10.25 இருக்கும் ஊர்வலம் சபைக்குள் வருகிறது. சார்ஜன்ட்-அற்-ஆர்ம்ஸ் (பாதுகாவலர்) செங்கோலைத் தாங்கிய படி வருகிறார். அவருக்குப் பின்னால் சபையின் இலிகிதரும் (இன்று செயலாளர் நாயகம்) உதவி இலிகிதரும்வருகிறார்கள். அவருக்குப் பின்னால் சபாநாயகர் இஸ்மாயில், சபாநாயகருக்கான அங்கியை அணிந்த படி, வருகிறார். பாதுகாவலர் செங்கோலை அதற்குரிய இடத்தில் வைத்து சலூட் அடித்து விட்டு தமக்குரிய ஆசனத்தில் அமருகிறார்.

சுருக்கமான அறிக்கையொன்றை சபாநாயகர் விடுக்கிறார். பிரதமர் சுடப்பட்டதாகவும் ஆஸ்பத்திரியில் சிகிச்சை நடப்பதாகவும் சொல்கிறார். சபையின் கூட்டம் ஒத்தி வைக்கப்படுவதாகவும்அவர் சொல்கிறார். அப்பொழுது ஒப்சேவர் பத்திரிகையின் ஆசிரியராக தார்சி வித்தாச்சி பணியாற்றினார். ஒரு மணித்தியாலயத்துக்கு ஒரு பதிப்பை வெளியிட அவர் முடிவு செய்தார். அச்சு இயந்திரம் ஓடிக் கொண்டி ருக்கும். இடையில் நிறுத்தி கடைசிச் செய்தியுடனும், படத்துடனும் புதிய முதலாம் பக்கத்தைப் போடுவார்கள். மற்றப் பதிப்பு அச்சாகும். அப்போது ஒப்சேவர் 25 சதம். லேக் ஹவுஸ் வாசலில் பேப்பர் வாங்க கியூ! பிரயாசிகளான சில வாலிபர்கள் பேப்பரை 25 சதத்துக்கு வாங்கிக் கொண்டு போய் இரண்டு ரூபாவுக்கு விற்றார்கள். அடுத்த நாள் - செப்டம்பர் 26 இல் - பண்டாரநாயக்கா இறந்தார்.

தந்தை செல்வா மிகவும் உருக்கமான அனுதாபச் செய்தியை வெளியிட்டார். ஒரு விடயத்தில் தந்தை செல்வாவுக்கும் பண்டார நாயக்காவுக்கும் நெருங்கிய ஒற்றுமையுண்டு. சமஷ்டி ஆட்சி முறை தான் பல இன, பல மொழி, பல மத மக்கள் வாழும் இலங்கைக்கு ஏற்றது என்ற முடிவு தான் அந்த ஒற்றுமைப் பாலம். தனது தீர்வுதான் சரியானது என்பதை தமிழ் பேசும் மக்களை ஏற்க வைப்பதில் தந்தை செல்வா வெற்றி பெற்றார். அத்தகைய வெற்றியைப் பண்டாரநாயக் காவால் பெற முடியவில்லை. அதற்குப் பிரதான காரணம் யு. என். பி. தலைமைப் பீடம்தான். யு. என். பி. யில் இருக்கும் வரை அவரின் கருத்துக்களுக்கு மதிப்பளிக்கப்படவில்லை. யு. என். பி. யிலிருந்து வெளியேறி யதும் சிங்கள தீவிரவாத சக்திகளின் பிடிக்குள் தள்ளப் பட்டார்.

பண்டாரநாயக்கா இறந்ததும் டபிள்யு. தஹநாயக்கா இடைக் காலப் பிரதமரானார். அது ஒரு கேலிக் கூத்து. ஆறு மாதங்கள். மந்திரி சபையில் அரைவாசி ஓரிரவு பதவி நீக்கம் செய்யப்பட்டது. புதிய கட்சியொன்றை அவர் ஆரம்பித்தார். 1960 மார்ச்சில் தேர்தலை நடத்தினார். ஒரே தினத்தில் இலங்கை முழுவதும் பொதுத் தேர்தலை நடத்திக் காட்டிய சாதனை அவருடையது. அத்தேர்தலின் போது பாராளுமன்ற உறுப்பினர் தொகை 151 ஆக அதிகரிக்கப்பட்டது. அவர்களில் 6 பேர் நியமன உறுப்பினர். 1947 முதல் 1960 வரை பாராளுமன்ற உறுப்பினர் தொகை 101 ஆக இருந்தது.



1960 மார்ச் தேர்தலில் 19 தொகுதிகளில் தமிழரசுக் கட்சி போட்டி யிட்டது. அத்துடன், பொத்துவில், நிந்தவூர் தொகுதிகளில் இரண்டு சுயேச்சைகளை நிறுத்தியது. பதினைந்து தொகுதிகளில் தமிழரசுக் கட்சிக்கு வெற்றி கிடைத்தது. தமிழரசுக் கட்சி பெற்ற மொத்த வாக்கு கள் 176,492.

அத் தேர்தலின் மூலம்,

★ எதுவித சந்தேகத்துக்கும் இடமில்லாமல் தமிழ் பேசும் மக்கள் தந்தை செல்வாவின்தலைமைத்துவத்தை ஏற்றுக் கொண்டு விட்டனர்.

1956ல் கொடுத்த சமஷ்டித் தீர்வுக்கான ஆணையை மீண்டும் வழங்கினர். அத்தேர்தலில் யு. என். பி.. க்கு 50 எம். பி. க்கள் மட்டுமே கிடைத்தனர். சி. பி. டி. சில்வாவைத் தலை வராகக் கொண்ட ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்கு 46 பிரதிநிதி கள் கிடைத் தனர்.

**ஐந்து உத்திகள்**

1960 மார்ச் தேர்தலின் பின் தந்தை செல்வா தமிழரின் போராட்ட முறையில் ஒரு பெரிய மாற்றத்தைச் செய்தார். அடுத்த பத்தாண்டுகள் தந்தை செல்வா புதிய உத்தியைப் பரீட்சித்துப் பார்த்தார். அரசாங்கத்தை ஆக்குவது. அரசாங்கத்தை அழிப்பது, அரசாங்கத்தில் இணைவது. ஆகியனவே அவை. 1960 மார்ச் தேர்தல் முடிவு தமிழரசுக் கட்சிக்கு அச் சந்தர்ப்பத்தை அளித்தது. தமிழ் மக்கள் சுயமரியாதையுடன் வாழ வழி செய்யும் சுயாட்சி அரசை அமைக்கும் தன் நோக்கத்தை நிறைவேற் றுவதற்காக இந்த ஜனநாயக சந்தர்ப்பத்தை பயன்படுத்தி நடவடிக்கை எடுக்க தந்தை செல்வா முடிவு செய்தார். அது சுதந்திர இலங்கையில் தமிழர் தமது உரிமைகளைப் பாதுகாப்பதற்குக் கையாண்ட நாலாவது உத்தி.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



முதலாவது ஒத்துழைப்பு. ஜி. ஜி. பொன்னம்பலம் அதைக் கையாண்ட காலத்தில் தமிழரின் நிலப்பறிப்பு தீவிரமடைந்தது. தமிழ் சமூகத்தின் ஒரு பகுதியினரின் பிரஜாவுரிமை பறிக்கப்பட்டது. இரண்டாவது சாத்வீக எதிர்ப்பு. தமிழரின் உரிமைகள் பறிக்கப்படுவதைத் தடுத்து நிறுத்தி அவர்களுக்குச் சுயாட்சியைப் பெற்றுக்கொடுக்க இந்த உத்தியை தந்தை செல்வா உபயோகித்தார். அதன் மூலம் மொழியுரிமை பறிபோவதையும் நிலம் கவரப்படுவதையும் நிறுத்த முடியவில்லை. 1956ல் காலிமுகத் திடலில் அவ்வுத்தி அடிவாங்கிக் கொடுத்தது. 1961ல் அது உதை வாங்கிக் கொடுத்தது. திரும்பத் திரும்பத் தமிழ் இனத்தின்மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட வன்செயலுக்குத் தேவையான துணிவைச் சிங்களவருக்குக் கொடுத்ததும் சாத்வீகம்தான். அக்காலத்தில், பிரஜாவுரிமை பறிக்கப்பட்ட மக்களின் எண்ணிக்கையை உபயோகித்து சிங்களவரின் பிரதிநிதித்துவம் அதிகரிக்கப்பட்டது. மூன்றாவது ஒப்பந்த உத்தி. 1957ல் பண்டாரநாயக்காவுடன் செல்வநாயகம் செய்துகொண்ட ஒப்பந்தம் பௌத்த பிக்குகளின் நெருக்குதலால் கிழித்தெறியப்பட்டது. 1960ல் கொடுக்கப்பட்ட வாக்குறுதிகளும் கௌரவிக்கப்படவில்லை. நாலாவது அரசாங்கத்தைக் கவிழ்ப்பதும் ஆக்குவதும். 1960 மார்ச்சில் தந்தை செல்வா டட்லி சேனநாயக்கா அரசாங்கத்தைக் கவிழ்த்தார். 1960 ஜூலையில் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காஅரசாங்கம் உருவாக உதவினார். வீடு தேடிப்போய் உதவி கேட்ட பீலிக்ஸ் ஆர். டயஸ் பண்டாரநாயக்காவே பதவிக்கு வந்தபின் தந்தை செல்வாவை உதறித் தள்ளினார். ஐந்தாவது அரசாங்கத்தில் பங்கு கொள்ளல். அதை 1965ல் தந்தை செல்வா கையாண்டு அதிலும் தோல்வி கண்டார். அந்தக் கதையை அடுத்த அத்தியாயத்தில் பார்ப்போம்.

ஸ்ரீமாவோ பாராளுமன்றத்தைக் கலைத்துவிட்டு 22 மார்ச் 1965 தேர்தல் நடத்தினார். அத் தேர்தல் முடிவு அறிவிக்கப்பட்டதும் நாகநாதனுக்கு சேர். ஜோன் கொத்தலாவலை டெலிபோன் செய்தார். டட்லியை பிரதம மந்திரியாக்குவதற்கு உதவி செய்யுங்கள் என்றார். தமிழரசுக் கட்சி எம். பி.க்கள் யாவரும் கொழும்பில் மார்ச் 21 பிற்பகலில் கூடவிருப்பதாகவும் அப்பொழுது டட்லிக்கு ஆதரவளிக்கும் விடயத்தைப் பரிசீலனைக்கு விடுவதாகவும் நாகநாதன் பதிலளித்தார்.

மார்ச் 21 பிற்பகல் தந்தை செல்வாவும் மற்ற யாழ். குடா நாட்டு எம். பி.க்களும் பலாலியிலிருந்து விமானம் மூலம் இரத்மலானைக்கு வந்தனர். அங்கே அவர்களை வரவேற்க யு. என். பி. ஆட்களும் சுதந்திரக் கட்சி ஆட்களும் காத்திருந்தனர். சுதந்திரக் கட்சி சார்பில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர்களில் ஒருவரான டி. இராமானுஜம் விமான நிலையத்தில் தந்தையின் வரவுக்காகக் காத்திருந்தார். விமான நிலையத்திலிருந்து தந்தை செல்வா வெளியே வந்தபோது, இராமானுஜம் மாலை ஒன்றைப் போட்டார். உங்களைச் சந்திக்கத் தொண்டமான் காத்துக் கொண்டிருக்கிறார் என்று சொல்லித் தன் காரில் தந்தையை ஏற்றினார் இராமானுஜம். ஏன் என்னைச் சந்திக்க விரும்புகிறார்? என்று வினாவினார் தந்தை. அவரே சொல்லுவார் என்றபடி காரை இ. தொ. கா. தலைமையகத்துக்குச் செலுத்துமாறு சாரதிக்குச் சொன்னார்.



தொண்டமானின் அலுவலகத்தில் பதியுதீன் மஹ்முத் இருந்தார். தந்தையின் கைகள் இரண்டையும் தன் கைகளால் பிடித்தபடி சி. பி. டி. சில்வாவுக்கு ஆதரவு கோரத் தான் வந்திருப்பதாகச் சொன்னார் அவர். மற்ற எம். பி.க்களுடன் அந்த வேண்டுகோளை ஆராய்வதாகத் தந்தை பதிலளித்தார். அவர் வீட்டுக்குப் போனபோது யு. என். பி. தூது கோஷ்டி காத்திருப்பதைக் கண்டார். வெளி விறாந்தையில் அவர்கள் அமர்ந்திருந்தனர். சேர். எட்வேர்ட் ஜெயதிலகவும், சேர். அருணாசலம் மகாதேவாவும் அவர்களில் முக்கியமானவர்கள். நீங்களும் தகாவும் என் வீட்டில் டட்லியைச் சந்திக்க வேண்டும். அதற்கு உங்களை அழைக்கத்தான் வந்திருக்கிறோம் என்றார் சேர். எட்வேர்ட்.

அச் சந்திப்பு பிற்பகலில் நடந்தது. தான் அரசாங்கம் அமைக்க ஆதரவளிக்குமாறு டட்லி கேட்டார். அத்துடன் நிறுத்தவில்லை. எனது அரசாங்கம் தமிழ் மக்களின் நலனுக்கு குந்தகம் விளைவிக்கும் எதையும் செய்யாது என்று சொன்னார். தணிவான குரலில் அறுத்து உறுத்து தந்தை அளித்த பதில் இது. எந்தச் சனநாயக அரசாங்கமும் அப்படித்தான் நடக்க வேண்டும். கடந்த பத்து ஆண்டுகளாக தமிழ் சமூகத்திற்கு இழைக்கப்பட்ட அநீதிகளை அகற்ற நடவடிக்கை எடுக்க நீங்கள் தயாராக இருந்தால் உங்கள்அரசாங்கத்தை ஆதரிப்பது பற்றி யோசிப்போம். டட்லியோ அவருடன் இருந்த சர், லலிதா ராஜபக்சவோ எத்தகைய அநீதிகளை நீக்க வேண்டும் என்று கூடத் தந்தை செல்வாவிடம் கேட்கவில்லை. தங்கள் பாட்டில் போய் விட்டனர்.

மார்ச் 23ம் திகதி காலை பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா செல்வநாயகத்தின் வீட்டுக்குப் போய் அவரைச் சந்தித்தார். செல்வாவின் வீட்டுக்குப் பீலிக்ஸ் போவதுண்டு. பீலிக்ஸின் தந்தை நீதியரசர் டயஸ், தந்தை செல்வாவின் நெருங்கிய நண்பர். நீதியரசர் டயசும் எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்காவும் ஒன்று விட்ட சகோதரர்கள். பீலிக்ஸ்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்காவின் பெறாமகன். அத்துடன் கொழும்பு பல்கலைக்கழக சட்டப் பட்டதாரி. கெட்டிக்காரர், நல்ல பேச்சாளர். மார்ச் தேர்தலில் பண்டாரநாயக்காவின் அத்தனகலை தொகுதியில் லக்ஷ்மன் ஜயக்கொடியும் தொம்பேயில் பீலிக்சும் போட்டியிட்டனர்.

சி. பி. டி. சில்வா தலைமையில் அரசாங்கம் அமைப்பதற்கு தமிழரசுக் கட்சி உதவ வேண்டும் என்று கேட்டார். பீலிக்ஸ் தமது கட்சி பதவிக்கு வந்தால் பண்டாரநாயக்கா செல்வநாயகம் ஒப்பந்தத்தை முழுமையாக அமுல் செய்வதாக வாக்குறுதியளித்தார்.

டட்லிக்கும் செல்வநாயகத்துக்கும் இடையே இரண்டாவது சந்திப்பை மார்ச் 26 ஆம் திகதி சர். ஜோன் ஒழுங்கு செய்தார். தமிழரசுக் கட்சியின் கோரிக்கைகளைக் கூறும்படி டட்லி அச் சந்திப்பின் போது கேட்டார். தனது கோரிக்கைகளைக் கூறினார் தந்தை செல்வா. அவர் அதை எழுதி அனுப்ப வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. தந்தை சமர்ப்பித்த கோரிக்கைகள் இவை:

1 வடக்கு - கிழக்கு மாகாணங்களில் பிராந்திய சபைகள் அமைக்கப்பட வேண்டும்.

2 வடக்கு - கிழக்கு மாகாணங்களில் தமிழ் உத்தியோக மொழியாக அங்கீகரிக்கப் பட வேண்டும். இலங்கையின் ஏனைய பகுதிகளில் தமிழை உபயோகிப்பதற்கான வசதிகளைச் செய்ய வேண்டும்.

3 குடியுரிமைச் சட்டத்தில் மாற்றங்கள் செய்யப்பட வேண்டும்.

4 பிரஜாவுரிமையற்ற பெருந்தோட்டத் தொழிலாளர்களின் பிரதிநிதி ஒருவரை நியமன அங்கத்தவராக நியமிக்க வேண்டும்.

கட்சியின் பிரதான கோரிக்கைகளில் இரண்டில் தான் விட்டுக் கொடுப்பதாக தந்தை டட்லிக்குச் சொன்னார். தமிழ் மொழிக்குச் சம அந்தஸ்து, தோட்டத் தொழிலாளர்களுக்கு நான்கு நியமனஉறுப்பினர் ஒதுக்கப் படுதல் ஆகியவையே அவை. அடுத்த நாள் காலையில் தந்தை செல்வாவை அழைத்தார் டட்லி. சபாநாயகர் பதவிக்கு எமது அபேட்சகரை ஆதரிப்பீர்களா? என்று கேட்டார். சுதந்திரக் கட்சி வேட்பாளரை



ஆதரிப்பதாக ஏற்கெனவே வாக்குறுதியளித்து விட்டேன், என்றார் தந்தை செல்வா.

அன்று பிற்பகல் டட்லி தந்தையை மீண்டும் அழைத்தார். தமிழரசுக் கட்சியின் நான்கு கோரிக்கைகளையும் தன்னால் கொடுக்க முடியாது என்பதைச் சொன்னார். யு. என். பி. இரண்டு வாக்குறுதிகளை மக்களுக்கு அளித்துள்ளது. சிங்களம் மட்டும் சட்டத்தை அமுல் செய்வது என்பதும் நாடு துண்டாடப்படுவதை எதிர்க்கும் என்பவையே அவ்வாக்குறுதிகள் என்றார் டட்லி. தந்தை சற்றுக் காட்டமாக இவ்வாறு பதிலளித்தார். "நீங்கள் சிங்களத்தை நாடு முழுவதும் அமுல் செய்வதானால் யாழ்ப்பாணத்திலும் மட்டக்களப்பிலும் திருகோண மலையிலும் தமிழ் மக்கள் பெரும்பான்மையினராக வாழ்வதில் எவ்வித பயனும் இல்லை." டட்லி பதிலளிக்கவில்லை. தந்தை அத்துடன் நிறுத்தவில்லை. "பல இன, பல மொழி பேசும் மக்கள் வாழும் நாடுகளில் சிறுபான்மை மக்கள் வாழும் பகுதிகளில் பெரும்பான்மை மக்களைக் குடியேற்றும் பழக்கமில்லை. ஆனால், இலங்கையில் சாதாரண வழக்கத்துக்கு மாறாகத்தான் எல்லாம் நடக்கிறது" என்று சொன்னார். அதற்கும் டட்லி பதில் சொல்லவில்லை. தமிழரசுக் கட்சியின் கோரிக்கைகள் ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கைகளுக்கு முரண்பாடான வையாக இருப்பதாக மட்டும் திரும்பவும் சொன்னார். ஆனால், கொழும்புத் தமிழர்கள் டட்லியை ஆதரிக்குமாறு தமிழரசுக் கட்சியைத் தொடர்ந்து வற்புறுத்திக் கொண்டிருந்தனர். டட்லி நல்லவர். அவரை நம்புங்கள் என்பதே அவர்களின் வாதமாக இருந்தது. "டி. எஸ். சேனநாயக்காவும் நல்லவர்தான். ஆனால், அவர்தான் தமிழ் இனத்துக்கு குழி தோண்டியவர். நல்லவரான தந்தை தமிழினத்துக்கு இவ்வளவு துரோகம் செய்த பின்பு அவரின் மகனை நம்பச் சொல்லுகின்றீர்களா?" என்று அவர்களுக்குப் பதில் சொன்னார் தந்தை.

பாராளுமன்றத் திறப்பு விழா ஏப்ரல் 19ம் திகதி நடந்தது. 20ம் திகதி முதல் சிம்மாசனப் பிரசங்கம் விவாதிக்கப்பட்டது. தந்தை செல்வா 22ம் திகதி பேசினார். அவர் யு. என். பி. யைக் கடுமையாகத் தாக்கினார். கண்டி யாத்திரையை ஒழுங்கு செய்து சிங்கள மக்களைத் தவறான வழியில் இட்டுச் சென்றமைக்காக ஜே. ஆர். ஜெயவர்த்தனவைக் கண்டித்தார். தமிழ் பேசும் மக்களின் உண்மையான, எதிரி ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியல்ல. யு.என்.பி. தான். ஒப்பந்தத்தைக் கிழித்து வீசுமாறு யு.என்.பி.யினர் தான் பண்டாரநாயக்காவை நிர்ப்பந்தித்தனர் என்றார் தந்தை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**சாதி செய்த சதி**

வாக்கெடுப்பின்போது டட்லி சேனநாயக்கா அரசாங்கம் தோற்கடிக்கப்பட்டது. மந்திரி சபையின் அவசர கூட்டம் ஒன்றை டட்லி கூட்டினார். பிரதமர் பாராளுமன்றத்தைக் கலைத்து விட்டு பொதுத் தேர்தல் நடத்தப்போவதாக டட்லி சேனநாயக்கா கூறினார். சில அமைச்சர்கள் அம் முடிவை எதிர்த்தனர். தமிழரசுக் கட்சியின் ஆதரவுடன் அரசாங்கத்தை அமைக்க சுதந்திரக் கட்சிக்குச் சந்தர்ப்பம் அளிக்க வேண்டும் எனவும் அவ் அரசாங்கம் நீடிக்க மாட்டாது எனவும் அது கவிழ்ந்ததும் நடத்தப்படும் தேர்தலில் பதவிக்கு வரமுடியும் என்பதையும் அமைச்சர்கள் வாதிட்டனர். ஆனால், கவர்னர் ஜெனரல் சேர் ஒலிவரைச் சந்தித்த டட்லி பாராளுமன்றத்தைக் கலைத்து தேர்தல் நடத்துவதற்கே சிபார்சு செய்தார். ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியினர் அரசாங்கத்தை அமைக்கக் கூடிய நிலையில் தாங்கள் இருப்பதாகவும் அவர்களுக்குச் சந்தர்ப்பம் அளிக்க வேண்டும் என்றும் கவர்னர் ஜெனரலிடம் கேட்டனர்.

சேர் ஒலிவர் சரியான குள்ள நரி. சனநாயக மரபுகளைத் தான் கடைப் பிடிக்கப் போவதாக அவர் அறிவித்தார். தங்களால் அரசாங்கம் அமைக்க முடியும் என்பதை நிரூபிக்கும்படி சொன்னார். ஏப்ரல் 24ம் திகதி எதிர்க் கட்சியினரைத் தனித் தனியாக வந்து தன்னை இராணி மாளிகையில் சந்திக்குமாறு சொன்னார். இராணி மாளிகைக்குப் போகும் வழியில் தந்தை செல்வா கொள்ளுப்பிட்டியிலுள்ள பீலிக்சின் வீட்டுக்குப் போனார். அங்கே சி. பி. டி. சில்வா, செனட்டர் எ. பி. ஜெயசூரிய ஆகியோரும் வேறு சில சுதந்திரக் கட்சித் தலைவர்களும் இருந்தனர். "நான் உங்களை ஆதரிப்பதாக சர் ஒலிவரிடம் சொல்லப் போகிறேன். நீங்கள் பதவிக்கு வந்தால் பீலிக்ஸ் வாக்களித்தபடி பண்டாரநாயக்கா என்னுடன் செய்த ஒப்பந்தத்தை முழுமையாக அமுல் செய்வீர்களா என்பதை அறிந்து கொள்வதற்காகவே வந்தேன்" என்றார் தந்தை.சி. பி. டி. சில்வாவையும் ஜெயசூரியாவையும் பார்த்து, இங்கே நீங்கள் இருவரும் இருக்கிறீர்கள். பீலிக்சின் வாக்குறுதியை ஏற்றுக் கொள்கீறீர்களா? என்று கேட்டார். இரண்டு பேரும் இணக்கம் தெரிவித்தனர். நீங்கள் கொடுத்துள்ள உறுதி மொழியின் அடிப்படையில் சி. பி. டி சில்வா தலைமையிலான அரசாங்கத்தை ஆதரிக்கப் போவதாகக் கவர்னர் ஜெனரலிடம் சொல்லப் போகிறேன். மறுபடியும் சி. பி. டி. சில்வாவைப் பார்த்தார். "உங்கள் உறுதி மொழிப்படி நடப்பீர்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம்?" என்று கேட்டார். சி. பி. டி. சில்வா



சொன்ன பதில் இது. "நான் மிகவும் கறாராகப் பேரம் பேசுபவன். ஓர் உடன்படிக்கைக்கு வந்து விட்டால் அதைப் பேணுபவன்."

திருப்தியடைந்த தந்தை செல்வா இராணி மாளிகைக்குப் போனார். சேர் ஒலிவர் தன் நிலைப்பாட்டை விளக்கினார். "பாராளுமன்றத்தைக் கலைத்துத் தேர்தல் நடத்தும் படி டட்லி சிபாரிசு செய்துள்ளார். அந்தச் சிபாரிசை ஏற்பதற்கு முன்பு மாற்று அரசாங்கமொன்று அமைக்க முடியுமா என்று ஆராய்வது என் அரசியல் சட்டக் கடமை. தமிழரசுக் கட்சியின் ஆதரவின்றி எதிர்க் கட்சியினரால் அரசாங்கத்தை அமைக்க முடியாது. அதனால் சுதந்திரக் கட்சியின் தலைமையிலான அரசாங்கத்தை ஆதரிக்க நீங்கள் தயாரா? என்பதை அறிந்து கொள்வதற்காக உங்களை அழைத்திருக்கிறேன்." பீடிகை முடிந்ததும் அந்த முக்கிய கேள்வியை சேர் ஒலிவர் கேட்டார். "சி.பி.டி.சில்வா தலைமையிலான அரசாங்கத்தைக் குறைந்தது இரண்டு ஆண்டுகளுக்கு ஆதரிப்பீரா?" தந்தை அளித்த பதில் இது: "எனது கட்சி எஸ். எல். எப். பி. யுடன் ஓர் உடன்பாட்டுக்கு வந்துள்ளது. எனவே. நாங்கள் சி. பி. டி. சில்வா தலைமையிலான அரசாங்கத்தை இரண்டு ஆண்டுகளுக்கு மட்டுமல்ல, பாராளுமன்றத்தின் ஆயுட் காலம் முடியும் வரை ஆதரிப்போம்."

தந்தை வீடு திரும்பிய சொற்ப நேரத்தில் பாராளுமன்றம் கலைக்கப்பட்டு பொதுத் தேர்தலை ஜூலை மாதம் நடத்துவதற்கு முடிவு செய்யப்பட்டு அதற்கான பிரகடனம் வெளியிடப்பட்டுவிட்ட செய்தி கிடைத்தது. அம் முடிவுக்குச் சேர். ஒலிவர் கொடுத்த காரணம் இது: தமிழரசுக் கட்சியினர் கொடுத்த ஆதரவு நிபந்தனையுடன் கூடியது. எனவே, ஸ்திரமான மாற்று அரசாங்கத்தை சி. பி. டி. சில்வாவினால் அமைக்க முடியுமென நான் எண்ணவில்லை. சேர். ஒலிவர் கொடுத்த காரணம் வெறும் வெளிப்பூச்சு. சி. பி. டி. சில்வா அரசாங்கம் அமைக்க அனுமதிக்கப்படாதமைக்கான உண்மைக் காரணம் வேறு. அவருடைய சாதிதான் அது. சி. பி. டி. சில்வா சலாகம சாதியைச் சேர்ந்தவர். கறுவா பட்டை உரிக்கும் தொழில் புரிவோர் சலாகம சாதியினர். ஏன் உங்களுக்கு ஒரு கொவிகம (வேளாளர்) ஆள் கிடைக்கவில்லையா? ஏன் ஒரு சலாகமவை பிரதம மந்திரியாக்க முயலுகிறீர்கள்? சேர். ஒலிவர் இவ்வாறு கேட்டதாக டாக்டர் என். எம். பெரேரா பேராசிரியர் ஏ. ஜே. வில்சனுக்குச் சொன்னார். தமிழ் மக்களிடையே மட்டுமல்ல சிங்கள மக்களிடையேயும் அரசியலில் சாதி முக்கிய இடம் வகிக்கிறது. அபேட்சகரைத் தெரியும் போதே சாதியைக் கவனத்தில் கொள்கிறார்கள். சி. பி. டி. சில்வா குறைந்த சாதிக்காரர் என்பதால் அவர் பிரதமராவதைச் சேர். ஒலிவர் உட்பட உயர் சாதிக்காரர் விரும்பவில்லை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சேர். ஒலிவரின் இந்த சாதி பார்ப்பு தமிழ் மக்களின் வரலாறை வெகுவாகப் பாதித்து விட்டது. சி. பி. டி. சில்வா அரசாங்கத்தை அமைத்திருந்தால் பண்டாரநாயக்கா - செல்வநாயகம் ஒப்பந்தத்தை அமுல் செய்ய நடவடிக்கை எடுத்திருப்பார். அதைச் செய்யத் தவறினால், அவரின் மந்திரி சபையை வீழ்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கும் சந்தர்ப்பம் தமிழரசுக் கட்சிக்குக் கிடைத்திருக்கும். சி. பி. டி. சில்வாவை சேர். ஒலிவர் ஏமாற்றியது தமிழரை மிகவும் பாதித்தது என்று தந்தை செல்வா பகிரங்கமாகக் கூறினார். டட்லியின் சிபாரிசை ஏற்று சர். ஒலிவர் பாராளுமன்றத்தைக் கலைத்ததை எதிர்த்து எதிர்க் கட்சியினர் ஓர் ஆட்சேபணைக் கடிதத்தைத் தாக்கல் செய்தனர். ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி, தமிழரசுக் கட்சி, லங்கா சமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவை கூட்டாக வெளியிட்ட அறிக்கையின் தமிழாக்கம் இது:ஒரு மாதத்துக்கு முன்பு தெரிவு செய்யப்பட்ட இப் பாராளுமன்றத்தைக் கலைக்க மேன்மை தங்கிய தாங்கள் எடுத்த முடிவையிட்டு நாங்கள் எமது ஒருமித்த வருத்தத்தைத் தெரிவிக்கின்றோம். எம். ஈ. பி. யைத் தவிர்ந்த மற்ற எல்லா எதிர்க்கட்சிகளும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையில் மாற்று அரசாங்கத்தை அமைக்க முடியும் என்று மேன்மை தங்கிய தங்களுக்கு அறிவித்திருந்தும் பாராளுமன்றத்தைக் கலைக்க மேன்மை தங்கிய தாங்கள் எடுத்த முடிவு. பொறுப்பு வாய்ந்த அரசாங்கம் ஒன்றின்றிக் கஷ்டப்படும் இந்த நாட்டின் நன்மைக்கு உகந்ததல்ல.

1960 ஜுலை தேர்தலின் போது டட்லி சேனநாயக்கா வகுப்புவாத பிரச்சாரத்தில் ஈடுபட்டார். தேர்தலில் வெற்றி பெற்றதும் தமிழரசுக் கட்சியுடன் சேர்ந்து சுதந்திரக் கட்சி ஆட்சி அமைக்கப்போகிறது என்றும் நாட்டைத் தமிழருக்கு விற்க முயலுகிறது என்றும் டட்லி பிரச்சாரம் செய்தார். தமிழரசுக் கட்சியுடன் தாங்கள் எதுவித உடன்படிக்கையும் செய்யவில்லை என்று சுதந்திரக் கட்சியினர் அறிக்கை விட்டனர். மேடைகளிலும் முழங்கினர். தங்களின் மறுப்பை உறுதிப்படுத்துவதற்குத் தந்தையின் அறிக்கை உதவும் என்பதை உணர்ந்த சுதந்திரக் கட்சியினர் தந்தை செல்வாவிடம் போனார்கள். மறுப்பு அறிக்கை யொன்றைக் கொடுத்துதவுமாறு வேண்டினர்.

1960 மார்ச் தேர்தலையடுத்து நடந்த நிகழ்ச்சிகளைக் கோவைப் படுத்தி விளக்க அறிக்கையொன்றைத் தந்தை விடுத்தார். தான் முதலில் டட்லியுடன் பேச்சு நடத்தியதாகவும் தான் சமர்ப்பித்த நாலு அம்சக் கோரிக்கைக்கு இணங்க டட்லி மறுத்ததாகவும் அதனால் டட்லி அரசாங்கத்தை எதிர்த்துத் தனது கட்சி வாக்களித்ததாகவும் அவர்



விளக்கினார். சுதந்திரக் கட்சி அரசாங்கத்தில் இல்லாததால் அவர்களிடம் தமிழரசுக் கட்சி எந்தக் கோரிக்கையையும் சமர்ப்பிக்கவில்லை. தாம் அரசாங்கம் அமைத்தால் சிம்மாசனப் பிரசங்கத்தில் தமிழர் பிரச்சினை பற்றிய தமது நிலைப்பாட்டை வெளியிடு வதாகவும் அதை நாங்கள் ஏற்றுக் கொண்டால் அரசாங்கத்தை ஆதரிக்கு மாறு சுதந்திரக் கட்சியினர் சொன்னார்கள். அது நியாயமாகப் பட்டதால் சுதந்திரக் கட்சியுடன் தாங்கள் எத்தகைய உடன்படிக் கையையும் செய்யவில்லை என்று தந்தை செல்வாவின் அறிக்கை கூறியது.

### சமஷ்டிக்கு மீண்டும் ஆணை

சுதந்திரக் கட்சியினர் பண்டாரநாயக்காவின் விதவை ஸ்ரீமாவை பிரச்சாரம் செய்ய வைத்தனர். பெண்களின் அனுதாபம் அவர் பக்கம் இருந்தது. அதனால், டட்லியின் வகுப்பு வாதப் பிரச்சாரம் எடுபடவில்லை. தேர்தலில் சுதந்திரக் கட்சிக்கு 75 ஆசனங்கள் கிடைத்தன. யு.என். பி. க்கு 30 தொகுதிகளில் வெற்றி கிடைத்தது. இருபத்திரண்டு தொகுதிகளில் போட்டியிட்ட தமிழரசுக் கட்சிக்கு 16 தொகுதிகளில் வெற்றி கிடைத்தது. மொத்தம் 218, 753 வாக்குகள் தமிழரசுக் கட்சிக்குக் கிடைத்தன. லங்கா சமசமாஜக் கட்சிக்கு 12 தொகுதிகளும், கம்யூனிஸ்ட் கட்சிக்கு மூன்றும், ஜே. வி.பி. க்கு இரண்டும், தஹநாயக்காவின் புதிய கட்சியான எல்.. பி. பி. க்கு ஓர் ஆசனமும் கிடைத்தன. சுயேச்சைகள் ஆறு பேர் வெற்றி பெற்றனர். தந்தை செல்வாவின் சமஷ்டி தீர்வுக்கு தமிழ் மக்கள் மூன்றாவது தடவை தமது அங்கீகாரத்தைக் கொடுத்தனர்.

ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா உலகின் முதலாவது பெண் பிரதம மந்திரியாகச் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார். அவர் தேர்தலில் போட்டியிடாத காரணத்தினால் செனற் சபைக்கு நியமிக்கப்பட்டார். அரசியல் அனுபவமற்ற அவர் அரசியல் அனுபவமில்லாத, முதிர்ச்சியற்ற பெறாமகன் பீலிக்சில் முற்றாகத் தங்கியிருந்தார். பீலிக்ஸ் முற்றாக மாறிவிட்டார். தமிழரசுக் கட்சிக்கும் தங்களுக்கும் எவ்வித உறவுமில்லை என்று காட்ட விரும்பினார்.

தமிழரசுக் கட்சிக்கும் அரசாங்கத்துக்கும் நவம்பர் 8ல் பேச்சு வார்த்தை நடந்தது. தந்தை செல்வா தலைமையில் இராஜவரோதயம், நாகநாதன், வி. ஏ. கந்தையா, இராசமாணிக்கம், அமிர்தலிங்கம், மசூர் மௌலானா, வி. நவரத்தினம் ஆகியோர் அலரி மாளிகையில் நடந்த அந்த மகாநாட்டில் கலந்து கொண்டனர். பிரதம மந்திரி ஸ்ரீமாவுக்கு பீலிக்ஸ், சாம் பி. சி. பெர்னாண்டோ, ரி. பி இலங்கரத்தின, சி. பி. டி.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

சில்வா, பதியுதீன் மஹ்மூத், டாக்டர் எஸ். ரத்வத்தை ஆகியோர் உதவினர். பேச்சுவார்த்தையை நடத்துவதற்கு உதவுவதற்காக தமிழரசுக் கட்சி மகஜர் ஒன்றைச் சமர்ப்பித்தது. அது இரண்டு பகுதிகளைக் கொண்டது. மகஜரின் முதலாவது பகுதியில் இடம் பெற்றவை:

1 பிரதேச சபைகளை உடனடியாக நிறுவுதல்.

2 தமிழ் மொழி உபயோகக் கொள்கையை அமுல் செய்தல்.

3 அக் கொள்கை கீழ்க் காணும் மூன்று அம்சங்களை உள்ளடக்கியிருக்க வேண்டும்.

(அ) தமிழ் மொழியை இலங்கைவாழ் தேசிய இனத்தின் மொழியாக சட்ட மூலம் ஏற்றுக் கொள்ளுதல்.

(ஆ) வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அரசாங்க கருமங்கள் யாவும் தமிழிலேயே நடத்தச் சட்டமியற்றி அமுல் நடத்துதல்.

(இ) ஏனைய மாகாணங்களில் வசிக்கும் தமிழ் பேசும் மக்கள் தம் மொழிகளிலேயே அரசாங்கத்துடன் கருமம் ஆற்றும் உரிமையளிக்கும் சட்டங்கள் இயற்ற வேண்டும்.

இரண்டாவது பகுதி சிங்களம் மட்டும் சட்டத்தினால் பாதிக்கப்படும் தமிழ் அரசாங்க ஊழியரின் பிரச்சினை பற்றியது. தமிழரசுக் கட்சியின் மகஜர் அரசாங்க ஊழியர்களை இரண்டு பிரிவினராகப் பிரித்தது. சிங்களம் மட்டும் சட்டம் இயற்றப் படுவதற்கு முன்பு சேர்ந்தவர்கள் முன்சேர்ந்தவர்கள் எனவும், சிங்களம் மட்டும் சட்டம் நிறைவேற்றப்பட்டதற்குப் பின்பு சேர்ந்தவர்கள் பின் சேர்ந்தவர்கள் எனவும் கொள்ளப்பட்டனர். முன் சேர்ந்தவர்கள் பற்றி மகஜர் இவ்வாறு கூறியது:

(அ) ஆங்கிலத்தில் தொடர்ந்து வேலை செய்யக்கூடிய பகுதிகளுக்கு மாற்ற வேண்டும். பதவி உயர்வு பாதிக்கப்படலாகாது.

(ஆ) அவர்களுடன் ஆங்கிலத்திலேயே தொடர்பு கொள்ள வேண்டும். பின் சேர்ந்தவர்களைப் பற்றி மகஜர் கூறியது இது தான்:



(இ) முதலாம் பகுதியில் குறிப்பிட்டபடி மொழிப் பிரச்சினைக்குத் தீர்வு கண்டு அத் தீர்வுக்கமைய நடத்தப்படுதல்.

(ஈ) உத்தியோகத்தை உறுதிப் படுத்தல் சிங்கள திறமைப் பரீட்சையில் தங்கியிருக்கக் கூடாது.

(உ) சம்பள உயர்வும், பதவி உயர்வும் வழங்குவதற்கு மிகவும் இலகுவான சிங்களத் திறமை பரீட்சையை நடத்தலாம்.

ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா தலைமை வகித்த போதிலும் பீலிக்ஸ்தான் அரசாங்கத்தின் சார்பில் பேசினார். மகஜரின் முதலாவது பகுதியில் கூறப்பட்டுள்ள வற்றைப் பற்றி அரசாங்கத்தினால் எதுவுமே செய்ய முடியாது என்றும் தமிழ் அரசாங்க ஊழியரின் கஷ்டங்களைக் குறைப்பது பற்றியே பேசவேண்டும் என்று அவர் ஆரம்பத்திலேயே கூறி விட்டார்.

அரசாங்க ஊழியரின் பிரச்சினைகள் பற்றியே இரண்டு மணித்தியால பேச்சுவார்த்தை அமைந்தது. தமிழ் அரசாங்க ஊழியர்களின் பிரச்சினைகளை அமிர்தலிங்கம் எடுத்துக் கூறினார். முன் சேர்ந்தவர்கள் அவர்கள் செய்து கொண்ட ஒப்பந்தத்துக்கமைய ஆங்கிலத்தில் தொடர்ந்து வேலை செய்ய அனுமதிக்கப்படவேண்டும் என்று அமிர்தலிங்கம் வாதாடினார். பின் சேர்ந்தவர்கள்சிங்களம் படிக்கத்தான் வேண்டும் என்பதை ஒப்புக் கொண்ட அமிர்தலிங்கம் அவர்களுக்குக் கூடிய அவகாசம் கொடுக்கப்பட வேண்டும் என்று சொன்னார். எந்த முடிவையும் எடுக்காமல் பேச்சுவார்த்தை நவம்பர் 23ம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது. இரண்டு மணித்தியாலங்கள் நடந்த அம் மகா நாட்டிலும் எந்த விதமான தீர்மானமும் எடுக்கப்படவில்லை. பேச்சு வார்த்தையைத் தொடர்வது என்ற முடிவுடன் ஒத்திவைக்கப்பட்டது.

### நீதிமன்ற மொழி

நவம்பர் மாத இறுதியில் நீதியமைச்சர் சாம் பி. சி. பெர்னாண்டோ நீதிமன்ற மொழி மசோதாவை பாராளுமன்றத்தின் முன் சமர்ப்பித்தார். நாடு முழுவதும் சிங்களம் நீதிமன்ற மொழியாக இருக்கும் என அம் மசோதா கூறியது. நீதிமன்ற மொழி மசோதாவைக் கண்டித்து தந்தை செல்வா ஓர் அறிக்கை வெளியிட்டார். தமிழ் மக்கள் தமிழ்ப் பகுதியிலும் தமது அலுவல்களைத் தமிழில் செய்ய இச் சட்டம் வசதி செய்து கொடுக்கவில்லை என்று தந்தை அவ்வறிக்கையில் குறிப்பிட்டார்.

www.tamilarangam.net



நீதிமன்ற மொழி மசோதா பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட தினத்தில் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் உள்ள நீதிமன்றங்களைத் தமிழ் வழக்குரைஞர்கள் பகிஷ்கரித்தனர். தமிழ் மக்களின் எதிர்ப்பை அரசாங்கம் பொருட்படுத்தவில்லை.

நீதிமன்ற மொழி மசோதா சமர்ப்பிக்கப்பட்டதினால் உருவாகிய புதிய சூழலை மதிப்பிடுவதற்காக தமிழரசுக் கட்சியின் செயற்குழு மட்டக்களப்பில் டிசம்பர் 4ம் திகதி கூடியது. அரசாங்கத்துடன் பேச்சு வார்த்தையைத் தொடருவதில் அர்த்தமில்லை என்ற முடிவு செய்யப் பட்டது. இந்த முடிவுக்குப் பதிலடி கொடுப்பது போல் 1961 ஜனவரி முதலாம் திகதி சிங்களம் மட்டும் சட்டத்தை நாடு முழுவதும் தீவிரமாக அமுல் செய்ய அரசாங்கம் முடிவு செய்தது. அரசாங்கத்தின் இந்த முடிவை ஆராய்வதற்காக தமிழரசுக் கட்சியின் செயற்குழு டிசம்பர் 18ம் திகதி யாழ்ப்பாணத்தில் அவசரமாகக் கூடியது. சிங்களம் மட்டும் சட்ட அமுலை எதிர்ப்பது என்று முடிவு செய்யப்பட்டது. முதலாவது நடவடிக்கை யாக ஜனவரி 2ல் ஹர்த்தால் நடத்துவதென்று முடிவு செய்யப்பட்டது.

அம் முடிவை விளக்கித் தந்தை செல்வா ஓர் அறிக்கையை வெளியிட்டார். அவ்வறிக்கை இது: இன்றைய அரசாங்கம் தமிழ் பேசும் மக்கள் மீது இன்னுமொரு மோசடியைச் செய்துள்ளது. சிங்களம் மட்டும் சட்டம் நிறைவேற்றப்பட்ட சமயம் அச்சட்டம் சிங்களம் தவிர்ந்த வேறு மொழிகள் மூலம் சேவைக்குச் சேர்க்கப்பட்ட அரசாங்க ஊழியருக்கு எவ்வித கஷ்டமும் விளைவிக்காத வகையில் அமுல் செய்யப்படும் என்று பிரதம மந்திரியும் நிதியமைச்சரும் வாக்குறுதி யளித்தனர். இவ் வாக்குறுதிகள் பாராளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் கொடுக்கப்பட்டன. பிரதம மந்திரியையும் வேறு சில அமைச்சர்களையும் அண்மையில் சந்தித்த எமது கட்சியின் தூதுக் கோஷ்டி இவ் வாக்குறுதிகளுக்கு மதிப்பளிக்கும்படி அரசாங்கத்தைக் கோரியது. ஆனால், அரசாங்கம் காலஞ் சென்ற பிரதம மந்திரி கொடுத்த வாக்குறுதிகளைக் கைவிட்டுவிட்டது. டிசம்பர் 26ம் திகதி மறுபடியும் கூடிய செயற்குழு ஹர்த்தால் நடத்தும் முடிவை ஊர்ஜிதம் செய்தது.

### தனியரசுக் கோரிக்கை

அச் செயற்குழுக் கூட்டத்தில் வவுனியாவைச் சேர்ந்த ஏ. சிற்றம்பலம் தனியரசு பிரேரணையைமுன் மொழிந்தார். சமஷ்டிக் கோரிக்கையைக் கைவிட்டு தனி நாட்டுக்காகப் போராட வேண்டும் என



அவர் வாதாடினார். சமஷ்டி ஆட்சியைப் பெறுவதற்கு பெரும்பான்மை சமூகமான சிங்களவரின் ஒத்துழைப்பு அவசியம். ஆனால், சிங்கள தலைமைப்பீடம் அதற்குத் தயாரில்லை. எனவே, தனி நாடு கோரிப் போராடுவதே புத்திசாதுரியமானது என அவர் வாதாடினார். முப்பத் தேழு உறுப்பினரைக் கொண்ட செயற்குழுவில் உள்ள சிலர் சிற்றம் பலத்தின் வாதத்தை ஆதரித்தனர். தந்தை செல்வா தனி நாட்டுக் கோரிக்கையை முற்றாக எதிர்த்தார். தனி நாட்டுக் கோரிக்கை ஆயுதப் போருக்கு இட்டுச் செல்லும். ஆயுதப் போர் எந்தவிதமான பிரச்சினைக் கும் தீர்வு காணமாட்டாது. அது மேலும் புதிய புதிய பிரச்சினைகளை உண்டாக்கும். பலாத்காரம் பலாத்காரத்தையே வளர்க்கும் என்று தந்தை பதிலிறுத்ததாக இராசமாணிக்கம்என்னிடம் சொன்னார். அது மட்டு மல்ல, தந்தை உபயோகித்த அதே வசனங்களை ஏழாவது மாநில மாநாட்டுத் தலைமையுரையின் போது இராசமாணிக்கம் உபயோ கித்தார். 1960 முற்பகுதியில் தனி நாட்டுக் கோரிக்கையை தமிழ் மக்கள் முன் சி. சுந்தரலிங்கம் வைத்தார்.

1960 மார்ச் ஜூலை தேர்தல்களில் ஈழத் தமிழர் ஒற்றுமை முன்னணி என்று தான் ஆரம்பித்த கட்சியின் சார்பில் அவர் போட்டியிட்டார். தமிழ் மக்கள் சுந்தரலிங்கத்தையும் அவரின் தனி நாட்டுக் கோரிக்கையையும் நிராகரித்தனர். நவம்பர் இறுதி வாரத்தில் பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நீதிமன்ற மொழி மசோதா டிசம்பர் 30ல் விவாதத்துக்கு எடுக்கப்பட்டது. சபை விதிகளை நிறுத்தி வைத்துவிட்டு அன்றிரவு முழுவதும் மசோதா விவாதிக்கப்பட்டது. அடுத்த நாள் காலை 8 மணியளவில் மசோதா நிறைவேற்றப்பட்டது. வடக்கிலும்- கிழக்கிலும் தமிழ் நீதிமன்ற மொழியாக இருக்க வேண்டு மெனக் கோரி தமிழரசுக் கட்சி பிரேரித்த திருத்தங்கள் நிராகரிக்கப் பட்டன.

டிசம்பர் 31 பிற்பகலில் தந்தை செல்வா இந்த அறிக்கையை வெளியிட்டார்:

எதிர்ப்பைக் காட்டுவதைத் தவிர வேறு எந்த வழியும் தமிழ் மக்களுக்கு இனிமேல் கிடையாது. அரசாங்கத்தின் அடக்கு முறை நடவடிக்கைகள், இலங்கையின் தமிழ் பேசும் மக்களாகிய எங்களுக்குப் பெரும் துன்பத்தை விளைவிக்கும் என்பதையும் நாம் உணருகின்றோம். எவ்வளவு தியாகங்கள் செய்ய நேரிடினும் நாம் செல்ல வேண்டிய பாதை எமக்குத் தெளிவாகத் தெரிகின்றது. முழு மனதுடன் எதிர்ப்பைக் காட்டுவதும் முழுத் தீரத்துடன் போராடுவதும் நூற்றுக்கு நூறு அகிம் சையைக் கடைப்பிடிப்பதுமே எம் முன்னுள்ள வழி.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஜனவரி 2 ஹர்த்தாலுக்குச் செயற்குழு தயார் செய்து கொண்டிருக்கையில் வவுனியா மகாநாட்டில் நியமிக்கப்பட்டு, பண்டாரநாயக்கா - செல்வநாயகம் ஒப்பந்தத்தையடுத்து செயலற்றிருந்த நடவடிக்கைக் குழுவுக்குப் புத்துயிர் அளிக்கப்பட்டது.

ஜனவரி 21ம் திகதி யாழ்ப்பாணத்தில் ஏழாவது மகாநாட்டைக் கூட்டுவதென்றும் பெப்ரவரி 20ல் சத்தியாக்கிரக இயக்கத்தை ஆரம்பிப்பதெனவும் நடவடிக்கைக் குழு முடிவு செய்தது. ஹர்த்தால் பூரண வெற்றியளித்தது. அதனால் உருவாகிய உணர்ச்சி வேகத்தைப் போராட்டத்துக்கு உபயோகிக்க நடவடிக்கைக் குழு முடிவு செய்தது. ஜனவரி 8ம் திகதி கூடிய நடவடிக்கைக் குழு மூன்று கட்ட நடவடிக்கையை அறிவித்தது. முதலாவது கட்டம்: சிங்கள மொழியில் பணி புரியும் அரசாங்க அலுவலகங்களுக்கு முன் மறியல் செய்தல். இரண்டாவது கட்டம் : சிங்கள மொழிச் சட்டத்தை அமுல் செய்பவர்களுக்கு எதிராக ஒத்துழையாமை இயக்கத்தை ஆரம்பித்தல். மூன்றாவது கட்டம்: தமிழ் போதனா மொழிப் பாடசாலைகளில் சிங்களத்தைக் கற்பிப்பதைத் தடுக்க நடவடிக்கை எடுத்தல்.

தமிழரசுக் கட்சியின் ஏழாவது மகாநாடு தலைவர் மு. இராசமாணிக்கம் தலைமையில் யாழ்ப்பாணத்தில் வன்னியசிங்கம் அரங்கில் ஜனவரி 21ல் நடந்தது. இராசமாணிக்கம் தன் தலைமையுரையில் இரண்டு அடிப்படைக் கருத்துக்களை வலியுறுத்தினார். அவை: "தமிழ் பேசும் மக்களின் தாயகம். தமிழ் பேசும் மக்கள் ஒரு தேசிய இனம்".

அவர் சொன்னார்: எவ்வகையில் பார்த்தாலும் நாம் ஒரு தேசிய இனம் என்பதில் ஐயமில்லை. நாம் ஒரு திட்ட வட்டமான எல்லையுள்ள பிரதேசத்தைத் தாயகமாகக் கொண்டிருக்கின்றோம். ஒரு பொது மொழியைப் பேசுகின்றோம். கல் தோன்றி மண் தோன்றாக் காலம் தொட்டு வளர்ந்து வந்த ஒரு தனிப் பண்பாட்டையும், பாரம்பரியத்தையும் எமது சொந்தமாகக் கொண்டிருக்கின்றோம். இவை எல்லாவற்றுக்கும் மேலாக ஒரு தேசிய இனத்துக்கு இன்றியமையாத தான ஒன்றென்னும் உணர்ச்சியைத் தமிழ் பேசும் மக்களாகிய நாமெல்லோரும் பெற்றிருக்கின்றோம். அடுத்து, தமிழ் பேசும் மக்களை எதிர்நோக்கி யுள்ள கேள்வியை இராசமாணிக்கம் எழுப்பினார். நாம் ஒரு தனிச் சமுதாயமாக வாழப் போகின்றோமா அல்லவா என்பதே பிரச்சினை.

பின்பு, பாகிஸ்தான் தோன்றியதற்கான அடிப்படைமனோதத்துவ காரணங்களை ஆராய்ந்த இந்திய அறிஞர் டாக்டர் அம்பேத்கார் சுட்டிக்காட்டிய இரு அம்சங்களைக் குறிப்பிட்டார். முதலாவது: ஒரு தனி தேசிய இனமாக இருந்த முஸ்லிம்கள் தமது இனத்துக்கு ஒரு தாயகத்தை விரும்பியமை. இரண்டாவது: இந்துக்கள் தமது பெரும்பான்மை பலத்தைக் கொண்டு, முஸ்லிம்களை ஓர் அந்நிய நாட்டில் வாழும் இரண்டாம் தரப் பிரஜைகள் போல் நடத்தியமை. தமிழ் மக்களை அந்நியராக்காதீர்கள் என்று சிங்களச் சகோதரர்களுக்கு இராசமாணிக்கம் வேண்டுகோள் விடுத்தார்.



யாழ்ப்பாண மகா நாட்டில் நான்கு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. தீண்டாமை ஒழிப்பு, பொருளாதார அபிவிருத்தி, பிரஜாவுரிமை, அரசியல் நிலைமை, தனிச் சிங்களத் திணிப்பை எதிர்த்து நேரடி நடவடிக்கையில் இறங்குவ தென்றும் பெப்ரவரி 20ல் யாழ்ப்பாணத்தில் சத்தியாக்கிரக போராட்டத்தை ஆரம்பிப்பதென்றும், மற்ற மாவட்டங்களுக்கு பின்பு விஸ்தரிப்பதென்றும் அரசியல் தீர்மானம் கூறியது.

**1961 சத்தியாக்கிரகம்**

1961 பெப்ரவரி 20 காலை ஏழரை மணி திங்கட்கிழமை. பொழுது புலரும்போதே தந்தை செல்வாவின் காங்கேசன்துறை வீட்டு முற்றத்தில் 25 தொண்டர்கள்வரை குழுமினர். அவர்கள் தந்தையின் தலைமையில் மோட்டார் பவனியாக யாழ்ப்பாணம் கச்சேரியை காலை ஏழரை மணியளவில் வந்தடைந்தனர். எல்லாரும் கச்சேரி வாசலை மறித்தபடி அமைதியாக அமர்ந்தனர். மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் தேவாரம் பாடி சத்தியாக்கிரகத்தை துவக்கி வைத்தார். அரைமணி நேரத்திற்குள் அங்கு பெருந்தொகையான மக்கள் கூடிவிட்டனர். ஒரு புறத்தில் கச்சேரி நல்லூர் ரோட்டில் ரயில் பாதைவரை மக்கள் அமர்ந்திருந்தனர். மறுபக்கத்தில் காட்டுக் கந்தோர் ஒழுங்கை வரையும் அமர்ந்தனர். இதனால் பிரதான வாயிலை மட்டுமல்ல பக்க வாசல்களையும் திறக்க முடியாத நிலை ஏற்பட்டது.

மறியலில் ஈடுபட்ட தொண்டர்களை அரசாங்கம் கைது செய்யும் என்று எதிர்பார்க்கப்பட்டது. அதனால், ஒரு நாளுக்கு ஒரு தேர்தல் தொகுதியைச் சேர்ந்த தொண்டர்கள் அத் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் தலைமையில் சத்தியாக்கிரகம் செய்வதென்று தீர்மானிக்கப்பட்டது. முதல் நாள் காங்கேசன்துறை தொகுதியின் நாளாகையால் தந்தை செல்வா தலைமையில் அத்தொகுதித்தொண்டர்கள் சத்தியாக்கிரகம் செய்ய, ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களும் தொண்டர்களும் வெளியில் உதவியாக நின்றனர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பிரதான வாயிலினூடாக அரசாங்க ஊழியர்கள் செல்வதற்குப் பாதை ஏற்படுத்தப் பொலிஸார் முற்பட்டபோது, எல்லாப் பாராளு மன்ற உறுப்பினர்களும் தொண்டர்களும் அந்த இடத்திற்குச் சென்று பாதைக்குக் குறுக்கே படுத்தனர். பொலிஸார் தொண்டர்களைப் பலாத் காரமாகத் தூக்கி அப்புறப்படுத்த முயன்றனர். மிருகத்தனமாகத் தொண்டர்களைத் தூக்கி நிலத்தில் வீசி துன்புறுத்தியதைப் பார்த்த பொது மக்கள் நூற்றுக் கணக்கில் சத்தியாக்கிரகிகளோடு சேர்ந்து கொண்டனர். இதனால், பொலிஸாரின் முயற்சி தோல்வி கண்டது.

அப்பொழுது எம்.ஸ்ரீகாந்தா யாழ்ப்பாண அரசாங்க அதிபராகப் பதவி வகித்தார். அவர் பழைய பூங்காவிலுள்ள அரசாங்க அதிபர் வாசஸ்தலத்தில் தங்கியிருந்தார். அன்று காலை 10 மணிக்கு யாழ்ப்பாண நகர மண்டபத்தில் யாழ்ப்பாண அசைஸ் நீதிமன்றம் தன் விசாரணைத் தொடரை ஆரம்பிக்கவிருந்தது. அரசாங்கத்தின் பிரதிநிதியான அரசாங்க அதிபர் அதற்கான ஆணையை நீதியரசருக்கு வழங்குவது சம்பிரதாயம். அரசாங்க அதிபரை அழைத்துச் செல்வதற்குப் பொலிசார் வந்தனர். அவர்களுடன் யாழ்ப்பாண பொலிஸ் சுப்ரீன்டன் சி. ஆர். ஆண்ட்டும் வந்தார். ஸ்ரீகாந்தாவைச் சந்திப்பதற்கு பழைய பூங்காவுக்குள் பிரவே சிக்க அவர் முயன்றார். சத்தியாக்கிரகிகள் அசைந்து கொடுக்கவில்லை. அவருக்கு ஆத்திரம் பொத்துக் கொண்டு வந்தது. உதவி பொலிஸ் சுப்ரீன்டன்ட் மகேந்திரனைக் கோபமாகப் பார்த்தார். "இந்தப் பசாசு களை இழுத்துத் தூர எறியுங்கள்" என்று கத்தினார். அவரின் உத்தரவைச் செயற்படுத்தப் பொலிசார் தயங்கினர். ஊழியர்கள் உள்ளே போகவா வது வழி ஏற்படுத்திக் கொடுங்கள். சூடு பறந்த உத்தரவு அது.

பின்னால் நின்ற கலகப் பொலிசார் முன்னால் வந்தனர். அவர்கள் இரும்புத் தொப்பிகள் அணிந்திருந்தனர். வலது கைகளில் பேற்றன் பொல்லுகள், இடது கையில் பிரம்பால் நெய்யப்பட்ட கேடயம். சத்தியாக்கிரகிகளை அவர்களின் தோள்களில் பிடித்து இழுத்தனர். பொல்லுகளால் அடித்தனர். சப்பாத்துக் கால்களால் உதைத்தனர். அதற்கிடையில் சனக் கூட்டம் பெருகிவிட்டது. கண்டி றோட்டில் இரண்டு முனைகளிலும் அரை மைல் தூரத்துக்கு மக்கள் வெள்ளம். பொலிசார் சிலரை இழுத்தெறிய மற்றவர்கள் ஓடிப்போய் அந்த இடங்களை நிரப்பினர்.

கச்சேரி வாசலில் இந்தப் போராட்டம் நடந்து கொண்டிருக் கையில் பழைய பூங்காவிற்குள் சுவர் மேலால் குதித்து உள்ளே சென்ற ஆண்ட் மெய் பாதுகாப்பாளராக அமர ஜீப் ஒன்றில் ஸ்ரீகாந்தா வாசலை நோக்கி வந்து கொண்டிருந்தார். தொண்டர்கள் அசையவில்லை.



அடித்து நொருக்கி வழியைத் திறந்து விடுங்கள் என்று ஆண்ட் கத்தினார். பொலிசார் பொல்லுகளால் தாக்கத் தொடங்கினர். தொண்டர்கள் பலருக்குக் காயம் ஏற்பட்டது. வி. ஏ. கந்தையா, அ. அமிர்தலிங்கம், வி. தருமலிங்கம். க. துரைரத்தினம் ஆகியோர் வண்டிக்குக் குறுக்கே படுத்தனர். ஈ. எம் .வி. நாகநாதன் முன்னணியில் நின்றார். அனைவரும் பொலிசாரால் தாக்கப்பட்டனர். நாகநாதன்மீது பட்ட குண்டாந்தடி முறிந்தது. இக் குழப்ப நிலையில் வண்டி எவ்வாறோ வெளியேறியது. ஆத்திரங்கொண்ட சிலர் பொலிசார்மீது கல்லெறிந்தனர். கல்லுக்குக் கல்' என்று பொலிசாரும் திருப்பி எறிந்தனர். பொலிசார் அடுத்து கண்ணீர்ப் புகை அடித்தனர். அத்துடன் வானத்தை நோக்கிச் சுட்டனர். மக்கள் அந்த இடத்தைவிட்டு விலகிப் போய் நின்று கூச்சல் போட்டதோடு கற்களையும் வீசினர். நிலைமை கட்டுக் கடங்காமல் போவதை அவதானித்த தந்தை செல்வா முதல் நாளைய சத்தியாக்கிரகம் முடிவ டைந்து விட்டதாகவும் அமைதியாகக் கலைந்து போகுமாறும் அறிவித் தார். தந்தையின் ஆணைக்குக் கட்டுப்பட்ட மக்கள் கலைந்து சென்றனர். சத்தியாக்கிரகிகள் தாக்கப்பட்ட செய்தி யாழ்குடாநாடு எங்கும் காட்டுத் தீ போலப் பரவியது. கொதித்தெழுந்த வாலிபர்களும் மாணவர்களும் சந்திதோறும் கூடி நின்று தங்கள் ஆத்திர உணர்வைப் பகிர்ந்து கொண்டனர். ஜே. ஆர். ஜயவர்த்தனா, பீற்றர் கெனமன், பேர்ணாட் சொய்சா, தகநாயக்கா, எஸ். டி. பண்டாரநாயக்கா உட்படப் பலர் அன்று நிகழ்ந்த தாக்குதல்களை வன்மையாகக் கண்டித்தனர்.

இரண்டாம் நாள் சத்தியாக்கிரகம் அமிர்தலிங்கத்தின் தலைமை யில் வட்டுக்கோட்டைத் தொகுதி தொண்டர்களால் நடத்தப்பட்டது. பொது மக்களும் ஆயிரக் கணக்கில் திரண்டு நின்றனர். அரசாங்க ஊழியரைச் சத்தியாக்கிரகிகளின் அணிக்கு ஊடாக, அலுவலகத்தினுள் அழைத்துச் செல்லப் பொலிசார் முயன்றனர். மக்களின் கொந்தளிப் பான எதிர்ப்புக்கு மத்தியில் உள்ளே செல்லபெரும்பாலான அரசாங்க ஊழியர் மறுத்தனர்.

மூன்றாம் நாள் வி. ஏ. கந்தையா தலைமையில் ஊர்காவற்றுறைத் தொகுதி தொண்டர்களும் நான்காம் நாள் வ. ந. நவரத்தினம் தலைமையில் சாவகச்சேரித் தொண்டர்களுமாக, இப்படியே சத்தியாக் கிரகம் தொடர்ந்து நடைபெற்றது. தொழிலாளர்கள், மாணவர்கள், விவசாயிகள், வழக்கறிஞர்கள், வர்த்தகர்கள் எல்லோரும் போராட்டத்தில் குதித்தனர். யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க நிர்வாகம் ஸ்தம்பித்தது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



யாழ்ப்பாணத்தில் பொலிஸார் நடத்திய தாக்குதலுக்கு ஆட்சே பனை தெரிவிக்கும் வகையில் பெப்ரவரி 27ல் மட்டக்களப்பு மாவட்ட மெங்கும் ஹர்த்தால் நடைபெற்றது. அடுத்த நாள், மட்டக்களப்பு கச்சேரி வாயிலிலும் தொண்டர்களின் சத்தியாக்கிரகம் ஆரம்பிக்கப் பட்டது. மார்ச் 4ம் திகதி திருகோணமலைக் கச்சேரிக்கும், அதன் பின்பு மன்னார், வவுனியாக் கச்சேரிகளுக்கும் சத்தியாக்கிரக இயக்கம் விஸ் தரிக்கப்பட்டது. திருகோணமலைக் கச்சேரி வாயிலில் மறியல் செய்த சத்தியாக்கிரகிகள் பொலிஸாரின் தடியடிப் பிரயோகத்திற்கு ஆளாகினர். 10 பேர் காயமடைந்து, வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். கடுமையான காயமடைந்த நால்வரில் மூதூர் முதலாவது எம். பி. ஏகாம்பரமும் ஒருவர். பொலிஸாரின் தடியடி யினால், காயமுற்ற ஏகாம்பரம் அதிலிருந்து முற்றாகக் குணமடைய வில்லை. மார்ச் 22ல் அவர் திடீரென மரணமானார்.

**மக்கள் போராட்டம்**

தமிழரசுக் கட்சியினரால் ஆரம்பிக்கப்பட்ட சத்தியாக்கிரக இயக் கம் தமிழ் பேசும் மக்களின் போராட்டமாக விரிவடைந்தது. தமிழ் காங்கிரஸ், சமசமாசக் கட்சி என்பனவும் போராட்டத்தில் முழு மையாகக் கலந்து கொண்டன. கம்யூனிஸ்டுக் கட்சி மட்டும் கலந்து கொள்ளவில்லை, ஆரம்பத்தில் ஆதரவு நல்கிய யாழ்ப்பாண எம்.பி அல்பிரெட் துரையப்பா படிப்படியாக சிறிமா அம்மையாரின் வலையில் விழுந்தார். இவர்களின் பணியைப் பாராட்டிப் பிரதமர் சிறீமா இராணு வத்தளபதி கேணல் உடுகமவுக்கு எழுதியகடித்தில், உங்கள் சாமர்த்திய மான திட்டங்களைச் செயல்படுத்தும் பணியில் யாழ்ப்பாணப் பொது வுடைமைவாதிகளும். திருவாளர்கள், அல்பிரெட் துரையப்பா, சு. நடேசபிள்ளை, எஸ்.யூ. சோமசேகரம் ஆகியோரும் முழுமனதோடு ஒத்துழைத்திருக்கிறார்கள். எனது மனமார்ந்த நன்றியை அக்கன வான்கள் ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட முறையில் தெரிவித்திருக் கிறேன் என்று எழுதினார்.

ஒரு மாதம் இடைவிடாது சத்தியாக்கிரகம் நடைபெற்றது. பிரத மர் சிறீமா பண்டாரநாயக்கா வட, கிழக்கு மாகாணங்களில் தன் ஆட்சி நடைபெறவில்லை என்பதை ஒப்புக்கொண்டார். 1961 ஏப்ரல் 4. வடக்கு-கிழக்கு சத்தியாக்கிரக நிலைமையை மந்திரி சபை நாலு மணித்தியாலயம் ஆராய்ந்தது. அவசரகாலச் சட்டத்தைப் பிரகடனம் செய்து தமிழரசுக் கட்சித் தலைவர்களைத் தடுப்புக் காவலில் வைக்க......



வேண்டும் என்ற கடும் போக்கைப் பீலிக்ஸ் ஆர். டயஸ் பண்டார நாயக்கா வலியுறுத்தினார். சி. பி. டி. சில்வாவும், சாம். பி. சி. பெர் னாண்டோவும் பேச்சுவார்த்தை மூலம் தகராற்றைத் தீர்ப்பதற்கு ஒரு சந்தர்ப்பம் அளிக்க வேண்டும் என வற்புறுத்தினர். சில்வாவும் பெர்னாண்டோவும் தமிழரசுத் தலைவர்களுடன் தொடர்பு கொள்ளு மாறு பணிக்கப்பட்டனர்.

மந்திரி சபையின் அந்த முடிவுக்கமையத் தனது நண்பன் திருச் செல்வத்துக்கு டெலிபோன் செய்தார் பெர்னாண்டோ. மந்திரி சபை யின் முடிவைக் கூறி தந்தை செல்வாவைக் கொழும்புக்குவரச் செய்யு மாறு கேட்டார். திருச்செல்வம் யாழ்ப்பாணத்துக்கு டெலிபோன் செய்து தந்தை செல்வாவிடம் விஷயத்தைச் சொன்னார்.

பேச்சுவார்த்தைக்கு மேலுமொரு சந்தர்ப்பம் கொடுக்குமாறு பெர்னாண்டோ கூறுகிறார் என்றார் திருச்செல்வம். எந்தப் பிரச்சினைக்கும் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணப்படுவதையே தந்தை செல்வா விரும்புவார். மக்கள் மீது கஷ்டச் சுமையைச் சுமத்துவதை வெறுப்பவர். கொழும்புக்கு வரச் சம்மதித்தார். தந்தை செல்வா உடனடியாகவே தமிழரசுக் கட்சியின் மற்ற மூத்த தலைவர் களை அழைத்தார். திருச்செல்வம் சொன்ன தகவலைக் கூறினார். முதலில் எதிர்ப்பு இருந்தது. எதிர்த்தவர்களில் முக்கியமானவர் அமிர்தலிங்கம். எதிர்ப்பு அலை உயர்ந்துள்ள இச் சமயத்தில் பேச்சுவார்த்தைக்குப் போனால் மக்கள் என்ன சொல்வார்கள்? என்று அவர் வாதாடினார். தந்தை உதிர்த்த பொன் மொழி இது:

> பேச்சுவார்த்தைக்கு எந்தச் சந்தர்ப்பம் கிடைத்தாலும் அதைத் தவற விடலாகாது. பேச்சுவார்த்தை தோல்வியில் முடியும் என்பது தெளிவாகத் தெரியும் சந்தர்ப்பங்களிலும் கூட பேச்சுவார்த்தைக்குப் போய் அது தோல்வியில் முடிவடைவதைக் காண்பதே சிறந்தது.

பேச்சுவார்த்தை நடத்தக் கொழும்புக்குப் போவதுதான் சிறந்தது என்ற முடிவு எடுக்கப்பட்டது. செல்வாவின் தலைமையில் கட்சித் தலைவர் ராஜமாணிக்கம், நாகநாதன், அமிர்தலிங்கம் ஆகிய நால்வரும் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்வதென்று முடிவு செய்யப்பட்டது. ஏப்ரல் 5 பிற்பகல் விமானத்தில் தந்தையும் அமிரும் பலாலியிலிருந்து கொழும்புக்குப் பறந்தனர். மட்டக்களப்பில் இருந்த நாகநாதன் காரில் வந்து சேர்ந்தார். இராசமாணிக்கம் அன்று கொழும்பில் இருந்தார். இரவு 7.30 மணிக்கு திருச்செல்வத்தின் ரொஸ்மிட் பிளேஸ் வீட்டில் சாம். பி. சி. பெர்னாண்டோவுடனான சந்திப்பு நடந்தது. சத்தியாக்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கிரகத்துக்கான உடனடிக் காரணம் சிங்களம் மட்டும் சட்டம் அமுலாக்கப்பட்டமைதான் என்று தந்தை செல்வா அமைச்சர் பெர்னாண்டோவுக்குக் கூறினார். சிங்களம் மட்டும் சட்ட அமுலாக்கம் தமிழ் பேசும் மக்களுக்கு ஏற்படுத்தியுள்ள கஷ்டங்களை நீக்குவதற்கு நடவடிக்கை எடுத்தால் மற்ற விடயங்களைப் பின்பு பேசித் தீர்த்துக் கொள்ளலாம் என்றும் சொன்னார். நாலு மணித்தியாலம் நடந்த அச்சந்திப்பின் போது நாலு அம்சக் கோரிக்கை யொன்றைக் கொடுத்து அதை அமுல் செய்யின் தமிழ் பேசும் மக்களின் அன்றாடப் பிரச்சினை களுக்குத் தீர்வு காணப்பட்டு விடும் என்று தந்தை சொன்னார். எமது கோரிக்கைகள் அமுல் செய்யப்படும்வரை சத்தியாக்கிரகமும் தொடரும் என்று தந்தை உறுதியாகக் கூறிவிட்டார். தந்தை செல்வா சமர்ப்பித்த நாலு அம்சக் கோரிக்கை:

1 வடக்கு-கிழக்கு மாகாணங்களின் நிர்வாக மொழியாகத் தமிழ் இருக்க வேண்டும்.

2 அந்த இரு மாகாணங்களிலும் தமிழ் மொழி நீதிமன்ற மொழியாக இருக்க வேண்டும்.

3 உத்தியோக மொழிச் சட்டம் தொடர்பாக தமிழ் அரசாங்க சேவை ஊழியர்களின் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும்.

4 வடக்கு-கிழக்கு மாகாணங்களுக்கு வெளியே வசிக்கும் தமிழ் பேசும் மக்களின் உரிமைகள் தெளிவாக்கப்பட வேண்டும்.

ஆறாம் திகதி காலையில் அமிர்தலிங்கமும் இராசமாணிக்கமும் விமானம் மூலம் யாழ்ப்பாணம் போனார்கள். தந்தை செல்வாவும் நாகநாதனும் கொழும்பில் தங்கியிருந்தனர். ஆறாம் திகதி காலையில் நடந்த விஷேச மந்திரி சபைக் கூட்டத்தில் தந்தை செல்வாவின் நாலு அம்சக் கோரிக்கையை பெர்னாண்டோ சமர்ப்பித்தார். மூன்று மணித்தியால ஆய்வின் பின்புஅக் கோரிக்கைகளை நிராகரிக்க முடிவு செய்யப் பட்டது. ஏழாம் திகதி காலையில் சி. பி. டி. சில்வா அது பற்றிய அறிக்கை ஒன்றைப் பாராளுமன்றத்தில் விடுத்தார். தமிழரசுக் கட்சியின் கோரிக்கை உத்தியோக மொழிச் சட்டத்துடனும் தமிழ் மொழி விஷேச வசதிகள் சட்டத்துடனும் முரண்படுவதனால் அரசாங்கம் அதை ஏற்க முடியாத நிலையில்இருப்பதாக அவர் சொன்னார். ஏப்ரல் 10ல் யாழ்ப் பாணம் திரும்பிய தந்தை அடுத்த நாள் மாலை நல்லூரில் நடந்த



பிரமாண்டமான கூட்டத்தில் பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்ததை அறிவித்து விட்டுச் சத்தியாக்கிரகத்தின் இரண்டாவது கட்டம் திட்ட மிட்டபடி ஏப்ரல் 14ல் ஆரம்பிக்கும் என்று அறிவித்தார். ஏப்ரல் 14ல் சத்தியாக்கிரகத்தின் இரண்டாவது கட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

அன்று நண்பகல் 12.30 சுப வேளையில் யாழ்ப்பாணக் கச்சேரிக்கு முன்னால் அமைக்கப்பட்ட தற்காலிக தமிழரசுத் தபாலகத்தில் தமிழரசு தபால் சேவையை தந்தை செல்வா ஆரம்பித்து வைத்தார். தபாலதி பராகப் பணி புரிந்த தந்தை செல்வா தமிழரசு முத்திரையை விற்பனை செய்தார். முதலாவது முத்திரையை அவர் ஊர்காவல்துறை எம். பி. வி. ஏ. கந்தையாவுக்கு விற்றார். அவர் அம் முத்திரையை உறையில் ஒட்டி மாவட்ட சுப்பிரீண்டன், தபால் சேவை, யாழ்ப்பாணம் என்று விலாசமிட்டு, சத்தியாக்கிரகத்தின் நோக்கத்தை விளக்கி வெளியிடப் பட்ட பிரசுரத்தை அதற்குள் வைத்து ஒட்டித் தபால் பெட்டியில் போட்டார். இராசமாணிக்கம் அத்தபாலை எடுத்துக் கொண்டு காரில் போய் யாழ்ப்பாணத் தபாற் கந்தோரில் சேர்ப்பித்தார். சிவசிதம்பரம் இரண்டாவது முத்திரையை வாங்கினார். அதில் அரசாங்க அதிபரின் விலாசத்தை எழுதி பழைய பூங்காவில் உள்ள அவரின் உத்தியோக இல்லத்துக்குப் போனார். வீட்டில் இருந்த உதவியாளர்கள் அரசாங்க அதிபர் வீட்டில் இல்லை என்று சொல்லிக் கடிதத்தைப் பெற்றுக் கொள்ள மறுத்தனர். அவர் கடிதத்தை பாதுகாவலரிடம் கொடுத்தார். நாகநாதன் இன்னொரு கடிதத்தை யாழ்ப்பாண பொலிஸ் சுப்பிரீண்டனுக்கு கையளித்தார். மற்ற எம். பி. க்களும் இதைப் போன்றே மற்ற உயர் அதிகாரிகளுக்கு கடிதம் போட்டனர். இரண்டு மணித்தியாலங்களில் போஸ்ட்மாஸ்டர் செல்வநாயகம் 5000 பத்துச் சத முத்திரைகளையும், 2500 பதினைந்து சத முத்திரையடித்த தபாலுறை களையும், 1500 ஐந்து சத தபாலட்டைகளையும் விற்பனை செய்தார்.

இரண்டாம் நாள், ஏப்ரல் 15, தமிழரசுத் தபாலகத்தில் முத்திரை விற்பனையை ஆரம்பித்து வைத்து விட்டு, வேறொரு தற்காலிக அலுவலகத்துக்குப் போய் தமிழரசுக் காணிக் கச்சேரியை நடத்தினார் தந்தை. நில அபிவிருத்திக் காணிக் கட்டளைச் சட்டத்திற்கமைய முடிக்குரிய காணிகளை கொடையாகவும் குத்தகையாகவும் பகிர்ந்த ளிப்பதற்கான விண்ணப்பங்களைப் பெறத் தான் தயாராக இருப்பதாக தந்தை அறிவித்தார். அரசாங்கம் தமிழ்ப் பகுதிகளில் காணிக் கச்சேரி களை நடத்துவதில்லை. ஆனால், தமிழ் பேசும் மக்கள் காணி கோரி விண்ணப்பிக்கவில்லை என்று அரசாங்கம் கூறுகிறது. தமிழரசுக் காணிக் கச்சேரி தமிழ் மக்கள் காணி கோரி விண்ணப்பிக்கத் தயாராக இருக்கி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நார்கள் என்பதையும் அரசாங்கம் பொய் சொல்கிறது என்பதையும் உலகிற்குக் காட்டும் என்று தந்தை சொன்னார். ஆயிரக்கணக்கான மக்கள் காணி கேட்டு விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தனர்.

தமிழரசுத் தபால் சேவை ஆரம்பிக்கப்பட்டதை அசட்டை செய்த அரசாங்கம் தமிழரசுக் காணிக் கச்சேரி நடத்தப்படுவதையிட்டு கவலையடைந்தது. உதவி பாதுகாப்பு அமைச்சர் பீலிக்ஸ் ஆர், டயஸ் பண்டாரநாயக்கா ஏப்ரல் 14 மாலை இராணுவத் தளபதிகளைச் சந்தித்தார். நீதியமைச்சர் சாம். பி. சி.பெர்னான்டோவையும் சந்தித்தார். யாழ்ப்பாணத்துக்கு மேலதிகத் துருப்புக் களை அனுப்புவதென்று முடிவு செய்யப்பட்டது. அடுத்த நாள், ஏப்ரல் 15 காலை, பதினைந்து அதிகாரிகளின் தலைமையில் 300 துருப்புக்கள் ரயில் மூலம் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்பட்டனர். மேலதிக படையினர் தெரு மூலம் மன்னார், வவுனியா, திருக்கோணமலை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

### அவசரகால நிலை பிரகடனம்

சிங்கள, தமிழ் புதுவருடப் பிறப்புக் காலமாதலினால், கவர்னர் ஜெனரல் சர். ஒலிவர் குணதிலகா விடுமுறையைக் கழிக்க நுவரெலியாவுக்குப் போய் விட்டார். ஏப்ரல் 16 காலை பிரதம மந்திரி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா டெலிபோன் செய்து சர், ஒலிவரைக் கொழும்புக்கு உடனடியாகத் திரும்புமாறு கேட்டுக் கொண்டார். பின்னேரம் கொழும்புக்குத் திரும்பிய சர். ஒலிவரைச் ஸ்ரீமாவோ போய்ச் சந்தித்து வடக்கிலும்-கிழக்கிலும் தோன்றியுள்ள புதிய நிலைமையை விளக்கினார். அமைச்சர்களையும் பொலிஸ் படை அதிகாரிகளையும் ஸ்ரீமாவோ சந்தித்தார். அன்று அவர் நித்திரைக்குப் போன போது அதிகாலை 1 மணி. ஏப்ரல் 17 ஸ்ரீமாவோவின் 45 வது பிறந்த தினம் அதிகாலையிலேயே எழுந்து விட்டார். இராணுவ, பொலிஸ் துப்பறியும் பிரிவினரின் அறிக்கைகளுடன் பீலிக்ஸ் அலரி மாளிகைக்கு வந்து விட்டார். பாதுகாப்பு அமைச்சு செயலாளர் என். கியு. டயசும் வந்து விட்டார். பொலிஸ் தலைவரும் முப்படைத் தளபதிகளும் கூட வந்து விட்டனர்.

காலை 10 மணிக்கு விசேஷ மந்திரி சபைக் கூட்டம் நடத்தப்பட்டது. சத்தியாக்கிரகத்தை முறியடிக்க எடுக்கப்படவுள்ள நடவடிக்கைகளை அறிவிக்குமாறு பீலிக்சைக் கேட்டார் ஸ்ரீமாவோ அவசர காலச் சட்டம் பிரகடனப் படுத்தப் படவுள்ளது என்றும் வடக்கு, கிழக்கு



மாகாணங்களின் நிர்வாகத்தை இராணுவம் பொறுப்பேற்கும் என்றும் பீலிக்ஸ் அறிவித்தார். தமிழரசுக் கட்சி தடை செய்யப்படும். அதன் தலைவர்கள் கைது செய்யப்படுவர். மந்திரி சபை அம் முடிவுகளை ஒருமனதாக அங்கீகரித்தது.

ஏப்ரல் 17 நள்ளிரவில் இலங்கை முழுவதும் அவசர காலச் சட்டம் பிரகடனம் செய்யப்பட்டது. அதற்கான பிரகடனத்தை கவர்னர் ஜெனரல் பிறப்பித்தார். இன்னுமொரு பிரகடனத்தின் மூலம் மின்சார, எரிபொருள் விநியோகம், நீர் விநியோகம், தந்தி சேவைகள், பஸ் போக்குவரத்து ஆகியவை அத்தியாவசிய சேவைகளாக்கப்பட்டன. தமிழரசுக் கட்சியையும் ஜனதா விமுக்கி பெரமுனையையும் தடை செய்யும் விசேஷ வர்த்தமானி பிரதம மந்திரியின் கையொப்பத்துடன் வெளியிடப்பட்டது. ஊர்வலங்கள் தடை செய்யப்பட்டன. யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களில் நகர எல்லைகளுக்குள் 48 மணித்தியால ஊரடங்கு பிறப்பிக்கப் பட்டது. பொதுக் கூட்டங்கள் தடை செய்யப்பட்டன. பத்திரிகைத் தணிக்கை அறிவிக்கப்பட்டது.

ஐந்து மாவட்டங்களும் இராணுவ இணைப்பதிகாரிகளின் நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்பட்டன. யாழ்ப்பாணத்துக்கு லெப். கேர்ணல் ஏ. ஆர். உடுகம, திருகோணமலைக்கு லெப் கேர்ணல் எல். என். விக்கிரமசூரிய, மட்டக்களப்புக்கு லெப் கேர்ணல் பி. டி. ராமநாயக்க, மன்னாருக்கு மேஜர் ரி. எஸ். பி. சாலி, பொறுப்பதிகாரிகளானார்கள். ஏப்ரல் 17 பிற்பகல் இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் விஜயகோன் யாழ்ப்பாணம் சென்று அங்குள்ள படைகளைத் தன் பொறுப்பில் ஏற்றுக் கொண்டார். இரவு 9 மணிக்கு பிரதம மந்திரி வானொலியில் நாட்டு மக்களுக்கு உரையாற்றினார். அவரின் உரையின் முக்கிய பகுதி இது:

போன வாரத்திலிருந்து தமிழரசுக் கட்சி தபால் சேவையொன்றை ஆரம்பித்த தோடு பொலிஸ் படையொன்றையும் திரட்டியுள்ளது. தனது ஆதரவாளர்களுக்கு முடிக்குரிய காணியைப் பகிர்ந்தளிப்பதற்காக காணிச் கச்சேரியை நடத்துவதற்கும் தீர்மானித்துள்ளனர். தனி அரசு ஒன்றை நிறுவும் நோக்கத்துடன் இந் நாட்டின் சட்டத்துக்கமைய நிறுவப்பட்ட அரசாங்கமொன்றைத் தமிழரசுக் கட்சியினர் எதிர்க்கின்றனர் என்பது இவற்றால் தெளிவாகிறது.

தமிழரசுக் கட்சியின் கோரிக்கைகள் நியாயமானவையல்ல என்றும் பிரதம மந்திரி தன் உரையில் கூறினார். இரவு 12 மணிக்குப் படையினர் சத்தியாக்கிரகம் நடந்த ஐந்து கச்சேரிகளுக்கும் போனார்கள். ஐந்து கச்சேரிகளுக்கும் முன்னால் மக்கள் பெரு வெள்ளமாகத் திரண்டு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சத்தியாக்கிரகம் செய்து கொண்டிருந்தனர். யாழ்ப்பாணக் கச்சேரி வாசலில் தந்தை அமர்ந்திருந்தார். படைகள் வரும் செய்தியை அறிந்த அமிர்தலிங்கம் அச் செய்தியைத் தந்தையின் காதில் போட்டார். தந்தை கொடுத்த உத்தரவு இது:

படையினரை எதிர்க்க வேண்டாம். சத்தியாக்கிரகம் முடிந்து விட்டது. அமைதியாகக் கலைந்து வீடுகளுக்குப் போங்கள்.

இந்த உத்தரவைக் கொடுத்தமைக்கான காரணத்தை 1961 இறுதிப் பகுதியில் தந்தையிடமே கேட்டேன். அவர் கொடுத்த விளக்கம்:

என்னை நம்பித்தான் அவ்வளவு பேரும் அங்கே கூடினர். அவர்களின் பாதுகாப்பு என்னுடைய பொறுப்பு. படைகளுடன் மக்களை மோதவிடுவதால் எமது போராட்டம் முன்னெடுத்துச் செல்லப்பட்டிருக்காது. மாறாக, பின்னடைவு கண்டிருக்கும். அதனால் தான் மக்களைக் கட்டுப்படுத்தி வீட்டுக்கு அனுப்பி வைத்தேன்.

அன்றிரவே பொலிஸாரும் படையினரும் தமிழரசுக் கட்சி எம்.பி.க்கள், செனட்டர்கள். செயற்குழு உறுப்பினர் மற்றும் கட்சிப் பிரமுகர் ஆகியோரைக் கைது செய்தனர். ஏப்பிரல் 18 நண்பகலுக்கிடையில் மொத்தம் 68 பேர் கைது செய்யப்பட்டனர். தமிழரசுத் தலைவர்கள் கொழும்பிற்குக் கொண்டு வரப்பட்டனர். பனாகொடை இராணுவ முகாமில் காவலில் வைக்கப்பட்டனர். தந்தைக்குத் தனியறை ஒதுக்கிக் கொடுத்து அவரைக் கவனிப்பதற்காக அவரின் மனைவியையும் அங்கு தங்க அனுமதித்தனர். அமிர்தலிங்கத்துக்கும் அவரின் மனைவி மங்கையக்கரசிக்கும் தனியறை கொடுக்கப்பட்டது. மற்றவர்கள் ஓர் அறையில் மூன்று பேர் வீதம் தங்க வைக்கப்பட்டனர்.

### படையுடன் மோதல்

அமைதியாகக் கலைந்து செல்லுமாறு சத்தியாக் கிரகிகளைத் தந்தை கேட்டுக் கொண்ட போதிலும் வாலிபர்கள் சிற்சில இடங்களில் இராணுவத்துடன் மோதத்தான் செய்தனர். இராணுவத்தினருக்குக் கற்கள் வீசப்பட்டன. வல்வெட்டித்துறையில் ஏப்ரல் 18ல் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் மூன்று பேர் காயமடைந்தனர். பருத்தித் துறையில் படையினர் சுட்ட போது ஒருவர் கொல்லப் பட்டார். இருவர் காயமுற்றனர். ஏப்ரல் 21ல் கைதடியிலும் சங்கானையிலும் படையினருக்குக் கற்கள் வீசப்பட்டன. மிருசுவிலில் தபால் பெட்டி எரியூட்டப்பட்டது. காங்கேசன்துறையிலும் பருத்தித்துறையிலும் தெருத் தடைகள் போடப்பட்டன. திருகோணமலை மாவட்டத்திலும் கல்வீச்சு சம்பவங்கள் இடம் பெற்றன. சாவகச்சேரியில் ரோந்து சென்ற இராணுவத்தினர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது. இரண்டு சிப்பாய்கள் காயமடைந்தனர்.



இதைத் தொடர்ந்து வடக்கு-கிழக்கு மாகாணங்களில் துப்பாக்கி வைத்திருப்போர் அவற்றைக் கையளிக்கும்படி அரசாங்கம் உத்தரவிட்டது. அதன் பின்பும் இரண்டு துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் இடம் பெற்றன. ஏப்ரல் 27 இரவில் ரோந்து சென்ற படையினர் மீது உரும்பிராயில் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது, சாரதியும் ஒரு சிப்பாயும் காயமடைந்தனர். ஏப்ரல் 28 இரவு பொலிஸார் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது. ஒரு பொலிஸ்காரர் காயமடைந்தார்.

பனாகொடையில் இருந்த போது தந்தையின் உடல் நிலை பாதிக்கப்பட்டது. ஸ்ரீமாவோ மிகவும் கவலையடைந்தார். அவருக்கு விசேட சலுகைகளை அளிக்க அவர் உத்தரவிட்டார். அவற்றைஏற்கத் தந்தை மறுத்து விட்டார். அதையடுத்து பொலிஸ் மா அதிபரைத் தந்தையைப் பார்க்க ஸ்ரீமாவோ அனுப்பினார். அவரை மட்டும் வீட்டுக்குத் திரும்ப அனுமதிப்பதாக பொலிஸ் மா அதிபர் சொன்னார். நான் இங்கேயே இருக்கப் போகிறேன். எனக்கு மட்டும் வேறு சட்டமும் சலுகையும் வேண்டியதில்லை என்று சொல்லி விட்டார் தந்தை. ஆனால், ஸ்ரீமாவோ விடவில்லை. தந்தையை வீட்டுக் காவலில் வைக்கும்படி உத்தரவிட்டார். அதையடுத்து அவரின் வீட்டுக்குக் கொண்டு செல்லப்பட்டு வீட்டுக் காவலில் வைக்கப்பட்டார்.

தந்தைக்குப் பாக்கின்சன் நோய். அது தசையையும் நரம்புகளையும் தாக்கும் தன்மையுள்ளது. அதனால் தந்தையின் குரலும் உடல் அசைவும் பாதிக்கப்பட்டன. மிகவும் மெல்லிய குரலிலேயே பேசுவார். காலைத் தேய்த்துத் தேய்த்து மெதுவாக நடப்பார். மூளையில் அறுவைச் சிகிச்சை செய்தால் உடல் தேறும் என்று டாக்டர்கள் சொன்னார்கள். ஆனால், வீட்டுக் காவலிலிருந்து கொண்டு லண்டனுக்குச் சிகிச்சைக்குப் போவதைத் தந்தை விரும்பவில்லை. டாக்டர்களினதும் மற்றவர்களினதும் வற்புறுத்தலின் பேரிலேயே லண்டன் போக இணங்கினார். ஜூலை 15ல் லண்டன் போனார். அங்கே அவருக்கு மூளைப் பகுதியில் அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டது. அதன் விளைவாக அவர் உடல் நிலையில் சற்று முன்னேற்றம் காணப்பட்டது.

அக்டோபர் 4ம் திகதி தமிழரசுத் தலைவர்கள் யாவரும் விடுதலை செய்யப்பட்டனர். அக்டோபர் 5 காலை யாழ் தேவி மூலம் தமிழரசு எம்.பி.க்கள் யாழ்ப்பாணம் சென்றனர். அங்கு அவர்களுக்குப் பெரு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வரவேற்புக் கொடுக்கப் பட்டது. வாலிபர்கள் அமிர்தலிங்கத்தைத் தோளில் சுமந்து சென்றனர். தமது கடும் நடவடிக்கை தமிழரசுக் கட்சிக்கு முடிவை ஏற்படுத்திவிட்டதாக பீலிக்ஸ் சொன்னார். தமிழரசுக் கட்சியினரும் உடனடியாக எத்தகைய நடவடிக்கையை யும் எடுக்க வில்லை.

இதனால், அதிருப்தியடைந்த வாலிபர்கள் சத்தியாக்கிரகம் முறியடிக்கப்பட்ட முதலாவது ஆண்டை 1962 ஏப்ரல் 17 இல் அனுஷ்டித்தனர். தமிழரசுக் கட்சியின் வாலிப முன்னணி ஒழுங்கு செய்த பொதுக் கூட்டத்தில், விடுதலையாகி ஆறு மாதங்கள் போய்விட்டன. என்ன செய்கிறீர்கள்? என்ற கோஷம் கிளப்பப்பட்டது. அக்கூட்டத்தில் உரையாற்றிய தந்தை சொன்னார்:

> இன்றுள்ள சூழ்நிலையில் நாங்கள் அடுத்து என்ன செய்யப் போகின்றோம்? எமது பாதை தெளிவானது. எமது இலட்சியத்தை நாம் அடையும் வரை எமது போராட்டத்தைத் தொடர்வதைத் தவிர எமக்கு வேறு வழியில்லை. எமது மொழியும் உத்தியோக மொழியாக்கப்பட வேண்டும் எமது கலாசாரமும் பாரம்பரியமும் தொடர்ந்து வாழ எமது தாயகம் பாதுகாக்கப்பட வேண்டும். எமது போராட்டத்தின் ஒரு கட்ட மாகவே சத்தியாக்கிரகம் ஆரம்பிக்கப்பட்டது. அடுத்த கட்டம் விரைவில் அறிவிக்கப்படும்.

அடுத்த கட்டத்தைப் பற்றித் தீர்மானிப் பதற்கு எட்டாவது தேசிய மகாநாடு ஆகஸ்ட் 31ல் மன்னாரில் நடத்தப்பட்டது.

### மன்னார் மகாநாடு

1962 செப்டம்பர் முதலாம் திகதி நடந்த மன்னார் மகாநாட்டின் சிறப்பம்சம் சைக்கிள் ஊர்வலம். வடக்கு-கிழக்கு மாகாணங்களிலுள்ள எல்லாத் தேர்தல் தொகுதிகளில் இருந்தும் எம், பி. க்களின் தலைமையில் ஊர்வலங்கள் புறப்பட்டன. பருத்தித்துறையிலிருந்து துரைரத்தினம் சைக்கிளில் புறப்பட்டார். உடுவில் ஊர்வலத்துக்கு தர்மலிங்கம் தலைமை வகித்தார். அமிர்தலிங்கம்தான் எல்லோருடைய கவனத்தையும் ஈர்ந்தார். காரணம், பில்லியனில் அமர்ந்திருந்த மங்கையற்கரசி.

வழி நெடுக நிறைகும்ப வரவேற்புக்கள். அந்த வருடமும் பட்டிருப்பு இராஜமாண்க்கம் தலைவராக்கப்பட்டார். அவர் தன் நீண்ட தலைமையுரையில் 1961 ஏப்ரல் சத்தியாக்கிரகத்தைப் பற்றி அளித்த மதிப்பீடு இது:



வடக்கு-கிழக்கு மாகாணங்களில் அரசாங்க நிர்வாக இயந்திரம் சுமார் இரண்டு மாதங்களாக ஸ்தம்பித்து நின்றது. படையைக் காட்டி மிரட்டியும், பங்கீட்டரிசியை நிறுத்தியும் எம்மைப் பணிய வைக்க அரசாங்கம் முயன்றது. தமிழ் பேசும் மக்களின் முன் இம் முயற்சிகள் பயனற்றுப் போயின. ஆனால், அரசாங்கம் தொண்டர்களைக் கைது செய்யவோ, வேறு சட்ட நடவடிக்கை எடுக்கவோ தயங்கியது. மாறாக, கீழ்த்தரமாக வயிற்றிலடித்துக் களைக்க வைத்து எமது போராட்டத்தை முறியடிக்க எண்ணியது.

1961ம் ஆண்டுச் சத்தியாக்கிரகம் தமிழர் வரலாற்றில் ஒரு மைல்கல். அது:

- ★ தமிழ் மக்களுக்கு தமிழுணர்ச்சியை ஊட்டியது.
- ★ தமிழர்களை ஒற்றுமைப்படுத்தியது.
- ★ தமிழ்த் தேசிய உணர்வை உருவாக்கியது.
  இலங்கைத் தமிழர் போராட்டத்தின்பால் உலகத் தமிழர் கவனத்தைத் திருப்பியது.
- ★ வாலிபர்களுக்கிடையே மலர்ந்த விழிப்புணர்வு.
  இராசமாணிக்கம் தனது தலைமையுரையில் நாலு விடயங்களில் தமிழ் பேசும் மக்களின் அக்கறையை வளர்க்க முயன்றார். அவையாவன:

1 தமிழர்-முஸ்லிம் ஒற்றுமை.

2 மலை நாட்டுத் தமிழரின் பிரச்சினை.

3 தமிழ் பேசும் மக்கள் மீது புதிதாகச் சுமத்தப்பட்ட தொழில் வாய்ப்பு, கல்விப் பிரச்சினைகள்.

4 எல்லாம் தமிழ் இயக்கம்.

1960 மார்ச் ஜுலைத் தேர்தல்களின் போது மூதூர்த் தொகுதி இரட்டை அங்கத்தவர் தொகுதியாக இருந்தது. மார்ச் தேர்தலில் தமிழரசுக் கட்சி வேட்பாளர் ஏகாம்பரம் முதலாவது உறுப்பினராகவும், எம். ஈ. எச். முகமத் அலி இரண்டாவது எம். பி. யாகவும் தெரிவு செய்யப்பட்டனர். ஜுலை தேர்தலில் ஏகாம்பரமே முதலாவது எம். பீ. யாக வந்தார். இரண்டாவது இடத்தை ஏ. எல். அப்துல் மஜீத் பிடித்துக் கொண்டார். அவர் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியில் சேர்ந்தார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஏகாம்பரம் 1961 மார்ச் 23 ஆம் திகதி காலமானார். அந்த வெற்றிடத்துக்குப் போட்டியிட்ட எம். ஈ. ஏச். முகம்மது அலியை தமிழரசுக் கட்சி ஆதரித்தது. அத் தேர்தலின்போது தமிழர்களையும் முஸ்லிம்களையும் பிரித்து வைப்பதற்கு அரசாங்கமும் வேறு முஸ்லிம், தமிழ் சக்திகளும் முயன்றன. தந்தை செல்வா மூதூருக்குப் போய் முகம்மது அலியின் சார்பாக பிரச்சாரம் செய்தார். அப்பொழுது தமிழ், முஸ்லிம் ஒற்றுமையை வலியுறுத்தினார். முஸ்லிம் ஒருவருக்கு வாக்களிக்கக் கூடாது என்று தமிழ் பேசும் மக்களிடையே கிளப்பப்பட்ட வகுப்புவாத பிரச்சாரத்தைத் தோற்கடித்தார்.

மலையகத் தமிழ் மக்களின் பிரச்சினையிலும் கவனம் செலுத்த மன்னார் மகா நாட்டில் முடிவு செய்யப்பட்டது. மன்னார் மகாநாட்டின் இரண்டாவது தீர்மானம் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் வசிக்கும் தமிழரையும் மலைநாட்டுத் தமிழரையும் ஸ்தாபன ரீதியாக ஒற்றுமைப்படுத்த வேண்டும் என்பது. தீர்மானத்தின் வாசகம் 'இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்கள் அனைவரினதும் அனைத்து உரிமைகளையும் பெறுவதற்கு ஒரே மார்க்கம் அம் மக்கள் அனைவரினதும் ஏகோபித்த போராட்டமே என்பதனை உணர்ந்து அதற்கு முதற்படியாக, வட - கீழ் மாநில மக்களையும் மலை வாழ் மக்களையும் ஸ்தாபன ரீதியாக ஒற்றுமைப்படுத்தி அவர்கள் மத்தியில் சமூகக் கட்டுக்கோப்பை, அரசியல் பொருளாதார ஒற்றுமையை, ஏற்படுத்தி விட ஏற்ற நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு இம் மகாநாடு கட்சியின் மத்திய செயற் குழுவைப் பணிக்கிறது.

சிங்களம் மட்டும் சட்டம் தீவிரமாக அமுல் செய்யப்பட்டதும் அரசாங்க சேவையில் தமிழ் மக்களுக்கிருந்த வேலை வாய்ப்புப் பாதிக்கப்பட்டது. பண்டாரநாயக்க அரசாங்க காலத்திலிருந்து மேற்கொள்ளப்பட்ட தேசியமய நடவடிக்கைகள் தனியார் துறையிலிருந்த வேலை வாய்ப்பையும் குறைக்கத் தொடங்கியது. இந்தச் சூழ்நிலையில் தமிழ் பேசும் மக்கள் தமிழ்ப் பகுதிகளின் பொருளாதார அபிவிருத்தியில் அக்கறை காட்டுவதோடு சுய தொழில்களையும் ஆரம்பிக்க வேண்டும் என்ற முடிவைத் தமிழரசுக் கட்சி எடுத்தது.

தமிழ் பேசும் மக்களுக்கான வேலை வாய்ப்பு அருகி வரும் அதே வேளை கல்வித் துறையிலும் பாரபட்சம் காட்டப்பட்டது. இந்த இரு அம்சங்களையும் மன்னார் மகாநாடு தனது முதலாவது தீர்மானத்தில் வலியுறுத்தியது. 1961ல் தனியார் துறையினரால் நடத்தப்பட்டு வந்த பாடசாலைகளை அரசாங்கம் கையேற்றதன் பின்பு கல்வித் துறையில் பாதிப்பு ஏற்பட்டது. தமிழ் பேசும் மக்களும் சிறுபான்மை



மதத்தவர்களும் வெளிப்படையாகவும், அநியாயமான முறையிலும் பாரபட்சமாக நடத்தப்பட்டு வருவதன் மூலம் கல்வியிலும் தொழிலிலும் சம சந்தர்ப்பம் பூரணமாக மறுக்கப்பட்டிருக்கிறார்கள் என்று அத் தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளது.

கல்வியைப் பாதிக்கும் வகையில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்:

1 பல பாடசாலைகளில் இருந்த தமிழ்ப் பிரிவுகள் மூடப்பட்டமை.

2 தோட்டப் பாடசாலைகளின் போதனா மொழி சிங்களமாக இருக்க வேண்டும் என்று தேசிய கல்விக் குழு சிபாரிசு செய்தமை.

3 தமிழ் பேசும் ஆசிரியர்கள் சிங்களத்தில் தேர்ச்சி பெற வேண்டும் எனக் கூறி சம்பள உயர்வும் பதவி உயர்வும் மறுக்கப்பட்டமை.

1960ம் ஆண்டுகள் சாதிப் பாகுபாடுகளினால் இழைக்கப்பட்ட கொடுமைகளை நீக்குவதற்கு தமிழ்ப் பகுதிகளில் தீவிர முயற்சி எடுக்கப்பட்ட காலம். தேனீர்க்கடை பிரவேசம், கோவில் பிரவேசம், சமபந்தி போசனம் என்றெல்லாம் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இந்தச் சூழலில் மன்னார் மகாநாடு சற்றுத் தீவிரமான தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியது. அத் தீர்மானத்தின் வாசகம்: காலம் கடந்து போன ஒரு சமுதாய அமைப்பின் கீழ் தமது இரத்த சகோதரர்களில் ஒரு பகுதியினருக்கு இழைக்கப்படும் அநியாயங்களை இனியும் விட்டு வைக்க முடியாது. எமது மக்களில் ஒரு பகுதியினருக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளை முற்றாக அகற்ற இலங்கைத் தமிழரசுக் கட்சி உறுதி பூண்டிருக்கிறது. ஆகவே, கட்சியின் முயற்சியினால் தீண்டாமையை ஒழிப்பதற்கு நிறுவப்பட்ட சர்வகட்சி செயற்குழு இந் நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு மகாநாடு முழு ஆதரவையும் அளிக்கும் என்று உறுதி கூறுகின்றது.

மன்னார் மகாநாட்டின் அரசியல் தீர்மானம் மீண்டும் நேரடி நடவடிக்கையை ஆரம்பிப்பதற்கு மூன்று மாதங்களில் நடவடிக்கை எடுக்கும்படி கட்சியின் மத்திய செயற்குழுவுக்கு ஆணையிட்டது. அந் நேரடி நடவடிக்கை 1963 ஏப்ரல் 17க்குப் பிந்தாமல் எடுக்கப்பட வேண்டும் என காலவரையறைகளையும் செய்தது. மன்னார் மகாநாட்டின் தீர்மானத்தில் காணப்பட்ட வேகம் கட்சியின்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நடவடிக்கைகளில் காணப்படவில்லை. ஏப்ரல் 27 கால எல்லை நெருங்கிக் கொண்டிருக்கையில் போராட்டத்துக்குப் புத்துயிர் அளிப்பது பற்றிச் செயற்குழு சிந்திக்க ஆரம்பித்தது. 1963 பெப்ரவரி 24ம் திகதி நடந்த செயற்குழுக் கூட்டத்தில் வடக்குக்கும்-கிழக்குக்கு விஜயம் செய்யும் அமைச்சர்களுக்கு எதிர்ப்புக் காட்டுவது என்று தீர்மானிக்கப்பட்டது. தமிழரசுக் கட்சியின் மந்த நிலைக்கு இரண்டு காரணங்கள்:

1 நிதி நிலைமை.

2 தமிழ்ப் பகுதிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அரசாங்கத்தின் அமைச்சர்கள் காட்டிய ஒத்துழைப்பு. தமிழ்த் தொகுதியில் உள்ளவர்களின் பிரச்சினைகளை அமைச்சர்களிடம் எடுத்துச் சென்ற தமிழரசுத் தலைவர்கள் அத் தேவைகள் உடனுக்குடன் கவனிக்கப் படுவதைக் கவனித்தனர். அச் சூழலை அவர்கள் கெடுக்க விரும்பவில்லை. அதே வேளை, வாலிபர்களின் வற்புறுத்தல் களையும் தமிழ் அரசாங்க உத்தியோகத்தர்களின் வற்புறுத்தல் களையும் சமாளிக்க வேண்டி யிருந்தது.

### எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்

1963 மார்ச்சில் கல்வியமைச்சர் பதியுதீன் மஹ்முத்தும், வர்த்தக அமைச்சர் ரி. பி. இலங்கரத்தினவும் பருத்தித்துறையிலுள்ள கூட்டுறவு மொத்த விற்பனை நிலையக் கடையொன்றைத் திறப்பதற்காகப் போனார்கள். அமைச்சர்களின் கார் பவனி கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தை அடைந்ததும் அங்கு குழுமி நின்ற தமிழரசு எம். பி.க்களும், ஆதரவாளர்களும் திரும்பிப் போங்கள், இங்கே வர வேண்டாம் என்று கத்தினார்கள். ஆத்திர மடைந்த பொலிஸ் சுப்பிரீண்டன் கோஷமிட்டவர்களைத் தாக்கிக் கலைக்குமாறு உத்தர விட்டார். எம். பி.க்கள் உட்பட எல்லாரையும் பொலிஸார் தாக்கினார்கள். அமிர்தலிங்கம், துரைரத்தினம், தர்மலிங்கம், வி. ஏ. கந்தையா ஆகியோர் தாக்கப்பட்டனர். கந்தையாவின் மூக்குக் கண்ணாடி நிலத்தில் விழுந்து உடைந்தது. அவரின் மார்பிலும் பலத்த அடிகள். பொலிஸாரின் தாக்குதல் கந்தையாவின் உடல் நிலையைப் பாதித்தது. ஜூன் 4ம் திகதி அவர் காலமானர்.



தமிழரசுக் கட்சியின் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தினால் ஆத்திர மடைந்த இலங்கரத்தின தமிழரசுக் கட்சியினர் தாங்கள் எண்ணும்படி கூத்தாட நான் அனுமதிக்க மாட்டேன் என்று பத்திரிகையாளர்களை அழைத்துச் சொன்னார். அதன்படி சிங்கள மொழியைத் தீவிரமாக அமுல் செய்யப் போவதாக அறிவித்தார். தமிழரசுக் கட்சிக்கெதிரான பிரச்சாரத்தையும் முடுக்கி விட்டார்.

அரசாங்கத்தின் பிரச்சாரத்துக்கு மறுமொழி கொடுக்கும் விதத்தில் தந்தை செல்வா மார்ச் 29ல் ஓர் அறிக்கை விடுத்தார். அவ்வறிக்கையின் முற்பகுதியில் யு. என். பி. அரசாங்கத்தைத் தோற்கடிப்பதற்கு தமிழரசுக் கட்சி உதவியது பற்றியும், அந்த உதவி வழங்கப்பட்ட பின்னணி பற்றியும், அளிக்கப்பட்ட வாக்குறுதி மீறப்பட்டதால் 1961 ஏப்ரல் சத்தியாக்கிரக நடவடிக்கையில் கட்சி ஈடுபட நேரிட்டதையும் விளக்கிக் கூறினார், அவரின் அறிக்கையின் இரண்டாவது பகுதியின் தமிழாக்கம் இது: “இச் சூழ்நிலையில் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ் பேசும் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சி மட்டுமன்றி அம் மக்களின் விடுதலை இயக்கம் என்ற வகையில் தமிழரசுக் கட்சி செய்யக் கூடியது என்ன? கீழ்க் காணும் மூன்று மாற்று வழிகள்தான் அதற்கு உள்ளன. முதலாவது சரணாகதி அடைவது. இரண்டாவது ஆயுதப் புரட்சியில் ஈடுபடுவது. மூன்றாவது காந்திஜி காட்டிய சத்தியாக்கிரகமும் ஒத்துழையாமையும். சரணாகதி எமது மக்களுக்கு அவமானத்தைக் கொடுக்கும். அத்துடன், இன ஒழிப்பு என்ற அரசியல் குற்றத்தைச் செய்வதற்கு உதவுவதும், ஒத்துழைப்பது மாக அமையும். ஆயுதப் புரட்சி செய்வது நடைமுறைக்கொவ்வாததும் தார்மீக விழுமியங்களுக்கு மாறானதுமாகும். எனவே காந்திய சத்தியாக்கிரக வழியை மட்டுமே எம்மால் கடைப்பிடிக்க முடியும்.

எம்மைக் கண்டிப்போர் எம்மை என்ன செய்யச் சொல்கிறார்கள்? எம்மிடமிருந்து பறிக்க முடியாத உரிமைகளை நிலை நாட்டுவதற்கான எமது போராட்டத்தைக் கைவிடச் சொல்கிறார்களா? எமது கட்சியின் தலைவர்களோ தொண்டர்களோ இவ்வாறு நடத்தப்படுவதை ரசிக்கிறார்கள் என்று எவராவது எண்ணுவாரேயானால் அவர் பெரும் தவறு இழைக்கின்றார். மாற்று வழியேதாவது இருந்தால் துன்பம் தரும் இந்த வழியை மகிழ்ச்சியுடன் கைவிடத் தயாராகவுள்ளனர். எமது இனத்தைப் பாதுகாப்பதற்கு வேறு வழியேதும் இல்லாத படியினால் தான் நாங்கள் இந்த வழியைப் பின்பற்றுகின்றோம். சிறுபான்மை மொழிக் குழுவினருக்கு இந் நாட்டில் சில மொழியுரிமைகள் இருக்க வேண்டுமா என்பதையும் தமிழ் மொழி பேசும் மக்களுக்கு அந்த மொழி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



உரிமைகள் வழங்கப்படவில்லை என்பதையும் அவர்கள் ஏற்றுக் கொண்டால் அவ்வுரிமைகளைப் பெறுவதற்கு எத்தகைய நடவடிக்கை களை எடுக்க வேண்டும் என அவர்கள் கருதுகிறார்கள்?

சத்தியாக்கிரகத்தை மீண்டும் ஆரம்பிப்பதற்கு வைத்த காலக்கெடு நெருங்கிக் கொண்டிருக்கையில் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு ஒன்றைக் காண்பதற்காக சாத்தியங்களுண்டா என்பதை தமிழரசுத் தலைவர்கள் மூன்றாம் தரப்பினர் மூலம் அறிந்து கொள்ள முயன்றனர். அரசாங்கம் அளித்த பதில் என்ன தெரியுமா?தமிழரசுக் கட்சியைச் சாராத தமிழ் பேசும் எம். பி. க்களை அழைத்து சிங்களம் மட்டும் சட்டத்தை அமுல் செய்வதால் தமிழ் மக்களுக்கு ஏற்படும் கஷ்டங்களைக் கூறுமாறு கேட்டது.

ஒத்துழையாமை இயக்கத்துக்குத் தமிழ் பேசும் மக்களைத் தயார் பண்ணும் முயற்சியின் முதற்படியாக எல்லாம் தமிழ் இயக்கத்தை 1963 ஏப்ரல் 8ல் தமிழரசுக் கட்சியினர் ஆரம்பித்தனர். தமிழ்ப் பிரதேசத்திலுள்ள தபாலகங்கள், அரசாங்க அலுவலகங்கள் ஆகியவற்றின் முன் கட்சித் தொண்டர்கள் நின்று விண்ணப்பங்கள், தந்திகள் முகவரிகள் ஆகியவற்றைத் தமிழில் எழுதுமாறு மக்களைத் தூண்டினர். தமிழில் எழுதத் தெரியாதவர்களுக்கு தமிழில் எழுத உதவி புரிந்தனர். தனித் தமிழ் இயக்கம் நடந்து கொண்டிருந்த அதே வேளையில் தலைவர்களும், தொண்டர்களும் கிராமம் கிராமமாகச் சென்று சட்ட மறுப்பு இயக்கத்தில் ஈடுபடுவதற்காகத் தொண்டர்களைத் திரட்டினர். கிராமம் தோறும் கட்சிக் கிளைகள் திறக்கப்பட்டன. சட்ட மறுப்பு இயக்கத்தை ஆரம்பிப்பதற்கான முயற்சிகளைச் செய்து கொண்டிருந்த சமயம் திருகோணமலைத் தலைவர் இராஜவரோதயம் ஆகஸ்ட் 28ல் காலமானர்.

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் சட்ட மறுப்பு இயக்கத்துக்கான முயற்சிகள் சூடு பிடித்துக் கொண்டிருந்த சமயம் அரசாங்கத்திற்குள் பிரச்சினைகள் தலை தூக்கின. அதையடுத்து மே 8ம் திகதியன்று பிரதம மந்திரி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா பாராளுமன்றத்தை மூன்று மாதங்க ளுக்கு ஒத்தி வைத்தார். இத் திடீர் சபை ஒத்தி வைப்பதைக் கண்டிப்பதில் தமிழரசுக் கட்சி மற்றைய எதிர்க் கட்சிகளான யு. என். பி., லங்கா சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, எம். ஈ.பி. ஆகியவற்றுடன் சேர்ந்து கொண்டது. ஜூலை மாத இறுதிப் பகுதியில் பாராளுமன்றம் மீண்டும் கூட்டப்பட்டது.

சிங்களம் மட்டும் சட்டத்தை 1964 ஜனவரி முதலாம் திகதி முதல் தீவிரமாகச் செயல்படுத்தப் போவதாக அரசாங்கம் சிம்மாசனப்



பிரசங்கத்தில் வாக்குறுதியளித்தது. இதற்கு ஆட்சேபணை தெரிவிக்கும் முகமாக தமிழரசுக் கட்சி அக்டோபர் முதலாம் திகதி முதல் சிங்கள எதிர்ப்பு இயக்கத்தை ஆரம்பித்தது. அக்டோபர் முதலாம் திகதி அர சாங்க அலுவலகங்களுக்கு முன்பு குழுமி நின்ற தொண்டர்கள் சிங்களத்தில் வேலை செய்ய வேண்டாம் எனவும், சிங்களத்தைப் படிக்க வேண்டாம் என்றும் அரசாங்க ஊழியர்களைக் கேட்டுக் கொண்டனர். அதே சமயம் சிங்கள மொழியைக் கற்பிக்கும் ஆசிரியர்களையும் அம் மொழியைக் கற்கும் மாணவர்களையும் பகிஷ்கரிக்கும் இயக்கமும் தொடங்கப்பட்டது. 1964 பெப்ரவரி 17ம் திகதிக்குப் பிந்தாமல் சிங்கள எதிர்ப்பு இயக்கத்தைத் தீவிரப் படுத்துவதோடு விரிவு படுத்துவது என்றும் முடிவு செய்யப்பட்டது.

அரசாங்கத்துக்கு ஓர் எச்சரிக்கையாக 1964 ஜனவரி முதலாம் திகதியன்று யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, மன்னார், வவுனியா, திருகோணமலைக் கச்சேரிகளுக்கு முன்பாகக் கட்சித் தலைவர்களின் தலைமையில் கண்டன ஊர்வலங்கள் நடத்தப்பட்டன. 1964 முற்பகு தியில் அரசாங்கத்துக்கு மீண்டும் நெருக்கடி தோன்றியது. தொழிற் சங்கங்களின் கூட்டணி 21 அம்சக் கோரிக்கையை அரசாங்கத்துக்குக் கொடுத்து அவற்றை ஏற்காவிடின் மாபெரும் தொழிற்சங்க நடவடிக் கையில் ஈடுபடப் போவதாகப் பயமுறுத்தியது. இடது சாரி ஐக்கிய முன்னணி இதற்குத் தலைமை தாங்கியது. இந்த இக் கட்டான நிலை மையைச் சமாளிப்பதற்கு அரசாங்கம் தமிழரசுக் கட்சியுடனும் சமச மாஜக் கட்சியுடனும் பேச்சுவார்த்தையைத் துவங்கியது. சுமசமாஜக் கட்சியை அரசாங்கத்துடன் சேர்த்து இடது சாரி ஐக்கிய முன்னணியை உடைப்பதே அரசாங்கத்தின் பிரதான நோக்கமாக இருந்தது. அந்த முயற்சி பிழைத்தால் தமிழரசுக் கட்சியின் ஆதரவைப் பெற்று அர சாங்கத்தைத் தப்ப வைப்பது எனவும் முடிவு செய்யப்பட்டது. சமச மாஜக் கட்சி அரசாங்கத்தில் சேர இணங்கியதும் தமிழரசுக் கட்சியை இணைத்துக் கொள்ளும் தேவை இல்லாது போய்விட்டது. தமிழரசுக் கட்சியை அரசாங்கம் பொத் என்று போட்டுவிட்டது.

இந்தப் பேச்சுவார்த்தையின் போது இடம் பெற்ற இரண்டு சம்பவங்களை இங்கே குறிப்பிட வேண்டும். முதலாவது, நீதியமைச்சர் சாம். பி. சி. பெர்னாண்டோவுக்கும் நாகநாதனுக்கும் இடையே நடந்தது. தமிழ் மொழி நியாயமான உபயோகச் சட்டத்தின் கீழ் தமிழ் மொழியை உபயோகிக்க வழி வகுக்கும் விதிகளை அரசாங்கம் தயாரிக்கவுள்ளதாக அமைச்சர் சொன்னார். நீங்களே நகல் விதிகளைத் தயாரித்துக் கொடுங்கள். அதன் அடிப்படையில் நாங்கள் விதிகளைத்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தயாரிக்கின்றோம் என்றார். அதன்படி தமிழரசுக் கட்சியினர் விதிகளைத் தயாரித்துள்ளனர். நாகநாதன் அவற்றை பெர்னாண்டோவிடம் கொடுத்து அவரின் கருத்தைக் கேட்டார். சமசமாஜக் கட்சியுடன் பேசிக் கொண்டிருக்கிறோம். அப் பேச்சுக்கள் முடிவும் வரை காத்திருங்கள் என்றார் பெர்னாண்டோ. இரண்டாவது சம்பவம் டாக்டர் என். எம். பெரேராவுக்கும் தந்தைக்குமிடையே நடந்தது. டாக்டர் பெரேரா தந்தை செல்வாவைச் சந்தித்து அரசாங்கத்துக்கும் தங்களுக்குமிடையே நடைபெறும் பேச்சுக்களைப்பற்றிக் கூறினார். அரசாங்கத்தில் நாங்கள் சேருவதுபற்றி உங்கள் கருத்தென்ன? என்று கேட்டார். லங்கா சுதந்திரக் கட்சியின் தீவிரவாத போக்கைக் கட்டுப்படுத்த உதவுவீர்கள் என்றார் தந்தை. அரசாங்கத்தை ஆதரிப்பீர்களா? என்று கேட்டார் பெரேரா. தந்தையின் பதில்: எமது மக்களின் மொழியுரிமைகள் பூரணமாக வழங்கப்படும்வரை எங்களால் அரசாங்கத்தை ஆதரிக்க முடியாது.

அரசாங்கத்தைத் தோற்கடிப்பதற்கு யு. என். பி. க்கு உதவுவீர்களா? நீங்கள் நியாயமாக நடந்தால் யு. என். பி. க்கு உதவ மாட்டோம் என்றார் தந்தை. எத்தகைய கோரிக்கைகளைக் கொடுத்தால் தமிழரசுக் கட்சி திருப்தியடையும் என்பதை அறிய டாக்டர் பெரேரா விரும்பினார். தமிழரசுக் கட்சிகளின் நான்கு அடிப்படைக் கோரிக்கைகளையும் சுட்டிக் காட்டினார் தந்தை. அவை:

- தமிழ் மக்கள் அரசாங்கத்துடன் தமிழில் தொடர்பு கொள்ளும் உரிமை.
- வடக்கு - கிழக்கு மாகாணங்களின் நிர்வாகம் தமிழில் நடத்தப்படுதல்.
- மாவட்ட சபைகளை அமைத்தல்.
- தமிழ் பேசும் மக்கள் தமிழ் மொழியில் அரசாங்கப் பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படுதல்.

இக் கோரிக்கைகளைப் பெற்றுத் தருவதற்கு நான் நிச்சயம் பாடுபடுவேன் என்று வாக்குறுதியளித்தார் டாக்டர் பெரேரா. அதே நேரத்தில் மொழிக் கொள்கைக்கான அமைச்சர்கள் குழு இரண்டு முக்கிய முடிவுகளை எடுத்தது. வடக்கு-கிழக்கிலுள்ள ஆசிரியர்கள் சம்பளத்துக்கான காசோலைகள் சிங்களத்தில் எழுதுவது அவற்றில் முதலாவது. அடுத்தது, 2000 சிங்கள ஆசிரியர்களை அப் பிரதேசங்களுக்கு அனுப்புதல். அம் முடிவுகள் தமிழ் வாலிபர்களின் ஆத்திரத்தைத் தூண்டின.

# 9

# ஆட்சியில் பங்கு

## வாலிபர் விழிப்புணர்வு

வடக்கு - கிழக்கு மாகாணங்களிலுள்ள பாடசாலைகளுக்கு 2000 சிங்கள ஆசிரியர்களை அனுப்புவதற்குக் கல்வி அமைச்சர் பி. பி. ஜி. கலுகல்ல எடுத்த முடிவு தமிழரசுக் கட்சிக்கு மட்டுமல்ல எல்லாத் தமிழருக்குமே ஆத்திரத்தை மூட்டியது. அம் முடிவை ஆட்சேபித்து கலுகல்லவுக்குத் தந்தை ஒரு கடிதம் எழுதினார். அமைச்சரின் முடிவு தமிழ் மக்களை மிகவும் புண் படுத்தி விட்டதாக அக் கடிதத்தில் அவர் சுட்டிக் காட்டினார். தமிழ் வாலிபர்களும் மிகவும் ஆத்திரப்பட்டனர்.

1961 சத்தியாக்கிரகத்தின் நேரடி விளைவுகளில் முக்கியமானது தமிழ் வாலிபர்களிடையே ஏற்படுத்திய விழிப்புணர்வு. அதன் விளைவாகத் தமிழரசுக் கட்சியின் வாலிப முன்னணி மிகவும் பலம் பெற்றது. கலுகல்லவுக்குத் தகுந்த பதில் கொடுக்க வேண்டும் என்று வாலிபர்கள் துடித்தனர். தமிழரசுக் கட்சியின் செயற்குழு ஜுன் முதலாம் திகதி கூடியது. சிங்கள ஆசிரியர்கள் தமிழ்ப் பகுதிகளுக்கு அனுப்பப்படுவதை எதிர்ப்பது என்ற முடிவு செய்யப்பட்டது. செயற்குழுக் கூட்டத்தை அடுத்த சில நாட்களில் கூடிய வாலிபர் முன்னணி சிம்மாசனப் பிரசங்கத்தையடுத்து தமிழரசுக் கட்சி எம். பி. க்கள் பாராளுமன்றத்திலிருந்து இராஜினாமாச் செய்ய வேண்டும் என்ற தீர்மானத்தை நிறைவேற்றியது. முன் மொழிந்தவர் ராஜதுரை. வழி மொழிந்தவர் வி. என். நவரத்தினம். எதிர்ப்பின்றித் தீர்மானம் நிறைவேறியது.

ஜுன் 11ம் திகதி லங்கா சமசமாஜக் கட்சி ஸ்ரீமாவோ பண்டார நாயக்கா அரசாங்கத்தில் சேர்ந்துகொண்டது. டாக்டர். என். எம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பெரேரா நிதியமைச்சராக நியமிக்கப்பட்டார். சம்னி குணவர்த்தன அரசாங்க கட்டடப் பகுதி அமைச்சராகவும் அனில் முனசிங்க போக்கு வரத்து அமைச்சராகவும் நியமிக்கப்பட்டனர்.

சமசமாஜக் கட்சி அரசாங்கத்தில் சேர்ந்தமை தமிழர் பிரச்சினையை எவ்வாறு பாதிக்கப் போகிறது என்பதை அறிவதற்காக தந்தையின் இல்லத்துக்குப் போய் அவரைப் பேட்டி கண்டேன். தந்தை உற்சாகமிழந்து காணப்பட்டார். பாராளுமன்றத்தின் மூலம் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும் என்ற தன் நம்பிக்கை ஆட்டம் கண்டு விட்டதாகச் சொன்னார். "ஏன் அப்படிக் கூறுகிறீர்கள்? வாலிப முன்னணியின் தீர்மானம் உங்கள் போக்கைப் பாதித்து விட்டதா?" என்று கேட்டேன். அப்படியும் இருக்கலாம் என்று இழுத்தார். ஆனால், இந்தக் கடிதத்தை வாசியுங்கள் என்ற படி கதிரையிலிருந்து எழுந்து ஒரு பைலைத் தேடியெடுத்து அதிலிருந்த கடிதம் ஒன்றைத் தந்தார்.

தந்தையின் ஆட்சேபணைக் கடிதத்துக்கான பதில் அது. தங்கள் பிள்ளைகள் சிங்களம் படிக்க சிங்கள ஆசிரியர்களைக் கொடுத்து தவும்படி தமிழ் மக்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்கவே சிங்கள ஆசிரியர்களை அனுப்பி வைக்கும் முடிவு எடுக்கப்பட்டதாக கலுகல்ல அக் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார். "இத்தகைய ஆட்களிடமிருந்து நீதியை எப்படி எதிர்பார்க்க முடியும்" என மனம் சலித்தபடி சொன்னார். ஒரு சில தமிழர்களை விலைக்கு வாங்கிப் போட்டு அவர்களை உபயோகித்து தாங்கள் விரும்பியதைச் செய்கிறார்கள். எந்தச் சமூகத்தில் தான் கருங்காலிகள் இல்லை. அவர்களின் சமூகத்தில் இல்லையா? அதை மறந்து விட்டார்களா?

ஜூலை 22ம் திகதி நிகழ்த்தப்பட்ட சிம்மாசனப் பிரசங்கத்தில் தமிழ் மொழி உபயோக விதிகள் பற்றியும் பிராந்திய சபைகள் பற்றியும் குறிப்புக்கள் இருந்தன. அதைப் பற்றித் தந்தை வெளியிட்ட அறிக்கையின் தமிழாக்கம் இது: நாங்கள் அக்கறை கொண்டுள்ள இரண்டு விடயங்கள் - மொழிப் பிரச்சினையும், பிராந்திய சபைகளும் - சிம்மாசனப் பிரசங்கத்தில் காணப்படுகின்றன. இவ்விரு விடயங்களும் 1960ம் ஆண்டு சிம்மாசனப் பிரசங்கத்திலும் இடம் பெற்றன. ஆனால், அவற்றைப் பற்றி எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனவே, அவற்றைப் பற்றிய எமது கருத்தைக் கூறுவதற்கு முன்பு எத்தகைய நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன என்பதைப் பொறுத்திருந்து பார்க்க விரும்புகின்றோம். குறிப்பாக, தமிழ் மொழி (சிறப்பு வசதிகள்) சட்டத்தின் கீழ் எத்தகைய விதிகள் ஆக்கப்படவுள்ளன என்பதையும் பிராந்திய சபைகளை உருவாக்குவதற்கான மசோதா எவ்வகையில்



அமையவுள்ளது என்பதையும் பொறுத்திருந்து பார்க்க விரும்புகின்றோம்.

சிம்மாசனப் பிரசங்கத்துக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணை பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட்ட போது டாக்டர் என். எம். பெரேராவும் பீட்டர் கெனமனும் தந்தை செல்வாவையும் நாகநாதனையும் அமிர்தலிங்கத்தையும் பாராளுமன்றக் கட்டிடத்தில் கமிட்டி அறையில் சந்தித்தனர். பாராளுமன்றத்திலிருந்து இராஜினாமாச் செய்ய வேண்டாம் என்று தந்தை செல்வாவை என். எம். கேட்டார். வடக்கேயும்-கிழக்கேயும் உருவாகி வரும் நிலைமையைத் தந்தை செல்வா என். எம். க்கு விளக்கினார். வாலிபர்கள் பொறுமையை இழந்து வருகிறார்கள் என்பதைச் சொன்னார். ஈராயிரம் சிங்கள ஆசிரியர்களை வடக்குக்கும் - கிழக்குக்கும் அனுப்பும் கல்வியமைச்சின் தீர்மானம் இன, மொழி, கலாசார ஆதிக்கத்துக்குச் சமம் என்பதை தந்தை விளக்கினார். "சிங்கள ஆசிரியர்களை ஆக்கிரமிப்பு இராணுவமாக நாங்கள் பார்க்கிறோம்" என்றார் தந்தை. தாங்கள் தமிழ் மக்களின் உணர்வுகளை மதிப்பதாகச் சொன்ன என். எம். மும் பீற்றரும் தங்களின் செல்வாக்கை உபயோகித்து அத்தகைய துன்புறுத்தல்களை நீக்குவதாக வாக்குறுதியளித்தனர்.

சிம்மாசனப் பிரசங்கத்துக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணை மீதான விவாதம் முடிந்ததும் பாராளுமன்றத்திலிருந்து இராஜினாமாச் செய்யுமாறு வாலிபர்கள் வற்புறுத்தத் தொடங்கினர். அவ்வற்புறுத்தலைப் பரிசீலிப்பதற்காக தமிழரசுக் கட்சியின் செயற்குழு ஜூலை 22ல் கூட்டப் பட்டது. எம். பி. க்கள் இராஜினாமாச் செய்வது தொடர்பான முடிவை செயற்குழு எடுக்க முடியாததா கையால் ஆகஸ்ட் 21ல் திருகோணமலையில் கூடவிருந்த ஒன்பதாவது வருடாந்த மகாநாட்டிற்கு விடவேண்டும் என்ற பிரேரணையை புரக்டர் நடராசா முன்மொழிந்தார். அமிர்தலிங்கம் வழி மொழிந்தார்.

பிரேரணைக்கு விளக்கம் அளிக்கும் போது டாக்டர் என். எம். பெரேராவுடனும் பீட்டர் கெனமனுடனும் நடந்த சந்திப்புப் பற்றிய விவரங்களை அமிர் கூறினார். தமிழர் பிரச்சினைகளில் கூட்டரசாங்கம் எத்தகைய போக்கை அனுஷ்டிக்கிறது என்பதை மதிப்பிடுவதற்கு அவகாசம் தேவை என்றும் சொன்னார். இராஜதுரை அப் பிரேரணையை எதிர்த்தார். மிகவும் உணர்ச்சியுடன் பேசிய அவர், போதிய அளவுக்கு நாம் ஏமாற்றப்பட்டு விட்டோம். மறுபடியும் ஏமாற்றப்பட வேண்டுமா? எல். எஸ். எஸ். பி. யும் எங்களைக் கைவிடப் போகிறது என்பதை இங்கே இப்பொழுதே கூற விரும்புகின்றேன் என்றார் அவர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நவரத்தினம் ஒரு படி மேலே போனார். அவர் சொன்னார், எந்த ஆளும் கட்சியும் சிங்கள தீவிரவாதிகளைப் பகைக்க முன் வராது என்று.

எம், பி. க்கள் இராஜினாமாச் செய்ய வேண்டும் என்று கோரிய இராஜதுரையின் பிரேரணை முதலில் வாக்கெடுப்புக்கு விடப்பட்டது. பதின்மூன்று பேர் ஆதரவாகவும் 36 பேர் எதிர்த்தும் வாக்களித்தனர். நடராசாவின் பிரேரணையை 34 பேர் ஆதரித்தனர். 11 பேர் எதிர்த்தனர். திருகோணமலை ஒன்பதாவது மாநில மகாநாட்டில் இந்தப் பிரச்சினை தொடர்ந்தது.

1964 ஆகஸ்ட் 21ல் நிலாவெளியில் நடந்த விஷயாலோசனைக் கூட்டத்தில் இராஜதுரையும் நவரத்தினமும் தமிழரசுக் கட்சி எம்.பி.க்கள் யாவரும் பாராளுமன்றத்திலிருந்து இராஜினாமாச் செய்ய வேண்டும் என்பதை வலியுறுத்தினர். அதற்கிடையில் இராஜினாமாச் செய்வதை எதிர்க்கும் குழுவினர் தங்கள் பிரசார இயந்திரத்தை முடுக்கி விட்டனர். அக்குழுவுக்கு எம். திருச்செல்வம் தலைமை தாங்கினார். இடதுசாரிகள் அங்கம் வகிக்கும் கூட்டரசாங்கத்துக்கு நாம் சந்தர்ப்பம் அளிக்க வேண்டும். மொழிப் பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணக் கூடிய சந்தர்ப்பம் இருக்கிறது. அதைச் சீர்குலைக்கக் கூடாது என்று திருச்செல்வம் வாதிட்டார். இராஜினாமாத் தீர்மானம் திருமலையில் நிறைவேற்றப்பட்டால் தமிழரசுக் கட்சியிலிருந்து விலகப் போவதாகவும் அவர் சொன்னார். இராஜினாமாப் பிரேரணையை 24 அதிகப்படி வாக்குகளால் விஷயாலோசனைக் கமிட்டி நிராகரித்தது. அதே சமயம் வாலிபர்களைத் திருப்தி செய்வதற்காக 5 பேரைக் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டது. எம். பி. க்கள் இராஜினாமாச் செய்ய வேண்டுமா என்று அவர்கள் ஆராய்வர். அக் குழுவில் இடம் பெற்றோர் அமிர்தலிங்கம், வி. நவரத்தினம், வி. என். நவரத்தினம். கே. ஜயக்கொடி, எம். ஈ. எச். முஹம்மது அலி.

### தந்தை மீண்டும் தலைவர்

திருமலை மகாநாட்டில் தந்தை செல்வா மீண்டும் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். அமிர்தலிங்கம் பொதுச் செயலாளராகத் தெரிவானார். திருமலை நகரில் அமரர் இராஜவரோதயம் அரங்கில் ஆகஸ்ட் 22ல் தேசிய மகாநாடு ஆரம்பித்தது. அம் மகாநாட்டில் தந்தை ஆற்றிய உரை வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. அவ்வுரையின் ஆரம்பத்தில் அன்று நிலவிய சிக்கலான அரசியல் சூழ்நிலையில் தமிழ் பேசும் மக்களை வழி நடத்துவதற்காக அனுபவம் உள்ள தன்னை



கட்சியினர் மீண்டும் தலைவராக்கியிருப்பதாகத் தந்தை சொன்னார். என்னிடம் கெட்டித்தனம் நிரம்ப உண்டு என்று நான் உரிமை பாராட்ட வில்லை. ஆனால், ஆணித்தரமான வாக்குறுதி ஒன்றை நான் என்றும் காப்பாற்றுவேன் என்பதை மட்டும் இங்கே உறுதியிட்டுக் கூற முடியும் என்றார். அதனையடுத்து அவர் அளித்த வாக்குறுதி இது: "தமிழ் பேசும் மக்கள் என் மீது வைத்த நம்பிக்கைக்கு நான் ஒரு போதும் துரோகம் செய்ய மாட்டேன்". நாம் கொண்ட இலட்சியத்தையும் ஒரு போதும் காட்டிக் கொடுக்கவும் மாட்டேன்.

அதன் பின்பு இலங்கையின் முதலாவது பிரதம மந்திரி டி. எஸ். சேனநாயக்கா தமிழ் பேசும் மக்களைப் பலவீனப் படுத்துவதற்குச் செய்த சூழ்ச்சிகளை விளக்கினார். மலை நாட்டுத் தமிழ் மக்களினது பிரஜாவுரிமையைப் பறித்தது முதலாவது நடவடிக்கை.

அதன் மூலம் பாராளுமன்றத்தில் தமிழ் பேசும் மக்களின் பிரதிநி தித்துவம் குறைக்கப்பட்டு அதேயளவால் சிங்களப் பிரதிநிதிகளின் தொகை அதிகரிக்கப்பட்டது. இரண்டாவது:தொகுதி நிர்ணயத்தில் கையாண்ட சூழ்ச்சி. எழுபத்தையாயிரம் பேருக்கு ஒரு பிரதிநிதி என்ற விதியைச் செய்து பிரஜாவுரிமை பறிக்கப்பட்ட மலை நாட்டுத் தமிழர் களையும் கணக்கில் சேர்த்து தொகுதிகளின் தொகையை நிர்ணயித்த மை. இதனால் மலை நாட்டில் சிங்களவருக்கு அதிக எண்ணிக்கை பிரதிநிதிகள் கிடைத்தனர்.

மூன்றாவது சூழ்ச்சி: திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம் என் பதை விளக்கினார். சிங்களக் குடியேற்றத்தின் மூலம் வடக்கிலும், கிழக்கிலும் தமிழரும், முஸ்லிம்களும் பலவீனப் படுத்தப்படுகிறார்கள் என்று எச்சரிக்கை செய்தார். 1964ல் விடப்பட்ட அவ் எச்சரிக்கை அம்பாறைத் தொகுதி (இப்பொழுது திகாமடுல்ல) சேருவில தொகுதி ஆகியவை உருவாக்கப்படுவதற்கு முன்பு விடப்பட்டது.

திருமலை உரையில் தந்தை முஸ்லிம்களுக்கு விஷேச செய்தியை விடுத்தார். தமிழருடன் சேர்ந்து போராடும்படி அழைப்பும் விடுத்தார். தந்தையின் உரையின் அந்தப் பகுதி இது. குடியுரிமைச் சட்டங்கள் இயற்றப்பட்ட போது நாம் அதைப் பலமாக எதிர்த்தோம். ஆனால், முஸ்லிம் பிரதிநிதிகள் இந்த எதிர்ப்பில் பங்கு பற்றத் தவறி விட்டார்கள். இச் சட்டத்தின் விளைவாகச் சமீபத்தில் நிறைவேற்றப் பட்ட மற்றுமொரு சட்டத்தின் மூலம் முஸ்லிம்கள் நேரடியாகப் பாதிக் கப்படுகிறார்கள். இலங்கைப் பிரஜையல்லாத ஒருவர் காணி வாங்கும் போது அக்காணியின் பெறுமதியளவு தொகையைத் தண்டனையாக அரசாங்கத்துக்குச் செலுத்த வேண்டும். அல்லாவிட்டால் காணி உறுதி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



யைப் பதிவு செய்ய முடியாது. இதன் விளைவாக இலங்கை முஸ்லிம்களாக இருக்கும் எத்தனையோ பேர் காணி வாங்க முடியாத நிலை இன்று ஏற்பட்டுள்ளது. குறிப்பிட்ட சட்டத்தின் பிரகாரம் முஸ்லிம்கள் வாங்கிய காணிகளின் உறுதிகள் நூற்றுக் கணக்கில் பதிவு செய்யப்படாது நாட்டின் பல்வேறு பாகங்களிலும் உள்ள காணிப் பதிவுக் கந்தோர்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளன.

முஸ்லிம்கள் இப்பொழுது இப்பிரச்சினையைப் பற்றிச் சிந்திக்கத் தொடங்கியுள்ளார்கள். இப்பொழுதுதான் பாராளுமன்றத்தில் குரல் கிளப்பவும் ஆரம்பித்துள்ளார்கள். குடியுரிமைச் சட்டங்களும் அரசாங்கப் பண உதவியுடன் நிகழும் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றமும் இன்று கிழக்கிலங்கை முஸ்லிம் மக்களுக்கு நேரடியான ஆபத்தைத் தோற்றுவித்துள்ளன. ஒரே தொடர்பான பிரதேசத்தில், தம் மக்கள் மத்தியிலே பெருந்தொகையாக வாழ்ந்து வந்த முஸ்லிம் சூழலிலே தமது மதத்தையும் மொழியையும் வளர்த்து பெருமையுடன் பெரும்பான்மையினராகத் தலை நிமிர்ந்து வாழும் முஸ்லிம் மக்கள் இன்று தமது சொந்தப் பிரதேசத்திலேயே சிறுபான்மையினராகி வருகிறார்கள். இந்தப் பயங்கர நிலையைத் தடுத்து நிறுத்தியே ஆக வேண்டும். இந்த ஆபத்துக்கு எதிராகத் திடங் கொண்டு எதிர்ப்புக் காட்டுவதில் முஸ்லிம் சகோதரர்கள் எம்மோடு சேர்ந்து போராட வேண்டும். தவறினால் எமது பிரதேசத்திலேயே சிறுபான்மை யினராகி அனாதைகளாகி விடுவோம்.

தமிழ் பேசும் மக்களிடையே உருவாகிவிட்ட ஒற்றுமையை தமிழ் பேசும் மக்களின் பலமாக வர்ணித்த தந்தை எமக்குத் தேவை தமிழ் பேசும் மக்கள் ஒன்று திரண்டு நிற்பதேயாகும் என்றார்.

தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்காக ஒத்துழையாமை இயக்கத்தை மீண்டும் ஆரம்பிப்பதென்று திருமலை மகாநாட்டில் முடிவு செய்யப்பட்டது. அத் தீர்மானத்தை தந்தை அறிவித்தபோது வாலிபர்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். தமிழரசுக் கட்சியின் செயலாளராகத் தெரிவு செய்யப்பட்ட அமிர்தலிங்கம் ஒத்துழையாமை இயக்கத்துக்குக் கட்சியைத் தயார் செய்வதே தன் தலையாய பணி என்று சொன்னார். அமிர்தலிங்கத்தின் உரையில் சம்பந்தப்பட்ட பகுதி இது: "தமிழ் பேசும் மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கு ஒத்துழையாமை இயக்கத்தை நடத்த கட்சி முடிவு செய்துள்ளது. இந்த இயக்கத்தை நடத்துவதற்கு ஏற்ற வகையில் கட்சி இயந்திரத்தை தயார் செய்வேன். இத் தீர்மானத்துடன்தான் கட்சியின் பொதுச் செயலாளர் பதவியை நான் ஏற்கின்றேன். தமிழ் பேசும் மக்களின் வரலாற்றில் இன்றைய கூட்டம் மிகவும் முக்கியமானது.



இன்று நாம் தமிழ் பேசும் மக்களின் சுதந்திரத்தையும் உரிமைகளையும் வென்றெடுக்காவிடின் தமிழ் மக்கள் தன்மானத்துடன் வாழ முடியாத நிலைமை உருவாகி விடும். எமது போராட்டம் வெகு விரையில் ஆரம்பிக்கும்".

இடதுசாரிகள் அரசாங்கத்தில் சேர்ந்துள்ளமையினால் தமிழ் பேசும் மக்களின் கஷ்டங்கள் குறையும் என்ற எதிர்பார்ப்பு ஏமாற்றத்தில் முடிந்ததுதான் திருமலைத் தீர்மானத்துக்கான தூண்டுதல். சுதந்திரக் கட்சி சமசமாஜக் கட்சி கூட்டரசாங்கம் பதவியேற்று நான்கு மாதங்களில் புதிதாக வேலைக்குச் சேர்ந்த அராசங்க ஊழியர்கள் சிங்களத்தில் திறமை பெறத் தவறினால் கட்டாயமாக இளைப்பாற்றப் படும் முடிவு அரசாங்கத்தினால் எடுக்கப்பட்டது. தமிழ் மொழி நியாயமான உபயோகச் சட்டத்தின் கீழ் விதிகள் ஆக்கப்படும் என்ற வாக்குறுதியும் மறக்கப்பட்டு சிங்களம் மட்டும் சட்டத்தைத் தீவிரமாக அமுல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

வழக்கம் போல தமிழரசுக் கட்சியின் திருமலைத் தீர்மானத்தில் அரசாங்கம் அக்கறை காட்டவில்லை. அத்துடன், தமிழ் பேசும் மக்களைப் பலவீனப்படுத்தும் வேறொரு நடவடிக்கை எடுக்கப்பட்டது. பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அக்டோபர் 24ல் புதுடில்லிக்குப் போய் இந்தியப் பிரதமர் லால் பகதூர் சாஸ்திரியைச் சந்தித்தார். "எமது சின்ன அயல் நாட்டின் பிரதம மந்திரி என்று கூறி ஸ்ரீமாவைச் சாஸ்திரி வரவேற்றார். ஸ்ரீமாவோ அதைப் பிடித்துக் கொண்டார். சின்ன இலங்கைத் தீவு தனது இந்தியத் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காணப் பெரிய சகோதரனான இந்தியா உதவ வேண்டும்" எனச் சொன்னார். மூன்று இலட்சம் இந்தியரை மட்டும் இலங்கை ஏற்றுக் கொள்ள முடியுமென்று முன்பு டட்லிசேனநாயக்கா சொன்னதைச் சுட்டிக் காட்டி எஞ்சிய 675, 000 பேரையும் இந்தியா திருப்பி எடுக்க வேண்டும் எனச் சொன்னார் ஸ்ரீமாவோ. அத் தொகையினரில் 525,000 பேரை இந்தியா திருப்பி எடுக்க சாஸ்திரி இணங்கினார். எஞ்சிய 150,000 பேர் பற்றிப் பின்பு முடிவு செய்யலாம் என்று சொன்னார். அக்டோபர் 30 ல் இந்திய இலங்கை அதிகாரிகள் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் இரண்டு பிரதம மந்திரிகளினதும் ஒப்பங்களைப் பெற்றனர். அவ்வொப்பந்தத்தை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸும், அதன் தலைவர் எஸ். தொண்டமானும் எதிர்த்தனர். தந்தை செல்வாவும் அவ்வொப்பந்தத்தைக் கண்டித்து அறிக்கை யொன்றை விடுத்தார். இந்த ஒப்பந்தம் இலங்கையில் வாழும் தமிழ் பேசும் மக்களின் தொகையைக் குறைக்கும் என்று சொன்னார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வெற்றியுடன் இலங்கை திரும்பிய ஸ்ரீமாவுக்குப் பெரு வரவேற்புக் காத்திருந்தது. அவரின் சாதனையைச் சிங்கள மக்கள் புகழ்ந்துரைத்தனர். இந்த வெற்றிக் களிப்பில் லேக் ஹவுசை மக்கள் மயமாக்கும் முடிவை மந்திரி சபை எடுத்தது. அம் முடிவை அரசாங்கம் எடுத்ததற்குக் காரணம் இல்லாமலும் இல்லை. டி. ஆர். விஜேவர்த்தன குடும்பத்தினருக்குச் சொந்தமாக இருந்த லேக் ஹவுஸ் யு. என். பி. ஐக் குறிப்பாக சேனநாயக்க குடும்பத்தை ஆதரித்து வந்துள்ளது. சமசமாஜக் கட்சி அரசாங்கத்தில் சேர்ந்ததும் லேக் ஹவுஸ் கூட்டாட்சிக்கு எதிராகப் பிரச்சாரம் செய்தது. லேக் ஹவுசை அரசாங்கம் கையேற்பதை தமிழரசுக் கட்சி எதிர்த்தது. அதற்கான காரணங்களை விளக்கித் தந்தை செல்வா அறிக்கையொன்றை விடுத்தார். "அந்த அறிக்கையில் தமிழரசுக் கட்சிக்கும் தமிழ் மக்களுக்கும் லேக் ஹவுஸ் இழைத்த அநீதிகளைச் சுட்டிக் காட்டினார். தமிழ் பேசும் மக்களுக்கு எந்த உரிமையும் வழங்குவதை லேக் ஹவுஸ் எதிர்த்து வந்துள்ளது. லேக் ஹவுஸினால் தாக்கப்பட்டவர்களில் தமிழரசுத் தலைவர்களும் அடங்குவர். எனினும், பத்திரிகையின் வாயை அடைப்பதல்ல தீர்வு என்று அறிக்கையை முடித்தார் தந்தை".

லேக் ஹவுஸின் பங்குகளை பொது மக்களுக்கு விற்று அதை மக்கள்மயப் படுத்தும் மசோதா நவம்பர் 26 பாராளுமன்றத்துக்கு வந்தது. பாராளுமன்றத்தின் செயலாளர் நாயகம் மசோதாவின் தலைப்பை வாசித்தார். அம் மசோதாவை முன் மொழியும்படி சொன்னார் சபாநாயகர் சம்பந்தப்பட்ட அமைச்சர் சபையில் இருக்கவில்லை. உதவி அமைச்சர் எம். பி. டி. இசற். சிறிவர்த்தனா எழுந்து நான் இம் மசோதாவை முன் மொழிகின்றேன் என்றார். புத்தளம் எம். பி. நயினா மரிக்கார் எழுந்தார். மசோதாவை அமைச்சர் ஒருவர் தான் முன் மொழிய வேண்டும். உதவி அமைச்சர் முன் மொழிவது தவறு என்றார். சபாநாயகர் அந்த ஆட்சேபணையை ஏற்றுக் கொண்டார். மசோதா செல்லுபடியற்றதாகியது. செல்லுபடியற்ற ஒரு மசோதாவை அந்தக் கூட்டத் தொடரின் போது மறுபடியும் கொண்டுவர முடியாது. எனவே, அரசாங்கம் பாராளுமன்றக் கூட்டத் தொடரைக் கலைத்து விட்டு டிசம்பர் 1ல் புதிய பாராளுமன்றத்தை மீண்டும் கூட்டியது.

புதிய கூட்டத் தொடர் ஆரம்பிக்கப்படும் போது சிம்மாசனப் பிரசங்கம் நிகழ்த்தப்படுவது வழக்கம். அதன்படி கவர்னர் ஜெனரல் வில்லியம் கோபல்லாவ சிம்மாசனப் பிரசங்கத்தை நிகழ்த்தினார். சிம்மாசனப் பிரசங்கத்துக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணை விவாதிக்கப்பட்ட போது எதிர்க்கட்சியினர் திருத்தப் பிரேரணையொன்றைப்



பிரேரித்தனர். நன்றி தெரிவிக்கும் பிரேரணை மீது வாக்கெடுக்கும் போது அமைச்சர் சி. பி. டி. சில்வா தலைமையில் அரசாங்கக் கட்சி எம். பி.க்கள் சிலர் எதிர்க் கட்சிக்குப் போய் அரசாங்கத்துக்கு எதிராக வாக்களிக்கப் போவதாக வதந்திகள் அடிபட ஆரம்பித்தன. டிசம்பர் 3 மாலை வாக்கெடுப்பு. அன்று காலை பதியுதீன் மஹ்முத், அமிர்தலிங்கத்தையும் தர்மலிங்கம், வி. என். நவரத்தினம், துரைரத்தினம் ஆகியோரையும் பிரதம மந்திரியின் அறைக்கு அழைத்தார். அவருடன் சம்ளி குணவர்த்தனவும் கொல்வின் ஆர்.டி.சில்வாவும் சேர்ந்து கொண்டனர். அரசாங்கத்தை ஆதரித்து வாக்களிக்குமாறும் தமிழரசுக் கட்சியின் கோரிக்கைகளைக் கொடுப்பதாகவும் அவர் கூறினார். தந்தை செல்வாவிடம் அரசாங்கத்தின் கோரிக்கையைத் தெரியப் படுத்துவதாக அமிர்தலிங்கம் கூறினார்.

தமிழரசுக் கட்சியின் பாராளுமன்றக் குழு அன்று பிற்பகல் கூடியது. கட்சியிலுள்ள இடதுசாரியினர் அரசாங்கத்துக்கு உதவ வேண்டும் எனச் சொன்னார்கள். பெரும்பாலானோர் அதை எதிர்த்தனர். வாக்களிப்பு நேரத்தில் சி. பி. டி. சில்வா தலைமையில் 13 எம். பி. க்கள் எதிர்க்கட்சிக்குச் சென்றனர். தனது முடிவை விளக்கி சி. பி.. டி. சில்வா அறிக்கையொன்றை விடுத்தார். மிகவும் மன வருத்தத்துடன் நான் இந்த முடிவை எடுத்தேன். பொறுப்பு வாய்ந்த முறையிலேயே இம் முடிவுக்கு வந்தேன். நான் கேள்விப்பட்டவற்றில் இருந்தும் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் கூட்டரசாங்கத்தின் உள் மட்டத்தில் பார்த்தவற்றிலிருந்தும் எமது நாடு சர்வாதிகார ஆட்சிப் பாதையில் இட்டுச் செல்லப் படுகிறது. முதுகில் குத்தி விட்டார்கள்,என்றார் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா. அரசாங்கத்திற்கு 73 வாக்குகள் கிடைத்தன. எதிர்க் கட்சிக்கு 74. தமிழரசுக் கட்சி எதிர்க் கட்சியுடன் சேர்ந்து வாக்களித்தது. தொண்டமான் வாக்களிக்கவில்லை.

ஸ்ரீமாவோ உடனடியாக இராஜினாமாச் செய்யவில்லை. அவரின் அரசாங்கத்திற்குப் பெரும்பான்மையைத் தேடும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. கொல்வின் ஆர். டி. சில்வா அமிர்தலிங்கத்தைச் சந்தித்தார். உங்களுடைய கோரிக்கைகள் எல்லாவற்றையும் தருகிறோம். அரசாங்கத்தைக் காப்பாற்றுங்கள் என்றார். சிரேஷ்ட அமைச்சரொருவர் அதற்கான உத்தரவைக் கொடுக்கத் தயாராக இருப்பதாகவும் சொன்னார். சுதந்திரக் கட்சியை நம்ப நாங்கள் தயாரில்லை என்பது தான் அமிர்தலிங்கம் அளித்த பதில். டிசம்பர் 7ல் பிரதமர் இராஜினாமாச் செய்தார். பாராளுமன்றம் கலைக்கப்பட்டது. 1965 மார்ச் 22ல் தேர்தல் நடந்தது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வெற்றியுடன் இலங்கை திரும்பிய ஸ்ரீமாவுக்குப் பெரு வரவேற்புக் காத்திருந்தது. அவரின் சாதனையைச் சிங்கள மக்கள் புகழ்ந்துரைத்தனர். இந்த வெற்றிக் களிப்பில் லேக் ஹவுசை மக்கள் மயமாக்கும் முடிவை மந்திரி சபை எடுத்தது. அம் முடிவை அரசாங்கம் எடுத்ததற்குக் காரணம் இல்லாமலும் இல்லை. டி. ஆர். விஜேவர்த்தன குடும்பத்தினருக்குச் சொந்தமாக இருந்த லேக் ஹவுஸ் யு. என். பி. ஐக் குறிப்பாக சேனநாயக்க குடும்பத்தை ஆதரித்து வந்துள்ளது. சமசமாஜக் கட்சி அரசாங்கத்தில் சேர்ந்ததும் லேக் ஹவுஸ் கூட்டாட்சிக்கு எதிராகப் பிரச்சாரம் செய்தது. லேக் ஹவுசை அரசாங்கம் கையேற்பதை தமிழரசுக் கட்சி எதிர்த்தது. அதற்கான காரணங்களை விளக்கித் தந்தை செல்வா அறிக்கையொன்றை விடுத்தார். "அந்த அறிக்கையில் தமிழரசுக் கட்சிக்கும் தமிழ் மக்களுக்கும் லேக் ஹவுஸ் இழைத்த அநீதிகளைச் சுட்டிக் காட்டினார். தமிழ் பேசும் மக்களுக்கு எந்த உரிமையும் வழங்குவதை லேக் ஹவுஸ் எதிர்த்து வந்துள்ளது. லேக் ஹவுஸினால் தாக்கப்பட்டவர்களில் தமிழரசுத் தலைவர்களும் அடங்குவர். எனினும், பத்திரிகையின் வாயை அடைப்பதல்ல தீர்வு என்று அறிக்கையை முடித்தார் தந்தை".

லேக் ஹவுஸின் பங்குகளை பொது மக்களுக்கு விற்று அதை மக்கள்மயப் படுத்தும் மசோதா நவம்பர் 26 பாராளுமன்றத்துக்கு வந்தது. பாராளுமன்றத்தின் செயலாளர் நாயகம் மசோதாவின் தலைப்பை வாசித்தார். அம் மசோதாவை முன் மொழியும்படி சொன்னார் சபாநாயகர் சம்பந்தப்பட்ட அமைச்சர் சபையில் இருக்கவில்லை. உதவி அமைச்சர் எம். பி. டி. இசற். சிறிவர்த்தனா எழுந்து நான் இம் மசோதாவை முன் மொழிகின்றேன் என்றார். புத்தளம் எம். பி. நயினா மரிக்கார் எழுந்தார். மசோதாவை அமைச்சர் ஒருவர் தான் முன் மொழிய வேண்டும். உதவி அமைச்சர் முன் மொழிவது தவறு என்றார். சபாநாயகர் அந்த ஆட்சேபணையை ஏற்றுக் கொண்டார். மசோதா செல்லுபடியற்றதாகியது. செல்லுபடியற்ற ஒரு மசோதாவை அந்தக் கூட்டத் தொடரின் போது மறுபடியும் கொண்டுவர முடியாது. எனவே, அரசாங்கம் பாராளுமன்றக் கூட்டத் தொடரைக் கலைத்து விட்டு டிசம்பர் 1ல் புதிய பாராளுமன்றத்தை மீண்டும் கூட்டியது.

புதிய கூட்டத் தொடர் ஆரம்பிக்கப்படும் போது சிம்மாசனப் பிரசங்கம் நிகழ்த்தப்படுவது வழக்கம். அதன்படி கவர்னர் ஜெனரல் வில்லியம் கோபல்லாவ சிம்மாசனப் பிரசங்கத்தை நிகழ்த்தினார். சிம்மாசனப் பிரசங்கத்துக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணை விவாதிக்கப்பட்ட போது எதிர்க்கட்சியினர் திருத்தப் பிரேரணையொன்றைப் பிரேரித்தனர். நன்றி தெரிவிக்கும் பிரேரணை மீது வாக்கெடுக்கும் போது அமைச்சர் சி. பி. டி. சில்வா தலைமையில் அரசாங்கக் கட்சி எம். பி.க்கள் சிலர் எதிர்க் கட்சிக்குப் போய் அரசாங்கத்துக்கு எதிராக வாக்களிக்கப் போவதாக வதந்திகள் அடிபட ஆரம்பித்தன. டிசம்பர் 3 மாலை வாக்கெடுப்பு. அன்று காலை பதியுதீன் மஹ்மூத், அமிர்தலிங்கத்தையும் தர்மலிங்கம், வி. என். நவரத்தினம், துரைரத்தினம் ஆகியோரையும் பிரதம மந்திரியின் அறைக்கு அழைத்தார். அவருடன் சம்ளி குணவர்த்தனவும் கொல்வின் ஆர்.டி.சில்வாவும் சேர்ந்து கொண்டனர். அரசாங்கத்தை ஆதரித்து வாக்களிக்குமாறும் தமிழரசுக் கட்சியின் கோரிக்கைகளைக் கொடுப்பதாகவும் அவர் கூறினார். தந்தை செல்வாவிடம் அரசாங்கத்தின் கோரிக்கையைத் தெரியப் படுத்துவதாக அமிர்தலிங்கம் கூறினார்.



தமிழரசுக் கட்சியின் பாராளுமன்றக் குழு அன்று பிற்பகல் கூடியது. கட்சியிலுள்ள இடதுசாரியினர் அரசாங்கத்துக்கு உதவ வேண்டும் எனச் சொன்னார்கள். பெரும்பாலானோர் அதை எதிர்த்தனர். வாக்களிப்பு நேரத்தில் சி. பி. டி. சில்வா தலைமையில் 13 எம். பி. க்கள் எதிர்க்கட்சிக்குச் சென்றனர். தனது முடிவை விளக்கி சி. பி.. டி. சில்வா அறிக்கையொன்றை விடுத்தார். மிகவும் மன வருத்தத்துடன் நான் இந்த முடிவை எடுத்தேன். பொறுப்பு வாய்ந்த முறையிலேயே இம் முடிவுக்கு வந்தேன். நான் கேள்விப்பட்டவற்றில் இருந்தும் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் கூட்டரசாங்கத்தின் உள் மட்டத்தில் பார்த்தவற்றிலிருந்தும் எமது நாடு சர்வாதிகார ஆட்சிப் பாதையில் இட்டுச் செல்லப் படுகிறது. முதுகில் குத்தி விட்டார்கள்,என்றார் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா. அரசாங்கத்திற்கு 73 வாக்குகள் கிடைத்தன. எதிர்க்கட்சிக்கு 74. தமிழரசுக் கட்சி எதிர்க் கட்சியுடன் சேர்ந்து வாக்களித்தது. தொண்டமான் வாக்களிக்கவில்லை.

ஸ்ரீமாவோ உடனடியாக இராஜினாமாச் செய்யவில்லை. அவரின் அரசாங்கத்திற்குப் பெரும்பான்மையைத் தேடும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. கொல்வின் ஆர். டி. சில்வா அமிர்தலிங்கத்தைச் சந்தித்தார். உங்களுடைய கோரிக்கைகள் எல்லாவற்றையும் தருகிறோம். அரசாங்கத்தைக் காப்பாற்றுங்கள் என்றார். சிரேஷ்ட அமைச்சரொருவர் அதற்கான உத்தரவைக் கொடுக்கத் தயாராக இருப்பதாகவும் சொன்னார். சுதந்திரக் கட்சியை நம்ப நாங்கள் தயாரில்லை என்பது தான் அமிர்தலிங்கம் அளித்த பதில். டிசம்பர் 7ல் பிரதமர் இராஜினாமாச் செய்தார். பாராளுமன்றம் கலைக்கப்பட்டது. 1965 மார்ச் 22ல் தேர்தல் நடந்தது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**டட்லி - செல்வா ஒப்பந்தம்**

1965 மார்ச் 22 தேர்தலில் தமிழரசுக் கட்சி 20 தொகுதிகளில் போட்டியிட்டது. 14 தொகுதிகளில் வெற்றி கிட்டியது. மொத்தம் 217, 986 வாக்குகள் கிடைத்தன. நாலாவது தடவையாக தமிழ் மக்கள் சமஷ்டி ஆட்சிக்கு ஆணை அளித்தனர். நாடளாவிய ரீதியில் தேர்தல் முடிவுகள் இவ்வாறு அமைந்தன. யு. என். பி.- 66, எஸ். எல். எவ். பி- 41, எல். எஸ். ஏஸ். பி.- 10, கம்யூனிஸ்ட் கட்சி- 5 தமிழரசு- 14, தமிழ் காங்கிரஸ்-3, ஏனையோர்- 5, மொத்தம்- 151எந்தக் கட்சிக்கும் பெரும் பான்மை கிடைக்கவில்லை. லேக் ஹவுஸ் எடிட்டோரியல் டைரக்டர் எஸ்மண்ட் விக்கிரமசிங்க யு. என். பி. யின் ஆலோசகராக இருந்தார். தமிழரசுக் கட்சி, தமிழ் காங்கிரஸ், எம். ஈ. பி. தகநாயக்காவின் கட்சி ஆகியவற்றைச் சேர்ந்து தேசிய அரசாங்கம் ஒன்றை அமைக்குமாறு யு. என்.பி.த்தலைவர் டட்லி சேனநாயக்காவுக்கு ஆலோசனை சொன்னார். அவ்வாலோசனை ஏற்றுக் கொள்ளப்பட்டது.

மார்ச் 23ல் அவர் டாக்டர் நாகநாதனுக்கு டெலிபோன் செய்தார், அரசாங்கம் அமைப்பது சம்பந்தமாக செல்வாவை டட்லி சந்திக்க விரும்புகிறார் என்றார். மார்ச் 24ல் தமிழரசுத் தலைவர்கள் கொழும்புக்கு விமானம் மூலம் வந்தனர். தமிழரசுத் தலைவர்கள் கொழும்புக்கு வருவதற்கு முன்பு தேவையான ஆயத்த வேலைகள் செய்யப்பட்டு விட்டன. தந்தை செல்வா தன் வீட்டுக்குப் போனதும் விக்கிரமசிங்கா அவரைப் போய்ப் பார்த்தார். விக்கிரமசிங்கா தந்தை செல்வாவின் கீழ் வழக்கறிஞர் தொழில் பழகியவர். எனவே. அவரிடம் தந்தை செல்வா நேரடியாகச் சொன்னார். **"உதவி தேவைப்படும் போது உதவியைப் பெற்று விட்டு பின்பு கைவிடுவது சிங்களத் தலைவர்களின் வழக்கம். இப்பொழுதும் அதையே செய்ய மாட்டார்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம்?"** என்று கேட்டார். இந்த முறை அப்படி நடக்காது என்று நான் உத்தரவாத மளிக்கின்றேன் என்றார் விக்கிரமசிங்க. இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் நீங்கள் அக்கறை கொண்டுள்ளீர்கள் என்பதையிட்டு நான் மகிழ்ச்சியடை கின்றேன். என்னைத் திருப்தி யடையச் செய்ய வேண்டும் என்று தந்தை சொன்னார். டட்லியின் சார்பில் பேச விக்கிரமசிங்க அதிகாரம் பெற்றுள்ளார் என்பதை உறுதிப் படுத்திய பின் தமிழரின் முக்கிய நான்கு பிரச்சினைகளுக்கும் தீர்வு காண டட்லி உதவுவாரா என்று கேட்டார். அதற்குரிய உத்தரவாதத்தை விக்கிரமசிங்க தந்தைக்குக் கொடுத்தார். அவர் கிளப்பிய நான்கு பிரச்சினைகளும் இவை:



1. மொழிப் பிரச்சினை - தமிழ் மொழி வடக்கு, கிழக்கு மாகாணங்களின் நிர்வாக மொழியாக இருத்தல் வேண்டும்.
2. நீதிமன்ற மொழி - வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நீதிமன்றங்கள் தமிழ் மொழியில் இயங்க வேண்டும்.
3. மாவட்ட சபைகள் நிறுவப் படவேண்டும். அவற்றின் அதிகாரங்களை யு. என். பி. தமிழரசுக் கட்சித் தலைவர்கள் பேசி முடிவு செய்ய வேண்டும்.
4. குடியேற்றப் பிரச்சினையும் தமிழ் அரசாங்க ஊழியர் பிரச்சினையும்: தமிழ் பேசும் மக்கள் பெரும்பான்மையின ராக வதியும் பகுதிகள் சிங்களவர் மயமாக்கப் படலாகாது,

இந்த நான்கு விடயங்களிலும் தீர்வு காண விக்கிரமசிங்கா இணங்கியதன் பின்புதான் - டட்லி தந்தை செல்வா சந்திப்பு டாக்டர் எம். வி. பி. பீரிசின் வீட்டில் இடம் பெற்றது. தந்தை செல்வாவுடன் நாகநாதன், இராசமாணிக்கம், திருச்செல்வம். வி. நவரத்தினம். ஆகியோர் பேச்சில் கலந்து கொண்டனர். டட்லிக்கு ஜெயவர்த்தன. சுகதாச, விக்கிரமசிங்க ஆகியோர் உதவினர். முதல் மூன்று விடயங்களிலும் அதிகம் விவாதம் இடம் பெறவில்லை. குடியேற்றத் திட்டம் பற்றிய விடயத்துக்கு வந்ததும் டட்லி இணங்க மறுத்தார். எமது மக்கள் காணிக்கு எங்கே போவது? என்று கேட்டார். ஆனால். இறுதியில் இரண்டு பகுதியினரும் ஏற்றுக் கொள்ளும் திட்டமொன்று வகுக்கப்பட்டது. தமிழ் அரசாங்க ஊழியர் பிரச்சினையை நிர்வாக நடவடிக்கையினால் தீர்த்து வைப்பது என்று முடிவு செய்யப்பட்டது.

நேரம் நள்ளிரவை நெருங்கி விட்டது. டெலிபோன் மணி ஒலித் தது. டாக்டர் பீரிஸ் டெலிபோனில் பேசி விட்டுத் திரும்பி வந்து, கவர்னர் ஜெனரலைச் சந்திக்க திருமதி பண்டாரநாயக்கா போய்க் கொண்டிருக்கிறார். தமிழரசுக் கட்சியினர் தன்னை ஆதரிக்கப் போவ தாகக் கூறப் போகிறாராம் என்று சொன்னார். டட்லி தந்தை செல் வாவைப் பார்த்தார். திருமதி பண்டாரநாயக்காவை ஆதரிப்பதாகச் சொன்னீர்களா? என்று கேட்டார். நாகநாதன் அதை வன்மையாக மறுத்தார். நான் எத்தகைய கடிதமும் திருமதி பண்டாரநாயக்காவுக்குக் கொடுக்கவில்லை என்று தந்தை உறுதியளித்தார். அந்த டெலிபோன் கோல் டட்லியை ஓரளவு அதிர்ச்சியடையச் செய்து விட்டது. தமிழரசுக் கட்சி ஸ்ரீமாவோவை ஆதரித்தால் சுதந்திரக் கட்சி அரசாங்கத்தை அமைக்கும் வாய்ப்பு இருந்தது டட்லிக்குத் தெரியாதல்ல. எப்படி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



யாவது சுதந்திரக் கட்சியினர் ஆட்சி அமைப்பதைத் தடுப்பதில் அவர் குறியாக இருந்தார். டட்லியிலும் பார்க்க விக்கிரமசிங்கவுக்குச் சுதந்திரக் கட்சி மறுபடியும் ஆட்சி அமைப்பதைத் தடுப்பதில் அதிக அக்கறை இருந்தது. ஸ்ரீமாவோ அரசாங்கத்தை வீழ்த்துவதற்கு அவர் எடுத்த அத்தனை முயற்சியும் வீணாக அவர் அனுமதிப்பாரா?

தமிழ்ப் பிரதேசங்களில் இனிமேல் சிங்களக் குடியேற்றம் இடம் பெற அனுமதியோம் என்ற வாக்குறுதியை விக்கிரமசிங்கவே கொடுத்தார். அத்துடன் நிற்கவில்லை. டட்லியும் தந்தை செல்வாவும் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் வாசகத்தை விக்கிரமசிங்கவும், வி. நவரத்தினமும் சேர்த்துத் தயாரித்தனர். நவரத்தினம் எடுத்த குறிப்புக்களை அடிப்படையாக வைத்தே அவ்வாசகம் தயாரிக்கப் பட்டது. விக்கிரமசிங்கவே தன் கையால் ஒப்பந்த வாசகத்தை டைப் செய்தார். மூன்று பிரதிகளை டைப் செய்தார். ஒன்றை டட்லி வாசித்தார். மற்றதைத் தந்தை வாசித்தார். அடுத்து இருவரும் கையொப்பமிட்டு திகதியையும் போட்டனர். டட்லி தான் எழுந்து ஒரு பிரதியைத் தந்தையிடம் கொடுத்தார். தந்தை எழுந்து நின்று அதை வாங்கினார்.

அந்த ஒப்பந்தத்தின் வாசகம் இது: திரு. டட்லி சேனநாயக்கா அவர்களும், திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் அவர்களும் 24.03.1965 ஆந் திகதி சந்தித்துத் தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகள் சம்பந்தமாக நடாத்திய பேச்சுவார்த்தைகளுக்கமைய ஒரு நிரந்தர அரசாங்கத்தை அமைக்கும் நிமித்தம் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளனவற்றிற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுமென்று திரு. சேனநாயக்கா ஒப்புக் கொள்கிறார்.

1 வட-கிழக்கு மாகாணங்களில் தமிழில் நிர்வாகம் நடப்பதற்கும், அவற்றைத் தமிழிலேயே பதிவதற்கும் தமிழ் மொழி விஷேட விதிகளுக்கமைய உடனே நடவடிக்கைகள் எடுக்கப்படும். ஒரு தமிழ் பேசும் குடிமகன் நாடு முழுவதிலும் தமிழிலேயே காரியமாற்ற உரிமையுள்ளவன் என்பதே - தன் கட்சியின் கொள்கை என்பதையும் திரு. சேனநாயக்கா விளக்கினார்.

2 வட- கிழக்கு மாகாணங்களிலுள்ள சட்டபூர்வ நடவடிக்கைகளை நடாத்தவும், அவற்றைப் பதிவதற்குத் தமிழ் நீதிமன்ற மொழி யாக இருப்பது தன் கட்சியின் கொள்கை என்று திரு. சேனநாயக்கா ஏற்றுக் கொள்கிறார்



3 இரண்டு தலைவர்களின் பரஸ்பர சம்மதத்தின் பேரில் மக்கள் பாலுள்ள அதிகாரங்களுக்கேற்ப இலங்கையில் மாவட்ட சபைகள் அமைக்க நடவடிக்கைகள் எடுக்கப் படும். எனினும் தேசிய நன்மை கருதி சட்டங்களுக்கு அமைய மாவட்ட சபைகளுக்கு மேலான அதிகாரங்கள் அரசாங்கத்துக்குண்டென்று ஏற்றுக் கொள்ளப்பட்டது.

4 இலங்கைப் பிரஜைகள் காணிப் பங்கீடுகளில் காணி பெறும் வண்ணம் காணி அபிவிருத்தி விதிகள் திருத்தியமைக்கப்படும்.

குடியேற்றத் திட்டங்களில் காணிகள் வழங்கப்படும் போது வடக்கு- கிழக்கு மாகாணங்களில் கீழ்க் காணும் விடயங்கள் முதன் முறையாகக் கவனிக்கப்படும் எனவும் திரு சேனநாயக்கா ஏற்றுக் கொண்டார்.

(அ) வட, கிழக்கு மாகாணங்களிலுள்ள காணிகள் அம் மாகாணங்களிலுள்ள காணியற்றவர்களுக்கே முதலில் வழங்கப்படல் வேண்டும்.

(ஆ) இரண்டாவதாக, வட-கிழக்கு மாகாணங்களில் வசிக்கும் தமிழ் பேசும் மக்களுக்கே வழங்கப்படல் வேண்டும்.

(இ) மூன்றாவதாக, இலங்கையின் ஏனைய பகுதிகளில் உள்ள தமிழ்

(ஈ) பேசும் இனத்தவர்களுக்கே முதலிடங் கொடுத்து ஏனையவர்களுக்கும் வழங்கலாம்.

( ஒப்பம் ) டட்லி சேனநாயக்கா 24-03-1965
( ஒப்பம் ) எஸ். ஜே. வி. செல்வநாயகம் 24-03-1965

டட்லி உடனடியாக கவர்னர் ஜெனரலிடம் போய் அரசாங்கத்தை அமைக்கத் தான் தயாராக இருப்பதாக அறிவிக்க வேண்டும் என்ற முடிவு செய்யப்பட்டது. நீங்கள் ஒரு கடிதம் தர வேண்டும். அதை நாங்கள் எங்கள் பலத்தை நிரூபிக்கப் பயன்படுத்துவோம் என்று விக்கிரமசிங்க சொன்னார். தமிழ் காங்கிரஸ், எம்.ஈ.பி. ஆகிய கட்சிகளின் தலைவர்களிடமிருந்தும் தகநாயக்காவிடம் இருந்தும் தாங்கள் ஏற்கெனவே பெற்றிருந்த கடிதங்களை விக்கரமசிங்க காட்டினார். யு.என்.பி.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தலைவர் திரு. டட்லி சேனநாயக்காவின் தலைமையிலான அரசாங்கத்தைத் தமிழரசுக் கட்சி ஆதரிக்கும் எனக் கூறும் கடிதத்தை விக்கிரமசிங்காவே டைப் செய்தார். அக் கடிதத்தில் கையெழுத்துப் போடுவதற்கு முன் தந்தை டட்லியின் கண்களை நேரில் பார்த்து உங்களை நான் நம்புகிறேன் என்று சொன்னார். டட்லி அளித்த பதில் இது:

மூன்று தசாப்தங்களாக நான் அரசியலில். இருக்கின்றேன். நான் கொடுத்த வாக்குறுதியிலிருந்து என்றுமே பின்வாங்கியதே கிடையாது.

தந்தை டட்லியின் கையைப் பிடித்துக் குலுக்கினார். அதன் பின்பு, கவர்னர் ஜெனரலுக்கு எழுதிய கடிதத்தில் கையொப்பமிட்டு அதை டட்லியின் கையிலேயே கொடுத்தார்.அடுத்து, தேசிய அரசாங்கம் ஒன்றைத் தான் அமைக்கப் போவதாகவும் தமிழரசுக் கட்சி அதில் அங்கம் வகிக்க வேண்டும் என்றும் டட்லி சொன்னார். அதற்கு த் தந்தை இவ்வாறு பதிலளித்தார்: "சமஷ்டி ஆட்சி அமைக்கப்பட்ட பின்புதான் அமைச்சர் பதவிகளை ஏற்பதென முடிவு செய்துள்ளோம். அந்த முடிவை எங்களால் மீற முடியாது".

டட்லியோ விடுவதாகவில்லை. தமிழரசுக் கட்சி அங்கம் வகிக்காத அரசாங்கம் தேசிய அரசாங்கமாக முடியாது. எனவே. நீங்கள் அரசாங்கத்தில் சேரத்தான் வேண்டும் என வற்புறுத்தினார். டட்லியின் விருப்பத்தைப் பூர்த்தி செய்யும் அதே வேளை தமிழரசு எம். பி. க்களின் வாக்குறுதியையும் மீறாத வகையில் ஒரு தீர்வைக் கண்டு பிடித்தார் தந்தை. எங்கள் கட்சியின் சார்பில் ஒருவரைத் தருகிறோம். அவரை மந்திரியாக்குங்கள். அவருக்குக் கொடுக்கப் படும் மந்திரிப் பதவி மாவட்ட சபைகளை உருவாக்குவதற்குப் பொறுப்பாக இருக்கும் பதவியாக இருக்க வேண்டும். டட்லி அதற்கு இணங்கினார். தந்தை செல்வா கொடுத்த கடிதத்துடன் கூட்டுக் கடிதம் ஒன்றை கவர்னர் ஜெனரலுக்கு எழுதுவதென்றும் அதில் தந்தை கையொப்பமிட வேண்டும் எனவும் முடிவு செய்யப் பட்டது. நள்ளிரவிற்குப் பின்புதான் தந்தை வீட்டிற்குத் திரும்பினார்.

அடுத்த நாள் மார்ச் 25. காலை ஏழு மணிக்கு டாக்டர் என். எம். பெரேராவும் அனில் முனசிங்கவும் தந்தையின் வீட்டுக்குப் போனார்கள். பண்டாரநாயக்கா-செல்வநாயகம் ஒப்பந்தத்தை அமுல் செய்ய ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா தயாராக இருப்பதாகவும் அவரின் அரசாங்கத்தை ஆதரிக்க வேண்டும் எனவும் சொன்னார்கள். 1960ம் ஆண்டிலும் இதே வாக்குறுதியைத் தந்தார்கள். அவ்வாக்குறுதியைக் காப்பாற்றவில்லை என்றார் தந்தை. அவர்கள் போய்ச் சற்று நேரத்தில் கூட்டுக் கடிதத்துடன் விக்கிரமசிங்க போனார். அக் கடிதத்தின் தமிழாக்



கம்: டிசம்பர் 30ம் திகதி பாராளுமன்றத்தில் கூட்டரசாங்கத்தைத் தோற்கடிக்க நாங்கள் எடுத்த நடவடிக்கையை மக்கள் அங்கீகரித்துள்ளனர் என்பதை பொதுத் தேர்தலின் முடிவுகள் காட்டுகின்றன. மக்கள் சபையில் பெரும்பான்மையினரை நாங்கள் பிரதிநிதித்துவப்படுத்துகின்றோம். ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் திரு. டட்லி சேனநாயக்காவின் தலைமையில் தேசிய அரசாங்கம் ஒன்றை அமைக்க நாங்கள் ஆதரவு கொடுக்கவுள்ளோம். ஜனநாயக சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்கும் நாம் இப்போது எதிர்நோக்கும் பொருளாதார மற்றும் கஷ்டங்களிலிருந்து நாட்டைவிடுவிக்க அவர் திடசங்கற்பம் பூண்டுள்ளார். அக்கடிதத்தில் டட்லி செல்வநாயகம், சி.பி.டி.சில்வா, ஜி.ஜி. பொன்னம்பலம், பிலீப் குணவர்த்தண ஆகியோர் கையொப்பம் இட்டிருந்தனர்.

காலை 9 மணிக்கு அக் கடிதத்துடன் கவர்னர் ஜெனரலை டட்லி சந்தித்தார். அரசாங்கத்தை அமைக்குமாறு டட்லி சேனநாயக்காவை கவர்னர் ஜெனரல் அழைத்தார். மந்திரி சபையில் சேருமாறு விடுத்த அழைப்பை ஆராய்வதற்காக தமிழரசுக் கட்சியின் பாராளுமன்றக் குழு தந்தை செல்வாவின் வீட்டில் அன்று காலை கூடியது. சொலிசிட்டர் ஜெனரல் பதவியிலிருந்து இளைப்பாறிய முருகேசு திருச்செல்வத்தை மந்திரி பதவியை ஏற்குமாறு கேட்பதென முடிவு செய்யப்பட்டது. உள்நாட்டு அமைச்சர் பதவியைக் கோருவது என்றும் தீர்மானிக்கப்பட்டது. அப் பதவியை தகநாயக்காவுக்குக் கொடுக்கத் தான் இணங்கி விட்டதாக டட்லி அறிவித்தார். அதற்குப் பதிலாக உள்ளூராட்சி அமைச்சைக் கொடுப்பதாகச் சொன்னார். தமிழரசுக் கட்சி அதை ஏற்றுக் கொண்டது. இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் சௌமியமூர்த்தி தொண்டமானை நியமன எம். பி. யாக நியமிக்க வேண்டும் என்ற கோரிக்கையை டட்லி ஏற்றுக் கொண்டார்.

## டட்லியின் வயிற்றில் வடை

தேசிய அரசாங்கத்தில் பங்குபற்றிய அந்த நாலு ஆண்டுகளும் தந்தை செல்வாவுக்கோ தமிழரசுக் கட்சிக்கோ மகிழ்ச்சி அளிப்பனவாக அமையவில்லை. கூட்டணிக் கட்சிகள் வகுப்பு வாதப் போக்கைக் கடைப்பிடிக்க ஆரம்பித்தன. தமிழ் பேசும் மக்களுக்கு அவர்களின் உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என்று அதுவரை கூறிவந்த இடதுசாரிக் கட்சிகள்- சமசமாஜக் கட்சியும் கம்யூனிஸ்ட் கட்சியும் - வகுப்புவாதப் பிரசாரங்களில் சேர்ந்து கொண்டமை தந்தைக்கு மிகவும் மனவருத்தத்தைக் கொடுத்தது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மே தின ஊர்வலத்தில் டட்லியின் வயிற்றில் வடை என்று அவர்கள் கோஷித்தனர். தொண்டமான் ஆட்சிதான் நடக்கிறது என்றும் கோஷமிட்டனர். அதே நேரத்தில் யு. என். பி. அரசாங்கத்தில் அங்கம் வகித்த சில அமைச்சர்கள் தீவிர சிங்களவாதப் போக்கைக் கடைப் பிடித்தனர். கல்வி அமைச்சர் ஐ. ஆர். எம். ஏ. ஈரியகொல்ல அவர்களில் ஒருவர். வடக்குக்கும்-கிழக்குக்கும் வெளியேயுள்ள பல பாடசாலைகளில் தமிழ் கற்பிப்பது நிறுத்தப்பட்டது. அதை டட்லியின் கவனத்திற்குக் கொண்டு சென்றபோது தற்காலிக நிவாரணம் கிடைத்தது. ஆனால், ஈரியகொல்ல தனது தமிழ் எதிர்ப்பு நடவடிக்கையைத் தொடர்ந்தார்.

தமிழ் மொழி (விசேட வசதிகள்) சட்டத்தை அமுல் செய்வ தற்கான விதிகளைத் தயாரிப்பதில் டட்லி சேனநாயக்கா நேர்மையாக நடந்து கொண்டார். உரிய விதிகளைத் தயாரிக்குமாறு அவர் திருச் செல்வத்தைக் கேட்டுக் கொண்டார். 1958ல் பண்டாரநாயக்காவால் நிறைவேற்றப்பட்ட தமிழ் மொழி விசேட வசதிகள் சட்டத்தில் குறிப்பிட்ட நிர்வாக தேவைகளுக்கு தமிழ் மொழியை உபயோகிக் கலாம் எனக் கூறப்பட்டுள்ளது. எல்லா நிர்வாகத் தேவைகளையும் குறிப்பிட்ட நிர்வாக தேவைகளின் கீழ் கொண்டு வர முடியும் என்று திருச்செல்வம் அர்த்தம் செய்தார். அதன் மூலம் தமிழ் மொழியை வடக்கு- கிழக்கு மாகாணங்களின் நிர்வாக மொழியாக மாற்றினார்.

திருச்செல்வத்தினால் தயாரிக்கப்பட்ட அவ் விதிகள் 8 ஜனவரி 1966ல் பாராளுமன்றத்தின் முன் சமர்ப்பிக்கப்பட்டன. எதிர்க் கட்சியினர் அம் மசோதாவை எதிர்த்தனர். பண்டாரநாயக்கா கொடுக்க முனைந்த திலும் பார்க்க அதிகமான அதிகாரங்கள் திருச்செல்வத்தின் மசோதா மூலம் கொடுக்கப்படுகின்றது என்பதே எதிர்க்கட்சியினரின் வாதம்.

விகாரமகாதேவி பூங்காவில் இருந்து பாராளுமன்றத்துக்கு ஊர்வலம் ஒன்றை எடுத்துச் சென்று மசோதாவை வாபஸ் பெறும்படி அரசாங்கத்தை வற்புறுத்த எதிர்க் கட்சியினர் முயன்றனர். ஊர்வலம் கொள்ளுப்பிட்டிக்குப் போய் அங்கிருந்து காலி வீதியினால் காலிமுகம் நோக்கிச் சென்ற போது பொலிஸார் ஊர்வலத்தைத் தடுத்து நிறுத்தினர். மக்கள் கற்களையும் செருப்புக்களையும் பொலிஸார்மீது வீசினர். சுடுமாறு பொலிஸாருக்கு உத்தரவு பிறந்தது. பொலிஸார் சுட்டனர். ஊர்வலத்தின் முதல் வரிசையில் சென்று கொண்டிருந்த பௌத்த பிக்குகளில் ரத்னசார தேரோ என்பவர் இறந்தார்.

பலத்த எதிர்ப்புக்கு மத்தியில் நிறைவேற்றப்பட்ட தமிழ் மொழி விதிகள் அமுல் செய்யப்படவில்லை. தமிழரசுக் கட்சி யு. என். பி. அரசாங்கத்தில் சேர்ந்ததே பெரும்பாலான வாலிபர்களுக்குப் பிடிக்க வில்லை. தமிழ் மொழி விதிகள் அமுல் செய்யப்படாமை அவர்களின் அதிருப்தியை வளர்த்தது. இளைஞர்களின் ஆத்திரத்தை மேலும் கிளறி விடுவதைப் போல் கல்வியமைச்சு நடந்து கொண்டது. கல்வியமைச்சு வெளியிட்ட கல்வி வெள்ளையறிக்கையில் பிள்ளைகளின் போதனா மொழியைத் தெரிவு செய்யும் உரிமை பெற்றோருக்கு இருக்க வேண்டும் என்று கூறப்பட்டிருந்தது. சிங்கள மொழியைத் தமிழர்மீது திணிப்பதற்கான தந்திரம் அது என்று வாலிபர்கள் கண்டித்தார்.



தந்தை செல்வா அக் கருத்தை ஏற்றுக்கொண்டார். வண்ணார் பண்ணையில் 1966 மே 5ல் நடந்த பொதுக் கூட்டத்தில் தந்தை செல்வா இந்த வாக்குறுதியை வாலிபருக்குக் கொடுத்தார். எனது வாலிப நண் பர்களுக்கு நான் கூறுவது இதுதான். எமது இனத்துக்கு ஏதாவது அநீதி இழைக்கப்பட்டால் அரசாங்கத்திலிருந்து வெளியேற நாங்கள் தயங்க மாட்டோம். இந்தப் பேச்சை கொழும்புப் பத்திரிகைகள் பெரிது படுத்திப் பிரசுரித்தன. அதனால், அரசாங்கம் கவலையடைந்தது. அப் பேச்சை மறுக்குமாறு தந்தை கேட்கப்பட்டார். தான் அப்படிச் சொல்ல வில்லை என்றும் பத்திரிகை நிருபர்கள் தவறாகப் புரிந்து கொண் டார்கள் என்றும் கூறுமாறும் கேட்கப்பட்டார். அப்படிச் செய்யத் தந்தை அடியோடு மறுத்து விட்டார். “நான் சொன்னதைத்தான் அவர்கள் பிரசுரித்தனர்” என்று சொல்லி விட்டார்.

அத்துடன், அவர் விட்டு விடவில்லை. கல்வியமைச்சும், நீதிய மைச்சும் தமிழ் மக்களுக்கெதிரான நடவடிக்கைகளில் ஈடுபடுவதை பிரதம மந்திரிக்குச் சுட்டிக் காட்டினார். அதன் விளைவாக அந்த அமைச்சுக்குப் பொறுப்பான அமைச்சர்களுடனும் உயர் அதிகாரி களுடனும் பல மகாநாடுகள் நடத்தப்பட்டன. மகாநாடுகளின் போது நாங்கள் சொல்வது நியாயம் என்பார்கள். நாங்கள் சுட்டிக் காட்டும் குறைகளை நிவர்த்தி செய்வதாகச் சொல்வார்கள். அவ்வளவுதான். நடைமுறையில் பழைய கொள்கையே தொடரும் என்று தந்தை எனக்குச் சொன்னது நினைவுக்கு வருகிறது.

தமிழரசுக் கட்சியின் வற்புறுத்தலின் விளைவாக, பதவி நீக்கத்தை எதிர் நோக்கி நின்ற சிங்களம் கற்காத தமிழ் அரசாங்க ஊழியருக்குச் சலுகைகள் வழங்கப்பட்டன. அவற்றில் முக்கியமானவை திறைசேரி சுற்றறிக்கைகள் 700ம் 701ம். சுற்றறிக்கை 700 மூலம் பழைய ஊழியர் எவ்விதச் சிங்களத் தேர்ச்சியுமின்றி சம்பள உயர்வு, பதவி உயர்வு களைப் பெற வழியேற்பட்டது. சுற்றறிக்கை 701ன் படி புதிய ஊழியர்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சிங்களத் தேர்ச்சி பெறுவதற்கு மேலும் மூன்று வருட அவகாசம் அளிக்கப்பட்டதோடு பரீட்சையின் தரமும் எட்டாவது தரமாகக் குறைக் கப்பட்டது.

திறைசேரியிலிருந்த வகுப்பு வாதிகள் இச் சலுகைகளின் பய னைத் தமிழ் ஊழியர்கள் பெறுவதைத் தடை செய்தனர். நிதியமைச்சர் வன்னிநாயக்காவே ஒப்புக் கொண்ட ஓர் உதாரணம்: "ஒன்பதாம் தர வினாத்தாள் எட்டாம் தர வினாத்தாள் என்று பெயர் மாற்றம் செய்யப் பட்டு சிங்கள தகுதிகாண் பரீட்சையின் போது கொடுக்கப்பட்டமை".

வாலிபரிடையே வளர்ந்து வரும் அதிருப்திக்கு மத்தியிலும் அரசாங்கத்துடனான உறவை வலியுறுத்தும் வகையில் 1960 ஜூன் 23-25 திகதிகளில் கல்முனையில் நடந்த பத்தாவது மகாநாட்டுக்குச் சிறப்பு விருந்தினராகப் பிரதம மந்திரி டட்லி சேனநாயக்கா அழைக்கப்பட் டார். இரும்பு மனிதன் டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட அம்மகாநாட்டில் சிறப்புரை ஆற்றிய டட்லி சொன்ன பல விடயங்களில் இரண்டு இவை:

1 நான் தலைவனாக இருக்கும் வரை தமிழ் மொழியும் தமிழரின் பாரம்பரியமும் பாதிப்படைய அனுமதிக்க மாட்டேன் என்பதை இங்கே வலியுறுத்திக் கூற விரும்பு கின்றேன். இலங்கை போன்ற பல இன மக்கள் வாழும் நாட்டில் பல்வேறு குழுக்களின் கலாசாரமும் மொழியும் பேணப்படுவது சனநாயகத்தின் அடிப்படை அம்சம் என்பதை என்னைப் போல் நீங்களும் ஏற்றுக் கொள்வீர்கள். சுதந்திரக் கனியை நாங்கள் சுவைக்க வேண்டுமாயின் இன ஒற்றுமை நிலைத்திருக்க வேண்டும்.

2 இலகுவில் வாக்குக் கொடுக்க மாட்டேன். கொடுத்தால் நிறைவேற்றத் தவற மாட்டேன்.

கொடுத்த வாக்கை டட்லி நிறைவேற்றினாரா? 1965 மார்ச் 24ல் தந்தை செல்வாவுடன் செய்து கொண்ட ஒப்பந்தம் டட்லியின் வாக் குறுதி. டட்லி- செல்வா ஒப்பந்தத்தில் முதல் இரண்டு பிரிவுகள் தமிழ் மொழி உபயோகம் பற்றியன.



**மாவட்ட சபைகள்**

மூன்றாவது மாவட்ட சபைகள், நான்காவது குடியேற்றம். 1966 ஜனவரி 8ல் (விசேட விதிகள்) சட்டத்தை நடைமுறைப் படுத்து வதற்கான விதிகளைச் சட்டமாக்கினார் டட்லி. ஆனால், அவ் விதிகளை நடைமுறைப்படுத்துவதற்கு டட்லி எவ்வித நடவடிக்கையும் எடுக்க வில்லை. கல்முனை மாநாட்டில் டட்லி சொன்னவை தமிழரசுக் கட்சியினருக்கு வைற்றமின் போல் இருந்தது. டட்லியுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் முக்கிய அம்சமாக மாவட்ட சபைகளை நிறுவுவதையே தந்தை செல்வா கருதினார். தேசிய அரசாங்கம் அமைக்கப்பட்டது முதல் மாவட்ட சபைகளை அமைப்பது பற்றி தந்தை வலியுறுத்தி வந்தார். கல்முனையில் டட்லியின் பேச்சையடுத்து அரசாங்கத்துடன் மாவட்ட சபைகளைப் பற்றிப் பேசுவதற்காக ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட குழு ஒன்றைத் தமிழரசுக் கட்சி தெரிவு செய்தது. தந்தை செல்வா, நாகநாதன், திருச்செல்வம், இராசமாணிக்கம், அமிர்தலிங்கம் ஆகியோர் அதன் உறுப்பினர்கள். டட்லியைச் சந்தித்த அக் குழுவுக்கு ஓர் அதிர்ச்சி கிடைத்தது. தந்தை மிகவும் பவ்வியமாகச் சொன்னார் மாவட்ட சபைகள் அமைப்பது பற்றிப் பேசுவதற்கு வந்திருக்கிறோம் என்று. "பதவியில் சில மாதங்கள் இருந்த பின்பு நீங்கள் உங்கள் கோரிக்கைகளை வற்புறுத்த மாட்டீர்கள் என நான் நினைத்தேன் என்றார்"அவர். தந்தை அமைதியாகவும் உறுதியாகவும் சொன்னார் எங்களைத் தெரிவு செய்த போது மக்கள் ஓர் ஆணையைக் கொடுத்துள்ளனர். தமிழ் மக்களுக்குரிய உரிமையைப் பெற்றுக் கொடுப்பதே எங்களுக்கு மக்கள் இட்டுள்ள ஆணை. சில மாதங்களுக்குப்பின் நாங்கள் அந்த ஆணையை மறப்பதெப்படி?

பலத்த வற்புறுத்தலின் பின் ஜூலை 8ம் திகதி நடக்கவிருந்த சிம் மாசனப் பிரசங்கத்தில் மாவட்ட சபைகளை அமைப்பது பற்றி அறிவிக்க டட்லி இணங்கினார். சிம்மாசனப் பிரசங்கத்தில் இடம் பெற்ற இவ் அறிவிப்பு தமிழரசுக் கட்சியின் வாலிபர் முன்னணிக்குத் திருப்தியளிக்க வில்லை. வாலிப முன்னணியின் உதவித் தலைவர் இராசதுரை கீழ்க்காணும் அறிக்கையை வெளியிட்டார். "இந்த வாக்குறுதிகளில் களைத்து விட்டோம். எமக்குத் தேவை செயல். தேசிய அரசாங்கத்தை அமைத்து ஓராண்டாகி விட்டது. மாவட்ட சபைகளை அமைப்பதற்கு எத்தகைய முயற்சியும் எடுக்கப்படவில்லை. இராஜதுரையின் அறிக்கை தமிழரசுக் கட்சியின் தலைமைப் பீடத்தில் இளைஞர்களுக்கிருந்த நம்பிக்கையின்மையை வெளிக்கொணர்வதாக அமைந்திருந்தது."

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஜூலை 24ல் நடந்த வாலிப முன்னணித் தேர்தலில் தலைமைப் பீடத்தின் கொள்கைக்கு ஆதரவாக இருந்த அமிர்தலிங்கத்தின் தலைவர் பதவிக்கு கடும் போக்காளரான இராசதுரை தெரிவு செய்யப்பட்டார். மாவட்ட சபைகள் அமைப்பதை வலியுறுத்தும் நோக்குடன் வாலிப முன்னணி ஆகஸ்ட் 23 இல் மாநாடு ஒன்றை நடத்தியது. அம் மகா நாட்டுக்குச் சிறப்புப் பேச்சாளராக அமைச்சர் ஜே. ஆர். ஜெயவர்த்தன அழைக்கப்பட்டார். ஜே. ஆர். வழக்கம் போல, தந்திரமாகப் பேசினார். தமிழரசுக் கட்சியைப் புகழ்ந்து விட்டு மாவட்ட சபைகள் அமைப்பது பற்றிய வாக்குறுதி எதையும் கொடுக்காமல் போய்விட்டார். ஜே. ஆரின் உரையின் பிரதான பந்தி இது:

தேசிய அரசாங்கம் அமைக்கப் பட்டதையடுத்து சிங்களவருக்கும் தமிழருக்கும் இடையே நிலவிய பகைமை முடிந்து விட்டது. இந் நாட்டில் சனநாயகத்தைத் தமிழரசுக் கட்சி பாதுகாத்து விட்டது. சர்வாதிகார ஆட்சியை நடத்திய ஐக்கிய முன்னணி அரசாங்கத்தைத் தோற்கடிக்க உதவியதோடு முற்போக்கான ஜனநாயக தேசிய அரசாங்கத்தை அமைப்பதற்கும் தமிழரசுக் கட்சிஉதவியது.

தந்தை செல்வாவின் தலைமையிலான ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட தமிழரசுக் கட்சிக் குழு டட்லியையும் ஜே. ஆரையும் செப்டம்பர் 10ல் சந்தித்து மாவட்ட சபைகளை அமைக்கும்படி வலியுறுத்தியது. மாவட்ட சபைகளை அமைப்பதற்கான சட்ட வரைவைத் தயாரித்து மந்திரிசபையின் பரிசீலனைக்குச் சமர்ப்பிக்குமாறு ஜே. ஆர். ஆலோசனை கூறினார். அந்தப் பணியைத் திருச்செல்வம் செய்தார். திருச்செல்வம் தயாரித்த மாவட்ட சபைகள் மசோதாவின் முக்கிய அம்சங்கள்:

1 ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒவ்வொரு மாவட்ட சபை இருக்கும்.

2 மாவட்டத்தைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினரும், மாநகர சபை மேயர்களும், நகர சபை, கிராம சபை ஆகியவற்றின் தலைவர்களும் உள்ளூராட்சி அமைச்சரால் நியமிக்கப்பட்ட மூன்று பேரும் அச் சபைகளின் உறுப்பினர்களாகவிருப்பர்.

3 ஒவ்வொரு மாவட்டத்துக்கும் நிர்வாகக் கமிட்டி ஒன்று இருக்கும். அதில் ஏழு பேருக்கு மேற்படாதோர் அங்கம் வகிப்பர். அவர்கள் மாவட்ட சபை உறுப்பினர்களால் தெரிவு செய்யப்படுவர்.



4 நிர்வாகக் கமிட்டியின் பணி மாவட்ட சபையை நிர்வகித்தல், அபிவிருத்தித் திட்டங்களை த் தயாரித்தல், அவற்றை அமுல் செய்தல் ஆகியவை.

5 மாவட்ட சபைகளுக்குக் கொடுக்கப்பட வேண்டிய அதிகாரங்கள்:

விவசாயம், உணவு,விலங்கு வளர்த்தல், கைத்தொழில், கடற்தொழில், கிராம அபிவிருத்தி, வீடமைப்பு, பிரதேச திட்டமிடல். சில குறிப்பிட்ட கல்வித் துறைகள், கலாசாரம், ஆயுர்வேதம், சமூக நலன், சுகாதார சேவை.

சிங்கள மக்களின் பயத்தைப் போக்கும் வகையில் மாவட்ட சபைகளுக்குச் சில கட்டுப்பாடுகளைச் சேர்த்தார் திருச்செல்வம். அவை:

1 மாவட்ட சபைகளை வழிநடத்தும் கட்டுப்படுத்தும் அதிகாரங்கள் அமைச்சர்களுக்கு இருக்கும்.

2 மாவட்ட சபைகளுக்கு காலத்துக்குக் காலம் பொது விஷேட அறிவுறுத்தல்களை வழங்கும் அதிகாரம் உள்ளூராட்சி அமைச்சருக்கு இருக்கும். மாவட்ட சபைகளை அவ்வறிவுறுத்தல்கள் கட்டுப்படுத்தும்.

3 மாவட்ட சபைகள் தாங்கள் தயாரிக்கும் அபிவிருத்தித் திட்டங்களுக்கு மத்திய அரசாங்கத்தின் அங்கீகாரத்தைப் பெற வேண்டும்.

4 மாவட்ட சபைகள் தாங்கள் விதிக்கும் வரிகளுக்குப் பாராளுமன்றத்தின் அங்கீகாரத்தைப் பெற வேண்டும்.

5 நிதியமைச்சரின் அனுமதியுடனேயே கடன்களைத் திரட்டலாம்.

6 ஒன்றோடொன்று இணையும் அதிகாரம் மாவட்ட சபைகளுக்கு இருக்காது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**வாலிபருடன் மோதல்**

மாவட்ட சபை வரைபை ஆராய்வதற்காக தமிழரசுக் கட்சியின் பொதுச் சபை யாழ்ப்பாண நகர மண்டபத்தில் செப்டம்பர் 29ம் திகதி கூடியது. தலைவர்களும் வாலிப முன்னணியினரும் அக் கூட்டத்தில் நேரடியாக மோதிக் கொண்டனர். மாவட்ட சபைகளை அழகுபடுத் தப்பட்ட முனிசிப்பல் சபைகள் என்று வாலிப முன்னணியினர் வர்ணித் தனர். அக் கூட்டத்தில் அரசாங்கத்தின் கல்விக் கொள்கையும் கடினமாக விமர்சிக்கப்பட்டது. கல்வியமைச்சர் ஈரியகொல்ல வெளியிட்ட கல்வி வெள்ளையறிக்கையில் தமது பிள்ளைகள் எந்த மொழியில் கல்வி கற்க வேண்டும் எனத் தீர்மானிக்கும் உரிமை பெற்றோரிடம் விடப்பட்டது. இதை வாலிப முன்னணி கடுமையாகத் தாக்கியது. தமிழ்ப் பாடசா லைகளில் சிங்களத்தைப் புகுத்துவதற்கு இது வழியமைக்கும் என்பது அவர்களின் கருத்து.

அடுத்த பிரச்சினை முஸ்லிம் பாடசாலைகளுக்குச் சிங்கள ஆசிரி யர்களை அனுப்புவது சம்பந்தமானது. வாலிப முன்னணியின் எதிர்ப்புக்கு தலைமை வகித்த இராஜதுரை கேட்டார். இவ்வளவு காலமும் சிங்கள ஆசிரியரை அனுப்புவதை எதிர்த்தீர்கள். இப்பொழுது ஏன் ஏற்றுக் கொள்கிறீர்கள்? ஆட்சியின் சுவையை அனுபவிக்க ஆரம்பித்ததனாலா? அமிர்தலிங்கம் இதை ஆட்சேபித்தார். இராஜதுரை இந்த வார்த்தைகளை வாபஸ்பெற வேண்டும் என்று வற்புறுத்தினார். இராஜதுரை வாபஸ் பெற மறுத்தார். அவர்களுக்கிடையே வாக்கு வாதம் ஏற்பட்டது. வழக்கம்போல தந்தை தலையிட்டு சமாதானத்தை நிலை நாட்டினார்.

அமிர்தலிங்கமும் இராஜதுரையும் தமிழரசுக் கட்சியின் ஆரம்ப கால உறுப்பினர்கள். அமிர்தலிங்கம் யாழ்ப்பாணம் வட்டுக்கோட் டையைச் சேர்ந்தவர். சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரியிலிருந்து பல்கலைக் கழகத்திற்குப் போனவர். பல்கலைக் கழகத்தில் படிக்கும் போதே தமிழரசுக் கட்சியில்சேர்ந்தவர். பின்பு சட்டம் படித்து வழக்கறிஞர் ஆனார். இராஜதுரை மட்டக்களப்பைச் சேர்ந்தவர். இளவயதில் இருந்தே தமிழ் கற்பதிலும் எழுதுவதிலும் ஆர்வம் மிக்கவர். மாணவனாக இருக்கும் போதே தந்தையால் அரவணைக்கப் பட்டவர். சுதந்திரனில் சேர்ந்து பணியாற்றினார். இருவரும் நல்ல பேச்சாளர்கள். தத்தமது பகுதிகளில் தமிழரசுக்கட்சியின் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியவர்கள். தந்தை இரண்டு பேரையும் தன் கண்களாகவே போற்றினார்.



வாலிபரின் உணர்ச்சியை நன்கு உணர்ந்து கொண்ட தந்தை, திருச்செல்வம், அமிர்தலிங்கம், இராசமாணிக்கம் ஆகியோருடன் போய் அக்டோபர் 9ம் திகதி டட்லியைச் சந்தித்தார். முஸ்லிம் பாடசா லைகளுக்குச் சிங்கள ஆசிரியர்களை அனுப்புவதைத் தாங்கள் எதிர்க் காத போதிலும் அதைச் செய்யும் நோக்கத்தையும் ஆட்சேபிப்பதாகத் தந்தை கூறினார். நீண்ட நேர ஆலோசனையின் பின்பு சிங்கள ஆசிரி யர்களை அனுப்புவதற்கு முன்பு சம்பந்தப்பட்ட தொகுதி எம். பியுடன் கலந்தாலோசிக்க வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. சிங்கள ஆசிரியர்கள் அனுப்பப்படும் முஸ்லிம் பாடசாலைகளில் கற்கும் தமிழ் மாணவர்கள் அருகேயுள்ள தமிழ்ப் பாடசாலைக்கு மாற்றப்பட வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது. போதனா மொழி தகராறை ஆராய்வதாகவும் மாவட்ட சபை மசோதாவை விரைவில் பாராளு மன்றத்தில் சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கையை எடுப்பதாகவும் பிரதம மந்திரி வாக்குறுதி யளித்தார்.

டட்லியின் வீடான வுட்லன்ட்ஸ்சில் நடைபெற்ற சந்திப்பின் முடிவையறிய அங்கே காத்திருந்த பத்திரிகையாளர் கூட்டத்தில் நானும் ஒருவன். அச் சந்திப்புக்கு பத்திரிகையாளர் மிகவும் முக்கியத்துவம் கொடுத்தார்கள். காரணம் தேசிய அரசாங்கத்தில் பிளவு ஏற்பட்டிருப் பதாகவும் தமிழரசுக் கட்சியினர் அரசாங்கத்திலிருந்து வெளியேறப் போவதாகவும் வதந்திகள் பரவலாக அடிபட்டன. சந்திப்பு முடிந்ததும் டட்லி சிரித்த முகத்துடன் பத்திரிகையாளரைச் சந்தித்தார். தமிழரசுக் கட்சித் தலைவர்களையும் தன்னுடன் அழைத்து வந்தார். சந்திப்பின் முடிவைக் கூறுமாறு பத்திரிகையாளர்கள் கேட்டனர். அமிர்தலிங் கத்தின் கையைப் பிடித்து இழுத்து "இவரிடமே கேளுங்கள்" என்றார் டட்லி.

போதனா மொழி தாய் மொழியாகத்தான் இருக்க வேண்டும் என்று நாங்கள் வற்புறுத்தினோம். அவ்விடயத்தை மந்திரி சபையில் மீண்டும் ஆராய்வதாகப் பிரதம மந்திரி கூறினார் என்றார் அமிர்தலிங்கம். அரசாங்கம் உடையப் போகிறது என்ற வதந்தியை எதிர்க் கட்சியி னர்தான் பரப்பினர். அதே நேரத்தில் அரசாங்கத்தில் பிளவு ஏற்படுத்து வதற்கான பிரசாரத்தையும் செய்தனர். மாவட்ட சபை உருவாகாமல் தடுத்து விட்டால் தமிழரசுக் கட்சி அரசாங்கத்திலிருந்து வெளியே றிவிடும் என்பது எதிர்க் கட்சியினரின் கணிப்பு. மாவட்ட சபைகள் மூலம் டட்லி நாட்டைப் பிளவு படுத்தப் போகிறார் என்ற பிரசாரத்தைத் தீவிரப்படுத்தினர். டட்லி சேனநாயக்கா உணர்ச்சி மிக்கவர். மாவட்ட சபைக்கு எதிராக எதிர்க் கட்சியினர் கட்டவிழ்த்துவிட்ட எதிர்ப்புப்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பிரசாரத்தைக் கண்டதும் பயந்து விட்டார். தன்னைச் சிங்கள விரோதியென்றோ, நாட்டைத் துண்டாடுபவர் என்றோ எவரும் குற்றம் சாட்டுவதை அவர் விரும்பவில்லை.

அக்டோபர் 17ஆம் திகதி அவர் இந்த அறிக்கையை வெளியிட்டார். நான் சமஷ்டிவாதிகளுடன் ஒப்பந்தம் ஒன்றைச் செய்திருப்பதாக என் எதிரிகள் பிரசாரம் செய்கின்றனர். நான் செய்தது சமஷ்டி வாதிகளின் உதவியுடன் தேசிய அரசாங்கத்தை அமைத்தது மட்டுமே. எல்லா இனங்களையும் மதங்களையும் சார்ந்தவர்களின் உதவியுடனும் ஒத்துழைப்புடனும் அமைக்கப்பட்ட தேசிய அரசாங்கம் இந் நாட்டைப் பிளவு படுத்தும் நோக்கத்தைக் கொண்டதல்ல. ஒன்பது ஆண்டுகளாகத் தாமதிக்கப்பட்ட பொருளாதார சுதந்திரத்தை இந் நாட்டுக்குப் பெற்றுக் கொடுப்பதே தேசிய அரசாங்கம் அமைக்கப் பட்டதன் நோக்கம்.

எதிர்க் கட்சியினர் வைத்த பொறிக்குள் டட்லி வகையாக மாட்டிக் கொண்டார். தமிழரசுக் கட்சியின் கிளிநொச்சிக் கிளை அக்டோபர் 23ல் தமிழரசுக் கட்சி அரசாங்கத்திலிருந்து விலக வேண்டும் எனக் கோரும் தீர்மானத்தை நிறைவேற்றியது. அக் கூட்டத்தில் கிளிநொச்சி எம். பி. கே. பி., இரத்தினமும் ஊர்காவற்றுரை எம். பி., வி. நவரத்தினமும் தீர்மானத்தை ஆதரித்துப் பேசினர். டட்லி மீது நம்பிக்கை வைத்ததற்காக வாலிபர்கள் கட்சித் தலைமைப் பீடத்தைக் குறை கூறினார்கள்.

வாலிபர்களின் வற்புறுத்தலின் விளைவாக பொதுச் சபைக் கூட்டத்தை அக்டோபர் 27ம் திகதி கட்சிச் செயலாளர் அமிர்தலிங்கம் கூட்டினார். அதற்கு முதல் நாள் தந்தை செல்வா டட்லியைப் போய்ப் பார்த்தார். மாவட்ட சபைக்கு எதிர்ப்பு பலமாக இருப்பதினால் தன்னால் அம் மசோதாவை இப்போதைக்குக் கொண்டு வர முடியாது என்று டட்லி சொல்லி விட்டார். தந்தை செல்வாவுக்கு மிகவும் இக்கட்டான நிலை. உங்களுடைய நிலைமையை என்னால் உணர முடிகிறது. அதே சமயத்தில் எங்களுக்கும் வாலிபர்களின் வற்புறுத்தல் அதிகரித்து வருகிறது. அரசாங்கத்தை நாங்கள் தொடர்ந்து ஆதரிப்பதாயின் அரசாங் கத்தில் இருப்பதால் தமிழ் மக்களுக்கும் பயன் கிடைக்கிறது என்பதை அவர்களுக்கு நாம் உணர்த்த வேண்டும் என்றுடட்லிக்கு தந்தை சொன்னார். நானும் அதை உணர்கிறேன் என்றார் டட்லி. தமிழ் மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான தமிழ்ப் பல்கலைக் கழகத்தைத் திருகோணமலையில் அமைக்க உதவும்படி தந்தை கேட்டார். அதைச் செய்து தருவதாக டட்லி வாக்குறுதியளித்தார்.



பொதுச் சபைக் கூட்டத்தில் முதல் நாள் டட்லியுடன் நடத்திய பேச்சுவார்த்தை பற்றிய விவரங்களைத் தந்தை வெளியிட்டார். பொதுச் சபையில் ஒருவர் பின் ஒருவராக எழுந்து டட்லி மீது நம்பிக்கை வைத்ததற்காக தலைமைப் பீடத்தைக் கடும் வார்த்தைகளால் கண்டித் தனர். தந்தை அவற்றையெல்லாம் மிகவும் கவனமாகக் கேட்டார். எல்லோரும் பேசி முடிந்ததும் அரசாங்கத்தில் தொடர்ந்து இருக்கக் கட்சியின் அனுமதியைக் கோரும் தீர்மானத்தை அவர் பிரேரித்தார். நிபந்தனை எதுவுமின்றி பிரதம மந்திரியை ஆதரிப்பதாக வாக்குறு தியளித்து விட்டேன். அவரை இந்தத் தருணத்தில் கைவிட மாட்டேன் என்று வாக்குறுதியளித்துள்ளேன் என்றார் தந்தை. தொடர்ந்து சொன் னார் கல்விச் சீர்திருத்தம் தற்காலிகமாக கைவிடப்படும் என்று பிரதம மந்திரி எனக்கு வாக்குக் கொடுத்துள்ளார். இந்த முடிவுகள் அரசாங் கத்துக்கும் தமிழரசுக் கட்சிக்குமிடையே நடைபெறும் கொடுக்கல் வாங்கலின் ஓர் அம்சமாகும். தந்தையின் பிரேரணைக்கு ஆதரவாக 47 பேரும் எதிராகப் 11 பேரும் வாக்களித்தனர்.

தேசிய அரசாங்க தமிழரசுக் கட்சி உறவைத் தக்க வைத்துக் கொள்வதற்கு தந்தை செல்வா முயற்சி எடுத்த போதிலும் தமிழரசுக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரிடையேயும் வாலிபர்களிடையேயும் டட்லி மீதான அவநம்பிக்கை அதிகரித்துக் கொண்டே போனது. இந்த அவநம்பிக்கையை எடுத்துக் காட்டுவதாக 1966 நவம்பரில் அமைச்சர் திருச்செல்வம் மன்னாரில் ஆற்றிய உரை அமைந்தது. சமஷ்டி ஆட்சி முறைதான் இலங்கைக்கு உகந்தது. நான் சமஷ்டி ஆட்சி முறையையே ஆதரிக்கின்றேன் என்று சொன்னார் அவர். டெய்லி நியூஸ் பத்திரிகை அதைப் பெரிய செய்தியாகப் பிரசுரித்தது சமஷ்டி ஆட்சி முறையே சிறந்த ஆட்சி முறை என்கிறார் திரு என்பது தான் டெயிலி நியூஸ் கொடுத்த தலைப்பின் தமிழாக்கம்.

நவம்பர் 23ல் நடந்த அரசாங்க பாராளுமன்ற குழுக் கூட்டத்தில் டட்லி இவ்விடயத்தைக் குறிப்பிட்டு அமைச்சர்கள் அரசாங்கக் கொள் கையைப் பிரதிபலிக்க வேண்டுமே தவிர தமது சொந்தக் கருத்துகளைக் கூறக் கூடாது என்று சொல்லித் திருச்செல்வத்தைக் கண்டித்தார். இனி மேல் அத்தகைய அறிவுரைகளை வெளியிடாதீர்கள் என்றும் சொன் னார். திருச்செல்வத்துக்குச் சரியான ஆத்திரம். மற்றவர்கள் முன்னி லையில் டட்லி தன்னைச் சிறுமைப் படுத்தி விட்டதாக உணர்ந்தார். வீட்டுக்குப் போய் தந்தை செல்வாவுக்குக் கடிதம் ஒன்றை அனுப்பினார். தான் உடனேயே அமைச்சர் பதவியை இராஜினாமாச் செய்திபேன் எனவும் தமிழரசுக் கட்சி தன்னை நியமித்தமையினால்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கட்சியின் அனுமதியின்றி எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை என்றும் அக் கடிதத்தில் குறிப்பிட்டார்.

திருச்செல்வத்தையும் அமிர்தலிங்கத்தையும் அழைத்துக் கொண்டு போய் டட்லியைத் தந்தை சந்தித்தார். டட்லியின் தவறைச் சுட்டிக் காட்டினார். டட்லி தன் தவறை ஒப்புக் கொண்டார். 1967ல் அரசாங் கத்துக்கும் தமிழரசுக் கட்சிக்கும் இடையே பல உரசல்கள் ஏற்பட்டன. ஸ்ரீமாவோ-சாஸ்திரி ஒப்பந்தத்தை அமுல் செய்வதற்கான மசோதா வொன்றை அரசாங்கம் பெப்ரவரி மாதத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப் பித்தது. அதில் தமிழ் மக்களைப் பாதிக்கும் மூன்று அம்சங்கள் இருந்தன. அவை:

1 இந்தியப் பிரஜைகளாகப் பதிவு செய்தோரைக் கட்டாயப் படுத்தி நாடத்துதல்

2 இந்தியாவுக்குச் செல்வோரின் விகிதத்துக்கேற்ப இலங்கைப் பிரஜாவுரிமை கொடுத்தல்.

3 பதிவுப் பிரஜைகளுக்கான தனி வாக்காளர் பட்டியல்.

தமிழரசுக் கட்சியும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசும் கூட்டாக எதிர்ப்புத் தெரிவித்தமையினால் அந்த விடயங்கள் மசோதாவில் இருந்து நீக்கப்பட்டன. அந்தத் திருத்தங்களும் தமிழரசுக் கட்சியிலிருந்த இருவரைத் திருப்பதிப்படுத்தவில்லை. ஊர்காவற்று றை எம். பி. நவரத்தினம் ஒருவர். செனற்றர் எம். மாணிக்கம் மற்றவர். இருவரும் அரசாங்கத்துடன் சேர்ந்து வாக்களிக்க வில்லை.

1967 மார்ச்சில் ஆட்களைப் பதிவு செய்யும் மசோதாவை அர சாங்கம் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தது. 18 வயதுக்குக் கூடிய இலங் கைப் பிரஜைகளுக்கு அடையாள அட்டை வழங்க வேண்டும் என்று அம் மசோதா கூறியது. தமிழரசுக் கட்சியும் இ. தோ. கா. வும் இலங் கையில் வாழும் ஆட்கள் எல்லோருக்கும் அடையாள அட்டை வழங் கப்பட வேண்டும் என்று வற்புறுத்தின. அரசாங்கம் அதற்கு இணங் கியது. வி. நவரத்தினம் அத் திருத்தத்தை ஏற்க மறுத்தார். மசோதா முழு மையாகக் கைவிடப்பட வேண்டும் என வலியுறுத்தினார். பாராளு மன்றத்தில் அரசாங்கத்தையும் தமிழரசுக் கட்சியையும் விமர்சித்துப் பேசினார். தமிழரசுக் கட்சியினர் டட்லிக்குத் தமிழ் மக்களின் உரிமை களை விற்று விட்டதாகச் சொன்னார். அடுத்த நாள்கட்சியின் செயற்



குழு கொழும்பில் கூடியது. கட்சியின் கட்டுப்பாட்டை மீறியமைக்காக வி. நவரத்தினத்தைக் கட்சியிலிருந்து வெளியேற்ற முடிவு செய்யப் பட்டது.

வாலிப முன்னணியினர் கொதித்தெழுந்தனர். வி. நவரத்தினத்தின் அணுகுமுறைதான் சரியானதெனப் பகிரங்கமாகப் பேசத் தொடங்கினர். வாலிப முன்னணி செயற்குழுவைக் கூட்டுமாறு வற்புறுத்தினர். வாலிப முன்னணி தீவிரமாகச் செயற்பட்ட தருணம் அது.

திருகோணமலை மாவட்டத்தில் கித்துள் ஊற்று என்ற சிறு குளம் கட்டப்பட்டது. அங்கு சிங்கள மக்களைக் குடியேற்றுவதற்கும் ஆயத் தங்கள் செய்யப்பட்டன. வாலிப முன்னணியினர் அங்கு போய் அத்து மீறிக் குடியேறினார்கள். ஓலைக் குடிசைகளை அமைத்து வாழ ஆரம் பித்தனர். அப் பகுதி சிங்களக் காரியாதிகாரி குடிசைகளுக்குத் தீ வைப் பித்தார். வாலிபர்களைக் கைது செய்வித்தார். தமிழரசுக் கட்சி காணியமைச்சருடன் பேசி அத்துமீறிக் குடியேறிய வாலிபர்களையும் வேறு தமிழ் பேசும் மக்களையும் அங்கு குடியேற்றச் செய்தது.

இத்தகைய உணர்ச்சி வேகத்துடன் இருந்த வாலிபர்களை தலை மைப் பீடத்தின் அணுகு முறையை ஏற்க வைப்பது கஷ்டமான செயல் தான். அதை அமிர்தலிங்கம் செய்தார். அவர் சொன்னார், மாவட்ட சபைகளை அமைக்க டட்லி இணங்கியுள்ளார். எதிர்க் கட்சியின் எதிர்ப்புத் தணிந்ததும் அதைச் செய்வார். எங்களின் வார்த்தையை நம்பிக் கொஞ்சம் பொறுத்திருங்கள். வாலிபர்கள் இணங்கினர். ஆனால், மே மாதத்தில் தமிழரசுக் கட்சியின் தலைமைப் பீடத்திற்கே பேரிடி விழுந்தது.

### கைவிரித்தார் டட்லி

1967 மே நடுப்பகுதி. பிரதம மந்திரி டட்லி சேனநாயக்க அவசர மாக பத்திரிகை மாநாடொன்றைக் கூட்டினார். டட்லியின் சொந்த வீடான வுட்லண்ட்சில்தான் மாநாடு. அவர் சொன்ன விடயத்தின் தமிழாக்கத்தைத் தருகிறேன்: "ஒரு முக்கியமான விடயத்தைச் சொல்வதற்காகவே உங்களை நான் அழைத்தேன். மாவட்ட சபைகள் நகல் மசோதாவின் பிரதியைக் கேட்டுத் திரு. பஸ்நாயக்க சில நாட்களுக்கு முன்பு எனக்குக் கடிதம் எழுதினார். நான் கொடுக்கப் போகும் பதில் அவருக்கு மட்டுமல்ல உங்களுக்கும் ஆச்சரியத்தைக்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கொடுக்கும். மாவட்ட சபைகள் சம்பந்தமாக நகல் மசோதா தயாரிக்கப்படவில்லை என்பதுதான் அது. நடந்தது இது மட்டும் தான். நானும் எனது அமைச்சர்களில் சிலரும் தமிழரசுக் கட்சி உறுப்பினர் சிலருடன் திரு. திருச்செல்வம் முன்வைத்த சில ஆலோசனைகள் பற்றிப் பேசினோம்.

பத்திரிகையாளர்களுக்கு டட்லியின் அக்கூற்றுப் பெரும் அதிர்ச்சியைக் கொடுத்தது. டட்லிக்கும் தந்தை செல்வாவுக்குமிடையே செய்யப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையே மாவட்ட சபைகளை அமைப்பது தான் என்பதை அங்கு சென்றிருந்த அத்தனை பத்திரிகையாளர்களும் அறிந்திருந்தனர். அவ்வளவு பேரும் சிரேஷ்ட பத்திரிகையாளர்கள். அரசியல் நிகழ்வுகளை உன்னிப்பாக அவதானிப்பவர்கள். பிரதம மந்திரி சொன்னதில் உண்மையும் இருந்தது. பொய்யும் இருந்தது. நகல் மசோதா என்ற சொற்றொடரை வைத்து அவர் விளையாடினார். திருச்செல்வம் மாவட்ட சபைகளுக்கான விதிகளைத் தயாரித்ததை அவர் மறுக்கவில்லை. திருச்செல்வம் தயாரித்தது நகல் மசோதாவல்ல. ஆலோசனைகள் மட்டுமே என்பது டட்லியின் நிலைப்பாடு.

பிரதம மந்திரி பொய் சொல்லுகிறார் என்றோ, உண்மையை மறைக்கிறார் என்றோ பத்திரிகையாளர்கள் அவரிடமே சொல்ல முடியாது. அவர் சொன்ன விடயத்தைச் சுற்றித்தான் கேள்விகளைக் கேட்க வேண்டும். அதைத்தான் அன்று பத்திரிகையாளர்கள் செய்தனர். மாவட்ட சபைகள் அமைக்கப்பட்டால் அவை மத்திய அரசின் கட்டுப்பாட்டில் இயங்குமா? என்ற வகையிலேயே கேள்விகள் அமைந்தன. மத்திய அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் அவை இயங்கும் என்றும், மத்திய அரசாங்கத்தின் வழி நடத்தலின்படி அவை தொழிற்படும் எனவும் டட்லி சொன்னார். மாவட்ட சபைகள் நாட்டின் பிரிவினைக்கு வழி வகுக்குமா? என்று ஒரு சிங்களப் பத்திரிகை நிருபர் கேட்டார். டட்லி கொடுத்த பதில் இது: "நாடு பிளவுபட நான் அனுமதிப்பேன் என்று நினைக்கிறீரா?"

அது தான் அடுத்த நாள் வீட்டை எழுதி விட்டு திருச்செல்வத்துக்கு டெலிபோன் செய்தேன். அவர் சொன்ன பதில்: "அரசியல் பொருளாதார நெருக்கடிகளை அரசாங்கம் எதிர்நோக்கியுள்ளது. பொறுமையாக இருக்குமாறு தமிழ் பேசும் மக்களைக் கேட்டுக்கொள்கின்றேன்".

வாலிப முன்னணியினர் டட்லியின் நிலைப்பாட்டையிட்டு ஆத்திரமடைந்தனர். அவர்களை அமைதிப்படுத்தும் பணி அமிர்தலிங்கத்திடம் விடப்பட்டது. சில தினங்களுக்குப் பின் அமிர்தலிங்கத்தைத் தந்தை செல்வாவின் வீட்டில் சந்தித்தேன். அவர் மிகவும் குழம்பிக்



காணப்பட்டார். "இந்த மனுஷனும் எங்களைக் கைவிடப் போகிறார்" என்றார். கைவிடும் படலம் நைசாக விரிந்தது.

அக்டோபர் மாதத்தில் திருகோணமலைத் துறைமுகத்தைத் தேசவுடை மையாக்க அரசாங்கம் தீர்மானித்தது. திருகோணமலைத் துறைமுகத்தில் அதிக தொகை சிங்களவருக்கு வேலை வழங்குவதற்கே இந்த முயற்சி மேற்கொள்ளப் படுவதாகத் தமிழ் மக்கள் சந்தேகித்தனர். இவ்விடயம் சம்பந்தமாக தமிழரசுக் கட்சியினர் பிரதம மந்திரியை அக்டோபர் 28ம் திகதி சந்தித்தனர். தந்தையுடன் நாகநாதனும் அமிர்தலிங்கமும் போனார்கள். திருகோணமலைத் துறைமுகம் தேச்வுடைமையாக்கப்படும் போது அங்கு வேலை செய்யும் தமிழ் பேசும் மக்களின் வேலைக்கு ஆபத்து ஏற்படாது என தேசியவுடைமைச் சேவைகள் அமைச்சர் வி. ஏ. சுகதாச முன்பு கொடுத்திருந்த வாக்குறுதியைத் தந்தை சுட்டிக் காட்டினார். அந்த வாக்குறுதியை டட்லி அலட்சியப்படுத்தினார். திருமலைத் துறைமுகத்தைத் தேசவுடைமையாக்கும் தீர்மானம் எடுக்கப்பட்டு விட்டதாகவும் அதை மாற்ற முடியாது என்றும் சொல்லி விட்டார். அவ் விடயத்தைக் கேட்டதும் நாகநாதனுக்குக் கோபம் வந்து விட்டது. தனது வாக்குறுதிகளை அரசாங்கம் காற்றில் பறக்க விடுவதாகச் சொன்னார்.

இத் தகவல்களை அறிந்த வாலிபர்கள் கோபம் கொண்டனர். அரசாங்கத்திலிருந்து வெளியேறவேண்டும் என்ற கோரிக்கை வலுவடையத் தொடங்கியது. தமிழரசுக் கட்சித் தூதுக் குழு பிரதமரை நவம்பர் 7ல் மீண்டும் சந்தித்தது. முதலில் தந்தை செல்வா டட்லிக்கு எச்சரிக்கை விடுத்தார். தமிழரசுக் கட்சியின் ஒரு பிரிவினர் அரசாங்கத்தின் மீது மிகவும் அதிருப்தி கொண்டிருப்பதாகவும் அரசாங்கத்திலிருந்து விலகும்படி கட்சியை வற்புறுத்துவதாகவும் சொன்னார். குறிப்பாகத் தமிழ் இளைஞர்கள் அரசாங்கத்தின் மீதும் சிங்களத் தலைவர்கள் மீதும் வெறுப்படைந்து வருவதாகவும் அவர்களின் வெறுப்பை அலட்சியப் படுத்துவதோ வளரவிடுவதோ இலங்கையின் வருங்காலத்துக்கு நல்லதல்ல என்றும் அவர் எச்சரிக்கை செய்தார்.

நான்கு விடயங்களில் அரசாங்கம் தமிழர்களின் அக்கறையை உதாசீனப்படுத்துகிறது என்பதை அவர் சுட்டிக் காட்டினார். அந்த நான்கு விடயங்களையும் மூன்று மணித்தியாலயங்களுக்குப் பிரதம மந்திரியுடன் ஆராய்ந்தனர். முதலாவது, திருகோணமலைத் துறைமுகம் பற்றியது. துறை முகத்தில் வேலை செய்வோர்பதவி நீக்கம் செய்யப்பட மாட்டார்கள் என்று பிரதமர் உறுதியளித்தார். இரண்டாவது, தமிழ் மொழி (விசேட வசதிகள்) சட்டத்தை அரசாங்கம் அமுல் செய்யா

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



திருப்பது சம்பந்தமானது. அவ்விதிகளை அமுல் செய்ய உடனடியாக நடவடிக்கை எடுப்பதாக டட்லி வாக்குக் கொடுத்தார். மூன்றாவது காணி இராணுவம் தொடர்புடையது. படித்த, வேலையற்ற இளைஞர் களைக் கொண்ட காணி இராணுவம் ஒன்றை ஆரம்பிக்க அரசாங்கம் சில மாதங்களுக்கு முன் தீர்மானித்தது. அவ் இராணுவத்தில் சேர்க்கப்பட்டோருக்கு அரச காணியும் கடனும் கொடுக்கப்பட்டன. யு. என். பீ. எம். பி. க்களின் சிபாரிசிலேயே ஆட்கள் திரட்டப்பட்டனர். தமிழ் வாலிபர் எவருமே சேர்க்கப்படவில்லை. தமிழரசுக் கட்சி எம், பி. க்களுடன் கலந்தாலோசித்துத் தமிழ் வாலிபர்களையும் சேர்த்துக் கொள்ளப் பிரதமர் இணங்கினார். நான்காவது விடயமான மாவட்ட சபை மசோதாவை வேறொரு தடவை ஆராய்வதாக இணக்கம் காணப்பட்டது. அச் சந்திப்பு நவம்பர் 9ல் நடந்தது. மாவட்ட சபை மசோதாவை 1968 ஜனவரி மாதத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப் பதற்கு பிரதமர் இணங்கினார்.

நவம்பர் 13ல் யாழ்பாணத்தில் கூடிய வாலிபர் முன்னணியின் செயற்குழு டட்லியின் வாக்குறுதிகளில் நம்பிக்கை வைக்க மறுத்தது. 1968 ஜனவரி 30க்கு முன் மாவட்ட சபை மசோதாவைப் பாராளு மன்றத்தில் சமர்ப்பிக்க அரசாங்கம் தவறினால் அரசாங்கத்தில் இருந்து விலக வேண்டும் என்ற தீர்மானத்தை நிறைவேற்றியது.

### திருக்கோணேஸ்வர விவகாரம்

அத் தீர்மானத்தில் அரசாங்கம் செய்யத் தவறிய விடயங்களின் பட்டியல் கொடுக்கப் பட்டிருந்தது. தமிழரசுக் கட்சித் தலைமைப் பீடம் பிரதமருடன் விவாதித்த நான்கு விடயங்களுடன் வேறு இரண்டு விடயங்களும் அத் தீர்மானத்தில் இடம் பெற்றன. அவை:

1. தமிழ்ப் பல்கலைக்கழகத்தை நிறுவாதது.
2. திருக்கோணேஸ்வர ஆலயத்தில் இருந்து இராணுவத்தை அகற்றாதது.

இவை இரண்டும் தமிழ் மக்களின் நீண்ட காலக் கோரிக்கைகள். 1956ம் ஆண்டு முதல் தமிழ்ப் பல்கலைக்கழகக் கோரிக்கை வலுப்பெற்று வந்துள்ளது. அந்த ஆண்டில் தமிழ்க் கல்விமான்களும் புத்தி ஜீவிகளும் ஒன்று சேர்ந்து தமிழ்ப் பல்கலைக்கழக இயக்கத்தை ஆரம்பித்தனர். அவ்வியக்கத்தினர் பணம் திரட்டி திருகோணமலையில் காணி ஒன்றை



வாங்கினர். பல்கலைக் கழகத்தைக் கட்டுவதற்காக அக் காணியில் அத்திவாரம் போட்டனர். அந் நிகழ்ச்சியை நான் தினகரனுக்காக கவர் பண்ணினேன். அவ் வைபவம் தமிழ் மக்களின் உணர்ச்சி பூர்வமான நிகழ்ச்சியாக அமைந்தது. தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் கருவாக வெள்ளவத்தை அலக்சாண்ட்ரா ரோட்டில் கல்லூரி ஒன்றையும் தமிழ்ப் பல்கலைக் கழக இயக்கத்தினர் ஆரம்பித்தனர். தமிழரசுக் கட்சியினர் தமிழ்ப் பல்கலைக் கழக இயக்கத்துக்கு ஆதரவளித்தனர். அதே நேரத் தில் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் இந்துப் பல்கலைக் கழக கோஷத்தை ஆரம்பித்தது. இந்துப் பல்கலைக் கழகம் யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட வேண்டும் என்று அவர்கள் கோரிக்கை விடுத்தனர். திருகோணமலையில் தமிழ்ப் பல்கலைக்கழக மொன்றை ஆரம்பிப்பதில் யு. என். பி. யும், எஸ். எல். எவ், பி. யும் அக்கறை காட்ட வில்லை.

திருக்கோணேஸ்வர ஆலயத்திற்கு அருகாமையில் உள்ள இராணுவ முகாம் அகற்றப்பட வேண்டும் என்பதும் தமிழ் மக்களின் நீண்ட நாளைய கோரிக்கை. 1961ம் ஆண்டில்தான் பிரெட்டிக் கோட்டைக்குள் இராணுவ முகாம் அமைக்கப்பட்டது. அன்றிலிருந்தே இராணுவ முகாமை அகற்ற வேண்டும் என்ற கோரிக்கையை இந்துக்கள் வலியுறுத்தி வருகின்றனர். அதற்கு அவர்கள் கொடுக்கும் காரணங்கள் இரண்டு. இராணுவத்தினர் பாடல் பெற்ற திருத்தலமான திருக்கோணேஸ்வரத்தை அசுத்தப்படுத்துகின்றனர் என்பது முதலாவது. பக்தர்கள் கோவிலுக்குப் போய் வருவது தடைப்படுகிறது என்பது மற்றது. அதே நேரத்தில் அநுராதபுரத்திலும் கண்டியிலுமுள்ள பௌத்த கோவில்கள் புனித தலங்களாக்கப்பட்டதைப் போன்று திருக்கோணேஸ் வரமும் திருக்கேதீஸ்வரமும் புனித தலங்களாக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையையும் இந்துக்கள் முன் வைத்தனர்.

நவம்பர் 15ல் தமிழரசுக் கட்சியின் பொதுச் சபை கூட்டப்பட்டது. வாலிப முன்னணியின் தீர்மானத்தை பொதுச் செயலாளர் என்ற முறை யில் பொதுச் சபை முன் அமிர்தலிங்கம் சமர்ப்பித்தார். வாலிப முன்னணியின் தீர்மானத்திற்கமைய ஜனவரி 30க்குள் தமிழ் மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்றாவிடின் அரசாங்கத்திலிருந்து விலக வேண்டும் என்று கோரும் தீர்மானத்தை வி. நவரத்தினம் பிரேரித்தார். ராஜதுரையும் எஸ். எம். மாணிக்கராசாவும் வழிமொழிந்தனர். தந்தை செல்வா அதற்குத் திருத்தப் பிரேரணை கொண்டு வந்தார். 1968 ஜனவரி 30க்குள் பிரதமருக்கும் தமிழரசுக் கட்சிக்குமிடையே 1965 மார்ச்சில் செய்யப்பட்ட உடன்படிக்கையை அமுல் செய்யும்படி அரசாங்கத்தை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அத் திருத்தம் கோரியது. அமிர்தலிங்கம் வழிமொழிந்தார். திருத்தப் பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

உடன்படிக்கை அமுல் செய்யப்படாவிடின் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை பற்றி ஆராய்வதற்கு 1968 ஜனவரி 31ல் பொதுச் சபை கூட வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது. இத் தீர்மானம் பற்றிய செய்தி பத்திரிகைகளில் வெளியானதும் டட்லி கலங்கினார். தந்தைக்கு டெலிபோன் செய்து தன்னை வந்து சந்திக்கும்படி கோரினார். அச் சந்திப்பின் போது, நான் என் கடமையைச் செய்வேன். நீங்கள் கொஞ்சும் பொறுமையாக இருங்கள் என்று டட்லி சொன்னார். "நான் பொறுமையாக இருக்கத் தயாராக இருக்கிறேன். ஆனால், இளைஞர்கள் பொறுமையாக இருக்கத் தயாராக இல்லை. நீங்கள் எங்களைக் கைவிட்டு விடுவீர்கள் என்று அவர்கள் சொல்லுகின்றார்கள். என்னை அவர்கள் மதிக்கின்ற படியினால் நான் அவர்களைச் சாந்தப்படுத்தி வைத்திருக்கிறேன். என்னை நீங்கள் ஏமாற்றுகிறீர்கள் என்று அவர்கள் எண்ணத் தொடங்கினால் அவர்களின் கண்களில் நான் ஒரு முட்டாளாகத் தோற்றுவேன். அதன் பின்பு அவர்கள் என்னை மதிக்கமாட்டார்கள். தமிழ் வாலிபர்கள் மீது நான் கொண்டுள்ள செல்வாக்கைக் காப்பாற்றச் சிங்களத் தலைவர்கள் தவறுவார்களானால் சிங்களத் தலைவர்கள்தான் கஷ்டத்துக்கு உள்ளாவார்கள் என்று விளக்கினார் தந்தை. டட்லிக்கு விஷயம் புரிந்து விட்டது. எனக்கு விளங்குகிறது என்றார். பின்பு நீண்ட நேரம் மௌனமாக இருந்தார். பின்பு சொன்னார்: தமிழ் வாலிபர்கள் மீது நீங்கள் கொண்டுள்ள செல்வாக்கை இழந்தீர்களானால் சிங்கள மக்கள் கஷ்டப்படுவார்கள் என்று நீங்கள் சொன்னது முற்றிலும் உண்மை. எனக்கு கொஞ்சம் அவகாசம் தாருங்கள். தந்தை இணங்கினார்.

இளைஞர்களைச் சமாதானப்படுத்தும் பணி அமிர்தலிங்கத்துக்குச் கொடுக்கப்பட்டது. அமிர்தலிங்கம் வாலிபர்களைச் சிறு சிறு குழுக்களாகச் சந்தித்தார். பிரதம மந்திரிக்கு அவகாசம் கொடுக்க வேண்டிய அத்தியாவசியத்தை விளக்கினார். திட்டமிட்டபடி பொதுச் சபை 1968 ஜனவரி 31ல் கூடியது. அரசியல் நிலை பற்றி அமிர்தலிங்கம் நீண்ட உரையொன்றை ஆற்றினார். அதன் முடிவில் நிலைமையைக் கவனிப்பதற்காக மார்ச் 12ல் பொதுச் சபை மீண்டும் கூட வேண்டும் எனப் பிரேரித்தார். இராஜதுரையும் நவரத்தினமும் அதை ஆட்சேபித்தனர். தங்களின் பிரேரணையை ஆராய விடாது தடுப்பதாக அமிர்தலிங்கத்தைச் சாடினார் இராஜதுரை, "கார்ட்போர்ட் ஹிட்லர்" என்று அமிர்தலிங்கத்தை வர்ணித்தார் அவர். வாலிபர் சிலர்



தமிழரசுத் தலைவர்களுக்கு எதிராகக் கூட்டம் நடந்த கட்டடத்துக்கு வெளியே கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

வாலிபர்களின் நெருக்குதல் டட்லிக்கு உந்து கோலாக அமைந்தது. மாவட்ட சபை மசோதாவை தேசிய அரசாங்கத்தில் அங்கம் வகித்த கட்சிகளின் தலைவர்களைக் கொண்ட கூட்டத்தில் அவர் சமர்ப்பித்தார். பெப்ரவரி, மார்ச் மாதங்களில் மசோதாவை அவர்கள் ஆராய்ந்தனர். ஏப்ரல் 22ல் மசோதா மந்திரி சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டது. அமைச்சர்கள் அம் மசோதாவை ஒவ்வொரு பிரிவாக மூன்று வாரங்கள் ஆராய்ந்தனர். அதன் பின்பு யு. என். பி. யின் செயற்குழுவும் பாராளுமன்றக் குழுவும் மே 21ல் கூடின. நீங்கள் உங்கள் கருத்துக்களையும் கண்டனங்களையும் கூறலாம். அவற்றை ஆராய்ந்த பின்பு அரசாங்கம் மசோதாவைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கும் என்று டட்லி அக் கூட்டத்தில் சொன்னார்.

மே 22ல் தமிழரசுக் கட்சித் தலைவர்கள் பிரதமரைச் சந்தித்தனர். பாராளுமன்றக் கூட்டத்தொடர் கலைக்கப்படுவதற்கு முன்பு மசோதாவைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு வற்புறுத்தினர். அதைச் செய்ய முடியாத நிலையில் தான் இருப்பதாகக் கூறிய பிரதமர் இராஜினாமாச் செய்ய முன் வந்தார். நீங்கள் இராஜினாமாச் செய்வதால் எங்களுக்கு எவ்வித நன்மையும் ஏற்படாது என்றார் தந்தை. மாவட்ட சபை சம்பந்தமான வெள்ளை அறிக்கை ஒன்றைப் பாராளுமன்றத்தில் விரைவில் சமர்ப்பிப்பதாக டட்லி கூறினார்.

மாவட்ட சபை வெள்ளை அறிக்கைக்கு எதிரான பிரசாரத்தை எதிர்க் கட்சியினர் முடுக்கிவிட்டனர். டட்லியைப் பயமுறுத்தி வெள்ளை அறிக்கையைக் கைவிடச் செய்வதே எதிர்க் கட்சியின்அரசியல் தந்திரமாக இருந்தது. வெள்ளை அறிக்கையைச் சமர்ப்பிக்காமல் செய்து விட்டால் தமிழரசுக் கட்சி அரசாங்கத்தை விட்டு வெளியேறி விடும் என்பது எல்லோருக்கும் தெரிந்த விடயம். ஜூன் 7இல் பிரதம மந்திரி வெள்ளை அறிக்கையைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார். கேள்வி நேரம் முடிந்ததும் அவர் அதைச் செய்தார். பிரதமர் வெள்ளை அறிக்கையைச் சமர்ப்பித்ததும் எதிர்க் கட்சித் தலைவி ஸ்ரீமாவோவின் தலைமையில் எதிர்க் கட்சியினர் சபையிலிருந்து வெளி நடப்புச் செய்தனர். ஆர். ஜி. சேனநாயக்கா அப்போது சுதந்திரக் கட்சி உறுப்பினராக இருந்தார். அவர் வெளியே போகவில்லை. வெளி நடப்புச் செய்த எதிர்க் கட்சியினர் ஹைட் பார்க்கில் பொதுக் கூட்டம் ஒன்றை நடத்தினர். வெள்ளை அறிக்கையின் பல பிரதிகளைத் தீயிட்டனர். மகா சங்கத்தினர் நகர மண்டபத்தில் வேறொரு எதிர்ப்புக் கூட்டத்தை நடத்தினர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தமிழரசுக் கட்சியின் செயற்குழு வெள்ளை அறிக்கையை ஆராய்ந்தது. அதில் இருந்த உறுப்புக்கள் எவருக்கும் திருப்தியளிக்கவில்லை. இதற்குத்தானா அரசாங்கத்தில் ஒட்டிக் கொண்டிருக்கிறீர்கள்? என்று இராஜதுரை கண்டித்தார். மாவட்ட சபையின் பெயரில் ஒரு முனிசிப்பல் சபையைக் கொடுக்கிறார்கள் என்று நவரத்தினம் கண்டித்தார். வாலிபர்களைச் சமாளிப்பது தந்தைக்கே பெரும் கஷ்டமாக இருந்தது.

அந்தக் கட்டத்தில் தினகரன் வாரமஞ்சரிக்காக தந்தையைப் பேட்டி கண்டேன்.

கேள்வி: வாலிப முன்னணியினர் கூறும் கண்டனங்கள் பற்றி என்ன கூறுகிறீர்கள்?

தந்தை: நானும் வாலிபனாக இருந்திருந்தால் அவர்கள் சொல்வதைத்தான் சொல்லியிருப்பேன்.

ஜுன் 30ல் தந்தை டட்லியைச் சந்தித்தார். சந்திப்பு முடிந்ததும் பத்திரிகையாளர்கள் தந்தையை மொய்த்தனர். பத்திரிகையாளர்கள் தந்தையை மொய்ப்பதற்கு முக்கிய காரணம் அவர் நடந்ததை ஒளிக்காமல் சொல்லுவார். அன்று அவர் சொன்னது இது: "ஒரு வெளிப்படையான சந்திப்பு அது. நாங்கள் எதிர்நோக்கும் கஷ்டங்களை டட்லிக்குச் சொன்னேன். எமக்கு எதிராக வாலிபர்கள் புரட்சி செய்யும் நிலை தோன்றியிருப்பதைக் கூறினேன். நான் வாலிபனாக இருந்திருப்பின் அவர்களைப் போன்றே நானும் நடந்திருப்பேன் என்று சொன்னேன்". அரசாங்கத்தில் தமிழ் வாலிபர்கள் அதிருப்தியடைந்திருப்பது நியாயமானது என்றும், சொன்னேன். நாங்கள் பண்டாரநாயக்காவினால் கைவிடப்பட்டோம். திருமதி பண்டாரநாயக்காவால் கைவிடப்பட்டோம். இப்பொழுது உங்களால் கைவிடப்படுகிறோம் என்று சொன்னேன்.

டட்லியின் பதில் என்ன என்று பத்திரிகையாளர்கள் கேட்டனர். நான் இதைச் சொன்னதும் டட்லி மிகவும் கவலையடைந்தார். தமிழ் வாலிபர்களின் உணர்ச்சியைத் தன்னால் புரிந்து கொள்ள முடிகிறது என்றார். மாவட்ட சபை மசோதாவால் தானும் பலத்த எதிர்ப்பைச் சம்பாதித்துள்ளதாகக் கூறினார். டட்லியின் பிரச்சினைகளை என்னால் உணர முடிகிறது என்று பதிலளித்தார் தந்தை. இந்தத் தகவல்களை எல்லாம் ஒளிவு மறைவு இன்றிச் சொல்லி விட்டு, இவ்வளவு விபரமாகச் செய்தியை எழுதாதீர்கள். எழுதினால் டட்லிக்கு நெருக்கடி அதிகரிக்கும்.



**வெளியேற்றம்**

பத்திரிகையாளர்கள் தந்தையின் சொல்லுக்கு மதிப்பு அளிப்பது வழக்கம். டட்லி சொன்னதாக அவர் சொன்னதைப் பிரசுரிப்பதில்லை எனவும் டட்லிக்கு அவர் சொன்னதைப் பிரசுரிப்பதென்றும் எல்லோரும் இணக்கத்துக்கு வந்தோம். அந்தச் சந்திப்பின் போது இரண்டு வாக்குறுதிகளை டட்லியிடமிருந்து தந்தை பெற்றார். முதலாவது, சிங்களம் படிக்க முயற்சி எடுத்த தமிழ் அரசாங்க ஊழியர்களுக்குச் சேவை நீடிப்பு கொடுப்பது பற்றியது. அதனால், பல தமிழ் அரசாங்க ஊழியர்கள் பதவி இழக்காது தப்பினர். இரண்டாவது தமிழ்ப் பல்கலைக்கழகம் ஒன்றை நிறுவுவதற்கான இணக்கம்.

பாராளுமன்றக் கூட்டத் தொடர் ஜுன் பிற்பகுதியில் கலைக்கப்பட்டது. ஜுலை 18ல் கவர்னர் ஜெனரல் வில்லியம் கொபல்லாவ அதைத் திறந்து வைத்து சிம்மாசனப் பிரசங்கத்தை நிகழ்த்தினார். அவ்வுரையில் இருந்த மாவட்ட சபைகள் பற்றிய குறிப்பு இது: மத்திய அரசாங்கத்தின் வழி காட்டலின் படியும், கட்டுப் பாட்டிற்குள்ளும் செயற்படும் மாவட்ட சபைகளை அமைப்பது பற்றிய வெள்ளை அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. அவ்வறிக்கை மீதான விவாதத்தின் போது தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் மாவட்ட சபை மசோதா சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்பு கவனத்தில் கொள்ளப் படும்.

ஜுலை 19ல் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்றக் குழுவும், செயற்குழுவும் வெவ்வேறாகக் கூடின. அரசாங்கத்தில் இருந்து வெளியேறும்படி வாலிபர்கள் மட்டுமல்ல சிரேஷ்ட உறுப்பினரும் பலத்த குரல் எழுப்பினர். அரசாங்கத்தில் இருந்து விலகுவதை தந்தை கடுமையாக எதிர்த்தார். அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கு எதிர்க்கட்சியினர் மாவட்ட சபைகளை ஓர் ஆயுதமாக உபயோகிக்கின்றனர். அவர்கள் தங்கள் நோக்கத்தை அடைவதற்கு நாங்கள் உதவப்போகிறோமா என்று தந்தை கேட்டார். பிரதமருடன் மேலும் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு செயற்குழு தந்தைக்கு அதிகாரமளித்தது.

சிம்மாசனப் பிரசங்கத்துக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணை ஆகஸ்ட் 10ம் திகதி பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டது. அதில் உரையாற்றிய அமிர்தலிங்கம் அரசாங்கத்துக்கும் பிரதம மந்திரிக்கும் தமிழரசுக் கட்சியின் ஆதரவு தொடரும் என்று அறிவித்தார். கட்சியின் இந்த முடிவு வாலிபர்களைச் சினம் கொள்ளச் செய்தது. டட்லி சேனநாயக்காவும் தங்களைக் கைவிடப் போகிறார் என்பதை அவர்கள் பகிரங்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கமாகவே கூறினர். வாலிப முன்னணியினர் யாழ்ப்பாணத்தில் அவசர கூட்டமொன்றை நடத்தினர். அதில் மூன்று தீர்மானங்களை அவர்கள் நிறைவேற்றினர். அவை:

- ★ தமிழரசுக் கட்சியின் அடுத்த வருடாந்த மகாநாட்டில் தனி நாட்டுக் கோரிக்கையை முன்வைப்பது.
- ★ தமிழ் மொழி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தை அமுல் செய் டி கோருதல்.
- ★ திருச்செல்வம் வேறொரு காரணத்துக்காக செப்டம்பர் 16இல் அமைச்சர வையிலிருந்து விலகினார். பிரபல இந்துக்கள் சிலர் திருக்கேதீஸ்வரத்தை புனித பூமியாகப் பிரகடனம் செய்யுமாறு கோரி பிரதம மந்திரிக்கு மகஜர் ஒன்றை அனுப்பினர். பிரதமர் அதை திருச்செல்வத்திடம் கொடுத்து நடவடிக்கை எடுக்கும்படி கூறினார். அதைப் பற்றி ஆராய்வதற்காக திருச்செல்வம் 3 உறுப்பினர் குழுவொன்றை நியமித்தார். அக்குழு ஆகஸ்ட் 27ஆம் திகதிக்கு முன்பு பொதுமக்களிடமிருந்து கருத்துக்களைக் கோரியது.

அக்குழுவின் நியமனத்தை ஆட்சேபித்து திருமலை கோட்டைக்குள்ளேயுள்ள பௌத்த விகாரையின் பிக்கு ஸ்ரீ சுமதேங்கார நாயக்க தேரர் பிரதமருக்கு கடிதம் ஒன்றை அனுப்பினார். அவ்விசார ணையை உடனடியாகக் கைவிடுமாறு பிரதமர் உத்தரவிட்டார். அவ்வுத்தரவைக் கண்டதும் திருச்செல்வத்துக்குக் கடும் கோவம் ஏற்பட்டது. தன்னுடைய விடயத்தில் தன்னைக் கலந்தாலோசிக்காமல் பிரதமர் உத்தர விட்டதை ஆட்சேபித்து திருச்செல்வம் தந்தை செல்வாவுக்குக் கடிதம் எழுதினார். தந்தை செல்வா திருச்செல்வத் தையும் அழைத்துக்கொண்டு செப்டம்பர் 13இல் பிரதமரைப் போய்ப் பார்த்தார். நீங்கள் எனக்குச் சொல்லிவிட்டுத்தான் விசாரணைக் குழுவை நியமித்திருக்கவேண்டும் என்று பிரதமர் சொன்னார். அதையடுத்து இருவருக்கும் கடும் வாக்குவாதம் ஏற்பட்டது. தமிழரசுக் கட்சியின் பொதுச் சபை அடுத்த நாள் கூடி அமைச்சரவையிலிருந்து விலகதிருச்செல்வத்துக்கு அங்கீகார மளித்தது. அடுத்த வாரம் கூட்டணி அரசாங்கத்திலிருந்து விலகி எதிர்க்கட்சிக்குப் போய்த் தனியாக இயங்க ஆரம்பித்தது. ஆனால் அவர்கள் அரசாங்கத்துடன் சேர்ந்து வாக்களித்தனர். இப்போக்கு தமிழ் வாலிபர்களை ஆத்திரமடையச்



செய்தது. கூட்டணிமீது தமிழ் வாலிபர்கள் கொண்டுள்ள அதிருப்திகளை வளர்ப்பதற்கு எதிர்க் கட்சியினர் திட்ட மிட்டனர். தமிழ் மக்கள் தங்கள் எதிரியாகக் கருதிய கல்வி அமைச்சர் ஈரியகொல்லைக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணையொன்றைப் அவர்கள் பிரேரித்தனர். கூட்டணியினர் ஈரியகொல்லையை ஆதரித்து வாக்களித்தனர். அரசாங்கத்துடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின்படி தாங்கள் செயற்படுவதாக தந்தை செல்வா கூறினார். அந்த ஒப்பந்தத் தின் மூலம் தமிழ் மக்களுக்கு கிடைக்கவுள்ள நன்மைகளைப் பெறுவதற்காகவே தாங்கள் அரசாங்கத்துடன் சேர்ந்து வாக்களித்ததாக அமிர்தலிங்கம் கூறினார்.

அரசாங்கத்திடமிருந்து கூட்டணியினால் எதையுமே பெறமுடிய வில்லை. இதை உடுவிலில் ஏப்பிரல் 7-9 திகதிகளில் நடந்த தமிழரசுக் கட்சியின் பதினொராவது மகாநாட்டில் தந்தை செல்வா ஒப்புக் கொண் டார். சிங்களக் கட்சிகளுக்கு அரசாங்கம் அமைக்க ஆதரவளிப்பதன் மூலம் தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கு எடுக்கப் பட்ட முயற்சிகள் தோல்வி கண்டு விட்ட ன என்பதை தந்தை செல்வா ஒப்புக் கொண்டார். ஆட்சி அமைப்பதற்கு உதவி பெறுவார்கள். ஆட்சி அமைத்ததும் உதறி விடுவார்கள் என்றார் தந்தை.

உடுவில் மகாநாட்டில் மூன்று தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன. முதலாவது தீர்மானம் அரசாங்கத்தில் தொடர்ந்திருப்பது தமிழருக்கு நன்மை பயக்காது என்றும் அதனால் அரசாங்கத்திலிருந்து விலகி தனிக் குழுவாகச் செயற்படுமாறும் கட்சி பாராளுமன்றக் குழுவைப் பணித்தது. இரண்டாவது தீர்மானம் உரிமைப் போராட்டத் துக்குத் தயாராகுமாறு தமிழ் மக்களைக் கேட்டுக் கொண்டது. மூன்றா வது தீர்மானம் அரசாங்கத்துடன் ஒத்துழைத்த நாலு வருட அனுபவம் ஒற்றையாட்சி முறையின் கீழ் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணமுடியாது என்பதை தெளிவாக்கியுள்ளதாகவும் சமஷ்டி ஆட்சி முறையையே தமிழர் கோரவேண்டும் என்றும் கூறியது.

உடுவில் மகாநாட்டில் தனி நாடு கோரும் பிரேரணையைக் பிரேரிக்க வாலிபர்கள் எடுத்த முயற்சியை தந்தை செல்வா தடுத்து நிறுத்தி விட்டார். அது பற்றி தந்தை செல்வாவிடம் செய்தியாளர் கேட்டனர். தனி நாட்டுக் கோரிக்கையை நாங்கள் நிராகரிக்கவில்லை. அவசரப்படாதீர்கள். பொறுத்திருங்கள். சமஷ்டி பாதைக்கு சிங்களத் தலைவர்களை திருப்ப அவகாசம் தாருங்கள் என்று மட்டுமே கூறினோம் என்றார் தந்தை. சிங்களத் தலைவர்களை சமஷ்டிப் பாதைக்குத் திருப்பும் முயற்சி தோல்வியடைந்தால்? வாலிபர்கள் வெற்றிபெறுவார்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கள்,என்று தீர்க்கதரிசனமாகக் கூறிய தந்தை, எங்களைப் போன்ற வயோதிபர் தோல்வி கண்டால் வாலிபர்கள் வெற்றி காண்பர். அப்பொழுது சிங்கள மக்களை வேண்டுமென்று தவறான வழியில் இட்டுச் சென்ற சிங்களத் தலைவர்கள் பதில் சொல்ல வேண்டி வரும். சிங்களத் தலைவர்கள் தமது செயல்களின் விளைவுகளை அனுபவிக்காவிடினும் அவர்களைத் தெரிவு செய்த பாவத்துக்காக சிங்கள மக்கள் துன்பப்பட நேரிடும் என்று விளக்கமளித்தார்.

உடுவில் மகாநாட்டைத் தொடர்ந்து கொழும்பு பத்திரிகைகள் தமிழரசுக் கட்சிக்குச் சேறு வீசும் பணியை ஆரம்பித்தன. தமிழரசுக் கட்சியை தி. மு. க. வின் ஏஜன்ட் எனக் காட்ட ஒரு பத்திரிகை முயன்றது. ம. பொ. சி.யை பிரதம விருந்தினராக அழைத்ததையும் மேடையில் அறிஞர் அண்ணாவின் படத்தைத் தொங்க விட்டதையும் தனது குற்றச் சாட்டுக்குக் காரணிகளாக அப் பத்திரிகை கொடுத்தது. டைம்ஸ் ஒப் சிலோன் நிருபர் அமிர்தலிங்கத்திடம் இவ் விடயம் பற்றிப் பேட்டி கண்டார். ம. பொ. சி. யார் சிறந்த தமிழ் அறிஞர். கவர்ச்சி மிக்க பேச்சாளார். அவரை அறிஞராகவும் பேச்சாளராகவும்தான் அழைத்தோம் தமிழரசுக் கட்சித் தலைவர் என்ற முறையிலல்ல என்றார் அமிர்தலிங்கம். அண்ணாவின் படத்தை மேடையில் தொங்க விட்டது பற்றிக் கேட்ட போது, மகாத்மா காந்தியின் படத்தை நீங்கள் காணவில்லையா? என்று கேட்டார். புத்த பிரானினதும் இயேசு நாதரினதும் படங்களையும் தொங்க விட்டிருந்தோமே அதையும் பார்க்கவில்லையா? என்றும் கேட்டார்.

தமிழரசுக் கட்சியின் நோக்கங்களையும் இலட்சியங்களையும் சிங்கள மக்களிடையே திரித்துக் கூறுவதற்கு முயற்சி எடுக்கப்படுகிறது. தமிழ் மக்களின் வருங் காலத்தில் அக்கறை கொண்டுள்ளதைப் போன்றே இலங்கையின் வருங் காலத்திலும் தமிழரசுக் கட்சி அக்கறை கொண்டுள்ளது. ஒன்றை மட்டும் சிங்கள மக்கள் தெளிவாகத் தெரிந்து கொள்ள வேண்டும். இரண்டாம் தரப் பிரஜைகளாக வாழ்வதிலும் பார்க்க நாட்டுக்கு வெளியேயுள்ள எவருடன் சேர்ந்தாவது தமது சமத்துவத்தைப் பாதுகாப்பதற்காகப் போராடத் தமிழர்கள் தயங்க மாட்டார்கள். அமிர்தலிங்கத்தின் இந்தக் கூற்று சிங்களத் தலைவர்களுக்கு ஆத்திர மூட்டியது.



**வாலிபரை ஆத்திரமூட்டிய பொலிஸ்**

தேசிய அரசாங்கத்தில் இருந்து தமிழரசுக் கட்சி வெளியேறிய இரண்டு வாரங்களில் அச்சுவேலி. கரவெட்டி, அல்வாய், ஆகிய மூன்று கிராமங்களில் இயங்கி வந்த மூன்று தனியார் பாடசாலைகளைக் கையேற்று சிங்கள பௌத்த பாடசாலைகள் ஆக்குவதற்கு ஈரியகொல்ல நடவடிக்கை எடுத்தார். அந்த மூன்று பாடசாலைகளையும் அரிசன மக்களுக்காக அங்குள்ள மக்கள் ஆரம்பித்தனர். அம் மக்களில் சிலர் பௌத்த மதத்தைத் தழுவியதோடு பௌத்த திராவிட சங்கம் என்ற அமைப்பையும் உருவாக்கினர். அச் சங்கத்தின் தலைவராக ஏ. ஆர். டேவிட் கடமையாற்றினார். டேவிட்டின் வேண்டுகோளுக்கிணங்கவே அம் மூன்று பாடசாலைகளையும் கையேற்க கல்வியமைச்சு முடிவு செய்தது.

அதையிட்டு தமிழ் மக்கள் கொதித்தெழுந்தனர். ஈரியகொல்லவின் திட்டத்தை முறியடிப்பதற்குத் தமிழரசுக் கட்சிக்கு தமிழ்க் காங்கிரஸ் ஆதரவளித்தது. தந்தை செல்வா தமிழ் மக்களின் எதிர்ப்பை விளக்கி அறிக்கையொன்றை விடுத்தார். அந்த மூன்று பாடசாலைகளையும் அரசு பொறுப்பேற்பதைத் தாங்கள் எதிர்க்கவில்லை என்பதைத் தெளிவு படுத்தினார். அப் பாடசாலைகளைச் சிங்கள, பௌத்த பாடசாலைகளாக மாற்றுவதையே எதிர்ப்பதாகச் சொன்னார். "தமிழ் மக்களின் வருங்காலம் இங்கு கேள்விக்குறியாக்கப்படுகின்றது. தமிழ் பேசும் மக்கள் இந்த நாட்டில் தமிழ் பேசும் மக்களாக வாழ முடியுமா? அவர்கள் சிங்களம் பேசும் மக்களாக மாற்றப்படப் போகிறார்களா?" என்று அந்த அறிக்கையில் கேட்டார்.

தமிழரசுக் கட்சியின் பொதுச் சபை மே 9இல் கூடி ஈரியகொல்லவின் முயற்சியை முறியடிக்க முடிவு செய்தது. சிங்களம் மட்டும் சட்டம் நிறைவேற்றப்பட்ட ஜுன் 5இல் தமிழ் இயக்கத்தை ஆரம்பிக்க முடிவு செய்தது. தமிழ் மொழி (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டம் அமுல் செய்யப்படும் வரை தமிழ் இயக்கத்தைத் தொடருவது எனவும் தீர்மானிக்கப்பட்டது. ஈரியகொல்ல தமிழரசுக் கட்சியின் ஜுன் 5 தமிழ் இயக்கத்தையும் சத்தியாக்கிரகத்தையும் முறியடிக்கத் திட்டமிட்டார். மூன்று பாடசாலைகளையும் ஜுன் 1 ஆம் திகதி கையேற்கப் போவதாகவும் அதற்காகத் தான் யாழ்ப்பாணம் போகப் போவதாகவும் அவர் அறிவித்தார்.

தமிழரசுக் கட்சியின் வாலிப முன்னணி இதை ஒரு சவாலாகக் கருதியது. ஈரியகொல்லவின் விஜயத்தைப் பகிஷ்கரிப்பதற்கு முடிவு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



செய்தது. ஈரியகொல்ல செல்லும் வழியெல்லாம் சத்தியாக்கிரகம் செய்வதற்காக தொண்டர்களைத் திரட்ட ஆரம்பித்தது. அரசாங்கமும் சும்மா இருக்கவில்லை. பொலிஸார் உசார் படுத்தப்பட்டனர். மூன்று பாடசாலைகளுக்கும் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டது. உருவாகி வரும் நெருக்கடியைத் தவிர்க்க தந்தை விரும்பினார். பிரதம மந்திரியை மே 20ல் சந்தித்தார். தந்தையுடன் நாகநாதன், அமிர்தலிங்கம், துரைரத்தினம், கதிர்வேலுப்பிள்ளை, திருச்செல்வம் ஆகியோர் சென்றனர்.

பாடசாலைகளை அரசு பொறுப்பேற்பதை தமிழரசுக் கட்சி எதிர்க்க வில்லை என்றும் போதனா மொழியைச் சிங்களமாக மாற்றுவதையே எதிர்ப்பதாகவும் தூதுக் கோஷ்டியினர் டட்லி சேனநாயக்காவுக்கு எடுத்துரைத்தனர். போதனா மொழி மாற்றப்படமாட்டாது என்ற அறிக்கையை அரசாங்கம் வெளியிட்டால் நெருக்கடி தணிந்து விடும் என்பதை தந்தை எடுத்துக் கூறினார். அப்படிச் செய்வதற்கு டட்லி சேனநாயக்கா இணங்கினார். போதனா மொழி மாற்றப்படமாட்டாது என்ற அறிக்கையை அரசாங்கம் மே 23இல் வெளியிட்டது. அவ் அறிக்கையை வரவேற்று கட்சிச் செயலாளர் அமிர்தலிங்கம் இந்த அறிக்கையை வெளியிட்டார்: "தமிழ்க் குழந்தைகளுக்காக ஆரம்பிக்கப்பட்ட மூன்று பாடசாலைகளையும் சிங்கள போதனா மொழிப் பாடசாலைகளாக்குவதற்குக் கல்வி அமைச்சு முன்பு எடுத்த முடிவை மாற்றும் அரசாங்கத்தின் தீர்மானத்தை எமது கட்சி வரவேற்கிறது".

ஈரியகொல்லவும் விடாக்கண்டர். தோல்வியை ஒப்புக் கொள்ள மறுப்பவர். அப்பாடசாலைகளில்கற்ற மாணவர்களின் பெற்றோரின் கையொப்பங்களைக் கொண்ட மனுவொன்றைத் தயாரிக்கச் செய்தார். சிங்களப் பாடசாலைகளாக மாற்றுமாறு அம் மனுக் கோரியது. பிரதமரிடம் அம் மனுவைக் கொடுத்த ஈரியகொல்ல அரசாங்கத்தின் அறிக்கையை வாபஸ் பெற வேண்டும் என வற்புறுத்தினார். டட்லி சேனநாயக்கா அதற்கு இணங்க மறுத்து விட்டார்.

வாலிப முன்னணி எதிர்ப்பு ஊர்வலம் ஒன்றை ஒழுங்கு செய்தது. அதைப் பொலிஸார் தடை செய்தனர். தடையை மீறப் போவதாக வாலிப முன்னணி அறிவித்தது. பொலிஸுக்கு உதவுவதற்கு கடற்படை அழைக்கப்பட்டது. தமிழ் வாலிபரும் பொலிஸாரும் நேருக்கு நேர் நின்ற முதலாவது சந்தர்ப்பம் இது. டட்லி சேனநாயக்கா அரசாங்கம் தன் பதவிக்கால முடிவில் தேர்தலை அறிவித்தது. 1970 மே 27இல் வாக்களிப்பு என அறிவித்தது.

# 10

# அடிமைச் சாசனம்

### 1970 தேர்தல்

டட்லி அரசாங்கம் தன் பதவிக் கால முடிவில் தேர்தலை அறிவித்தது. 1970 மே 27ல் வாக்களிப்பு என அறிவித்தது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி கம்யூனிஸ்ட் கட்சி, ஆகியவற்றின் கூட்டான ஐக்கிய முன்னணி பல வாக்குறுதிகளை மக்கள் முன் வைத்தது. ஐக்கிய முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் இடம் பெற்ற முக்கிய வாக்குறுதிகள்: ஆளுக்கு இரண்டு கொத்து அரிசி (முன்பு இரண்டு கொத்து அரிசி தான் கொடுக்கப்பட்டது. ஆனால், அரிசி பற்றாக்குறை காரணமாக 1966ல் டட்லி அரசாங்கம் அதை ஒரு கொத்தாகக் குறைத்தது), தேசியமய நடவடிக்கைகளைத் தொடருதல், பௌத்தத்துக்கு முதலிடம் கொடுத்தல், 1964ம் ஆண்டின் இலங்கை இந்திய ஒப்பந்தத்தைப் பூரணமாக அமுல் செய்தல், புதிய அரசியல் அமைப்புச் சட்டத்தை உருவாக்குதல்.

ஐக்கிய முன்னணி தனது பிரசாரத்தில் அரசியல் சட்டச் சீர்திருத்தத்துக்கு முக்கியத்துவம் அளிக்கவில்லை. ஆனால், தமிழரசுக் கட்சியினர் அரசியல் சட்டச் சீர்திருத்தத்தையே தமது பிரதான பிரசார விடயமாகக் கொண்டனர். 1970 ஏப்ரல் 4இல் வெளியிடப்பட்ட தமிழரசுக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் சுதந்திரம் பெற்ற காலம் முதல் தமிழ் பேசும் மக்கள் சமஷ்டி ஆட்சி முறையைக் கோரி வந்துள்ளனர் என்பது சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தேர்தல் விஞ்ஞாபனம் இவ்வாறு கூறியது:

> இலங்கையின் இன்றைய அரசியல் சட்டம் தமிழ் மக்கள் இரண்டாம் தரப் பிரஜைகள் ஆக்கப்படுவதற்கு வழி வகுத்தது. அதன் மூலம் அவர்களின் தனித்துவத்தையும் அடையாளத்தையும் அழிக்க முயலுகிறது. தங்களின் அலுவல்களைத் தாங்களே செய்வதற்கும் அழிவுகளில் இருந்து தமது இனத்தைப் பாதுகாப்பதற்கும் சமஷ்டி அமைப்பு அத்தியாவசியம் என்றும் அப்பொழுதுதான் இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்கள் கௌவரத்துடனும் சிங்கள மக்களுடன் சமத்துவமாக வாழும் பிறப்புரிமை யுடனும் வாழ முடியும் என்றும் தமிழரசுக் கட்சி நம்புகிறது.

சமஷ்டி இலட்சியத்தை அடைவதற்கு நடத்திய பேச்சு வார்த்தைகள், செய்த ஒப்பந்தங்கள் ஆகியவற்றையும் சிங்களக் கட்சிகளுக்கு அரசாங்கம் அமைக்க அளித்த ஒத்துழைப்பைப் பற்றியும் தேர்தல் விஞ்ஞாபனம் எடுத்துரைத்தது. பண்டாரநாயக்கா- செல்வநாயகம் ஒப்பந்தத்தின் மூலம் சமஷ்டி ஆட்சிக்கான அத்திவாரத்தை இடுவதற்குத் தமிழரசுக் கட்சி முயன்றதாகவும் அதே இலட்சியத்தை அடைவதற்கே மற்றைய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் விஞ்ஞாபனம் கூறியது. எனினும், சமஷ்டி ஆட்சிக்குக் குறைவான எதுவும் தமிழ் பேசும் மக்களின் அரசியல் பிரச்சினைகளுக்குத் தகுந்த தீர்வாக முடியாது. எமக்கு எத்தகைய கஷ்டங்கள் ஏற்பட்ட போதும் தமிழ் பேசும் மக்களின் விடுதலைக்கும் எமது இலட்சியத்துக்குமான பாதையில் இட்டுச் செல்வோம் என்று நாம் உறுதியளிக்கின்றோம் என்று விஞ்ஞாபனம் கூறியது.

அதே வேளை இலங்கையைத் துண்டாடும் எந்த இயக்கத்துக்கும் ஆதரவளிக்க வேண்டாம் எனத் தேர்தல் விஞ்ஞாபனம் மக்களைக் கேட்டுக் கொண்டது. தமிழ் ஈழக் கோரிக்கைக்காக சுந்தரலிங்கம் 1958 முதல் பிரச்சாரம் செய்து வருகிறார். 1958ல் தமிழ் மக்களுக்குத் தனி நாடான ஈழம் கோரிப் பாராளுமன்றத்தில் தீர்மானம் ஒன்றைக் கொண்டு வந்தார். 1960 மார்ச், 1960 ஜூலை, 1965 ஆண்டுகளில் நடந்த தேர்தல்களில் ஈழக் கோரிக்கையின் அடிப்படையில் போட்டியிட்டுத் தோல்வி கண்டார். 1970ம் ஆண்டிலும் ஈழக் கோரிக்கையிலேயே சுந்தரலிங்கம் போட்டியிட்டார்.

ஒற்றையாட்சி அரசியல் அமைப்பின் அடிப்படையில் தமிழ் மக்கள் யு. என். பி. யின் தலைமையை ஏற்று தேசிய ஒற்றுமைக்காக



உழைக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் தமிழ் காங்கிரஸ் தலைவர் ஜி. ஜி. பொன்னம்பலம் போட்டியிட்டார். 1970 தேர்தலில் பிரிவினைக் கோரிக்கையையும் ஒற்றையாட்சி அமைப்பையும் எதிர்க்கும் நிலைமை தமிழரசுக் கட்சிக்கு இருந்தது. யாழ்ப்பாணத்தில் நடந்த தேர்தல் கூட்டத்தில் அந்த இரண்டு நிலைப்பாடுகளையும் தீவிரமாக நிராகரித்தார் தந்தை. அவர் சொன்னார்:

> தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளுக்கு மூன்று விதமான தீர்வுகள் உங்கள் முன் வைக்கப்பட்டுள்ளன. இலங்கையில் இருந்து பிரிந்து ஈழம் என்ற தனி நாட்டை தமிழ் பேசும் மக்களுக்காக இங்கு உருவாக்க வேண்டும் என்கிறார் திரு. சுந்தரலிங்கம். இப்போதுள்ள ஒற்றையாட்சியின் கீழ் யு. என். பி. யில் நம்பிக்கை வைத்து தேசத்தின் ஒற்றுமைக்காகப் பாடுபட வேண்டும் என்று கூறுகிறார் திரு. பொன்னம்பலம். நாங்கள் கூறும் சமஷ்டி ஆட்சி முறை மூன்றாவது வழி. அந்த வழி நாட்டைத் துண்டாடுவதைத் தவிர்க்கும். அதே வேளை திரு. பொன்னம்பலம் கூறுவதைப் போல் சிங்கள மக்களை நம்பி நிற்கும் நிலையையும் தவிர்க்கும். நாம் எம் விடயங்களைப் பார்த்துக் கொண்டு சிங்கள மக்களுடன் சேர்ந்து நாட்டின் ஒற்றுமையைக் காப்பாற்ற வழி வகுக்கும். இந்த மூன்று வழிகளில் எது சிறந்தது, எது தமிழ் மக்கள் கௌரவத்துடனும், தன்மானத்துடனும் வாழ வழி செய்யும் என்பதை நீங்கள் சிந்தித்துத் தெரிவு செய்யுங்கள்.

தந்தையின் குணாதிசயங்களில் இதுவும் ஒன்று. தன் கருத்தை எவர் மீதும் திணிக்கமாட்டார். எல்லா நிலைப்பாடுகளையும் சுருக்கிக் கூறி, தன் கருத்து எது என்பதையும் குறிப்பிட்டு முடிவை நீங்களே எடுங்கள் என்று விட்டு விடுவார். தமிழரசுக் கட்சியின் செயற் குழு, பொதுக் குழு ஆகியவற்றின் கூட்டங்களிலும் இதைப் போன்றே நடந்து கொள்வார். தலைவர் கதிரையில் இருந்தபடி சில வேளைகளில் கண்களை மூடிக் கொண்டிருப்பார். அவர் தூங்கி விட்டாரோ என்று பலர் நினைத்து விடுவதும் உண்டு. சில சமயங்களில் காரசாரமான விவாதங்கள் நடக்கும். அமிர்தலிங்கம், வி. என். நவரத்தினம், இராஜதுரை, தர்மலிங்கம் ஆகியவர்கள் உரத்துப் பேசுவார்கள். அவர்கள் பேசும் போதும் தந்தை கண்களை மூடியபடி மௌனமாக இருப்பார். விவாதம் முடிந்ததும் அமிர்தலிங்கம் இப்படிச் சொன்னார். தர்மலிங்கம் இதைச் சொன்னார். கந்தையா அந்த வாதங்களை முன்வைத்தார். பண்டிதரின் கருத்துக்கள் இவை என்று ஒவ்வொருவரும் சொன்ன

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கருத்துக்களைச் சுருக்கிச் சொல்லுவார். இறுதியில் தன்னுடைய கருத்தையும் சொல்லுவார். என்னுடைய கருத்தை நீங்கள் விரும்பினால் ஏற்கலாம் அல்லது விடலாம் என்று கூறி முடிப்பார்.

தந்தை எந்த முடிவையும் தான் எடுப்பதில்லை. கட்சியுடன் கலந்தாலோசித்தே எடுப்பார். கிளிநொச்சி எம். பி. சிவசுந்தரம் இறந்த நேரம். எம். கே. இராமலிங்கம் என்ற கட்சித் தொண்டர் தந்தையின் வீட்டுக்கு அடிக்கடி போனார். 'என்ன. எம்.கே. அடிக்கடி வந்து போறீர். என்னுடன் ஒன்றும் பேசவில்லை. என்ன விசயம்?' என்று கேட்டார் தந்தை. தான் கிளிநொச்சியில் போட்டியிட வேண்டும் என்று பலர் விரும்புவதாக எம்.கே.சொன்னார். 'இத கட்சியிலை மற்றவர்களுக்குச் சொல்லுறன், நீங்கள் போட்டு வாங்கோ' என்றார் தந்தை.

தந்தை எல்லோரையும் மதிப்பவர். எல்லோரும் மரியாதைக் குரியவர் என்று திடமாக நம்பியவர். எவரும் தன் காலில் விழுவதை விரும்பாதவர். ஒரு முறை ஒரு முதியவர் அவரின் காலின் சாஷ்டாங்கமாக விழுந்து விட்டார். "இந்த வேலை செய்ய வேண்டாம். ஒரு மனுஷன் இன்னொரு மனுஷனின் காலிலை விழுகிறதா. இனிமேல் எவற்றை காலிலையும் விழாதையுங்கோ" என்று சொன்னார்.

### சமஷ்டிக்கு மீண்டும் ஆதரவு

1970 மே 27 தேர்தலில் ஐக்கிய முன்னணிக்கு அமோக வெற்றி. 151 உறுப்பினரைக் கொண்ட பாராளுமன்றத்தில் 116 இடங்கள் கிடைத்தன. அவற்றில் 91 சுதந்திரக் கட்சிக்கும், 19 சமசமாஜக் கட்சிக்கும், 6 கம்யூனிஸ்ட்க் கட்சிக்கும் கிடைத்தன. யு. என். பி. க்கு 17 தொகுதிகளில் மட்டுமே வெற்றி கிடைத்தது. தமிழரசுக் கட்சிக்கு 13 இடங்களும் தமிழ்க் காங்கிரசுக்கு 3 தொகுதிகளும் கிடைத்தன. தமிழரசுக் கட்சிக்கு 2,45,747 வாக்குகள் கிடைத்தன. அடுத்தடுத்து ஐந்து தேர்தல்களில் வடக்கிலும் கிழக்கிலும் வாழும் தமிழ் மக்கள் சமஷ்டித் தீர்வைத் தெரிந்தெடுத்தனர். அமிர்தலிங்கம் தோல்வி கண்டார். காரைநகர் இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபரான ஏ. தியாகராசா 725 அதிகப்படி வாக்குகளால் வெற்றி பெற்றார்.

மே 29ம் திகதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா பிரதம மந்திரியாகப் பதவிப் பிரமாணம் செய்தார். டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா அரசியல் சட்ட அமைச்சராக நியமிக்கப்பட்டார். புதிய அரசியல் சட்டம் ஒன்றைத் தயாரித்து நிறைவேற்றி நடைமுறைப்படுத்தும் பணி அவருக்குக் கொடுக்கப்பட்டது. சிம்மாசனப் பிரசங்கத்துக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணையில் பேசிய கொல்வின் இலங்கையரை உண்மையான விடுதலை பெற்றவராக, சுதந்திரமுடையவராக, இறைமையுள்ளவராக ஆக்கும் அரசியல் அமைப்புச் சட்டத்தை வரைவதற்கான நடவடிக்கைகள் உடனடியாக எடுக்கப்படும் என்று சொன்னார்.



சில நாட்களுக்குப் பின்பு கொல்வின் திருச்செல்வத்தைச் சந்தித்தார். தமிழ் மக்களுக்குப் பல சலுகைகளை அளிக்கத் தான் திட்டமிட்டிருப்பதாக அவர் சொன்னார். திருச்செல்வம் அத் தகவலை தந்தைக்கு அறிவித்தார். கொல்வினின் செய்தியை ஆராய்வதற்காக செயற் குழுவை ஜூலை 17ம் திகதி வவுனியாவில் தந்தை கூட்டினார். அக் கூட்டத்தில் இரண்டு கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன. சோல்பரி அரசியல் திட்டத்திலுள்ள 29வது பிரிவை அகற்ற முயற்சி எடுக்கப் படலாம் என்பது ஒரு கருத்து. தமிழ் மக்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் அப்பிரிவை நீக்க இடமளிக்கக் கூடாது என்று அமிர்தலிங்கம் வாதிட்டார். மற்றது, புதிய அரசியல் சட்டத்தில் முற்போக்கான சில அம்சங்கள் சேர்க்கப்படலாம் என்ற கருத்து.

புதிய அரசியல் சட்டத் தயாரிப்பு வேலையில் தமிழரசுக் கட்சி கலந்து கொள்ள வேண்டுமா என்ற முடிவை எடுப்பதற்காக தமிழ் முக்கியஸ்தர்களின் மகாநாடு ஒன்றைக் கூட்ட முடிவு செய்யப்பட்டது. ஜூலை நடுப்பகுதியில் சைவ மங்கையர் கழகத்தில் ஒரு கூட்டம் கூட்டப்பட்டது. அதற்குத் தமிழ் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளும் சட்ட வல்லுனர்களும் தமிழ் பிரபலஸ்தர்களும் அழைக்கப்பட்டனர். மூன்று மணித்தியாலங்கள் நடந்த அந்தக் கூட்டத்தில் தமிழரசுக் கட்சி அரசியல் சட்ட தயாரிப்பு வேலையில் கலந்து கொண்டு சமஷ்டிக் கோரிக்கையை முன் வைக்க வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. மாதிரி அரசியல் அமைப்புச் சட்டமொன்றைத் தயாரிக்கும் குழுவொன்றைக் கூட்டுவதற்கு உடுவில் எம். பி.வி. தர்மலிங்கம் நியமிக்கப்பட்டார்.

புதிய அரசியல் அமைப்புச் சட்டத்தைத் தயாரிப்பதற்காக பாராளுமன்றப் பிரதிநிதிகளைக் கொண்ட அரசியல் நிர்ணய சபையை உருவாக்க அரசாங்கம் முடிவு செய்தது. ஜூலை 19ம்திகதி பாராளுமன்றப் பிரதிநிதிகள் நவரங்கஹாலில் கூடித் தங்களை அரசியல் நிர்ணய சபையாக்கிக் கொண்டனர். அதற்கான பிரேரணையை பிரதமர் ஸ்ரீமாவோ முன் மொழிந்தார். அப்பொழுது அவர் சொன்னது:

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



புதிய அரசியல் சட்டம் எப்படி அமையும் என்பதை நான் முன் கூட்டியே கூறி விடக் கூடாது. ஆனால், ஒன்றை மட்டும் சொல்ல விரும்புகின்றேன். எமது "புதிய அரசியல் சட்டம் நாட்டின் ஒற்றுமையைப் பலப்படுத்த வேண்டும். எம்மிடையே சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள், பறங்கியர் என்ற இனக் குழுக்கள் இருக்கின்ற போதிலும் பௌத்தர்கள், இந்துக்கள், கிறிஸ்தவர்கள், இஸ்லாமியர் என்ற பல மதக் குழுக்கள் இருக்கின்ற போதிலும் நாங்கள் ஒரே நாட்டினராக இருக்க, நடக்க வேண்டும்.

எதிர்க் கட்சித் தலைவர் பிரேரணையை வழி மொழிந்தார்.

தமிழரசுக் கட்சியின் சார்பில் கோப்பாய் எம். பி. கதிர்வேலுப்பிள்ளை உரையாற்றினார். தமிழ் மக்களின் ஒத்துழைப்பை அறிவித்த அவர், தமிழரசுக் கட்சி பிரிவினைக் கோரிக்கையை எதிர்க்கிறது. சமஷ்டி ஆட்சி முறையை அரசியல் நிர்ணய சபை ஏற்க வேண்டும் என்று கோருகிறது என்றார். தமிழ்க் காங்கிரஸின் சார்பில் கிளிநொச்சி எம்.பி.வி. ஆனந்தசங்கரி உரையாற்றினார். சோல்பரி அரசியல் திட்டத்தின் 29வது பிரிவு தமிழ் மக்களுக்கு பாதுகாப்பைக் கொடுக்கத் தவறி விட்டது என்று அவர் கூறினார். மூன்று நாளைய விவாதத்தின் பின்பு அரசியல் நிர்ணய சபையை உருவாக்கும் தீர்மானத்தை எம்.பி.க்கள் ஏற்றுக் கொண்டனர்.

**மாதிரி அரசியல் அமைப்பு**

இத் தீர்மானம் நிறைவேறியதும் வழி காட்டல் குழுவுக்குத் தமது பிரதிநிதிகளை நியமிக்கும்படி எல்லாக் கட்சிகளையும் கொல்வின் கேட்டுக் கொண்டார். அதே நேரத்தில் தமிழரசுக் கட்சி ஒரு மாதிரி அரசியல் அமைப்புத் திட்டத்தைத் தயாரித்தது. அது இரண்டு பகுதிகளைக் கொண்டது. முதலாவது பகுதி பொது நிலை அறிக்கை, இரண்டாவது பகுதி மாதிரி அரசியல் அமைப்புத் திட்டம். இந்த மாதிரி அரசியல் அமைப்புத் திட்டம் மிகவும் முக்கியமானது. மாதிரி அரசியல் அமைப்புத் திட்டம் இரண்டு முக்கிய விடயங்களை அடிப்படையாகக் கொண்டிருந்தது. அவை: 1 சமஷ்டி அமைப்பு 2. சோசலிச பொருளாதார அமைப்பு.

முதலாவது பகுதி: தமிழ் மக்களின் வரலாறு சம்பந்தமானது. நினைவுக்கெட்டாத காலத்தில் இருந்து இலங்கையானது சிங்களவர்களினதும், தமிழர்களினதும் தாயகமாக விளங்கி வருகின்றது. ...... ...... ......



இராவணன், விஜயன் என்போர் பற்றிய கர்ண பரம்பரைக் கதைகளை அல்லது வேறு வரலாற்றுக் குறிப்புகளைச் சான்று காட்டி, யார் இந் நாட்டில் முதன் முதலில் வசித்தார்கள் என்பது பற்றிய விவாதம் எதிலும் ஈடுபடுவது பயனற்றதாகும். இந் நாட்டில் பன்னூற்றாண்டுகளாக வாழ்ந்து வரும் முஸ்லிம்கள், மலேயர், பறங்கியர் என்போரும் சிங்களவருடனும், தமிழருடனும் சமவுரிமைகளையும் வாய்ப்புக்களையும் பெறுவதற்கு உரிமையுடைய சுதேச மக்களாகக் கருதப்படுவதற்கு உரித்துடையோர் ஆவார் என்று பொது நிலை அறிக்கையின் முதலாவது பகுதி ஆரம்பிக்கிறது.

அடுத்து, இந் நாட்டு மக்களின் வரலாற்று வளர்ச்சியும் வாழ்க்கை முறையும் ஐரோப்பியக் காலனி ஏகாதிபத்திய நாடுகளின் வருகையால் மிகவும் பாதிப்புற்றது என்றும், போர்த்துக்கேயர் இலங்கையின் கரையோரப் பகுதியைக் கைப்பற்றி ஆட்சி புரிந்தனர் என்றும், அவர்கள் தமதுபடை வலியால் யாழ்ப்பாண இராச்சியத்தைக் கைப்பற்றினர் என்றும் கூறுகிறது. போர்த்துக்கேயரைப் பின் தொடர்ந்து வந்த ஒல்லாந்தருக்கும் அவர்களுக்குப் பின் வந்த பிரித்தானியருக்கும் தமிழ் இராச்சியத்தின் பிரதேசங்களை ஆண்டதாகவும் தமிழ்ப் பிரதேசங்களை ஆள்வதற்கு யுத்தத்தில் கைப்பற்றியதைத் தவிர அவர்களுக்கு வேறு எவ்வித உரிமையும் இருக்கவில்லை என்றும் முதலாவது பகுதி வாதிட்டது. இப்போது இலங்கையை ஒரு குடியரசாக்குவதன் மூலம் குடியேற்ற நாட்டுக் காலனித்துவ ஆட்சியின் இறுதிச் சின்னமும் அகற்றப்படுகின்றமையால், இந்நேரத்தில் தாம் போர்த்துக்கேயருக்குப் போரிலே இழந்து விட்ட இறைமை மிக்க சுதந்திரத்தை மீள அளிக்குமாறு கோருவதற்குத் தமிழ் மக்களுக்குச் சட்ட பூர்வமான உரிமையுண்டு. பிரித்தானிய ஆட்சியாளர், தமிழ் இராச்சியத்தின் பிரதேசங்களைத் தம்மால் அவ்வாறே அடிமைப் படுத்தப்பட்ட சிங்கள இராச்சியத்தின் பிரதேசங்களுடன் நிர்வாக வசதிக்காக இணைத்தார்கள் என்ற நிகழ்வு கைப்பற்றுவதற்கு முன்னிருந்த அந்தஸ்தை அளிக்குமாறு கோருவதற்குத் தமிழருக்குள்ள உரிமையை மறுதலிப்பதாகாது. தமிழ்ப் பிரதேசங்களைச் சிங்களப் பிரதேசங்களுடன் இணைத்த பிரித்தானியரின் செயலானது, தமிழ் இறைமையை அழித்ததெனவும் பெரும்பான்மைச் சமூகத்தவர் என்ற முறையில் சிங்களவர் பிரித்தானியரைப் பின்பற்றி அவர்கள் அமர்ந்த பீடங்களில் ஆளுவோராக அமர்ந்து கொண்டனர் எனவும் தேவையற்றோர் ஊகம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இன்று இருப்பதாகத் தோற்றுகிறது. இலங்கையில் சோசலிஷப் பாதையின் மூலம் ஐக்கியமும், முன்னேற்றமும் தோற்றுவிக்கப்பட வேண்டும் ஆயின், இவ் ஊகம் முற்றாக நிராகரிக்கப்படல் வேண்டும் என வாதித்தது.

தமிழர்கள் தமது சுதந்திரமான இறைமை உள்ள தமிழ் அரசை மீள நிறுவுமாறு கோருவதற்கு உரித்துடையராயினும், இலங்கையில் வாழும் சிங்களவர்களுடனும் ஏனைய மக்களுடனும் முழுமையான சமத்துவ அடிப்படையில் ஒரு சமஷ்டிக் கூட்டரசின் கீழ் ஐக்கியப் படுவதற்கான தமது தீர்மானத்தை அவர்கள் ஜனநாயக ரீதியில் சுட்டிக் காட்டி உள்ளனர் என்பதைச் சுட்டிக் காட்டியது.

கடந்த தேர்தலில் ஐக்கிய முன்னணியினர் பெருந் தொகை யினராகப் பெற்ற வெற்றியானது அரசியல் அமைப்பைப் புரட்சிகரமாக மாற்றுவதற்குச் சிங்கள மக்கள் அளித்த ஒரு பொறுப்பாணை என வியாக்கியானம் செய்யப்படுவதாயின், தமிழ் மக்களும் தற்போதைய ஒற்றை ஆட்சி அமைப்பை நிராகரிக்கவும் ஒரு சமஷ்டி ஆட்சி அமைப் பின் அடிப்படையில் நாட்டின் ஏனைய மக்களுடன் இணையவும் நாடாளுமன்றத்திலுள்ள தமது பிரதிநிதிகளுக்குப் பொறுப்பாணை அளித்துள்ளனர். 1956ம் ஆண்டு தொட்டு நடந்தேறிய ஐந்து தொடர்ச் சியான பொதுத் தேர்தல்களினதும் முடிவுகள் தமிழ் மக்கள் சமஷ்டிக் கூட்டரசில் இணைந்த ஒரு தமிழரசை நிறுவுவதன் மூலம் தமது தனித் தன்மையைக் காத்துக் கொள்ள உறுதி கொண்டுள்ளதை வெளியிட்டிருக்கின்றன என்று பொதுநிலை அறிக்கை கூறியது.

வெளிநாட்டார் கைப்பற்றுவதற்கு முன்பிருந்த நிலைக்குத் திரும் பும், அதாவது தமிழ் மக்களின் முழுமையான சுதந்திர, இறைமைக்குத் திரும்பும் உரிமை தமிழ் மக்களுக்கு இருக்கின்றது என்பதைச் சுட்டிக் காட்டிய பொது நிலை அறிக்கை அந்த உரிமையைத் தமிழ் மக்கள் கைவிட்டு ஒரு சமரச இணக்கமாக சமஷ்டி அமைப்பை ஏற்றுக் கொள் ளத் தமிழ் மக்கள் தயாராக இருக்கின்றனர் என்பதைச் சுட்டிக் காட்டியது. தமது சுயாதீனத்தை மீண்டும் நிலை நிறுத்துவதற்கு சமஷ்டி அமைப்பு வழி செய்வதனாலேயே அதை ஏற்றுக் கொள்ளத் தமிழ் மக்கள் முன் வந்தனர் என்பதையும் சுட்டிக் காட்டுகிறது.

சோஷலிச நாடுகளில் எல்லாம் சமஷ்டி அமைப்பின் கீழ் சிறு பான்மை மக்களின் தனித்துவம் பாதுகாக்கப்பட்டிருப்பதையும் சுட்டிக் காட்டியது.



**ஐந்து அரசுகள்**

சமஷ்டி அமைப்பைக் கொண்ட மாதிரி அரசியல் அமைப்புத் திட்டத்தை இணைப்பாகக் கொடுப்பதாகக் கூறும் பொது நிலை அறிக்கை இலங்கை ஐந்து அரசுகளைக் கொண்டிருக்கும் என்றும் அவற்றில் ஒன்று தமிழர் பெரும்பான்மை அரசாகவும் ஏனைய பகுதிகள் மூன்று சிங்களப் பெரும்பான்மை அரசுகளாகவும் அமையும் எனவும் கூறியது. பொது நிலை அறிக்கையின் அந்தப் பகுதி:

இப்பொதுநிலை அறிக்கையுடன் இணைக்கப்பட்டிருக்கும் வரைபு அரசியல் அமைப்புத் திட்டத்தை இலங்கைக்கென ஒரு சமஷ்டி அரசியல் அமைப்பை வரையும் போது கருத்திற் கெடுப்பதற்கென ஒரு மாதிரி அமைப்பாகக் கொள்ள வேண்டும் என்பதே எமது எண்ணம். வட மாகாணமும், கிழக்கு மாகாணத் திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களும் ஒருகூறை ஆக்குவனவாக அமையும். இது தமிழர் பெரும்பான்மையாகவுள்ள ஓர் அரசாக அமையும். அம்பாறை மாவட்டம் முஸ்லிம்கள் பெரும்பான்மையாகவுள்ள ஓர் அரசாக அமையும். இலங்கையின் ஏனைய பகுதிகளில் மூன்று அரசுகளை நிறுவுவதற்கான யோசனை வரலாற்றுப் பொருளியல்வாத அடிப்படை யானதும், ஜனநாயக ரீதியிலான அதிகாரப் பன்முகப் படுத்தலின் பயன்களை மக்களில் எல்லாப் பிரிவினரும் துய்த்திட வேண்டும் எனக் கணிக்கப்பட்டதும் ஆகும். பண்டைய இராசரட்டையின் கேந்திரப் பிரதேசங்களானவையும் நெல், தெங்கு உற்பத்தியில் மேம்பட்டிருப் பவையுமான வட மத்திய, வட மேற்கு மாகாணங்கள் ஒரு கூறாக அமைவன. கண்டியும் சிங்கள மக்களின் பொதுவான பாரம்பரியங் களுடனும் இடர்பாடுகளுடனும் கூடிய, தேயிலை, இறப்பர் செய்கையில் மேம்பட்டு விளங்கும் ஊவா, சப்பிரகமுவா, மத்திய மாகாணங்கள் என்பன இன்னொரு கூறாக அமைவன. அரசியல் துறையிலும், பொருளாதாரத் துறையிலும் முன்னேறியுள்ள தென் மாகாணமும், மேல் மாகாணமும் இன்னுமொரு கூறாக அமைவன. புதுடில்லி, கன்பரா போன்ற மாநகரங்களின் முன்மாதிரியைப் பின்பற்றிக் கொழும்பு நகரமும் அதன் சுற்றுப் புறங்களும் குடியரசின் தலைநகரம் என்ற முறையில் மத்திய அரசினால் நிர்வகிக்கப்படும்.

தமிழ் அரசையும், முஸ்லிம் அரசையும் தவிர்ந்த ஏனைய பகுதி யில், வேறு ஏதேனும் அடிப்படையில் தமது அரசையோ, அரசுகளை யோ, நிறுவிக் கொள்ள உரிமையுடையவர்களான சிங்கள மக்களின்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பிரதிநிதிகள் கருத்துக்கெடுத்துக் கொள்வதற்கான தேர்வு முறையான யோசனையே இது என்பதைக் கூற விரும்புகிறோம்.

இங்கு மூன்று விடயங்கள் கவனத்தில் கொள்ளப்படுதல் அவசியம்:

1 தமிழ் மக்கள் தமது சுயாட்சியை அனுபவிப்பதற்காக அவர்கள் பாரம்பரியமாகப் பெரும்பான்மையினராக வாழும் பகுதி களுக்குத் தனியரசு.

2 தமிழ் மக்களுக்கு உள்ள அதே உரிமை முஸ்லிம் மக்களுக்கு முண்டு. எனவே, அவர்கள் பெரும்பான்மையாக வாழும் அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம் அரசு.

3 தமிழ் மக்களும், முஸ்லிம் மக்களும் அனுபவிக்கும் அதே அதி காரப் பகிர்வை அனுபவிக்கும் உரிமை சிங்கள மக்களுக்கும் உண்டு. அதனால், அவர்கள் விரும்பினால் தாம் பெரும்பான் மையினராக வசிக்கும் பகுதிகளை மூன்று அரசுகளாகப் பிரித்து அதிகாரப் பகிர்வின் நன்மைகளை அனுபவிக்கலாம்.

மாதிரி அரசியல் அமைப்புத் திட்டத்தின் முதலாவது பிரிவு தந்தை செல்வாவின் சிந்தனையைத் தெளிவாக்குகிறது. அதன் வாசகம் இது: அரசியற் கட்டமைப்பு:

1 இலங்கைச் சமஷ்டிக் குடியரசானது:

(அ) குடியரசின் தெற்கு, மேற்குப் பிரதேசங்களைக் கொண்ட மாநிலம்.

(ஆ) குடியரசின் வட மத்திய, வட மேல் பிரதேசங்களைக் கொண்ட மாநிலம்.

(இ) குடியரசின் மத்திய பிரதேசங்களைக் கொண்ட மாநிலம்.

(ஈ) குடியரசின் வட கிழக்குப் பிரதேசங்களைக் கொண்ட மாநிலம்.

(உ) குடியரசின் தென் கிழக்குப் பிரதேசங்களைக் கொண்ட மாநிலம்.

(ஊ) குடியரசின் தலைநகரம் என்ற முறையில் மத்திய அரசினால் நிர்வகிக்கப்படுவனவாகிய கொழும்பு



மாநகரமும் அதன் சுற்றுப் புறங்களும் என்பவற்றைக் கொண்டிருக்கும்.

முஸ்லிம் மக்களைப் பொறுத்த வரையில் தந்தை செல்வா மிகவும் தெளிவான நிலைப்பாட்டைக் கொண்டிருந்தார் என்பதை இது காட்டுகிறது.

**மத்திய அரசு**

தந்தையின் வழிகாட்டலில் தயாரிக்கப்பட்ட அரசியல் அமைப் புத் திட்டம் மிகவும் முன்னேற்றகரமானது. ஐந்து மாநில அரசுகளையும் மத்திய அரசையும் கொண்ட இரண்டு படி அமைப்பை இது அறிமுகப் படுத்தியது. மத்திய அரசின் அதிகாரங்கள் வரையறை செய்யப்பட் டுள்ளன. மத்திய அரசுக்கு ஒதுக்கப்பட்ட அதிகாரங்களை 16வது பிரிவு கொடுக்கிறது. அரசாண்மையுடைய அதன் உயர்ந்த உறுப்புக்களாலும் அரசாங்க அமைப்புக்களாலும் பிரதிநிதித்துவப் பட்டவாறான இலங்கைக் குடியரசின் நியாயாதிக்கமானது பின்வருவனவற்றை மேவியதாகும்:

1 சர்வதேசத் தொடர்பில் குடியரசைப் பிரதிநிதித்துவப் படுத்துதலும்.

2 வெளிநாட்டு அரசுகளுடனும் சர்வதேச நிறுவனங் களுடனும் உடன்படிக்கைகளை முடித்தலும், உறுதியாக் கலும்.

3 போரும், சமாதானமும் பற்றிய பிரச்சினைகள்.

4 குடியரசின் காப்பரண்களை அமைத்தலும், குடியரசினைப் பாதுகாக்கின்ற எல்லா ஆயுதப் படைகளையும் பணித்தலும்,

5 குடியரசின் நிலப் பரப்பில் சட்டத்தையும் ஒழுங்கையும் பேணுதல். பொலிஸ் படையைப் பேணலும், பணித் தலும்.

6 குடியுரிமைச் சட்டங்களும், இந் நாட்டில் வசிக்கின்ற

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பிரஜைகள் அல்லாதோர், வெளிநாட்டார் என்போரின் உரிமைகள் தொடர்பிலான சட்டங்களும்.

7 குடி வரவும், குடியகல்வும் பற்றிய நிர்வாகம்.

8 சுங்கம், இறக்குமதி, ஏற்றுமதி, முத்திரைகள், மரணச் சொத்து வரி, இவைகளை நிர்வகித்தல்.

9 பொதுக் கல்வி, தொழில் நுட்பக் கல்வி, உயர் கல்வித் துறைகளில் அடிப்படைக் கொள்கைகளை வகுத்தல், தொழில்நுட்ப, தொழிற்துறை உயர் கல்விக்கெனச் சிங்கள, தமிழ்ப் பிரிவுகளைக் கொண்ட தேசியத் தன்மையுள்ள பல்கலைக்கழகங்களை நிறுவுதல், மாநில அரசுகளும் அரசுகளுக்கு உட்பட்ட பல்கலைக் கழகங்களை நிறுவும் அதிகாரமுடைத்தாதல் வேண்டும்.

10 தொழிற் சட்டத்துக்கான அடிப்படைக் கொள்கைகளை வகுத்தல்; பொதுநல சுகாதாரத் துறைத் தொடர்பில் அடிப்படைக் கொள்கைகளை வகுத்தல்.

11 குடியரசில் இருந்தும் மாநில அரசுகள் ஒவ்வொன்றில் இருந்தும் பெறப்பட்ட உறுப்பினர்களையும் கொண்ட நிதி ஆணைக்குழு ஒன்றின் பரிவுரையின் பேரில் மாநிலங்களுக்கு இறைவரி வருவாய், மூல வளங்கள் என்பவற்றைப் பங்கீடு செய்தல்; நிதி ஆணைக்குழுவின் அறிக்கையையும் ஏனைய நடைமுறைகளையும் எதிர்நோக்கி, மானியம் எதையும் முன்னதாகவே வழங்குவதற்கான தத்துவம்; மாநிலங்களால், விதிக்கப் பட்ட வ்ரிகளை அங்கீகரிக்கும் தத்துவம்.

12 நாணய முறை, கடன் முறை என்பவற்றை நெறிப் படுத்தல்.

13 கடன் எடுக்க மாநில அரசுகளுக்குள்ள உரிமைகளுக்குப் பங்கம் இழையாதவாறு குடியரசுக் கடன் எடுத்தலும், கடன் கொடுத்தலும்.

14 நாடு முழுவதற்குமான அடிப்படையில் வங்கிகளையும், கைத் தொழில், தோட்டத்தொழில், கமத் தொழில், வணிகத்தொழில் என்பனவான முயற்சிகளை நிறுவுதலும், நிர்வகித்தலும்.



15 தபால், தந்தித் தொடர்புச் சேவைகளை நிர்வகித்தல்.

16 நீராக்க சக்தி, ஆறுகள், இயற்கை வளங்கள் என்பவற்றின் மீதான ஆதிக்கமும் அவற்றைப் பயன்படுத்தலும்.

17 துறைமுகங்கள், விமான நிலையங்கள், கடற் போக்குவரத்து, விமானப் போக்குவரத்து, புகைவண்டிப் போக்குவரத்து இவற்றை நிர்வகித்தல்.

18 மாநில அரசுகளின் ஆலோசனையுடன் நில மட்டத்து, சுரங்கத்து நீர்கெடா வண்ணமும், பாழாகிவிடா வண்ணமும் பாதுகாக்கச் சட்டமாக்கல்.

19 நீர்வாய் மின் சக்தியை உண்டாக்கலும், பாய்ச்சலும்.

20 மாநிலங்களிடையே செறிந்த வீதிகளையும், மூல வீதிகளையும் அமைத்தலும், பேணலும்.

21 பாரிய நீர்ப்பாசனத் திட்டங்களை அமைத்தலும், பேணலும்.

22 வரலாற்றுச் சிறப்பு மிக்க இடங்களையும் தேசிய முகாமைத்துவம் உள்ள நினைவுச் சின்னங்களையும் கொள்ளலும், பேணலும், பாதுகாத்தலும்.

23 வெடிபொருட்கள், ஆயுதங்கள், வெடி மருந்து இவற்றை ஆக்கலும், விற்றலும்.

24 விலங்குகள், கடல் வாழ் தாவர உயிரினங்கள் எனபவற்றைப் பாதுகாத்துச் சட்டமாக்கல்.

25 ஒத்த முறையிலானவொரு பொருளியற் துறை, சமூகவியற்துறைப் புள்ளி விபரங்களை உருவாக்கலும், நிர்வகித்தலும்.

27 மாநில அரசுகளுடன் உடன்பாடுள்ள வேறு ஏதேனும் விடயங்கள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**மாநில அரசுகள்**

மத்திய அரசுக்கு ஒதுக்கப்பட்டவை தவிர்ந்த ஏனைய எல்லா விடயங்களிலும் மாநில அரசுகள் பூரண அதிகாரத்தைக் கொண்டிருக்கும். மாநில அரசுகளின் சட்டவாக்க அதிகாரங்கள், ஆட்சி மன்றம், மாநில மந்திரி சபை, குழு ஆட்சி முறை ஆகியனவும் வரையறை செய்யப்பட்டுள்ளன. இப் பிரிவுகள் வருமாறு:

மாநில அரசுகள் அவற்றிடம் ஒப்படைக்கப்பட்ட விடயங்கள் தொடர்பில் தமது பிரதேசங்களை நிர்வகிப்பதில் பூரண அதிகாரமுடையதாதல் வேண்டும். மாநில அரசுகளின் சட்டம் இயற்றும் அதிகாரம் மாநில ஆட்சி மன்றங்களுக்கு உரித்தாக்கப்படல் வேண்டும். இம் மன்றங்கள் இவ் அரசியல் அமைப்புத் திட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய ஒவ்வொரு மாநிலத்தினதும், பிரதேச எல்லைக்குள் செயற்படத்தக்க சட்டங்களை ஆக்க அதிகாரமுடைத்தாதல் வேண்டும். மாநிலங்களின் அரசியல் அமைப்புக்கள் ஆவன வேறு விடயங்களுடன், குடிசனத்தொகையும், நிலப்பரப்பும் இணைத்துக் கணிக்கப்பெற்ற அடிப்படையில், மக்களால் தெரிவு செய்யப்படுவோர் ஆட்சி மன்றத்தையும் கொண்டிருக்க ஏற்பாடுடையதாதல் வேண்டும்.

ஒவ்வொரு பொதுத் தேர்தலையும் அடுத்து வரும் முதலாவது கூட்டத்தில், ஒவ்வொரு மாநிலத்தின் ஆட்சி மன்ற உறுப்பினர்களும் தம்மைக் குழுக்களாகப் பகுத்துக் கொள்வதுடன் ஒவ்வொரு குழுவும் ஒரு தலைவரைத் தெரிவு செய்தல் வேண்டும். மாநில அரசுகளின் நிறைவேற்றுப் பணிகள் தலைவருக்கும் மேற்கூறப்பட்ட குழுக்களுக்கும் உரியன.

தமிழ் மக்களினதும் சிங்கள மக்களினதும் உரிமைகளை வற்புறுத்துவதில் கவனம் செலுத்திய அதே சமயம் சிங்கள மக்களின் உணர்வுகளையும் தந்தை மதித்தார். அதன் விளைவாக, மாநில அரசுகளுக்குச் சில கட்டுப்பாடுகளை விதிக்கத் தந்தை முன் வந்தார். உதாரணமாக மாநில அரசுகள் தமக்குள் உடன்படிக்கைகளைச் செய்தால் மத்திய அரசுக்கு அறிவிக்க வேண்டும். மத்திய அரசினூடாகவே மாநில அரசுகள் வெளி நாடுகளுடன் தொடர்பு வைத்தல் வேண்டும். சட்டப்படி தமக்குரிய பணிகளை நிறைவேற்றாத மாநில அரசுகளுக்கெதிராக மத்திய அரசு நடவடிக்கை எடுக்கலாம்.

**இலங்கைக் குடியரசின் ஒருமைப் பாட்டைப் பாதுகாப்பதற்கும் வழி செய்யப்பட்டது. அது தொடர்பான பிரிவுகள்:** பரஸ்பர நலன் ...... ......



பயக்கும் கருமங்கள் தொடர்பில் மாநில அரசுகளானவை தமக்குள் உடன்படிக்கைகள் செய்து கொள்ளலாம். ஆயினும், அத்தகைய உடன் படிக்கைகளை அவை மத்திய அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வர வேண்டும் என்பதுடன், அவ்வுடன்படிக்கைகள் குடியரசினது உரிமைகளுக்கும் நலன்களுக்கும் அல்லது மற்றைய மாநிலங்களின் உரிமைகளுக்கும் நலன்களுக்கும் முரண்பட்ட ண்ளதனையும் உள்ளடக்கி இருப்பின் மத்திய அரசாங்கம் அவற்றின் நிறைவேற்றலைத் தடுப்பதற்கு உரித்துடையது. மத்திய அரசாங்கத்தின் முகவராண்மைக் கூடாகவன்றி மாநில அரசுகளுக்கும், ஏதேனும் வெளிநாட்டு அரசாங் கத்துக்குமிடையில் அல்லது அதன் பிரதிநிதிகளுக்கிடையில் எதுவித தொடர்பும் இருக்காது. மாநிலங்களுக்கிடையிலான எல்லாப் பிணக்கு களும், நடுத் தீர்ப்புக்கெனவும், தீர்வைக்கெனவும் மத்திய அரசாங் கத்திற்கு ஆற்றுப் படுத்தப்பட வேண்டும். இப்பிணக்குகளில், மத்திய அரசாங்கத்தின் விதி முற்றானதாக வேண்டும். எந்தவொரு மாநில அரசும் வேறெந்த மாநில அரசுக்கெதிராகவும் ஒருதலைச்சார்பான நடவடிக்கை எதனையும் எடுத்தல் ஆகாது. மாநில அரசுகளுக்கும் மத்திய அரசாங்கத்திற்கும் இடையிலான எல்லாப் பிணக்குகளும் நீதித் தீர்வைக்கென அரசியல் அமைப்பின் கீழ் அமைக்கப்பட்ட அரசியல் அமைப்பு நீதிமன்றத்திற்கு ஆற்றுப்படுத்தப்படல் வேண்டும். மாநிலங் களானவை தம்அதிகாரத்தை முழுமையாகப் பிரயோகிப்பதற்குக் குடியரசு அவற்றுக்குக்கு எல்லா உதவிகளையும் அளித்தல் வேண்டும். சட்டப்படி தமக்கான கடமைகளையும் பணிகளையும் நிறைவேற்று வதற்குத் தவறுகின்ற மாநில அரசுகளுக்கெதிராக மத்திய அரசாங்க மானது ஏற்ற நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.

இலங்கைக் குடியரசின் நிலப்பரப்பு பிரிக்க முடியாததும் மாநிலங்களின் நிலப் பரப்பை உள்ளடக்கியதுமாகும்.

**மொழி பற்றிய ஏற்பாடு:** சிங்களமும் தமிழும் இலங்கையின் தேசிய மொழிகளாதல் வேண்டும். சிங்கள மொழியை உத்தியோக மொழியாக ஏற்றுக் கொண்டு தமிழ் பேசும் மக்கள் தமிழில் அரசாங்கத் துடன் தொடர்பு கொள்ள வழி வகுக்கிறது. வட கிழக்குப் பிரதேசத் திலும் தென் கிழக்குப் பிரதேசத்தில் தமிழ் நிர்வாக மொழியாகவும் பதிவேட்டு மொழியாகவும் இருப்பதற்கு வழி செய்கிறது.

**குடியுரிமை பற்றிய பிரிவு:** இலங்கைச் சமஷ்டிக் குடியரசின் எல்லாக் குடி மக்களுக்கும் ஒரே தன்மையான குடியரசுக் குடியுரிமை நிறுவப்படுகிறது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இன்றைய அரசு பாராளுமன்றத்தின் முன்வைத்துள்ள புதிய அரசியல் அமைப்புத் திட்டத்துடன் ஒப்பிட்டுப் பார்க்க உதவுவதற்காகவே பல பிரிவுகளைக் கொடுத்தேன். சில விடயங்களில் இன்றைய ஆலோசனைகள் தமிழரசுக் கட்சி கோரியவற்றைக் கொடுக்கின்றன. குடியுரிமை அதற்கு உதாரணம். சில விடயங்களில் மாதிரி அரசியல் அமைப்புத் திட்டத்தில் உள்ளதிலும் கூடக் கொடுக்கப்பட்டுள்ளது. மொழி விடயத்தில் நடந்தது அது தான்.

1970ல் அமைக்கப்பட்ட அரசியல் நிர்ணய சபையின் வழிகாட்டல் குழுவின் கூட்டங்கள் 1971 ஜனவரி 4 முதல் ஒழுங்காக நடைபெற்றன.

முதலாவது அடிப்படைத் தீர்மானம் இலங்கை ஒரு சுதந்திரமான சோஷலிசக் குடியரசு என்று கூறியது. தமிழரசுக் கட்சி அதை ஆதரித்து வாக்களித்தது.

இரண்டாவது அடிப்படைத் தீர்மானம் இலங்கைக் குடியரசு ஒரு ஒற்றையாட்சி நாடு எனக் கூறியது. மார்ச் 16இல் தர்மலிங்கம் அத் தீர்மானத்திற்குத் திருத்தத்தைத் தெரிவித்தார். இலங்கை மதச் சார்பற்ற சமஷ்டிக் குடியரசு என்று அத் திருத்தம் கூறியது. தர்மலிங்கம் தன் உரையில் இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு வகுப்புவாத சார்பற்ற தன்மை அத்தியாவசியம் என்றார். சமஷ்டி ஆட்சி முறையை ஆராய அரசாங்கத்துக்கு மக்கள் ஆணையில்லை என்று அரசாங்கத்தின் சார்பில் கூறப்பட்டது. சமஷ்டி ஆட்சியை ஏற்க அரசாங்கத்துக்கு ஆணை இல்லாவிடின் நிர்வாகப் பரவலாக்கத்துக்காவது வழி செய்யுங்கள் என்றார் தர்மலிங்கம். தர்மலிங்கத்தின் திருத்தம் நிராகரிக்கப்பட்டு இலங்கையை ஒற்றையாட்சி நாடாக்கும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அடிப்படை உரிமைகள் பற்றிய அடிப்படைத் தீர்மானம் விவாதிக்கப்பட்ட போது தாய் மொழியில் கல்வி கற்கும் உரிமையை ஏற்றுக் கொள்ளும்படி தமிழரசுக் கட்சி வாதாடியது. அத்திருத்தமும் நிராகரிக்கப்பட்டது. இனிமேலும் ஏன் தொங்கிக் கொண்டிருக்கிறீர்கள்? என்ற கோஷத்தை வாலிபர்கள் கிளப்பினர். ஜுன் 15ல் தமிழரசுக் கட்சியின் பொதுச் சபை யாழ்ப்பாணத்தில் கூடியது. வெளியேறுங்கள், வெளியேறுங்கள் என்று கோஷமிட்டனர் வாலிபர். அமைதி காக்கும்படி தந்தை அவர்களை வேண்டினார். மொழியுரிமை பற்றிய பிரச்சினை வருகிறது. அதையும் பார்த்து விட்டு முடிவெடுப்போம் என்றார்.



**திருப்பு முனை**

பதினாராவது அடிப்படைத் தீர்மானம் எல்லாச் சட்டங்களும் சிங்களத்தில் இயற்றப்படும். அவ்வாறு இயற்றப்படும் ஒவ்வொரு சட்டத்துக்கும் தமிழ் மொழி பெயர்ப்பு இருக்க வேண்டும் என்று கூறியது. கீழ்க் காணும் திருத்தத்தை இரத்தினம் பிரேரித்தார்:

சிங்களமும் தமிழும்

(அ) சட்டங்கள் இயற்றப்படும் மொழிகளாக இருக்க வேண்டும்.

(ஆ) இலங்கையின் உத்தியோக மொழிகளாக இருக்க வேண்டும்.

(இ) நீதிமன்ற மொழிகளாக இருக்க வேண்டும்.

(ஈ) எல்லாச் சட்டங்களும் பிரசுரிக்கப்படும் மொழிகளாக இருக்க வேண்டும்.

மொழி பற்றிய அடிப்படைத் தீர்மானம் அரசியல் நிர்ணய சபையில் நாலு நாட்கள் விவாதிக்கப்பட்டது. பண்டிதர் இரத்தினத்தின் திருத்தத்தை எதிர்த்து 87 எம். பி. க்கள் வாக்களித்தனர். தமிழரசுக் கட்சியின் 13 எம். பி. க்கள் மாத்திரம் ஆதரித்து வாக்களித்தனர். அடுத்த நாள், அரசியல் நிர்ணய சபையில் இருந்து வெளியேறும் முடிவை தந்தை அறிவித்தார். அம் முடிவை விளக்கும் மூன்று பந்தி அறிக்கை ஒன்றை வெளியிட்டார். அதன் தமிழாக்கம்:

> உத்தேச அரசியல் அமைப்புத் திட்டத்தில் இந் நாட்டுக்கான மொழிச் சட்டங்களை சேர்த்துக் கொள்வதற்கான அடிப்படைத் தீர்மானம் கடந்த சில நாட்களாக விவாதிக்கப் பட்டது. அப்போது தமிழ் பேசும் மக்களின் மொழி உரிமையை அரசியல் அமைப்புத் திட்டத்தில் சேர்க்க வேண்டும் எனக் கூறினோம். எமது கோரிக்கை நியாயமற்றது என்று எவரும் சொல்லமாட்டார்கள். அரசாங்கம் சமர்ப்பித்த அடிப்படைத் தீர்மானத்தில் சிங்கள மொழியின் நிலை மிகவும் விரிவாக வரையறுக்கப்பட்டுள்ளது. ஆனால், தமிழ் மொழிக்கான இடம் அதில் வரையறை செய்யப்படவில்லை. தமிழுக்குரிய இடத்தை வருங் காலத்தில் பாராளுமன்றம் முடிவு செய்யும் என்று சொல்லப்பட்டது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அரசியல் நிர்ணய சபை கூட்டங்களில் கலந்து கொள்ளுமாறு பிரதம மந்திரி அழைத்த நேரத்தில் அதில் பங்கு பற்றுவதால் எவ்விதப் பயனும் இல்லை என்ற கருத்தை எமது கட்சி உறுப்பினர் சிலர் முன் வைத்தனர். ஆனால், பிரதம மந்திரியின் அழைப்பை ஏற்பது என்று முடிவு செய்யப்பட்டது. அரசியல் அமைப்புத் திட்டத்தின் தன்மை, பிரஜாவுரிமை, அடிப்படை உரிமைகள் ஆகிய பல விடயங்களில் திருத்தங்களை முன் வைத்தோம். அத் திருத்தங்கள் யாவும் நிராகரிக் கப்பட்டன.

இம் மாதிரியான அடிப்படைப் பிரச்சினைகளில் பெரும் பான்மை வாக்குகளின் அடிப்படையில் முடிவுகளை மேற்கொள்ள முடியாது என்ற அடிப்படையில் விட்டுக் கொடுத்தல் மூலமும், இணக்கத்தின் அடிப்படையிலுமே தீர்வு காண முடியும் என்ற நோக்குடன் பிரதம மந்திரியைச் சந்திக்க முடிவு செய்தோம். பிரதம மந்திரியுடனும் அரசியல் திட்ட சீர்திருத்த அமைச்சருடனும் மற்றவர்களுடனும் நாம் நடத்திய சந்திப்பு எவ்வித பயனையும் அளிக்கவில்லை. இச் சிக்கலான பிரச்சினைக்கு உடன்பாடு காணும் நோக்குடன் இணக்கம் ஒன்றைக் காண நாங்கள் எப்பொழுதும் தயாராக உள்ளோம். நாம் விரும்பும் குறைந்தபட்ச உரிமைகளை அரசியல் அமைப்புத் திட்டத்தில் சேர்க்கும்படி பிரதம மந்திரியிடம் வேண்டினோம். பிரதம மந்திரியுடனும் அரசியல் அமைப்புச் சீர்திருத்த அமைச்சருடனும் நாங்கள் நடத்திய பேச்சு நல்லெண்ணத்தின் அடிப்படையில் இடம் பெற்ற போதிலும் அடிப்படைத் தீர்மானத்தில் எத்தகைய மாற்றத்தைச் செய்வதற்கும் அவர்கள் தயாராக இருக்கவில்லை. இச்சூழ் நிலையில், எமது மொழி உரிமைகளுக்கு திருப்திகரமான தீர்வு காணப்படாதமையினால் அரசியல் நிர்ணய சபையில் தொடர்ந்து அங்கம் வகிப்பதில் அர்த்த மில்லை என்ற துக்ககரமான முடிவுக்கு நாம் வந்துள்ளோம்.

இம் முடிவினால் நாம் எவருக்கும் துன்பத்தை ஏற்படுத்த வில்லை. எமது மக்களின் கௌரவத்தைப் பாதுகாக்க மட்டுமே விரும்பு கின்றோம்.

இம் முடிவுக்குக் கட்டுப்பட யாழ்ப்பாண எம். பி., எவ். எஸ் மாட்டின் மறுத்தார். ஐக்கிய முன்னணி அரசாங்கம் தனது சோஷலிஷ கொள்கைகளை அமுல் செய்வதற்குத் தமிழரசுக் கட்சி உதவ வேண்டும் என வாதிட்டார். தமிழரசுக் கட்சியின் உத்தரவை மீறி அரசியல் நிர்ணய சபைக் கூட்டங்களில் அவர் பங்கு பற்றினார். கட்சிக் கட்டுப்பாட்டில் பெரிதும் அக்கறை செலுத்துபவர் தந்தை. கட்சியில் இருந்து ஏன் தங்களை நீக்கக் கூடாது என்பதற்கான காரணத்தைக் கோரி மாட்டினுக்குத் தந்தை கடிதம் எழுதினார். அதற்கு அளித்த பதிலில் தமிழ் மொழிக்கு உரிய இடத்தைக் கொடுப்பதற்கு பாராளுமன்றத்தில் சட்டம் இயற்றப்படும் என்று பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க தனக்கு வாக்குறுதி அளித்திருப்பதாக மாட்டின் கூறினார். தமிழரசுக் கட்சி அரசியல் நிர்ணய சபையில் தொடர்ந்து அங்கம் வகிக்க வேண்டும் என்ற கருத்தைத் தான் மட்டும் கொண்டிருக்கவில்லை என்றும் குறிப்பிட்டார்.



மாட்டினுக்கு அனுப்பிய இரண்டாவது கடிதத்தில் இந்த விடயங் களுக்குப் பதில் அளித்தார் தந்தை. அவர் சொன்னார்:

> ஒரு தடவை பாதிக்கப்பட்டால் அதன் பின்பு மிகவும் கவனமாக நடக்க வேண்டும். என்னிடம் இரண்டு ஒப்பந்தப் பத்திரங்கள் உண்டு. முதலாவது, அன்று பிரதம மந்திரியாக இருந்த திரு எஸ். டபிள்யு. ஆர்.டி. பண்டாரநாயக்க கையொப்பமிட்டது. மற்றது ஒப்பந்தத்தின் விளைவாகப் பிரதம மந்திரி பதவியைப் பெற்ற திரு. டட்லி சேனநாயக் காவால் கையெழுத்திடப்பட்டது. இரண்டிலும் வாக்குறுதிகள் கொடுக்கப்பட்டன. ஆனால், நிறைவேற்றப்படவில்லை. 1960இல் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி பல வாக்குறுதிகளை அளித்து எங்களின் ஆதரவைப் பெற்று அரசாங்கத்தைத் தோற்கடித்தது. ஆனால், பதவிக்கு வந்ததும் எல்லா வாக்குறுதிகளையும் மறந்து விட்டது. 1962இல் பாராளுமன்றத்தில் நடந்த விவாதத்தின் போது, இவற்றை நான் பூரண மாகக் கூறினேன். இப் பின்னணியில் சிங்கள மக்களின் வாக்குறுதிகளை மட்டும் வைத்துக் கொண்டு ஆதரவளிக்குமாறு தமிழ் மக்களைக் கேட்க நான் தயாரில்லை.
>
> அரசியல் அமைப்புத் திட்டத்தில் தமிழ் மொழிக்குரிய அந்தஸ்து தெளிவாக வரையறுக்கப்பட வேண்டும். சிங்களத் தலைவர்கள் வாக் குறுதிகளைத் தருவார்கள். நிறைவேற்ற வேண்டிய கட்டத்தை நெருங் கியதும், நாங்கள் என்ன செய்வது மக்கள் எதிர்க்கிறார்கள் என்று சொல்லிக் கையை விரிப்பார்கள்.

அரசியல் நிர்ணய சபையில் தொடர்ந்திருக்க வேண்டும் என்ற கருத்தைத் தான் மட்டும் கொண்டிக்கவில்லை என்ற மாட்டினின் நிலைப்பாட்டைப் பற்றித் தந்தை குறிப்பிட்டதாவது:

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அரசியல் நிர்ணய சபையில் இருந்து வெளியேறுவதை எதிர்த்துச் சில உறுப்பினர்கள் வாதாடியது உண்மை. தங்கள் கருத்தை அவர்கள் கூறியது சரி. அப்படித்தான் அவர்கள் செய்ய வேண்டும். ஆனால், தீர்மானம் எடுக்கப்பட்ட பின் அதற்கமைய நடந்து கொண்டனர். மக்களின் நன்மைக்குகந்த வகையில் அவர்கள் நடந்து கொண்டனர்.

1971 ஜூலை இறுதி வாரத்தில் மாட்டின் கட்சியில் இருந்து வெளியேற்றப்பட்டார்.

அரசியல் நிர்ணய சபையில் இருந்து வெளியேற எடுத்த முடிவையும் மாட்டினை வெளியேற்ற எடுத்த முடிவினையும் வாலிபர் தமக்குக் கிடைத்த வெற்றியாகக் கொண்டனர். சிங்கள அரசாங்கங்களுடன் ஒத்துழைக்கும் கட்டம் முடிவடைந்து விட்டதாகவும் தமிழ் மக்கள் தனி வழியே போக வேண்டிய கட்டம் வந்து விட்டது என்றும் பேசத் தொடங்கினர்.

1971 இறுதிப் பகுதியில் நடந்த மூன்று சம்பவங்கள் வாலிபரின் தீவிரப் போக்கை ஊக்குவிப்பதாக அமைந்தன. முதலாவது ஜனதா விமுத்தி பெரமுனையின் தோல்வியடைந்த முயற்சி. ரோஹண விஜய வீரவின் தலைமையில் இயங்கிய ஜே. வி. பி. 1971 முற்பகுதியில் ஆயுதப் புரட்சியை நடத்தியது. தென் மாகாண வாலிபரும், யுவதிகளும் தமக்குக் கிடைத்த ஆயுதங்களை உபயோகித்து நாட்டின் தென் பகுதி முழுவதையும் தம் கட்டுப் பாட்டின் கீழ் கொண்டு வந்தனர். தமிழ் வாலிபர் அதில் பங்கு பற்றாத போதிலும் ஆயுதப் புரட்சி ஒன்றை நடத்த முடியும் என்ற கருத்தை ஜே. வி. பி. முயற்சி தமிழ் வாலிபர்களினது மனதில் இறுக்கமாகப் பதிய வைத்தது.

தமிழ் வாலிபர்களைப் பொறுத்த வரையில் இரண்டாவது நிகழ்ச்சி மிகவும் முக்கியமானது. பாகிஸ்தானிய ஆட்சிக்கு எதிராக சாந்திபாகினி என்ற விடுதலை இயக்கம் கிழக்குப் பாகிஸ்தானில் தோன்றி வளர்ந்து வந்தது. சாந்திபாகினியின் கெரில்லா நடவடிக்கைகளைத் தமிழ் வாலிபர்கள் மிகவும் உன்னிப்பாகக் கவனித்தனர். பாகிஸ்தானியப் படைகள் எடுத்த பதில் நடவடிக்கைகளின் போது பெருந்தொகையான மக்கள் இந்தியாவுக்கு அகதிகளாகச் சென்றதும் அதைக் காரணமாக வைத்து நவம்பர் மாதத்தில் இந்தியப் படை தலையிட்டுக் கிழக்குப் பாகிஸ்தானுக்கு விடுதலை வாங்கிக் கொடுத்ததும் தமிழ் வாலிபர்கள் மனதில் ஒரு வித கிளர்ச்சியையும் நம்பிக்கையையும் ஏற்படுத்தின. ஆயதப் புரட்சி பற்றிய எண்ணம் தமிழ் வாலிபர்களின் உள்ளங்களில் துளிர் விட்டது. பல வாலிபத் தலைவர்கள் பங்களாதேஷ் விடுதலையை இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு முன் மாதிரியாகக் கொண்டனர். மாவை சேனாதிராசா, கவிஞர் காசி ஆனந்தன், கோவை மகேசன், ஈழ வேந்தன், வேலுப்பிள்ளை பிரபாகரன், உமா மகேஸ்வரன், சந்ததியார், குட்டிமணி, தங்கத்துரை உட்படப் பலர் பங்களாதேஷ் முன் மாதிரியைப் பற்றிப் பேசத் தொடங்கினர். பங்களாதேஷ் வெற்றிக்குப் பாராட்டுச் செய்தி ஒன்றை தமிழரசுக் கட்சி இந்தியப் பிரதமர் இந்திரா காந்திக்கு அனுப்பி வைத்தது.



**சமஷ்டி கோரிக்கை தோல்வி**

1972 ஜனவரி 12இல் இந்திய வெற்றியைக் கொண்டாடு முகமாக வேறு ஆறு அரசியல் கட்சிகளுடன் இணைந்து மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை தமிழரசுக் கட்சி காங்கேசன்துறையில் நடத்தியது. தந்தை அக் கூட்டத்துக்குத் தலைமை வகித்தார். அக் கூட்டத்தில் தமிழரசுக் கட்சியின் இலட்சியமான சமஷ்டி ஆட்சிக் கோரிக்கை தோல்வி கண்டு விட்டதை தந்தை முதன் முறையாக ஒப்புக் கொண்டார். சமஷ்டிக் கோரிக்கை வெற்றி பெறுவதற்குச் சிங்கள மக்களின் ஒத்துழைப்புத் தேவை. 1960 முதல் 1972 வரையுள்ள 12 ஆண்டுகளில் சிங்களக் கட்சிகளின் ஆதரவைப் பெறுவதற்கு எடுத்த அத்தனை முயற்சிகளும் வெற்றி பெறவில்லை என்பதை அவர் சுட்டிக் காட்டினர்.

தமிழ் இனத்தின் அடிப்படை உரிமைகள் சிலவற்றையாவது அரசியல் அமைப்பில் இடம் பெறச் செய்ய வேண்டும் என்ற ஆவலில் போன மார்ச் 6ம் திகதி பிரதம மந்திரி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க அவர்களையும் அரசியல் விவகார அமைச்சர் டாக்டர் கொல்வின் ஆர். டி.சில்வா அவர்களையும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினோம். தமிழ் மொழி உரிமைகள் பற்றிய சில பகுதிகளை யாவது இடம் பெறச் செய்யும்படி வற்புறுத்தினோம். அடுத்து, பிரதமரின் யோசனைப்படி பல அமைச்சர்களையும் சந்தித்தோம். இச் சந்திப்புக்களால் எவ்வித பயனும் கிட்டவில்லை, என்றார் தந்தை.

அத்துடன், மிக முக்கியமான அறிவித்தல் ஒன்றையும் விடுத்தார். இனிமேல் நாம் செய்ய வேண்டியது என்ன? பழைய பாதை பயனளிக்கவில்லை புதிய பாதை ஒன்றில் தான் செல்ல வேண்டும். அது தனி நாட்டுக் கோரிக்கையாக இருக்க வேண்டும் என்கிறார்கள் வாலிபர்கள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஆயுதப் புரட்சி பற்றியும் பேசுகிறார்கள். பங்களாதேஷின் முன் மாதிரி பற்றியும் சொல்கிறார்கள். நாம் அவசரப்பட்டு எந்த முடிவையும் எடுக்கக் கூடாது. ஆழ்ந்து சிந்தித்துத்தான் எமது புதிய பாதையை வகுக்க வேண்டும் என்றார் தந்தை.

இளைஞருக்கு ஒரே உற்சாகம். அமிர்தலிங்கம் உணர்ச்சியைக் கட்டுப்படுத்துவதில் சிரமப்படுபவர். பெருந்திரளான கூட்டத்தைக் கண்டதும் தன்னையே மறந்து விடுபவர். அவர் தன் உரையின் போது சமஷ்டிக் கோரிக்கையைக் கைவிட்டு பங்களாதேஷ் போன்று தனி நாட்டுக் கோரிக்கயை மேற்கொள்ள வேண்டிய தருணம் வந்து விட்டது என்றார். தேவைப்படின் அந்நிய உதவியையும் நாடவேண்டி வரும் என்றார்.

அரசாங்கமும் கொழும்புப் பத்திரிகைகளும் இதைப் பெரிது படுத்தின. அமிர்தலிங்கத்தின் பேச்சைப் பற்றி விசாரிக்குமாறு துப்பறியும் பொலிஸார் பணிக்கப்பட்டனர். அக் கூட்டத்திற்குப்போன பலரிடம் இருந்து துப்பறியும் பொலிஸார் வாக்கு மூலத்தைப் பதிவு செய்தனர். அரசாங்கத்தின் இந்த நடவடிக்கை தமிழ் மக்களிடையே பிரிவினைக் கருத்தை விதைத்தது.

காங்கேசன்துறையில் தந்தையும், அமிரும் முன் வைத்த தமிழரசுக் கட்சியின் கொள்கை மீள் பரிசோதனைக் கருத்தைச் செயற் படுத்து மாறு உணர்ச்சி மிக்க வாலிபர்கள் வலியுறுத்தினர். தமிழ் வாலிபர் உணர்ச்சிவசப்பட்டமைக்குக் காரணமும் இருந்தது. 1971 அரசாங்கம் பல்கலைக்கழக அனுமதிக்குப் போதனா மொழிவாரித் தரப்படுத்தலை அறிமுகம் செய்தது.

1942ல் இலங்கைப் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டது. அன்று முதல் 1957 வரை ஆங்கிலமே உயர் கல்விப் போதனா மொழி யாக இருந்தது. அதனால் சிங்கள மாணவர்களும் தமிழ் மாணவர்களும் உயர் பாடசாலை தராதரப் பத்திரப் பரீட்சையின் முடிவுகளின் அடிப்படையில் திறமையின் அடிப்படையில் பல்கலைக்கழகத்திற்கு அனுமதிக்கப்பட்டனர். 1957 முதல் சிங்களமும் தமிழும் போதனா மொழிகள் ஆக்கப்பட்டமையினால் ஜி. சி. ஈ. (உயர்) தரப் பரீட்சை சிங்களம், தமிழ் மொழிகளிலும் ஆங்கிலத்திலும் நடத்தப்பட்டது. அப் பரீட்சையில் மூன்று மொழிகளிலும் தோற்றும் மாணவர் பெறும் புள்ளிகள் நிரல்படுத்தப்பட்டு திறமையின் அடிப்படையில் மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவு செய்யப்பட்டனர்.



அத் தெரிவு முறையின் கீழ் தொழில் சம்பந்தமான பயிற்சி நெறிகளுக்கு தமிழ் மாணவர்கள் அதிக தொகையில் தெரிவானார்கள். 1964ம் ஆண்டில் விஞ்ஞான, பொறியியல் கற்கை நெறிகளில் 37.2 சதவீதத்தையும், வைத்தியம், பல் வைத்தியத் துறையில் 40.5 சதவீதத்தையும், விவசாயம் மிருக வைத்தியத் துறைகளில் 41.9 சதவீத இடங்களையும் இலங்கைத் தமிழ் மாணவர் பெற்றனர். இத் தொகையில் பெரும் பகுதி யாழ். குடா நாட்டு மாணவர்களுக்கே சென்றது. இது சிங்கள மக்களின் கண்டனத்திற்கு உள்ளாகியது.

யாழ். குடா நாட்டுப் பாடசாலைகள் சிறந்த ஆய்வு கூட வசதி களைக் கொண்டிருப்பதே அப் பிரதேச மாணவர்கள் தொகையாகப் பல்கலைக்கழகத்தில் பிரவேசிப்பதற்கான காரணம் என்று அவர்கள் சொன்னார்கள். குறிப்பாக, விஞ்ஞானப் பரிசோதனைகளைச் செய்து பழகும் சந்தர்ப்பம் யாழ். மாணவர்களுக்குஅதிகம் என்று சொன்னார்கள். அடுத்து, ஒரு குற்றச்சாட்டு சேர்க்கப்பட்டது. இலங்கைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர்களும் விரிவுரை யாளர்களும் தமிழ் மாணவர்களுக்குப் பாரபட்சம் காட்டுகின்றனர் என்பதே அது. உடனே கல்வி அமைச்சு பரிசோதனைப் பரிட்சைகளைக் கைவிட்டு எழுத்துப்பரீட்சை மூலம் மாணவர்களை அனுமதிக்க முடிவு செய்தது.

அதன் பின்பும் தமிழ் மாணவரின் தொகை குறையவில்லை. அதை அடுத்து இரண்டு வாதங்கள் முன்வைக்கப்பட்டன. முதலாவது, தமிழ் மாணவர்களின் விடைத் தாள்களைத் திருத்துவோர் கூடிய புள்ளி களை வழங்குகின்றனர் என்பது. அப்படிச் செய்வது சாத்தியம் இல்லை என்று பரீட்சைத் திணைக்களமும் வினாப் பத்திரங்களைத் தயாரிப் போரும் சொன்ன போதிலும் அரசியல் மட்டத்தில் இக் குற்றச்சாட்டு பலம் பெற ஆரம்பித்தது. இரண்டாவது வாதம், தமிழ் மாணவருக்கு கல்வி கற்கும் வசதிகள் அதிகமாக இருப்பதனால் தரப்படுத்தல் முறை அறிமுகப்படுத்தப்படல் வேண்டும் என்பது. தமிழ் மாணவருக்கும் சிங்கள மாணவருக்கும் உள்ள வாய்ப்புக்களைச் சமன்செய்தல் வேண்டும் என்ற வாதம் அரசாங்கத்தைக் கவர்ந்தது. விளைவு : போதனா மொழி வாரி தரப்படுத்தல்.

1971ல் அறிமுகம் செய்யப்பட்ட போதனா மொழி வாரித் தரப் படுத்தல் முறையை விளக்கிக் கல்வி அமைச்சு வெளியிட்ட பத்திரிகை அறிக்கையின் தமிழாக்கம் இது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



> சிங்கள மாணவர்களின் புள்ளிகளையும் தமிழ் மாணவர்களின் புள்ளிகளையும் கொண்ட இரண்டு வெவ்வேறு பட்டியல்கள் முதலில் தயாரிக்கப்படும். அவை ஒன்றோடொன்று தரப்படுத்தப்படும். இவ்வாறு தரப்படுத்தப்பட்ட புள்ளிகள் மீண்டும் ஒரே பட்டியல் ஆக்கப் படும். அந்தப் பட்டியல் பல்கலைக்கழக மாணவரைத் தெரிவு செய்யப் பயன் படுத்தப்படும்.

நடைமுறையில் இதன் விளைவு பல்கலைக்கழக அனுமதிப் பரீட்சை எடுக்கும் சிங்கள மாணவர்களினதும் தமிழ் மாணவர்களினதும் விகிதத்துக்கு ஏற்ப இருக்கும். இதனால் பல்கலைக் கழக அனுமதி பெறும் தமிழ் மாணவரின் தொகை குறைக்கப்பட்டு சிங்கள மாணவரின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும். 1971ல் போதனாமொழி வாரித் தரப்டுத்தல் தமிழ் மாணவரை எவ்வாறு பாதித்தது என்பதை சிங்கள வரலாற்றாசிரியரான கே. எம். டி. சில்வா ஆராய்ந்தார். அவரின் கண்டு பிடிப்பு இது. வைத்தியப் பிரிவில் இடம் பெறுவதற்குத் தமிழ் மாணவர் பெற வேண்டிய குறைந்த பட்ச புள்ளி 400க்கு 250 ஆகவும் சிங்கள மாணவருக்கு அது 229 ஆக இருந்தது. சுருக்கமாகக் கூறின், இரண்டு வெவ்வேறு போதனா மொழிகளில் ஒரே பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள், வெவ்வேறு குறைந்த பட்ச புள்ளிகளைப் பெற வேண்டி இருந்தது.

போதனா மொழிவாரி தரப்படுத்தல் முறை யாழ். குடா மாணவர்களைச் சினமடையச் செய்தது. தரப்படுத்தலை எதிர்க்குமாறு தமிழரசுக் கட்சியை வற்புறுத்தினர். மாணவர்களின் கோரிக்கையை தமிழரசுக் கட்சியின் பொதுச் சபை 1971 ஜனவரி 12இல் ஆராய்ந்தது. இங்கு தமிழரசுக் கட்சிக்கு எதிராக அன்று கூறப்பட்ட ஒரு குற்றச்சாட்டைப் பதிவு செய்தல் அவசியம். தரப்படுத்தலின் பாரதூரமான தாக்கத்தை தமிழரசுக் கட்சியினர் உணர்ந்து கொள்ளவில்லை. தமிழ் பேசும் மக்கள் எதிர்நோக்கிய பல்வேறு கல்விப் பிரச்சினைகளில் ஒன்றாகவே தரப்படுத்தலையும் பார்த்தனர். தமிழரசுக் கட்சியின் பொதுச் சபை நிறைவேற்றிய தீர்மானத்தில் நான்கு விடயங்கள் குறிப்பிடப் பட்டிருந்தன. தரப்படுத்தல், தமிழர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி மூடப்பட்டமை, வடக்கு-கிழக்கு மாகாணங்களுக்கு வெளியேயுள்ள பாடசாலைகளின் கஷ்டங்கள், தமிழ் ஆசிரியர்கள் புதிதாகப் பதவியில் சேர்க்கப்பட்டமை. இவ் விடயங்கள் சம்பந்தமாக பிரதம மந்திரி யுடனும், கல்வி அமைச்சருடனும் பேச்சுவார்த்தை நடத்துவதற்குத்



தந்தையின் தலைமையில் பதினொரு பேரைக் கொண்ட குழு நியமிக்கப்பட்டது.

அக் குழு பிரதம மந்திரியைப் பேட்டி காண நேரம் கேட்டது. கல்வி மந்திரியைச் சந்திக்குமாறு அவர் கூறிவிட்டார். கல்வி அமைச்சர் பதியுதீன் மஹ்மூத் ஆசிரியர் பிரச்சினைகளில் தான் சாதகமான நடவடிக் கை எடுப்பதாகவும் தரப்படுத்தல் விடயம் அரசாங்கக் கொள்கை யாதலால் தன்னால் ஒன்றும் செய்ய முடியாது எனவும் கூறிவிட்டார். நான் அரசாங்கக் கொள்கையை அமுல் செய்கிறேன். என்னால் ஒன்றுமே செய்ய முடியாது என்று கூறினார் பதியுதீன். தமிழ்ப் பல்கலைக்கழக விடயத்தைத் தந்தை கிளப்பினார். உங்கள் கோரிக்கைக்கு நான் இணங்கினால் பொன்னம்பலம் என்னைத் திட்டு வார் என்று சொல்லி விட்டு நழுவி விட்டார் அமைச்சர்.

பல்கலைக்கழக விடயத்தில் தமிழரசுக் கட்சிக்கும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸுக்கும் இடையே நிலவிய தகராற்றைச் சாதகமாகப் பயன்படுத்தி விட்டார் பதியுதீன். திருகோணமலையில் தமிழ்ப் பல்கலைக் கழகத்தை அமைத்து அப் பிரதேசத்தைப் பலப் படுத்துவதைத் தந்தை விரும்பினார். திருகோணமலை பறிபோகாது தடுக்க அவர் கைக்கொள்ள விரும்பிய நடவடிக்கை அது. ஆனால், ஜி. ஜி. பொன்னம்பலம் யாழ்ப்பாணத்தில் இந்துப் பல்கலைக் கழகத்துக் காகப் போராடினார். திருகோணமலையில் தமிழர் பலம் பெறுவதை விரும்பாத அரசாங்கம் தமிழரசுக் கட்சியின் கோரிக்கையை நிராகரிக்க இந்துப் பல்கலைக் கழகக் கோரிக்கையைப் பயன் படுத்தியது.

தரப்படுத்தலை நிறுத்த முடியாது போனமையும் தமிழ்ப் பல்கலைக்கழக இந்துப் பல்கலைக் கழகப் போட்டா போட்டியும் தங்கள் வருங்காலத்தைத் தாங்களே பார்த்துக் கொள்ள வேண்டும் என்ற உணர்வை வாலிபரிடையே தோற்றுவித்தது. தரப்படுத்தல் அறிமுகம் செய்யப்படுவதற்கு முன்பே தமிழ் மக்களின் வருங்காலத்தை நிர்ணயிக்கும் பொறுப்பை தாங்களே மேற்கொள்ள வேண்டும் என்ற எண்ணக்கரு இளைஞர் சிலரிடம் தோன்றிவிட்டது. 1969ல் தங்கத்துரையும், குட்டிமணியும் வேறு சில நண்பர்களும் பருத்தித்துறையில் அடிக்கடி சந்தித்து ஆயுதப் புரட்சி பற்றிப் பேசத் தொடங்கினர். அந்தக் குழுவில் பெரிய சோதி, சின்னச் சோதி, செட்டி, கண்ணாடி, பிரபாகரன், ஸ்ரீசபாரத்தினம், சிவகுமாரன் ஆகியோரும் சேர்ந்தனர். 1971ல் தரப்படுத்தல் நடைமுறைப்படுத்திய பின் யாழ், நூலக கேட்போர் கூடத்தில் தமிழ் மாணவர் பேரவை அங்குரார்ப்பணம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



செய்யப்பட்டது. சத்தியசீலன், சிவகுமாரன், அரியரத்தினம், முத்துக் குமாரசாமி போன்றோர் அக் கூட்டத்தில் பங்கு பற்றினர்.

அப்பொழுது சத்தியசீலன் வேலையற்ற பட்டதாரிகள் சங்கத் தலைவராக இருந்தார். அவர் தனது தலைமை உரையில் தமிழரசுக் கட்சி தன் தீவிரத்தை இழந்து விட்டது எனவும் மாணவரின் பிரச்சினைகளில் அது போதிய கவனம் செலுத்துவதில்லை எனவும் ஆசிரியர்களினதும் அரசாங்க ஊழியர்களினதும் பிரச்சினைகளிலேயே அக்கறை காட்டுவதாகவும் கூறினார். எமது (மாணவர்களின்) பிரச்சினைகளுக்குக் குரல் கொடுக்க புதிய அமைப்புத் தேவை என்றார் சத்தியசீலன். தமிழ் மாணவர் பேரவை யாழ். குடா நாட்டின் பல பகுதிகளிலும் தரப்படுத்தல் பற்றியும் அது யாழ். மாணவர்களை எவ்வாறு பாதிக்கப் போகிறது என்பது பற்றியும் கருத்தரங்குகளை நடத்தியது. ஊர்வலங்களும், பொதுக் கூட்டங்களும் நடத்தப்பட்டன. அக் கூட்டங்களில் மாணவர் பிரச்சினைகளில் கவனம் செலுத்தாததற் காக தமிழரசுக் கட்சி வன்மையாகக் கண்டிக்கப்பட்டது.

### புதிய பாதையை நோக்கி

மாணவர்களினதும் வாலிபர்களினதும் உணர்ச்சி கொப்பளித்துக் கொண்டிருந்த இந்தக் காலத்தில் தமிழரசுக் கட்சி தன் புதிய பாதையை நிர்ணயிப்பதற்காக சிறப்பு மகாநாடொன்றை 1972ஜனவரி 30ல் யாழ்ப் பாணத்தில் நடத்தியது. மகாநாட்டின் ஆரம்பத்தில் இருந்தே தமிழ் ஈழக் கோரிக்கையை வாலிபர்கள் வலியுறுத்தினர். மகாநாட்டுக்குத் தலைமை வகித்த இராசமாணிக்கம், தமிழ் வாலிபரின் உணர்வை எங்களால் உணர முடிகிறது. தகுந்த முடிவை நாம் நிச்சயம் எடுப்போம் என்றார். தந்தை செல்வா தமிழ் பேசும் மக்கள் இதுவரை ஐக்கிய சமஷ்டி இலங்கையில் சுயாட்சிப் பிரிவான தமிழரசையே கோரி வந்ததாகவும் சிங்கள மக்கள் அந்த நியாயமான தீர்வை நிராகரித்து விட்டதாகவும் சொன்னார். தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகள் யாவும் புறக்கணிக்கப்பட்டு, தமிழ் இனம் அரசாங்கத்தினால் பிரிவினைப் பாதையில் தள்ளப்பட்டுக் கொண்டிருக்கிறது என்றார். இலங்கை பிரிவினைப் பாதையில் தள்ளப்பட்டுக்கொண்டிருப்பதை நிரூபிக்க அவர் கொடுத்த காரணங்கள்:



1 இலங்கை ஓர் ஒற்றையாட்சி நாடு என்பது அரசியல் அமைப்புத் திட்ட வரைபில் சேர்க்கப்பட்டமை.

2 தமிழ் மக்களுக்குப் பாதுகாப்பு அளித்த சோல்பரித் திட்டத்தின் 29வது பிரிவு நீக்கப்பட்டமை.

3 சிங்களம் மட்டும் சட்டத்திற்கு அரசியல் அமைப்புத் திட்ட அந்தஸ்து கொடுக்கப்பட்டமை.

4 பௌத்த மதத்திற்குச் சிறப்புரிமை அளித்தமை.

அம்மகாநாட்டு முடிவில் இலங்கையில் புதிய அரசியல் திட்டம் இந்நாட்டுத் தமிழ்த் தேசிய இனத்தை மெல்ல மெல்ல இனக் கொலைக்கு ஆளாக்க வழி கோலியிருப்பதால், இந்த அடிமைச் சாசனத்தை இலங்கைத் தமிழ்த் தேசிய இனம் முற்றாக நிராகரிக்கிற தெனப் பிரகடனம் செய்வதோடு, அவ்வினத்தின் பிரதிநிதிகளாகப் பாராளுமன்றத்தில் உள்ளோர் எவரும் அதற்குச் சாதகமாக வாக்களிக் கக்கூடாது என்றும் அப்படி யாராவது வாக்களிக்க முயன்றால் அவர் பிரதிநித்துவப்படுத்தும் தொகுதி வாழ் மக்கள் அதற்கு எதிர்ப்புக் காட்டி அவரை வாக்களிக்காதவாறு தடுக்க வேண்டும் என்றும் இலங்கை தமிழரசுக் கட்சியின் இத் தேசிய சிறப்பு மகாநாடு வேண்டுகோள் விடுக்கிறது எனக் கூறிடும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அத் தீர்மானம் இலங்கைத் தமிழர் வரலாற்றில் மட்டுமல்ல இலங்கையின் சரித்திரத்திலேயே மிக முக்கிய திருப்புமுனையாக அமைந்தது. அத் தீர்மானம் தந்தை செல்வாவின் மேற்பார்வையில் மிகவும் கவனமாகத் தயாரிக்கப்பட்டது.

அத் தீர்மானத்தின் முற்பகுதி அப்போது தயாரிக்கப்பட்டுக் கொண்டிருந்த அரசியல் அமைப்புத் திட்டத்தை தமிழரசுக் கட்சி நிராகரிப்பதாகக் கூறியது. நிராகரிப்பதற்கான காரணங்களையும் விரித்து ரைத்தது. 1972ம் ஆண்டு அரசியல் அமைப்புத் திட்டம் தமிழ் பேசும் மக்களைப் பிரிவினைப் பாதைக்குத் தள்ளுவதாகத் தீர்மானத்தின் இரண்டாம் பகுதி எச்சரிக்கை செய்தது. பிரிவினைப் பாதைக்குத் தமிழ் மக்கள் செல்வதைத் தடுப்பதற்குரிய வழியையும் அப் பகுதி எடுத்துரைத்தது. அந்த மார்க்கம்: (1) சிங்கள மொழிக்கு அளிக்கப்பட்ட அதே அந்தஸ்து தமிழ் மொழிக்குச் சட்ட பூர்வமாக அளித்தல் (2) மத சார்பற்ற அரசாங்கம் (3) தமிழ் மக்களுக்கு முழுமையான குடியுரிமை(4) தமிழ் மக்களின் பாரம்பரிய தாயகத்தில் தமிழ்த் தேசிய

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இனத்தின் சுயாட்சி உரிமை அங்கீகரிக்கப்படுதல். அரசியல் நிர்ணய சபை தயாரித்த அரசியல் அமைப்புத் திட்ட வரைபை முற்றாக நிராகரிப்பதற்குக் கொடுக்கப்பட்ட காரணங்களை விரித்துரைக்கும் தீர்மானத்தின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்மானத்தின் வாசகம்:

1970ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் சிங்கள மக்கள் அளித்த கட்டளையை நிறைவேற்றுவதாகக் கூறும் அதே நேரத்தில், 1956ம் ஆண்டு தொடக்கம் அடுத்த ஐந்து பொதுத் தேர்தல்களில் தமிழ் மக்கள் மிகப் பெரும்பான்மையான வாக்குகள் மூலம், இந் நாட்டில் தமிழ் மக்கள் தம்மைத் தாம் ஆளக் கூடிய ஓர் சுயாட்சித் தமிழரசை- ஐக்கிய இலங்கைச் சமஷ்டியின் ஓர்அங்கமாக நிறுவ வேண்டும் என்று விடுத்துவந்த கோரிக்கை முற்றாகப் புறக்கணிக்கப்பட்டுத் தமிழ்த் தேசிய இனத்தின் அடிமைத் தளை இறுக்கப்பட்டிருந்தது. சோல்பரி அரசியல் திட்டத்தில் சிறுபான்மை சமுதாயங்களுக்குப் பாரபட்சமான சட்டங்கள் நிறைவேற்றப்படுவதைத் தடுப்பதற்காக ஏற்றுக் கொள்ளப் பட்ட 29வது விதி முற்றாக நீக்கப்பட்டு, சாதாரண பெரும்பான்மை வாக்கினால் எச் சட்டத்தையும் ஆக்கிச் சிறுபான்மை சமுதாயங்களை நிர்மூலமாக்க வழி வகுக்கப்பட்டிருக்கிறது.

தமிழ் மக்களால் 1956ம் ஆண்டு தொடக்கம் ஏகோபித்து நிராகரிக் கப்பட்ட தனிச் சிங்களச் சட்டம் அரசியல் சட்ட அந்தஸ்துக்கு உயர்த் தப்பட்டு, வருங்காலத்தில் எவ்வித மாற்றமும் ஏற்படுத்துவது மிகக் கடினமானதாக ஆக்கப்பட்டிருக்கிறது. தமிழ் மொழிக்குச் சட்டபூர்வ மான எவ்வித அந்தஸ்தும் அளிக்காது விரும்பினால் சட்ட விதிகளை நிறைவேற்றவோ அன்றேல் உதாசீனம் செய்யவோ கூடிய 1958ஆம் ஆண்டுத் தமிழ் மொழி உபயோகச் சட்டத்தை மாத்திரம் குறிப்பிடுதன் மூலம் தமிழினதும் தமிழ் இனத்தினதும் சிறுமைக்கு இவ் அரசியல் திட்டத்தில் முத்திரை இடப்பட்டிருக்கிறது.

நாடு முழுவதும் சிங்களமே நீதி, நிர்வாக, பதிவு மொழியாக நிலை நாட்டப்பட்டிருக்கும் நேரத்தில் வடக்கு-கிழக்கு மாகாணத் தில்தானும் தமிழ் நீதி, நிர்வாக பதிவு மொழியாக ஏற்றுக் கொள் ளப்படாது, வருங்கால பாராளுமன்றம் விரும்பினால் இவ்விரு மாகா ணங்களிலும் வேறு ஒழுங்கு செய்யலாம் என்று விதித்திருப்பதன் மூலம், அரசியல் சட்டத்தில் தமிழுக்கு ஒரு சிறிதும் இடம் அளிக்கக் கூடாது என்ற ஆட்சியாளரின் கொள்கை உறுதிப்படுத்தப் பெற்றி ருக்கிறது.



பௌத்த மதத்திற்கு அரசியல் சட்ட மூலம் தனி அந்தஸ்து அளித்து ஏனைய மதங்களும் அவற்றை அனுஷ்டிப்போரும் இந் நாட்டின் இரண்டாம் தர பிரஜைகள் என்பது நிலை நாட்டப்பட்டிருக் கிறது. இந் நாட்டுத் தமிழ் மக்களில் ஒரு சாராரை நாடற்றவர்களாகவும் ஏனையோரைச் சந்தேகப் பிரஜைகளாகவும் ஆக்கியுள்ள குடியுரிமைச் சட்டங்களுக்குப் பதிலாக அரசியல் சட்டத்தில் குடியுரிமை பற்றிய அம்சங்கள் வரையறுக்கப்பட வேண்டும் என்ற தமிழினத்தின் கோரிக்கை புறக்கணிக்கப்பட்டு தமிழ் மக்கள் இன்றைய அநீதியான குடியுரிமைச் சட்டங்களின் கீழ் தொடர்ந்தும் இடர்படும் நிலைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள்.

புதிய அரசியல் சட்டத்தின் 18வது விதியின் முதலாம் பகுதியால் அளிக்கப்பட்ட முழுமையற்ற அடிப்படை உரிமைகள் தானும் அந்த விதியின் 2ஆம் பகுதியினால் பறிக்கப்பட்டிருக்கின்றன. இந் நாட்டில் சாதியை அழித்து சாதியின் பெயரால் இழைக்கப்படும் கொடுமைக ளுக்கு முற்றுப்புள்ளி வைக்கத்தக்க எவ்விதப் பாதுகாப்பும் இவ் அரசி யல் திட்டத்தில் இடம் பெறவில்லை. தமிழ் மக்கள் அரசாங்க நிறுவ னங்களோடும் நீதிமன்றங்களோடும் நாட்டின் எப்பாகத்திலும் தமிழில் தொடர்பு கொண்டு, தமிழில் பதில் பெற்று, தமிழில் கருமம் ஆற்றிய, தமிழில் நீதி பெறும் மறுக்க முடியாத மனித உரிமைதானும் இவ் அரசியல் திட்டத்தினால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

இந் நாட்டில் தனியரசு செலுத்திய தமிழ் இனம், எவ்வித அரசி யல், மொழி, மத, பொருளாதார உரிமைகளும் அற்றவர்களாக ஆக்கப் பட்டு அவர்களுடைய இன, கலாசாரத் தனித்துவத்தை அழித்துப் பொருளாதார வாழ்வைப் பறித்து மெல்ல மெல்ல இனக் கொலைக்கு இவ் அரசியல் திட்டம் வழி வகுக்கிறது. எனவே, இலங்கைத் தமிழ்த் தேசிய இனம் இவ் அடிமைச் சாசனத்தைப் பூரணமாக நிராகரிக்கின்றது என்பதை இம் மகாநாடு பிரகடனஞ் செய்யும் அதே நேரத்தில், தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக நாடாளுமன்றத்தில் இருப்போர் எவரும் இதற்குச் சாதகமாக வாக்களிக்கக் கூடாது என்றும், அப்படி எவரும் வாக்களியாது அவ்வத் தொகுதி வாக்காளர் தமது எதிர்ப்பைக் காட்ட வேண்டும் என்றும் இம் மகாநாடு தன்மானத் தமிழ் மக்களைக் கோரு கிறது. மேலும், தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகள் யாவும் புறக்கணிக்கப்பட்டுத் தமிழ் இனம் அரசாங்கத்தினால் பிரிவினைப் பாதையில் தள்ளப்பட்டுக் கொண்டிருக்கும் இந் நேரத்தில்,

(அ) சிங்கள மொழிக்கு அளிக்கப்பட்டிருக்கும் அதே அந்தஸ்து தமிழ் மொழிக்கும் சட்டபூர்வமாக அளிக்கப்பட வேண்டும் என்றும்,

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



(ஆ) இந் நாட்டு அரசாங்கம் மதசார்பற்றதாகப் பிரகடனஞ் செய்யப்பட வேண்டும் என்றும்,

(இ) இந் நாட்டைத் தமது தாயகமாகக் கொண்டிருக்கும் தமிழ் மக்கள் எல்லோரதும் முழுமையான குடியுரிமைக்கு உத்தரவாதம் அளிக்கப்பட வேண்டும் என்றும்,

(ஈ) தமிழ் மக்களின் பாரம்பரியமான தாயகத்தில் தமிழ்த் தேசிய இனத்தின் சுயாட்சி உரிமை அங்கீகரிக்கப்பட வேணடும் என்றும் இம் மகாநாடு கோருகிறது.

இழந்துவிட்ட இவ்வுரிமைகளை மீண்டும் பெறுவதற்கு எவ்வித தியாகத்திற்கும் தயாராக நடவடிக்கை எடுக்குமாறும் தென்னிலங்கையில் ஆட்சியாளரின் செயலினால் தம் தொழில், கல்வி வசதிகளை இழந்து வரும் தமிழ் மக்கள் தம் உடைமைகளை எல்லாம் வடக்கு-கிழக்கு மாகாணங்களுக்கு மாற்றித் தமக்கும் தமிழ் இனத்திற்கும் தம் சொந்தத் தாயகத்தில் வளமான வாழ்வை அமைக்க உடன் நடவடிக்கையை ஆரம்பிக்குமாறும் இம் மகாநாடு வேண்டுகிறது.

**தனிநாட்டுக் கோஷம்**

இத் தீர்மானம் வாலிபருக்கும் புது வேகத்தைக் கொடுத்தது. தொகுதி தோறும் ஆர்ப்பாட்ட ஊர்வலங்களும் பொதுக் கூட்டங்களும் நடத்தப்பட்டன. சமஷ்டி என்ற பேச்சுப் படிப்படியாகக் குறைந்து தனிநாட்டுக் கோஷம் உரக்க ஆரம்பித்தது. யாழ்ப்பாணத் தீர்மானத்தின் பிரதிகளை பிரதம மந்திரிக்கும் அரசியல் அமைப்பு விவகார அமைச்சருக்கும் தந்தை அனுப்பி வைத்தார்.

ஆனால், அவர் தன் சமரச முயற்சியை நிறுத்தவில்லை. அரசியல் அமைப்பு விவகார அமைச்சர் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வாவைச் சந்தித்தார். தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளான மொழியுரிமையையும் சுயாட்சி உரிமையையும்அரசியல் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளும்படி சொன்னார்."என்னால் ஒன்றுமே செய்யமுடியவில்லை. பீலிக்சைப் போய்ப் பாருங்கள்" என்று சொல்வி விட்டார் கொல்வின். உண்மையில் கொல்வினும், என். எம்.மும் மந்திரி சபைக்குள் தமிழ் மக்களுக்காக வூாதாடினர். ஆனால், பீலீக்ஸ் ஆர். டயஸ் பண்டாரநாயக்காவின் தலைமையில் உள்ள குழு அதற்கு இணங்கவில்லை. தந்தை பீலிக்சையும் போய்ப் பார்த்தார். என்னால் ஒன்றும் செய்ய முடியாது என்று அவரும் கையை விரித்து விட்டார்.



பெப்ரவரி முதலாம் வாரத்தில் கூடிய தமிழரசுக் கட்சி செயற்குழு வட்டத்தில் தனது சந்திப்புக்கள் தோல்வி கண்டதைத் தந்தை அறிவித்தார். இனிமேல் தமிழ் மக்களின் உரிமைகளைப் பெறுவதற்கு அரசாங்கத்தை நம்பி இருப்பதில் பயனில்லை. போராடுவதைத் தவிர வேறு வழியில்லை என்று தந்தை கூறினார். அக் கூட்டத்தில் இரண்டு முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டன. அவை:

(அ) தமிழர் உரிமைப் போராட்டத்திற்குச் சர்வதேச ஆதரவைத் திரட்டுவது.

(ஆ) போராட்டத்துக்குத் தமிழ் மக்களின் ஆதரவைத் திரட்டுவது.

தமிழ் மக்கள் பிரச்சினையைச் சர்வதேசப்படுத்தும் நடவடிக்கையின் முதற்படியாக இனத்தால், மொழியால், பண்பாட்டால், மதத்தால் இலங்கைத் தமிழருடன் பிணைக்கப்பட்ட தமிழ் நாட்டுச் சகோதரர்களின் ஆதரவையும் அனுதாபத்தையும் முதலில் திரட்டுவது என்ற முடிவு செய்யப்பட்டது. அம்முடிவின்படி ஆ. இராசரத்தினம் தந்தையின் தூதராகத் தமிழ் நாடு சென்றார். தந்தையின் விஜயத்துக்கான எல்லா ஒழுங்குகளையும் செய்யும் பணி அவரிடம் ஒப்படைக்கப்பட்டது.அவரும் தமிழ் இளைஞர் பேரவைத் தலைவர் இரா. ஜனார்த்தனமும் சேர்ந்து தந்தையின் விஜயத்துக்கான ஒழுங்குகளைச் செய்தனர்.

பெப்ரவரி மூன்றாம் வாரத்தில் தந்தை தமிழ் நாட்டுக்கு விஜயம் செய்தார். அவருடன் அமிர்தலிங்கமும் அவருடைய மனைவி மங்கையற்கரசியும், சுதந்திரன் ஆசிரியர் கோவை மகேசனும் வேறு சிலரும் போனார்கள். அவர்கள் தமிழக கவர்னர் கே.கே. ஷா, முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி, தி. மு. க. பொதுச் செயலாளர் நாவலர் இரா. நெடுஞ்செழியன், தமிழக அமைச்சர்கள், தமிழரசுக் கழகத் தலைவர் ம. பொ. சி., திராவிடக் கழகத் தலைவர் ஈ வே. ராமசாமிப் பெரியார், முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விஸ்வநாதம், முன்னாள் முதலமைச்சர் மு. பக்தவச்சலம், முஸ்லிம் லீக் தலைவர் காயிதே மில்லத், தாபன காங்கிரஸ் தலைவர் கே. காமராஜ், எம்.ஜி.ஆர்., சிவாஜி மற்றும், பல தொழிலதிபர்கள், சட்ட வல்லுனர்கள் கல்விமான்கள் ஆகியோர் உட்படப் பலரைச் சந்தித்தனர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எம். ஜி. ஆரைச் சந்தித்தபோது நடந்த சம்பவம் இது. தமிழ் மக்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளைப்பற்றித் தந்தை சொன்னதும் அவர் உணர்ச்சி வசப்பட்டார். உங்களுக்கு என்ன வேண்டும்? பணமா ஆயுதமா? என்று கேட்டார். தந்தை நெகிழ்ந்து போனார். எட்டி எம். ஜி. ஆரின் கைகளைப்பற்றியபடி, "இரண்டும் வேண்டாம். உங்கள் ஆதரவும் ஆசீர்வாதமும்தான் தேவை" என்று சொன்னார்.

சென்னை மாநகராட்சி தந்தை செல்வாவுக்குப் பொது வரவேற்பளித்தது. தந்தை செல்வாவும் அமிர்தலிங்கமும் இலங்கைத் தமிழர் பிரச்சினையைத் தெளிவாக எடுத்துரைத்தனர். எல்லாத் தலைவர்களும் தமது ஆதரவை உவகையுடன் அளித்தனர். எந்தக் கட்சியுடனும் தந்தை விசேஷ உறவு கொள்ளவில்லை. இரத்த பாசத்தினால் பிணைக்கப்பட்ட ஒரே இனம் என்ற வகையில் தமிழ் நாட்டு மக்களினதும் அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகள் அனைத்தினதும் அவர்கள் மூலம் இந்தியா அரசினதும் தார்மீக ஆதரவை, மனித உரிமை கோரி ஈழத் தமிழ் தேசிய இனம் ஆரம்பிக்க இருக்கும் தர்மப் போருக்கெனக் கோரி நிற்கின்றோம் என்று இரண்டு வரவேற்புகளுக்கும் பதிலளித்துப் பேசும் போது தந்தை கூறினார். அவரின் கோரிக்கைக்குத் தமிழ் நாட்டில் உள்ள எல்லா அரசியல் கட்சிகளும் ஆதரவளித்தன. தமிழ் நாட்டு விஜயத்தின் போது தந்தை சில முக்கிய அணுகு முறைகளைக் கையாண்டார். அவை:

1 இலங்கைத் தமிழ் மக்கள் ஆரம்பிக்கப் போவது தர்மயுத்தம் என்பதைத் தெளிவாக்கினார்.

2 அதற்குத் தமிழ் நாட்டு மக்களின் தார்மீக ஆதரவையே கோரினார்.

3 இலங்கைத் தமிழ் மக்களின் தர்மயுத்தம் வெற்றி பெறுவதற்கு தமிழ் மக்களின் தார்மீக ஆதரவு தேவைப்படுவதைப் போன்றே இந்தியாவின் ஆதரவும் தேவை என்பதைத் தெளிவுபடுத்தினார்.

4 தமிழ் நாட்டின் எல்லா அரசியல் கட்சிகளினதும் ஆதரவைக் கோரினார்.

தந்தையின் தமிழ் நாட்டு விஜயம் பெருவெற்றி அளித்தது. அவர் சந்தித்த அத்தனைபேரும் ஒருமுகமாக இலங்கைத் தமிழரின் தர்ம



யுத்தத்துக்கு ஆதரவளித்தனர். இனப்பற்றோடு உருக்கமான அனுதாபத்தைத் தெரிவித்தனர். பிரதம மந்திரி இந்திரா காந்தியிடமும் இந்திய அரசின் உதவியுடனும் உலகின் பல பாகங்களிலும் இலங்கைத் தமிழரின் நிலையை விளக்குவதற்கு முன் வந்தனர். சென்னை மாநகர மன்றம் அளித்த வரவேற்பின் போது மேயர் காமாட்சி ஜெயராமன் ஐந்து கோடி தமிழ் மக்களின் ஆதரவு உங்களுக்கு உண்டு என்ற துணிவுடன் உங்கள் தர்ம யுத்தத்தை ஆரம்பியுங்கள் என்று சொன்னார்.

தான் சந்தித்த ஒவ்வொருவருக்கும் தந்தை அளித்த உத்தரவாதம் இது தான். துவக்கப்படவுள்ள தர்மப்போர் சாத்வீகப் போராகவே அமையும். காமராஜருடனான சந்திப்பின் போது தார்மீகப் போர் எவ்வாறு அமைய வேண்டும் என்பது விரிவாக விவாதிக்கப்பட்டதாக அமிர்தலிங்கம் எனக்குச் சொன்னார். காந்திஜி பின்பற்றிய வழிகளையே தானும் பின்பற்றப் போவதாகத் தந்தை விளக்கினார். அதை மகிழ்ச்சியுடன் ஆமோதித்த காமராஜர் இந்திய சுதந்திர போராட்ட காலத்தில் தான் கலந்து கெண்ட சத்தியாக்கிரகங்கள் பற்றிய விபரங்களைக் கூறினார். சாத்வீகப் போராட்டத்துக்குள்ள பலம் ஆயுதப் போராட்டத்துக்கு இல்லை என்பது எமது அனுபவம் என்று காமராஜர் கூறியதாக அமிர்தலிங்கம் சொன்னார்.

## தமிழர் ஒற்றுமையின் ஆரம்பம்

சத்தியாக்கிரகமும் ஒத்துழையாமையும் வெற்றி பெறுவதற்கு மக்கள் சக்தி ஒன்று திரட்டப்பட வேண்டும் என்று காமராஜர் கூறினாராம். அதை ஆமோதித்த தந்தை 1961ம் ஆண்டுச் சத்தியாக்கிரக அனுபவத்தைக் காமராஜருக்கு விளக்கிக் கூறியதோடு தமிழ்க் கட்சிகளை இணைப்பதற்கான ஆயத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டு விட்டதாகச் சொன்னார்.

தமிழ்க் கட்சிகளை இணைக்கும் முதல் முயற்சி யாழ்ப்பாணத் தீர்மானம் எடுக்கப்படுவதற்கு ஒரு வருடத்திற்கு முன்பே ஆரம்பித்தது. தமிழரசுக் கட்சியைச் சேர்ந்தோர் 1971 பெப்ரவரி 7 இல் எல்லாத் தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகளையும் கொண்ட கூட்டம் ஒன்றை வல்வெட்டித் துறையில் நடத்தினர். அம்மகாநாட்டில் தமிழ் மக்களின் உரிமைகளைக் கூட்டாகக் கோர வேண்டும் என்ற விடயத்தில் இணக்கம் காணப்பட்டது. ஆனால், அந்த இணக்கத்தை முன் எடுத்துச் செல்வதற்கு எவ்வித முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



யாழ்ப்பாணத் தீர்மானத்தைத் தொடர்ந்து 1972 மே 14இல் திருகோணமலையில் தமிழ்க் கட்சிகளை ஓரணியில் சேர்ப்பதற்கான கூட்டத்தை தந்தை செல்வா கூட்டினார். அக் கூட்டத்துக்குத் தமிழரசுக் கட்சி, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், ஈழத் தமிழர் ஒற்றுமை முன்னணி, அகில இலங்கைத் தமிழர் மகாநாடு ஆகிய அரசியல் கட்சிகளும், தொழிற் சங்கங்கள், வாலிபர் முன்னணிகள், மாணவர் சபைகள் ஆகியவற்றின் பிரதிநிதிகளும் அழைக்கப்பட்டனர். அவர் தலைமையுரையில் சிங்களவரின் அபிலாஷைகளையும் அக்கறைகளையும் பூர்த்தி செய்யும் அரசியல் அமைப்புத் திட்டத்தை அரசாங்கம் தயாரித்துள்ளதாகவும் தமிழ் மக்களின் உரிமைகள் அறவே புறக்கணிக்கப்பட்டுள்ளதாகவும் சொன்னார். தமிழ் பேசும் மக்கள் தமது கோரிக்கைகளை ஒரே குரலில் முன்வைக்க வேண்டும். அப்பொழுதுதான் அக் கோரிக்கைகளுக்கு சர்வதேச ஆதரவு கிடைக்கும் என்று தந்தை சொன்னார். இலங்கைத் தமிழ் மக்கள் ஒரே குரலில் பேசுவதையே தமிழ் நாட்டின் தலைவர் களும் விரும்பினர் என்பதையும் சொன்னார். தமிழர் கூட்டணி என்ற அமைப்பை உருவாக்குவதென அக் கூட்டத்தில் முடிவு செய்யப் பட்டது. தலைவராகத் தந்தை செல்வா தெரிவானார். கணேச மூர்த்தியும், காசி ஆனந்தனும் கூட்டுச் செயலாளர்களாகத் தெரிவானார்கள். எஸ். கதிரவேலுப்பிள்ளை, ரி. திருநாவுக்கரசு, எ. குமரகுரு ஆகியோர் கூட்டுப் பொருளாளர்களாகத் தெரிவு செய்யப் பட்டனர். எல்லாக் கட்சிகளையும் அமைப்புக்களையும் பிரதிநிதித்து வப்படுத்தக் கூடிய வகையில் செயற்குழு தெரிவாகியது.

1972 மே 22ல் புதிய அரசியல் அமைப்புத் திட்டம் நடைமுறைக்கு வந்தது. அன்று இலங்கை ஓர் சனநாயக குடியரசாகியது. குடியரசு தினம் விடுமுறை தினமாகப் பிரகடனஞ் செய்யப்பட்டது. குடியரசு தினத்தைத் தமிழ் பேசும் மக்களின் எதிர்ப்பைக் காட்டுவதற்குப் பயன்படுத்துவதென்று தமிழர் கூட்டணி முடிவு செய்தது. குடியரசு தின விழாவைத் தமிழ் பேசும் பாராளுமன்ற உறுப்பினர் பகிஷ்கரிக்க வேண்டும் எனவும் அது முடிவு செய்தது.

அந்த இரண்டு முடிவுகளும் நடைமுறைப்படுத்தப்பட்டன. குடியரசு தினக் கொண்டாட்டத்தை தமிழ் மக்களால் தெரிவு செய்யப் பட்ட 19 எம் .பி.க்களில் 15 பேர் பகிஷ்கரித்தனர். யாழ்ப்பாண எம். பி. எவ். எக்ஸ். மாட்டின், தமிழ்க் காங்கிரஸால் வெளியேற்றப்பட்ட



நல்லூர் எம்.பி. அருளம்பலம், வட்டுக்கோட்டை எம்.பி.தியாகராசா, மட்டக்களப்பு இரண்டாவது எம். பி. ராஜன் செல்வநாயகம் ஆகியோர் குடியரசு தின விழாவில் கலந்து கொண்டனர். வடக்கு-கிழக்கு மாகாணங்களில் அன்று துக்கதினம் அனுஷ்டிக்கப்பட்டது. அரசியல் அமைப்புப் பிரதிகள் தீயில் இடப்பட்டன. மாணவர்கள் வகுப்புக் களைப் பகிஷ்கரித்தனர். கடைகள் மூடப்பட்டன. பஸ்கள் ஓட வில்லை.

வண்ணார்பண்ணை நாவலர் ஆச்சிரமத்தில் பொதுக் கூட்டம் ஒன்று நடாத்தப்பட்டது. அக் கூட்டத்திற்குத் தலைமை தாங்கிய தந்தை செல்வா புதிய அரசியல் அமைப்புத் திட்டம் தமிழர்களை இரண்டாம் தரப் பிரஜைகள் ஆக்கிவிட்டதாகக் கூறினார். தமிழ் இனமும் சிங்கள இனமும் தனித் தனியாக இயங்கி வந்ததை வரலாற்று மேற்கோள் களுடன் விளக்கிய தந்தை இரு இனங்களும் தனித்தனியே சுதந்திரமாக வாழும் உரிமையைக் கொண்டுள்ளன என்று கூறினார். புதிய அரசியல் அமைப்புத் திட்டம் தமிழ் மக்களை எல்லா விதத்திலும் பாதிக்கப் போவதாக எச்சரிக்கை செய்தார்.

பாராளுமன்றத்தில் தமிழரின் பிரதிநிதித்துவம் எவ்வாறு குறைந்து வந்துள்ளது என்பதைப் புள்ளி விபரங்களுடன் நிரூபித்தார். 1947 தேர்தலில் 95 உறுப்பினரைக் கொண்ட பாராளுமன்றத்தில் சிங்கள வருக்கு 70 இடங்களும் தமிழருக்கு 20 இடங்களும் கிடைத்தன. சனத் தொகை விகிதாசாரப்படி 95 எம். பி. க்கள் உள்ள பாராளுமன்றத்தில் சிங்களவருக்கு 66 இடங்களும் தமிழருக்கு 22ம் கிடைக்க வேண்டும். பிரஜாவுரிமைச் சட்டங்களின் விளைவாக 1952 தேர்தலில் சிங்களப் பிரதிநிதிகள் தொகை 75 ஆக அதிகரித்தது. தமிழரின் பங்கு 13 ஆகக் குறைந்தது. 1956 தேர்தலிலும் இவ்வாறே இருந்தது. 1960ல் பாராளுமன்ற உறுப்பினர் தொகை 151 ஆக உயர்த்தப்பட்ட பின் சிங்களவருக்கு 106 தொகுதிகளும் தமிழருக்கு 35 தொகுதிகளும் கிடைத்திருக்க வேண்டும். ஆனால், 1960 ஜூலை தேர்தலில் சிங்களவர் 121 இடங்களையும் தமிழர் 18ஐயும் பெற்றனர்.1965 தேர்தலில் சிங்களவருக்கு 122 இடங்களும் தமிழருக்கு 17 இடங்களும் கிடைத்தன. 1970 தேர்தலில் சிங்களவர் 123 இடங்களையும் தமிழர் 19 இடங்களையும் பெற்றனர். 1972 அரசியல் அமைப்புத் திட்டம் இந்த அநீதியை நிலை பெறச்செய்யப் போகிறது என்று தந்தை சொன்னாராம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



குடியரசு அரசியல் அமைப்புத் திட்டத்திற்கான எதிர்ப்பை வாலிபர்கள் கிராம மட்டத்துக்கு எடுத்துச் சென்றனர். கிராமம் தோறும் ஆர்ப்பாட்டங்கள் நடாத்தப்பட்டன. தேசியக் கொடியும் அரசியல் அமைப்புத் திட்டத்தின் பிரதிகளும் எரிக்கப்பட்டன. கிராம மட்ட ஆர்ப்பாட்டங்கள் அரசாங்கத்துக்குப் பெரும் கவலையளித்தது. வாலிபத் தலைவர்களைக் கைது செய்யுமாறு பொலிசாருக்கு உத்தரவு கொடுக்கப்பட்டது, எழுபதுக்கு மேற்பட்ட வாலிபர்களைப் பொலிசார் கைது செய்தனர். மாவை சேனாதிராசா, காசி ஆனந்தன், ஈ. எஸ். சுப்பிரமணியம், ஆனந்த விநாயகம் ஆகியோர் அவர்களில் முக்கியமானவர்கள்.

தமிழர் கூட்டணி மட்டக்களப்பில் ஜுன் 5ம் திகதி பொதுக் கூட்டம் ஒன்றை நடத்தியது. தந்தை செல்வா தலைமை வகித்தார். புதிய அரசியலமைப்புத் திட்டத்திற்கு எதிரான கிளர்ச்சியைத் தொடர்ந்து நடத்துமாறு தந்தை வேண்டுகோள் விடுத்தார். ஆர்ப்பாட்டங்களையும், எதிர்ப்பு நடவடிக்கைகளையும் தொடருமாறும் சொன்னார். ஊர்வலங்களையும், ஆர்ப்பாட்டங்களையும் அரசாங்கம் தடை செய்தது.

புதிய அரசியல் அமைப்புத் திட்டம் அமுலுக்கு வந்தவுடன் பாராளுமன்றத்துக்குத் தேசிய அரசாங்க சபையென்ற புதுப் பெயர் கொடுக்கப்பட்டது. தேசிய அரசாங்க சபை உறுப்பினர் புதிதாக விசுவாசப் பிரமாணம் எடுக்க வேண்டிய நிலைமையும் ஏற்பட்டது. தமிழர் கூட்டணி எம். பி. க்கள் எல்லோரும் தமது பகிஷ்கரிப்பைத் தொடர வேண்டும் என்று வாலிபர்கள் வற்புறுத்தினர். அரசியல் நிர்ணய சபையைப் பகிஷ்கரித்த எம். பி. க்கள் அச் சபை உருவாக்கிய புதிய அரசியல் அமைப்புத் திட்டத்தின் கீழ் உருவான தேசிய அரசாங்க சபையையும் பகிஷ்கரிக்க வேண்டும் என அவர்கள் வற்புறுத்தினர். அந்தப் பகிஷ்கரிப்பு உண்மையான தாக்கத்தை ஏற்படுத்த வேண்டுமாயின் எம், பி. க்கள் அனைவரும் இராஜினாமாச் செய்ய வேண்டும் என அவர்கள் வற்புறுத்தினர்.

வாலிபர்களின் இக் கோரிக்கையை ஆராய்வதற்காக தமிழர் கூட்டணியின் நடவடிக்கைக் குழு தமிழ் காங்கிரஸ் அலுவலகத்தில் 1972 ஜுன் 25ல் கூடியது. நூற்றுக்கணக்கான வாலிபர்கள் தமிழ்க் காங்கிரஸ் அலுவலகத்துக்கு வெளியே குழுமி நின்று ஆர்ப்பாட்டம் செய்தனர். அவர்கள் போட்ட கூச்சலுக்குள் கூட்டத்தை நடத்த



முடியாது போனமையினால் அது ஒத்திவைக்கப்பட்டது. பின்பு நடவடிக்கைக் குழு கோப்பாயிலுள்ள கதிரவேற்பிள்ளையின் வீட்டில் கூடியது. நீண்ட நேர விவாதத்துக்குப் பின்பு வாலிபர்களின் பதவி துறப்புக் கோரிக்கையை நடவடிக்கைக் குழு நிராகரித்தது. பாராளுமன்ற உறுப்பினர்கள் பதவி துறப்பதால் பலன் இல்லை என்று முடிவு செய்யப்பட்டது. பாராளுமன்ற உறுப்பினர்கள் பதவி துறப்பதினால் தமிழ் மக்களின் குரல் கேட்கப்படாமலே போய் விடும் என்ற தந்தையின் வாதத்தை எல்லோரும் ஏற்றுக் கொண்டனர்.

அத்துடன், அரசாங்கத்தின் பரிசீலனைக்கு ஆறு அம்சக் கோரிக்கை ஒன்றை முன்வைப்பது எனவும் அக் கோரிக்கைக்கு அரசாங்கம் இணங்காவிடின் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தமிழ் இனத்தின் விடுதலைக்கான சாத்வீகப் போராட்டத்தில் இறங்குவது எனவும் தீர்மானிக்கப்பட்டது. கூட்டணி விடுத்த ஆறு அம்சக் கோரிக்கைகள்:

★ அரசியல் அமைப்பில் சிங்கள மொழிக்கு அளிக்கப்பட்டிருக்கும் அதே இடம் தமிழ் மொழிக்கும் அளிக்கப்பட வேண்டும்.

★ இலங்கை மதசார்பற்ற அரசாகப் பிரகடனம் செய்யப்பட்டு எல்லா மதங்களையும் சமமாகப் பேணி வளர்க்க வேண்டும்.

★ இந்நாட்டைத் தமிழ்த் தாயகமாகக் கருதும் தமிழ் பேசும் மக்கள் எல்லோருக்கும் பூரண குடியுரிமை வழங்கும் குடியுரிமைச் சட்டங்கள் அரசியல் அமைப்பில் அளிக்கப்பட வேண்டும்.

★ நீதிமன்றம் மூலம் நிலை நாட்டப்படக் கூடிய அடிப்படை உரிமைகள் அரசியல் அமைப்பில் அளிக்கப்பட வேண்டும்.

★ சாதியையும் பிறப்பினால் உயர்வு தாழ்வு கற்பிப்பதையும் அரசியல் சட்ட மூலம் ஒழிக்க வேண்டும்.

★ அதிகாரம் பரவலாக்கப்பட்டு மக்கள் பங்கு கொள்ளும் சனநாயக ஆட்சி அமைப்பு ஏற்பட வேண்டும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மூன்று மாதங்களுக்குள் அரசாங்கத்தின் பதில் கிடைக்காவிட்டால் நேரடி நடவடிக்கையில் இறங்குவது என்று முடிவு செய்யப்பட்டது. இக் கோரிக்கைகளை தந்தை செல்வா பிரதமருக்கு அனுப்பினார். பதில் கிடைக்கவில்லை. நினைவூட்டல் கடிதத்தை தந்தை அனுப்பினார். உங்கள் தீர்மானம் கிடைத்தது என்ற பதில் பிரதமரிடமிருந்து தந்தைக்குக் கிடைத்தது. தமிழர் கூட்டணி கொடுத்த மூன்று மாதக்கெடு செப்டம்பர் மாதம் 30ம் திகதியுடன் முடிவுறவிருந்தது. ஆனால், அரசாங்கம் எதுவித விடையும் அனுப்பவில்லை.

வாலிபர்கள் தமது வற்புறுத்தலைத் தீவிரமாக்கினர். எல்லா எம்.பி.க்களும் தேசிய அரசாங்க சபையிலிருந்து இராஜினாமாச் செய்ய வேண்டும் என வற்புறுத்தினர். எல்லா எம். பிக். களும் இராஜினாமாச் செய்வதை தந்தை விரும்பவில்லை. அரசாங்கத்தின் பிரசாரத் தந்திரமும் வாலிபர்களைத் தூண்டி விடும் வகையில் அமைந்திருந்தது. தமிழ் மக்களில் கணிசமான தொகையினர் புதிய அரசியல் திட்டத்தை ஏற்றுக் கொண்டுள்ளனர் என்று அரசாங்கம் பிரச்சாரம் செய்தது. இடதுசாரி இயக்கத்தினரையும் சிறுபான்மைச் சமூகத்தினரையும் இப் பிரசாரத்துக்காக அரசாங்கம் உபயோகித்தது. இந்த நிலையில் தமிழ் மக்கள் புதிய அரசியல் அமைப்புத் திட்டத்தை நிராகரிக்கிறார்கள் என்பதை உலகுக்கு நிரூபிக்கத் தந்தை விரும்பினார். அதன் விளைவுதான் தனது எம். பி. பதவியை இராஜினாமாச் செய்யும் தந்தையின் முடிவு.

தனது இராஜினாமாவை அறிவித்துப் பாராளுமன்றத்தில் தந்தை உரையாற்றினார். அந்த உரை வரலாற்று முக்கியத்துவம் பெற்றது. தமிழ் பேசும் மக்கள் தமது பாரம்பரிய தாயகத்தைச் சுதந்திரமாக ஆட்சி புரியும் உரிமை உடையவர்கள் என்பதை மீண்டும் வலியுறுத்தினார். சுயநிர்ணய உரிமையை உபயோகித்துத் தனிநாடு கோரும் உரிமை தமிழ் மக்களுக்கு இருந்தும் அவர்கள் சிங்கள் மக்களுடன் இணைந்து சமஷ்டி ஆட்சியொன்றை அமைத்து வாழவே விரும்பினர். 1972 அரசியல் திட்டம் அந்த ஐக்கியப் பாதையை அடைத்து விட்டது. தனிவழி செல்வதைத் தவிர வேறுவழி தமிழ் மக்களுக்குக் கொடுக்கப்படவில்லை.

தமிழ் மக்களின் தீர்மானத்தை அறிவதில் அரசாங்கம் அக்கறை காட்டவில்லை. அவசர காலச் சட்ட விதிகளை உபயோகித்து உப தேர்தலை தள்ளிப் போட்டுக் கொண்டே போனது. தனது செயலின் விளைவை அரசாங்கம் அப்போது உணரவில்லை. அந்த விளைவு தான் என்ன?

# 11

# ஆயுதப் புரட்சிக்கு அத்திவாரம்

### தீவிரவாதம் தழைத்தது

தந்தை காங்கேசன்துறைத் தொகுதி பிரதிநிதி பதவியை 30 செப்டம்பர் 1972இல் துறந்தார். அந்த இராஜினாமா நடவடிக்கை இரண்டு காரணங்களுக்காக எடுக்கப்பட்டது. தமிழ் பேசும் மக்கள் 1972 அரசியல் திட்டத்தை நிராகரிக்கின்றனர் என்பதை அரசாங்கத்துக்கும் உலகத்துக்கும் காட்டுவது அவற்றில் முதலாவது. தமிழ் வாலிபர்களின் வற்புறுத்தலையும் வேகத்தையும் குறைப்பது இரண்டாவது. அரசாங்கம் முதலாவது காரணத்தைப் பார்த்ததே தவிர இரண்டாவது காரணத்தைக் கவனத்தில் கொள்ளவில்லை.

தாங்கள் கஷ்டப்பட்டு ஆக்கிய குடியரசு அரசியல் திட்டத்தைத் தமிழ் பேசும் மக்கள் நிராகரித்து விட்டதாக உலகம் புரிந்து கொள்வதை அரசாங்கம் விரும்பவில்லை. அதனால், அவசரகாலச் சட்ட விதிகளை உபயோகித்து இடைத் தேர்தல் நடத்துவதை அரசாங்கம் தள்ளிப் போட்டுக் கொண்டே சென்றது. இரண்டு ஆண்டுகளுக்கு மேல் இடைத் தேர்தல் பின்போடப்பட்டது. இதன் எதிர்விளைவை அரசாங்கம் உணரவில்லை.

எந்த வாலிப உணர்ச்சி வெளியீட்டு அழுத்தத்தைக் குறைக்கத் தந்தை முயன்றாரோ அவ்வழுத்தம் மேலும் அதிகரிப்பதற்கு அரசாங்கம் உதவியது. தமிழ் பேசும் மக்களின் உணர்ச்சித் துடிப்பின் அளவைக் காட்டும் அழுத்தமானிகளாகச் செயற்பட்ட வாலிபத் தலைவர்களைச் சிறையில் அடைக்கும் நடவடிக்கையில் அரசாங்கம் இறங்கியது. முளைவிட்ட தமிழ் ஆயுதப் புரட்சி முயற்சிக்கு அரசாங்கத்தின் கடும் போக்கு வழி வகுத்தது. தமிழரசுக் கட்சித் தலைவர்களின்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மிதவாதப் போக்கை எதிர்த்துக் கூச்சல் போட்ட வாலிபர்களில் துடிப்பு மிக்கோர்ரோகண விஜேவீரவையும் பங்களாதேஷ் முஜிபுர் ரஹ்மானையும் பின்பற்றுவது பற்றிப் பேசத் தொடங்கினர்.

தமிழர் கூட்டணியின் எதிர்ப்பைப் பொருட்படுத்தாது 22 மே 1972ல் புதிய அரசியல் திட்டம் அமுல் செய்யப்பட்டது. இலங்கை ஒரு ஜனநாயக குடியரசாக மாறியது. அன்றைய தினம், தமிழர் கூட்டணியின் வேண்டுகோளுக்கிணங்க, தமிழ்ப் பகுதிகளில் துக்க தினம் அனுஷ்டிக்கப்பட்டது. வாலிபர்கள் நடத்த திட்டமிட்ட ஊர்வலத்தைத் தடைசெய்ய அரசாங்கம் அவசரகாலச் சட்டத்தைப் பிரகடனம் செய்து வாலிபத் தலைவர்களைக் கைது செய்யும் உத்தரவைப் பிறப்பித்தது. கவிஞர் காசி ஆனந்தன், வண்ணை ஆனந்தன், மாவை சேனாதிராசா, சுப்பிரமணியம் உட்படப் பலர் கைது செய்யப்பட்டு அவசரகாலச் சட்டத்தின் கீழ் சிறையிலிடப்பட்டனர். மொத்தம் 70 பேருக்கு மேல் கைது செய்யப்பட்டனர். அவர்களை விடுதலை செய்யுமாறு தமிழர் கூட்டணி வலியுறுத்தியது. அதற் கிணங்க, சிலர் விடுவிக்கப்பட்ட போதிலும் 42 பேர் இரண்டு ஆண்டு களுக்கு மேல் சிறையில் அடைத்து வைக்கப்பட்டிருந்தனர். அவர் களையும் விடுதலை செய்யக் கோரி உண்ணாவிரதங்களும், ஆர்ப் பாட்டங்களும் ஒழுங்குசெய்யப்பட்டன.

1973ல் வாலிபர் கிளர்ச்சி வேகம் பெற்றது. அவ்வாண்டின் ஜனவரி மாதம் வேலணைக்குப் போன அமைச்சர் குமாரசூரியருக்கு எதிராகக் கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. நிதியமைச்சர் டாக்டர் என். எம். பெரேரா யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த போது பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது, பாடசாலைப் பகிஷ்காரமும், உண்ணாவிரதமும் இடம்பெற்றன. டாக்டர் என்.எம்.பெரேரா கிளிநொச்சிக்குப் போன போதும் அங்கே கறுப்புக் கொடி காட்டப் பட்டது. குமாரசூரியர் மட்டக்களப்புக்குப் போனபோது அங்கே இராசமாணிக்கம் தலைமையில் கறுப்புக் கொடி காட்டப்பட்டது.

தமிழ் வாலிபரின் உணர்ச்சியைத் தூண்டிவிடும் செயலொன்றைக் கல்வி அமைச்சு 1973 முற்பகுதியில் செய்தது. புத்தூர், அச்சுவேலி, அல்வாய், கரவெட்டி ஆகிய கிராமங்களில் சிங்கள மொழிப் பாடசாலைகளை ஆரம்பிக்க யு. என். பி. காலத்தில் எடுக்கப்பட்டு தோல்வி கண்ட முயற்சியை வேறு விதத்தில் தொடருவதற்கு கல்விய மைச்சு நடவடிக்கை எடுத்தது. புத்தூர் சிங்கள பௌத்த பாடசாலைக்கு சிங்கள தலைமையாசிரியரும், சிங்கள உதவியாசிரியரும்



நியமிக்கப்பட்டனர். பாலர் வகுப்பில் உள்ள தமிழ்க் குழந்தைகளுக்கு சிங்களத்தில் கல்வியு கட்ட அவர்கள் நடவடிக்கை எடுத்தனர்.

இதை ஒரு சவாலாக தமிழ் வாலிபர்கள் கருதினர். அதைத் தடுத்து நிறுத்துவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்குமாறு தமிழர் கூட்டணியை வற்புறுத்தினர். இப் பிரச்சினையை மார்ச் மாதத்தில் ஆராய்ந்த தமிழர் கூட்டணி செயற்குழுவில் தந்தை சொன்னார்: மேலும், ஆர்ப்பாட்டமும் மறியலும் உரிய பயனைத் தரமாட்டா. பெற்றோரின் விருப்பப்படியே பிள்ளைகளுக்குச் சிங்களத்தில் படிப்பிக்க நடவடிக்கை எடுத்ததாக அரசாங்கம் கூறும். இந்த வாதத்தைத்தான் நாம் தாக்க வேண்டும். பெற்றோர் எங்கள் பக்கம் என்பதை வெறும் கையெழுத்துக்களை வாங்கியல்ல நடைமுறையில் நிறுவவேண்டும். கையெழுத்துக்குப் போனால் இரண்டு பக்கத்துக்கும் கையெழுத்துப் போடுவார்கள். அவர்களால் வேறு என்ன செய்ய முடியும்?

மற்றவர்களின் சங்கடங்களைப் புரிந்து கொள்வதில் தந்தை அக்கறை காட்டுபவர். நான் போய்க் கேட்டால் எனக்காகக் கையெழுத் துப் போடுவார்கள். சுப்பிரமணியம் போய்க் கேட்டாலும் போடுவார் கள் என்று சொல்லிச் சிரித்தார். சுப்பிரமணியம் என்று அவர் சொன்னது எம். சி சுப்பிரமணியத்தை. தாழ்த்தப்பட்ட சமூகத்தின் தலைவராக இருந்தவர். பாராளுமன்றத்தில் நியமன அங்கத்தவராகவும் இருந்தவர்.

சிங்களம் போதிக்கும் பாடசாலைக்கு அருகே மாற்று தமிழ் போதிக்கும் பாடசாலையொன்றை நிறுவுவது என்று முடிவு செய்யப் பட்டது. 1961ல் பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்ற போது புதிய பாடசாலைகளைத் தனியார் நிறுவுவதும் தடை செய்யப்பட்டது. அந்தச் சட்டத்தை மீறும் வகையிலேயே புதிய மாற்றுப்பாடசாலை நிறுவும் முடிவு எடுக்கப்பட்டது. புதிய பாடசாலை 6 ஏப்ரல் 1973ல் திறக்கப்பட்டது. அப்பாடசாலையின் பொறுப்பாளர் சபைக்கு ஐந்து பேர் தெரிவானார்கள். தந்தை, அமிர்தலிங்கம், மு. சிவசிதம்பரம், வி. தர்மலிங்கம், புத்தூர் ஆனந்தன் ஆகியோரே அவர்கள். மாற்றுப் பாடசாலை நிறுவப்பட்ட தகவலையும் அதன் பொறுப்பாளர் சபை உறுப்பினர் விவரங்களையும் சி. கதிரவேற்பிள்ளை கல்வியமைச்சுக்கு அறிவித்தார். சட்ட விரோத பாடசாலை நிறுவியோருக்கு எதிராக அரசாங்கம் எந்த சட்ட நடவடிக்கையையும் எடுக்கவில்லை.

.......

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சிங்களப் பாடசாலையின் பாலர் வகுப்பில் படித்த பிள்ளைகள் இருவரைத் தவிர மற்றவர்கள் புதுப் பாடசாலைக்குப் போனார்கள். பெற்றோர் எந்தப் பக்கம் இருக்கிறார்கள் என்பதைப் புரிந்து கொண்ட கல்வியமைச்சு சிங்கள தலைமையாசிரியரையும், உதவி ஆசிரியரையும் வேறிடத்துக்கு மாற்றி, தமிழில் படிப்பிப்பதற்கான உத்தரவைப் பிறப் பித்தது. அதையடுத்து, மாற்றுப் பாடசாலை மூடப்பட்டு மாணவர்கள் பழைய பாடசாலைக்குச் சென்றனர்.

**ஆயுத எதிர்ப்பு ஆரம்பம்**

தமிழர் கூட்டணியினர் தமது சாத்வீகப் போராட்டத்தைத் தொடர்ந்து கொண்டிருக்கையில் ஆயுதப் புரட்சியே தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்குரிய வழி என்ற முடிவுக்குப் பல வாலிபர்கள் வந்தனர். அவர்கள் தனியாகவும் சிறு சிறு குழுக்களாகவும் இயங்கினர்.கல் எறிதல், எப்பாலும் ஒரு தடவை பஸ்ஸை எரித்தல், மறைந்து நின்று பொலிசாரையோ படையினரையோ தாக்குதல், அரசாங்கச் சொத்துக்களுக்கு அழிவை ஏற்படுத்துதல் போன்ற வன்செயல் நடவடிக்கைகளில் அவர்கள் ஈடுபட்டனர்.

தமிழர் ஆயுதம் தூக்கிய முதலாவது சம்பவம் 1956ல் கல் ஓயா கலகத்தின்போது நடந்தது. கல் ஓயாவில் தமிழர்கள் மீது தாக்குதல் நடத்திய சிங்களக் காடையர் கல்முனைக்கருகேயுள்ள தமிழ்க் கிராமமான துறை நீலாவணையைத் தாக்கப் போனார்கள். அவர்கள் வருவதை எதிர்பார்த்து பதினொரு தமிழ் வாலிபர்கள் கிராமத்தில் கிடைத்த ஏழு துப்பாக்கிகளை சேகரித்துக் கொண்டு தெருவோர மரங்களில் ஏறி மறைந்திருந்தனர். அவர்கள் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தினால் இரண்டு காடையர் இறந்தனர். மற்றவர்கள் திரும்பிப் போய் பொலிசாருடன் வந்தனர். முன்னால் வந்த ஜீப்பிற்கு தமிழ் வாலிபர்கள் வெடிவைத்தனர். பொலிஸ் ஜீப் திரும்பிப் போய் விட்டது. அதற்குப் பின் எவரும் அந்தக் கிராமப் பக்கம் போகவில்லை.

1958ல் மறுபடியும் தமிழர் தாக்கப்பட்டனர். சிங்களப் பேரினவாதத்தின் திட்டமிட்ட பலாத்கார தமிழர் அழிப்பு அக்கலகத்துடன் ஆரம் பித்தது. அக்கலகத்திற்கு முன்பு நிலப் பறிப்பு, சனத்தொகை குறைப்பு ஆகியவையே தமிழரைப் பலவீனப்படுத்தும் ஆயுதங்களாகப் பயன்படுத்தப்பட்டன. 1958இல் அடித்துக் கலைப்பது, அடித்து அடக்குவது, பொருளாதார வளத்தைச் சீரழிப்பது என்ற வன்முறை



ஆயுதங்களும் அவற்றுடன் சேர்க்கப்பட்டன. அக்கலகத்தின் போது பதவியாவிலுள்ள சிங்களவர்கள் டிரக்டர்களில் வவுனியாவைத் தாக்குவதற்குப் புறப்பட்டனர். அதைக் கேள்விப்பட்ட அடங்காத் தமிழர் சி. சுந்தரலிங்கம், தமிழ் வாலிபர்களைத் திரட்டி, துவக்கு களுடன் மரங்களில் ஏற்றி வைத்தார். வவுனியாவிற்குள் வரவிடாமல் சுட்டுத் தள்ளுங்கள் என்ற உத்தரவுடன். ஆனால் பதவியாச் சிங்களவர்கள் வவுனியாவுக்குப் போகவில்லை. வழியில் வைத்தே அவர்களைப் படையினர் சுட்டு சிலரைக் கொன்று மற்றவர்களை விரட்டி விட்டனர். தமிழர் சிங்களவருக்கு எதிராகத் துவக்குத் தூக்கிய இரண்டாவது சம்பவம் அது.

1958 கலகத்தின் போது மட்டக்களப்பு வாலிபர்கள் ரயில் ஒன்றைக் கவிழ்த்தனர். அதில்குறைந்தது இரண்டு பொலிசார் இறந் தனர். 1961ல் தமிழரசுக்கட்சியினர் நடத்திய சத்தியாக்கிரக இயக்கத்தை முறியடிக்க இராணுவத்தை தமிழ்ப் பகுதிகளுக்கு அனுப்பிய சம்பவமும், தமிழரசுக் கட்சித் தலைவர்களைத் தடுப்புக் காவலில் வைத்த நிகழ்ச்சியும் தமிழ் வாலிபர்களை ஆத்திரமடையச் செய்தன. யாழ்குடா நாட்டில் ரோந்து போன படையினர்மீது வாலிபர்கள் கற்களை வீசினர். 1961 ஏப்பிரல் 19ல் வல்வெட்டித்துறையிலும் பருத்தித்துறையிலும் இராணுவ வாகனங்கள் மீது வாலிபர்கள் கற்களை வீசியும் துப்பாக்கிப் பிரயோகம் செய்தும் நடத்திய தாக்குதல்கள் பற்றி முன்பே குறிப்பிட்டுவிட் டேன்.

தமிழ் வாலிபர்களிடையே தோன்றிய உணர்ச்சி வேகம் அரசாங்க உயர் பதவி வகித்த சில அதிகாரிகளையும் பற்றிக் கொண்டது. தமிழ ரசுக் கட்சியின் அகிம்சாவழி தமிழர்களுக்கு விமோசனத்தை ஈட்டித் தராது என்ற முடிவுக்கு அவர்கள் வந்தனர். தமிழரசுக் கட்சியுடன் இணைந்திருந்த சிவில் சேவை அதிகாரி ஒருவர் உட்பட கிட்டத்தட்ட 20 பேர் ஆழ்ந்த சிந்தனையின் பின் தமிழருக்குத் தனிநாடு கோரிப் போரிடுவதைத் தவிர வேறு வழியில்லை என்ற முடிவுக்கு வந்தனர். அந்த இரகசிய இயக்கத்தினர் தமக்கு புலிப்படை என்ற பெயரைச் சூட்டிக் கொண்டனர். பாயும் புலியைத் தமது சின்னமாகத் தெரிவு செய்தனர். தமிழரசுக் கட்சித் தலைவர்களுக்கே தமது இயக்கத்தைப் பற்றிச் சொல்வதில்லை என்ற முடிவுக்கு வந்தனர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**புதியவழி**

1961 ஆகஸ்ட் 12ல் திருகோணேஸ்வரத்தில் கூடி காலைப்பூசை முடிந்ததும் திருகோணேஸ்வரர் முன்னிலையில் தனித் தமிழ் நாட்டுக் குப் போராடுவதென்று சபதம் செய்தனர். அதன் பின் கோணேஸ்வ ரருக்கு அர்ச்சனை செய்துவிட்டு குருக்கள் கொடுத்த அர்ச்சனைச் சாமான்களுடன் இராவணன் வெட்டுக்கு வரிசையாகப் போய் அவற் றைக் கடலில் போட்டுத் தங்கள் சபதத்தை மீண்டும் உறுதிப்படுத்திக் கொண்டனர்.

புலிப்படையினர் உடனடியாக மூன்று வழிகளில் செயலில் இறங்கினர். தமிழ் வாலிபர்களிடையே தீவிரவாதத்தை வளர்ப்ப தற்கான துண்டுப்பிரசுரங்களை அச்சிட்டு வெளியிடுவது அவற்றில் முதலாவது, அவர்கள் திருட்டுத்தனமாக அச்சிட்டு விநியோகித்த துண்டுப்பிரசுரங்கள் வாலிபர்களிடையே பெரும் பரபரப்பை ஏற்படுத்தின. தமிழரசுத் தலைவர்களையும் வியப்பில் ஆழ்த்தின. வாலிபர்களுக்கு வேண்டுகோள் என்ற தலைப்பில் வெளியிடப்பட்ட பிரசுரம் தமிழரசுக் கட்சியின் அகிம்சைப் போக்கைக் கடுமையாக விமர்சித்தது. அகிம்சாவாதிகளை அடித்து அடக்கிடும் அரசிடம் அகிம்சாவழி எடுபடாது என்றும் பல்லுக்குப் பல், இரத்தத்துக்கு இரத்தம், ஆயுதத்துக்கு ஆயுதம் என்ற ஆயுதப் போராட்ட வழியே தேவையென்றும் அப்பிரசுரம் வாதிட்டது. 1961 ஏப்ரலில் தமிழரசுக் கட்சியினர் ஆரம்பித்த தமிழரசுத் தபால் சேவை போன்ற ஒத்துழை யாமை நடவடிக்கைகள் மூலம் ஆயுதப் போராட்டத்துக்குத் தமிழ் மக்களைத் தயார் செய்வதில் தமிழரசுக் கட்சி ஈடுபட வேண்டும் என்றும் அப்பிரசுரம் கூறியது.

புலிப்படையினர் எடுத்த இரண்டாவது நடவடிக்கை தமிழரசுக் கட்சிக்குள் இருந்த இளைஞர் சக்திகளை ஒன்று திரட்டி தமிழரசுக் கட்சியின் முடிவுகளில் தீவிரத்தன்மையைப் புகுத்தியது. 1961ன் பிற்பகு தியிலிருந்து 1965ல் தமிழரசுக் கட்சி டட்லி சேனநாயக்காவின் தேசிய அரசாங்கத்தில் சேரும் வரை தமிழரசுக் கட்சியின் போராட்டம் சோர்ந்து விடாமல் பார்த்துக் கொண்ட பெருமை புலிப்படையினரைச் சேர்ந்தது. 1960ம் ஆண்டுகளில் கடற்றொழில் அமைச்சு ஆழ்கடல் மீன்பிடித்தலை ஊக்குவித்தது. புலிப்படையினரில் சிலர், சிவில் சேவை அதிகாரியின் தலைமையில், டிரோலர் ஒன்றை வாங்கினர். ஆயுதங்களைக் கடத் துவதே அதன் பிரதான நோக்கம். கப்பல் கம்பெனி கொஞ்சக் காலத்தில் தரைதட்டிவிட்டது. 1963ல் புலிப்படையினர் மாணவர் மன்றம் ஒன்றை ஆரம்பித்தனர். அமிர்தலிங்கத்துக்கும் வி. நவரத்தினத்துக்கும் அது ஆதரவளித்தது.



புலிப்படை தோல்வியுற்றதற்குப் பிரதான காரணம் அதற்கென ஓர் அமைப்பு இருக்காதமையே. தமிழரசுக் கட்சிக்குள் இருந்து தமிழரசுக் கட்சி மூலம் தமது நோக்கத்தை அடைய அவர்கள் முயன்றனர். அம்முயற்சி தோற்றதும் புலிப்படையும் மறைந்தது. புலிப்படையை வீண் முயற்சி என்று சொல்ல முடியாது. தமிழ் வாலிபரி டையே தீவிரவாத உணர்ச்சி தோன்றி வளர்வதற்குப் புலிப்படையும் உந்துதுணையாக அமைந்தது.

புலிப் படை முயற்சி தோல்வியில் முடிந்த பின் ஸ்தாபன ரீதியான ஆயுதப் போராட்ட அமைப்பொன்றை ஆரம்பிக்கும் முயற்சி 1969ல் மேற்கொள்ளப்பட்டது. அவ்வாண்டின் பிற்பகுதியில் தமிழரசுக் கட்சியின் சாத்வீக பாராளுமன்ற ஜனநாயகப் போராட்ட வழியில் அதிருப்தியும் அவநம்பிக்கையும் அடைந்த சில வாலிபர்கள் யாழ் நகரில் இரகசிய இடமொன்றில் கூடினர். அக் கூட்டத்தில் கலந்து கொண்டவர்களில் முக்கியமானவர்கள்: தங்கத்துரை எனப்பட்ட நட ராசா தங்கவேலு, குட்டிமணி எனப்பட்ட யோகச்சந்தரன், பெரிய சோதி, சின்னச் சோதி, செட்டி எனப்பட்ட செல்லையா தனபால சிங்கம், கண்ணாடி எனப்பட்ட செல்லையா பத்மநாதன், ஸ்ரீ சபாரத்தினம், சிவகுமாரன், பிரபாகரன். அக் கூட்டத்தில் தெரிவிக்கப் பட்ட பொதுவான, பலமான கருத்து தமிழ் வாலிபர்களின் உணர்ச்சிக் கொப்பளிப்புக்களுக்கு ஸ்தாபன உருவம் கொடுக்கப்பட வேண்டும் என்பதே.

மத்திய கிழக்கில் தீவிரமடைந்து கொண்டிருந்த பாலஸ்தீன விடுதலை அமைப்பான பாலஸ்தீன விடுதலை இயக்கத்தை (பி.எல்.ஓ) ஒத்த அமைப்பொன்றை உருவாக்க வேண்டுமென்ற விருப்பம் பொது வாகத் தெரிவிக்கப்பட்டது. அக் கருத்தை தங்கத்துரை வலியுறுத்தினார். அந்த அமைப்புக்கு தமிழர் விடுதலை அமைப்பு (ரெலோ) என்ற பெயரைச் சூட்ட வேண்டும் என்ற பிரேரணையையும் அவர் முன் மொழிந்தார். ஆயுத நடவடிக்கையில் உடனடியாக இறங்கவேண்டும் என்ற தீர்மானமும் அக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது. ரெலோவை உருவாக்கும் தங்கத்துரையின் விருப்பம் சில ஆண்டு களுக்குப் பின்பே நிறைவேறியது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**அரசியல் திட்டம்**

தமிழ் மக்களின் உணர்வுகளைப் புண்படுத்துவதில் ஈடுபட்டிருந்த ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க அரசாங்கம் 1973ம் ஆண்டின் முற்பகுதியில் அவர்களை ஓரளவுக்குத் திருப்திப்படுத்தும் நடவடிக் கையை எடுத்தது. 1973 மார்ச் 23ல் நிறைவேற்றப்பட்ட நீதிமன்ற மொழிகள் சட்டம் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள நீதிமன்றங் களில் தமிழை உபயோகிப்பதற்கு வழி வகுத்தது. அச் சட்டத்தையிட்டு தந்தை மிகவும் மகிழ்ச்சி அடைந்தார். காரணம், அச் சட்டம் வடக்கையும் கிழக்கையும் தமிழ் பேசும் மக்களின் பாரம்பரியத் தாயகமாக ஏற்றுக் கொண்டது. பண்டாரநாயக்காவுடன் ஒப்பந்தம் செய்த காலத்தில் இருந்து தந்தை ஒரு விடயத்தில் மிகவும் கவனமாகவிருந்தார். வடக்கும், கிழக்கும் தமிழர் தாயகம் என்பதை சிங்களத் தலைவர்கள் மறைமுகமாக ஏற்றுக் கொள்ளச் செய்வதே அது. பண்டாரநாயக்கா-செல்வநாயகம் ஒப்பந்தம் வடக்கு, கிழக்கு மாகாணங் களின் நிர்வாக மொழியாகத் தமிழை ஏற்றுக் கொண்டது. அத்துடன், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மாவட்ட சபைகள் மூலம் ஓரளவு சுயாட்சி வழங்கவும் முடிவு செய்தது. டட்லி சேனநாயக்க-செல்வநாயகம் ஒப்பந்தம் வடக்கு, கிழக்கு மாகாணங் களின் நிர்வாக மொழி தமிழ் என்பதையும் அப் பகுதிகளுக்குப் பிராந்திய சபைகளை நிறுவ வேண்டிய அவசியத்தையும் ஏற்றுக் கொண்டது. இந்த ஒப்பந்தத்தை ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவும் வடக்கையும் கிழக்கையும் தமிழ் பேசும் மக்களின் தாயகமாக ஏற்றுக் கொண்டார். இச் சட்டத்தை அரசியல் அமைப்புத் திட்டத்தில் சேர்ப்பதன் மூலம் உறுதிப் படுத்தத் தந்தை விரும்பினார். அந்தக் கோரிக்கைக்கு அரசாங்கம் இணங்கவில்லை.

1973ல் தமிழ் இளைஞர்களின் ஆயுதப் போராட்டம் முளைக்கத் தொடங்கிய அதே நேரத்தில் அப் போராட்டம் வேர் ஊன்றக் கூடிய சூழல் தமிழ்ச் சமுதாயத்தில் உருவாக ஆரம்பித்தது. 1973 மே 17இல் தமிழர் கூட்டணியின் செயற்குழு யாழ்ப்பாணத்தில் உள்ள தமிழ்க் கூட்டணி அலுவலகத்தில் கூடியது. எட்டு மணித்தியாலம் நடந்த அக் கூட்டத்தில் ஈழத் தமிழர் ஒற்றுமை முன்னணித் தலைவர் சி. சுந்தர லிங்கம் தமிழ் ஈழக் கோரிக்கையை முன் வைத்தார். சுந்தரலிங்கத்தின் நீண்ட உரையின் சாராம்சம்:



> சிங்களச் சகோதரர்களுடன் ஒற்றுமையாக சமத்துவ அடிப்படையில் வாழ தமிழ் மக்கள் எடுத்துக் கொண்ட சகல முயற்சிகளும் தோல்வி கண்டு விட்டன. அதிகாரத்தைத் தமிழர்களுடன் பகிர்ந்து கொள்வதற்கு எமது சிங்களச் சகோதரர்கள் தயாராகவில்லை. எனவே, தமிழ்மக்களுக்குள்ள ஒரேயொரு வழி பிரிவினையே. அந்த உண்மை நிலையை நாம் ஏற்றுக் கொண்டு தமிழருக்கென ஒரு நாட்டைக் கோருவதை விட வேறுவ ழியில்லை. அத் தனித் தமிழ் நாடு தமிழ் ஈழம் என அழைக்கப்பட வேண்டும் என அவர் கோரினார். இங்கே விளக்கம் தேவை. இலங் கைக்குள்ள பல பெயர்களில் ஈழம் என்பது ஒன்று. ஈழத்து உணவும் என்று புறநானூறு கூறுகிறது. ஈழத்தின் தமிழ்ப் பகுதிகளைத்தான் தமிழர் கோரு வதால் அதற்குத் தமிழ் ஈழம் எனப் பெயரிட வேண்டும் .

தமிழ் ஈழக் கோரிக்கையை அடைவதற்கான நடவடிக்கைகளை தமிழர் கூட்டணி எடுக்க வேண்டும் என்று சுந்தரலிங்கம் சொன்னார். அவர் முன்வைத்த வேலைத்திட்டம்:

> வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த எம், பி. க்கள் அரசியல் நிர்ணய சபையை உருவாக்க வேண்டும். அந்த அரசியல் நிர்ணய சபை சிறிய குழுவைத் தெரிவு செய்ய வேண்டும். அக் குழு தமிழ் ஈழத்துக்கான அரசியல் திட்டத்தை (யாப்பை) தயாரிக்க வேண்டும். அந்த அரசியல் திட்டத்தை அரசியல் நிர்ணய சபை ஏற்று நடைமுறைப்படுத்த வேண்டும்.

சுந்தரலிங்கத்தின் யோசனையை ஏற்றுக் கொள்ளும் நிலைக்குத் தமிழ் மக்கள் இன்னும் வரவில்லை என்பதைத் தந்தை வலியுறுத்தினார். சமஷ்டி அடிப்படையில் ஐக்கிய இலங்கையை உருவாக்குவதற்கான எல்லாச் சந்தர்ப்பங்களும் நிராகரிக்கப்பட்டதன் பின்பு தான் தனிநாட்டுக் கோரிக்கை முன்வைக்கப்படுதல் வேண்டும் என்று தந்தை வாதிட்டார். அதன் விளைவாக வருங்கால நடவடிக்கை பற்றி ஆராய குழுவொன்று அமைக்கப்பட வேண்டும் என்ற சுந்தரலிங்கத்தின் யோசனை மட்டுமே செயற்குழுவால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

செயற்குழு நிறைவேற்றிய நீண்ட தீர்மானத்தின் சாராம்சம்:

> 1972 அரசியல் திட்டம் தமிழரின் உரிமைகளை மறுக்கிறது. அதைத் தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளும் விதத்தில் திருத்துவதற்குத் தமிழர் கூட்டணி சமர்ப்பித்த ஆறு அம்சக் கோரிக்கையிலும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. புதிய அரசியல் திட்டத்தின் கீழ் தமிழ் மக்களின் நிலைமை மிகவும் மோசமாக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தீர்மானத்தின் கடைசிப் பந்தியின் தமிழாக்கம்:

தமிழ் இனத்தின் ஒருமைப்பாட்டையும் அடையாளத்தையும் பாதுகாப்பதற்கும் அதை அழிவுப் பாதையில் இருந்து மீட்பதற்கும் இந்நாட்டில் தமிழ் இனத்தின் வருங்காலத்தை ஸ்திரமாகக் கட்டி எழுப்புவதற்கும் உள்ள வழி தமிழ் மக்களின் பாரம்பரியத் தாயகத்தில் சுயாட்சியை ஏற்படுத்துவதே என்பது தமிழர் கூட்டணியின் செயற்குழுவின் கருத்தாகும். இக் கருத்தின் பாரதூரமான தன்மை கருதியும், முக்கியத்துவம் கருதியும் இது சம்பந்தமான எல்லா மேலதிக நடவடிக்கைகளையும் ஆராய்வதற்காக 7 உறுப்பினர்களைக் கொண்ட உயர் மட்டக் குழுவொன்றை அமைக்க செயற்குழு முடிவு செய்கிறது. அக் குழுவுக்கு கீழ்க் கண்டோர் தெரிவு செய்யப்பட்டனர். செல்வநாயகம், சுந்தரலிங்கம், மு.சிவசிதம்பரம், எம். எஸ். செல்லச்சாமி, அமிர்தலிங்கம், மாணிக்கம், தங்கத்துரை.

இத் தீர்மானம் வாலிபர்களைத் திருப்திப்படுத்தவில்லை. அவர்கள் தமிழ்த் தலைமைப் பீடத்தை நேரடியாகத் தாக்க ஆரம்பித்தனர். அவர்கள் சுமத்திய குற்றச் சாட்டுக்கள் மூன்று. அவை:- எம். பி. பதவிகளில் ஒட்டிக் கொண்டிருக்க முயல்கிறார்கள். தமது சொந்த அதிகாரங்களிலும் சிறப்புரிமைகளிலும் அக்கறை கொண்டுள்ளனர். தமிழ் வாலிபர்களின் உணர்வுகளுக்கும் அபிலாசைகளுக்கும் முக்கியத்துவம் கொடுக்கிறார்களில்லை.

தமிழரசுக் கட்சியின் கட்டுப்பாட்டில் இருந்த தமிழ் இளைஞர் பேரவையே தலைமைப் பீடத்திற்கெதிராக புரட்சி செய்ய ஆரம்பித்தது. ஈழவேந்தன் போன்றோர்ரின் தலைமையில் இயங்கிய தமிழரசுக் கட்சியின் கொழும்புக் கிளையும் தலைவர்களின் போக்கைக் கண்டிக்கத் தொடங்கியது. வாலிபர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்க வேண்டிய நிலைக்குத் தமிழர் கூட்டணி தள்ளப்பட்டது. இதன் முக்கிய விளைவு தமிழரசுக் கட்சியின் தலைவராக அமிர்தலிங்கம் தெரிவு செய்யப்பட்டமை.

### மல்லாகம் மகாநாடு

தமிழரசுக் கட்சியின் பன்னிரண்டாவது மாநில மாநாடு மல்லாகத்தில் செப்ட்ம்பர் 7, 8, 9ம் திகதிகளில் நடைபெற்றது. மல்லாகம் மாநாடு தமிழரசுக் கட்சியின் நிலைப்பாட்டில் ஒரு திருப்பு முனையாக அமைந்தது. மே 17ல் நடந்த தமிழ்க் கூட்டணி செயற்குழுக் கூட்டத்தில் தமிழ் ஈழக் கோரிக்கையை ஏற்றுக் கொள்ளத் தயங்கிய தமிழரசுக் கட்சித் தலைவர்கள் செப்டம்பர் மாதத்தில் தமது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டனர். மே 17ல் சமஷ்டி எனக் கூறிய தமிழரசுக் கட்சியினர் செப்டம்பர் 9ல் தன்னாட்சி என்ற நிலையை ஏற்றுக் கொண்டனர். மே 17ல் தமிழரின் பாரம்பரிய தாயகத்தில் சுயாட்சி அமைப்பதைப் பற்றிய நடவடிக்கைகளைஆராய்வதற்கு உயர் மட்டக் குழுவை நியமிக்க வேண்டும் என வற்புறுத்திய தமிழரசுக் கட்சித் தலைமைப்பீடம் செப்டம்பர் 9ல் தன்னாட்சி காண்பதே எமக்குள்ள ஒரே வழி என்று தீர்மானித்தது.



மல்லாகம் மகாநாட்டிற்கும் நான் போயிருந்தேன். அம் மகாநாட்டின் போது நான் தந்தையைத் தனியே சந்தித்து தினகரன் வாரமஞ்சரிக்குப் பேட்டி கண்டேன். அப் பேட்டியின் போது நான் கேட்ட முக்கிய கேள்வியும் அதற்குத் தந்தை கொடுத்த பதிலும் இவை:

கேள்வி: "வாலிபரின் வற்புறுத்தலுக்குப் பணிந்து விட்டீர்களா?"

தந்தை: "இல்லை. வாலிபரின் உணர்வுகளுக்கும், அபிலாசைகளுக்கும் மதிப்பளிக்கிறோம். இதனால், இதுவரை நாங்கள் வாலிபர்களின் விருப்பத்திற்கு மதிப்பளிக்கவில்லை என்று அர்த்தமல்ல. அவர்களுக்குள்ள உணர்வும், ஆர்வமும் எங்களுக்குமுண்டு. ஆனால், வயது முதிர்ச்சியாலும், அனுபவ முதிர்ச்சியாலும் நாம் பெற்ற அனுபவத்தையும், அறிவையும் பயன்படுத்தி சற்று மெதுவாகப் போக நாம் விரும்புகிறோம். அவசரப்பட்டு விட்டீர்கள். தமிழ் மக்களின் குறைகளைத் தீர்ப்பதற்கு எங்களுக்கு நீங்கள் அவகாசம் அளிக்கவில்லை என்று எவருமேகூறக் கூடாதல்லவா?"

தந்தையைப் போலல்லாமல் அமிர்தலிங்கம் அவசரப்படுபவர். உணர்ச்சிமிக்கவர். மல்லாகம் மாநாட்டில் அவர் ஆற்றிய உரை வாலிபர்களுக்கு சர்க்கரைப் பொங்கல். இந் நாடு ஒரு திருப்பு முனையில் நிற்கிறது என்று ஆரம்பித்து ஒரு மணித்திலாயத்திற்கு மேல் பேசிய அமிர்தலிங்கம் உணர்வு நரம்புகளை மீட்டும் வகையில் பேசினார். உதாரணத்துக்கு இரண்டு பந்திகள்: இவ்வரங்கில் உரை நிகழ்த்திக் கொண்டு நிற்கும் போது என் உள்ளம் வெலிக்கடைச் சிறையிலும், நீர்கொழும்புச் சிறையிலும், யாழ்ப்பாணக் கோட்டைச் சிறையிலும் தமிழுக்காகத் தவம் செய்து கொண்டிருக்கின்ற என் தம்பிகளை நாடிச் செல்கிறது. அவர்களைப் பிரிந்து வாடி வதங்கும் பெற்றோருக்கும் உற்றோருக்கும் நாம் என்ன ஆறுதல் கூற முடியும்? அவர்கள் உடலில் பட்ட அடிகள் ஒவ்வொரு தமிழன் மீதும் பட்டதாகக் கருதப்பட வேண்டும்.அவர்கள் படும் இன்னல் அரவம் போகாது. அவர்களின்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



துன்பத்தில் இருந்து தமிழினத்தின் விடுதலை விளையும். மற்றப்பந்தி: இருபது மைல்களுக்கு அப்பால் நாலு கோடி தமிழர்கள் உரிமையோடும் உயிர்த் துடிப்போடும் வாழும்வரைக்கும் தமிழினத்தைப் பலவந்தமாக அழிக்கும் எண்ணம் பகற்கனவாகவேயிருக்கும்.

தமிழனுக்குள்ள வழிகள் இரண்டு என்று சொன்னார் அமிர்தலிங்கம். முதலாவது, எச்சில் வாழ்க்கை. இரண்டாவது, தன்னாட்சிவழி. இரண்டாவது வழியையே தமிழர் தெரிந்தெடுப்பர் என்று சொன்ன அமிர்தலிங்கம் அகிம்சை மூலமே அவ்விலக்கை அடைய வேண்டும் என்றார். காந்தியடிகள் உபயோகித்த அகிம்சை ஆயுதத்தை, முஜிபுர் ரஹ்மான் கையாண்ட ஒத்துழையாமை ஆயுதத்தை உபயோகிக்க வேண்டும் என்றார். இன்றைய ஆட்சியாளரோடு ஒத்துழைக்க மறுத்து, பவனி வரும் அமைச்சர்களுக்கு ஆலவட்டம் பிடிக்கும் மனப்பான்மையை விட்டொழித்து, ஏகோபித்து எதிர்க்கும் எண்ணத்தை எம் மக்களிடையே வளர்க்க வேண்டும். சட்டத்தை மீறி, அகிம்சை நெறியிலேயிருந்து வழுவாது, ஆயிரக் கணக்கில் சிறை செல்வோம். எமக்கு இன்று தேவை புரட்சி மனப்பான்மை. ஆயுதமற்ற மக்கள், ஆட்சியாளரின் படை பலத்தை எதிர்க்க வழி அகிம்சை புரட்சியே. அதுதான் மக்கள் புரட்சியாக அமையும். ஆயுதப் புரட்சி எந்த நாட்டிலும் ஒரு காலத்திலும் மக்கள் புரட்சியாக மிளிரவில்லை என்றார் அமிர்தலிங்கம்.

மல்லாகம் மகாநாட்டில் பேசிய தந்தையும் மக்கள் பெருந் தொகையாகப் பங்கு பற்றும் அகிம்சைப் புரட்சியையே விரும்பினார். சட்ட மறுப்பு என்ற ஆயுதத்தையே உபயோகிக்க வேண்டும் என்றார். ஆயுதப் புரட்சி அழிவையும், துன்பத்தையும் கொண்டு வரும் என்றார்.

மல்லாகம் மகாநாட்டில் ஐந்து தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன. அவற்றில் முதலாவது தீர்மானம் பிரதான தீர்மானம். தமிழ் மக்களின் பிரச்சினைக்கு பாரம்பரியத் தாயகத்தில் தன்னாட்சி காண்பதே தமிழ்த் தேசிய இனத்தின் எதிர்கால வாழ்வுக்கான வழி என்று அது கூறியது.

வரலாற்று முக்கியத்துவம் பெற்ற பந்தி இது: இலங்கை தமிழ ரசுக் கட்சியின் 12வது மாநாடு மொழியால், கலாசாரத்தால், வரலாற்றால், பிரதேசத்தால் ஒரு தனி இனமாக வாழ வேண்டும் என்ற உணர்ச்சியால் ஒரு தனித் தேசிய இனமாகக் கணிக்கப்படுவதற்குப் பூரண தகுதி பெற்ற இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்கள் சர்வதேச நீதிக்கிணங்க ஏற்றுக் கொள்ளப்பட்ட தேசிய இனங்களின் சுய நிர்ணய உரிமையென்ற அடிப்படைத் தத்துவத்தின்படி, தமது பாரம்பரியமான



இலங்கைத் தமிழ்த் தேசிய இனம் தன்னாட்சி காண்பதே எமக்குள்ள ஒரே வழியென்றுஇத்தால் தீர்மானிக்கிறது.

மற்ற முக்கிய முடிவுகள்:

★ தமிழரசுக் கட்சி தமிழர் கூட்டணியின் அங்கமாக இருப்பது.

★ தன்னாட்சி கோரிக்கைக்கு சர்வதேச ஆதரவைத் திரட்டுவது.

★ தமிழ்ப் பிரதேசத்தின் பொருளாதார விருத்திக்குப் பாடுபடுவது.

★ சாதியொழிப்பு.

★ சிறையிலுள்ள இளைஞரை விடுவிக்க நடவடிக்கை எடுத்தல்.

★ காங்கேசன்துறைத் தொகுதி இடைத்தேர்தலை நடத்தும்படி வற்புறுத்துதல்.

மகாநாடு முடிந்த கையோடு சிறையில் உள்ள தமிழ் வாலி பர்களை விடுவிக்க தமிழர் கூட்டணி நடவடிக்கை எடுக்க ஆரம்பித்தது. இளைஞர் சம்பந்தமான மல்லாகம் மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்:

> தமிழர் கூட்டணியின் இணைச் செயலாளர்களுள் ஒருவராகவிருந்த உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன், வண்ணை ஆனந்தன், தமிழரசு வாலிப முன்னணிச் செயலாளர் மாவை சேனாதிராசா போன்ற நாற்பதுக்கு மேற்பட்ட தமிழ் இளைஞர்களை அவசரகாலச் சட்டத்தின் கீழ் கைது செய்து, நீதி விசாரணை எதுவுமின்றி, ஆண்டுக் கணக்காகவும், மாதக் கணக்காகவும் சிறைகளில் அடைத்து வைத்திருக்கும் அரசாங் கத்தின் கொடூர அடக்கு முறையை இந்த மகாநாடு மிகவும் வன்மை யாகக் கண்டிப்பதுடன் இந்த இளைஞர்களைத் தாமத மின்றிவிடுதலை செய்ய வேண்டும். அன்றேல், இவர்கள் மீது உடனடியாக நீதி விசாரணை செய்யவேண்டும் என்று அரசாங்கத்தைக் கோருவதுடன், இதற்கு அரசு செவிசாய்க்கத் தவறினால் இப்பிரச்சனை மீது பொதுஜனக் கிளர்ச்சி யொன்றை நடத்த வேண்டியேற்படும் என்றும் எச்சரிக்கிறது.

சிறையில் அடைக்கப்பட்டிருந்த 42 இளைஞர்களையும் விடு தலை செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை. டிசம்பர்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



2ல் கூடிய தமிழர் கூட்டணி நடவடிக்கைக் குழு இதையிட்டுக் கவலை தெரிவித்ததோடு ஒத்துழையாமை இயக்கத்தின் இரண்டாம் கட்டத் தைத் துவக்குவதற்கும் முடிவு செய்தது. ஐந்து தலைவர்களைக் கொண்ட குழுவொன்று அதற்காகத் தெரிவு செய்யப்பட்டது. அமிர் தலிங்கம், எம். சிவசிதம்பரம், வி. என். நவரத்தினம், எஸ். தொண்ட மான், எக்ஸ். எம்.செல்லத்தம்பு ஆகியோர் அக் குழுவின் உறுப்பினர் கள். இக் குழு உடனடியாகக் கூடி டிசம்பர் 31க்கு முன் வாலிபர்களை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யும்படியும் அல்லாவிட்டால் விடுதலை செய்ய அரசாங்கத்தைக் கோர முடிவு செய்தது. அரசாங்கம் அவ்வாறு செய்யத் தவறின் ஒத்துழையாமை இயக்கத்தை ஆரம்பிப்ப தெனவும் தீர்மானிக்கப்பட்டது.

வாலிபர்கள் விடயத்தைத் தர்மலிங்கம் பாராளுமன்றத்திலும் கிளப்பினார். காசி ஆனந்தன் 1972 ஜூன் மாதத்தில் கைது செய்யப்பட் டிருந்த போதிலும் அவருக்கு எதிராக வழக்குத் தொடரப்படவில்லை என்றார். கைது செய்யப்பட்டுள்ள வாலிபர்களுக்கு எதிராக வழக் கெதுவுமில்லை என்று அட்டர்னி ஜெனரல் அறிவித்திருந்தும் பொலி ஸார் விசாரணை முடியவில்லை என்று கூறிக் கொண்டிருக்கின்றனர் என்றும் சொன்னார். காசி ஆனந்தனையும் வேறு சிலரையும் அரசாங்கம் விடுதலை செய்தது. டிசம்பர் 29க்குள் 25 பேரைத் தவிர்ந்த ஏனையோரை விடுதலை செய்தனர். எஞ்சியவர்களும் விரைவில் விடுவிக்கப் படுவர் என்று பீலிக்ஸ் ஆர். டயஸ் பண்டாரநாயக்கா தந்தைக்குக் கடிதம் எழுதினார். ஒத்துழையாமை இயக்கத்தைப் பின்போட தமிழர் கூட்டணி முடிவு செய்தது. காசி ஆனந்தனுக்கு அவரின் சொந்த ஊரான மட்டக்களப்பிலும், யாழ்ப்பாணத்திலும் பெரு வரவேற்புகள் அளிக்கப் பட்டன. யாழ்ப்பாண வரவேற்பில் அமிர்தலிங்கம் கலந்து கொண்டார். வாலிபர்களுக்கு காசி ஆனந்தன் ஒரு முன்மாதிரி என்று அவர் புகழ்ந் தார்.

மல்லாகம் மாநாட்டையடுத்து மக்களின் ஆதரவைத் திரட்டுவ தற்கான இரண்டு நடவடிக்கைகளை எடுத்தது தமிழர் கூட்டணி. முதலாவது, மாவிட்டபுரம் கந்தசாமி கோவிலில் காந்தி பிறந்த தின மான அக்டோபர் 2ல் உண்ணாவிரதம் இருப்பது. இரண்டாவது, முத்திரைச் சட்டத்தை மீறுதல். இரண்டாவது எதிர்ப்பும் அக்டோபர் 2ல் நடந்தது. ஆயிரக்கணக்கான மக்கள் உபயோகித்த முத்திரைகளை ஒட்டிப் பிரதம மந்திரிக்கு கடிதங்களை அனுப்பினர். அரசாங்கம் அதைக் கண்டு கொள்ளாதது போல் இருந்து விட்டது. அதற்குக் காரணம் இல்லாமலும் இல்லை. அரிசிப் பிரச்சினை தான் அது.



நாட்டில் அரிசி உற்பத்தி வீழ்ச்சி அடைந்ததோடு சர்வதேச சந்தையில் அரிசியின் விலையும்உயர்ந்து கொண்டு சென்றது. இதனால் கூப்பனுக்குக் குறைந்த விலையில் கொடுத்த அரிசியின் அளவை அரசாங்கம் குறைத்தது. அதே நேரத்தில் உணவு உற்பத்தியைப் பெருக்கும் இயக்கத்தையும் அறிவித்தது.

உணவு உற்பத்திப் பெருக்கத்தை ஆதரித்துத் தமிழர் கூட்டணி அறிக்கை விடுத்தது. உணவு உற்பத்தியில் ஈடுபடுமாறு தமிழ் மக்க ளுக்கு வேண்டுகோளும் விடுத்தது. இந்த நேரத்தில் அரிசிக் குறைப்பை வைத்து மக்களை அரசாங்கத்துக்கு எதிராகத் தூண்டுவதற்கு யு. என். பி. நடவடிக்கை எடுத்தது. அக்டோபர் 11ஆம் திகதி மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தையும், பொதுக் கூட்டத்தையும் நடத்தத் திட்டமிட்டது. தமிழர் கூட்டணி உட்பட எதிர்க்கட்சிகள் எல்லாவற்றுக்கும் கூட்டத்தில் உரையாற்றுவதற்கு அழைப்பு விடுக்கப்பட்டது. தமிழர் கூட்டணி யு. என். பியுடன் சேருவதை அரசாங்கம் விரும்பவில்லை. எனவே, பிரதம மந்திரி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா தந்தை செல்வா வுக்கு ஒரு கடிதம் எழுதினார். அதில், உள்ளூர் உற்பத்தியைப் பெருக் கும் அரசாங்கத்தின் முயற்சிக்குத் தமிழர் கூட்டணி கொடுத்துள்ள ஆதரவைப் பாராட்டினார்.

இச் சந்தர்ப்பத்தையும் தமிழர் பிரச்சினைக்கு சமாதானத் தீர் வொன்றைக் காண்பதற்குப் பயன்படுத்த தந்தை முடிவு செய்தார். யு. என். பி. யின். கூட்டத்துக்கு கீழ் மட்டப் பிரதிநிதியொருவரை அனுப் பினார்.தமிழர் கூட்டணி ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் கலந்து கொள்ளாது என அறிவித்தார். அரசாங்கம் விரும்பினால் தமிழர் பிரச்சினை பற்றிப் பேச்சுவார்த்தை நடத்தத் தயார் என்றும் சொன்னார். தமிழர் கூட்டணியுடன் பேச்சுவார்த்தை நடத்தப் போவதாக அக்டோபர் 8ல் அரசாங்கம் அறிக்கை விடுத்தது. அப் பேச்சுவார்த்தையின் போது தந்தை செல்வாவின் தலைமையில் சென்ற தமிழர் கூட்டணித் தூதுக் கோஷ்டியினர் தமது பேச்சை நான்கு விடயங்களுக்கு மட்டுப்படுத்திக் கொண்டனர். அவ்விடயங்களாவன:

- ★ நீதிமன்ற மொழிச் சட்டத்தை அரசியல் அமைப்புச் சட்டத்தில் சேர்த்தல்.
- ★ பிரதேச நிர்வாகம்.
- ★ தமிழிற்கு அரசியல் அமைப்புத் திட்டத்தில் இடம்.
- ★ குடியேற்றத் திட்டங்கள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பேச்சு வார்த்தை தோல்வி கண்டது. தமிழர் கூட்டணியின் முதலாவது கோரிக்கையை மட்டும் வழங்க முடியுமென்றும், மற்றவைகளைக் கொடுக்க முடியாதெனவும் பிரதம மந்திரி அறிவித்தார். வாலிபர்கள் தமிழர் கூட்டணி தலைமைப் பீடத்தைக் கிண்டல் செய்தனர். யு.என்.பி.யின் எதிர்ப்பு ஊர்வலத்தில் பங்கு பற்றாமல் செய்வதற்காக பேச்சு வார்த்தை நாடகத்தை அரசாங்கம் நடத்தியது. ஏமார்ந்து விட்டீர்களே என்றனர். தந்தை அளித்த பதில்: நாங்கள் ஏமாறவில்லை. ஏமாற்றப் போகிறார்கள் என்பது எமக்குத் தெரியும். பேச்சு வார்த்தைக்கு அழைத்து நாங்கள் போகாவிட்டால் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாததற்கு தமிழர் கூட்டணி தான் காரணம் என்று சொல்லிப் பழியை எங்கள் மீது சுமத்துவார்கள். இப்போது அதைச் செய்ய முடியாதே. ஏமார்ந்தது நாங்களா? அவர்களா ? என்று தந்தை கேட்கவில்லை. அப்படிக் கேட்பது அவரின் வழக்கமும் இல்லை.

**தமிழாராய்ச்சி மகாநாடு**

இச்சூழலில்தான் யாழ்ப்பாணத்தில் தமிழாராய்ச்சி மகாநாடு நடந்தது. தமிழ் அறிஞர் வண பிதா தனிநாயகம் அடிகளார் அவர்களின் முயற்சியின் விளைவாகத் தோற்றுவிக்கப்பட்ட உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றம் உலகத் தமிழாராய்ச்சியாளரை ஒன்று சேர்த்து மகாநாடுகளை நடத்த ஆரம்பித்தது. தமிழ் ஆராய்ச்சிக்கு ஊக்கமளிப்பதே தமிழ் ஆராய்ச்சி மகாநாடுகளை நடத்துவதன் நோக்கம். முதலாவது உலகத் தமிழாராய்ச்சி மகாநாடு மலேஷியாவின் தலைநகரான கோலாலம்பூரில் நடத்தப்பட்டது. அம்மகாநாட்டை மலேஷியப் பிரதமர் அப்துல் ரஹ்மான் ஆரம்பித்து வைத்தார். இரண்டாவது மகாநாடு தமிழ் நாட்டின் தலைநகர் சென்னையில் நடந்தது. அதை இந்திய ஜனாதிபதி இராஜேந்திர பிரசாத் தொடக்கி வைத்தார். மூன்றாவது மகாநாடு பாரிஸ் நகரில் நடந்தது. தமிழ் ஆராய்ச்சியில் மூழ்கியுள்ள ஐரோப்பிய ஆராய்ச்சியாளர்களை ஒன்று கூட்டுவதே அதன் நோக்கம். யுனெஸ்கோ தலைவர் டாக்டர் மல்கம் ஆதிசேஷயா அம்மகாநாட்டை அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்.

நாலாவது மகாநாட்டை யாழ்ப்பாணத்தில் நடத்த வேண்டுமென்ற உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்தின் முடிவை நடைமுறைப் படுத்துவதற்கான கூட்டம் ஒன்று கொழும்பில் நடத்தப்பட்டது. அக் கூட்டத்தில் சமூகமளித்த அமைச்சர் செல்லையா குமாரசூரியரின் கையாட்கள் முதலிரு மகாநாடுகளிலும் பின்பற்றப்பட்ட ஒழுங்கு முறை இலங்கை மகாநாட்டிலும் கடைப்பிடிக்கப்பட வேண்டுமென்று வலியுறுத்தினர். இலங்கையின் தலைநகர் கொழும்பில் மகாநாடு நடத்தப்பட வேண்டும் எனவும் பிரதம மந்திரி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அதை ஆரம்பித்து வைக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தனர். அதைப் பெரும்பாலானோர் விரும்பவில்லை, ஸ்ரீமாவோவின் அரசாங்கத்தைத் தமிழ் மக்களில் பெரும்பாலானோர் எதிர்ப்பதனாலும் தமிழ் ஆராய்ச்சிக்கு அரசியல் சாயம் பூசுவது நல்லதல்ல என்பதனாலும் உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்தின் கொழும்புக் கிளை உறுப்பினரில் பலர் மகாநாட்டை யாழ்ப்பாணத்தில் நடத்துவதை ஆதரித்தனர். இதனால் கோபம் கொண்ட டாக்டர் எச். டபிள்யூ. தம்பையா தலைவர் பதவியிலிருந்து இராஜினாமாச் செய்தார். முற்போக்கு அணியைச் சேர்ந்த பலரும் கூட்டத்திலிருந்து வெளியேறினர்.



அக் கூட்டத்தில் பேராசிரியர் சு வித்தியானந்தன் தலைவராகவும், கட்டடக் கலைஞர் ரி. துரைராஜா செயலாளராகவும், கட்டடக் கலைஞர் கோபாலபிள்ளை மகாதேவா பொருளாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர். உடனே, குமாரசூரியரும் முற்போக்குக்காரர்களும், மகாநாட்டை தமிழரசுக் கட்சியினரின் விழா எனவும் அரசாங்க விரோத சக்திகளின் நடவடிக்கை எனவும் பிரசாரம் செய்ய ஆரம்பித்தனர். அதன் விளைவாக, தமிழ்ப் பண்பாட்டுக் கண்காட்சியில் பங்குபற்றுவதற்கே தமிழ் வர்த்தகர்கள் பலர் மறுத்தனர். மகாநாட்டுக்கு எல்லாவிதமான தடைகளை ஏற்படுத்துவதிலும் தொல்லைகளைக் கொடுப்பதிலும் குமாரசூரியரும் முற்போக்குச் சக்திகளும் அயராது உழைத்தனர். மகாநாடு பற்றிப் பொது மக்களுக்கு அறிவிப்பதற்கு ஒலிபெருக்கியை உபயோகிப்பதற்குப் பொலிசார் அனுமதி கொடுக்க மறுத்தனர். மகாநாட்டுக்கு வருவதற்கு விண்ணப்பித்த தமிழ் அறிஞர்கள் சிலருக்கு விசா மறுக்கப்பட்டது. விசாவின்றி வந்தோர் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்துத் திருப்பியனுப்பப்பட்டனர். மகாநாட்டை நடத்துவதற்கு வீரசிங்கம் மண்டபத்தையும் திறந்த வெளி அரங்கத்தையும் உபயோகிப்பதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்தன. ஆனால், அதிலும் குமாரசூரியரின் தலையீடு இருந்தது. மகாநாட்டுக்கு மூன்று தினங்களுக்கு முன்பு தான் அவற்றை உபயோகிப்பதற்கான அனுமதி கிடைத்தது.

அனுமதி கிடைத்த ஒரு சில மணி நேரத்திலேயே மக்கள் பேராதரவுடன் யாழ். மாநகரம் விழாக்கோலம் பூணத் தொடங்கியது. யாழ் மண்ணின் இயற்கை எழிலை எடுத்துக் காட்டும் வகையில் கனிகளுடன் கூடிய மாமரங்கள், வாழைகள், கள்ளு முட்டிகளுடன் காட்சி தரும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பனை மரங்கள், தோரணங்கள் ஆகியவற்றால் யாழ் நகர் அலங்கரிக்கப்ப்பட்டது.

திட்டமிட்டபடி 1974 ஜனவரி மூன்றாம் திகதி வணக்கத்துக்குரிய பிதா தனிநாயகம் அடிகளினால் நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் கோலாகலமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. மாநாட்டில் உலகப் பிரபல்யம் பெற்ற தமிழ் அறிஞர்களான மதுரைப் பல்கலைக்கழக பேராசிரியர் எம். சண்முகம்பிள்ளை, உலகத் தமிழர் பேரவை ஜனார்த்தனன். திருச்சி ஜமால் முகமது கல்லூரி தமிழ்ப் பேராசிரியா நெய்னார் முகமது, ஜெர்மன் நாட்டுப் பேராசிரியர் கே. எல். ஜெனட், சுவீடன் ஆய்வாளர் பிறிக்கோம், கொடுமுடி சண்முகம், ஈரோடு புலவர் இராசு, சாலை இளந்திரயன் உட்பட பலர் சமுகமளித்திருந்தனர்.

பேராசிரியர் நெய்னார் முகமதுவும் ஜனார்த்தனனும் தந்தை செல்வாவைச் சந்திக்கப் போன போது யாழ்ப்பாணத்தில் தாங்கள் பார்க்கும் தமிழ் உணர்ச்சியை தமிழ் நாட்டில் கூட பார்க்கவில்லை என்று கூறினர். யாழ்ப்பாண மக்கள் தங்கள் மொழியிலும் இனத்திலும் அளவிலா பற்றுள்ளவர்கள். அவர்களுக்கு தோன்றியுள்ள ஆபத்து அதற்குக் காரணமாக இருக்கலாம் என்றும் சொன்னார்.

மாநாட்டில் ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பித்திருந்த வெளிநாட்டு நல்லறிஞர்களுக்கான வழி அனுப்பு விழா 10ஆம் திகதி யாழ் திறந்த வெளி அரங்கில் நடைபெற ஏற்பாடாகியிருந்தது அந்நிகழ்வுக்காக மாநாட்டு ஏற்பாட்டாளர்களால் அரங்கு பதிவு செய்யப்பட்டிருந்த போதிலும் யாழ் திறந்தவெளி மேடை திறந்திருக்க மைதானப்புறப் படலைகள் பூட்டப்பட்டிருந்தன. மாநாட்டு அமைப்பாளர்கள் யாழ். மாநகர் முதல்வரிடம் இருந்து கடிதம் வாங்கி வந்தால் மட்டுமே புறப்படலைகள் திறக்கப்படும் என திறந்த வெளியரங்கக் காப்பாளர் தெரிவித்தார். மாநகர முதல்வரைக் கண்டுபிடிப்பதற்கான தேடல் நடந்தது. மாநகர முதல்வர் அல்பிரட் துரையப்பாவைக் கண்டுபிடிக்க முடியவில்லை. அதனால் யாழ் வீரங்கம் மண்டபம் முன்பாக ஒரு திடீர் மேடை அமைக்கப்பட்டது. மண்டபத்துக்கு முன்பாகச் செல்லும் காங்கேசன்துறை வீதியின் மறுபக்கத்தில் வெளிநாட்டு நல்லறிஞர்களுக்கு அளிக்கப்படும் வழி அனுப்பு விழாவைக் காண்பதற்காக வந்திருந்த மக்கள் அமர்ந்திருக்க விழா ஆரம்பமாகியது. போக்குவரத்து கட்டுப்பாட்டுப் பொறுப்புடையவரான இன்ஸ்பெக்டர் சேனாதிராசா தன் மோட்டார் சைக்கிளில் பொலிஸ் ஸ்டேசனுக்குப் போவதற்காகப் பார்வையாளர்களுக்கும் மேடைக்கும் இடைப்பட்ட வெறுமையாக விடப்பட்டிருந்த வீதி வழியே செல்வதற்கு முயன்றார். விழாவில் தொண்டர்களாகப் பணிபுரிந்தவர்கள் மேடைக்கும் பார்வையாளர்களுக்கும் இடையே வாகனத்தில் போவது பண்பல்ல என எடுத்துச் சொன்னதும் அவரும் அதை ஏற்று வேறு பாதையால் பொலிஸ் நிலையத்துக்குப் போனார்.



**புகுந்தது பொலிஸ்**

சற்று நேரத்தில் வேறொரு பொலிஸ் அதிகாரி அவ்வழியால் வந்தார். வேறு வழியால் போகுமாறு அவரிடம் தொண்டர்கள் கூறினர். அவர் பொலிஸ் நிலையத்துக்குப் போய் றோட்டை மறித்துக் கூட்டம் நடத்துவதாக இன்ஸ்பெக்டர் நாணயக்காரவிடம் சொன்னார். அவர் அத் தகவலை உதவி பொலிஸ் சுப்பிரின்ரென்டன் சந்திரசேகரவிடம் கூறினார். அப்பொழுது நேரம் இரவு 8.30 மணி. கலகம் அடக்கும் பொலிஸாரை ஒரு டிரக்கில் ஏற்றிக்கொண்டு சந்திரசேகர கூட்டம் நடந்த இடத்துக்குச் சென்றார். அப்பொழுது நெய்னார் முகமது பேசிக் கொண்டிருந்தார். மக்கள் அமைதியாக அமர்ந்து அவரின் உரையைக் கேட்டுக் கொண்டிருந்தனர். கலகப் பொலிஸார் தெருவில் குதித்து டிரக்கிற்குப் பின்னால் அணி வகுத்து நின்றனர். டிரக்கை முன்னோக்கிச் செலுத்துமாறு சந்திரசேகர உத்தரவிட்டார். அதற்குப் பின்னால் கலகப் பொலிஸார் நடந்து சென்றனர். கலைந்து செல்லுமாறு ஒலிபெருக்கி மூலம் சந்திரசேகர மக்களுக்கு உத்தரவிட்டார். தொண்டர்கள் ஓடிப் போய் கூட்டத்தைக் குழப்ப வேண்டாம் என்று அவர்களிடம் கூறினர். உடனே பொலிஸார் தாக்குதலை ஆரம்பித்தனர். மக்கள் சிதறி ஓடினர். அப்பொழுது பொலிஸார் கண்ணீர்ப் புகைக் குண்டுகளை அடித்தனர். அதன்பின் துப்பாக்கியால் வானத்தை நோக்கிச் சுட்டனர். ஒரு ரவை மின் கம்பியில் பட்டு அது அறுந்து விழுந்தது. அதில் சிக்கி ஏழு பேர் அந்த இடத்திலேயே இறந்தனர். காயமுற்ற இரண்டு பேர் ஆஸ்பத்திரியில் இறந்தனர்.

விழா கைவிடப்பட்டது. இதனால் வாலிபர்கள் கோபத்தால் கொதித்தனர். அரசாங்கம் திட்டமிட்டு விழாவைக் குழப்பியதாகக் குற்றம் சுமத்தினர். அவர்களின் கோபம் தபால் அமைச்சர் செல்லையா குமாரசூரியர் பக்கம் திரும்பியது. தமிழாராய்ச்சி மகாநாட்டுக் கொலைக்குப் பொலிசாரே காரணம் என்று கூறி தமிழ் இளைஞர் பேரவை நடத்திய கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டம், மாணவரின் பாடசாலைப் பகிஷ்கரிப்பு ஆகியவற்றுக்குத் தமிழர் கூட்டணி பூரண ஆதரவு அளித்தது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



1974 பெப்ரவரி 4 சுதந்திர தினத்தை தமிழர் கூட்டணியினர் துக்க தினமாக அனுஷ்டிக்க முடிவு செய்தனர். தமிழாராய்ச்சி மகாநாட்டில் கொல்லப்பட்டவர்களின் ஆத்ம சாந்தி வேண்டிக் கொலை நடந்த இடத்திற்கு அருகேயுள்ள முனியப்பர் கோவிலில் சத்தியாக்கிரகமும் பிரார்த்தனையும் நடத்தத் திட்டமிட்டனர். மாணவர்கள் தம் கவலையைத் தெரிவிப்பதற்காக சுதந்திர தினத்துக்கு முதன் நாளான பெப்ரவரி 3ல் பாடசாலைகளைப் பகிஷ்கரிக்க வேண்டும் என்று தமிழ் இளைஞர் பேரவை வேண்டுகோள் விடுத்தது. அன்று யாழ் குடாநாட்டில் பாடசாலைகள் எதுவுமே இயங்கவில்லை.

சுதந்திர தினத்தன்று யாழ்ப்பாணம் முழுவதும் கறுப்புக் கொடிகள் பறக்க விடப்பட்டன. யாழ்ப்பாணம் மணிக்கூட்டுக் கோபுரத்தின் உச்சியிலும் கறுப்புக் கொடி பறந்தது. பொலிசார் அதை அறுத்தெறிந்தனர். யாழ்ப்பாணப் பெரிய கடையில் பறந்த கறுப்புக் கொடிகளையும் பொலிசார் அகற்றினர். வாலிபர்கள் தங்கள் மீது கற்களையும் சோடாப் போத்தல்களையும் வீசியதாலேயே தாங்கள் கண்ணீர்ப் புகைப் பிரயோகம் செய்ததாகவும் வானத்தை நோக்கிச் சுட்டதாகவும் அப்போது சன்னங்கள் மின் கம்பியில் பட்டு அது அறுந்ததால் சிலர் மின்சாரம் பாய்ந்து இறந்ததாகவும் பொலிசார் சொன்னார்கள். ஆனால் எவ்வித ஆத்திரமூட்டலுமின்றிப் பொலிசார் கண்ணீப் புகைப் பிரயோகம் செய்ததாக மக்கள் கூறினர்.

இந்த இரண்டு நிலைப்பாடுகளில் எது உண்மையானது என்பதை அறிவதற்காக அரசு சார்பற்ற அமைப்பான யாழ்ப்பாண பிரஜைகள் குழு ஒரு சுதந்திரமான விசாரணைக் குழுவை நியமித்தது. அதன் தலைவராக ஓய்வு பெற்ற சுப்ரீம் கோட்டு நீதியரசரும் நேர்மைக்குப் பெயர்பெற்றவருமான ஓ.எல்.டி. கிரெஸ்டர் நியமிக்கப்பட்டார். இளைப்பாறிய சுப்ரீம் கோடு நீதியரசர் வி. மாணிக்கவாசகரும், பிஷப் வண. சபாபதி குலேந்திரமும் விசாரணைக் குழுவின் ஏனைய உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டனர். அவர்கள் தமது அறிக்கையை 1974 மார்ச் மாதத்தில் சமர்ப்பித்தனர். எவ்வித ஆத்திரமூட்டலுமின்றிப் பொலிசார் கண்ணீர்ப் புகைப் பிரயோகம் செய்ததாக அந்த அறிக்கை கூறியது. 1974 ஏப்ரல் 24ல் கூடிய தமிழர் கூட்டணியின் பொதுச் சபை கிரெஸ்டர் விசாரணைக் குழுவின் அறிக்கையை ஆராய்ந்தது. அவ்வறிக்கையைப் பாராளுமன்றத்தின் பரிசீலனைக்கு சமர்ப்பிக்க வேண்டும் என்று முடிவு செய்தது. அதற்குரிய நடவடிக்கையை தமிழர் கூட்டணியின் பாராளுமன்றப் பிரதிநிதிகள் எடுக்க வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது. அத்தீர்மானத்துக்கேற்ப சபை ஒத்திவைப்புப் பிரேரணையாக கிரெஸ்டர் அறிக்கையைக் கூட்டணியினர் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தனர். அரசாங்கம் அந்த அறிக்கையின் முடிவை ஏற்க மறுத்தது.



**சிவகுமாரன் தற்கொலை**

தமிழாராய்ச்சி மகாநாட்டின் வெற்றிக்கு கடுமையாக உழைத்தவர்களில் சிவகுமாரன் முக்கியமானவர். அம் மாநாட்டின் தொண்டர் படையில் சிறப்பாக செயற்பட்டதற்காக பாராட்டையும் பரிசையும் அவர் பெற்றுக் கொண்டார். அம் மகாநாடு ஒன்பது பேரின் மரணத்துடன் முடிந்தமை சிவகுமாரனை மிகவும் குழப்பிவிட்டது. அவர் மனச்சோர்வுடன் சில வாரங்கள் அலைந்ததாக அவரின் நண்பர்கள் சிலர் கூறினர்.

"அவர்கள் இரண்டு பேரையும் பழி வாங்க வேண்டும்" என்று சிவகுமாரன் அடிக்கடி கூறியதாக அந்தக் காலத்தில் அவருடன் நெருங்கிப் பழகிய உருத்திரமூர்த்தி சேரன் கூறினார். சிவகுமாரன் அமைதியின்றித் தவித்தார் என்றும் சேரன் சொன்னார். சிவகுமாரன் பழி வாங்கத் துடித்தது அல்பிரட் துரையாப்பாவையும் பொலிஸ் அதிகாரி சந்திரசேகரவையும்தான்.

தமிழ் இளைஞர் பேரவையின் தலைவராக இருந்த மாவை சேனாதிராசா, சிவகுமாரன் உணர்ச்சி மிக்கவர் என்று சொன்னார். இரவிரவாக தமிழர் பிரச்சினை பற்றிப் பேசுவார் என்றும் மாவை கூறினார். சிவகுமாரன் தீவிர தமிழரசுக் கட்சி குடும்பத்தில் 1957 ஆகஸ்ட் 26ம் திகதி பிறந்தவர். அவரின் தந்தை பொன்னுத்துரை தமிழ் ஆர்வலர். அரசியல் ஞானம் மிக்கவர். தாய் அன்னலட்சுமி. சிவகுமாரன் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் கல்வி கற்றவர். இளமையிலிருந்து விடுதலை வேட்கையுடையவராக இருந்த அவர் தமிழ் மாணவர் பேரவையுடன் தொடர்பு கொண்டிருந்தவர். ஜி.சி.ஈ. உயர்தர விஞ்ஞான வகுப்பில் கற்ற சிவகுமாரன் கொக்குவில் கனிஷ்ட தொழில் நுட்பக் கல்லூரியில் சேர்ந்தார். அங்கு இரண்டு மாதங்கள் மட்டுமே அவர் கற்றார். அதன் பின்பு அவர் தீவிரவாத அரசியல் நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டார்.

அவருடன் நெருங்கிப் பழகியவர்கள் அவரின் அரசியல் அறிவின் ஆழத்தை மெச்சுகிறார்கள். அரசியல் பேச ஆரம்பித்தாரானால் பேசிக் கொண்டே இருப்பார் என்று அவர்கள் சொல்லுகிறார்கள். தன்னுடன் ஓர் இரவு முழுவதும் சிவகுமாரன் நடத்திய விவாதத்தை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மாவை நினைவு கூருகிறார். தமிழர் விடிவுக்கு ஜனநாயக நடவடிக்கையும் ஆயுதப் போராட்டமும் தேவை என்று சிவகுமாரன் வாதிட்டார். இந்தியாவில் காந்திஜியும் நேதாஜியும் (சுபாஸ் சந்திர போஸ்) செயற்பட்டதைப் போன்றே இலங்கையில் தந்தை செல்வாவும் வாலிபர்களும் செயற்பட வேண்டும் என்று சிவகுமாரன் விரும்பினார். தந்தை செல்வா காந்திஜி செய்த பணியைச் செய்யட்டும். வாலிபர்கள் நேதாஜியின் பங்கை புரியட்டும் என்று சிவகுமாரன் வாதிட்டதாக மாவை நினைவு கூருகிறார்.

தமிழ் மாணவர் பேரவை ஆரம்பிக்கப்பட்டபோது சிவகுமாரன் அதில் இணைந்தார். அது தமிழ் இளைஞர் பேரவையாக்கப்பட்ட போது அதன் செயற்பாடுகளிலும் தீவிரமாகப் பங்குபற்றினார். தங்கத்துரையின் குழுவில் ஆரம்பத்தில் இருந்த சிவகுமாரன் பின்பு தன்வழியே போக ஆரம்பித்தார். அவரின் குழு சிவகுமாரன் குழு என்று அழைக்கப்பட்டது. தன் கழுத்தில் சயனைட் குப்பியைத் தொங்க விட்டுக் கொண்டு திரிந்த முதலாவது போராளி சிவகுமாரன்தான். 1972ல் தீவிரவாத தமிழ் வாலிபர்களைக் கைது செய்யப் பொலிசார் நடத்திய வேட்டையையடுத்தே சயனைட்டுக் குப்பியைக் கழுத்தில் தொங்க விட அவர் ஆரம்பித்தார். நான் பொலிசாரிடம் சிக்க மாட்டேன். சிக்கினால் அவர்கள் என்னைச் சித்திரவதை செய்வார்கள். மற்றவர்களைப் பற்றிய தகவல்களை என்னிடமிருந்து அறிய முயலுவார்கள். நண்பர்களைக் காட்டிக் கொடுப்பதிலும் பார்க்க இறப்பதே மேல் என்று தான் சயனைட்டுக் குப்பியைக் கொண்டு திரிவதற்கான காரணத்தை சிவகுமாரன் விளக்கினார்.

தமிழாராய்ச்சி மகாநாட்டையடுத்துத் தீவிரமடைந்த சிவகுமாரன் தமிழாராய்ச்சி மகாநாட்டுக் கொலைகளுக்குப் பொறுப்பாகவிருந்த ஏ. எஸ். பி. சந்திரசேகரவை குறிவைத்தார். யாழ்ப்பாணம் கைலாச பிள்ளையார் கோவிலடியில் பிரான்சிஸ், அளவெட்டி ஆனந்தன், நடேசானந்தன் ஆகிய தோழர்களுடன் கைக்குண்டு, றிவோல்வர், கத்தி என்பவற்றோடு காத்து நின்றார். ஜீப் வண்டியை ஓட்டிக்கொண்டு சந்திரசேகர வந்தான். சிவகுமாரன் கைக் குண்டை எறிந்தார். அது சந்திரசேகராவின் தோளில் பட்டு பின்புறம் வீழ்ந்தது. வெடிக்கவில்லை. றிவோல்வரால் சுட்டார். அதுவும் இயங்கவில்லை. சந்திரசேகரவை வெளியே இழுத்து கத்தியால் குத்த முயன்றார். அப்பொழுது நண்பர்களின் உதவியைக் கேட்டார். அவர்கள் ஏற்கெனவே ஓடிவிட்டனர். சந்திரசேகர தப்பிவிட்டான். சிவகுமாரன் தலைமறைவானார்.



சிவகுமாரனையும் அவருடன் இணைந்து செயலாற்றியவர்களையும் நாகலிங்கம் நடராசா பொலிஸாருக்குக் காட்டிக் கொடுத்தான். நடராசாவை அழிக்க நடத்திய தாக்குதலும் வெற்றி பெறவில்லை. அதன்பின் தீவிரமாக பொலிஸாரினால் சிவகுமாரன் தேடப்பட்டார். அதனால் அவர் தலைமறைவாக வாழ்ந்தார். சிவகுமாரனைக் காட்டித் தருவோருக்கு ஒரு இலட்சம் ரூபா தரப்படும் என்ற அறிவித்தலையும் பொலிசார் வெளியிட்டனர். சிவகுமாரனை பிரபாகரன் சாவகச்சேரியில் ஒருமுறை கண்டு பேசினார். இருவரும் இணைந்து செயற்படக் கூடிய சூழ்நிலை ஏற்படவில்லை. அல்'பிரட் துரையப்பாவின் காருக்கு ரைம் பொம் வைத்து தாக்குதல் முயற்சியை மேற்கொண்ட போது குண்டு நேரம் தவறாமல் வெடித்தது. துரையப்பா அந்தத் தாக்குதலில் இருந்து தப்பி விட்டார்.

அதன்பின் பொலிசாரினால் கைது செய்யப்பட்ட சிவகுமாரன் இரண்டரை ஆண்டுகள் சிறைவாசம் செய்தார். அப்பொழுது அவர் படையினராலும் பொலிசாராலும் துன்புறுத்தப்பட்டார். போராளி எவரும் உயிருடன் பிடிபடக்கூடாது என்ற எண்ணம் சிவகுமாரனின் மனதில் அப்போதுதான் தோன்றியது அந்த உறுதியின் விளைவாக சயனைட் குப்பி கலாசாரம் தோன்றியது. தலைமறைவாக இருந்த சிவகுமாரனிற்கு இயக்க வேலைக்கு பணம் தேவைப்பட்டது. கோப்பாய் எம்.பி. கதிரவேற்பிள்ளையிடம் கேட்டார். அவர் கொடுக்கவில்லை. அப் பணத்தைப் பெறுவதற்காக சிவகுமாரன் கோப்பாய் கிராமிய வங்கியைக் கொள்ளையடிக்க முடிவு செய்தார். 17 வயதுள்ள சிவகுமாரனும் அவரின் தோழர்களான உரும்பிராய் மகேந்திரன், சாவகச்சேரி ஜீவராஜா, பிரான்சிஸ் ஆகியோரும் மருதனா மடம் சந்திக்குப் போய் அங்கு நின்ற கார் ஒன்றைக் கடத்திக் கொண்டு கோப்பாய்க்குப் போனார்கள். கடத்திய காரை வெளியே நிறுத்திவிட்டு அதற்குக் காவலாக மகேந்திரன் நின்றார்.

சிவகுமாரன், பிரான்சிஸ், ஜீவராஜா ஆகியோர் ரிவோல்வர்களுடன் வங்கிக்குள் போனார்கள். வங்கி ஊழியர்கள் திடீரெனக் கதவைச் சாத்தினர். பொலிசுக்கும் அறிவித்தனர். சிவகுமாரன் தாங்கள் வந்த நோக்கத்தை விளக்கிச் சொல்லி கதவைத் திறந்தார். அவர்கள் வெளியே வருவதற்குள் கார் டிரைவர் கார் திறப்பையும் எறிந்துவிட்டு ஓடிவிட்டார். கார்க் கதவை உடைத்து அதற்குள் ஏறினார். மகேந்திரன் காரை ஓட்ட முயன்றார். அது ஸ்டார்ட் ஆகவில்லை. அதற்குள் பொலிசார் வந்துவிட்டனர். வெளியே பாய்ந்து ஆளுக்கொரு திசையில் ஓடினர். சிவகுமாரன் புகையிலை வெட்டிய தோட்டத்துக்குள்ளால்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வெறுங்காலுடன் ஓடினார். புகையிலைக் கட்டை கால்களைக் குத்தி விட்டது. அதனால் விழுந்தார்.

பொலிசார் நெருங்கிவிட்டனர். தப்பமுடியாது என்று தெரிந்ததும் சயனைட் குப்பியைக் கடித்தார். பொலிசார் அவரை யாழ். பெரியாஸ்பத்திரியில் அனுமதித்தனர். அவர் அங்கே இறந்தார். மகேந்திரனையும் ஜீவாவையும் பொலிசார் கைது செய்தனர். பிரான்சிஸ் தப்பி விட்டார்.

அதுதான் தமிழ் ஆயுதக் குழுவினரின் முதலாவது சயனைட் தற்கொலை. சிவகுமாரனின் இத்தற்கொலைதான் சயனைட் தற்கொலைக் கலாசாரத்திற்கு கால் கோலியது. சிவகுமாரனின் தற்கொலை யாழ்ப்பாணத்து வாலிபர் சமூகத்தை மட்டுமல்ல யாழ்ப்பாண மக்களையே உலுக்கிவிட்டது. அவரின் சடலத்தை யாழ்ப்பாண ஆஸ்பத்திரியிலிருந்து உரும்பிராய்க்கு வாலிபர்கள் தோள்களில் சுமந்து சென்றனர். சவக்கிரியைகள் நடந்து பிரேதத்தைச் சுடலைக்குக் கொண்டு போகுமுன் வாலிபர்கள் பலர் தமது பெருவிரலைக் கிழித்து சிவகுமாரனின் சடலத்தின் நெற்றியில் இரத்தத் திலகமிட்டு தங்களைத் தமிழ்ப் போராட்டத்துக்கு அர்ப்பணிப்பதாகச் சபதமிட்டனர். தமிழர் கூட்டணித் தலைவர்கள் அமிர்தலிங்கமும் சிவசிதம்பரமும், ஆஸ்பத்திரி சவக்சாலைக்குப் போய் தமது அஞ்சலியை செலுத்திய தோடு சுடலைக்கும் போனார்கள். பிரமாண்டமான பிரேத ஊர்வலம். சுடலைக்கு போனதும் பலர் அஞ்சலியுரை ஆற்றினர். அமிர்தலிங்கமும் அவர்களில் ஒருவர். அவர் சொன்னார்:

> தமிழ் மக்களின் விடுதலைக்காக தம்பி சிவகுமாரன் தியாகங்களிலெல்லாம் தலையானதான உயிர்த் தியாகத்தைச் செய்துள்ளார். அவர் புரிந்தது வீரச் செயல். தமிழ் மக்களின் பிறப்புரிமையைப் பெறுவதற்கு அவர் போதித்த, பின்பற்றிய பலாத்கார வழியை, நான் ஏற்றுக் கொள்ளாத போதிலும் அவரின் திடசித்தத்துக்கும் அர்ப்பண உணர்வுக்கும் தலை வணங்குகிறேன். அவரின் வீரத் தியாகம் வீணாகாது. அவரின் சாம்பலிலிருந்து பல்லாயிரக் கணக்கான வீரர்கள் முளைப்பார்கள். அவரின் சமாதியிலிருந்து தமிழ் ஈழம் எழும்பும்.

இந்தப் பேச்சு இரகசிய பொலிசாரால் ஒலிப்பதிவு செய்யப்பட்டு ஆங்கில மொழிபெயர்ப்புடன் பிரதம மந்திரி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அத்துடன் 15 ஜுலை 1974 திகதியிடப்பட்ட இரகசியக் குறிப்பு ஒன்றையும் துப்பறியும் பொலிசார் பிரதம மந்திரியிடம் சமர்ப்பித்தனர். அந்த அறிக்கை சிவகுமாரன் மீதும்



அவரின் மரணச் சடங்கில் கலந்து கொண்ட அமிர்தலிங்கத்தின் மீதும் யாழ்ப்பாண பொலிசார் கொண்டிருந்த கடும் வெறுப்பைப் பிரதிபலிப்பதாகவிருந்தது. உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் எஸ்.கே. சந்திரசேகர மீது சிவகுமாரன் குண்டு வீசிய சம்பவத்தைக் குறிப்பிட்ட அக்குறிப்பு அத்தகைய கொலைக்காரனின் மரணச் சடங்கில் அமிர்தலிங்கம் கலந்து கொண்டார் என்று கூறியது. சிவகுமாரன் என்ற கொலைகாரனை ஒரு விடுதலை வீரனென்று அமிர்தலிங்கம் கூறினார். கொலைகாரர்களுக்குப் பின்னால் நிற்கும் கொலைகாரர் அவர் என்ற வசனம் அந்த இரகசியக் குறிப்பில் உள்ளது. அடுத்து வரும் பந்தி இது:

> தமிழரசுக் கட்சியின் தலைவரான திரு. அமிர்தலிங்கம் ஒரு தீவிரவாதி. அவர் எப்பொழுதும் புதிய தமிழ்ப் புலிகள் என்ற கொலைக்காரக் கும்பலுடன் சேர்ந்து திரிகிறார். அவர்களின் நடவடிக்கைகளின் பின்னாலுள்ள மூளை அவருடையது தான். நாங்கள் அவரை அவதானித்து வருகிறோம். அவருக்கெதிரான சாட்சியங்களை நாங்கள் சேகரித்து வருகிறோம். சிவகுமாரனின் இறுதிச் சடங்கின் போது அவர் ஆற்றிய உரையின் ஒலிப்பதிவையும் அதன் மொழி பெயர்ப்பையும் இத்துடன் அனுப்புகிறோம். அந்தப் பேச்சில் ஒரு கொலைகாரனை விடுதலை வீரன் என்று அவர் போற்றியுள்ளார்.

சிவகுமாரனின் மரணத்தைத் தொடர்ந்து யாழ். குடா நாட்டில் தீவிரவாதச் செயல்கள் அதிகரிக்கத் தொடங்கின. யாழ். புகையிரத நிலையத்திலும் பெரிய கடையிலும் குண்டுகள் வெடித்தன. தெல்லிப்பளை பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் உடைக்கப் பட்டு 91,000 ரூபா திருடப்பட்டது. பஸ்கள் தீக்கிரையாக்கப்பட்டன.

தமிராய்ச்சி மகாநாட்டுப் படுகொலையை ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் அரசாங்கம் நியாயப்படுத்தியதோடு அப்படு கொலைக்குக் காரணமாக இருந்த உதவி பொலிஸ் இன்ஸ்பெக்டர் சந்திரசேகரவுக்குப் பதவியுயர்வும் வழங்கியது.

1974 பிரதம மந்திரி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவுக்குப் புகழ் ஏற்படுத்திய ஆண்டு. இரண்டு ஒப்பந்தங்களை அவர் இந்தியாவுடன் செய்து கொண்டார். முதலாவது, நாடற்றோர் பிரச்சினை சம்பந்தமானது. 1964ம் ஆண்டில் செய்யப்பட்ட ஸ்ரீமாவோ-சாஸ்திரி ஒப்பந்தத்தின்படி இலங்கையில் வாழ்ந்த 975,000 இந்தியத் தமிழர்களில் 525,000 பேரை இந்தியாவும் 300,000 பேரை இலங்கையும் ஏற்றுக் கொண்டன. எஞ்சிய 150,000 பேரை இரு நாடுகளும் சமமாகப் பகிர்வது. என் 1974 ஜனவரி 29ல் இந்திரா காந்தியும் ஸ்ரீமாவோவும் இணங்கினர். தமிழர்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கூட்டணி அவ்வொப்பந்தத்தை வரவேற்றது. நாடற்றோர் பிரச்சினை தீர்க்கப்பட்டுவிட்டதாக தமிழர் கூட்டணி அவ்வொப்பந்தத்தைப் போற்றியது. மற்றது, கச்சதீவு ஒப்பந்தம். கச்சதீவை இலங்கைக்குக் கொடுக்க இந்திரா காந்தி இணங்கினார்.

இவ்வொப்பந்தங்களினால் பெற்ற செல்வாக்கை அரசாங்கத்தினால் தக்கவைக்க முடியவில்லை. அதற்கு யு. என். பி. யினர் தம் கிளர்ச்சியைத் தீவிரப்படுத்தியதுதான் காரணம். 1973 ஜுலையில் லேக்ஹவுசை அரசுடமையாக்குவதற்கான மசோதாவை அரசாங்கம் பாராளுமன்றத்தில் கொண்டு வந்தபோது அதை எதிர்க்கும் இயக்கமொன்றை ஜெயவர்த்தன ஒழுங்குசெய்தார். லேக்ஹவுசை அரசாங்கம் எடுத்ததும் அந்நிறுவனம் பிரசுரிக்கும் பத்திரிகைகளைப் பகிஷ்கரிக்கும் இயக்கமொன்றை அவர் நடத்தினார். 1974 மே 22ல் பிரதம மந்திரி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் தொகுதியான அத்தனகலையில் சத்தியாக்கிரகம் ஒன்றை அவர் ஒழுங்குசெய்தார். அச் சத்தியாக்கிரகத்துக்கு வலுவான காரணம் ஒன்று இருந்தது. சோல்பரி அரசமைப்புத் திட்டத்தின் கீழ்த் தான் 1970 தேர்தல் நடத்தப்பட்டது. அவ்வரசமைப்பின்படி பாராளுமன்றத்தின் பதவிக் காலம் ஐந்து ஆண்டுகள். 1972 மே 22இல் புதிய அரசமைப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டதால் அன்றிலிருந்து ஐந்து ஆண்டுகளுக்குப் பதவியிலிருக்கப் போவதாக ஸ்ரீமாவோ அரசாங்கம் அறிவித்தது. அதை ஜெயவர்த்தனா எதிர்த்தார். 1975இல் தேர்தலை வைக்குமாறு அரசாங்கத்தை நிர்ப்பந்தப்படுத்துவதற்காகத்தான் குடியரசு தினத்தில் சத்தியாக்கிரகத்தை ஜெயவர்த்தன ஒழுங்கு செய்தார்.

யு. என். பி. யின் தலைவராக ஜெயவர்த்தனா பொறுப்பேற்றதும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் எஸ். தொண்டமான் யு.என். பி.யுடன் நெருக்கமாக நடக்க ஆரம்பித்தார். தொண்டமான் தமிழர் கூட்டணித் தலைவர்களில் ஒருவர். தமிழர் கூட்டணியும் யு. என். பியும் நெருக்கமாகும் சூழ்நிலை அதனால் உருவாகியது. அத்தனகலை சத்தியாக்கிரகத்தை முறியடிப்பதற்கான திட்டமொன்றை அரசாங்கம் தீட்டியுள்ள தகவல் மே 21ஆம் திகதி காலை ஜெயர்வர்த்தனவுக்குக் கிடைத்தது. அவர் உடனே அத்தனகலைக்குப் போய் அப் பகுதியின் யு.என்.பி. அமைப்பாளர் வீட்டில் தங்கிவிட்டார். யு.என்.பி. யின் ஏனைய பிரமுகர்களுக்கும் தகவல் கொடுக்கப்பட்டது. அவர்களும் இரவிரவாக அத்தன்லைக்குப் போய்ச் சேர்ந்தனர். தொண்டமானுக்கும் அரசாங்கத்தின் திட்டம் அறிவிக்கப்பட்டது. 22ஆம் திகதி அதிகாலை 3 மணிக்கு அத்தனகலைக்குத் தன் கட்சி ஆதரவாளர்களுடன் போவதற்கு வேண்டிய ஒழுங்குகளை அவர் செய்தார். விடியுமுன் அவர்கள் அத்தனகலைக்குப் போய்ச் சேந்தனர்.



அதிகாலை 5 மணிக்கு அத்தனகலைக்குப் போகும் தெருக்களிலெல்லாம் தடைகள் போடப்பட்டன. அரசாங்கத்தின் ஆதரவாளர்கள் றோட்டுகளுக்குக் குறுக்கே அமர்ந்தனர். அவ்வழியால் வந்த யு.என்.பி. ஆதரவாளர்களுக்கு நல்ல சாத்துச் சாத்தி திருப்பி அனுப்பினார்கள். ஆனால் சத்தியாக்கிரகம் திட்டமிட்டபடி நடந்தேறியது. அவர்களுடன் சேர்ந்து தொண்டமானும் சத்தியாக்கிரகம் செய்தார். அச் சத்தியாக்கிரகம் ஜெயவர்த்தனவுக்கும் தொண்டமானுக்குமிடையே உருவாகிக் கொண்டிருந்த நெருக்கத்தை வலுப்படுத்தியது.

### யாழ் பல்கலைக்கழகம்

யு. என். பியுடன் தமிழர் கூட்டணி சேருவதை ஸ்ரீமாவோ அரசாங்கம் விரும்பவில்லை, தமிழரசுக் கட்சியினைத் திருப்திப்படுத்தி அது ஜெயவர்த்தனாவுடன் சேருவதைத் தடுக்கும் உத்திகளை அரசாங்கம் மேற்கொண்டது. அந்த உத்தியின் முதற்படியாக, சிவகுமாரனின் மரணச் சடங்கின் போது அமிர்தலிங்கம் ஆற்றிய உரையைப் பெரிதுபடுத்தாது விட அரசாங்கம் முடிவு செய்தது, இரண்டாவது படியாக, யாழ்ப்பாணத்தில் இலங்கைப் பல்கலைக் கழகத்தின் வளாகம் ஒன்றை ஆரம்பிக்க அரசாங்கம் முடிவு செய்தது. யாழ்ப்பாணத்தில் பல்கலைக் கழகம் ஒன்றை நிறுவ வேண்டுமென்ற தமிழரசுக் கட்சியின் நீண்ட நாளைய கோரிக்கைக்குத் தீர்வு காண்பதன் மூலம் தமிழரசுக் கட்சியைத் திருப்திப்படுத்தலாம் என்று அரசாங்கம் நினைத்தது.

தமிழ் பல்கலைக்கழகம் ஒன்றை திருகோணமலையில் அமைக்க வேண்டும் என்பது தமிழர் கூட்டணியின் நீண்ட காலக் கோரிக்கை. அதில் தந்தை செல்வா தீவிரமாக இருந்தார். யு.என். பி. யும், ஐக்கிய முன்னணியும் திருமலையில் தமிழரின் பலம் அதிகரிப்பதை விரும்பவில்லை. யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழகத்தை அமைக்கவே அவை விரும்பின. யாழ்ப்பாணத்தில் பரமேஸ்வராக் கல்லூரியை இலங்கைப் பல்கலைக்கழகத்தின் ஒரு வளாகமாக மாற்ற ஐக்கிய முன்னணி அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது. தானே நேரில் சென்று யாழ்ப்பாண வளாகத்தைத் திறந்து வைக்க பிரதம மந்திரி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க முடிவு செய்தார்.

1974 அக்டோபர் 6ல் அவர் யாழ்ப்பாணம் போனார். ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி, கம்யுனிஸ்ட் கட்சி ஆகியவற்றின் ஆதரவாளர்கள் பிரதம மந்திரிக்கு வரவேற்பளித்தனர். பிரதமரின் வரவைப் பகிஷ்கரிக்கவும் கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டத்தை நடத்தவும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தீவிரவாத வாலிபர்கள் முடிவு செய்தனர். தமிழர் கூட்டணியும் அவர்கள் முடிவுக்கமைய நடந்து கொண்டது. இதனால் ஆத்திரம் கொண்ட அரசாங்கம் டிசம்பர் 17இல் இந்தியாவுக்குச் செல்ல அமிர்தலிங்கம் விசா கேட்டபோது அதைக் கொடுக்க மறுத்தது. ஆனால் தமிழர் கூட்டணியினரை சமாதானப்படுத்தும் போக்கை அரசாங்கம் தொடர்ந்தது. காங்கேசன்துறை இடைத் தேர்தலை நடத்தும் தனது முடிவை அது அறிவித்தது.

**தமிழர் படித்த பாடம்**

தமிழரசுக் கட்சி தனது வெள்ளி விழாவை 1974 டிசம்பர் 18ல் கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் விமரிசையாகக் கொண்டாடியது. பெருந் தொகையான தமிழ் மக்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர். தந்தைக்கு மூதறிஞர் என்ற பட்டம் சூட்டப் பட்டது. மூதறிஞர் பட்டம் சூட்டப்பட்டமைக்கு நன்றி தெரிவித்துப் பேசிய தந்தை தமிழரசுக் கட்சி தனது 25 ஆண்டு காலத்தில் பெற்ற படிப்பினையை இவ்வாறு சுருக்கிக் கூறினார்:

> தமிழ் பேசும் மக்கள் சுய கௌரவத்துடன் வாழ வழி வகுப்பதே எமது கட்சியின் இலட்சியம். சமஷ்டி ஆட்சி அமைப்பின் கீழேயே தமிழ் பேசும் மக்கள் சமத்துவத்துடனும், கௌரவத்துடனும் வாழ முடியும். அந்த இலட்சியத்தை அடைவதற்கு முதலில் கிளர்ச்சி அரசியலைக் கையாண்டோம். சாத்வீக முறையில் சத்தியாக்கிரக அடிப்படையில் எங்கள் அபிலாஷைகளை சிங்கள மக்களுக்கு உணர்த்துவதற்கான நடவடிக்கையை எடுத்தோம். 1960 முதல் தோன்றிய அரசியல் சூழ் நிலையை உபயோகித்து ஒத்துழைப்பு அரசியல் தந்திரத்தைப் பரீட்சித்துப் பார்த்தோம். பாராளுமன்றத்துக்கு உள்ளும் வெளியிலும் தென்னிலங்கை அரசியல் கட்சிகள் ஒவ்வொன்றோடும் ஒத்துழைத்துப் பார்த்தோம். இடதுசாரிக் கட்சிகளோடு 1953ம் ஆண்டு நாட்டை அதிர வைத்த ஹர்த்தாலில் ஒத்துழைத்தோம். பிரதமர் பண்டாரநாயக் காவோடு 1957ல் ஒப்பந்தம் செய்தோம். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியோடு 1960ல் உடன்படிக்கை செய்து, அவர்களோடு சேர்ந்து யு. என். பி. ஆட்சியைத் தோற்கடித்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சி அமைக்க ஆதரவு கொடுக்கச் சம்மதித்தோம். 1965ம் ஆண்டு திரு. டட்லி சேனநாயக்காவோடு ஒப்பந்தம் செய்து அவரை ஆட்சி பீடம் ஏறச் செய்தோம். அத்தனை சிங்களக் கட்சிகளும் தலைவர்களும் எமக்குத் தந்த பாடம் - அவர்கள் யாரும் எம் உரிமைகளை வழங்கத் தயாரில்லை; அவர்களை நம்பிப் பலனில்லை என்பதேயாகும். தாம் அதிகார பீடம் ஏறுவதற்கு எம்மை ஏணியாகப் பயன்படுத்தியபின் எம்மை உதைத்துத் தள்ளுவார்களேயன்றி தமிழ் இனத்தையும் சிங்கள இனத்தின் நிலைக்கு உயர்த்தவே மாட்டார்கள் என்பதாகும்.



வெள்ளி விழா காங்கேசன்துறை இடைத் தேர்தலுக்கு கால்கோள் செய்யும் வகையில் அமைந்திருந்தது. காங்கேசன்துறை இடைத் தேர்தல் 1975 பெப்ரவரி 6ல் நடந்தது. ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் சார்பில் பிரபல கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினரான வி. பொன்னம்பலம் நிறுத்தப்பட்டார். பொருளியல் பட்டதாரி ஆசிரியரும் சிறந்த பேச்சாளருமான பொன்னம்பலம் அப்பொழுது கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழு உறுப்பினராக இருந்தார். 1970 தேர்தலில் 8164 வாக்குகளைப் பெற்று இரண்டாவது இடத்தைப் பெற்றவர். இலங்கை தமிழ்ப் பிரதேசமான வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்குச் சுயாட்சி முறையை கம்யூனிஸ்ட் கட்சி ஏற்க வேண்டும் என வற்புறுத்தியவர். கம்யூனிஸ்ட் தலைவர்களின் வற்புறுத்திலின் பேரிலேயே தந்தை செல்வாவை எதிர்த்துப் போட்டியிடுவதற்கு அவர் இணங்கினார். அப்பொழுதும், தமிழ்ப் பிரதேசத்தின் சுயாட்சியை கம்யூனிஸ்ட் கட்சி ஏற்க வேண்டும் என வற்புறுத்தி கம்யூனிஸ்ட் தலைமைப் பீடத்தின் ஒப்புதலையும் பெற்றுக்கொண்டார். தேர்தல் பிரசாரத்தின் போது பொன்னம்பலம் தந்தை செல்வாவையோ அவரின் சமஷ்டிக் கோரிக்கையையோ தாக்கிப் பேசவில்லை. இடதுசாரிகள் பங்கு கொள்ளும் முற்போக்கு அரசாங்கத்தை ஆதரிக்க வேண்டும் என்ற அடிப்படையிலேயே அவர் தன் பிரசாரத்தை நடத்தினார்.

தேர்தலில் தந்தைக்குப் பெரிய வெற்றி கிடைத்தது. தமிழ் இளைஞர் பேரவைக்குள்ளேயே இரகசியமாக இயங்கிக் கொண்டிருந்த தங்கத்துரை, பிரபாகரன் ஆகியோரின் தலைமையிலான இரண்டு ஆயுதக் குழுக்களும் செல்வநாயகம் காங்கேசன்துறை உபதேர்தலில் பெரு வெற்றியைப் பெறச் செய்வதற்காகத் தீவிரமாகப் பிரசாரம் செய்தன. பிரபாகரன் குழுவினரும் தங்கத்துரை குழுவினரும் அத்தேர்தலில் செல்வநாயகத்தின் வெற்றிக்குத் தீவிரமாக உழைத்தார்கள். தலைமறைவு வாழ்க்கையை நடத்திய போதிலும் பிரபாகரன் பல கிராமங்களுக்குச் சென்று தேர்தல் பிரசாரம் செய்ததாக மாவை சேனாதி ராசா கூறுகிறார். அவர்களின் தீவிர பிரசாரம் செல்வநாயகத்துக்கு அத்தேர்தலில் பெரு வெற்றியைக் கொடுத்தது. 1970 தேர்தலில் அவர்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



13,520 வாக்குகளைப் பெற்று 5356 வாக்குகள் பெரும்பான்மையுடன் வென்றார். 1975 பெப்ரவரி 3ல் நடத்தப்பட்ட உபதேர்தலில் அவருக்கு 25,927 வாக்குகளும் பொன்னம்பலத்துக்கு 9487 வாக்குகளும் கிடைத்தன. செல்வநாயகத்துக்கு 15470 வாக்குகள் பெரும்பான்மை கிடைத்தது. இது 1970 தேர்தலில் கிடைத்த பெரும்பான்மையை விட மூன்று மடங்கு. அந்த உப தேர்தலில் அளிக்கப்பட்ட மொத்த வாக்கு களான 35737 வாக்குகளில் முக்கால் பங்கு அவருக்கே கிடைத்தது. 1970 தேர்தலில் 81.1 சதவீத வாக்காளர்களே வாக்களித்தனர். உபதேர்தலில் வாலிபர்களின் தீவிர பிரசாரத்தின் விளைவாக 87.1 சதவீத வாக்காளர்கள் வாக்களித்தனர்.

தேர்தல் முடிவு அறிவிக்கப்பட்டதும் செல்வநாயகம் ஆற்றிய உரை வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. அவர் சொன்னார்:

> பல்லாண்டு காலமாக சிங்களவரும் தமிழரும் இந்நாட்டில் தனித்துவமுள்ள இனத்தவர்களாக வாழ்ந்தனர். அந்நிய ஆதிக்கமே அவர்களை ஒரே ஆட்சியின் கீழ் கொண்டு வந்தது. ஐக்கிய இலங்கையில் சிங்களவருடன் சமத்துவமாக வாழ்வதற்கு எமது அரசியல் உரிமைகளைப் பெறுவதற்கான முயற்சிகளைக் கடந்த 25 ஆண்டுகளாக நாம் மேற்கொண்டோம். எமது அடிப்படை உரிமைகளை மறுப்பதற்கும் எம்மை அடிமைத்தன நிலைமைக்குத் தள்ளுவதற்கும் சுதந்திரத்தின் மூலம் கிடைக்கப் பெற்ற அதிகாரத்தை அடுத்தடுத்து பதவி வகித்த அரசாங்கங்கள் பயன்படுத்தின. இத்தேர்தல் மூலம் தமிழ் மக்கள் தம் தீர்ப்பை வழங்கி விட்டனர் என்றே நான் கருதுகின்றேன். தமக்குள்ள இறைமையைப் பிரயோகித்து சுதந்திர தமிழ் ஈழத்தை அமைப்பதே அவர்கள் அளித்த தீர்ப்பு. அதை நான் இந்நாட்டு மக்களுக்கும் உலகிற்கும் பிரகடனப் படுத்துகிறேன். மக்கள் எமக்களித்துள்ள இந்த ஆணையை தமிழர் கூட்டணி செயற்படுத்தும் என்று நான் இங்கு உறுதியளிக்கிறேன்.

இந்த உறுதி மொழியைத் தந்தை கொடுத்ததும் வாலிபர்கள் தமிழ் ஈழம் எம் இலட்சியம் என்ற கோஷத்தை எழுப்பினர். உற்சாகமிக்க வாலிபர்கள் தந்தையின் நெற்றியில் இரத்தத் திலக மிட்டனர். அன்று முதல் தந்தை தன் உரைகளில் தமிழ் ஈழம் பற்றிப் பேச ஆரம்பித்தார். தந்தை செல்வா அதன் பின்பு தமிழ் ஈழ கோஷத்தை இறக்கும் வரை தொடர்ந்தார். 1975 மே மாதத்தில் கொக்குவிலில் மாவை சேனாதிராஜா தலைமையில் நடந்த பொதுக் கூட்டமொன்றில் அவர் இவ்வாறு சொன்னார்:



> இலங்கைத் தமிழ் மக்கள் கோரும் தமிழ் ஈழத்திலும் சிறிய எத்தனையோ நாடுகள் சுதந்திரமாக இயங்குகின்றன. எமக்கென்று நாடு ஒன்றைக் கோரி இலங்கைத் தமிழர்களான நாம் ஏன் போராடக் கூடாது.

பேச்சுவார்த்தை மூலமும், சிங்கள ஆட்சியாளர்களுடன் ஒத்துழைப்பதன் மூலமும், தமிழ் மக்களின் உரிமைகளைப் பெற முடியும் என நம்பிய மிதவாதத் தமிழ்த் தலைவர்கள் தமது ஒத்துழைப்புப் பாதையில் படிப்படியாக நம்பிக்கை இழந்து வருகையில் தனி நாட்டில் நம்பிக்கை வைத்த வாலிபர்கள் ஆயுதப் புரட்சிக்கான ஆயத்தங்களைச் செய்ய ஆரம்பித்தனர்.

........ ........ ........

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 12

# தனி நாட்டு தீர்மானம்

### திருப்பு முனை

தந்தை செல்வாவின் வாழ்க்கை மூன்று கட்டங்களைக் கொண்டது. முதலாவது, தமிழ் காங்கிரசில் இருந்த காலம். தமிழ் காங்கிரஸ் அது ஆரம்பிக்கப்பட்ட 1944ம் ஆண்டு முதல் அதன் தலைவர் இலங்கையின் முதலாவது பிரதமர் டி. எஸ். சேனநாயக்காவின் அமைச்சரவையில் 1949ம் ஆண்டில் சேரும்வரை சட்ட சபையில் தமிழரின் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்கும் கொள்கையைக் கடைப்பிடித்தது. அக் காலப் பகுதியில் தான் தந்தை செல்வா தமிழ் காங்கிரஸில் இருந்தார். அதற்குப் பின்பு தமிழ் காங்கிரஸ் யு. என். பி. யின் தலைமையிலுள்ள அரசாங்கத்துடன் இணைந்து ஆட்சியில் பங்குபற்றும் கொள்கையைக் கடைப் பிடித்தது. அந்தக் கட்டத்தில் தந்தை பங்குபற்றவில்லை.

இரண்டாவது, சமஷ்டி கோரிக்கையை முன் வைத்த காலம். அது, தமிழரசுக் கட்சி ஆரம்பிக்கப்பட்ட 1949 முதல் 1975ல் நடந்த காங்கேசன்துறை உபதேர்தல் வரையான காலப் பகுதி. அப் பகுதியின்போது ஐக்கிய இலங்கைக்குள் சமஷ்டி ஆட்சி முறை மூலம் தமிழரின் உரிமையைப் பெற அவர் முயன்றார்.

மூன்றாவது, 1975ஜனவரி முதல் 1977ல் அவர் இறக்கும் வரையான காலம். அப்பொழுது அவர் தமிழருக்குத் தனிநாடு கோரினார். அவர் செல்ல விரும்பிய போராட்டப் பாதை காந்திஜி வகுத்த அகிம்சை வழி. தமிழர் தமது பாரம்பரிய தாயகத்தில் தனி நாட்டை அகிம்சைப் போராட்டத்தின் மூலம் நிறுவ வேண்டும் என்பது தந்தையின் தளரா நிலைப்பாடு. அதில் விட்டுக்கொடுப்புச் செய்வதற்கு அவர் விரும்ப



வில்லை. அதனால் அப் பாதையையே அவர் தன் எஞ்சிய வாழ்க்கைக் காலத்திலும் பின்பற்றினார்.

காங்கேசன்துறை உபதேர்தலின் பின்பு தமிழர் பிரச்சினைக்குத் தனி நாடே தீர்வு என்பதை எல்லாப் பொதுக் கூட்டங்களிலும் அவர் வற்புறுத்திக் கூறினார். 1975 அக்டோபர் 2ல் தெல்லிப்பளையிலுள்ள கொல்லங்கட்டியில் நடந்த பொதுக் கூட்டத்தில் அவர் இவ்வாறு சொன்னார்:

சிங்களச் சகோதரர்களிடமிருந்து சமாதானமான முறையில் எங்களின் உரிமைகளைப் பெறுவதற்குக் கடந்த பல வருடங்களாக நாங்கள் முயற்சிகளை மேற்கொண்டோம். அவர்களுடன் எண்ணற்ற பேச்சுக்களை நடத்தினோம். பல ஒப்பந்தங்களையும் செய்து கொண் டோம். அவை யாவும் தோல்வியில் முடிந்தன. இப்பொழுது நாங்கள் அவர்களுக்குப் பிரியாவிடை கூறிவிட்டு தமிழர்களான எமக்கென ஒரு நாட்டை உருவாக்கத் தீர்மானித்து விட்டோம்.

இலங்கையின் 28வது சுதந்திர தினமான 1976 பெப்ரவரி 4ல் தந்தை செல்வாவும் தமிழரசுக் கட்சியின் ஏனைய 12 எம்.பிக்களும் கையெழுத்திட்டு ஒரு பிரேரணையைப் பாராளுமன்றத்துக்குச் சமர்ப்பித்தனர். அதில் சமஷ்டிக் கோரிக்கையைத் தாம் கைவிட்டு விட்டதாகவும் போர்த்துக்கேயரிடம் பறிகொடுத்த தமிழரசை மீள்விப்பதற்குத் தாம் உறுதி பூண்டிருப்பதாகவும் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தமிழர் தம்மை மீண்டும் ஆள்வதற்கு பாராளுமன்றம் இணங்க வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

வட்டுக்கோட்டைப் பிரகடனத்துக்கு அது அடிகோலியது. வட்டுக் கோட்டை தமிழ் ஈழத் தீர்மானத்தை நோக்கி தந்தையும் தமிழ்த் தலைவர்களும் நகர்ந்து கொண்டிருக்கையில் ஸ்ரீமாவோ அரசாங்கம் நெருக்கடிகளை சமாளிக்க வேண்டிய நிலையில் தவித்துக் கொண் டிருந்தது. 1975 மே 22இல், குடியரசு அரசமைப்பு நிறைவேற்றப்பட்டு மூன்றாவது ஆண்டு நிறைவு நாளில், யு.என்.பி தலைவர் ஜே. ஆர். ஜெயவர்த்தன தன் கொழும்பு தெற்கு ஆசனத்திலிருந்து இராஜினாமாச் செய்தார். 1970 தேர்தலில் தெரிவான அரசாங்கம் தன் ஐந்து ஆண்டு பதவிக் காலத்தைப் பூர்த்தியாக்கிவிட்டது என்று வாதிட்ட ஜெயவர்த்தன அவ்விடயம் பற்றிய மக்களின் கருத்தைக் கணிப்பதற்கு உப-தேர்தல் உதவும் எனக் கூறினார். எதிர்க்கட்சி எம். பிக்கள் யாவரும் இராஜிமானாச் செய்ய வேண்டும் என்ற யோசனையை காலி எம்.பி. டபிள்யூ தகநாயக்கா தெரிவித்தார். அந்த யோசனைக்கு தமிழர் கூட்டணியை இணங்க வைப்பதற்கு அவர் முயற்சி எடுத்தார். தமிழர்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கூட்டணியினர் அதற்கு இணங்க மறுத்தனர். 1972 அரசமைப்பை முற்றாகத் தாங்கள் நிராகரித்திருப்பதால் அவ்வரசமைப்பின் ஓர் அம்ச மான பதவிக்காலத்தைப் பற்றித் தாங்கள் கவலைப்படவில்லை என்று அவர்கள் சொன்னார்கள். ஆனால், தாங்கள் நிராகரித்த அதே அரசமைப் பின் கீழ் பதவி வகிப்பதைப் பற்றி அவர்கள் கவலைப்படவில்லை.

கொழும்பு தெற்கு உபதேர்தல் 1975 ஜுலை 18இல் நடத்தப் பட்டது. தமிழர் கூட்டணித் தலைவர்களில் ஒருவரான தொண்டமான் ஜெயவர்த்தனாவுக்கு ஆதரவாகத் தேர்தல் பிரசாரம் செய்தார். தமிழர் கூட்டணியினரும் மறைமுகமாக ஜெயவர்த்தானாவை ஆதரித்து வேலை செய்தனர். ஜெயவர்த்தன 25,801 அதிகப்படி வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார்.

ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அரசாங்கத்தின் மீது யு.என்.பி.தன் நெருக்குதலை அதிகரித்துக்கொண்டிருந்த அதே சமயம் அரசாங்கத் துக்குள்ளேயே பிளவு தோன்றியது. லங்கா சமசமாஜக் கட்சியினரின் சோஷலிச நடவடிக்கைகளுக்கு பிலிக்ஸ் ஆர். டயஸ் பண்டாரநாயக்கா முட்டுக்கட்டைகள் போட்டுக் கொண்டிருந்தார். வெளிநாட்டுக் கம்பெனிகளுக்குச் சொந்தமான தேயிலை, ரப்பர் தோட்டங்களைத் தேசியமயமாக்குவதற்கு லங்கா சமசமாஜக் கட்சி எடுத்த முயற்சிகள் எதுவும் வெற்றி அளிக்கவில்லை. இதனால் ஏற்பட்ட அதிருப்தியை புதிய நகரசபை மண்டபத்தில் நடந்த கூட்டமொன்றில் நிதியமைச்சர் டாக்டர் என்.எம். பெரேரா தெரிவித்தார். அவர் சொன்னார்: "நாங்கள் அமைச்சர் பதவியை ஏற்றது சொந்தப் புகழுக்காகவல்ல. சோஷலிசக் கொள்கைகளை அமுல் செய்வதற்காகவே, அதைச் செய்ய முடியாமல் யாராவது தடை போட்டால் அரசாங்கத்திலிருந்து வெளியேறுவதே சிறந்தது". இக் கூற்றுக்கு மன்னிப்புக் கோருமாறு கேட்கும்படி பிரதம மந்திரி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவை பீலிக்ஸ் வற்புறுத்தினார். டாக்டர் என்.எம்.பெரேரா மன்னிப்புக் கோரிய போதிலும் அவரைப் பதவி நீக்கம் செய்யுமாறு ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க கவர்னர் - ஜெனரலைக் கேட்டுக்கொண்டார். 1975 ஆகஸ்ட் 14ல் லங்கா சமசமாஜக் கட்சி அரசாங்கத்திலிருந்து விலகியது.

இக்காலப் பகுதியில் தமிழ் வாலிபர்களின் தீவிரவாதச் செயல்களும் அதிகரித்தன. 1974 அக்டோபரில் யாழ்ப்பாண வளாகத்தை பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா திறந்து வைப்பதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டன. சர். பொன்னம்பலம் இராமநாதனால் கட்டப்பட்ட பரமேஸ்வரா கல்லூரியில் யாழ்ப்பாண வளாகத்தை ஆரம்பிப்பது என்ற முடிவு எடுக்கப்பட்டது. அதைத் தமிழ் இனத்துக்கு அரசாங்கம் செய்யும் பெரிய சலுகையாகக் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது, யாழ்ப்பாணத்துக்கு வரும் பிரதம மந்திரிக்கு வரவேற்பளிப்பதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்ப்பாணக் கிளையும் லங்கா சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவற்றின் யாழ்ப்பாணக் கிளைகளும் ஆயத்தங்கள் செய்தன.



தமிழ் இளைஞர் பேரவையினர் இவ்விஜயத்தை பகிஷ்க்கத் தீர்மானித்தனர். அதே நேரம் புதிய தமிழ்ப் புலிகள் (ரி.என்.ரி.) இயக்கத்தினர் தமது கைவரிசையைக் காட்டுவதற்கு இது ஏற்ற தருணம் என்று முடிவு செய்தனர்.காங்கேசன்துறை பொலிஸ் நிலையம், கொக்கு வில் ரயில் நிலையம், யாழ்ப்பாணப் பெரிய கடை, பிரதம மந்திரியின் உரையைத் தமிழில் மொழி பெயர்க்கவிருந்த, கம்யூனிஸ்ட் கட்சி பிரமுகரின் வீடு ஆகிய இலக்குகள் மீது கைக்குண்டுகள் வீசப்பட்டன. இத் தாக்குதல்களால்ஆட்சேதம் எதுவும் ஏற்படவில்லை. பொருட் சேதமும் அதிகமில்லை, ஆனால் அவை பயங்கரச் சூழலை உருவாக் கியது. இப் பயங்கரச் சூழலுக்கு அழுத்தம் கொடுப்பது போல் தமிழ் இளைஞர் பேரவையினர் யாழ்ப்பாணக் குடாநாடு முழுவதும் கறுப்புக் கொடிகளைத் தொங்க விட்டனர்.

ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவுக்கு உற்சாகமான வரவேற்பு யாழ்ப்பாணத்தில் கிடைக்கவில்லை. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் இடதுசாரிக் கட்சிகளும் கூட்டாக அவருக்கு அளித்த வரவேற்பும் களையிழந்து காணப்பட்டது. யாழ்ப்பாண மேயரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்ப்பாண அமைப்பாளருமான அல்பிரட் துரையப்பா எவ்வளவு முயன்றும் வரவேற்புபசாரத்துக்குப் போதிய தொகையான மக்களைத் திரட்ட முடியவில்லை. ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் விஜயத்தின் போது குண்டுகள் வெடித்ததையடுத்து செட்டியையும் பிரபாகனையும் தேடுவதில் பொலிசார் தீவிரம் காட்டினர்.

1975ம் ஆண்டு பிறந்த போது யாழ்ப்பாணத்தில் இரண்டு ஆயுதக் குழுக்கள் தீவிரமாக இயங்கின. ஒன்று தங்கத்துரையின் தலைமையில் இயங்கிய தமிழீழ விடுதலைக் கழகம் (ரெலோ). மற்றது புதிய தமிழ் புலிகள். அதை விஷயமறிந்தவர்கள் பிரபாகனின் குழு என்று அழைத் தனர். இரண்டு இரகசிய இயக்கங்களிலுமுள்ளவர்கள் தமிழ் இளைஞர் பேரவையில் இயங்கினர்.

1975 ஜனவரியில் இன்னுமொரு தமிழ் அமைப்பும் உருவாகியது. லண்டனில் வசித்த இளையதம்பி இரத்தினசபாபதி, ஏ.ஆர். அருட்பிரகாசம் (அருளர்) ஆகியோர் அங்கு வாழ்ந்த தமிழ் வாலிபர் களைத் திரட்டி 'ஈரோஸ்' என்ற அமைப்பை உருவாக்கினர். இரத்தின

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சபாபதி சர்வதேச மார்க்சிஸ்ட் குழு உறுப்பினர். அருளர் லுமும்பா பல்கலைக் கழகத்தில் பொறியியல் படித்தவர். 1976ல் அவர்கள் ஈழ மாணவர்களின் பொதுச்சபை (General Union of Eelam Students) GUES –என்ற அமைப்பை ஈரோசின் மாணவர் கிளையாக உருவாக்கினர். 1975ல் ஈரோசுஸ் எத்தகைய ஆயுதப் புரட்சி நடவடிக்கையிலும் ஈடுபடவில்லை.

1975 ஜுன் மாதத்தில் தமிழ் இளைஞர் பேரவையில் பிளவு ஏற்பட்டது. தமிழ் இளைஞர் பேரவையில் எல்லாவிதமாக அரசியல் கருத்துக்களையுமுடையோர் அங்கம் வகித்தனர். அவர்களில் என். சண்முகதாசனின் செல்வாக்குக்கு உட்பட்ட முத்துக்குமாரசாமி, வரதராஜப் பெருமாள் போன்றோரும் அடங்குவர். தமிழ் இளைஞர் பேரவை சுதந்திரமாகச் செயல்படுவதைத் தமிழர் கூட்டணியினர், குறிப்பாக அமிர்தலிங்கம் விரும்பவில்லை. மாவை சேனாதிராசாவின் தலைமையில் இயங்கிய தமிழ் இளைஞர் பேரவையை தமிழர் கூட்டணியின் உத்தியோகபூர்வமான வாலிபர் அமைப்பாக மாற்ற அமிர்தலிங்கம் விரும்பினார். அதை இடதுசாரிப் போக்குள்ள வாலிபர்கள் விரும்பவில்லை. நீங்கள் வெறும் வாய்ப்பேச்சு வீரர்கள். சாய்மனைக் கதிரை வேதாந்திகள். உங்களால் தேர்தல் போரைத்தான் நடத்த முடியும். தமிழீழ போரை வழி நடத்த முடியாது என்று முத்துக்குமாரசாமி கூறினார். சாதி ஒழிப்புப் போரைக்கூட உங்களால் நடத்த முடியாதே என்றனர் முத்துக்குமாரசாமி குழுவினர். இடதுசாரி சக்திகளிடையே முத்துக்குமாரசாமிக்குச் செல்வாக்கு இருந்தது. சமுதாயச் சீர்திருத்தத்தையும் ஈழப்போரின் அங்கமாகக் கொள்ள வேண்டும் என்று அவரின் குழு வாதாடியது.

தமிழ் இளைஞர் பேரவையைக் கைப்பற்றும் அமிர்தலிங்கத்தின் முயற்சியை எதிர்த்த வாலிபர்கள் ஈழ விடுதலை இயக்கத்தைத் தோற்றுவித்தனர். ஆயுதப் புரட்சியைப் போதித்த அவ்வமைப்பு சமூகச் சீர்திருத்த இயக்கமாகச் செயற்பட்டதேயொழிய ஆயுதப் புரட்சியோடு சம்பந்தப்பட்ட எவ்வித நடவடிக்கையிலும் இறங்கவில்லை.

**அல்பிரட் துரையப்பா கொலை**

காங்கேசன்துறை உபதேர்தலையடுத்து பிரபாகரனின் குழுவில் மேலும் சிலர் இணைந்தனர். அவர்களின் குழு 30 பேரைக் கொண்டதாக வளர்ந்துவிட்டது. அவர்களுக்கு ஒரு பழைய 38 ரிவோல்வரும் உள்ளூரில் தயாரிக்கப்பட்ட ஒரு ரிவோல்வரும் கிடைத்தன. அதை



வைத்துக் கொண்டு தனது துரோகிகள் அழிப்பு வேலையை ஆரம்பிக்க பிரபாகரன் திட்டமிட்டார். தங்களின் முதலாவது தாக்குதலுக்கு யாரைத் தெரிந்தெடுப்பது என்பதைத் தீர்மானிப்பதற்கு ஓர் இரவில் ரி. என். ரி. உறுப்பினர்கள் கூடினர். யாழ்ப்பாண மேயர் அல்பிரட் துரையப்பாவை அவர்கள் தெரிந்தெடுத்தனர். அதற்கு இரண்டு காரணங்கள்: முதலாவது தமிழாராய்ச்சி மகாநாட்டுக் கொலைக்குக் காரணமாக இருந்தவர் அவர். துரையப்பா ஸ்டேடியத்தில் கூட்டத்தை நடத்த முடியாமல் அவர் செய்ததன் விளைவாகவே தெருக்கரையில் கூட்டம் நடத்த நேரிட்டது. பொலிசார் தங்கள் தாக்குதலை நடத்துவதற்கு அது வழி வகுத்தது. தமிழ் மக்கள் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் விஜயத்தைப் பகிஷ்கரித்த போதும் துரையப்பா அவருக்கு வரவேற்பளித்து அவ்வரவேற்பில் பங்குபற்றத் தன் காரில் ஆட்களை ஏற்றி இறக்கினார். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்ப்பாண அமைப்பாளராகப் பணியாற்றிய துரையப்பாவைத் தமிழ் வாலிபர்கள் தம் எதிரியாகவே கருதினர். ஆயுதப் புரட்சியின் ஆரம்பத்தைக் குறிப்பதற்கு அல்பிரட் துரையப்பாவின் கொலையே சிறந்தது என்று பிரபாகரன் கருதினார். மற்றவர்களும் அப்படியே கருதினர்.

அல்பிரட் துரையப்பாவைப் பின் தொடர்ந்து அவரின் நடமாட்டங்களைப் பிரபாகரனும் அவர் தெரிந்தெடுத்த மூவரும் அவதானித்தனர். கிறிஸ்தவராக இருந்தபோதும் பொன்னாலை வரதராஜப் பெருமாள் கோவிலுக்குச் சென்று வழிபடும் வழக்கம் துரையப்பாவுக்குண்டு. ஆள் நடமாட்டம் குறைந்த அக்கோவிலில் வைத்து அவரைக் கொலை செய்வதே சிறந்தது என்ற முடிவுக்கு பிரபாகரன் வந்தார்.

துரையப்பாவை 1975 ஜுலை 27ம் திகதியன்று கொலை செய்வது என்று முடிவு செய்த பிரபாகரன் அதற்கு முதல்நாள் தன்னுடைய துருப்பிடித்த பழைய ரிவோல்வருடன் கோவிலுக்கு அருகேயுள்ள தன் நண்பரின் வீட்டுக்குப் போனார். அங்கு அன்றிரவு தங்கிய பிரபாகரன் தன்னுடைய ரிவோல்வரைத் தன் நண்பரிடம் காட்டினார். இதனால் காகத்தையாவது சுடமுடியுமா? என்று அவரின் நண்பன் கேலியாகக் கேட்டார். பிரபாகரன் சிரிக்கவில்லை, எந்தவிதமான உணர்ச்சியையும் வெளிக்காட்டவில்லை. ரிவோல்வருக்குள் ரவைகளைப் போட்டுக் காட்டிவிட்டு அவற்றைப் பத்திரமாக வெளியே எடுத்து விட்டார். பேசாமல் இரு. நாளைக்கு என்ன நடக்கிறது என்று பார் என்று சொல்லி விட்டு, நண்பன் கொடுத்த சாப்பாட்டை உண்டு விட்டு ரிவோல்வரைத் தலையணைக்குக் கீழே பத்திரமாக வைத்து விட்டுத் தூங்கிவிட்டார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



1975 ஜூலை 27. வரதராஜப் பெருமாள் கோவிலுக்கருகேயுள்ள தேனீர்க் கடைக்குப் பிரபாகரன் போனார். அங்கே அவரின் மூன்று கூட்டாளிகளும் வந்து அவருடன் சேர்ந்துக் கொண்டனர். அவர்களின் பெயர்கள்: கலாபதி, கிருபாகரன், சரவணன் எனப்படும் பற்குணராசா. தேனீர்க் கடையில் நாலு பேரும் குளிர்பானம் அருந்திவிட்டு கோவிலுக்கு முன்னே போய் நின்றதாக மரண விசாரணையின் போது கடைச் சொந்தக்காரி கூறினார்.

துரையப்பாவின் கார் கோவிலுக்கு முன்னால் வந்து நின்றது. முன் ஆசனத்தில் இருந்த துரையப்பா கதவைத் திறந்துகொண்டு இறங்கினார். பின் ஆசனத்தில் இருந்து அவரின் நண்பர்கள் யோகநாதனும் இராசரத் தினமும் இறங்கினர்.

அங்கு நின்ற மூன்று பொடியன்களும் மூன்று கதவுகளுக்கும் அருகே வந்தனர். முன் கதவுக்குப் பக்கத்தில் போன பொடியன் துரையப் பாவைப் பார்த்து, வணக்கம் ஐயா என்றான். வணக்கம் தம்பிகள் என்று சொன்னார் துரையப்பா. அப்பொழுது கொஞ்சம் தள்ளி நின்ற கட்டையன் துரையப்பாவைச் சுட்டான் என்று யோகநாதன் மரண விசாரணையின் போது கூறினார்.

குண்டுகள் துரையப்பாவின் நெஞ்சைத் துளைத்தன. இரத்தம் சீறி அடித்தது. துரையப்பா கீழே விழுந்தார். தான் ஓட முயன்றபோது விழுந்து காயமுற்றதாகவும் பின்பு எழுந்து ஓடியதாகவும் இராசரத் தினம் தன் சாட்சியத்தின் போது கூறினார்.

பையன்கள் துரையப்பாவின் காருக்குப் போனார்கள். சாரதியை இழுத்து வெளியே போட்டார்கள். மற்றவர்கள் ஏறியதும் சரவணன் காரை ஓட்டிக் கொண்டு போனார்.

பொடியன்கள் போய்விட்டனர் என்று கடைச் சொந்தக்காரி சொன்ன பின்புதான் யோகநாதன் தான் ஒளித்திருந்த இடத்திலிருந்து வெளியே வந்தார். நான் வெளியே வந்தபோது மேயர் துடித்தபடி கிடந்தார். நான் பக்கத்தில் இருந்து அவரின் தலையைத் தூக்கி என் மடியில் வைத்தேன். தண்ணீர் கேட்டார். கடைக்காரி சோடா கொண்டு வந்து கொடுத்தார். நான் அதை அவரின் வாய்க்குள் ஊற்றினேன். அவர் உயிர் பிரிந்தது என்று யோகநாதன் சொன்னார்.

அது புதிய தமிழ்ப் புலிகளின் முதல் கொலை. தமிழ் அரசியல் வாதியொருவர் கொலை செய்யப்பட்ட முதலாவது சம்பவமும் அதுதான். சிங்களவர்களுக்கிடையே அரசியல் கொலைகள் அதற்கு முன்பு நடந்துள்ளன. 1959 செப்டம்பர் 26ல் பிரதம மந்திரி எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கா சோமராம என்ற பௌத்த பிக்குவால் கொலை செய்யப்பட்டார்.



அல்பிரட் துரையப்பா கொலை பலத்த அதிர்வலைகளைத் தோற்றுவித்தது. ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அரசாங்கமும் பொலிசாரும் அதிர்ச்சியடைந்தனர். தீவிரவாத வாலிபர்களைக் கைது செய்யும் தீவிர முயற்சியொன்றைப் பொலிசார் மேற்கொண்டனர். பிரபாகரனின் பெயர் பிரபலமடைந்தது. அவரைக் கைது செய்து அவருடைய ரி.என்.ரி.யை அழித்து விடுவதில் பொலிசார் ஈடுபட்டனர். பிரபாகரனுக்கு உதவிய கலாபதியையும் கிருபாகர னையும் பொலிசார் கைது செய்தனர். அதற்குக் காரணம் பிரபாகரனின் அறிவுரையை அவர்கள் மதிக்காததுதான். கொலைக்குப் பின்பு உங்கள் வீடுகளில் போய் நித்திரை கொள்ளாதீர்கள்; எப்பொழுதும் உங்களைப் பாதுகாக்கத் தயாராக இருங்கள் என்று பிரபாகரன் தன் கூட்டாளிகளுக்கு அடித்துச் சொல்லியிருந்தார். அவர்கள் அதைப் பொருட்படுத்த வில்லை. பொலிசாரிடம் மாட்டிக் கொண்டனர்.

1976க்கு மூன்று நிகழ்வுகள் முக்கியத்துவத்தை அளித்தன. அவை:

1 மக்கள் வங்கி புத்தூர் கிளை கொள்ளை.

2 தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் (எல்.ரி.ரி.ஈ) தோற்றம்.

3 வட்டுக் கோட்டைத் தீர்மானம்.

அல்பிரட் துரையப்பாவின் கொலையையடுத்து புதிய தமிழ் புலிகள் (ரி.என்.ரி.) இயக்கம் மக்களினதும் அரசாங்கத்தினதும் கவ னத்தை ஈர்த்தது. தமிழ் இளைஞரிடையே ஆயுதக் குழு ஒன்று உருவாகி விட்டதை அல்பிரட் துரையப்பா கொலை நாட்டுக்கு எடுத்தியம்பியது. தமிழரசுக் கட்சியின் காலம் கடத்தும் பாராளுமன்ற ஆசனங்களைக் கட்டிப் பிடித்துக் கொண்டு புரளும் அரசியலில் சலித்துப் போய் விட்ட தமிழ் மக்களுக்கு புதிய தமிழ் புலிகளின் புரட்சி நடவடிக்கை ரொனிக் காக அமைந்தது. அல்பிரட் துரையப்பா கொலை துடிப்புள்ள வாலிபர் களுக்குச் சிலிர்ப்பைக் கொடுத்தது. அல்பிரட் துரையப்பா கொலையை யடுத்து புதிய தமிழ் புலிகளுடன் மேலும் சில வாலிபர்கள் இணைந் தனர்.

**வட்டுக்கோட்டை தீர்மானம்**

1976 மே 14ல் தமிழர் கூட்டணியின் முதலாவது வருடாந்த மகாநாடு வட்டுக்கோட்டைத் தொகுதியிலுள்ள பண்ணாகம் என்ற ஊரில் நடைபெற்றது. அது அமிர்தலிங்கம் பிறந்த ஊர். வட்டுக்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கோட்டை மகாநாடு இலங்கைத் தமிழர்களின் வரலாற்றில் ஒரு திருப்பு முனையாக அமைந்தது. 1975 பெப்ரவரியில் நடந்த காங்கேசன்துறை உபதேர்தலின் பின்பு தந்தை செல்வநாயகம் தன் சமஷ்டித் தீர்வு தோல்வியுற்றுவிட்டதைப் பகிரங்கமாக ஒப்புக் கொள்ள ஆரம்பித்தார்.

வட்டுக்கோட்டை மகாநாடு மிகவும் உணர்ச்சி பொங்கிய மகா நாடாக அமைந்தது. தந்தை செல்வாவின் தலைமையில் நடந்த அம்மகாநாட்டில் பெருந் தொகையான வாலிபர்கள் கலந்து கொண்டனர். "தமிழீழம் வாழ்க" என்ற கோஷம் வானைப் பிளந்தது. வட்டுக்கோட்டை மகாநாடு பிரதிநிதிகள் மகாநாடாகத்தான் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. ஆனால் அம்மகாநாடு ஆரம்பிப்பதற்கு முன்பு பலதிசைகளிலிருந்தும் வாலிபர்கள் ஊர்வலமாக மகாநாட்டு மைதானத்துக்குப் போனார்கள். தமிழ் ஈழம்தான் எமக்கு வேண்டும். தமிழீழப் பிரகடனம் செய்யுங்கள் என்று அந்த ஊர்வலங்களில் வந்தோர் கோஷமெழுப்பினர். எங்கும் ஒரே உற்சாகம். உணர்ச்சிப் பெருக்கு. தந்தை செல்வா தன் தலைமையுரையில் தனி நாட்டு முடிவுக்குத் தான் வந்த வரலாற்றை எடுத்து விளக்கிவிட்டு மக்களின் உணர்வுகளுக்கு, குறிப்பாக வாலிபர்களின் உணர்ச்சிகளுக்கும் அபிலாசைகளுக்கும் தலைவர்கள் மதிப்பளிக்க வேண்டிய அத்தியாவசியத்தை வலியுறுத்தினார்.

ஐக்கிய இலங்கையில் தமிழர் தன்மானத்துடனும் பாதுகாப்புடனும் வாழ்வதற்குச் சுயாட்சி அரசு ஒன்றை அமைப்பதற்கு சிங்கள மக்களின் ஒத்துழைப்பைப் பெறுவதற்கு தமிழரசுக் கட்சியும், அதன் பின் தமிழர் கூட்டணியும் எடுத்த முயற்சிகள் யாவும் தோற்று விட்டதை எடுத்துக் கூறினார். எமது முயற்சிகளுக்கெல்லாம் சிங்களத் தலைவர்கள் தடையாக இருந்துள்ளனர். எமது நியாயமான கோரிக்கைகளுக்கும் அவர்கள் இணங்குவதாயில்லை. இந்த நிலையில் எமக்கெனத் தனி நாடு கோருவதைத் தவிர எமக்கு வேறு வழியில்லை என்றார் அவர். அதன் பின்பு தந்தை செல்வா வட்டுக்கோட்டைப் பிரகடனம் என்று இன்று எல்லோராலும் அழைக்கப்படும் தீர்மானத்தை முன்மொழிந்தார். தமிழர் கூட்டணியில் அங்கம் வகித்த மற்றக்கட்சியான அகில இலங்கைத் தமிழ் காங்கிரசின் சார்பில் மு.சிவசிதம்பரம் அத்தீர்மானத்தை வழிமொழிந்தார். வரலாற்று முக்கியத்துவம் பெற்ற அத் தீர்மானத்தின் வாசகம் இது:

> ஒவ்வொரு நாட்டுக்குமுள்ள சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் சுதந்திரமான, இறைமையுள்ள, மதச்சார்பற்ற சோஷலிச தமிழ் ஈழத்தை அமைப்பதற்கு நாம் எம்மை அர்ப்பணிப்போம். இலங்கையில் வாழும் தமிழ் மக்களுக்கு இதுவே பாதுகாப்பானதாக அமையும்.



இத்தீர்மானத்தை தமிழ் ஈழம் வாழ்க, தமிழ் ஈழத்தை அமைப்போம், தமிழர் உரிமைகளை வெல்வோம், தமிழரின் சுதந்திரத்தை மீள நிலைநாட்டுவோம் ஆகிய கோஷங்களை எழுப்பி தமிழ் வாலிபர்கள் வரவேற்றனர். அவ்வாறு கோஷமிட்டு பண்ணாக மண்ணில் தமிழ் ஈழத்தை அடைவதற்குத் தம்மை அர்ப்பணித்தவர்களில் ஆயுதப் போராட்ட ஆரம்ப கர்த்தாக்களில் அதிகமானோர் அடங்குவர். ஆயுதப் போராட்டத்தை ஆரம்பித்துவிட்ட பிரபாகரன், உமாமகேஸ்வரன், ஸ்ரீ சபாரத்தினம், பரந்தன் ராஜன் ஆகியோர் அம்மகாநாட்டின் வெற்றிக்குத் தீவிரமாக உழைத்தனர்.

தமிழ் ஈழப் பிரகடனம் நிறைவேற்றப்பட்டதையடுத்து தமிழர் கூட்டணியின் பெயரைத் தமிழர்விடுதலைக் கூட்டணி என்று மாற்ற வேண்டிய தேவை ஏற்பட்டது. அதற்கான பெயர் மாற்றப் பிரேரணையும் வட்டுக்கோட்டை மகாநாட்டில் நிறைவேற்றப்பட்டது. இரண்டு தீர்மானங்களையும் ஆதரித்து தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகமாகத் தெரிவான அமிர்தலிங்கம் உணர்ச்சிகரமான உரையொன்றை ஆற்றினார். அதில் தமிழ் இனத்தின் பெருமையையும் தொன்மையையும் எடுத்துரைத்ததோடு யாழ்ப்பாண இராச்சியத்தின் வரலாற்றையும் விரிவாக விளக்கினார்.

சங்கிலி மன்னனைப் போரால் தோற்கடித்ததன் மூலம் தமிழ் மண்ணை ஆளும் அதிகாரத்தையும் இறைமையையும் போர்த்துக்கேயர் பெற்றனர். அவ்வாட்சி அதிகாரமும் இறைமையும் போர்த்துக் கேயரிடமிருந்து ஒல்லாந்தருக்கும் அதன்பின் பிரித்தானியருக்கும் சென்றன. பிரித்தானியர் இலங்கைக்குச் சுதந்திரம் வழங்கிய போது அந்த ஆட்சி அதிகாரமும் இறைமையும் தமிழ் மக்களுக்கு அளிக்கப் பட்டிருக்க வேண்டும். பிரித்தானியர் அவ்வாறு செய்யவில்லை. சிறுபான்மை மக்களுக்குப் பாதகமான சட்டங்கள் இயற்றப்படலாகாது என்ற பாதுகாப்புடன் சிங்களவரிடமே அதிகாரத்தை ஒப்படைத்தனர். சிங்களவர்கள் ஆட்சி அதிகாரத்தைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்தி தமிழ் மக்களை இரண்டாம் தரப் பிரஜைகளாக்கினர். தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளுக்குக்கூட எந்த அரசாங்கமும் செவிசாய்க்கவில்லை. அதனால், இழந்த இறைமயைத் திரும்பப் பெறுவதற்குப் போராடுவதைத் தவிர வேறு எந்த வழியும் தமிழ் மக்களுக்கு இல்லை என்று அமிர்தலிங்கம் சொன்னார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கோட்டை மகாநாடு இலங்கைத் தமிழர்களின் வரலாற்றில் ஒரு திருப்பு முனையாக அமைந்தது. 1975 பெப்ரவரியில் நடந்த காங்கேசன்துறை உபதேர்தலின் பின்பு தந்தை செல்வநாயகம் தன் சமஷ்டித் தீர்வு தோல்வியுற்றுவிட்டதைப் பகிரங்கமாக ஒப்புக் கொள்ள ஆரம்பித்தார்.

வட்டுக்கோட்டை மகாநாடு மிகவும் உணர்ச்சி பொங்கிய மகா நாடாக அமைந்தது. தந்தை செல்வாவின் தலைமையில் நடந்த அம்மகாநாட்டில் பெருந் தொகையான வாலிபர்கள் கலந்து கொண்டனர். "தமிழீழம் வாழ்க" என்ற கோஷம் வானைப் பிளந்தது. வட்டுக்கோட்டை மகாநாடு பிரதிநிதிகள் மகாநாடாகத்தான் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. ஆனால் அம்மகாநாடு ஆரம்பிப்பதற்கு முன்பு பலதிசைகளிலிருந்தும் வாலிபர்கள் ஊர்வலமாக மகாநாட்டு மைதானத்துக்குப் போனார்கள். தமிழ் ஈழம்தான் எமக்கு வேண்டும். தமிழீழப் பிரகடனம் செய்யுங்கள் என்று அந்த ஊர்வலங்களில் வந்தோர் கோஷமெழுப்பினர். எங்கும் ஒரே உற்சாகம். உணர்ச்சிப் பெருக்கு. தந்தை செல்வா தன் தலைமையுரையில் தனி நாட்டு முடிவுக்குத் தான் வந்த வரலாற்றை எடுத்து விளக்கிவிட்டு மக்களின் உணர்வுகளுக்கு, குறிப்பாக வாலிபர்களின் உணர்ச்சிகளுக்கும் அபிலாசைகளுக்கும் தலைவர்கள் மதிப்பளிக்க வேண்டிய அத்தியாவசியத்தை வலியுறுத்தினார்.

ஐக்கிய இலங்கையில் தமிழர் தன்மானத்துடனும் பாதுகாப்புடனும் வாழ்வதற்குச் சுயாட்சி அரசு ஒன்றை அமைப்பதற்கு சிங்கள மக்களின் ஒத்துழைப்பைப் பெறுவதற்கு தமிழரசுக் கட்சியும், அதன் பின் தமிழர் கூட்டணியும் எடுத்த முயற்சிகள் யாவும் தோற்று விட்டதை எடுத்துக் கூறினார். எமது முயற்சிகளுக்கெல்லாம் சிங்களத் தலைவர்கள் தடையாக இருந்துள்ளனர். எமது நியாயமான கோரிக்கைகளுக்கும் அவர்கள் இணங்குவதாயில்லை. இந்த நிலையில் எமக்கெனத் தனி நாடு கோருவதைத் தவிர எமக்கு வேறு வழியில்லை என்றார் அவர். அதன் பின்பு தந்தை செல்வா வட்டுக்கோட்டைப் பிரகடனம் என்று இன்று எல்லோராலும் அழைக்கப்படும் தீர்மானத்தை முன்மொழிந்தார். தமிழர் கூட்டணியில் அங்கம் வகித்த மற்றக்கட்சியான அகில இலங்கைத் தமிழ் காங்கிரசின் சார்பில் மு.சிவசிதம்பரம் அத்தீர்மானத்தை வழிமொழிந்தார். வரலாற்று முக்கியத்துவம் பெற்ற அத் தீர்மானத்தின் வாசகம் இது:

> ஒவ்வொரு நாட்டுக்குமுள்ள சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் சுதந்திரமான, இறைமையுள்ள, மதச்சார்பற்ற சோஷலிச தமிழ் ஈழத்தை அமைப்பதற்கு நாம் எம்மை அர்ப்பணிப்போம். இலங்கையில் வாழும் தமிழ் மக்களுக்கு இதுவே பாதுகாப்பானதாக அமையும்.



இத்தீர்மானத்தை தமிழ் ஈழம் வாழ்க, தமிழ் ஈழத்தை அமைப்போம், தமிழர் உரிமைகளை வெல்வோம், தமிழரின் சுதந்திரத்தை மீள நிலைநாட்டுவோம் ஆகிய கோஷங்களை எழுப்பி தமிழ் வாலிபர்கள் வரவேற்றனர். அவ்வாறு கோஷமிட்டு பண்ணாக மண்ணில் தமிழ் ஈழத்தை அடைவதற்குத் தம்மை அர்ப்பணித்தவர்களில் ஆயுதப் போராட்ட ஆரம்ப கர்த்தாக்களில் அதிகமானோர் அடங்குவர். ஆயுதப் போராட்டத்தை ஆரம்பித்துவிட்ட பிரபாகரன், உமாமகேஸ்வரன், ஸ்ரீ சபாரத்தினம், பரந்தன் ராஜன் ஆகியோர் அம்மகாநாட்டின் வெற்றிக்குத் தீவிரமாக உழைத்தனர்.

தமிழ் ஈழப் பிரகடனம் நிறைவேற்றப்பட்டதையடுத்து தமிழர் கூட்டணியின் பெயரைத் தமிழர்விடுதலைக் கூட்டணி என்று மாற்ற வேண்டிய தேவை ஏற்பட்டது. அதற்கான பெயர் மாற்றப் பிரேரணையும் வட்டுக்கோட்டை மகாநாட்டில் நிறைவேற்றப்பட்டது. இரண்டு தீர்மானங்களையும் ஆதரித்து தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகமாகத் தெரிவான அமிர்தலிங்கம் உணர்ச்சிகரமான உரையொன்றை ஆற்றினார். அதில் தமிழ் இனத்தின் பெருமையையும் தொன்மையையும் எடுத்துரைத்ததோடு யாழ்ப்பாண இராச்சியத்தின் வரலாற்றையும் விரிவாக விளக்கினார்.

சங்கிலி மன்னனைப் போரால் தோற்கடித்ததன் மூலம் தமிழ் மண்ணை ஆளும் அதிகாரத்தையும் இறைமையையும் போர்த்துக்கேயர் பெற்றனர். அவ்வாட்சி அதிகாரமும் இறைமையும் போர்த்துக்கேயரிடமிருந்து ஒல்லாந்தருக்கும் அதன்பின் பிரித்தானியருக்கும் சென்றன. பிரித்தானியர் இலங்கைக்குச் சுதந்திரம் வழங்கிய போது அந்த ஆட்சி அதிகாரமும் இறைமையும் தமிழ் மக்களுக்கு அளிக்கப் பட்டிருக்க வேண்டும். பிரித்தானியர் அவ்வாறு செய்யவில்லை. சிறுபான்மை மக்களுக்குப் பாதகமான சட்டங்கள் இயற்றப்படலாகாது என்ற பாதுகாப்புடன் சிங்களவரிடமே அதிகாரத்தை ஒப்படைத்தனர். சிங்களவர்கள் ஆட்சி அதிகாரத்தைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்தி தமிழ் மக்களை இரண்டாம் தரப் பிரஜைகளாக்கினர். தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளுக்குக்கூட எந்த அரசாங்கமும் செவிசாய்க்கவில்லை. அதனால், இழந்த இறைமயைத் திரும்பப் பெறுவதற்குப் போராடுவதைத் தவிர வேறு எந்த வழியும் தமிழ் மக்களுக்கு இல்லை என்று அமிர்தலிங்கம் சொன்னார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அவரின் அந்த உரை வாலிபர்களின் அமோக வரவேற்பைப் பெற்றது. மகாநாட்டின் முடிவில் வாலிபர்கள் அவரைத் தோளில் சுமந்து ஊர்வலம் ஒன்றை நடத்தினர். தமிழ் ஈழம் தமிழரின் தாயகமான வடக்கு, கிழக்கு மாகாணங்களையும் புத்தளம் மாவட்டத்தில் தமிழர் பெரும்பான்மையாக வாழும் பகுதியையும் உள்ளடக்கும்.

கீழ்க்காண்போர் தமிழ் ஈழத்தில் பிரஜாவுரிமை பெறுவர்:

★ தமிழ் ஈழப் பிராந்தியத்தில் வசிக்கும் அனைவரும்

★ இலங்கையில் எப்பகுதியிலும் வசிக்கும் தமிழ் பேசும் மக்கள் தமிழ் ஈழத்தின் பிரஜாவுரிமை கோரினால்.

★ இலங்கையில் மூதாதையர்களைக் கொண்ட உலகின் எப்பகுதியிலும் வசிக்கும் தமிழ் பேசுவோர் தமிழ் ஈழத்தின் பிரஜாவுரிமையைக் கோரினால்.

வட்டுக்கோட்டை தமிழீழப் பிரகடனம் இலங்கை தொழிலாளர் காங்கிரசுக்குத் தர்மசங்கடமான நிலைமையை ஏற்படுத்தியது. இ.தொ. கா. வின் அங்கத்தவர்களான மலையக மக்கள் வாழும் மலை நாடு தமிழீழத்தின் ஒரு பகுதியல்ல. அத்துடன், தமிழீழத்துக்காக நடத்தப் படும் போராட்டம் மலையக மக்கள் மீது சிங்கள மக்களின் ஆத்திரத் தைத் தூண்டிவிடும். இவற்றையெல்லாம் கவனத்திற்கு எடுத்த இ.தொ. கா. தலைவர் எஸ். தொண்டமான் தமிழர் விடுதலைக் கூட்டணி யிலிருந்து வெளியேற முடிவு செய்தார். தமிழீழத்தை உருவாக்குவதன் மூலம் தோட்டங்களில் வேலை செய்யும் எமது மக்களின் பிரச்சினை களுக்குத் தீர்வு காணமுடியாது. அது எமது மக்களின் நிலைமையைச் சிக்கலானதாக்கிவிடும் என்று தொண்டமான் பத்திரிகைகளுக்குக் கூறினார்.

தங்களின் நிலைப்பாட்டை விளக்கி இ.தொ.கா. செயலாளர் எம்.எஸ். செல்லசாமி தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகம் அமிர்தலிங்கத்துக்கு மே 21இல் கடிதமொன்றை எழுதினார். அதில் தமிழர் விடுதலைக் கூட்டணி உருவாக்கப்பட்டமை தமிழர் கூட்டணியில் இணைவதற்குத் தமக்கு இ.தொ.கா. பொதுச் சபை வழங்கிய அதிகாரத்தை மீறிவிட்டதால் தாங்கள் தமிழர் விடுதலைக் கூட்டணியிலிருந்து வெளியேறுவதாகச் செல்லச்சாமி குறிப்பிட்டார். இதனால் தமிழர் விடுதலைக் கூட்டணியில் தலைவராக தொண்டமான் இருக்க முடியாது என்பதையும் தெரிவித்தார். எனினும் எமது கொள்கை



களுக்கும் செயல்திட்டங்களுக்கும் அமைய தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் நாம் இணைந்து செயற்படுவோம் என்று செல்லச்சாமி தன் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார். அவ்வாக்குறுதிக்கமைய தொண்ட மான் நடந்து கொண்டார். எல்லா விடயத்திலும் தமிழர் விடுதலைக் கூட்டணியைக் கலந்தாலோசித்தே அவர் தன் நடவடிக்கைகளை எடுத்தார்.

1976 மே 21. அடுத்த நாள் இலங்கை குடியரசாகப் பிரகடனப்படுத் தப்பட்ட நாலாவது ஆண்டு விழா. அவ்விழாவைப் பகிஷ்கரிக்கக் கோரும் துண்டுப் பிரசுரத்தை விநியோகிக்க தமிழர் விடுதலைக் கூட்டணி முடிவு செய்தது. மே 14ல் நிறைவேற்றப்பட்ட வட்டுக்கோட் டைத் தீர்மானமும் அத் துண்டுப் பிரசுரத்தில் கொடுக்கப்பட்டிருந்தது. காலையில் கூட்டணித் தலைவர்கள் தந்தை செல்வாவின் தலைமையில் யாழ்ப்பாண பஸ் நிலையத்துக்கு அருகே கூடினர். அவர்கள் துண்டுப் பிரசுரங்களை விநியோகிக்கத் தொடங்கியதும் பொலிஸ் ஜீப்கள் அவர்களுக்கருகே வந்து நின்றன. துப்பாக்கி தாங்கிய பொலிஸார் பாய்ந்து வந்தனர்.

உங்களைக் கைது செய்யும்படி எங்களுக்கு உத்தரவு கிடைத் துள்ளது. எங்களுடன் ஸ்ரேசனுக்கு வாருங்கள் என்றார் இன்ஸ்பெக்டர். தந்தை செல்வாவும் மற்றத் தலைவர்களுடன் பொலிஸ் வாகனத்தை நோக்கி நடந்தார். நீங்கள் வர வேண்டாம் என்றார் இன்ஸ்பெக்டர். என்னையும் கைது செய்யுங்கள் என்றார் தந்தை. உங்களை எங்களுக்குத் தேவையில்லை என்று சொல்லிவிட்டார் இன்ஸ்பெக்டர். கைது செய் யப்பட்டவர்கள் இவர்கள் தான்: அமிர்தலிங்கம், வி. என். நவரத்தினம், கே. பி. இரத்தினம், கே. துரைரத்தினம், எம். சிவசிதம்பரம். இந்தக் கைது அரசாங்கத்துக்கு ஒரு சவாலாக அமையப் போகிறது என்பதை உத்தரவைப் பிறப்பித்த உதவிப் பாதுகாப்பு அமைச்சர் பீலிக்ஸ் ஆர். டயஸ் பண்டாரநாயக்க அப்போது உணரவில்லை.

## டிரையல் அற்பார்

யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்திலிருந்து அமிர்தலிங்கம் அவரின் பொன்னாலை வீட்டுக்குக் கொண்டு செல்லப்பட்டார். பொலிஸாரும், கடற்படையினரும் அவரின் வீட்டைச் சூழ்ந்து கொண்டனர். வீட்டிலிருந்த ஒவ்வொரு துண்டுக் கடதாசியும் சோதனையிடப்பட்டது. அடுத்த நாள் சிவசிதம்பரம் விடுவிக்கப் பட்டார். மற்ற நால்வரும் கொழும்பிலுள்ள துப்பறியும் பொலிஸ் தலைமையகத்துக்குக் கொண்டுவரப்பட்டு தனித்தனிக் கூண்டில்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அடைக்கப்பட்டனர். நான்கு கூட்டணித் தலைவர்களுக்குமெதிராக கொழும்பு உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர முடிவு செய்யப்பட்டது. மக்களிடையே வேற்றுமையையும், அமைதியின்மை யையும் தோற்றுவிக்க முயன்றனர் என்பதுதான் குற்றச்சாட்டு. அது அரசியல் குற்றச்சாட்டாகையினால் ஜுூரர்கள் முன்னிலையில் வழக்கை விசாரிக்க அரசாங்கம் விரும்பவில்லை. தமிழ் பேசும் ஜுூரர்களா சிங்களம் பேசும் ஜுூரர்களா நியமிக்கப்படுதல் வேண்டும் என்பதைத் தீர்மானிக்கும் உரிமை குற்றம் சாட்டப்பட்டோருக்குண்டு. கூட்டணித் தலைவர்கள் தமிழ் பேசும் ஜுூரர்களையே கேட்பர் என்பது அரசாங்கத்துக்குத் தெரியும். அந்தச் சிக்கலைத் தவிர்ப்பதற்காக ஜுூரர்களின்றி மூன்று நீதிபதிகள் விசாரிக்கும் டிரையல் அற் பார் விசாரணையை நடத்த அரசாங்கம் முடிவு செய்தது.

அதைச் செய்வதற்காக மூன்று நீதிபதிகளை நியமிக்கும் அதிகாரத்தை பிரதம நீதியரசருக்குக் கொடுக்கும் வகையில் அவசரகாலச் சட்டத்தின் 59வது விதியை அரசாங்கம் திருத்தியது. அப்பொழுது அட்டர்னி ஜெனரல் பதவியை சிவா பசுபதி வகித்தார். அவசரகாலச் சட்டத்தின் கீழ் பிறப்பிக்கப்பட்ட அரச துரோகத்தடை விதியின் கீழ் நான்கு கூட்டணித் தலைவர்களுக்கும் எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. ஜுன் 18ல் உயர்நீதிமன்ற நீதியரசர் ஜே. எவ். ஏ. சூசா, ஆனந்த ஜி. டி. சில்வா, சிவா செல்லையா ஆகியோர் முன்னிலையில் வழக்கு விசாரணைக்கு வந்தது.ஜி.ஜி. பொன்னம்பலத்தின் தலைமையில் 61 வழக்கறிஞர்கள் கூட்டணித் தலைவர்களுக்காகத் தோன்றினர். தமிழர்களின் ஒற்றுமையை அது பிரதிபலித்தது.

விசாரணை ஆரம்பத்தில் தங்கள் மீதுள்ள வழக்கை விசாரிக்க நீதிமன்றத்துக்கு அதிகாரமில்லை என்று தாங்கள் வாதிடப் போவதாக பொன்னம்பலம் அறிவித்தார். ஆனால், நீதிபதிகளுக்கு உரிய மதிப்பை அளிக்கும் வகையில் தங்களுக்கெதிராக வழங்கப்படும் குற்றச் சாட்டுக்களை குற்றம் சாட்டப்பட்டுள்ளோர் பெற்றுக் கொள்வர் என்றும் அவர் சொன்னார். நீதிமன்ற கிளார்க் குற்றச்சாட்டுக்களை வாசித்து விட்டு உரிய பத்திரங்களைக் கையளித்தார். நால்வரும் மௌனமாக அவற்றைப் பெற்றுக் கொண்டனர். அடுத்து நீதிமன்றக் கிளார்க் முதலாவது எதிரியான அமிர்தலிங்கத்தைப் பார்த்து நீங்கள் குற்றவாளியா? சுற்றவாளியா? என்று கேட்டார். நாங்கள் சில விடயங்களைக் கோட்டுக்கு சமர்ப்பிக்கவுள்ளோம். அதனால், குற்றவாளியா, சுற்றவாளியா என்று சொல்ல முடியாத நிலையில் உள்ளோம் என்று பொன்னம்பலம் சொன்னார். எதிரி தான் குற்றவாளியா, சுற்றவாளியா



என்று சொல்ல வேண்டும். அல்லது தான் குற்றவாளியா அல்லது சுற்றவாளியா என்று சொல்ல விரும்பல்லை என்று சொல்ல வேண்டும் என்று அட்டர்னி ஜெனரல் வாதிட்டார். அதற்குப் பொன்னம்பலம் அளித்த பதில்: எதிரி எதையும் கூறத் தேவையில்லை. அதற்கு இரண்டு காரணங்கள். இந்த நீதிமன்றம் அமைக்கப்பட்ட அவசரகால விதி செல்லுபடியாகாது என்று வாதாடப் போவது முதலாவது. மற்றது, இலங்கையின் அரசியலமைப்புத்திட்டம் செல்லுபடியாகாது என்று வாதாடப்போது. அடுத்து, அமிர்தலிங்கம் தனது நிலையை ஒரு வசனத்தில் எடுத்துரைக்க நீதிமன்றத்தின் அனுமதியைக் கோரினார். நீதிமன்றம் அந்த அனுமதியை வழங்கியது. அமிர்தலிங்கமும் மற்ற மூவரும் எதிரிக் கூண்டுக்குள் ஏறினர்.

அமிர்தலிங்கம் கூறினார், இந்த நீதிமன்றம் இலங்கையின் அரசியலமைப்புத் திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டுள்ளது. இலங்கையின் அரசியலமைப்புத் திட்டம் செல்லுபடியாகாதது. எனக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச் சாட்டுக்களைப் பொறுத்தவரை குற்றவாளியா சுற்றவாளியா என்று சொல்ல விரும்பவில்லை.

எதிரிகளைப் பிணையில் விடும்படி பொன்னம்பலம் கூறினார். அவசர காலச் சட்டத்தின் கீழ் அவர்களைப் பிணையில் விடுவதற்கு அட்டர்னி ஜெனரலின் அனுமதி தேவை என்று குறிப்பிட்ட அட்டர்னி -ஜெனரல் தான் அத்தகைய அனுமதியை வழங்கியிருப்பதாகச் சொன்னார். நால்வரும் பிணையில் விடப்பட்டனர். விசாரணை ஜுலை 12ல் நடந்தது. நீதிமன்றம் உருவாக்கப்பட்ட அவசரகாலச் சட்டம் செல்லு படியாகாது என்பதை பொன்னம்பலம் வாதாடினார். பொன்னம்பலம் சமர்ப்பித்த வாதத்தின் சுருக்கம்:

> அவசரகாலச் சட்டத்தைக் கவர்னர் ஜெனரல் மே 15, 1972ல் பிரகடனம் செய்தார். புதிய அரசியல் திட்டம் மே 22, 1972 அமுலுக்கு வந்தது. புதிய அரசியல் திட்டம் அமுலுக்கு வருவதற்கு முன்பு சோல்பரி அரசியல் திட்டம் நடைமுறையில் இருந்தது. சோல்பரி அரசியல் திட்டத்தின்படி நாட்டில் அவசரகால நிலை தோன்றியுள்ளதா என்பதை நிர்ணயிக்கும் அதிகாரம் கவர்னர் ஜெனரலுக்குக் கொடுக்கப்பட்டிருந்தது. 1972 மே 22ல் அமுலுக்கு வந்த அரசியலமைப்புத் திட்டம் அந்த நிலைமையை மாற்றிவிட்டது. நாட்டில் அவசரகால நிலைமை தோன்றியுள்ளதா என்பதை நிர்ணயிக்கும் அதிகாரம் பிரதம மந்திரிக்கு அளிக்கப்பட்டது. பிரதமரின் முடிவு கவர்னர் ஜெனரலுக்கு அறிவிக்கப்பட்டதும் அவர் அவசர காலச் சட்டத்தைப் பிரகடனம் செய்வார். 1972 அரசியல் திட்டத்தின் கீழ் பிரதம

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மந்திரியின் ஆலோசனை பிரதான அம்சம். பிரதம மந்திரியின் ஆலோசனை இல்லாவிட்டால் அவசரகால நிலைமைப் பிரகடனம் செல்லுபடியாகாததாகிவிடும். மே 15ம் திகதி அவசரகால நிலைமைப் பிரகடனம் புதிய அரசியல் திட்டத்தின் கீழ் புதுப்பிக்கப்பட்டிருக்க வேண்டும். அது செய்யப்படவில்லை. எனவே, நீதிமன்றம் அமைக்கப்பட்ட அவசரகாலப் பிரகடனமும் அதன் கீழ் உருவாக்கப்பட்ட விதிகளும் சட்டப்படி செல்லுபடியாகாதவை.

இரண்டாவது வாதம் 1972 அரசியல் திட்டம் செல்லுபடியாகாது என்பது. அவ்வாதத்தை எம். திருச்செல்வம் சமர்ப்பித்தார். சோல்பரி அரசியல் அமைப்புத் திட்டத்தை திருத்துவதற்கு மட்டுமே இடமுண்டு. அந்த அரசியல் அமைப்புத் திட்டத்தைப் புதிய அரசியல் அமைப்புத் திட்டத்தினால் முற்றாக மாற்றுவதற்கு அதிகாரமளிக்கப்படவில்லை. இதற்கு ஐக்கிய முன்னணி அரசாங்கம் சொன்ன பதில் மக்கள் ஆணையைத் தாங்கள் பெற்றுள்ளனர் என்பது. அத்தகைய ஆணையை ஐக்கிய முன்னணி பெற்றுள்ளதா என்பது சந்தேகம் என்று வாதிட்டார் திருச்செல்வம். புதிய அரசியல் அமைப்புத் திட்டமொன்றை ஆக்கப் போவதாக ஐக்கிய முன்னணி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டிருந்த போதிலும் பிரசாரத்தின் போது அதை ஒரு பிரதான விடயமாகக் கொள்ளவில்லை. புதிய அரசியல் அமைப்புத் திட்டத்தை தயாரிப்பதற்கு ஐக்கிய முன்னணி மக்களின் ஆணையைப் பெற்றிருப்பதாகக் கொண்டாலும் தமிழ் மக்களின் அங்கீகாரத்தை அது பெறவில்லை. 1970ம் ஆண்டுத் தேர்தலில் தமிழ் மக்கள் தமிழரசுக் கட்சியின் சமஷ்டி அரசியல் அமைப்பையே ஏற்றுள்ளனர் என்று திருச்செல்வம் வாதிட்டார்.

நீதிமன்றம் தனது தீர்ப்பை செப்டம்பர் 16இல் வழங்கியது. அந்த 67 பக்கத் தீர்ப்பை நீதிபதி சூசா வாசித்தார். முதலாவது ஆட்சேபனையை நீதிமன்றம் ஏற்றுக் கொண்டது. அவசர காலச் சட்டம் முறைப்படி பிரகடனம் செய்யப்படவில்லை என்று நீதிபதிகள் அறிவித்தனர். அதன் முதலாவது விளைவு வழக்கை விசாரிக்கும் நீதிமன்றம் முறைப்படி அமைக்கப்படவில்லை என்பது. இரண்டாவது விளைவு நான்கு கூட்டணித் தலைவர்களும் கைது செய்யப்பட்டதும் அவர்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டமையும் சட்டப்படி செல்லுபடியாகாது என்பது. எனவே, நான்கு கூட்டணித் தலைவர்களையும் நீதிமன்றம் விடுதலை செய்தது.

இரண்டாவது ஆட்சேபனை பற்றி நீதியரசர்கள் அளித்த தீர்ப்பு இது: நீதிமன்றம் முறைப்படி அமைக்கப்படாத காரணத்தினால் குடியரசு



அரசியலமைப்புத் திட்டம் முறையான அரசியலமைப்புத் திட்டமா அல்லவா என்று தீர்ப்பளிக்க அதற்கு அதிகாரமில்லை. இத் தீர்ப்பு அரசாங்கத்தை ஒரு கலக்குக் கலக்கி விட்டது. பீலிக்ஸ் ஆர். டயஸ் பண்டாரநாயக்க அப்பொழுது நீதியமைச்சராகவும் இருந்தார். நீதியமைச்சில் உச்ச மட்ட மகாநாடு ஒன்றைக் கூட்டினார். அம் மகாநாட்டில் நீதியமைச்சின் உயர் அதிகாரிகள், அட்டர்னி ஜெனரல், பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல், படைத் தளபதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். புதிய அரசியல் அமைப்புத் திட்டத்தின் கீழ் அவசர காலச் சட்டத்தை உபயோகித்து எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவும் செல்லாதவை ஆகிவிட்டமையால் எழுந்த நிலைமையை அவர்கள் ஆராய்ந்தனர். தான் சுப்ரீம் கோட்டுக்கு அப்பீல் செய்யப் போவதாகச் சொல்லி அவர்களின் பயத்தை அட்டர்னி ஜெனரல் போக்கினார்.

செப்டம்பர் 15ல் அவர் சுப்ரீம் கோட்டுக்கு அப்பீல் செய்தார். அவர் இரண்டு மனுக்களைத் தாக்கல் செய்தார். முதலாவது மனு உயர் நீதி மன்றத்தின் தீர்ப்பை ரத்துச் செய்யக் கோரியது. இரண்டாவது மனு, கூட்டணித் தலைவர்களுக்கு எதிரான வழக்குகளைத் தொடர்ந்து விசாரிக்குமாறு உயர் நீதிமன்றத்துக்கு உத்தரவிடுமாறு கோரியது. அம் மனுக்களை விசாரிப்பதற்காக ஐந்து நீதியரசர்களைக் கொண்ட நீதிமன்றத்தை பிரதம நீதியரசர் விக்டர் தென்னக்கோன் நியமித்தார். பிரதம நீதியரசர் விக்டர் தென்னக்கோனைத் தலைவராகக் கொண்ட அந் நீதிமன்றத்தில் நீதியரசர்கள் ஜீ. ரி. சமரவிக்கிரம, வி. ரி. தாமோதரம், நொயல் தித்தவெல, டபிள்யு. டி. குணசேகர ஆகியோர் இடம் பெற்றனர். அட்டர்னி ஜெனரல் சிவா பசுபதி உயர் நீதிமன்றத் தீர்ப்பினால் ஏற்படக் கூடிய விளைவுகளை நீதியரசர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்தார். அவசரகாலச் சட்ட விதிகளின் கீழ் பலர் குற்றவாளிகளாகக் காணப்பட்டுள்ளனர். கொலை வழக்கொன்றில் சுப்ரீம் கோட்டின் தீர்ப்பு வரும் வரை விசாரணையை ஒத்தி வைக்கும்படி எதிரி தரப்பினர் கோரியுள்ளனர். அவசர காலச் சட்ட விதிகள் செல்லாதவை எனத் தீர்ப்பளித்தால் இதுவரை நீதிமன்றங்கள் எடுத்த முடிவுகள் பல செல்லுபடியாகாதவையாகிவிடும்.

ஒரு நிலையான முடிவு எடுக்கப்பட்ட நிலைமையைக் குழப்ப நீதிமன்றங்கள் விரும்புவதில்லை. எனவே, உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை சுப்ரீம் கோடு மாற்றியமைத்தது. அவசர காலச் சட்டம் முறைப்படி பிரகடனம் செய்யப்பட்டதாக அது தீர்ப்பளித்தது. அட்டர்னி ஜெனரல் கேட்டுக் கொண்டபடி கூட்டணித் தலைவர்களுக்கெதிரான வழக்குகளின் விசாரணையைத் தொடரும்படி உயர் நீதி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மன்றத்துக்கு உத்தரவிட்டது. இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டதும் தான் கூட்டணித் தலைவர்களுக்கெதிரான வழக்குகளைத் தொடரப் போவதில்லை என்றும் அதற்குரிய அறிவித்தலை உயர் நீதிமன்றத்துக்கு அறிவிக்கப் போவதாகவும் அட்டர்னி ஜெனரல் நீதியரசர்களுக்குத் தெரிவித்தார். இதன்படி உயர் நீதிமன்றம் 1977 பெப்ரவரி 10ம் திகதி கூடி கூட்டணித் தலைவர்களை விடுதலை செய்தது.

இந்த வழக்கு கூட்டணியின் அரசியல் நடவடிக்கைகளை ஸ்தம்பிதமடையச் செய்தது. ஆனால், தீவிரவாத வாலிபர்கள் ஆயுதப் புரட்சிப் பாதையில் தொடர்ந்து போய்க் கொண்டிருந்தனர். 1977 முற்பகுதியில் பலாத்காரச் சம்பவங்கள் அதிகரித்தன. ஜனவரி 14ல் பொலிஸ் கான்ஸ்டபிள் கருணாநிதி அவரின் மாவிட்டபுர வீட்டில் வைத்துக் கொலை செய்யப்பட்டார். அல்பிரட் துரையப்பா வழக்கு விசாரணையில் அவர் முக்கிய பங்குவகித்தார்.1977 மே. 13ல் சண்முகநாதன் என்ற பெயரையுடைய இரண்டு பொலிஸ் கான்ஸ்டபிள்கள் கொல்லப்பட்டனர்.

# 13

# தந்தையின் இறுதி நிலை

வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் பின்பு தமிழ் மக்களுக்கென வடக்கு-கிழக்கு மாகாணங்களைச் சேர்த்த தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய தாயகத்தில் தமிழ் ஈழத்தை அமைப்பது பற்றியே தந்தை செல்வா பேசத் தொடங்கினார். 1976 நவம்பர் மாதத்தில் திருகோணமலையில் தந்தை இவ்வாறு பேசினார்:

> எனக்கு இப்போது வயது 78 ஆகி விட்டது. நான் இன்னும் கனகாலம் இருப்பது ஐமிச்சம். ஆனால், சாகுமுன்பு தமிழினத்துக்குச் செய்ய வேண்டியதைச் செய்து விட்டு சாக விரும்புகிறேன்.

தாயைப் போல் நீண்ட வயது வரை வாழ விரும்பியவர் 1976 பிற்பகுதியில் தன் உடல் பலம் குன்றி வருவதை உணர்ந்து விட்டார். பாராளுமன்றத்தில் 1976 நவம்பர் 19ல் தமிழர் பிரச்சினை பற்றித் தந்தை பேசினார். அதுவே, அவரின் பாராளுமன்ற கடைசிப் பேச்சாக அமைந்து விட்டது. அதில் அவர் சொன்னது இது தான் :

> தமிழ் பேசும் மக்களின் இழந்த உரிமைகளை மீட்பதற்கு நாங்கள் ஒரு காலத்தில் சமஷ்டி இயக்கத்தை ஆரம்பித்தோம். ஆனால், சமஷ்டி மூலம் தமிழ் பேசும் மக்களின் உரிமைகளை நிலைநாட்டுவது சாத்தியப்படாது என்பதைக் கடந்த கால அனுபவங்களின் மூலம் இப்போது உணர்ந்து கொண்டு விட்டோம். இந்த அனுபவங்களின் அடிப்படையில் நாங்கள் தனியே பிரிந்து வாழ வேண்டியதுதான் சிறந்த வழி என்ற முடிவுக்கு வந்து விட்டோம். இதை நாம் செய்யாவிட்டால், தமிழினம் தனது இழந்த உரிமைகளை ஒரு போதும் மீட்டுக் கொள்ள முடியாது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எங்கள் முன்னோர்கள் புத்திசாலிகளாக இருந்தனர். அவர்கள் தங்களுக்கெனத் தனியாட்சியை வைத்திருந்தனர். இலங்கையின் வரலாற்றில் எங்களுக்கென ஒரு தனியிடம் இருக்கிறது. எங்கள் இயக்கம் நாட்டைப் பிரிக்கும்படி கோர வில்லை. இழந்த எங்கள் உரிமையான இராச்சியத்தை மீள அமைக்க வேண்டும் என்பதே எங்கள் நிலையாகும். தனித் தமிழ் ஈழத்தை நிறுவும் இலட்சியத்தை நோக்கி எங்கள் இயக்கம் முன்னேறுகிறது.

தனித் தமிழ் ஈழம் நிறுவுவது இலகுவான காரியமல்ல என்பதும் மிகவும் க்ஷ்டமானது என்பதும் எங்களுக்குத் தெரியும். ஆனால், நாம் ஒன்றில் சிங்களவரின் அதிகாரத்துக்குள்ளிருந்து விடுபட்டு வெளியேற வேண்டும். அல்லது அழிந்து போக வேண்டும். எனவே, நாங்கள் போராடி தனித் தமிழ் ஈழத்தை நிறுவியே தீருவோம். நாங்கள் சமஷ்டிக் கோரிக்கையைக் கைவிட்டு விட்டோம். எங்கள் தனி நாட்டுக்கான இயக்கம் அகிம்சை அடிப்படையிலேயே நடைபெறும்.

1976 டிசம்பர் மாதத்தில் வெளிநாட்டுப் பத்திரிகையாளர் சிலருடன் தந்தை செல்வாவைச் சந்தித்தேன். தனித் தமிழ் ஈழக் கோரிக்கை பற்றியே வெளிநாட்டுப் பத்திரிகையாளர்கள் தந்தையைப் பேட்டி கண்டனர். அப் பேட்டி சம்பந்தமான என் குறிப்பு புத்தகத்திலிருந்து இவற்றைத் தருகிறேன்.

**கேள்வி:** நீங்கள் சமஷ்டியில் முப்பது ஆண்டுகளுக்கு மேல் அயராத நம்பிக்கை வைத்திருந்தீர்கள். சமஷ்டி ஆட்சி முறைக்கு இணங்க சிங்கள மக்கள் முன்வராததினால்தான் தனித் தமிழ்க் ஈழக்கோரிக் கையை முன் வைக்கின்றீர்கள். இந்தக் கட்டத்திலாவது சமஷ்டி அமைப்பை இலங்கையில் நிறுவச் சிங்களத் தலைவர்கள் இணங் கினால் அதை ஏற்றுக் கொள்ள முன் வருவீர்களா?

**தந்தை செல்வா:** இலங்கைக்கு சமஷ்டி ஆட்சி முறையே சிறந்தது என்பது என் அசையாத நம்பிக்கை. அதை அடைவதற்கு முதலில் போராட்டம் நடத்தினேன். பின்பு சிங்கள் அரசியல்வாதிகளுடன் ஒத்துழைப்பதன் மூலம் சமஷ்டி ஆட்சி முறையை அமைக்கத் திட்ட மிட்டோம். சமஷ்டி ஆட்சிக்கான அடிப்படையை அமைப்பதற்காக எவ்வளவு தூரம் இறங்க முடியுமோ அவ்வளவு தூரம் இறங்



கினோம். அதைத் தருவதற்குக்கூட சிங்களத் தலைமைப் பீடத்திற்கு அரசியல் விருப்போ துணிவோ இல்லை. இந்த நிலையில் தனித் தமிழ் ஈழத்தைக் கோருவதைத் தவிர எமக்கு வழியெதுவும் இல்லை. தனித் தமிழ் ஈழத்துக்கான போராட்டம் மிகவும் நீண்டதாகவும் கஷ்டமானதாகவும் இருக்கும் என்பதை நாம் உணருகிறோம். அந்த நீண்ட போராட்டத்தின் போது சிங்களத் தலைவர்கள் சமஷ்டி ஆட்சி அமைப்பை ஏற்படுத்துவது பற்றிய ஓர் இணக்கத்துக்கு எம்மோடு வரின் நாம் அதை ஏற்கத் தயாராக இருப்போம் என்றே நினைக்கிறேன்.

**கேள்வி:** உங்கள் பாராளுமன்றப் பேச்சில் தனித் தமிழ் ஈழத்துக்கான உங்கள் போராட்டம் அகிம்சை அடிப்படையிலேயே நடை பெறும் என உறுதியாகக் கூறியுள்ளீர்கள். ஆயுதப் போராட்டத்தைச் சில தமிழ் வாலிபர்கள் துவக்கியுள்ளனரே அது பற்றிய உங்கள் கருத்து என்ன?

**தந்தை செல்வா:** தமிழ்ச் சமூகம் அதிருப்தியின் விளிம்புக்குத் தள் ளப்பட்டு விட்டது. அதனால்தான் உணர்ச்சி மிக்க சில இளைஞர்கள் ஆயுதங்களைத் தூக்கி உள்ளனர். ஆயுதங்கள் அழிவுக் கருவிகள். ஆயுதத்தைத் தூக்கியவருக்கும் அது அழிவைக் கொடுக்கும். அகிம்சை அப்படியானதல்ல. போராடுபவர்களின் தார்மீக உணர்வை வளர்க் கும். போராடுவோரை ஆளவோ, அடக்கவோ முடியாத நிலை மையை ஆளவும் அடக்கவும் முயல்வோருக்கு ஏற்படுத்தும். அகிம் சைப் பாதையில்தான் எம் போராட்டம் அமையும். அதிலிருந்து சற்றும் விலகமாட்டோம்.

**கேள்வி:** தனித் தமிழ் ஈழப் போராட்டத்தை நடத்தத் தயாராகிறீர் களா?

**தந்தை செல்வா:** உரிமைப் போராட்டம் என்பது வெறும் வெற்றிடத்தில் நடத்தப்படுவதல்ல. மக்கள் சமுதாயத்தில் நடப்பது. எனவே, அகிம்சைப் போராட்டத்தைத் துவக்குவோர் சமுதாயத்தில் நிலவும் அரசியல் சூழலைக் கணக்கில் எடுக்க வேண்டும். அடுத்த ஆண்டில் (1977) தேர்தல் நடக்கவிருப்பது உங்களுக்குத் தெரியும். தேர்தல் வரும் சமயத்தில் நாங்கள் போராட்டத்தைத் தொடக்குவது நல்லதல்ல. சிங்கள தீவிரவாதத்தைப் பலப்படுத்த அது உதவும். தேர்தல் முடிந்த பின் புதிய அரசாங்கத்தின் போக்கையும் கணக்கில் எடுத்துத் தான் எமது அகிம்சைப் போராட்டத்தைத் துவக்குவோம்.

தேர்தல் 1977 ஜுலையில் வந்தது. தந்தை ஏப்ரலிலேயே போய் விட்டார்.

........ ........ ........

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





தமது திருமணத்தின் போது எஸ். ஜே. வி. செல்வநாயகமும்
அவரது மனைவி எமிலி கிரேஸ் பார் குமாரகுலசிங்கமும் - 1927

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





நேருவுடன் கொழும்பில் - 1960





பெரியார் ஈ. வே. ராவுடன் - 1972



பெரியார் காயிதே மில்லத்துடன் - 1972

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





தமிழக முதல்வர் மு. கருணாநிதியுடன் - 1967





எம். ஜீ. ஆர் உடன் - 1970

www.tamilarangam.net





(மீள் ஸ்கான்) பாக்கிஸ்சன் நோய்க்கு மருத்துவ சிகிச்சைக்காக இங்கிலாந்து செல்வதற்கான கொழும்பு விமானநிலையத்தில் - 1961





ஒப்பந்தப் பேச்சுவார்த்தையின் போது - 1957



1947 பொது தேர்தலில் வெற்றி பெற்ற போது நடுவில் எஸ். ஜே. வி. இடது பக்கம் சி. வன்னியசிங்கம் வலது பக்கம் ஜீ. ஜீ. பொன்னம்பலம்

www.tamilarangam.net







உடன்படிக்கை கையெழுத்திடுவதற்காக பிரதம மந்திரி எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்காவின் அலுவலகத்திற்குள் நுளையும் போதும் ஒப்பந்தம் கையெழுத்தான பின்னரும் - ஜுலை 1957







ஒப்பந்தத்தின் போதும் பின்னரும்
தந்தையும் பிரதமர் எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்காவும்

...... ..... ..... ........

www.tamilarangam.net





அரசியல் அமைப்புச் சட்டத்தை எதிர்த்து முள்வேலித் தடைக்குப் பின்னால்
எஸ். ஜே. வி. செல்வநாயகம், அமிர்தலிங்கம் - 1975






பலாலி விமானநிலையத்தில் திரு. திருமதி செல்வநாயகம்.
அருகில் அமிர்தலிங்கம் - 1965

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





தமிழரசுக் கட்சிக் கொடியேற்றல் - 1967





பாராளமன்ற தேர்தலின் பின்பு விமானத்தில் வந்து
இரத்மலானையில் இறங்குகின்றார் - மார்ச் 1960

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





தேர்தல் வெற்றிக் களிப்புடன் தந்தை





பாராளுமன்றத்தில் தந்தை

....... ..... ... ........

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





பிரதம மந்திரி சிறிமாவோ பண்டார நாயக்க தன் அமைச்சர்களுடன் யாழ்ப்பாணம் போய் தந்தை செல்வாவிற்கு இறுதி மரியாதை செலுத்துகிறார் - 1975



....... ..... ..... ........

www.tamilarangam.net

# தந்தை செல்வா: ஓர் அரசியல் வாழ்க்கைச் சரிதை

## ரி. சபாரத்தினம்

20ஆம் நூற்றாண்டில் இலங்கையின் அரசியல் செல்நெறியைத் தீர்மானித்த மிகச் சிலரான அரசியற் தலைவர்களுள் எஸ்.ஜே.வி செல்வநாயகத்தற்கு மறுதலிக்க முடியாத ஓரிடமுண்டு. இவரது முழுமையான அரசியல் ஆளுமையினை வெளிக்கொணரும் வகையில் இந்நூல் அமைகின்றது. 1999 முதல் இரண்டு வருடங்களாக இலங்கையின் தேசிய பத்திரிகையான 'தினகரன்" இல் தொடர்ச்சியாக வெளிவந்த கட்டுரைத் தொடர் இப்பொழுது நூலாக வெளிவருகின்றது.



**த.சபாரத்தினம் (1932):** இலங்கையின் மிக மூத்த ஊடகவியலாளரான இவர் "டெயிலி நியூஸ்" (*Daily news*) பத்திரிகையில் பல காலம் உப ஆசிரியராக பணியாற்றியவர். மலையகத் தலைவர் சௌ. தொண்டமான் பற்றி எழுதிய *'Out of Bondage'*, இலங்கைத் தமிழ்த் தலைவர்களில் ஒருவரான அ.அமிர்தலிங்கம் பற்றிய *'Murder of the Moderate'* என்பவை இவர் எழுதிய ஏனைய நூல்களாகும்.

ISBN 955-9429-89-2

9789559429890

குமரன் புத்தக இல்லம்

விடயம்: வாழ்க்கை வரலாறு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்